# திருக்கோயில், சமயம், கலை, சமுதாய ஆய்வுக் கருத்தரங்கு

## கட்டுரைக் கோவை

★

1988 ஏப்ரல் 9, 10

அழகப்பா பல்கலைக் கழகம்

காரைக்குடி-4

★

குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனம்,

குன்றக்குடி

அழகப்பா பல்கலைக் கழகம்,

காரைக்குடி-4

1988

# திருக்கோயில், சமயம், கலை, சமுதாய ஆய்வுக் கருத்தரங்கு



## கட்டுரைக் கோவை

★

1988 ஏப்ரல் 9, 10
அழகப்பா பல்கலைக் கழகம்
காரைக்குடி-4

★

குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனம்,
குன்றக்குடி
அழகப்பா பல்கலைக் கழகம்,
காரைக்குடி-4
1988

46-4

உ

குரு பாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்
26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்.

தருமபுரம்.
மயிலாடுதுறை (அஞ்சல்), 609001.
1-4-1988.

"ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையுமெம் ஆதியே"

தமிழர் நாகரிகம், பண்பாடு, மற்றும் கலைகளின் பதிவிடங்களாகத் திகழ்வன நமது திருக்கோயில்கள். கி.பி. ஏழாம் நூற்றாண்டுக்குப் பின்னர் தமிழர் வரலாற்றும், வாழ்வும் திருக்கோயில்கள் பிரித்தறிய முடியாத — அளவிற்குப் பின்னிப் பிணைந்தன. சமயஞ்சான்ற அருளாளர்கள் ஆட்சியாளர்களாக விளங்கித் திருக்கோயில்களை மையமாகக் கொண்டு கலைகளை வளர்த்தனர். அதன் வழி, மக்களை வாழ்வித்தனர். இதனால் கலைகளும் வளர்ந்தன. மக்களும் வளர்ந்தனர். மெய்வாழ்விற்குக் கலை உணர்ச்சி வலிமையாயிற்று. கலைகள் மக்களைத் தூயவர்களாக்கவும், அதே நேரத்தில் தொழில் பல இயற்றும் தொண்டர்களாக்கவும் உதவின.

சோம்பல் கலவாத, மனமகிழ்வு மிக்க வாழ்வினைக் கலைகள் மக்களுக்கு வழங்கின. கலைகளால் கோயில்களும், கோயில்களால் கலைகளும், இவை இரண்டினாலும் மக்களும் வளர்ந்தனர். வாழ்வு பெற்றனர். கோயில், கலைகள் மக்கள் என்ற முத்திறத்தாரிடமும் நிலவிய இணக்கம் காலப்போக்கில் சிதையத் தொடங்கியது. இதனால், நாட்டில் கோயில்கள், கலைகள், மக்கள் என்னும் முத்திறத்திலும் வளம் குறைந்தன. வாழ்வு மங்கின.

இம்முத்திறத்தையும் மீண்டும் செம்மைப்படுத்திச் சீரிய வழியில் செலுத்தினால் நாடு செழிக்கும். கலைகளும் வாழும். கோயில்கள் ஓங்கிப் புகழுடன் திகழும். இச்சீரிய முயற்சியை குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனமும் காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகமும் இணைந்து மேற்கொண்டு 'திருக்கோயில், சமயம், கலை, சமுதாய' ஆய்வுக் கருத்தரங்கம் ஒன்றை இரண்டு நாள்கள் நடத்தவிருப்பது மகிழ்ச்சி தருகிறது.

கருத்தரங்கம் இனிதே நடந்தேறவும், இச்சீரிய முயற்சியை மேற்கொண்ட ஆதீனமும், பல்கலைக் கழகமும் நாளும் வளர்ந்தோங்கவும், தம் சீரிய சிந்தனைகளால் அரிய ஆய்வேடுகளை வழங்கிக் கருத்தரங்கில் பங்கேற்கும் ஆய்வறிஞர்களுக்கு நலம்பல பெருகவும் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

[illegible]

உ
சிவமயம்

திருக்கயிலாய பரம்பரை
ஸ்ரீலஸ்ரீ
சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்
குருமகாசந்நிதானம்
திருவாவடுதுறை ஆதீனம்

திருவாவடுதுறை 609 803
(தஞ்சாவூர் மாவட்டம்)

நாள்: 2-4-1988

## ஆசியுரை

"செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா
அம்மலம் கழீஇ அன்பரொடு மரீஇ
மால்அற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரன்எனத் தொழுமே."

— சிவஞானபோதம் சூத். 12.

மக்களின் இம்மை நலனுக்காகவும் மறுமை நல்வாழ்வுக்காகவும் தொன்று தொட்டே தொடர்ந்து வருவன சமயம் கலைகள் முதலாயின.

கலைகள் சிறப்புற்று விளங்கவரும் அவை மக்களை நெறிப்படுத்தி உய்விப்பதுமான நல்லிடங்கள் திருக்கோயில்கள்.

"திருக்கோயில் உள்ளிருக்கும் திருமேனி தன்னைச் சிவன் எனவே கண்டவர்க்குச் சிவன் உறைவன் அங்கே" என்னும்போது திருக்கோயிலும் கலையும் சமயமும் சமுதாயத்தொடும் கொண்டுள்ள பிணைப்பு இனிது விளங்கும்.

மக்கள் உணர்வு கலையோடு இணைவுற்றது. கலைகள் திருக்கோயில்களில் சிறப்பிடம் பெறுவன. திருக்கோயில்கள் சமய ஒழுக்கம் தழைய நிற்பன.

இம்முறையில் கோயிலும் கலையும் சமயமும் மக்களொடும் நெருங்கிய தொடர்புடையன மட்டும் அல்ல, அவை சமுதாயத்தை வாழவைப்பனவும் ஆகும்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த அம்மூன்றற்கும் சமுதாயத்திற்கும் இடையே நீண்ட காலமாக இருந்துவந்த உறவு அண்மைக் காலத்தில் அருகிப்போயிற்று. அதனால் சமுதாயத்தில் இனிய வாழ்வினைக் காண இயலாதும் போயிற்று.

மக்கள் இதனை உணரவேண்டும். மீண்டும் உறவினை வலிமையுறச் செய்ய வேண்டும். அவ் உறவினில் தம் வாழ்வினை அமைத்துக்கொள்ளவேண்டும். அதனால் இன்ப வாழ்வில் ஏற்றமுறவேண்டும்.

இந்நோக்கம் நிறைவேறுவதற்கான வழிமுறைகளை ஆய்ந்து கண்டு செயற் படுத்தும் குறிக்கோளொடும் நடைபெறும் இவ் ஆய்வுக் கருத்தரங்கு எல்லா வகையாலும் இனிதாய் நிரம்பி மக்கள் வாழ்வில் மறுமலர்ச்சி காணவேண்டும் என எம் வழிபடு கடவுளாகிய திரு ஞானமாநடராசப் பெருமானின் நன்மலர் அடிகளைச் சிந்தித்து வந்திக்கின்றோம்.

*****

உ

'கயிலைப் புனிதர்'
சிவத்திரு ஞானப்பிரகாச தேசிக
பரமாசாரிய சுவாமிகள்

தொண்டைமண்டல ஆதீனம்
பெரியகாஞ்சிபுரம் 631 502

## ஆசியுரை.

உலகின் எந்தப் பகுதியிலும் காண இயலாத அளவிற்குத் திருக்கோயில்களைப் பெற்றது தமிழ்நாடே என்பது அரசினர் அறிக்கையிலிருந்து தெரியவருகின்றது. மனித வாழ்விற்குரிய கலைகட்கு இருப்பிடமாக விளங்குவது இதன் தனிச் - சிறப்பாகும்.

இறைவன் உயிர்கள் மேல் வைத்த கருணையினால் தன்னைப்போல உயிர்களும் நிலைபெற்ற இன்பத்தைப் பெற வழி முறையாக அனைத்துக் கலைகளையும் அமைத்துள்ளான் என்பது நமது சமயக் கொள்கைகளுள் ஒன்றாகும். இதனைக் குறிக்கும் வகையிலேயே திருக்கோயில்கள் அமைக்கப் பெற்றுள்ளன.

குன்றக்குடி ஆதீனமும், காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகமும் இணைந்து இதுபற்றிய ஓர் கருத்தரங்கு அமைத்திருப்பது இந்நாட்களில் மிக மிக வேண்டற்பாலது ஒன்றாகும்.

கருத்தரங்கம் இனிது நடைபெற்று நல்லதொரு பயனைக் காணத் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

சிவம்.

[illegible] [illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

உ

சிவ சிவ

கயிலைமாமுனிவர்
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித்
தம்பிரான் சுவாமிகள் அவர்கள்
அதிபர், ஸ்ரீகாசிமடம்

திருப்பனந்தாள் 612 504
தஞ்சை மாவட்டம்
18-3-88

## வாழ்த்துச் செய்தி.

தென்தமிழும், திவ்வியம் பழுத்த சைவமும் ஒருங்குபுரந்து, ஒல்லுமாற்றான் எல்லாம் அருமறையாகும், எழுந்தாற்றலாகும் சீரிய திருவருட் பணியில் தலைப்பட்டு ஆற்றும் குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும், இணையற்ற தமிழ்ப் பணிகளை ஆற்றி வருகின்ற காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகமும் ஆகிய இரு பெரிய நல்லிணைப்புத் திருவருளால் இசைய அதன்வழி, 'திருக்கோயில், சமயம், கலை, சமுதாயம்' எனும் சிந்தனைக்கோவை ஒன்று சிந்தைக்கினியதாம் செவிக்கினியதாம் நிகழவுள்ளது அறிந்து மகிழ்கின்றோம்.

'பணியியர் அத்தை நின்குடையே முனிவர் முக்கட் செல்வர் நகர்வலஞ் செயற்கே' எனும் புறத்தொடர். . புலியரசுக்கும் கோயிலின் மகத்துவத்தையும் அதைப் பணிய வேண்டிய இன்றியமையாமையினையும் வலியுறுத்திப் பிறர்க்கும் வழிகாட்டியது.

" ஆலயங்கள் மேன்மைமிக்கவை, கலை மாண்புகள் செறிந்தவை. தமி தமிழகத்தின் புகழைத் தரணியெங்கும் பரப்புவன; அயல்நாட்டார் வியந்து போற்றிப் பரவும் தகைமாண்புடையன என்பது உறுதி. அவற்றின் பழமையும், புனிதமும் போற்றப்பெறுவதோடு, அவைபற்றிய பெருமிதமும் ஒவ்வொரு தமிழ்க் குடிமகனுக்கும் ஏற்பட வேண்டியதும் அவசியமாகும்.

அதனை உறுதியாக இத்தகு கருத்தரங்குகள் அளிக்கும் சமய மனமும், தமிழ் மனமும் ஒருங்கு கமழ, அறிஞர் பெருமக்கள் பலர் அருள்நெறி காட்டும் தவமுனிவரின் முன்னிலையில் ஒன்றுகூடி உரைக்கோவை நிகழ்த்தக் கருத்தரங்கு இனிதே நிறைவு பெறச் செந்திற்கந்தன் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

சுபம்

(ஒ-ம்) சிவ சிவ.

உ

ஓம் குருவே துணை

காசி விசுவநாத ஞானதேசிகர்
கோவிலூர் ஆதீனம்
கோவிலூர்
காரைக்குடி

## வாழ்த்துரை

தமிழகச் சமுதாய வாழ்வு நலம் குறித்து நாளும் சிந்திக்கும் நல்லோர் முவரும். புலவர்களாய் இருந்த வள்ளல் அழகப்பா பல்கலைக் கழகத்துடன் — இணைந்து நடத்தவிருக்கும் ஆய்வுக் கருத்தரங்கம் காலத்தின் கட்டாயத் தேவை—யென்றே கோவிலூர் ஆதீனமும் கருதி மகிழ்கிறது.

இன்றைய சமுதாயம் திருக்கோவில்களை விட்டு விலகிச் செல்வதற்குக் காரணமே கருத்தரங்கிற்கு எடுத்துக் கொண்டிருக்கும் ஆய்வுக் கருத்துக்கள். திருக்கோவில்களை விட்டு வெளியே திருவருட் சம்பந்தமற்றுத் தனிமைப் படுத்தப்பட்டவையே என்பது மாற்றமுடியாத காரணங்களாகும்.

மீண்டுமாக நமது முன்னோர் நெறி நின்று அருளியல் நிறுவனங்கள் — அனைத்தும், திருக்கோவிலை முதன்மையாகக் கொண்ட அனைத்து அறநிலையங்களும் பண்டை மரபும் நோக்கமும் பிழையா வகையில் தக்கவர்கள் துணையோடு செயல்படவைப்பதுவே அனைத்தும் பயன்தரத்தக்கதாக அமைவதற்கு வழிவகுக்கும் சமுதாய நலன்கள் உண்மையாக உரப்பெற்று நல்லதொரு சமுதாயத்தைக் காணமுடியும் என்று நம்புகிறோம்.

எனவே தங்கள் நன்முயற்சிக்கு கோவிலூர் ஆதீனத்தின் நல்லாசியும் அன்னை திருநெல்லை உடனுறைய கொற்றவாளீசர் அருளாசியும் துணை நிற்கப் பிரார்த்திக்கிறோம்.

கோவிலூர் }
13-3-88 }

(ஒப்பம்) காசிவிசுவநாத ஞானதேசிகர்
18-3-88

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

உ

வித்துவான்
தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகள்
பேரூராதீனம்

பேரூர்
கோயமுத்தூர் 641 010

18-3-88

## வாழ்த்துரை

தமிழ்நாட்டில், கலைப்பெருமையும், கட்டிடக்கலைத் திறமையும், சிற்பச் செழுமையும் ஒருசேரக் காட்சியளிப்பவை நமது கோயில்கள். திருக்கோயில் கல்வெட்டுகள் கோயில் வழிபாடுகள், விழாக்கள் ஆகியன சிறப்புற நடைபெறவும் மக்கள் பசி தீர்க்க அன்னம்பாலிப்பு நிகழவும் அமைந்த நிபந்தங்களைத் தெரிவிப்பன. ஆதலின், தெய்வத் தமிழ் திருமுறைகளில், அட்டிட்டல் காணாதே போதியோ, பூசநாள் காணாதே போதியோ எனப்பாடிய பாங்கினையும், மண்ணில் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும் அண்ணலார் அடியவர்களை அமுது செய்வித்தல் கண்ணினால் அவர் நல்விழாப் பொலிவு கண்டு ஆர்தல் எனவும் அருளிச் செய்துள்ளனர். மேலும் சமுதாயத்தில் நலிவுற்றோருக்கு உதவும் பணிகளும் திருக்கோயில்களில் மேற்கொள்ளப்பட்டன. ஆட்சிமுறை, சமுதாய நல்லிணக்கக் கோட்பாடுகள், ஆகியபற்றி செய்திகளும் மிளிர்வதைக் காணலாம்.

திருக்கோயில்கள் அறம் வளர்க்கும் பள்ளிகளாக இசை வளர்க்கும் தமிழ்க் கூடங்களாக விளங்கின; குழல், முழவம், தாளம், மொந்தை, கொக்கரையின் கச்சரியின் பாணிகள் பயிற்றுவிக்கப்பெற்றன. ஏன்? இறைவனே பயிற்றுவிப்பவனாக விளங்குகின்றான் என சமுதாயத்துடன் இணைந்த சமயமாக பிணைந்திருந்த பொற்காலமே திருமுறைகள் தோன்றிய காலமாகும்.

பண்ணின் இசையாய் பழத்தின் சுவையாய் தொழில் நோக்கியாளும் சுடராம் விளக்கினன், செந்தமிழ் திறம்வல்ல செஞ்சடையண்ணலாகிய சிவபெருமான் அடியவர் திருக்கூட்டம் வாழ்வோடியைந்த சமய நெறியில் சலம் பூவோடு தூபம் ஏந்தி பூவோடு நீர் சுமந்து ஏத்திப்புகுந்து தடங்கொண்டதோர் தாமரைப் பொன்முடிதன் மேல் குடங்கொண்டு நீராட்டினர். மொழிக்கு மொழி தித்திக்கும் செந்தமிழ்ப் பாடலுக்கிரங்கி வேண்டுவதெல்லாம் அளித்தருளினர் கருணைவள்ளலாகிய கண்ணுதல் பெருமான். இவை நம் திருக்கோயில்களின் சென்றகாலப் பழுதிலாத் திறம் ஆகும்.

இன்று சமுதாயத்தோடு ஒட்டி உறவுகொண்ட நிலைமாறி திருக்கோயில் கருவறைகளில் அயல்வழக்குகள் மண்டி இடைத்தரகர்கள் நிலையமாம், நெக்கு நெக்கு நினைப்பவர்கள் அழுதுகாமுற்று அரற்றி அன்பின் ஆழங்கால் பட்டவர்கள்

தொழுது மலர்தூவத் தடையாய் நிற்கும் அவலத்தைப் பார்க்கிறோம். கோயில்கள் அகத்தும் புறத்தும் வசிகச் சூழல் உடையனவாக அமைந்துள்ளன. ஜாதிக் கோட்பாட்டுச் சிக்கல்கள் கருவறை புகுந்து வழிபடத் தடைப்படுத்து-கின்றன. புரியாத அறியாத மொழியே வழிபாட்டுக்கு உரியதெனும் மருட்சி நி நிலையைக் காண்கின்றோம். ஆகமோர் கண்காணிப்பில் பொருளே குறிக்கோளாக பத்திமையும் பண்பும் நிலைகொள்ள முடியாத இழிநிலை திருக்கோயில்களில் தோன்றியுள்ளது. சமுதாயத்தோடு ஒட்டிய சமய உணர்வுகள் மறக்கப்பட்டு கோயிலுக்கும் குடிமக்களுக்கும் உள்ள தொடர்புகள் குறைந்து வருகின்றன. பொலிவுற்று விளங்கிய திருக்கோயில்கள் புதரும் இருளும் மண்டி வௌவால்கள் தங்கும் இடமாக மாறி சரிந்தும் தகர்ந்தும் வரும் அவலப்போக்குகள் — கண் முன்னே காட்சி அளிக்கின்றன. இவை தமிழ் நெறியாளர்க்கு அறைகூவலாகவே அமைந்துள்ளன. இவைகட்கு தமிழ்ச் சமய நெறி நிற்போர் பல குழுவாக இன்றி ஒருமுகமாகச் சேர்ந்து தீர்வு காணவேண்டும். அம்முயற்சியே திருவண்ணாமலை ஆதீனம் தவத்திரு தமிழ் மாமுனிவர் எடுத்து நடத்திவரும் செயற்பாடாகும். அம்முயற்சிகளில் பங்குகொள்ளும் திருக்கூட்டத்தில் சேர்ந்திருப்பது எமக்குப் பெருமைதருகிறது. காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகம் இணைந்து நடத்தும் திருக்கோயில், சமயம், கலை, சமுதாய ஆய்வுக் கருத்தரங்கு இனி எதிர்காலத்தில் சிறப்பினை வெளிப்படுத்தும் நற்பணிக்கு வழிகோல வேண்டும் என்று சாந்தலிங்கர் தாள்மலர் நினைந்து வாழ்த்துகிறோம்.

* * *

டி.ஆர். கல்யாணசுந்தரம், இ.ஆ.ப.,
ஆணையர்
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை

சென்னை 600 034

## வாழ்த்துரை

தமிழக நாகரிகம் திருக்கோயில்களை மையமாகக் கொண்டது. தமிழகத் திருக்கோயில்கள் நமது சமய, கலை நாகரிகத்தின் பெட்டகம். நாயன்மார்களும் ஆழ்வார்களும் நமது திருக்கோயில்களைச் சுற்றிச் சுற்றி வலம் வந்து இனிய தமிழில் நெக்குருக பாசுரங்களை பாடினார்கள். நமது செழுமை மிக்க வரலாற்றின் கருவூலம் திருமுறைகளும் திவ்வியப் பிரபந்தங்களும் ஆகும். இத்திருமுறைகளும், திவ்வியப் பிரபந்தங்களும் நம்மைத் திருக்கோயில்களை நோக்கி ஆற்றுப்படுத்துகின்றன. திருக்கோயில் வழிபாட்டில் ஆன்மா ஒன்றித்து ஈடுபடும்பொழுது அது அளவற்ற ஆனந்தத்தை அனுபவிக்கிறது. நமது திருக்கோயில்களின் வழிபாட்டு முறைகள் மிகச் சிறப்பு வாய்ந்தவை என்று உலகத்தில் பலரும் பாராட்டுகிறார்கள். இத்தகு திருக்கோயில்களைப் பேணுவதும் பாதுகாப்பதும் நம்முடைய தலைமுறையின் கடமை. குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனமும் அழகப்பா பல்கலைக் கழகமும் இணைந்து நடத்தும் திருக்கோயில், சமயம், கலை, சமுதாயக் கருத்தரங்கு இந்தவகையில் பயன் உடையதாக அமையும் என்று நம்புகின்றேன். கருத்தரங்கு எல்லா வகையிலும் வெற்றி பெற என்னுடைய வாழ்த்துக்கள்.

*****

டாக்டர் (திருமதி) ராதா தியாகராசன்.
துணைவேந்தர்
அழகப்பா பல்கலைக் கழகம்,
காரைக்குடி.

## வாழ்த்துரை.

இந்தியப் பண்பாட்டில் இமயப் பனிவரை போல் இணையிலாது புகழ் விளங்குபவை, இப்பெருநாட்டின் வேதகாலம் முதல் வீற்றிருந்து வரும் சமயங்களும் ஆன்மீகமும் ஆகும்.

திருக்கோயில்கள், இறையவரின் அருள் பெருகும் திருத்தலங்களாய்க் கலையழகுடன் பொலிந்து, பாராளும் மன்னவர் முதல் பல்வகை மக்கள் ஈறாக, சமுதாய வாழ்க்கையின் மையமாக விளங்கி வந்தமையை வரலாறு காட்டுகின்றது.

அத்தகைய திருக்கோயில்கள், இன்று காலமாறுபாட்டால் பேணுவாரற்றுப் பெரிதும் நலிந்து போயின. மக்களில் பெரும்பாலோர் அவற்றின் பண்பாட்டுச் சிறப்பையும், கலைச் செல்வத்தின் சீர்மையையும், சமயவாழ்க்கையின் உயிர்-நாடியாக இலங்கும் தன்மையையும் உணராத நிலையில் உள்ளனர்.

தாழ்வுற்ற இந்நிலையை மாற்றித், தமிழகத்துத் திருக்கோயில்கள் மீண்டும் நல்நிலையெய்தும் வண்ணம், நமது அருள்நெறித்தந்தை சமுதாய மாமுனிவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள், சிறந்த கருத்துப் புரட்சியை நடத்தி வருகின்றார்கள். அவர்கள் பல்லாண்டுகளாகவே, திருக்கோயில்களுக்கும் — சமுதாயத்திற்கும் உள்ள இணைப்பையும் பிணைப்பையும் மக்களிடையே வலியுறுத்தி எடுத்துரைப்பதோடன்றி, தாமே பல திருக்கோயில்களிலும் உழவாரப் பணி செய்து வருகின்றார்கள்.

ஏழாம் நூற்றாண்டில் அப்பரடிகளும் பதினேழாம் நூற்றாண்டில் — குமரகுருபர அடிகளும் மக்களை ஊக்குவித்து, மன்னர்களையும் ஈடுபடுத்தி நம் சமயமும் கோயில்களும் வளரச் செய்த வரலாற்றை நினைவூட்டும் வண்ணம், அவர்களின் மாபெரும் பணி அமைந்துள்ளது. கோயிற் கலைகள், பல்கலைக் கழகங்கள் வழியாகவும் வளர்க்கப்படவேண்டும் என்பது அடிகளாரின் கருத்து. அவ்வெண்ணம் விரைவில் நிறைவேற இதுபோன்ற கருத்தரங்குகள் வழிவகுக்கும்.

செந்தமிழ் வேந்தர்களும், குறுநில மன்னர்களும், மன்னர் பின்னோராம் மாண்புமை நகரத்தார்களும், சமயமும் தமிழும் தண்டமிழ்க் கலைகளும் — தழைக்கச் செய்து போற்றிக் காத்த திருக்கோயில்கள், தமிழகத்தின் பண்பாட்டுச் செல்வமாகும். வானுற வளர்ந்து ஓங்கிய திருக்கோயில் கோபுரங்களைக் காணும் மக்கள், அக்கோபுரம் உள்ளிட்ட கோயில்கலைகளை நன்கு அறிந்து பிறர்க்கும் அறிவுறுத்தும் கல்வியைப் பெறுதல் வேண்டும். இந்நன்னோக்கத்துடன் தமிழகக் கோயிற்கலை பற்றிய முதுகலைப் பட்டப் படிப்பையும், பெருஞ் சான்றிதழ்த் தனிப்படிப்பையும் அழகப்பா பல்கலைக் கழகம் தொடங்கியுள்ளது. இம்முயற்சியைப் பல்வகையாலும் ஊக்குவிக்க அடிகளார் அவர்கள் திருவுளம் கொண்டார்கள். அவர்களின் அருள் உள்ளத்தில் எழுந்த சிந்தனையும் செயல் திட்டமும் பல்கலைக் கழகமும் அடிகளார் அவர்களும் இணைந்து நடத்தும் இக்கருத்தரங்காக உருக்கொண்டன.

இக்கருத்தரங்கில் படித்தளிக்கப்படும் நன்மாண் நிறைபுலம் மிக்க ஆய்வுக் கட்டுரைகளைத் தொகுத்து ஒரு நூலாக வெளியிட முன்வந்திருப்பது, அடிகளாரின் அருள் உள்ளத்திற்குத் தக்க சான்றாகும். கோயில் கலைகளும், அவை பற்றிய கல்வியும் வளர இக்கருத்தரங்கும் கட்டுரைக் கோவையும் பெரிதும் பயன்படும். இவற்றை வரைந்தளித்த ஆய்வறிஞர்கள் பாராட்டிற்கு உரியவர்கள். இந்தக் கட்டுரைக்கோவை சிறப்புற வெளிவந்து, தமிழ் மாணவர்கட்கும், மக்களுக்கும் பயன்படுவதாக என்று உளமுவந்து வாழ்த்துகிறேன்.

***

உ

தவத்திரு குன்றக்குடி அடிகளார்

குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனம்
குன்றக்குடி.
21-3-1988

## அறிமுகம்.

தருமபுரம் ஆதீனத்தில் செந்தமிழும் சிவநெறியும் பயிலத் தொடங்கிய காலம் நமது வாழ்க்கையில் ஒரு திருப்பு மையம். இத்திருப்பு மையத்தில் நமது வாழ்நிலை மீண்டும் மாற்றம் செய்யப்பெற்றிருந்தால் இரண்டு விபத்துக்கள் — ஏற்பட்டிருக்கும். இந்த அளவுக்குத் துணைநின்ற சொக்கநாதன் திருவருளுக்கும் அத்திருவருளை வழங்கு நிலையில் நின்றருளிய கயிலைக் குருமணி அவர்களுக்கும் நமது நன்றி; கடப்பாடு.

நாம் தொடர்ச்சியாகச் சமுதாயச் சிந்தனையை அடிப்படையாகக் கொண்டே மற்றெல்லாவற்றையும் சிந்திக்கப் பழகியிருக்கின்றோம். இது சரியோ தவறோ நமக்குத் தெரியவில்லை. ஆனால் நமக்கு இந்தக் கொள்கையில் உறுதிப்பாடான நிலை உண்டு.

கடவுள்; மானிடத்தின் வாழ்க்கைக்கு உரிய ஒரு முதல். திருக்கோயில் சமுதாயத்தின் மையம். "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்று தமிழ் மூதாட்டி கூறியதன் பொருள்தான் என்ன? திருக்கோயில் அமைந்துள்ள ஊரில் வாழ்ந்தால்தான் நம் வாழ்க்கைக்குரிய உத்தரவாதம் — அதாவது ஒப்புறுதி கிடைக்கும். அதனால் கவலையின்றி வாழலாம். இம்மையிலும் வாழலாம்; மறுமையிலும் வாழலாம். எழுபிறப்பும் வாழலாம். இந்த மண்ணை விண்ணக-மாக்கலாம். எல்லாரும் இன்ப அன்பினை எய்தலாம். இத்தகு சிந்தனையை மக்கள் மன்றத்தில் உருவாக்க ஒரு கருத்தரங்கு நடத்த எண்ணம். அந்த எண்ணத்தை எண்ணியாங்கு அழகப்பா பல்கலைக் கழகத் துணைவேந்தர் அன்பிற்கும் பாராட்டுதலுக்குமுரிய 'கலைத்தேன்' டாக்டர் (திருமதி) இராதா தியாகராசன் அவர்கள் முடித்துத் தந்துள்ளார்கள். இந்தக் கருத்தரங்கின் பயன் தமிழகத்திற்குக் கிடைக்கத்தக்கவாறு புறம் புறம் போந்து காப்பார்கள் என்ற நம்பிக்கையும் உண்டு.

இக்கருத்தரங்கில் விவாதிப்பதற்குரிய செய்திகள் பல உண்டு. சில — செய்திகள், புதியனபோலத் தோன்றும். ஆயினும் அவை புதியனவையல்ல. முன்னைப் பழைய செய்திகளேயாம். மனம் திறந்து விவாதிக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம் அறிவிலே தெளிவு தேவை. இந்தக் கருத்தரங்கு தெளிவு தருதல் வேண்டும்.

கருத்தரங்கில் கலந்துகொண்டு வாழ்த்து வழங்கும் தருமபுர ஆதீனம் [illegible] திருவருள்திரு மகாசந்நிதானம் அவர்களுக்கும், திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம் திருவருள்திரு முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்களுக்கும், பேரூர் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்களுக்கும், காஞ்சிபுரம் தொண்டைமண்டல ஆதீனம் திருவருள்திரு மகாசந்நிதானம் அவர்களுக்கும் கோவிலூராதீனம் திருவருள்திரு காசிவிசுவநாத ஞானதேசிக சுவாமிகள் அவர்களுக்கும் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திருமிகு தி. இரா. கல்யாண-சுந்தரம் அவர்களுக்கும் மற்றும் அறிஞர் பெருமக்கள் அனைவருக்கும் நன்றி; கடப்பாடு.

(ஒ-ம்) குன்றக்குடி அடிகளார்.

# உள்ளடக்கம்.


பக்க எண்.

**முதல் அமர்வு — திருக்கோயில், திருக்கோயில் அமைப்பு, சிற்பம்**

| | | | |
|---|---|---|---|
| 1:1 | திருக்கோயில் வரலாறு — | திரு நெ.முருகசாமி | 1-9 |
| 1:2 | படிமங்கள் ஒரு பார்வை — | திரு இரா.கலைக்கோவன் | 11-20 |
| 1:3 | கல்வெட்டுகள் | திரு சி.கோவிந்தராசன் | 21-29 |
| 1:4 | சந்நிதிகளும் மூர்த்தி பேதங்களும் | திரு கோ.தெய்வநாயகம் | 31-35 |
| 1:5 | சிற்பம் — | திரு எஸ்.எம்.கணபதிஸ்தபதி | 37-64 |
| 1:6 | கோயிற்சமயம் | திரு வை.கணபதிஸ்தபதி | 65-98 |

**இரண்டாம் அமர்வு — சமயநெறி**

| | | | |
|---|---|---|---|
| 2:1 | ஞானம் | திரு சி.அருணைவடிவேல் முதலியார் | 99-108 |
| 2:2 | பக்தி | திரு ச.கங்காதரன் | 109-115 |
| 2:3 | சரியை | திரு கே.எஸ்.வைத்தியநாத சிவாச்சாரியார் | 117-122 |
| 2:4 | யோகம் | திரு எஸ்.பி.சபாரத்தினம் | 123-133 |
| 2:5 | கோயிற்பணிகள் | திரு அ.மா.பரிமணம் | 135-142 |

**மூன்றாம் அமர்வு — சமயம்**

| | | | |
|---|---|---|---|
| 3:1 | நாலாயிர திவ்வியப் பிரபந்தம் | திரு ந.சுப்புரெட்டியார் | 143-148 |
| 3:3 | உழவாரம் | திரு வி.சா.குருசாமி தேசிகர் | 149-155 |
| 3:5 | ஆகமங்கள் | திரு டி.பி.சித்தலிங்கையா | 157-164 |

**நான்காம் அமர்வு — கோயில் வழிபாட்டுமுறை, இலக்கியம்**

| | | | |
|---|---|---|---|
| 4:1 | பரிவார தேவதைகள் | திரு ச.தண்டபாணிதேசிகர் | 165-185 |
| 4:2 | திவ்வியப் பிரபந்தம் | திரு கா.அ.மணவாளன் | 187-196 |
| 4:3 | திருமுறைகள் | திரு சி.பிச்சைக்குருக்கள் | 197-201 |
| 4:4 | புராண இலக்கியங்கள் | திரு ச.சாம்பசிவம் | 202-217 |
| 4:5 | தோத்திர இலக்கியங்கள் | திரு இரா.செல்வகணபதி | 219-223 |


..2..

**ஐந்தாம் அமர்வு — கலைகள்:**


| | | | |
|---|---|---|---|
| 5:1 | ஞானசம்பந்தர் | திரு வி.ப.கா.சுந்தரம் | 225–239 |
| 5:2 | புல்லாங்குழல் | திரு கொ.ஆ.பக்கிரிசாமி பாரதி | 241–249 |
| 5:3 | நாகசுரம் | திரு அ.கோவிந்தராசன் | 251–258 |


**ஆறாம் அமர்வு — சமய நிறுவனங்கள், திருக்கோயில், சமுதாயத் தொடர்பு**


| | | | |
|---|---|---|---|
| 6:2 | அர்ச்சனை | திரு அ.விசுவநாதன் | 259–267 |
| 6:4 | தேவாரத் திருமுறைகளும் திருமேனிகளும் | திரு கி.ஸ்ரீதரன் | 269–276 |
| 6:5 | திருக்கோயில் நிர்வாக அமைப்பு | தவத்திருக்குன்றக்குடி அடிகளார் | 277–285 |

# திருக்கோயில், சமயம், கலை, சமுதாய ஆய்வுக் கருத்தரங்கு, கட்டுரைகள்

1:1:1

# திருக்கோயில் வரலாறு.

தெ.முருகசாமி, எம்.ஏ., பி.ஓ.எல்.,
முதல்வர், இராமசாமி தமிழ்க் கல்லூரி
காரைக்குடி.

மனித வரலாறு புனிதமானது. இயற்கையோடு ஒட்டிய வாழ்வைத் தொடங்கிய மனிதன் இன்று அவ்வியற்கையை வெல்லக் கற்றுள்ளான். தொடக்க காலத்திலிருந்து படிப்படியாக வளர்ந்த அவனது பல்புணர்வுகள் வழிவழியாக வருவோர்க்கு மானுடவியற் கூறுகளாகப் பரிமளித்தன. அவ்வாழ்வியற் கூறுகளுள் சமயம் அல்லது சமய நம்பிக்கை என்பதும் ஒன்று. இச்சமய வரலாற்றின் பதிவீடுகளில் தலையாயது திருக்கோயில். இத்திருக்கோயில் தோன்றி வளர்ந்த வரலாற்றை அறிவதே இக்கட்டுரையின் கருதுகோள்.

ஆதி மனிதன் இயற்கையோடு ஒட்டி வாழ்ந்தான். மரமடர்ந்த காடும் நீண்டுயர்ந்த மலையும் அவனது இருப்பிடங்களாகத் திகழ்ந்தன. பெரும்பாலும் அஃறிணையோடு அஃறிணையாய் வாழ்ந்த மனிதனுக்குப் படிப்படியாகத் தன்னையும் தன்னைச் சுற்றியுள்ள பொருள்களையும் பற்றி அறியும் அறிவு வளர்ந்தது. நிழலின் அருமை வெயிலில் தெரியும். அவ்வாறே பல்வேறு துன்ப உணர்ச்சிகள் நல்ல நம்பிப்புணர்வுகளைத் தந்தன. அவ்வப்போது நிகழும் இயற்கையின் மாற்றங்களுக்கும் தன்னைச் சுற்றியுள்ள கொடிய விலங்குகளின் சீற்றங்களுக்கும் ஆட்படநேர்ந்த மனிதன் தன்னைத் தற்காத்துக் கொள்ள முற்பட்டான். கொடியவைகளை எதிர்த்துப் போராடி வெற்றிபெற்றதும் வெற்றி பெறமுடியாத தோல்விகளே அவனை அச்ச உணர்விற்குத் தள்ளக் காரணங்களாயின. அவ்வச்ச உணர்வின் அடிப்படையில் தனக்குத் தீங்கு தரும் பொருள்களிடம் பயமும் பக்தியும் — இயல்பாகவே தோன்றின. இதனால் அவ்வப்பொருள்கள் (தீ, தண்ணீர், காற்று பாம்பு) வழிபாட்டிற்குரிய தகுதியைப் பெற்றன. அவைகள் கல், மரம், மண் முதலிய இயற்கைப் பொருள்களில் வடிக்கப் பெற்றுக் கடவுளாகக் கருதப்பட்டன. தொடக்க காலத்தில் நாட்டுப்புறச் சமயத்தின் நிலை யாதெனில் கற்களிலும் மரங்களிலும் பிற இயற்கைப் பொருள்களிலும் கடவுள் இருப்பதாகக் கருதி . . மக்கள் வழிபட்டனர்' — என்று தமிழக வரலாற்று நூல் ஆசிரியர் — ந.சுப்பிரமணியன் கூறுகிறார்.

கடவுள் வடிவங்கள் பொதுவான ஓரிடத்தில் வைத்து வழிபட்டதால் அவ்விடம் (பொது இல்) பொதியில் — எனப்பட்டது. 'வம்பலர் சேக்கும் கந்துடைப் பொதியில்' — எனப் பட்டினப்பாலையும் (249)' பெருநலம்

சிதைந்த பேஎம்முதிர் பொதியில்' — என அகநானூற்றிலும் (379) பிற சங்க இலக்கியங்களிலும் இச் சொல்லாட்சி வந்துள்ளது. பொதியில் என்பது பொது இடம். இன்றும் கோயில்கள் பொது இடங்களாகவே கருதப்படுகின்றன. அப் பொது இடத்தை மன்று, அம்பலம் என்பதாகக் கூறுவர். இம்மன்று, அம்பலம், பொதியில் என்பன சைவர்களுக்குக் கோயில் எனப்படும் சிதம்பரத்தைக் குறிப்பனவாகவே இன்றும் வழக்கில் உள்ளன. கேரளத்தில் கோயில்களுக்கு அம்பலம் என்றே பெயர் வழங்குவதாகத் தெ.பொ.மீ. கூறுகிறார். பொது இடங்களில் கடவுளை வழிபடும் பண்டைய வாழ்வியலைப் பற்றித் திருமுருகாற்றுப்படை தெளிவாகக் கூறுகிறது.

'காடும் காவும் கவின்பெறு துருத்தியும்
யாறும் குளனும் வேறுபல் வைப்பும்
சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும்
மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும்' (23 –27)

பண்டைய மக்களுக்கு எங்கும் கடவுள் எல்லாம் கடவுள் என்ற உணர்விருந்த தாயினும் அக்கடவுளை ஒரு குறிப்பிட்ட குறியால் அல்லது அடையாளத்தால் வணங்கினர் என்ற உண்மையையே மேற்கண்ட நக்கீரர் தம் பாடல் வரிகள் உணர்த்துகின்றன. காடு, கா, ஆறு முதலியன இயற்கையிடங்கள். மன்றம், பொதியில் என்பன கட்டிட அமைப்பைச் சார்ந்த இடங்கள். கந்துடை நிலை மட்டுமே குறியும் குறியிடமாகக் கருதப்பட்ட பொருளாகும். இஃதொன்றே கோயில் எழுவதற்கு முதன்மையாகத் திகழ்ந்த உருவ வழிபாட்டின் அடிப்படை நிலை என்று டாக்டர் மொ.அ.துரையரங்கனார் கூறுகிறார்.

கந்து என்பதன் இயற்பெயர்ப் பொருள் 'தறி'. அஃது மரத்தாலானது. மரத் தறிகள் விரைவில் அழியும் இயல்பின. கல் தறிகள் அவ்வாறு அழியா. எனவே கடவுளின் அடையாளமாக நட்டுவைத்த மரத்தறி அல்லது மரத் தூண்கள் காலப்போக்கில் கல் தறிகளாக மாறின. இன்று கோயில்களில் காணும் சிவலிங்கங்கள் பற்று யரமாயிருந்தவ. 'கன்றாப்பூர் நடு தறியைக் காணலாமே' என்று இக்காலத்திலும் சில கிராமப்புறக் கோயில்களில் மரத்தாலான கடவுளர் உருவங்கள் வழிபாட்டிற்கு உரியதாக உள்ளன. மரத்தாலான உருவங்களைப் போலவே மண்ணாலான உருவங்களையும் ஆங்காங்கே மக்கள் அமைத்து வழிபட்டனர். பெண்களின் பாவைநோன்பைப் பற்றிக் கூறும் 'அம்பா ஆடலில் நீர்த்துறைப் பகுதியில் மண்ணாலாகிய பாவை செய்து வழிபட்டனர் என்ற குறிப்பு பரிபாடலில் (11) காணப்படுகிறது. இவ்வாறு மரத்தாலும் மண்ணாலும் சமைக்கப்பட்ட உருவங்கள் நின்று நிலைக்காததால் நிலைபேறுடைய கல்லால் உருவங்கள்

1:1 3

பொறிக்கப்பட்டன. இவ்வாறாக மனிதகுல வரலாற்றில் ஓர் இடம், அதில் ஒரு குறி என்பதாகத் தொடங்கி வளர்ந்த சமயம் விண் மறைத்து விளை மறைக்கும் கோபுரங்களையுடைய பெருங்கோயில்களைக் கண்டும் வளர்ந்தது எனலாம்.

சங்க காலத்தில் கோயில் என்பது அரசனது அரண்மனையைச் சுட்டியது. காப்பிய காலத்திலும் அஃதே பொருளாயிற்று. முதலில் அரண்மனையைச் சுட்டிய இச்சொற்றொடர் பின்னர் அண்டத்திற்கெல்லாம் அரசாக உள்ள கடவுளின் இருப்பிடத்திற்கும் பெயராக வழங்கியிருக்கவேண்டும். ஏனெனில் சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய திருமூலர் திருமந்திரத்தில் காணப்படும் கோயில் என்னும் சொல் ஆண்டவனது இருப்பிடத்தை நேரிடையாகச் சுட்டியது. (திருமந்திரம் 705, 1792, 1821) ஆலயம் என்ற சொல்லையும் திருமூலர் கையாள்கிறார். கி.பி. 6 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அப்பரடிகள் காலத்தில் கோயில் என்னும் சொல் பெருவழக்காகி விட்டது.

"பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்
பெருங்கோயில் எழுபதினோ டெட்டும் மற்றும்
கரக்கோயில் கடிபொழிற்சூழ் ஞாழற் கோயில்
கருப்பறியல் பொருப்பனைய கொகுடிக் கோயில்
இருக்கோதி மறையவர்கள் வழிபட் டேத்தும்
இளங்கோயில் மணிக்கோயில் ஆலக் கோயில்
திருக்கோயில் சிவனுறையும் கோயில் சூழ்ந்து
தாழ்ந்திறைஞ்சத் தீவினைகள் தீரு மன்றே"

இவற்றோடு பூங்கோயில், ஞாழற்கோயில் மாடக்கோயில் பற்றியும் குறிப்பிடுகின்றார். எனவே ஆண்டவன் உறைவிடமாகிய கோயில் என்னும் வழக்கு பிற்காலத்ததாக இருப்பினும் கோயிலைப் பொது இடமாகக் கருதிச் சங்க இலக்கியத்தில் கூறப்படும் 'பொதியில்' என்ற சொல் கோயிலைக் குறிக்கும் அரிதான பெயர் வழக்காக இருந்தது எனக் கருதலாம். செட்டிநாட்டு வழக்கில் 'கோயில்வீடு' என்பது தெய்வம் உறையும் இடமாகக் கருதப்படுகிறது. வீடு என்பது இடம். கோயிலாகிய இடம் என ஓர் அறையைக் குறிப்பதே கோயில்வீடு என்பதாம்.

நடுகல்நடும் நிலைகளைப் பற்றிக் கூறும் தொல்காப்பியர், 'சீர்த்த மரபின் பெரும்படை' என ஒரு துறை (புறத்-4) கூறுகிறார். அதற்கு "நாட்டிய கல்லிற்குக் கோட்டம் செய்தல். அஃது இற்கொண்டு புகுதல் என உரைத்தமுறை" என்பதாக இளம்பூரணர் உரைவிளக்கம் தந்தார். ஈண்டுரைத்த கோட்டம் என்பது கோயில். கோயிலைக் கோட்டம் என்றல் பழைய மரபு. 'அணங்குடை முருகன் கோட்டத்து' எனப் புறநானூறும் (299) பிற சங்கப் பாடல்களும் தெய்வக் கோட்டங்களைச் சுட்டுகின்றன. சிலம்பின் கரைத்திறம்

உரைத்த காதையில் பல கோட்டங்கள் வருகின்றன. உரையாசிரியர் நாட்டிய கல்லிற்குக் கோட்டம் செய்தல் என்பதால் தொல்காப்பியர் கூறும் பெரும்படை என்பது கோயில் அமைத்தலைச் சுட்டுவதாகும். ஈண்டுக் கோயில் தோற்றத்தின் வரலாற்று உண்மை நுட்பமாகப் பொதிந்து கிடக்கிறது. அஃதாவது இங்குக் கூறிய நடுகல்லும் முன்னர்க் கூறிய கந்துடை நிலையும் கடவுளாகக் கருதும் குறிகள். இக்குறிகளைக் கண்ட பின்னரே அதற்குக் கோயில் அமைக்கும் முறை தோன்றியது. ஆண்டவனுக்காகக் கோயில் கட்டப்பட்டதே தவிர கோயிலுக்காக ஆண்டவன் சமைக்கப்படவில்லை. இயற்கையின் அல்லது ஆண்டவனின் ஆற்றலையுணர்ந்து — அவ்வாற்றலை ஒரு குறியாகக் கண்டு போற்றினர் என்பதே கோயில் தோற்றத்தின் முதற்படி என்பது இப்பெரும்படை என்ற தொல்காப்பியர் தொடரால் — நன்குணரலாம்.

இப்பெரும்படையை 'இற்கொண்டு புகுதல்' என்ற துறையாகப் புறப்பொருள் வெண்பா மாலையார் கூறுவர். 'இந்நூல் பன்னிருபடல உறுப்புக்களைப் பெற்ற நூல்' என்று டாக்டர் உ.வே.சா. கூறுவார். கி.பி. 8 ஆம் நூற்றாண்டில் தோன்றிய புறப்பொருளுக்கு முந்தியதான பன்னிருபடலம் சங்கம் மருவிய காலத்தது. இதில் உள்ளதே இல்கொண்டு புகுதலாம். 'இல்' என்பது இடம் அல்லது வீடு என்ற பொருளைச் சுட்டுவதாயினும் தெய்வநிலையோடு தொடர்புடைய சூழலில் சங்கம் மருவிய காலத்ததாகிய இச்சொல் (இல்) கோயில் என்ற சொல்லின் நெருக்கத்தைக் காட்டுகின்றது. பொதியில், கோயில், இல் கொண்டு புகுதல் என்பவற்றில் காணும் 'இல்' என்னும் சொல் வந்துள்ளதை உற்றுநோக்கின் தெய்வம் உறையும் இடத்திற்கு வழங்கும் பொதுச் சொல்லாக இருந்திருக்கலாம் எனத் தோன்றுகின்றது.

கோட்டை என்பதும் கோட்டம் என்பதும்ஒன்றே. அக்கோட்டம் அரசனுக்கும் ஆண்டவனுக்கும் பொதுவாகச் சுட்டியதைப்போல 'இல்' என்பதும் மக்கள் வாழிடத்தையும் ஆண்டவன் உறைவிடத்தையும் சுட்டியதாகக் கொள்ளலாம். ஆதி மனிதன் தனக்கென அமைத்துக்கொண்ட சிறிய இல்லத்தைப் போலவே தன்னால் வழிபடும் தெய்வத்திற்கும் ஓர் 'இல்' சமைத்தான். அதனைத்தான் வாழும் இடத்தைப்போன்ற சிறிய அமைப்பில் தொடக்க காலத்தில் — அமைத்தானாயினும் அறிவின் முதிர்ச்சியால் தான் வாழும் இல்லிற்கு மேலாகத் தன்னை ஆளும் ஆண்டவனின் இல்லம் அமையவேண்டும் என்ற உணர்வு மேலிட்டபோது அது 'கோயில்' எனப் பேரிடமாகச் சமைத்தான்போலும்! கோ என்றால் பெரிய என்னும் பொருள். கோக்கதவு — பெரிய கதவு எனத் தமிழகராதி (Tamil Lexicon ) கூறுகிறது. தொடக்க காலத்தில் மனிதனது வீடு -

1:1:5

போன்றதே ஆண்டவனது இடமும் என்ற உண்மையைத் தமிழக வரலாற்று ஆசிரியர் ந.சுப்பிரமணியன் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்.

"ஆதி மனிதன் கடவுளுக்கு வீடு அமைக்க முற்பட்டபோது தன் வீட்டைப் போலவே கட்டத் தொடங்கினான். தான் வாழ்ந்து வந்த மரப்பொந்துகள், மலைக்குடைவுகள் குகைகள் முதலியவற்றைப்போலவே அமைந்தன. மேலே கவிந்தும் இடையில் பருத்தும் ஒருபுறம் வாயில் வைத்து ஏனைய இடங்கள் மூடப் பட்டும் அமைக்கப்படுவதே எல்லாவகை வாழிடங்களும். ஆதலால் குகைகளில் இருந்த வீடுகள் வாயிலாகக் கோயில் கட்டிடங்கள் பரிணமித்துள்ளன". (தமிழக வரலாறு. 1565.பக். 300)

மேலும் மேற்கண்டவாறாக அமையப்பெற்ற பண்டைய கோயில்கள் கூரை வேயப்பட்ட சுடுமண் கோயில்களாகக் காணப்பட்டன என்றும் அவைகளில் எவ்விதமான சிற்ப ஓவிய கலைநலங்கள் காணப்படவில்லை என்றும் ஆசிரியர் எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியம் கூறுகிறார். (முற்காலச் சோழர் கலையும் சிற்பமும் பக். 2) எனவே தற்காலத்தில் உள்ள போன்ற பெரிய தோற்றத்தில் பழங்காலத்தில் கோயில்கள் இல்லை என ஒருவாறு விளங்குகிறது.

சங்ககாலத்திற்கு முன்பிருந்தே கோயில்கள் இருந்தன என்பதை உணரும் நமக்கு அவைகள் எங்ஙனம் அமைக்கப்பட்டன என்பதைப் பற்றித் தெளிவாக அறியமுடியவில்லை. அரண்மனை அமைக்கும் நியதியைக் கூறும் நெடுநல்வாடையில் நூலறிபுலவரால் நாள் குறித்து திசைகளையும் அவற்றில் நிற்கும் தெய்வங்களையும் நோக்கி அமைக்கப்பட்டன எனக் கூறுவதால் ஆண்டவனுக்காக எழுப்பப்படும் கோயிலையும் அவ்வாறே அமைத்திருப்பர் எனத் தெளியலாம். புறநானூற்றில் சிவன்கோயில் இருந்ததையும் அங்கு அரசன் வழிபாட்டிற்குச் செல்வதையும் பற்றிய செய்தி காணப்படுகிறது.

"பணியியர் அத்தை நின் குடையே முனிவர்
முக்கட் செல்வர் நகர்வலம் செயற்கே." (6)

பேருரை நகர் என்பதுபோல் பெருங்கோயிலையே நகர் என்ற சொல்லால் புறநானூறு சுட்டுகிறது. பெரிய வீட்டை 'நகர்' என்றே சங்க இலக்கியங்களில் காணப்படுதலால் 'இல்' என்பதைப்போலவே 'நகர்' என்பதும் ஆண்டவன் உறைவிடத்தைச் சுட்டியது. எனவே பொதியில், கோட்டம், இல், நகர் என்னும் சொற்கள் தரும் பொருளைக் கொண்டு பார்த்தால் சங்க காலத்தில் படிப்படியே கோயிற்கலை வளர்ந்த வரலாற்றை நன்குணரலாம்.

1:1:6 சங்ககாலத் தொடக்கத்தில் மரங்களிலும் செங்கற்களிலும் கோயில்கள் அமைந்திருந்தன. இவைகள் காலப்போக்கில் சிதைந்தன என்ற குறிப்பு அகநானூற்றுப் பாடலொன்றில் உணரமுடிகிறது.

"இட்டிகை நெடுஞ்சுவர் விட்டம் வீழ்ந்தென
மணிப்புறாத் துறந்த மரஞ்சோர் மாடத்து
எழுதணி கடவுள் போகலின்....."(167)

ஈண்டு மாடம் என்பது கோயில் வகைகளுள் ஒன்றாகிய மாடக் கோயிலைக் குறிப்பது. சங்கம் மருவிய காலத்தவனாகிய சோழன் கோச்செங்கணான் 70 மாடக்கோயில் எழுப்பித்ததாகத் திருமங்கை மன்னன் பாடியுள்ளார்.

இத்தகு கோயில்களில் ஒன்றுகூட இன்று இடிபாடுகளாகக்கூடக் காணப்படவில்லை. இதற்குக் காரணம் அவைகள் யாவும் எளிதில் அழிந்து போகக்கூடிய பொருள்களைக் கொண்டு கட்டப்பட்டிருத்தல் வேண்டும் என்பதே. மேலும் சங்க காலத்திற்குப் பின்னர் ஏற்பட்ட களப்பிரர் ஆட்சியில் கோயில்கள் சிதைந்திருக்கக்கூடும். எனவே மரம் செங்கல் முதலியவை எளிதில் அழியக்கூடிய தன்மைய என்பதை உணர்ந்த பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் பாறைகளைக் குடைந்து கோயில் கட்டும் முறையைப் புகுத்தினான். இதுபற்றி அவன் கூறுவதாக உள்ள கல்வெட்டுச் செய்தியாவது, "மரமின்றி சுதையின்றி, உலோகமின்றி, செங்கலின்றி தோற்றுவித்தேன்" என்பதாம். (தமிழகக் கோயிற் கலைகள் இரா.நாகசாமி. பக். 50) மகேந்திரனைப்போலவே நரசிம்மவர்மனும் குடைவரைக் கோயிலை அமைத்துப் பெருமை கொண்டான். குடைவரையின்றி ஒரே பாறையில் (கல்லில்) அமையும் ஒற்றைக்கல் கோயிலும் பாறையை உடைத்தெடுத்து அடுக்கிக் கட்டப்படும்கட்டுமானக் கோயில்களும் பல்லவர் காலத்தில் மேலோங்கின.

தமிழகத்தின் வடபகுதியைப் பல்லவர்கள் ஆண்டபோது தென்பகுதியைப் பாண்டியர்கள் ஆண்டுவந்தனர். அவர்களும் பல்லவர்களைப் போலவே குகைக் கோயில்களையும் கற்கோயில்களையும் கட்டுவித்தனர். கி.பி. 9 ஆம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்த சோழர் காலம் தமிழகக் கோயில் வரலாற்றில் பொற்காலமாகக் கருதப்பட்டது. சிற்பக் கலைகளும் செப்புத் திருமேனிகளின் அமைப்பும் சோழர்தம் கலைப் பாணியைத் தனித்துக் காட்டின. மாமன்னன் இராசராசன் கட்டிய தஞ்சைப் பெருவுடையார் கோயிலும் அவன் மகன் இராசேந்திரன் கட்டிய கங்கைகொண்ட சோழபுரக் கோயிலும் தமிழகக் கோயிற்கலை வரலாற்றில் மகுடங்களாகத் திகழ்கின்றன. இவர்களுக்குப் பிந்திய

சோழமாமன்னர்களும் கோயிற்கலையை நன்கு வளர்த்தனர். கற்களே காண முடியாத இடங்களில் கற்களைக் கொணர்ந்து கோயில் கட்டுவதென்பது கோயில் வரலாற்றில் சிறந்த இடத்தைப் பெற்றதால் பல கற்கோயில்கள் உருவாயின.

சோழர் காலத்திற்குப் பிறகு தமிழகத்தை ஆண்ட விசயநகர அரசர்கள் ஏற்கனவே கட்டப்பட்ட கோயில்களை விரிவாக்கியும் வானளாவிய கோபுரங்களையும் சுற்று மதில்களையும் கட்டுவித்தும் கோயில் வரலாற்றைப் புதுக்கினர். மதுரை மீனாட்சி அம்மன் கோயில் இதற்குத் தக்க சான்றாகும். விசயநகரப் பேரரசிற்குப் பின்னர் தமிழகத்தில் பல்வேறு அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டன. இதனால் தொடர்ந்து சமயத் தொண்டு புரிந்துவந்த திருமடங்கள் கோயில்களைப் பாதுகாத்தன. தற்காலத்தில் தமிழகக் கோயில் வரலாற்றில் செட்டிநாட்டு நகரத்தார்களுக்குத் தனி இடம் உண்டு எனில் அதில் ஐயமில்லை. பழம்பெரும் கோயில்களைப் புதுக்கி வாழ்வளித்து வரும் பெருமை அவர்களையே சாரும்.

இயற்கை வழிபாட்டிலிருந்து கோயில்கள் தோன்றியது போலவே இறந்துபட்டவர்களைப் புதைக்கும் பள்ளிப்படை தொடர்பாகக் கோயில்கள் தோன்றலாயின. தொன்றுதொட்ட நடுகல்லின் வழிபாட்டு முறையே இன்று சமாதி கோயில்களாக உருவாயின. இவைகள் முதன்முதலில் அச்ச உணர்வால் தோன்றிய கோயில்களைப் போலவே முன்னோர்களை வழிபடும் உணர்வால் எழுந்தன. பக்திக்காகக் கோயில்கள் கட்டப்பட்டதைப் போலவே அரசர்கள் தம் வெற்றி குறித்தும் தம் ஆட்சியின் பெருமை குறித்தும் கோயில்களைத் தோற்றுவித்தனர். அரசர்களைப் போலவே மக்களின் சிறு தெய்வ வழிபாட்டால் தொன்றுதொட்டு ஆங்காங்கே பல கோயில்களும் பல்கிப் பெருகின. இப்படியாகக் கோயில்கள் பலவாறாகத் தோன்றின எனலாம்.

கோயில்களின் சிற்பங்கள், விழாக்கள் முதலியவை பற்றி விரிவாகக் கூற ஆகம நூல்கள் இருப்பதைப்போல் கோயில் கட்டும் அமைப்பைப்பற்றிக் கூறும் நூல்களும் இருந்தன என்பது கல்வெட்டால் அறியப்படும் செய்தியாகும். இருப்பினும் தமிழில் அவைபற்றிய கருத்துக்கள் பெருக்கமாகக் காணப்படவில்லை. மயன் இயற்றியதாகத் தற்போது கிடைத்திருக்கும் 'ஐந்திறம்' என்னும் நூலுள் பொதுவாகக் கட்டிடக் கலைபற்றியப் பேசப்பட்டுள்ளது. சிலப்பதிகாரம் பத்தினிக் கடவுளுக்குக் கோட்டம் எடுத்த வரலாற்றைக் கூறுகிறது. சேக்கிழார் பூசலார் வரலாற்றில் கோயில் எடுப்பித்ததைப் பெரியபுராணத்தில் விளக்குகிறார். கலிங்கத்துப்பரணியில் காளிதேவிக்குக் கோயில் எடுக்கும் முறையைச் — சயங்கொண்டார் சுட்டுகிறார்.

1:1:6

'சந்தி பொருந்தித் தப்பாச்சீர் கெடாதடுக்கி
புந்தி மகிழ்தரப் புனைந்தார்போல் — முந்தையோர்
செய்யுட்போற் செய்த திருக்கோயில் உள்ளிருந்தெம்
பையுட்போக் கும்பரஞ்சோதி'

என்பது நல்லாற்றூர் சிவப்பிரகாசர் திருவாக்கு. (திருவெங்கையுலா — 140-141) அணிபெறச் செய்யும் செய்யுள்போல் கலைநலம் விளங்கக் கட்டப்படுவது கோயில் என்கிறார். செய்யுளுக்கு அணிநலம் போல கோயிலுக்கு அழகு இன்றியமையாதது. இந்த அடிப்படையில்தான் கோயிலில் கோபுரங்கள் உருவாயின. கோபுரம் என்ற சொல்லே தமிழகத்தின் தனிச் சொல்லாகும். வேறெங்கும் காணமுடியாத அளவிற்குத் தெய்வீகச் சூழலைத் தந்து விளங்குவது இக்கோபுரங்களேயாகும். இவைகள் கோயிற் கருவறைக்கு மேலே விமானம் என்றும் கோயில் முகப்பில் கோபுரம் என்றும் குறிக்கப்பட்டன. தமிழ்நாட்டின் சின்னம் திருக்கோயில் கோபுரமாக உள்ளது. ஆசியாவின் மிகப்பெரிய கோபுரம் திருவரங்கத்தில் கட்டப்பட்டுள்ளதாகும்.

கோயிலின் சிறப்பைக் கோபுரம் தருதலால் 'கோவிற் காக்கும் குலவு கோபுரம்' என அதனைக் இலக்கண நூலில் வச்சணந்திமாலை... (ஆக்கவியல்—அடி 108) கோபுரத்தின் சிறப்பைக் கூறுகிறார். 'குலவு சித்திரம் கோபுரம் கோயில்' எனச் சித்திர வேலைப்பாடமைந்த கோபுரத்தின் தெய்வீகத்தைப் பாரதியார் கலைமகள் வாக்கத்தில் ஒப்பிக்கின்றார்.

கோயில்கள் அந்தந்த மன்னர்களின் ஆட்சிச் சிறப்பிற்கேற்ப விரிவடைந்தன. பெரிய சுற்றுமதில், கோபுரம், நூற்றுக்கால் — ஆயிரங்கால் மண்டபங்கள்: முகப்பு மண்டபம் உள் மண்டபம் முதலிய விரிவுகள் கோயில் வரலாற்றில் படிப்படியான வளர்ச்சியைக் காட்டுவதாகும். இங்ஙனம் சிற்பக் கலைக்கும் கட்டடக் கலைக்கும் சிறந்த இருப்பிடமாகவும் எடுத்துக்காட்டாகவும் திகழும் கோயில்கள் பல தமிழ்நாட்டில் சிறப்பாகக் காணப்படுகின்றன. அவற்றுள் சில மிகவும் குறிப்பிடத்தக்கனவாம் அமைந்துள்ளன, "தாரமங்கலம் தூண்கள், திருவலஞ்சுழி பலகணி, ஆவுடையார்கோயில் கொடுங்கைகள் நீங்கலாகச் செய்து கொடுப்போம்" — எனக் கோயில் கட்டும் ஒப்பந்தத்தில் சிற்பிகள் எழுதித் தருவார்கள் என்பது இடைக்காலத்தின் கோயிற்கலை வரலாற்றை உயர்த்திக் காட்டுவதாக அமைந்துள்ளது. (தமிழகக் கலைச் செல்வங்கள் — தி. இராசமாணிக்கம். பக். 75)

11.4 தொடக்க காலத்தில் சாதாரணமாகக் கட்டப்பட்ட கோயில்கள் அறிவின் முதிர்ச்சியால் படிப்படியே தத்துவங்களுக்கு உட்பட்டுக் கட்டப்பட்டன. ஆலயங்களின் உட்பொருள் விளக்கங்கள் கற்பிக்கப்பட்டன. மக்களின் உடலமைப்பில் இருந்தே கோயில்கள் எழுந்தன என்பது கலைக்களஞ்சியக் குறிப்பாகும். (தொகுதி4) 'உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்' என்பது திருமூலர் வாக்கு. எனவே தன்னைத்தான் உணர்ந்து வாழும் வாழ்க்கைக் கலையை மனிதர்க்குக் கற்பித்தரும் பொது இட அடையாளமாகவே அக்காலந்தொட்டு இக்காலம் வரை திருக்கோயில்கள் தோன்றி வளர்ந்து வருகின்றன என்பது கோயில் வரலாற்றின் பரிணாமம் எனலாம்.

அமைதியும் தூய வாழ்வும் மனித வாழ்வின் குறிக்கோள். அவற்றை அடைய மனநலமும் உடல்நலமும் வேண்டும். இவ்வடிப்படைகளை மனிதன் எளிதில் பெறவேண்டியே கோயில்கள் பெரும்பாலும் ஆற்றங்கரையை ஒட்டியும் மலை உச்சியிலும் கட்டப்பட்டன. தோன்றி மறையும் மனித வாழ்வை அழியாத் தெய்வீகம் ஆக்குவது திருக்கோயில்களே என்பதால் மன்னனது அரண்மனையையும் உணர்த்திவந்த அடைமொழியற்ற 'கோயில்' என்ற சொல் தனித்துறை வேண்டித் "திரு" என்ற அடைமொழி புணர்த்தித் திருக்கோயில் எனப்பட்டது. இவ்வாறாகத் தனி மனித வாழ்விற்கும் சமுக வாழ்விற்கும் பயனும் அமைந்த திருக்கோயில்களின் தேவையைக் கருதிய அப்பரடிகள் திருக்கோயில் இல்லாத ஊரை ஊராகக் கருதாமல் காடாகக் கருதி, "திருக்கோயில் இல்லாத திருவில் ஊரும் .......... அவையெல்லாம் ஊரல்ல அடவி காடே" என்றார். எனவே தமிழர்தம் அகவாழ்விற்கும் புறவாழ்விற்கும் சின்னங்களாக இலங்கும் திருக்கோயில்களைப் போற்றியொழுகுதல் நம்மனோர் கடனாம்.

---

## துணை நூற்பட்டியல்.


1. தொல்காப்பியம்.
2. சங்க இலக்கியங்கள்
3. சிலப்பதிகாரம்
4. திருமுறைகள்
5. புறப்பொருள் வெண்பாமாலை
6 தமிழும் பிறபுலப்பாடும். தெ.பொ.மீ.
7. கந்தர் இலியன். மொ.அ.துரையரங்கனார்
8. தமிழகக் கோயிற்கலைகள் — இரா.நாகசாமி
9. தமிழக வரலாறு . 1565. ந.சுப்பிரமணியன்.


***

1:2:1

## விருச்சிகக்கிராந்தம் — ஊர்த்வ தாண்டவம் — லலாட திலகம் — ஒரு பார்வை.

டாக்டர் இரா. கலைக்கோவன், எம்.பி.பி.எஸ்., டி.ஏ., திருச்சி.

சுருக்கம்.

(பரதரின் நாட்டிய நன்னூல் தாண்டவ லட்சணம் என்ற தலைப்பின் கீழ்க் கரணங்களைப் பற்றிப் பேசுகிறது. நூற்றியெட்டுக் கரணங்கள் இலக்கண வரையறையுடன் விளக்கப்படுகின்றன. இந்தக் கரணங்களுள் சிலவற்றை அடியொட்டிப் படிமங்கள் வடிக்கப்பட்டன. இவை இன்றும் திருக்கோயில்களில் காணப்படுகின்றன. சில கரணங்களுடன், ஆகமங்கள் வருணிக்கும் தாண்டவங்கள் தொடர்புடையவையாய்க் காணப்படுகின்றன. இந்தத் தாண்டவத் திருக்கோலங்களிலும் படிமங்கள் உள்ளன. கரணங்கள், ஆகமத் தாண்டவங்கள் இவற்றின் ஒற்றுமை வேற்றுமைகள் படிமநிலைகளில் எப்படி அமைந்துள்ளன என்பதைத் தெளிவாய்க் காட்டுவதே கட்டுரையின் நோக்கம்.

ஆனந்தத் தாண்டவம் — புஜங்க வகைக் கரணங்கள், லலிதம் சதுரக் கரணங்கள் — சந்தியா தாண்டவம், விருச்சிகக்கிராந்தக் கரணமும் ஊர்த்வ தாண்டவமும், ஊர்த்வஜாநு [illegible] இவற்றோடு சமய ஒருமைப்பாட்டுப் படிமங்கள் என சில ஆய்வுக் கோணங்கள்.

இதுநாள்வரை கரணம் — தாண்டவம் இருநிலைகளிலும் கண்டறியலில் அறிஞர்களுள் காணப்படும் குழப்பங்கள், கருத்துகளில் காணப்படும் மயக்கங்கள் இவற்றைத் தக்க தீர்வுகளுடன் மெய்ப்பித்தல்).

ஆடலுக்கென்று அமைந்த அற்புதமான இலக்கண நூல் பரதரின் நாட்டிய சாத்திரம். இதன் ஒரு பகுதி தாண்டவ லட்சணம் என்ற பெயரில், ஆடலின் அடிப்படை அசைவுகளான கரணங்களை அட்டவணையிட்டு அவற்றை வரையறுக்கிறது. இந்த அட்டவணையில் நூற்றியெட்டுக் கரணங்கள் வகைப்படுத்தப்படுகின்றன. இன்றைய ஆடலுக்கு உதவும் அடவுகளைப் போல, கரணங்கள் அன்றைய ஆடலின் அடிப்படைத் தூண்களாய் அமைந்தன. 'ஹஸ்த பாத சமயோகஹ ந்ருத்தஸ்ய கரணம் பவேத்' என்று நாட்டிய சாத்திரம் கரண விளக்கம் சொல்கிறது. கை, கால்களின் இணைந்த வரையறுக்கப்பட்ட அசைவுகளே கரணம். இக்கரணத்தின் அடிப்படைக் கூறுகள் மூன்று. அவை உடல்நிலை, நிருத்தக்கைகள்; கால்நிலை. உடல்நிலையில் முழங்கால் முக்கியமான இடத்தைப் பெறுகிறது. நிருத்தக் கைகளில் அபிநயக் கைகள் போல் அல்லாமல் இருக்கையும் இயங்குவதைப் பார்க்கலாம். கால்நிலையும் அதுபோலவே முழங்காலின் இயக்கத்தையும் உள்ளடக்கி நிற்கிறது. பரதர் இரண்டு விதமான கால்நிலைகளைச் சொல்கிறார். ஒன்று விண்சார்ந்த கால்நிலை; மற்றொன்று நிலஞ்சார்ந்த கால்நிலை.

1:2:2

பரதரின் இந்தக் கரணங்களைச் சிற்ப வடிவில் தஞ்சைப் பெரிய கோயில் விமான மேல்தள உட்சுவரிலும், குடந்தை சாரங்கபாணி கோயில் கோபுர முதல்நிலையின் சுவரிலும், தில்லைக் கோபுரங்களின் நுழைவாயில் உட்சுவர்களிலும், விருத்தாசலம் விருத்தகிரீசுவரர் கோயிலிலும், திருவண்ணாமலைக் கோயிலிலும் காணலாம். இக் கரணங்களை அடியொற்றி இறைப் படிமங்கள் உருவாக்கப் பட்டன. இன்றளவும் திருக்கோயில்களில் காணப்படும் இப்படிமங்கள் கரணங்களுக் குரிய கால்நிலைகளைக் கொண்டு, கைநிலைகளைத் தவிர்த்து உருவாக்கப் பட்டுள்ளன.

சிவபெருமான் நூற்றியெட்டுத் தாண்டவங்களை ஆடியதாகக் கூறும் ஆகமங்கள் எதுவும் அவற்றின் பெயர்களையோ, அந்தத் தாண்டவங்களின் வகைகளையோ விளக்கவில்லை. ஸ்ரீ தத்துவநிதியும், திருப்புத்தூர்ப் புராணமும் ஏழு தாண்டவங்களை இனம் காட்டுகின்றன. சிற்பரத்னம் ஒன்பது தாண்டவங்களை வரிசைப்படுத்துகிறது. ஆனால் பெயர் கூறவில்லை.

இந்தத் தாண்டவங்களுள் சிலவும், பரதரின் தாண்டவ லட்சணப் பகுதியில் விரித்துரைக்கப்படும் கரணங்கள் சிலவும் ஒப்புநோக்கப்பட்டும், ஒன்றுபடுத்தப் பட்டும் சில அறிஞர்களால் விளக்கப்பட்டுள்ளன. அவற்றுள் விஷ்ணுக்கிராந்தம் — ஊர்த்துவ தாண்டவம் — லலாட திலகம் பற்றிய செய்திகளை மட்டும் இங்குக் காண்போம்.

<u>விஷ்ணுக்கிராந்தம்:</u>

'விஷ்ணுக்கிராந்தம்' பரதரின் தாண்டவ லட்சணப் பகுதியில் விரித்துரைக்கப்படும் கரணங்களுள் ஒன்று. இதை ஆங்கிலத்தில் (VISHNUSTEP) என்பார்கள். பரதரின் இந்தக் கரணம் திருமாலின் திரிவிக்கிரமக் கோலத்தோடு மிக நெருங்கிய தொடர்புடையது. மகாபலியை அடக்கத் திருமால் வாமன வடிவம் கொண்டு, மூவடி மண் கேட்க, மகாபலி அதைத் தருவேன் என்று ஒப்புக்கொள்ள, இறைவன் விசுவரூபம் எடுத்துத் திரிவிக்கிரமராய், ஓரடியால் மண்ணளந்து, மறு அடியால் விண்ணளந்து மூன்றாமடிக்கு இடம்கேட்க, மகாபலி தன் தலையைத் தந்தது ஆகமங்கள் கூறும் கதையாகும். இந்த விண்ணளந்த பெருமானைத்தான் திரிவிக்கிரமராய்க் கொண்டாடுகிறார்கள். நாமக்கல் குடைவரையிலும், மாமல்லைக் கோயில்களிலும், சாளுக்கியரின் பாதாமியிலும், திரிவிக்கிரமரின் அழகுக் கோலங்களைச் சிற்ப வடிவங்களாய்ப் பார்த்து மகிழலாம். இத் திரிவிக்கிரம வடிவத்தின் அமைப்பு முறை பற்றி இரண்டு ஆகமங்கள் பேசுகின்றன. இவற்றுள் வைகானச ஆகமப்படி திருமாலின் இடக்கால் விட்ரேக்கி உயர்த்தப்பட்டிருக்கவேண்டும். சிற்பரத்னம், நீட்டி உயர்த்தப்படும் கால் வலக்காலாக இருக்கவேண்டும் என்கிறது. இப்படி விட்ரேக்கி

1:3:3
உயர்த்தப்படும் கால், மற்றொரு காலின் முழங்கால் அளவில் அல்லது இடுப்பளவில், அல்லது அதற்கும் மேலே வானோக்கிய நிலையில் என மூன்று நிலைகளில் அமையலாம். முதல் வகைக் கால்நிலையில் அமைந்த சிற்பங்களைக் காண முடியவில்லை. இரண்டாம் வகைக் கால்நிலையில் அமைந்த சிற்பங்கள் பாதாமியிலும் எல்லோராவிலும் உள்ளன. மூன்றாம் வகைச் சிற்பங்கள் நாமக்கல் குடைவரையில் உள்ளன. இச் சிற்பங்களில் வலக்காலே நீட்டப்பட்டுள்ளது.

இந்தத் திரிவிக்கிரமக் கோலத்தை அடியொற்றி பரதரின் ஒரு கரணமாம் அமைந்ததுதான் விஷ்ணுகிராந்தம்.

"புரஃ ப்ரசாரிதஃ பாதஃ குஞ்சிதோ ககனோன்முகஃ
கரௌச ரேசிதௌ யத்ர விஷ்ணுக்ராந்த நுச்யதே"

தில்லையில் உள்ள விஷ்ணுகிராந்தக் கரணச் சிற்பத்தில் இடக்கால் அஞ்சிய நிலையில் முழங்கால் அளவில் வளைந்துள்ளது. வலக்கால் இடுப்பளவில் உயர்த்தப் பட்டுப் பக்க வாட்டில் நீள, இரு கைகளும் ரேசிதத்தில் உள்ளன. நீட்டப் பட்டிருக்கும் வலக்காலின் பெருவிரலை ரேசித வலக்கையின் கட்டை விரலும் சுட்டு விரலும் பிடித்திருப்பது போன்ற அமைப்பு உள்ளது. நாமக்கல் அநந்தசாயி குடைவரைத் திரிவிக்கிரமர் கோலமும் தில்லை விஷ்ணு கிராந்தக் கரணச் சிற்பமும் ஏறக்குறைய ஒன்றுபோல் உள்ளன.

இந்த விஷ்ணுகிராந்தக் கரணத்தில் அமைந்த இரண்டு செப்புத் திருமேனிகளை அண்மையில் காண நேர்ந்தது. ஒன்று பத்தாம் நூற்றாண்டுப் பழமை. மற்றொன்று இருபதாம் நூற்றாண்டுப் புதுமை. பழமையைக் கண்ட இடம் திருச்சி பூம்புகார் கலைக்கூடம். இத் திருமேனியின் தலையில் சடாமகுடம். சடையின் இடப்புறம் பிறை; வலப்புறம் பாம்பு. முடிந்த தலையில் கொக்கிறகும், ஊமத்தம் பூவும். செவிகளில் வலப்புறம் மகர குண்டலம்; இடப்புறம் பனை ஓலைச் சுருள். இடுப்பில் அரையாடை; அதன் முடிந்த தொங்கல். இடக்கால் தாமரைத் தளத்தில் உத்கட்டிதமாய் அமைய வலக்கால் இடுப்பளவு உயர்ந்து, பக்கவாட்டில் நீட்டப்பட்டுள்ளது. முன்னிரு கைகளும் ரேசிதம் காட்ட, வல முன் கையின் கட்டைவிரலும், சுட்டு விரலும் உயர்த்தப்பட்ட வலக்காலின் பெருவிரலைப் பற்றியுள்ளன. பின்னிரு கைகளில் துடியும் சுடரும். இந்தச் செப்புத் திருமேனி திரிவிக்கிரமக் கோலக் கால்நிலைகளில் இரண்டாம் வகையைச் சார்ந்தது.

திரிவிக்கிரமக் கோலத்தின் மூன்றாம் நிலையில், அதாவது உயர்த்தப்பட்ட கால் விண்ணோக்கி அமைந்த நிலையில் காணப்படும் விஷ்ணுகிராந்தத் திருமேனி திருவாலங்காட்டுக்குச் சொந்தமானது. நாமக்கல் நரசிம்மர் குடைவரையில் காணப்படும் திரிவிக்கிரமக் கோலம், குடந்தை சாரங்கபாணி கோயில் விஷ்ணுகிராந்தக் கரணக் கோலம் ஆகியவற்றின் படிப்பு இவ்வகைக்கு.

1:2.4

திருமாற்றும், அங்கு நீட்டப்பட்டிருப்பது வலக்கால், இத்திருமேனியில் விண்ணோக்கி உயர்ந்திருப்பது இடக்கால். வைகானச ஆகமத் திரிவிக்கிரமர் இலக்கணப்படி, திருவாலங்காட்டு நடராசரின் இடக்கால் பக்கவாட்டில் நீட்டப்பட்டு விண்ணோக்கி உயர்த்தப்பட்டுள்ளது. வலக்கால் முழங்கால் வரை வளைய, பாதம் முயலகன் மீது ஊன்றியுள்ளது. எட்டுத் திருக்கைகள். வலக் கைகளில் முன் கை காக்கும் குறிப்புக் காட்ட, பின் கைகளில் ஒன்றில் முத்தலை ஈட்டி; மற்றொன்றில் துடி, சரிந்த ரேசிதமாய்க் காட்சியளிக்கும் ஒரு கையில் கருவுயல்லே, இடப்புறக் கைகளில் முன் கை வேழமுத்திரை காட்டுகிறது. பின் கைகளில் பாம்பும்; தீச்சுடரும் உள்ளன; மேற்கை உயர்த்திய ரேசிதமாய் உள்ளது. இந்த அழகான விந்திரவிக்கிரமக் கரணத் திருமேனியைப் பல அறிஞர்கள் திரு சிவராமமூர்த்தி, திரு தேசிகர் உட்பட ஊர்த்துவ தாண்டவமென்று தவறுதலாய் இனம் பிரித்துள்ளார்கள்

<u>ஊர்த்துவ தாண்டவம்:</u>

ஊர்த்துவ தாண்டவம் சிவனுக்குரிய பல்வகைத் தாண்டவங்களுள் ஒன்றாய்க் கொள்ளப்படுகிறது. இதைச் சண்ட தாண்டவமென்றும் சொல்வார்கள். இத் தாண்டவம் அம்சுமத்பேதாகமம், சிற்ப ரத்ன முதலியவற்றில், விளக்கமாக விவரிக்கப்பட்டுள்ளது. இறைவன் ஊர்த்துவ தாண்டவம் ஆடிய இடமாகத் திருவாலங்காடு கொண்டாடப்படுகிறது. காளிக்கும் இறைவருக்கும் நேர்ந்த நடனப்போட்டியில், காதில் இருந்து விழுந்த குழையை, ஆட்டத்தை நிறுத்தாது எடுத்துக் காதில் பொருத்த இறைவன் காலை உயர்த்திட, அதுவே ஆட்ட நிலையில் ஒரு அமைப்பாக அமைந்து இயலாமையாகக் காளி தன் காலை உயர்த்தி ஆடத் தயங்கி வெட்கிட, அங்கே ஊர்த்துவ தாண்டவம் பிறந்தது ஒரு போட்டியும் இனிதே முடிந்தது.

தமிழகத்தில் பல திருக்கோயில்களில் ஊர்த்துவ தாண்டவச் சிற்பங்கள் அமைந்துள்ளன. அவற்றுள் தாடிக்கொம்பு, பேரூர், தென்காசி, தாரமங்கலம் குடந்தை சாரங்கபாணி கோயில் கோபுரக் கீழ்நிலை போன்ற இடங்களில் அமைந்துள்ள சிற்பங்கள் குறிப்பிடத் தக்கவை. ஊர்த்துவ தாண்டவத் திருக்கோலத்தில் இறைவனுக்கு எத்தனைத் திருக்கைகள் வேண்டுமானாலும் இருக்கலாம். எட்டு, பத்து பதினாறு என்ற கைகள் கொண்ட ஊர்த்துவ தாண்டவச் சிற்பங்கள் உள்ளன. இந்தத் தாண்டவத்தில் கால்நிலைதான் மிகமிக முக்கியம். இறைவனின் வலக்கால் உடலை ஒட்டி உடலின் முன்புறமாக உயர்த்தப்பட்டு மகுடம் வரையிலும் நீள, இடக்கால் முயலகன் மீது உத்கட்டிதமாகவோ, பக்கவாட்டில் திருப்பிய நிலையிலோ பொருத்தப்படும். உயர்த்தப்படும் வலக்கால் வலது தோளுக்கு முன்புறமாக நீள்வதால், வல முன்கை காக்கும் குறிப்பல், இக் காலுக்குப் பின்புறமாகக் காணப்படும். [illegible] நாள் ஊர்த்துவ தாண்டவச் சிற்பங்களில்

1:ஜ. 5

அடிப்படை அமைப்பு. சில சிற்பங்களில் இந்த வல முன்கை, கீழ்ப்புறமாக இறங்கி, இடமுன்கையிலிருக்கும் அடியை இயக்குவது போல, உயர்த்தப்பட்ட வலக்கால் தொடையின் கீழே காட்டப்பட்டிருக்கும் இந்த அமைப்பு முறையை உள்ளத்தில் நிறுத்திக்கொண்டு திருவாலங்காட்டுப் படிமத்தைப் பார்த்தால் அது விக்ஷிப்தக்கிராந்தமென்பதும், எவ்விதத்தாலும் ஊர்த்வ தாண்டவமல்ல என்பதும் தெற்றென விளங்கும்.

இனி, ஊர்த்வ தாண்டவக் கோலத்தில் அமைந்த சிற்பங்கள் சிலவற்றை டாக்டர் கபில வாத்சாயன், திரு சிவராமமூர்த்தி, திரு டி.ஏ.கோபிநாதராவ் போன்ற பல அறிஞர்கள் லலாடதிலகம் என்னும் பரதரின் கரணமாகக் கண்டு எழுதியிருக்கும் பொருந்தாமை பார்ப்போம்.

<u>லலாட திலகம்:</u>

லலாட திலகம் பரதரின் கரணக் கோவையில் ஒம்பதாவது இடத்தைப் பெறுகிறது. "Make Vrscika of the right leg form Tilaka on the fore head with the big toe"

என்று இக் கரணத்திற்கு விளக்கம் செய்கிறது தாண்டவ லட்சணம்.

"After assuming the Vrscika Kuttana, a mark (Tilaka) in the fore head to be made with the great toe"

என்கிறார் டாக்டர் மனமோகன்கோஷ்:

விருச்சிகம் என்ற சொல் தேளைக் குறிக்கும். தேளின் கொடுக்குப் போலக் கால் வளைந்து நிற்கும் கரணமே விருச்சிகம். விருச்சிகம், விருச்சிகக் குட்டிதம், விருச்சிக ரேசிதம், லதா விருச்சிகம் என விருச்சிகக் கரணங்கள் பரத நூலில் நான்கு உள்ளன. இவற்றுள் லலாட திலகத்திற்குத் தேவையானது விருச்சிகம். இரு கைகளும் வளைந்து தோள்களின் மீதிருக்க, ஒரு கால் வளைந்து பின்னோக்கித் திரும்பலே விருச்சிகக் கரணமாகும். இந்த விருச்சிகக் கரணச் சிற்பங்களில், வலக்காலே பின்னோக்கி வளைத்து உயர்த்தப்பட்டுள்ளது. இப்படிப் பின்னோக்கி உயர்த்தப்படும் வலக்கால், வலது தோளின் பின்புறமாய்; முழங்கையையொட்டி நீட்டப்படுகிறது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. இதனால் வலமுன் கை நீட்டப்படும் காலுக்கு முன்புறமாக அமையும். இப்போது ஊர்த்வ தாண்டவத்தையும் லலாட திலகத்தையும் இணைத்துச் சிந்திப்போம்.

1.2.6

| ஊர்த்வ தாண்டவம்: | லலாட திலகம். |
| --- | --- |
| 1. உயர்த்தப்படுவது வலக்கால் | உயர்த்தப்படுவது வலக்கால் |
| 2. இக்கால் உடலையொட்டி மார்பின் முன்புறமாக வளைந்து உயர்த்தப் படுகிறது. | இக்கால் உடலுக்குப் பின்புறமாக முதுகையொட்டி வளைந்து உயர்த்தப் படுகிறது. |
| 3. வலது தோளுக்கு முன்புறத்தில் கால் நீளுகிறது. | வலது தோளுக்குப் பின்புறத்தில் கால் நீளுகிறது. |
| 4. உயர்த்தப்படும் வலக்கால் மகுடம் வரை நீட்டப்பெற்று முகத்துக்குப் பக்கவாட்டில் காணப்படும் | வலக்காலின் பாதம் பின்புறத்திலிருந்து முன்புறமாய் வளைந்து நெற்றியைத் தொடுவது போல் அமையும். |
| 5. வலமுன்கை உயர்த்தப்பட்ட வலக் காலுக்குப் பின்னால் அமையும். வலப்புறம் பல கைகள் காட்டப் பட்டிருந்தால், அந்த வலக் கைகளும் வலக்காலுக்குப் பின்னால் அமையும். | வல முன்கை உயர்த்தப்பட்ட வலக் காலுக்கு முன்னால் அமையும். வலப் புறம் பல கைகள் காட்டப்பட்டிருந்தால் அந்த வலக் கைகளும் வலக்காலுக்கு முன்னால் அமையும். |

லலாட திலகத்திற்கும், ஊர்த்வ தாண்டவத்திற்கும் இந்த அடிப்படை வேறுபாடுகள் இருந்தும், திரு கோபிநாதராவ் தன் நூலில் ஊர்த்வ தாண்டவச் சிற்பங்களையெல்லாம் லலாட திலகமென்றே குறித்துள்ளார். டாக்டர் கபில வாத்சாயனு சாரங்கபாணி கோயில் ஊர்த்வரை லலாட திலகராக்கியுள்ளார் - திரு சிவராமமூர்த்தியும் தன் நூலில் இதே பிழையைச் செய்துள்ளார்.

லலாட திலகமும் ஊர்த்வ தாண்டவமும் முற்றிலும் வேறுபட்ட இரு நிலைகள். ஊர்த்வ தாண்டவத்தை லலாட திலகம் என்பது சரியாகாது.

ஊர்த்வ தாண்டவம் - டாக்டர் பத்மா:

ஊர்த்வ தாண்டவம் பற்றி டாக்டர் பத்மா சுப்பிரமணியம் குறிப்பிடும் சில செய்திகளைப் பார்ப்போம். "காளிக்கும் சிவபெருமானுக்கும் ஆடல் போட்டி நடந்து, அதில் சிவபெருமானைப் போல், காளி, தன் காலைத் தலைவரை தூக்க முடியாமல் போய்த் தோற்றதைக் கூறும் கதை பதினொன்றாம் நூற்றாண்டுக்குப் பிறகு தோன்றியது. இவ்வாறு காளி, காலைத் தூக்க முடியாமல் போனமைக்கு இயலாமையோ, பெண்மையின் தயக்கமோ - காரணமாக இருந்தாலும், உண்மை என்னவென்றால் பதினொன்றாம் நூற்றாண்டில், இதுபோல் காலை உயர்த்தும் நிலைகள் ஆடல் பழக்கத்தில் இல்லை என்பதுதான் என்கிறார் டாக்டர் பத்மா.

1.2:7

காளிக்கும் சிவனுக்கும் நடனப்போட்டி நடந்த கதை பதினோராம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டதாம். பத்மா சொல்கிறார். முன் ஏழாம் நூற்றாண்டு அப்பர் பாடுகிறார்,
"ஆடினார் காளி காண ஆலங்காட்டு அடிகளாரே!" என்று! திருமூலர் பாடுகிறார் திருமந்திரத்தில் திருக்கூத்துத் தரிசனத்தில், "காளியோடு ஆடி, கனகாசலத்தாடி" என்று! இதற்கெல்லாம் என்ன பொருள்? காளிக்கும் சிவனுக்கும் நடந்த ஆடல் போட்டி ஏழாம் நூற்றாண்டு அப்பருக்கே தெரிந்திருக்கும்போது அதைப் பதினோராம் நூற்றாண்டுக்குத் தள்ளிப்போடுவது ஏன்?

ஊர்த்துவ தாண்டவச் சிற்பங்கள் பன்னிரண்டாம் நூற்றாண்டுக் கோயில்களிலேயே காணப்படுவதை, டாக்டர் பத்மா சுப்பிரமணியம் கவனிக்கவில்லையோ என்று அஞ்சுகிறேன். தாராசுரம் ஐராவதேசுவரர் திருக்கோயில் ராஜகம்பீரன் மண்டபத்தைத் தாங்கும் கீழ்ச் சுவரத்தில், இரண்டாம் இராசராசனின் ஊர்த்துவ தாண்டவர் புன்முறுவல்கிறாரே! அப்படியானால் காளி, சிவன் போட்டியாடல் கதை இரண்டாம் இராசராசன் காலத்தில் தெரிந்திருந்தது என்றுதானே பொருள். தஞ்சை மாவட்டத்தில் புள்ளமங்கைக்கு அருகில் ஒரு பாழடைந்த பசுபதீசுவரர் கோயில் உள்ளது. நாயக்கர் காலத்துத் திருப்பணி. அதன் புறச்சுவர் ஒன்றில் பதினோராம் நூற்றாண்டுச் சிற்பங்கள் மூன்று காணப்படுகின்றன. அவற்றுள் இடைப்பட்ட சிற்பம்; ஒரு பெண் இடக்காலை ஊர்த்துவ தாண்டவக் கோலத்தில் உயர்த்தி ஆடுவது போல் செதுக்கப்பட்டுள்ளார். பதினோராம் நூற்றாண்டில் ஒரு பெண் ஊர்த்துவ தாண்டவக் கோலத்தில். டாக்டர் பத்மா சொல்கிறார் பதினோராம் நூற்றாண்டிலேயே காலுயர்த்தும் ஆடல்நிலைகள் காணாமல் போய்விட்டதாக. இந்தக் காணாமல்போன கருத்தின் அடிப்படையில் காளி கதையின் காலம் வேறு நிர்ணயிக்கப்படுகிறது.

குடந்தை சாரங்கபாணி கோயில் ஊர்த்துவ தாண்டவரைப் பற்றி டாக்டர் பத்மா சுப்பிரமணியம் தெரிவித்திருக்கும் கருத்தும் ஆய்வுக்குரியது. "நமக்கு அதிகமாக அறிமுகமான ஊர்த்துவ தாண்டவ மூர்த்திகளுக்கு நான்கு, எட்டு, பத்துக் கைகள் தான் உள்ளன. மீனாட்சி கோயிலில் உள்ள மிகப் பெரும் ஊர்த்துவ தாண்டவரே பத்துக் கைகளுடன் தான் உள்ளார். சாரங்கபாணி கோயில் சிற்பத்திலோ பதினெட்டுக் கைகள் உள்ளன. காளிகா தாண்டவத்தில் எட்டுக் கைகள் இருக்க வேண்டுமென ஆகமங்கள் கூறுகின்றன. இந்தச் சிற்பத்தில் பதினெட்டுக் கைகள் இருப்பதால் இது ஊர்த்துவ தாண்டவமும் காளிகா தாண்டவமும் கலந்த ஓர் அமைப்பு. மேலும் இச் சிற்பத்தில் இறைவனின் கால் ஊர்த்துவ தாண்டவத்திற்குரிய வகையில் உயர்த்தப்படவில்லையென்பதும் இதற்குச் சான்றாகும் என்கிறார் டாக்டர் பத்மா.

1.2.8 இந்தக் கருத்திலிருக்கும் செய்திகளை வரிசைப்படுத்தி ஆராய்வோம்.

1. டாக்டர் பத்மா சுப்பிரமணியம் நமக்கு அறிமுகமான ஊர்த்வ தாண்டவ மூர்த்திகளுக்கு உச்ச அளவுக் கைகள் பத்து என்கிறார். ஆனால் சாரங்கபாணி கோயில் சிற்பத்தின் கைகள் பதினெட்டு. நமக்கு அறிமுகமான சிற்பங்களைவிட இதில் எட்டுக் கைகள் அதிகமாக இருப்பதாலேயே, இது ஊர்த்வ தாண்டவமல்ல என்னும் டாக்டர் பத்மா, தன் நூலிலேயே, பாதாமிக் குகையொன்றில் காணப்படும் பதினெட்டுக் கைகளுடன் கூடிய சிவபெருமானின் ஆடல் தோற்றமொன்றை டாக்டர் கோபிநாதராவ் காளிகா தாண்டவத்தின் மற்றொரு தோற்றமாகக் கண்டறிந்து எழுதியிருப்பதாய்க் கூறுகிறார். ஆகமப்படி காளிகா தாண்டவத்தில் இறைவனுக்குக் கைகள் எட்டு. ஸ்ரீதத்வநிதி அப்படித்தான் சொல்கிறது. இந்நிலையில் பதினெட்டுக் கைகள் உள்ள ஒரு சிற்பம் எப்படிக் காளிகா தாண்டவமாகும்? அப்படியே அது காளிகா தாண்டவமென்று ஏற்றுக் கொண்டால், எட்டுக் கைகளுடன் விவரிக்கப்படும் காளிகா தாண்டவ மூர்த்திக்குப் பதினெட்டுக் கைகள் இருக்கலாமென்பதை ஒப்புக்கொள்ளும் டாக்டர் பத்மா, ஊர்த்வ தாண்டவ மூர்த்திக்கு மட்டும் கைகள் அதிகமாக இருக்கலாமென்பதை ஒப்புக்கொள்வதைத் தயங்குவது ஏனென்பது விளங்கவில்லை. இதில் உண்மை என்னவென்றால் திரு கோபிநாத ராவ், காளிகா தாண்டவத்தின் இன்னொரு படிமைப் பாதாமியில் பார்த்ததாகத் தன் நூலில் குறிப்பிடவே இல்லை. என்பதுதான். டாக்டர் பத்மா தந்திருப்பது தவறான தகவல். கோபிநாதராவ் பாதாமியில் பார்த்தது பதினெட்டுக் கைகள் உள்ள சதுர கரணரை. இதே திருமேனியைச் சிவராமமூர்த்தியும் தன் நூலில் குறிப்பிட்டுச் சதுர கரணர் என்கிறார். இந்த வடிவத்தைக் காளிகா தாண்டவத்தின் மறு பதிப்பு என்பவர் திரு தண்டபாணி தேசிகர். இந்த வடிவம் காளிகா தாண்டவமுமல்ல. சதுர கரணமும் அல்ல. இந்த வடிவம் பற்றிய விளக்கங்கள் இங்கு இடைச்செருகலாகும் என்பதால் விடுவோம்.

பத்துக் கைகளுக்கு மேலுள்ள ஊர்த்வ தாண்டவர்களை டாக்டர் பத்மா சுப்பிரமணியம் பார்த்ததில்லையோ என்று அஞ்சுகிறேன். பேரூரிலும், — தாராசுரத்திலும் உள்ள இறைக் கோயில்களில் கம்பீரமான ஊர்த்வ தாண்டவச் சிற்பங்கள் பதினாறு கைகளுடன் காட்சியளிக்கின்றன. பதினாறு கைகளுடன் ஊர்த்வ தாண்டவர் இருக்கலாமெனச் சிற்ப ரத்னமே கூறுகிறது. பதினாறு கைகளுடன் ஊர்த்வ தாண்டவர் சிற்பங்கள் அமையும்போது, கூட இரண்டு கைகளை ஒரு சிற்பி சேர்த்துப் பதினெட்டுக் கைகள் உள்ள ஊர்த்வ தாண்டவராய்ப் புதுமை நோக்கில் அமைத்தது குற்றமா? இரண்டு கைகள் கணக்கில் கூடிவிட்டால் அது ஊர்த்வ தாண்டவமல்ல என்பது நியாயமா?

1:2:9 இச்சிற்பம் ஊர்த்வ தாண்டவமல்ல என்பதற்கு டாக்டர் பத்மா சுட்டும் இன்னொரு காரணம், இச் சிற்பத்தின் கால் ஊர்த்வ தாண்டவத்திற்குரிய வகையில் உயர்த்தப்படவில்லை என்பதுதான். சிற்ப நூல்விதிப்படி ஊர்த்வ தாண்டவத்தில் வலக்கால் இறைவனின் மகுடத்தளவு உயர்த்தப்படவேண்டும். இச் சிற்பத்திலும் வலக்கால் மகுடத்தளவு உயர்த்தப்பட்டுள்ளது.

ஊர்த்வ தாண்டவச் சிற்பங்களில் உயர்த்தப்படும் வலக்கால் உடலையொட்டி தோளுக்கு முன்புறமாக உயர்த்தப்பட்டிருக்கும். இந்தச் சிற்பத்திலும் வலக்கால் உடலையொட்டி வலது தோளுக்கு முன்புறமாக உயர்த்தப்பட்டுள்ளது. சில ஊர்த்வ தாண்டவச் சிற்பங்களில் (பேரூர், தென்காசி) உயர்த்தப்பட்டிருக்கும். வலக்கால் பாதத்தின் உட்பகுதி முகத்தை நோக்கிக் காட்டப்பட்டிருக்கும். சில ஊர்த்வ தாண்டவச் சிற்பங்களில் (திருச்செங்காட்டாங்குடி, நீடூர்) பாதத்தின் புறப்பகுதி முகத்தை நோக்கி காட்டப்பட்டிருக்கும். சாரங்கபாணி கோயில் சிற்பத்திலும் பாதத்தின் புறப்பகுதி முகம் நோக்கி அமைந்துள்ளது.

கால்நிலையும், பாதநிலையும் சரியாகவே அமைந்திருந்தும், ஏன் டாக்டர் பத்மா சுப்பிரமணியம் இந்தச் சிற்பத்தைக் 'கால்நிலை சரியில்லை' என்று கூறி ஊர்த்வ தாண்டவராம் ஏற்க மறுக்கிறார் என்பது விளங்கவில்லை. இவர் எதிர்பார்க்கும் கால்நிலையும் நமக்குப் புரியவில்லை.

இனி, இரண்டு தாண்டவங்களின் கலப்பு, சிற்ப அமைப்பில் இருக்கிறதா என்று பார்ப்போம். எனக்குத் தெரிந்தவரை, இதுபோல் அமைப்புகளை ஆகமங்கள் ஏதும் கூறவில்லை. ஆகமங்கள் விளக்காத வடிவங்கள் சிற்பிகளின் கற்பனையுணர்வில், புதுமை நோக்கில் அமையலாம் என்றாலும், தமிழகத்தில் எந்தத் திருக்கோயிலிலும் சிற்ப வடிவிலோ, வார்ப்பு வடிவிலோ, ஓவியமாகவோ இரு தாண்டவங்களின் கூறுகள் கலந்த சிவபெருமானின் தோற்றம் இருப்பதாக இதுவரை யாரும் எழுதியதாகவோ எடுத்துக் காட்டியதாகவோ தெரியவில்லை. இந்நிலையில் டாக்டர் பத்மா சுப்பிரமணியம் இச் - சாரங்கபாணிக் கோயில் சிற்பத்தைக் காளிகா ஊர்த்வ தாண்டவராகக் குறிப்பது வியப்பையும், திகைப்பையும் தருகிறது.

எந்த விதத்தாலும் காளிகா தாண்டவத்தோடு பொருந்தாமல், எல்லா விதத்தாலும் ஊர்த்வ தாண்டவத்தோடு பொருந்தும் இந்த அற்புதச் சிற்பத்தை டாக்டர் பத்மா சுப்பிரமணியம் காளிகா ஊர்த்வ தாண்டவரெனத் தவறாகக் கருதியுள்ளார். டாக்டர் கபிலா வாத்சாயனா இதை லலாட திலகரெனப் பிழைபடக் குறிப்பதுடன் கைகளையும் பத்தென்று குறைத்துச் சொல்கிறார். திரு சிவராமமூர்த்தியும் இச்சிற்பத்தை லலாட திலகராக்கி மயங்குகிறார்.

1:2.10

சாரங்கபாணிக் கோயில் கோபுரத்திலுள்ள சிவபெருமானின் தாண்டவச் சிற்பம் பதினெட்டுக் கைகளுடன் கூடிய அற்புதமான கலைநயம் கொண்டதும் சோழர் காலத்து ஊர்த்வ தாண்டவச் சிற்பமென்பது மேற்கண்ட தெளிவுகளால் உறுதிப்படும்.

கரணங்களும் தாண்டவங்களும் அற்புதமானவை; ஆழமானவை; பொருளார்ந்தவை; புதிரானவை. இந்த இரண்டு நிலைகளும் இயற்கும் ஆடல் முறையில் ஆய்வுகள் அதிகம் நிகழ்த்தப்படவில்லை என்பது திட்டமான உண்மை. தமிழ் மண்ணுக்கு உரியதாய் விளங்கிய சங்க கால ஆடலும், அரங்கேற்றக் காதையின் அரிய பல செய்திகளும், கோயில்களில் ஆடல் வளர்ந்த நிலைகளும், பிற்காலத்தில் அது தேய்வுற்று, நலிந்து மொழி மாற்றம் பெற்று மாறிப்போன விந்தையும், இன்றும் மூடி வைத்த புத்தகமாய், புதைந்துபோன வரலாறும், அறியப்படாத மந்திரமாய் இருக்கும் நிலை மாறிடாதா என்ற ஏக்கத்துடன் விடைபெறுகிறேன். வணக்கம். வாய்ப்புக்கு நன்றி.

***

1:5:1

## கல்வெட்டுகள்

பேராசிரியர் சி. கோவிந்தராசனார்,
கரந்தை.

உலகில்; ஆதி மனிதனின் அச்சவுணர்விற்கு, இயற்கைச் சூழல்களும் காலநிலைக் காட்சிகளும், ஆற்றல் நிகழ்ச்சிகளும் இலக்காகி நின்றன. மக்களின் மன வளர்ச்சிக் கிறப்புக்கும் புலனறிவுத் தெளிவிற்கும் நம்பிக்கை உணர்வுக்கும் இலக்காகத் தெய்வத்தடங்கள் உருப்பெற்றன.

பாரத நாட்டில் இமயம் முதல் குமரித் துறை வரையில் ஆதியில் தோன்றிய தெய்வ நிலையங்கள் மரம், செங்கல், சுண்ணம்பு ஆகியவற்றைக் கொண்டே உருவாக்கப்பெற்றன. பண்டைய தமிழகத்தில் குன்றிலும் பொழிலிலும் உருவான தெய்வத் தடங்கள் மக்கள் தலைவருக்குரிய "கோ" என்னும் பெயரால் அவனது வாழ்விடம் குறிக்கப் பெற்ற முறையில் 'கோ இல்' எனக் குறிக்கப்பட்டுள்ளதனைச் சங்ககால இலக்கியங்களிலும் சிலப்பதிகாரத்திலும் அறிய முடிகின்றது.

பண்டைய தமிழகத்தில் தோன்றிய மரக் கட்டடக் கோயில்களின் கால வளர்ச்சியாகச் செப்புத் தகடுகளாலும், பொற்றகடுகளாலும் மேற்கூரை வேயப்பட்டுள்ளமையினை, சிதம்பரம்–பொன்னம்பலம், திருக்குற்றாலம்–தாமிரசபை கேரளநாட்டுக் கோயில்கள் ஆகியவற்றில் காணமுடிகின்றது.

மரக்கட்டடங்கள் காலத்தாலும் தீயாலும் அழிவு பெறும் தன்மையவாதலின் செங்கல் சுண்ணம்பு ஆகியவற்றால் கோயில்கள் உருவாக்கப் பெற்றன. சிறிய வடிவில் தோன்றிய கோயில்கள் அரசுகளின் ஆக்கச் செயல்களாலும், மக்களின் தெய்வ நம்பிக்கை உணர்வின் சின்னமாகவும், தமிழகக் கோயிற் கட்டடக் கலையின் வளர்ச்சியால் [illegible] விரிவடைந்தன. இராசராசன் [illegible] சோழன் [illegible] செங்கல் [illegible] கற்றளி [illegible] நெடுமுடி [illegible] பெருங்கோயிலைக் கட்டியுள்ளான். இக்காலம் நான்கு அல்லது ஐந்தாவது நூற்றாண்டென்று கொள்ளலாகும். பெருங்கோயில் கட்டட அமைப்பிலிருந்து வெவ்வேறு தோற்ற முட்டு அமைப்பில் கோயில் வகைகள் தமிழகத்தில் கட்டப்பட்டுள்ளன.

தெய்வத்திறங்கொண்ட பண்டைய சமூகச் சூழலைக் கொண்டும், மக்களின் சமய நெறிகளில் வளர்ந்த ஒருமித்த நம்பிக்கைக் கோட்பாடுகள், தெய்வ சிந்தனை, அதன் நெறிப்பட்ட செயல்கள் இவற்றிலாகிய பண்பாட்டியலுக்கு இலக்காகவும், நியதிகளாகவும் ஆகமங்களும் சாத்திரங்களும் தோன்றி வளர்ந்துள்ளன. மக்களின் தெய்வவுணர்வின் பெருக்கத்திற்கு இலக்காகவும் ஆகமங்களின் வழிமுறையாகவும் மூல தெய்வங்களின் வகை நிலையில் மூர்த்தங்கள் பல்வேறுபட்ட வடிவில் தோன்றியுள்ளன. கோயிற் கட்டட அமைப்பும், அடிப்படை, தளப்படை, கருவறை, விமானம், முகமண்டபம், முன்மண்டபம், நாழிகை,

1.5.2 திருமுற்றம், திருச்சுற்று, மதில், திருமாளிகைப்பத்தி; அம்பலம், நிருத்த மண்டபம், வாத்தியமண்டபம் போன்ற அங்கங்களுடன் சுதை சிற்ப ஒப்பனைகளுடன் விரிவாகக் கட்டப்பட்டுள்ளன.

தமிழக மக்களின் அக வாழ்விற்கு நிலைக்களனாகவும், புற வாழ்வின் நெறிகட்குப் புகலிடமாகவும், கலைகளின் வளர்ச்சி நிலையமாகவும், அறநெறிகட்கு அமைப்பிடமாகவும் கோயில்கள் விளங்கிய சிறப்பினாலேயே 'கோயிலில்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்' என்று நல்லுரையும் தோன்றலாயிற்று. இவ்வுரையின் பயனாகவே தமிழகத்தில் கோயிலில்லாத கிராமங்கள் இல்லையென்றதாயிற்று எனலாம்.

கோயில் கட்டடக் கலை வளர்ச்சிக்கேற்ப, கட்டட ஒப்பனைத் திறனாகவும், தெய்வவடிவங்களை உருவாக்கும் கலையாகவும்; சிற்பக்கலை வளரும் கலையாகவும் வளர்ந்துள்ளது.

இக்கலை இந்திய நாட்டில், அவ்வக்காலத்து ஆட்சிகளுக்கு ஏற்பவும்; சமய நெறிகட்கு இலக்காகவும் பல்வேறுபட்ட மாறுபாட்டுடன் வளர்ந்துள்ளது. அவ்வகைமுறை, பாணி அல்லது மரபு என்று குறிக்கப்பட்டது.

இமயம் முதல் குமரி வரையில் தோன்றியுள்ள பழைய கோயில் கட்டடக் கலையினை ஆய்வுத் திறனாளர் நாகரம், வேசரம், திராவிடம் என்று முப்பிரிவாக வகைப்படுத்தியுள்ளனர். கட்டடக் கலையினை, கோயிலின் சிகரம் அல்லது விமான அமைப்பினைக் கொண்டே பிரித்துள்ளனர். கோயில் கட்டட ஒப்பனைக் கலையாகவும் உருவச் சிற்பக்கலையாகவும் பெருகியவற்றை வட இந்தியாவில் திகழ்ந்த அரசுகளின் பெயரமைதியுடன் குப்த, வாகட, காந்தார, கலைமுறைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன; அதன் பின்பற்றலாகவும் மாற்ற வளர்ச்சியாகவும் பல்லவ, சோழ, பாண்டிய, ஒய்சள, நாயக்க மரபுகள் பெருகியுள்ளன.

கோயில் விமான வடிவினைக் கொண்டு வகைப்படுத்துவதைப் போன்று, கோயில் நூல்கள், கட்டட முறை ஒப்பனைக் கூறுகள், சிலைகளின் வடிவமைப்பு முறைகள் ஆகியவற்றைக் கொண்டு மரபுநிலையினை அறியும் திறன் அமைந்துள்ளது.

கோயில் கட்டட அமைப்பு முறைகளையும் மூர்த்தங்களின் வடிவ அமைப்பினையும், பெயர் வகையினையும், வைகானஸ ஆகமம், ஈசான சிவகுரு பத்ததி, மயமதம், ஞான சுலோகங்கள் ஆகிய ஆகமநெறிப்பட்ட நூல்கள் கூறுவதாயினும், மயமதம் கோயில் கட்டடக் கலைமுறை நூலாகவே வழங்கப்படுகிறது.

கோயில் விமான அமைப்பினைக் கொண்டு கோயில் வகையினை குறிப்பதாயினும், பண்டைய தமிழகக் கோயில்கள், வடிவ அமைப்பு, பொதுத் தோற்றம் ஆகியவற்றால் சிறப்புப் பெயர்களால் குறிக்கப்பட்டுள்ளன.

இதனை, பெருங்கோயில், மாடக்கோயில், கரக்கோயில், ஞாழற் கோயில், கொகுடிக்கோயில், இளங்கோயில், மணிக்கோயில், ஆலக்கோயில்.

1:5:3

என்று கி.பி. ஏழாம் நூற்றாண்டில் குறிக்கும் நாவுக்கரசரின் திருத்தாண்டகத்தால் அறிய முடிகின்றது. இச்செய்தியினை நன்றாகச் சிந்திப்போமாயின், பண்டைய தமிழகச் சிற்பியரின் மரபு வழியாக வளர்க்கப்பட்ட கோயிற் கட்டடக் கலை அமைப்பு வகைத்திறனுடன் தனித்தன்மையும் புலனாகின்றது.

பண்டைய தமிழகக் கோயில்களின் அமைப்பில் புதுமையைப் புகுத்தியவன் பல்லவமன்னன் மகேந்திர வர்மனாவன். அவை மலையின் பக்கச்சரிவிடத்தில் குடையப்பட்ட குகைக்கோயில்களாகும். பின்னர் வந்த பல்லவ மன்னர்கள் கருங்கற்களைக் கொண்டு வலிமையான கட்டட அமைப்பில் கோயில்களை உருவாக்கியுள்ளனர். இக்கோயில்கள் கற்றளிகள் என்று பெயர் பெற்றன. இவ்வமைப்பினைப் பின்பற்றியதாகவும், பழைமைச் செங்கற் கோயிலைப் புதுப்பிக்கும் திருப்பணியாகவும் பாண்டியர் சோழர் நாயக்கர் ஆகிய மன்னர்கள், தமிழகத்தில் சிற்ப ஒப்பனை மேம்பாட்டுடன் அழகிய பெருங்கோயில்களைக் கட்டியுள்ளனர்.

தஞ்சைப் பெரியகோவில், மதுரை மீனாட்சியம்மன்கோயில், வில்லிபுத்தூர் திருமால்கோயில், திருவரங்கம் பெருங்கோயில் ஆகியவற்றையும் குடந்தை சாரங்கபாணி கோயிலையும் சான்றாகக் கூறலாகும்.

சிற்பக்கலையில் சிறந்த கோயில்கள் தென்காசி, கிருட்டிணாபுரம், பேரூர், தாரமங்கலம், தாடிக்கொம்பு, குடந்தை இராமசாமி கோயில், குன்றக்குடி குடவரை, குடுமியான்மலை ஆகிய ஊர்களில் உள்ளன.

சமயச் சார்பிலும் தெய்வ நம்பிக்கை வழிபாட்டு உணர்விலும் அரசர்களும் பிறரும் பெரும்பொருளைச் செலவிட்டுக் கோயில்களைக் கட்டியுள்ளனர். சிற்பக்கலையின் கருவூலமாகவும் கட்டடக் கலையின் பெட்டகமாகவும் சிற்பியர் தங்களின் கலைத்திறனையும் கற்பனைச் செழிப்பினையும் கல்லில் புலப்படச் செய்துள்ளனர்.

கட்டிய கோயில்கள் காலத்தால் அழிவு பெறாமல் புரக்குவதற்கும், நாள் வழிபாடுகள், திருவிழாக்கள் என்றும் குறைவில்லாமல் நிகழ்வதற்கும் முலதனமாகப் பொன்னையும், பொருளையும் நில புலன்களையும் அறமாக வழங்கி, அவற்றின் வட்டி வருவாயினைக் கொண்டு கோயிற் காரியங்கள் அனைத்தும் நிகழ்வதற்கு நிபந்தனைகளைச் செய்துள்ளனர். அவ்வறச் செயல்கள் நிவந்தங்கள் என்று பெயர் பெறும். நிவந்தங்கள் ஆவணமாகப் பனை ஏடுகளில் எழுதப்பட்டனவாயினும், காலத்தாலும் பகையாலும் அவை எளிதில் அழியும் தன்மை பெற்றனவாதலால் கற்றளிப் பகுதிகளில், செப்பஞ் செய்யப்பட்ட வழுப்புடைய கருங்கற் பலகைகளில் கல்தச்சரைக்கொண்டு நிவந்தசாசன ஆவணங்களைப் பொறித்துவைத்தனர். அதன் பிரதியாகவும், அவ்வாவணங்களையும் செப்பேட்டிலும் செதுக்கச் செய்து பாதுகாத்துள்ளனர். கருங்கற்களில் பொறிக்கப்பட்டதால் சாசனங்கள் கல்வெட்டுகள் என்று பெயர்பெற்றன.

1:3.4 கோயில், மக்கள் யாவருக்கும் பொதுநிலையமாதலின், அங்குள்ள கல்வெட்டுச் செய்திகளை எளிதில் யாவரும் எக்காலத்திலும் படித்தறிந்து பயன் காண்பதற்கும் செய்வதற்கும் சான்றாக அமைந்ததின் மேன்மையினை உவமையாக்கி "நல்லார் ஒருவருக்குச் செய்த உபகாரம் கல்மேல் எழுத்துப்போல் காணுமே" என்ற நீதியுரையும் வழக்கில் கூறப்பட்டுள்ளது.

கல்வெட்டு ஆவணங்கள் சாசனங்கள் என்று கூறப்பட்டு வழக்கிலும் தொடர்ந்துள்ளன. சாசனம் என்னும் வடமொழிச் சொல்லுக்கு உத்தரவு, கட்டளை என்பன பொருளாகும். சாசனங்கள் எல்லாம் முற்காலத்து அரசர்கள் வழங்கிய நிவந்தங்களை மட்டுமே தெரிவிப்பன அல்ல. அரசியல் தலைவர்களும், கிராமசபையாரும், மற்றும் பலரும் வழங்கிய அறச் செயல்களையும், வழக்குத் தீர்ப்பு முதலாகிய மக்கள் வாழ்வியல் நியதிகளையும், அரசு செய்த நீதி நெறி முறைகளையும்; நாட்டியல்களையும் தெரிவிப்பனவாகவும் உள்ளன.

கல்வெட்டுகள் அந்த அந்த நாட்டு மொழியிலேயே பொறிக்கப்பட்டிருக்கும். தமிழ்நாட்டுக் கல்வெட்டுக்களில் பெரும்பாலானவை தமிழ் மொழியில் உள்ளன. நடுவணரசின் கல்வெட்டுத்துறை, தமிழகக் கல்வெட்டுகளில் இருபத்திரண்டாயிரத்திற்கும் மேலாகப் பிரதி செய்துள்ளதாயினும் தமிழ்க் கல்வெட்டுக்கள் பாதியளவிற்கே வெளிவந்துள்ளன. கல்வெட்டுச் செய்திகள் வரலாற்றுக் கருவாக அமைதலின் கல்வெட்டுகள் அனைத்தும் வெளியிடப் பெறவேண்டியது இன்றியமையாத தொன்றும்.

தமிழகத்தில் கல்லெழுத்துக்கலை இரண்டாயிரத்தைந்நூறு ஆண்டுகட்கு முற்பட்ட காலத்திலேயே வழக்கிலிருந்துள்ளது. நடுகற்களில் பீடும் பெயரும் பொறிப்பதற்கு முன்னறிவுத் திறனுக் கற்பொறிப்பு முயற்சி தோன்றியிருக்கவேண்டும். சமண முனிவர்களும் பௌத்தத் துறவியரும் தமிழகத்தில் வாழ்ந்திருந்த மலைகளில் அவர்கட்குக் கல்லிருக்கைகளையும், பருக நீர்த்தடங்களையும் வழிபாட்டிற்குத் தெய்வத் திருமேனிகளையும் அமைத்துக் கொடுத்த அறவோர்களின் குறிப்பாகக் குகைப்பகுதிகளில் பிராமி எழுத்துக்களில் தமிழ்ச் சொற்றொடராகக் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் பழங்காலத்தில் வழக்கிலிருந்த வட்டெழுத்து முறையில் பிழையில்லாமல் செப்பமாகவும் பெரிய அளவிலும் பொறிக்கப்பட்ட வட்டெழுத்துக் கல்வெட்டுகள் நாடெங்கும் கிடைத்துள்ளன. தெளிவான தமிழெழுத்துக்களில் அழகாகப் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுகள் முதல் இராசராசன் காலம் முதலாகப் பெருகியுள்ளதனைத் தஞ்சை — இராசராசேச்சரக் கல்வெட்டுகளால் அறியலாகும்.

கல்வெட்டுகளால் அறியப் பெறும் செய்திகள் பலவகைப்பட்டனவாக உள்ளன. அரசர்களாலும், அதிகாரிகளாலும், மக்களாலும், கோயிலின் நாள் நியதிகட்கும் சிறப்பு நிகழ்ச்சிகட்கும் விழாக்களுக்கும், வேதாகம விருத்திக்கும்

1.3.5 கல்விக்கும் இசை நாடகம் நடனம் ஆகிய கலைகளுக்கும், கிராம சீர்திருத்தங்களுக்கும், வேளாண்மை, நீர்ப்பாசனம், வணிகம், பொருளாதாரம் ஆகிய மக்கள் வாழ்க்கைத் தேவைத் துறைகளுக்கும் செய்யப்பட்ட கட்டளைகளும் ஆக்கச் செயல்களும் கல்வெட்டுகளில் கூறப்பட்டுள்ளன. மற்றும் புண்ணியமாகச் செய்த அறங்கள், பரிகாரங்கள், நேர்த்திக் கடன்கள், வழிபாடுக் குற்றப் பரிகாரங்கள் ஆகிய செய்திகளும் புலப்படுத்தப்பட்டுள்ளன. சிறப்பாக அவ்வக்கால அரசியல் நிர்வாக முறைகளைத் தெளிவாக அறிவிப்பனவாகக் கல்வெட்டுகள் உள்ளன.

இவற்றால், சென்றகாலத் தமிழக மக்களும் மன்னரும் எந்த அளவிற்குக் கோயில்கள் தெய்வங்கள் ஆகியவற்றின்பால் பக்தி நெறியோடு பண்பாட்டமைதியுடன் செயல்பட்டுள்ளார்கள் என்பதையும், மக்களுக்குக் கோயில்கள் எந்த அளவில் வாழ்வியலுக்குப் பயன்பட்டுள்ளன என்பதையும் அறிமுகப்படுத்தும் வரலாற்றுச் சான்றுகளாகவே கல்வெட்டுகள் அமைந்துள்ளன. அவற்றுள் ஒரு சிலவற்றை எடுத்துக்காட்டாகக் கூறலாகும்.

பொதுவாக, கல்வெட்டுகள் அனைத்தும் 'ஸ்வஸ்திஸ்ரீ' என்ற மங்கலச் சொல்லுடன் தொடங்கப்பட்டு, தொடர்ந்து அரசனது பெயருடன் ஆட்சியாண்டும் குறிக்கப்பட்டு மேல் செய்திகள் விளக்கமாகக் கூறப்பெறுவதாயினும், முதல் இராசராசனது கல்வெட்டுகள், மங்கலச் சொல்லடுத்து மன்னனுடைய வெற்றிகளை வரிசையாகச் சொல்வதுடன், அரசனின் விருதுப் பெயர் இயற்பெயருடன் ஆட்சியாண்டும் அகவற்பா முறையில் கூறியதுடன், அந்நாளில் இன்னது இவ்வாறு செய்யப்பட்டது என்று விளக்கமாகச் செய்திகளைச் சொல்வதுடன், காப்புரையும் கூறி நிறைவு பெறுவதாகவுள்ளன. வெற்றி மேம்பாடுகளை முறையாகக் கூறும் கல்வெட்டுப்பகுதி மெய்க்கீர்த்தி என்று பெயர் பெறும்.

- கல்வெட்டுக்களில் குறிக்கப்படும் அரசர்களின் விருதுப் பெயர்களால் ஆட்சி மரபுநிலை அறியப் பெறுகின்றது. சோழ மன்னர்கள் இராசகேசரி பரகேசரி என்றும், பாண்டிய மன்னர்கள் மாறவர்மன் சடைவர்மன் என்றும் மாறிமாறி முறையாகப் புனைந்து கொண்டுள்ளனர்.

- பல்லவ பாண்டிய சோழ மன்னர்களின் ஆட்சிக் காலங்களில் நாட்டுப் பிரிவுகள், மண்டலம், நாடு, கூற்றம், கோட்டம், வளநாடு, வகைநாடு, தனியூர், ஊர், கிராமம், பிடாகை, என்ற வகையில் பிரிக்கப்பட்டிருந்தன.

அரசு பெற்ற வரிவகைகள் நூற்றுக்கும் மேற்பட்டனவாகக் காணப்படினும் அவையாவும் இறை, வரி, புரவு, ஆயம், மகமை, வாரம், பாட்டம், புட்சி, காணம், குடிமை, கூலி என்ற வரிமுறைமைகளின் சார்பில் அமைந்திருந்தன. வணிகப் பொருள்களுக்கும், தலைச் சுமைக்கும் விதிக்கப்பட்ட வரி ஆயம், உல்கு என்ற பெயர்களால் குறிக்கப்பட்டன.

1.5.6 கோயில்கட்கும் பிறவாறும் அளிக்கப்பட்ட இறையிலி நிலங்களும் பொன்னும் பொருளுமாகிய நிவந்தங்களும் முறையே அவ்வற்றின் நோக்குடன் பெயர்களைப் பெற்றன. அவை, தேவதானம், திருவிடையாட்டம், பள்ளிச் சந்தம், திருநாமத்துக்காணி, பிரமதேயம், அர்ச்சனாபோகம், சதுர்வேதிமங்கலம், சாலாபோகம், மடப்புறம், வைத்திய போகம், விடீவிருத்தி, நிருத்தபோகம் பாரதவிருத்தி, வேதாக்மவிருத்தி, பாடகக்காணி, திருப்பதியப்புறம் என்பன போன்றன சிறப்புடையனவாகும்.

கோயில் நிலபுலன்கள், வருவாய்கள், நிவந்தங்கள், செலவினங்கள், பணியாளர்கள் ஆகியவற்றை அரசுவழி இருந்து அதிகாரம் செய்த பதவி ஸ்ரீகார்யம் என்றும், கண்காணித்த அதிகாரி ஸ்ரீகார்யக்கண்காணியென்றும், வளநாட்டளவில் இருந்து கோயில் ஸ்ரீகார்யங்களுக்கு வரைகளைத் தீர்மானித்து செய்த அதிகாரி ஸ்ரீகார்ய நாயகம் என்றும் பெயர் பெற்றிருந்தனர்.

சிவன் கோயில்களில் சுந்தர சோழன் காலத்திலிருந்தே தேவாரத் திருப்பதியங்கள் பாடுதற்கு அடியார்கள் நியமிக்கப்பட்டு நிவந்தமும் வழங்கப் பட்டுள்ளது. இப்பணி, முதல் இராசராசனால் நாடெங்கும் விரிவாக்கப்பட்டதுடன் நாற்பத்தெண்மர் ஓதுவார்கள் நாளும் இராசராசேச்சரத்தில் உடுக்கை, கொட்டி, மத்தளம் ஆகிய பின்னிசையுடன் திருப்பதியம் பாடுதற்கு மன்னன் நாள்நிவந்தம் வழங்கியுள்ளான். திருப்பதியம் பாடுவதற்குக் குருடர்களை நியமித்ததோடு அவர்கட்கு வழிகாட்டுவாரொருவரும் நியமித்து நிவந்தம் வழங்கப் பட்டுள்ளதைத் திருவாமாத்தூர் கல்வெட்டு குறிக்கின்றது. திருமால் கோயில்களிலும் திருப்பள்ளியெழுச்சி, பிரபந்தம், முதலிய பாடல்கள் நிகழ்வதற்கு நிவந்தங்கள் செய்யப்பட்டன.

கோயிலில் ஆரியம் பாடவும், தமிழ் பாடவும், தேசிகம் பாடவும், பயிற்சியுடையார் நியமிக்கப்பட்டு நிவந்தம் பெற்றுள்ளனர். கோயிலில் பாடப் பெறும் பாடல்கட்கும் ஆடல்கட்கும் பின்னிசையாக குழல், யாழ், வீணை ஆகிய இசைக்கருவியிசைப்பார் நியமிக்கப்பட்டிருந்தனர். மாணிக்கவாசகரும், 'இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்' என்று குறிப்பிடுவதும் நோக்கத் தக்கதாகும். வேறு திசை மொழியாளர்கள் தத்தமது மொழியால் இறைவனைப் பாடிய இசைப் பாடல்முறைமை தேசிகம் எனப்பட்டது. இதனை ஞானசம்பந்தர் "வேறுதிசை ஆடவர்கள் கூற இசை தேரும் எழில் வேதவனமே" என்று பாடிய திறத்தினால் அறிய முடிகின்றது.

கோயில்களில் நடனங்களும், நாடகங்களும் அரசன் பெயராலும் இறைவன் பெயராலும் நிகழ்த்தப்பட்டுள்ளன. ஆரியக்கூத்து, சாக்கைக் கூத்து, சாந்திக் கூத்து என்ற வகையினான கூத்தர்கள் கோயில்களில் கூத்துக்களையும் நாடகங் களையும் நிகழ்த்தியுள்ளனர். ஆடலும் பாடலும் வல்ல மகளிர் தளிச்சேரிப் பெண்டுகள் எனக் குறிக்கப்பட்டனர். முதல் இராசராசன் தஞ்சைப் பெரிய

கோயிலில் ஆடலுடன் பாடலுக்கும் திகழ்ந்த 400 தளிச்சேரிப் பெண்டுகளை நியமித்து வீடும் நிலமும் நிவந்தம் செய்துள்ளான். அவர்களுள் நடனக்கலையில் வல்ல 'தலைக்கோலி' பட்டம் பெற்றோரும் உள்ளனர். இராசராசன் திருக்கோயிலூர் கோயிலில் நாடகமாட முப்பத்திரண்டு மகளிரை நியமித்துள்ளான். தஞ்சைப் பெரியகோயிலில் இராசராசேசுவர நாடகம் நிகழ்ந்துள்ளது. புரட்டாசித் திருநாளில் திருமூல நாயனார் நாடகம் நாட்டிய நாடகமாக ஏழு அங்கங்களுடன் திருவாவடுதுறையில் நிகழ்ந்துள்ளது. ஆரியக்கூத்தும், சாக்கைக்கூத்தும் மூன்று இயல் ஏழு அங்கமாக நிகழ்த்தப்பட்டுள்ளது. திருவிடைமருதூர் கோயிலில் நாடகசாலையொன்று இருந்துள்ளது.

தமிழகத்தில் மக்களின் சமூக வாழ்க்கையில் இசைக்கலையின் ஈடுபாடு சிறந்திருந்தது. பல்லவர் காலக் கல்வெட்டுக்களுள், குடுமியாமலை, திருமெய்யம் குன்று, அரச்சலூர் ஆகிய இடங்களில் இசைக் கல்வெட்டுகள் தோன்றியுள்ளன. குடுமியாமலை இசைக் கல்வெட்டு பண்ணும் அதன் திறமும் முறைப்படுத்தப்பட்ட காந்தாரக் கிராம இலக்கணத்தினைக் கூறுவதாகவுள்ளது. திருமெய்யம் கல்வெட்டில் "குணசேன பிரமாணஞ் செய்த வித்யா பரிவாதினீ கற்க" என்ற பகுதியே எஞ்சியுள்ளது.

அரசப் பணியாளர்கட்கும், கோயில் கிராமசபை ஆகியவற்றின் பணி-யாளர்க்கும் இறையிலியாகவும், மானியமாகவும், காணியாட்சியாகவும் அளிக்கப்பட்ட நிவந்தங்கள், சீவிதம், போகம், விருத்தி, காணி, பற்று, புறம், பட்டி, முற்றூட்டு என்ற பெயர்களால் அளிக்கப்பட்டன.

தஞ்சை இராசராசேச்சுரத்தில் இருந்த கோயில் பண்டாரத்திலிருந்து ஆச்சாரிய போகமாக சர்வசிவபண்டிதர்க்கும் அவரது மாணாக்கருக்கும் ஆண்டுதோறும் இரண்டாயிரக்கலம் நெல், முதல் இராசேந்திரனால் அளிக்கப்பட்டுள்ளது.

கோயில் நிலங்களைப் பயிரிடுவோர், முதல் குலோத்துங்கன் ஆட்சியில் கோயிலுக்குச் செலுத்த வேண்டிய நெல்லை, கல்லும் பதரும் வாரும் நீக்கி, கார் பாதி, பசானம் பாதி என்ற முறைமையில் செலுத்தியுள்ளனர். பசானம் என்பது சம்பா நெல் போகமாகும். சம்பா அறுவடைக்கால அளவிலிருந்தே அரசுகள் நிலவரிபெறும் காலத்தினை, பசானம் என்ற பெயரால் குறித்துள்ளனர். பசானம் என்ற நிலவரிக் காலப் பெயர் பசலி என்று திரிந்து வழக்கிலுள்ளது.

திருக்கோயில்களின் வெளித்திருச்சுற்றிடத்தில் சைவ வைணவ அடியார்கள் தங்கியிருந்து தெய்வப்பணி செய்து வந்த இடங்கள் மடவளாகம் என்று குறிக்கப்பட்டன. மடங்களுக்கு அளிக்கப்பட்ட இறையிலி நிலங்கள் மடப்புறம், பட்ட-விருத்தி, என்ற பெயர் குறிக்கப்பட்டன. முதல் இராசேந்திரன் காலத்தில்,

திருநீலவிடங்கன் மடம், திருவீதிவிடங்கன் மடம், சிவலோக நாயகன் மடம், நாற்பத்தெண்ணாயிரவர் ஆதிசைவர் மடம்', என்ற சைவ மடங்கள் நாட்டில் இருந்தன. விக்கிரம சோழன் ஆட்சியில் முன்னூற்று இருபத்து நால்வர் மடம் திருவாவடுதுறையில் இருந்தது. இம்மடத்தில் மருத்துவப்பணி, மருத்துவக் கல்வி ஆகியவற்றில் தேர்ந்தவர்கட்கு மதிப்பியல்புகள் வழங்கப்பட்டன. ஸ்ரீ பராந்தகன் குந்தவை பிராட்டியார் வைத்திய சாலையொன்று செயல்பட்டுள்ளதாகக் கல்வெட்டுச் செய்திகள் புலப்படுத்துகின்றன. சங்கரதேவன் அறச்சாலை என்ற பெயரால் நாளும் சிவனடியார்கட்கு நிறைவாக உணவளிக்கும் தருமசாலை அறச்சோறு ஊட்டும் அம்பலமாக இருந்துள்ளது.

திருக்கோயில்கள் மக்கட்கு அறப்பணி போக்கும் நெறித்தலமாக இருந்ததுடன் உடற்பிணி தீர்க்கும் மருத்துவசாலைகளையும் நடத்தி வந்துள்ளன. மருத்துவசாலை 'ஆதுலசாலை' என்று குறிக்கப்பட்டது. திருமுக்கூடலில் வீரராசேந்திரன் ஆட்சியில் அவ்வூர்த் திருமால் கோயிலில் ஆதுலசாலையும் தத்துவக் கல்விச்சாலையும் இயங்கியுள்ளன. சோழராட்சியில், சிதம்பரம், செம்பியன்மாதேவி ஆகிய ஊர்களிலுள்ள கோயில்களில் ஆதுல சாலைகள் செயற்பட்டுள்ளன. ஆதுல சாலைகளில் விடந்தீர்க்கும் மருத்துவர்க்கு 'விடவிருத்தி' என்னும் பெயரால் நிலங்கள் அளிக்கப்பட்டன.

கோயில் வழிபாட்டுப் பணிகளில், அர்ச்சகர், பரிசரிப்பார் மாலியொருவன், திருவமுது அட்டிக் காட்டுவானொருவன், தூபமும் தீபமும் பிடிப்பானொருவன், பரிகலங்கள் மாற்றிப் பூசுக்கடவானொருவன் ஆக ஐவர் பஞ்சாச்சாரியமாக இருந்து செயல்பட்டுள்ளனர்.

கோயிற்காரியங்களின் நிர்வாகத்திலே, வேதாகமங்களிற்றேர்ந்த பெருமக்கள் ஈடுபட்டிருந்துள்ளனர். அக்குழு, சபைப்பெருமக்கள், அமிர்தகணத்தார், தேவகன்மிகள், மகேஸ்வரக்கண்காணி, மூலப்பருடையார் என்ற பெயர்களால் நாட்டு வழக்கிற்கேற்பப் பெயர் பெற்றிருந்தனர்.

தமிழகக் கல்வெட்டுகளால், தமிழகத்தில் கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதலாக நிலவிய வணிகநிலைகளையும் வணிகக் குழுவினரையும் அறியமுடிகிறது. வணிகக் குழுவினர், நானாதேச திசையாயிரத்தைஞ்ஞூற்றுவர், மணிக்கிராமத்தார், சித்திர மேழிப்பெரிய நாட்டார், நகரத்தார், வளஞ்சியர், அஞ்சுவண்ணத்தார், சங்கரபாடியார் என்னும் பிரிவினராக வணிகம் செய்துள்ளனர்.

முடியாட்சியில் குடிமக்கள் ஆட்சியாக கி.பி. எட்டாம் நூற்றாண்டு முதலாகக் கிராம சபைகள் ஊராட்சியினை நிகழ்த்தியுள்ளன. கிராம சபைக்குரிய உறுப்பினர்கள் குடவோலை மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வாரியங்களாகப் பிரிக்கப்பட்டுச் செயலாற்றியுள்ளனர். வாரியங்கள் இக்காலத்து இலாகாக்கள் போன்ற அமைப்புடையதாயினும் 120 பேர் கொண்டதொரு வாரியமாகவும் பிரிக்கப்பட்டிருந்ததைக் கல்வெட்டுகளால் அறியமுடிகிறது.

1:3:9 வாரியங்கள், சம்வத்சரவாரியம், தோட்டவாரியம், ஏரிவாரியம், பொன்வாரியம், பஞ்சவாரவாரியம், கழனிவாரியம், கணக்குவாரியம், கலிங்கு வாரியம், குடும்புவாரியம், நகரவாரியம், கோயில்வாரியம் என்ற வகையில் பிரிந்து செயலாற்றியுள்ளன. கோயில் நிர்வாக முறைமைகளை சம்வத்சரவாரியம் கவனித்து வந்துள்ளது. கிராம சபையின் அமைப்பினையும் வாரியங்களின் செயல்களையும், உத்தரமேரூர், திருநின்றவூர், தலைஞாயிறு, திருச்செயலூர், காமரசவல்லி, செம்பியன்மாதேவி சேமிஞலூர் ஆகிய ஊர்களிலுள்ள கல்வெட்டுகள் தெளிவு செய்கின்றன.

கோயில்கட்கு செய்யப்பட்ட நிவந்தங்களுள் நந்தாவிளக்கு நிவந்தங்களே மிகுதியாகும். அவற்றுள், தவறுதலாகவோ, விளையாட்டாகவோ, அறியாமலோ மானவுணர்விலோ நிகழ்ந்த குற்றங்கட்குத் தண்டப் பரிகாரமாகவும், இறந்தோர் நல்லுலகடையும் பிரார்த்தனையாகவும் திருவிளக்கு நிவந்தங்களாக ஆடுகளையும் பசுக்களையும் முதலீடு செய்யுமாறு கிராமசபையோரும் அரசும் தீர்ப்புவழங்கியுள்ளமை அறியத்தக்கதாகும். ஒரு நந்தாவிளக்கு, கோயிலில் இரவும் பகலுமாகத் தொடர்ந்து எரிவதற்கு 96 ஆடுகள் நிவந்த அளவாகுமென்பது கல்வெட்டுகளால் அறியப்பெறுவதாகும்.

மற்றும் பொய்க்கணக்கு எழுதியவரும், நம்பிக்கைத் துரோகம் செய்தவர்களும் தண்டிக்கப்பட்டுள்ளனர். வரிகொடாதவர்களின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. மாரியின்றி மக்கள் குறைவுபட்டபோது அரசு இறை இலேசு செய்துள்ளது. போக விளைவுகள் ஒரு பூ, மறுபூ, கடைப்பூ, கார்மறு, என்ற வகையில் செய்யப்பட்டுள்ளன. வேளாண்மைக்கு நீர்ப்பாசன முறைமைகள் பல்வேறுபட்ட நியதிகளில் அமைக்கப்பட்டிருந்தது; வணிகப் பொருள்களுக்கு வரி விதிப்புமுறைகள் திட்டமாக இருந்தன. நாட்டில் பொருளாதாரக் கணிப்பு விதிகளும் அரசுகளால் வழக்கில் நிலவியிருந்தன.

இவ்வாறு தமிழகக் கல்வெட்டுகளால் சென்ற கால அரசுகளின் ஆட்சி முறைமைகளையும், அரசர்களின் மரபுகளையும் அறிவதோடு மக்களுக்கும் தெய்வத்தலங்களாக விளங்கும் கோயில்களுக்கும் தொடர்பான பண்பாட்டியல் தொடர்பு நிலைகளையும், வாழ்வியல் தொடர்புகளையும் நன்கு அறியப் பெறுவதாயினும், இக்கட்டுரையில் ஒரு சில செய்திகளே தொகுப்பாகவும் குறிப்பாகவும் கூறப்பட்டுள்ளன.

மக்கள் சமுதாயத்தின் தெய்வநெறி ஒழுகலாற்றிற்கும், வாழ்வியல் தேவைகட்கும் கோயில்களும் கல்வெட்டுகளும் தமிழகத்தில் இடம்பெற்று வளர்ச்சியடைந்து, தமிழ்ச் சமுதாயக் கணிப்பியலுக்கும் தமிழக வரலாற்றிற்கும் சான்றுகளாக விளங்கிவரும் மேன்மை அறியலாகும்.

1:4:1

# சந்நிதிகளும் மூர்த்திபேதங்களும்.

முனைவர் கோ. தெய்வநாயகம்,
இணைப்பேராசிரியர் – தலைவர்
கட்டிடக் கலைத்துறை, தமிழ்ப் பல்கலைக் கழகம்.

## திருக்கோயில் அமைப்பு:

அருளொடு நிறைந்த பேராற்றலின் பெருவடிவினைத் தமது மனக்கண்ணுக்கு ஏற்றவாறு மெல்லென அரு, அருவுரு, உரு எனக்கொண்டு வணங்கி வழிபட மனித சமுதாயம் கண்ட வழிபாட்டிடமே திருக்கோயில் அமைப்பாகும்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற முப்பெருஞ்சிறப்பு வாய்ந்தவையாகத் திருக்கோயிலமைப்புகள் விளங்குவது கண்கூடு. அறிவியலடிப்படையில் விளக்கம் பெறுதற்கும் அறிவியலுக்கும் மேம்பட்ட அருளியற் சான்றுகளாகவுந் திகழும் திருக்கோயிலமைப்புகள் பண்டைத் தமிழ்ச் சமுதாயத்தின் அறிவு மேம்பாட்டை உலகறியச் செய்யும் கலைச் சின்னங்களாகத் திகழ்ந்து இந்திய நாட்டை உலக அரங்கில் உயரிய கலைவளங்கொழிக்கும் நாடாகப் புலப்படுத்தும் அருமை வாய்ந்தவையாகும்.

ஆற்றலைப் போற்றும் இயல்பு மனிதனுக்கு அன்றும் இன்றும் என்றும் உண்டு. ஆயின் பண்டை மனிதன் போற்றிய ஆற்றல் வழிபாடு அவனது மனப்பண்பாட்டிற்கு உதவியுள்ளது. இன்றைய போக்கு, வாழ்வியலை வளர்க்கும் நோக்கில் உள்ளது. அற்றை வழிபாடு அகவளர்ச்சியைக் கண்டதன் அறிகுறிகளே திருக்கோயில்கள் எனலாம்.

திருக்கோயில்களின் அமைப்பை வேதாகமங்கள் வெளிக் குறிகளின் அமைப்பிலும், தந்திரங்கள் பிரமத்திலும், சாத்திரங்கள் தெய்வீகத்திலும் தோற்றங்காண்கின்றன.

இயற்கையிலோ, தம்முள் ஒருவரிலோ அரும் பேராற்றலைக் கண்டு அவ்வாற்றலின் போற்றற் குறியீடாகக் கல்லெடுத்து வழிபட்டு, கல் நிறுத்தமீதாக முப்புற அடைப்புக்கண்டு, புதைவடை, பட்டடை, அதன்மேல் வளர்ச்சியாக எளியகோயில், ஒருதளக்கோயில், இருதளக் கோயில், மூந்தளக்கோயில் என முறையே வளர்ச்சியடைந்த தெய்வீகத்திற்குரித்தாக்கப்பட்டது வளர்ச்சிநிலை. மேல்கட்டுக்கோப்பு தெரிய வடிவினைப் பெற்றுவிமானம் என்றாகி, திருச்சுற்றையும் முதல் வரிசையினையும், மாளிகைப் பத்திகள், மண்டபங்கள் ஒரு வரையறைக்குட்பட்ட பல்வகை கோட்டங்கள், வாயில்கள், கோபுரங்கள் இவற்றையும் கொண்டு விளங்கும் பெருங்கோயில் வடிவாக்கம் மாந்த இனத்தின் பண்பாட்டுக் கலை வளர்ச்சியின் புறச்சுவடுகள் என்பது மிகையன்று.

1:4:2

<u>சந்நிதிகளும் மூர்த்திபேதங்களும்:</u>

திருக்கோயில்களில் அமைந்த சந்நிதிகளை நோக்கும்போது 'சந்நிதி' என்பதன் பொருளாகத் "திருமுன்" என்று 'தெய்வீகம் சாந்நித்யம் பெற்ற இடம்' என்றும் பொருள் காணமுடிகின்றது. 'கோயில்' என்ற பொருள்பட மனிதன் தம்முள் சிறந்த தலைவரது பெருங்குடியிருப்பினை ஒத்ததாக அன்றி, அதனிலும் மேம்பட்டதாகத் தம்மிலும் பேராற்றல் மிக்க இறைமையின் உறைவிடமாகக் கண்ட திருக்கோயில்களில் உள்ள மூர்த்தித் திருமுன்களை 'சந்நிதி' என்பது மரபு.

இயற்கையினின்றும் விளைந்த விசும்பு, வளி, தீ, நீர், மண் என்ற ஐம்பெரும் பூதங்களையும் இயற்கை என்ற ஒருமையுள் அடக்கியும், தனித்தனியேயும் போற்றி வணங்குதல் உலகில் மாந்த சமுதாயம் கண்ட முதல் மூர்த்தி பேதமெனல் ஐயமின்று.

ஒவ்வொரு பூதத்தினையும் அவ்வவற்றின் தேவை அல்லது அச்சம் இவற்றால் ஒவ்வொரு கூட்டமும் தந்தம் இயல்பிற்கும் சூழற்கும் ஏற்ப வணங்கிப் போற்றுதல் இயல்பு. அதுவே சந்நிதிமுறை. பரந்துபட்ட பூதத்திற்கு ஒரு வடிவாக்கம் கண்டு அதனை வழிபட்டது சந்நிதி.

தனித்தனியான இத்தகு ஆற்றல் சந்நிதிகளை ஒருங்குகண்டு, அதன் மூலமென ஒன்றைக் கொண்டு வடிவு கொடுத்து, இறைமையுணர்ந்து வணங்கி வழிபட்டது மகாசந்நிதியாயிற்று.

ஆக ஒன்று பலவாதலும் பல ஒன்றுள் ஒடுங்குதலுமாய இயற்கையின் நேர்வினை, மனிதசமுதாயம் தங்கள் தேவைக்கும் சூழலுக்கும் ஏற்பக் கண்ட நிலையே மூர்த்தியும் மூர்த்தி பேதங்களும் அவர்கட்கான மகாசந்நிதியும் சந்நிதிகளுமாகும்.

திருக்கோயிலமைப்புள் தலைமையிடம் பெறுவதும் முதன்மையானதும் மூர்த்தியேயாகும். இதனை மூலவர் என்றல் வழக்கு. மூர்த்தி பேதங்கள் திருச்சுற்று நடையில் தனிச்சந்நிதிகள் கண்டோ; திருச்சுற்று மாளிகையில் தனிக்கோட்டங்களிலோ அன்றி வரிசையுறவோ அல்லது மூல மூர்த்தியின் கருவறை வெளிப்புறத் தேவ கோட்டங்களிலோ இடம் பெறுவது இயல்பு. இவற்றுள் மூல மூர்த்தி இடம்பெறும் அகப்பகுதியைக் "கருவறை" எனவும், அதன் புறப்பகுதி-யினைக் "கோட்டம்" எனவும் குறிக்கும் சொல்லாட்சி நோக்கத்தக்கது. அகப்பகுதி ஒன்றும் அதன் வேறுபட்ட பேதச் சக்தி வடிவுகள் இடம்பெறும் கருவறைச் சுவர்ப் புறப்பகுதியில் மாடப்புரையொத்த பகுதிகளைப் பல்வகைத் தெய்வக் கோட்டம் எனவும் வழங்கும் வழக்கு நிலை, அகத்தே மூர்த்தி

1:4.3

ஒன்றாயும் புறத்தே அது பல்வேறு வடிவிலும் தோற்றம் கொள்ளும் தன்மையினையும் சுட்டுகிறதெனலாம்.

இவ்வாறு அகத்துவடிவ மூர்த்தியின் பேதங்கள் கருவறைச் சுவரின் புறப் பகுதிகளில் இடம் பெறுதற்கு முன்னர் மூல மூர்த்தி இடம் பெற்ற கோயிலமைப்பின் நாற்புறமும் தனித்தனிக் கோட்டங்களில் எழுந்த சந்நிதிகளாகத் திகழ்ந்தமையினைச் சிலப்பதிகாரம் "பால்பெற வகுத்த பத்தினிக்கோட்டம்" எனவும், "இந்திரக் கோட்டம், ம[illegible]க்கோட்டம், வச்சிரக்கோட்டம் எனவும் சுட்டி விளக்குகின்றது. இந்நிலையில் மூலமூர்த்தி உறையும் பகுதி "கோயில்" எனவும், மூர்த்தியின் பேத வடிவங்கள் இருந்தவற்றையும் பகுதி "கோட்டங்கள்" எனவும் வழங்கப்பட்டமை தெளிவு. இவ்வாறு பேதம் என்பது மூர்த்தியின் ஆற்றல்கள் வெளிப்படும் பல்வேறு நிலைகளாகவே யுள்ளமையும் அவ்வழி இந்திரன் என்ற மூர்த்திக் கோட்டத்தினையடுத்து அம்மூர்த்தியின் ஆற்றலுக்கான வச்சிரம் என்ற ஆயுதத்திற்குரிய கோட்டமும், இவர்ந்துவரும் வெள்ளையானைக்குக் கோட்டமும் பண்டைத் தமிழர்கள் கண்டமையினைச் சிலம்புணர்த்துகின்றது.

கோயிலைச் சூழ்ந்த நாற்புறமும் இடம் பெற்ற மூலமூர்த்தியுடன் தொடர்புடைய மூர்த்திபேத சந்நிதிகளுடன் நாற்றிசைக் கடவுளர் சந்நிதிகளும்; வளர்ச்சியாக எண்டிசைக் கடவுளர் சந்நிதிகளும் இடம் பெற்றமையினை 'அட்ட பரிவார தெய்வக்கோட்டம்' எனக் குறித்தல் வழக்கு. இதனை நாரத்தமலை விசயாலய சோளீச்சரத்தில் காணலாம்.

இவை போன்றவற்றைப் பரிவார ஆலயங்கள் என்பது மரபு. ஆனால் மூர்த்திபேதங்களும் அவற்றிற்கான சந்நிதிகளும் இவற்றினின்றும் வேறானவை. ஆதலின் இவை கோயிலின் நாற்றிசை எல்லைகளாகத் திகழும் மதில் வரியிலோ அன்றி நடையிலோ அமையாமல் மூல மூர்த்தியுடன் தமக்குள்ள நெருங்கிய தொடர்பு நோக்கிக் கருவறையின் வெளிப்புறச் சுவரில் இடங்கொள்வதே மரபு. அந்நிலையில் எடுத்துக்காட்டாகத் தஞ்சைப் பெரிய கோயிலைக் காணலாம். இராசராசேச்சுவரத்தின் மூலமூர்த்தி இலிங்க வடிவிலான சிவமூர்த்தம். இதனை இராசராசனின் கல்வெட்டுகள் "இராஜராஜீச்வரம் உடையார்' எனவும் 'பரமஸ்வாமி' எனவும் குறிக்கின்றன. இம்மூர்த்தி குடிகொண்டுள்ள இறையகத்தைச் சுற்றி இராசராசன் காலத்து ஓவியங்களுடன் சிறப்புபெறும் அகநாழிகைத் திருச்சுற்று உள்ளது. இத்திருச்சுற்றில் தென்முகம் நோக்கி அமர்ந்த கோலத்தில் வீரபத்திர வடிவமும் மேற்குநோக்கி ஆடுங்கோலத்தில் சத்யோசாத வடிவும் வடக்கு நோக்கி வாமதேவ வடிவும் இறையக மாடத்தில் இலங்குகின்றன.

இத்திறம் மேலாகத் திகழும் விமான வடிவினையும் சிவனார் மூர்த்தி பேதங்களின் ஒன்றாகக் கொண்டு அதனைத் தற்புருட வடிவாகக் கொள்வது மரபு. கிழக்கு நோக்கியுள்ள இலிங்க வடிவினை ஈசானர் என்பர். இவ்வைந்து திருக்கோலமும் 'சிவம்' என்ற பரம்பொருளாய மூல மூர்த்தியின் பேதவடிவங்கள் எனப்படும் நோக்கத்தக்கது. இவற்றின் பேதவிளக்கமாக ஐந்தொழிற்பாட்டினைப் புலப்படுத்தி ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் எனக்கொண்டு ஒவ்வொரு தொழிற்பாட்டினையும் மூர்த்தியின் ஒவ்வொரு திறப்பாடு புரியும் வடிவினை ஒரு உருவகப்படுத்திக் காட்டிப் பாமரர்க்கும் பரம்பொருளின் அளப்பரிய பண்பினை ஆற்றலையும் விளக்கிய அருளாளர் சித்தமே இம்மூர்த்தி பேதங்கள். அவ்வகையில் கிழக்குத் திசை நோக்கும் உத்தமவடிவாம் ஈசானர் ஆக்கற் சக்தியாகும். வான்நோக்கி உயர்ந்தோங்கும் விமானம் – தற்புருடம் காத்தற் சக்தியாகும். தென்புலம் நோக்கும் அகோரர் அழித்தற் சக்தியாகும். மேற்கு நோக்கும் சத்தியோஜாதர் மறைத்தற் சக்தியாகும். வடக்கு நோக்கும் மகேசுவரி எனப்படும் பெண் வடிவ வாமதேவம் அருளற் சக்தியாகும். இவை மூர்த்தியின் முதல் பேதநிலை. சூனியமுரைத்தக்கவை. ஆதலின் அருநாழிகைக்குள்ளாக இடம் பெற்றுள்ளன. இம்முறை பிறழ வேறொரு நெறியான் அருளலை ஈசானர்க்கும் மறைத்தலைத் தற்புருடர்க்கும், அழித்தலை அகோரர்க்கும் காத்தலை வாமதேவர்க்கும், படைத்தலை சத்தியோஜாதர்க்கும் உரித்தாக்கலும் உண்டு.

இவ்வைம்பெருஞ் சிவமூர்த்தி பேதங்களை பஞ்சகிருத்திய மூர்த்திகள் என்பர். இவை சிவத்தின் தலைமையான ஆற்றலின் வகைப்பாட்டுருவங்கள் எனலாம். இவ்வைந்தாற்றற் பேதங்களும் செயல்புரியும் வகையால் ஒவ்வொன்றும் ஐந்தைந்து ஆற்றல் பேதங்களாக மேலும் உருக்கொள்வதனைச் சைவ ஆகம மரபுகள் கீழ்வருமாறு உணர்த்துகின்றன.

<u>சிவம்.</u>

| ஆக்கல் | காத்தல் | அழித்தல் | மறைத்தல் | அருளல் |
|---|---|---|---|---|
| ஈசானம் | தற்புருடம் | அகோரம் | சத்தியோசாதம் | வாமதேவம் |
| சோமாஸ்கந்தர் | பிட்சாடனர் | கஜசம்மாரர் | கங்காளர் | லிங்கோத்பவர் |
| நடராசர் | காமதகனர் | வீரபத்திரர் | சக்கரதானர் | சுகாசனர் |
| ரிஷபவாகனர் | காலந்தகர் | தெட்சணாமூர்த்தி | கஜமுகானுக்கிரகர் | உமாமகேசர் |
| கல்யாணசுந்தரர் | சலந்தராரி | கிராதமூர்த்தி | சண்டேசானுக்கிரகர் | அரியரர் |
| சந்திரசேகரர் | திரிபுராந்தகர் | நீலகண்டர் | ஏகபாதர் | அர்த்தநாரி |

1:4:5

இப்படியமைந்த மூர்த்தி பேதங்களும் பரசிவத்தின் இரண்டாம் நிலை - பேதங்களாகும். மாந்தர்க்குப் புலனாவை ஆதலின் அகநாழிகைத் திருச்சுற்றின் வெளிப்புறச் சுவர்ப்பரப்பின் தெய்வக்கோட்டங்களில் இடம்பெற்று மூர்த்தியின் ஆற்றலைப் புலப்படுத்துகின்றன.

இவ்வாறே மூர்த்தியின் பேதமாக தத்துவநிலையால் விளக்கம் பெறுதலும் தொடர்புடைய பிற தெய்வத்தலைமைகளும் திருக்கோயில்களில் சந்நிதிகள் பெற்று விளங்கும் சூழலை, இந்திரன், சந்திரன், சூரியன், அம்மை, விநாயகர், முருகன், திருமால் முதலிய கோட்டங்களாகத் திருக்கோயில் அமைப்பில் காணலாகும். இவை மூர்த்தி புறப்புறம் பேதமுற்ற நிலையில் பல்வேறு மாந்த சமுதாயம் தத்தமக்குள் ஆங்காங்கே பல்வேறுபட்ட காலக்கட்டங்களில் கொண்டிருந்த வழிபாட்டு ஆற்றலுருவங்களின் 'இணைவு' எனக் கொள்வதில் தவறில்லை. இவ்விணைவுக்கான காரணம் மாந்த சமுதாயங்களின் பிணைப்பினால் எழுந்ததெனலாம்.

இவ்வாறாக திருக்கோயிலமைப்பென்பது மனிதனின் நம்பிக்கைக்கும் பண்பாட்டு வளர்ச்சிக்கும் உரிய இடமாக விளங்குகின்றது. அதனுள் காணப்பெறும் சந்நிதிகள் பல்வேறு மாந்த சமுதாய நம்பிக்கைகள் ஒருங்கிணைந்தும் வேற்றுமையில் ஒற்றுமை கண்டமையாய சூழற்சுவடுகள் எனவே தோன்றுகின்றன. மூர்த்தி பேதங்கள் என்பன இயற்கையின் பல்வேறுபட்ட ஆற்றலின் அறிகுறிகள் எனவும் புலனாகின்றன எனக் கூறலாம்.

***

1:5:1

## சிற்பம்.

'சிற்பசாஸ்திர ரத்நாகர' எஸ்.எம். கணபதி ஸ்தபதி.
ஹைதராபாத்.

சிற்பக்கலை தெய்வீகமான கலை. மனத்தாலும் வாக்காலும் அணுக முடியாத பரஞ்சோதியாகிய கடவுளுக்கும், "சோதி வெள்ளத்தினுள்ளே — எழுவதோருரு" என்றும் "நெஞ்சினால் நினைப்பான் யவனவனாகும் நீள் கடல் வண்ணனே" என்றும் சொல்லியபடி. அடியார்கள் தொழுதெழ நற்பொ பாங்கான திவ்ய மங்கள விக்ரஹம் சமைக்கும் பெருமை இதற்கே (கலைக்கே) யுள்ளது. இவ்வாறு திறமைசாலியான சிற்பியால் குற்றமற்றதாகவும் கவர்ச்சிகரமாகவும் எழில் மிக்கதாகவும் அமைக்கப்பட்ட பிம்பங்களில், வேத மந்திரங்களாலும் மற்றுமுள்ள பக்திப் பாடல்களாலும் குழாங்களாகக் கூடி வேண்டப்பட்ட — பரந்தாமன் நிரந்தரமாக ஸாந்நித்யம் செய்தருளி இம்மண்ணுலகை வாழ்வித்தருளும் வகையே "அர்ச்சை", "அர்ச்சா மூர்த்தி" என்றெல்லாம் வழங்கப்படுவதாம். எங்கும் நிறைந்து பரந்துள்ள எம்பெருமானது பரத்துவம் புல்லறிவாளராகிய மானிடர்க்குப் புலனாகாமையினால் அஞ்சவேண்டா, அறிவாளிகளும் அறிவிலிகளும் வாசியற ஒன்று கூடி அநுபவிக்கவும் இப்பரசுகங்களைப் பெற்று வாழவும் இந்த "அர்ச்சா விக்ரஹம்" இருக்க நமக்கென்ன குறை? என்கிறார் நம்மாழ்வார்.

"நஞ்சமர்கிய தந்தை தாயொடு தாமுமாயவையல்லவாம்
எஞ்சலில் அமரர் குலமுதல் மூவர் தம்முள்ளும் ஆதியை
அஞ்சி நீர் உலகத்துள்ளீர்கள் அவன் இவன் என்று கூழேன்மின்!
நெஞ்சினால் நினைப்பான் யவனவனாகும் நீள்கடல் வண்ணனே"!

— திருவாய்மொழி.

க்ஷேத்திரங்கள் என்று அழைக்கப்படும் புண்ய ஸ்தலங்களிலும் அதுபோன்று மற்றவிடங்களிலும் தொன்றுதொட்டு இவ்வர்ச்சா விக்ரஹங்களை நிருமித்துத் திருக்கோவில்களையும் தோற்றுவித்த இம்மண்ணுலகை வாழவைக்கும் தனிப்பெருமை "சிற்பக் கலைக்கே" அமைந்தது. எல்லாம் வல்ல இறைவனே! முதல் சிற்பி ஆவான். மகாப்பிரளயத்தில் அழிந்துபோன உலகங்களை எல்லாம் அவன் தானே தோற்றுவிக்கின்றான்.

सोऽभिध्याय शरीरात् स्वात्

ஸோऽபித்யாய ஶரீராத் ஸ்வாத்

1:5:2

உலகச் சிற்பியான இந்த இறைவனை வேதம் "விஸ்வகர்மா" என்றழைக்கின்றது. சிற்பக் கலைக்கு இன்றியமையாதது, படைக்க வேண்டிய பொருளின் வடிவத்தோடு ஒன்றிய சலனமற்ற மனமே என்பது இதனால் விளங்கும். பரந்தாமனுடைய விசித்திர ஸ்ருஷ்டியில் தோன்றிய நாமும், அவனது ஸ்ருஷ்டியாகிய கல், மண், மரம், உலோகங்கள் முதலியவற்றால் அவனது திருவுருவங்களையும் கோவில்களையும், கோபுரங்கள், மண்டபங்கள், நாடு, நகரங்கள் ஆகியவற்றையும் தோற்றுவித்து அவனுக்கே அர்ப்பணம் செய்தல் சிற்பியின் கடமையாகும்.

<u>நம் கடமை</u>:

நாம் உலகிலுள்ள இன்பங்களை அனுபவிக்கிறோம். வாழ்க்கைக்கு — இன்றியமையாத பொருள்களையும் தேடி அவைகளை உட்கொண்டும், உபயோகித்தும் வாழ்க்கையை நடத்தி வருகிறோம். முதியோர்களையும், குழந்தைகளையும் — ரக்ஷிப்பதற்கும் இத்தகைய பொருள்கள் அவசியமாகின்றன.

இத்தகைய பொருள்களைச்-சுவைத்தும், கண்டும், கேட்டும், முகர்ந்தும், உணர்ந்தும், உண்டும், குடித்தும், உடுத்தும், போர்த்தும் அனுபவிக்கிறோம்.

இப்பொருள்களை எல்லாம் அனுபவிப்பதற்குக் கண், காது, நா, மூக்கு, மெய் என்கிற பஞ்ச இந்திரியங்கள் அல்லது ஐம்பொறிகள் நமக்கு முக்கியமான கருவிகளாக இருக்கின்றன. இந்த ஐந்துக் கருவிகளைக் கொண்டே உலகப் பொருள்களை எல்லாம் நாம் அனுபவிக்கிறோம். ஆனால் இப்பொருள்களை நாமே உண்டாக்கிக் கொள்ளவில்லை. நம்மால் உண்டாக்கவும் முடியவில்லை. ஒரு பருக்கை சோறோ, ஒரு வாழை இலையோ நம்மை மீறிய சக்தியாலேயே தான் உண்டாகின்றது. அந்தச் சக்தியையே "<u>பரமாத்மா</u>" <u>பரமேஸ்வரன்</u> என்கிறோம்.

நாம் செய்யும் உபசாரங்களுக்கும் நாம் மனமறிந்து செய்யும் — அபசாரங்களுக்கும் உண்டி கட்டுவது கூட "அவருடைய கருணை ஒன்றாலேயே" என்பதை நாம் ஆலோசித்தால் நமது மனசாட்சிக்குத் தெரியும். அவர் கொடுத்த பொருள்களை அவர் நினைவேயின்றி நாம் சாப்பிட்டுவிட்டுக் கெட்ட வழியிலும் அனுபவித்துவிட்டு, இவ்வுலகிலிருந்து ஒரு நாள் மாய்ந்து போவதில் ஒரு லக்ஷியமும் நிறைவேறவில்லை. இத்தகைய நமது வாழ்க்கை வாழ்க்கையுடன் சேர்ந்ததில்லை.

"பேசாத நாளெல்லாம் பிறவா நாளே"
"தமிழ் மழலையாளைச் சேராதார் தீ தருக்கே
சேருகின்றார்" என்பன தமிழ்மறை.

1:5:3

நம்மால் செய்யமுடியாமல் நம் சக்திக்கு மீறிய ஒரு சக்தியால் ஆக்கப்பட்ட பொருள்களை அப் "பரா சக்தியாம்" அம்மை அப்பனுக்கு அர்ப்பணம் செய்யாமல் நாம் அனுபவித்துவிட்டுச் சாதல் பெரும் நன்றியற்ற செயலாகும். அவர் கொடுத்த பொருளை அவருக்கு நன்றியுடன் அர்ப்பணம் செய்துவிட்டு அவைகளை அனுபவிக்க அனுபவிக்க. அதன் நன்றி ஊறி மனிதத் தன்மைக்கு அற்புதமான அமிர்தமாம் ஆருயிராம் பரவி உலகமும் உலகத்தில் வளரும் பொருள்களும் ஆன்ம கோடிகளும் பன்மடங்கு செழிக்கத் துணையாய் நிற்கும். அந்த நன்றிக்கு "பூசை" என்று பெயர்.

நாம் உடுக்குமுன், ஒரு சிறு ஆடையைச் சுத்தமாய் அர்ப்பணம் பண்ணிவிட்டு உடுத்தால் உடைப் பஞ்சம் குன்றிவிடும். நாம் புசிப்பதற்கு முன் அவருக்கு நிவேதனம் செய்துவிட்டு உண்டோமானால் அதுவே நன்மையானது.

"நிலை பெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீ வா
நித்தலு மெம்பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன் முன் அலகிட்டு மெழுக்கும் இட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கராசய போற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடை யெம் ஆதியென்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே!"

(அப்பர் 6 ஆம் திருமுறை)

நாம் வீடு கட்டுமுன் அவருக்கு ஒரு வீடு கட்டவேண்டும். நாம் விளக்கேற்றுமுன் அவருக்கு ஒரு விளக்கு ஏற்றவேண்டும். நம் வீட்டை மெழுகுமுன் அவர் வீட்டை மெழுகவேண்டும். அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு பலன்களில் "அவர் வீடு நம் வீடானதே" வீடு. அதுவே மோக்ஷம். அதற்காக "ஆலயத்தை நம் முன்னோர்கள் கட்டினார்கள். உதாரணம் சாசனம் கூறும். கி.பி. 600 லிருந்து 850 வரை சுமார் 250 வருட காலமாகப் பல்லவர் ஆட்சி தமிழ் நாட்டில் மேலோங்கியிருந்தது. கி.பி. 850 லிருந்து 1110 வரை சோழர்களது ஆட்சி மேலோங்கியது.

இக்காலத்திய சாசனங்களிலிருந்து நாம் பெரும்பாலும் ஆலய நிர்மாணம் முதல், நித்திய வழிபாடு, திருவிழாக்கள், திருப்பணிகள் முதலியன நன்கு அறியமுடிகிறது. பொதுப்படையாகப் பார்ப்போமானால் இன்று நம் ஆலயங்களில் நடைபெறும் வழிபாட்டு முறைகள் 1300 ஆண்டுகளுக்கு முன்னர் எவ்விதம் இருந்தனவோ அதேபோல் தான் உள்ளன.

1:5:4

ஆலயங்களை மன்னர்களும் பொதுமக்களும் பொது ஜனங்களின் — நலனுக்காகவும் உலக க்ஷேமத்துக்காகவும் கட்டிவைத்தனர்.

प्रजानां इष्टसिद्ध्यर्थं शाङ्करीं भुवि इच्छता ।
तेनेदं कारितं शंभोः भवनं भूतये भुवः ॥

என்று பல்லவ மன்னன் ராஜசிம்மனின் சாசனங்கள் கூறுகின்றன. இவ்விதமே அரச மாதேவியரும் பல கோயில்களை எழுப்பி உள்ளனர். கோயில்களைத் தோற்றுவித்த பெரியார்கள் தங்களின் பெயர்களையே கோயில்களுக்கு இட்டனர்.

இவ்விதம் (பூஜா நிமித்தமாக) ஆலயங்கள் நிர்மாணம் செய்யவேண்டியதாயிற்று. அந்த ஆலயம் நிர்மாணம் செய்ய அநேக சிற்ப சாஸ்திரங்கள் நமக்கு பரமேஸ்வரன் முதல் விஸ்வகர்மா வரை கூறுவன. இதில் 18, 32, 81 பெயர்கள் மாத்திரம் இருக்கின்றனவே தவிர, 8 சாஸ்திரங்களே தற்சமயம் கிடைக்கின்றன. அதுவும் பரம்பரை ஸ்தபதிகளிடத்தில் ஓலைச்சுவடிகளாக உள்ளன. தஞ்சாவூர் சரஸ்வதி மஹால் நூலகத்தில் அச்சான சில புஸ்தகங்களாகவும் உள்ளன.

भृगुरत्रिर्वसिष्ठश्च विश्वकर्मा मयस्तथा ।
नारदो नग्नजिच्चैव विशालाक्षः पुरंदरः ।
ब्रह्मा कुमारो नन्दीशः शौनको गर्ग एव च ।
वासुदेवोऽनिरुद्धश्च तथा शुक्रबृहस्पती ॥

மத்ஸ்ய புராணம்

வடநாட்டில் அபராஜிதப்பிரச்சாயா, சமராங்கண சூத்திரதாரா, சில்பத்தைக் கையாண்டு வந்த மகான்களின் பெயர்கள்; விச்வகர்மா, விச்வேச விச்வஸாரமும் பிரகமும் விருதமும் மயமும் த்வஷ்டாவும் மநுவும் நளனும் மான்விதமும் மான கல்பமும் மிகுந்த கேள்வியறிவுடைய மானஸாரமும் பிரஷ்டாவும் மானபோதமும் விச்வ போதமும் நயமும், ஆதிஸாரமும் விசாலமும் விச்வ காச்யபமும் வாஸ்து போதமும், மகா தந்திரமும், வாஸ்து வித்யாபதியும், பாராசர்யகமும் காலயூபமும், சைத்யமும், சித்திரகமும் ஆர்யமும், சாதகமும், ஸாரஸம்ஹிதமும், பாரமும், உலகை அறிந்த இந்திரமும் சில்பியான சிரேஷ்டமான சௌரமும் இந்த 32 மஹான்களும் சிறப்பாகக் கூறப்பட்டிருக்கின்றனர். "சில்பசாஸ்திர உபதேசம்" செம்பதிதம் குருதுஷ்டியப்பாவம்.

1:5:5

இவைகளில் காஸ்யப முனிவர் எழுதிய சில்பம் "காஸ்யபம்" இதைப் பரமேஸ்வரனே உபதேசித்தார்.

காஸ்யபமுனிவர் கூறுகிறார்:

சந்திரனைத் தரிப்பவரும், சகல உலகங்களுக்கும் ஒரே நாயகனாய் இருப்பவரும், மகேந்திரமென்னும் மலையின் முகட்டில் வீற்றிருப்பவரும் மிகவும் சாந்தமான ஸ்வரூபமுடையவரும் பார்வதி தேவியுடன் கூடி இருப்பவரும் தேவர்கள். தானவர்கள், சித்தர்கள் முதலியவர்களினாலே சேவிக்கப்பட்டவரும், தேவர்களினால் பூஜிக்கப்பட்டவரும், (துன்பத்திலிருந்து) தேவர்களைக் காப்பாற்றுகின்றவருமான மஹா தேவனை வணங்கி "காசியப் முனிவர்" இவ்விதம் கூறலானார்.

முக்காலத்திலும் அழிவில்லாதது என்ற பொருளையுடைய ஸத்ஸ்வரூபியான பரமேஸ்வரன் பிறகு (மாயா சம்பந்தத்தினாலே) அசத்பாவத்தை அடைந்து உலகத்தைப் படைப்பதற்குக் காரணமானார். அவரிடத்திலிருந்து உலக அபிவிருத்தியை உத்தேசித்தும், யோகிகளின் உபகாரத்திற்காகவும் தேவர்களின் நன்மைக்காகவும், சிறந்த கருத்துடையதும், கர்ஷணம் (பூமியை உழுவது) முதல் அர்ச்சனை (தேவர்களைப் பூஜிப்பது) வரையிலுள்ளதும், சிறிய கிரந்த (நூல்) வடிவமுடையதும்; சிறந்ததுமான சிவஞானமானது (சில்ப தந்திரமானது) உண்டாயிற்று.

பெருமை வாய்ந்தவரே, தங்கள் முன்பு அம்சுமந்த தந்திரத்திலிருந்து பல விஷயங்களையும் கூறினீர்கள், அவைகளைத் தெரிந்து கொள்ளுவதற்கு அதிகாரிகளான (தகுதி வாய்ந்தவர்களான) தேவர்கள், உருத்திரர்கள், அற்ப ஆயுள் உள்ளவர்களும் அறிந்து கொள்ளத்தக்க தகுதி வாய்ந்தவர்களுமான மனிதர்கள் இவர்களை அனுக்கிரஹிப்பதற்காக அந்தத் தந்திரத்தை (சில்ப நூலை) எனக்குச் சுருக்கமாகக் கூறவேண்டும் என்று காஸ்யபர் பிரார்த்திக்க பரமேஸ்வரர் சொன்னார்.

"ஹே, சிறந்த அந்தணனே! நீ கேட்பது நன்று நன்று! அதிதான அந்தச் சிற்ப நூலை உனக்கு நான் கூறுகிறேன். ஒன்றுபட்ட மனதுடன் கவனமாகக் கேட்பாயாக" என்று காஸ்யபருக்கு ஈஸ்வரன் சொல்கிறார். இவ்விதமே சில்ப சாஸ்திரங்களை உபதேசம் செய்கிறார்கள்.

சில்ப சாஸ்திரத்திலுள்ள முக்கிய விஷயங்கள்:

மயமத சில்ப சாஸ்திரத்தில் உள்ள முக்கிய (அத்யாயங்கள்) விஷயங்களாவன: இது மயன் சொல்லும் விதம்.

1:5:6

மேதாவியான மயன் என்னும் முனிவர் ஸர்வஜ்ஞரும், ஸகல ஜகத்திற்கும் ஈஸ்வரமான பரமேஸ்வரனைச் சிரத்தால் வணங்கி அவரைக் கேட்டு, அவரிடம் இருந்து தேவர்கள், மனிதர்கள், பதார்த்தங்கள், எல்லாவற்றையும் ஸுமுகமாகக் கல்பிப்பதைக் கூறுகின்ற சில்ப சாஸ்திரத்தை முறையுடன் தெரிந்து கொண்டு அவைகளின் ஸ்வரூப லக்ஷணத்தைக் கூறுகிறார்.

முதலில் வஸ்து பிரகாரத்தையும் பிறகு பூபரிக்ஷை, பூபரிக்ரஹம், மானோபகரணம் சங்கு ஸ்தாபன மார்க்கம் பதம், தேவவிந்யாஸம் பலிகர்மவிதி, கிராமாதி விந்யாஸம், நகராதிலக்ஷணம், பூலம்ப விதானம், கர்ப விந்யாஸ லக்ஷணம், பிரஸ்தரவிதி, [illegible]ரம்ம், ஸந்திகர்ம விதி, சிகரங்களின் லக்ஷணம், ஏகபூமி தானம், த்விதல லக்ஷணம், திரிதல லக்ஷணம், சதுர்பூமி யாதி லக்ஷணம், ஸால லக்ஷணம், பரிசாலைலக்ஷணம், கோபுரங்களின் லக்ஷணம், மண்டபாதி விதி, சால லக்ஷணம், கிருஹ விந்யாஸ மார்க்கம். கிருஹ வேசனம், ராஜவேம்ச விதானம், த்வார விந்யாஸ லக்ஷணம், யான லக்ஷணம், சய்னலக்ஷணம் லிங்க லக்ஷணம் பீட லக்ஷணம், அனுகர்ம விதி பிரதிமாலக்ஷணம், தேவதேவிமான லக்ஷணம் சக்ஷுருந்மீலனம் இவைகள் எல்லாவற்றையும் சுருக்கமாக முறைப்படி கூறியிருக்கிறார்.

பிரஹ்மா முதலான தேவர்களும் முனிவர்களும் தேவதைகள், மனிதர்கள் மற்றுமுள்ள பதார்த்தங்கள் இவைகளை எப்படி எப்படிக் கூறியிருக்கிறார்களோ, அவ்விதமே அவைகள் எல்லாவற்றையும் கிரஹித்து மயன் இந்த நூலில் கூறியிருக்கிறார். இப்படி நிர்மாண விஷயங்களைக் கூறினார்.

<u>பிராஸாதம் என்றால் கோவில், அதை கூறும் பரியாய பெயர்:</u>

பிராஸாதம், சதனம், சத்மம், ஹர்மியம், தாம, நிகேதனம், மந்திரம், பவனம், வாசம், கேஹம், திவ்ய விமானம், ஆஸ்பதம், ஆஸ்ரயம், ஆதாரம், ஆதார பிரதி திக்ஷ்யம் (அளவு கொள்ளும் முறை)
(பூர்வமுன் காலத்தில் கூறும் அளவுகள்)

1 பரமாணுவானது கண்ணுக்குப் புலப்படாததாகும். 8 பரமாணு 1 த்ரஸ ரேணுவாகும். 8 த்ரஸரேணு 1 ரத ரேணுவாகும். 8 ரத ரேணு 1 வாலாக்ரமாகும். 8 வாலாக்ரமானது 1 லிக்ஷையாகும் 8 லிக்ஷையானது 1 யூகையாகும். எட்டு யூகையானது 1 யவையாகும். 8 யவையானது 1 அங்குலம்.

பசுக்கன்று வாலின் உச்சியில் இருக்கின்ற மயிரின் நுனியானது அதற்கு உவமையாகும்.

1:5:7

அந்த கேசாந்திரமானது ஸாயங்காலத்தில் காணப்படுவதாகும் என்று கூறப்பட்டிருக்கிறது.

ஏழு யவையின் விஸ்தாரமானது மத்யமாங்குலமாகும்.

விரல் ரேகை உச்சியானது 6 யவை விஸ்தாரம் உடையதாகும்.

நான்கு சம்பா நெல்லின் நீளமானது அதமாங்குல மானமாகும் என்று கூறப்பட்டிருக்கிறது.

ச்வேத சாலி (வெள்ளை சம்பா) மஹா சாலி (பெரு நெல்) ரக்த சாலி (செஞ்சம்பா, சிகப்பு ஒட்டான்) ஸௌகந்தி சாலி (நறுமணமுள்ள சம்பா) ஹேமசாலி (தங்கச் சம்பா) என்ற சம்பா நெல் ஐந்துவிதம்.

இவைகளில் சிகப்புச் சம்பா நெல்லின் நீளத்தையே அங்குல அளவுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். இவ்விதமாக மாத்ராங்குலமானது 6 விதம் கூறப்படுகிறது

சந்திரன் ஜீவன் சிவன் அம்சம் வியோம (ஆகாயம்) இவைகள் 1 அங்குலம் என்பதைக் கூறும் பதங்கள் ஆகும்.

அக்ஷி (கண்) பக்ஷம் (சிறகு அல்லது பக்கம்) அச்வனீ இந்தப் பதங்கள் 2 அங்குலம் கூறும் சொற்களாகும். காலம், அனலம் (அக்னி) ருத்ராக்ஷம் (சிவனுடைய கண்) சூலம், ஆலோகனம், [illegible] இவைகள் 3 அங்குலங்களைக் கூறும் சொற்களாகும்.

வேதம், அப்தி (ஸமுத்ரம்) யுகம், கோல்கம் இவைகள் நான்கு அங்குலத்தைக் குறிக்கும் சொற்களாகும். பாணம், பூதம், இந்திரியம் இவைகள் 5 அங்குலத்தைக் குறிக்கும் சொற்களாகும்.

குமாரர்கள், ஸமயம், ஸாரம், சார்ம்சம், ருது, கௌசிகம், இவை 6 அங்குலத்தைக் குறிக்கும் சொற்களாகும்.

பாதாளம், ருஷி, தாது, அம்போதி, உடுகீக், நகம், மாத்ருக்கள், லோகம், ஸ்மரம் (காமஸ்தானம்) இவைகள் 7 அங்குலங்களைக் கூறும் சொற்களாகும்.

ஹஸ்தி பர்வதம், நாகம், வசு, மூர்த்தி இவை 8 அங்குலத்தைக் குறிக்கும் சொற்களாம்.

சக்தி த்வாரம் க்ரஹம், ரந்த்ரம், நந்தாள் ரத்னம், மார்க்கம், கமனம் இந்தச் சொற்கள் 9 அங்குலத்தைக் குறிக்கும் சொற்களாம்.

நாடி காஷ்டா (திக்கு) பங்க்தி தர்மம் இவைகள் 10 அங்குலத்தைக் குறிக்கும் சொற்களாம்.

திரிஷடு, ருத்ரன் இவைகள் 11 அங்குலத்தைக் குறிக்கும்.

1:5:8

அப்தம்(ராசி) பாஸ்கரன், பானு, தாலம் இந்தப்பதங்கள் 12 அங்குலத்தைக் கூறும் சொற்களாகும்.

சந்திராதித்யம், சிவாம்ச (சந்திரனும் ஆதித்யர்களும் – ஆதித்யர்களும் அம்சமும் என்ற பொருள்) இவை 13 அங்குலத்தைக் குறிக்கும் சொற்களாகும்.

மனு என்பது 14, திதி என்பது 15 அங்குலத்தைக்குறிக்கும் சொற்கள்.

கலாமூர்த்தி, அவயம் இவ்விரண்டும் 16 அங்குலப்பதம்.

தசம் 10 விம்சதி 20 திரிம்சத் 30 சத்வாரிம்சத் பஞ்சாசத் 50 ஷஷ்டி 60 ஸப்ததி 70 அசிதி 80 நவதி 90 சதம் 100 இவைகள் 10 முதல் 100 வரையிலும் எண்களின் பெயராகும்.

ஏக 1, தசம்10, சதம் 100 சஹஸ்தம் 1000 ஆயுதம் 10,000 நியுதம் லக்ஷம், பிராயுதம் (பத்து லக்ஷம் கோடி 1,00,00,000, அற்புதம் (பத்து கோடி) பிருத (அப்ஜம் நூறு கோடி) கர்வடம் (ஆயிரம் கோடி) நிகவரம் (பதினாயிரம் கோடி) சங்கம்(லக்ஷங்கோடி) பத்மம் (பத்து லக்ஷங்கோடி) ஸமுத்திரம் (கோடியே கோடி) மத்யம் (பத்து கோடியே கோடி)அந்தரம் (நூறுகோடியே கோடி) அவத்யம் (ஆயிரம் கோடியே கோடி) பரம்(பதினாயிரம் கோடியே கோடி) பரார்தம் (லக்ஷம் கோடியே கோடி) இவைகள் ஒரு எண் முதல் பத்து பத்துப் பங்கு அதிகமான எண்களின் பெயராகும்.

மாத்திரையில் மத்தியமானது சிறந்ததாகும். ஸ்தம்பங்களுக்குப் பன்னிரண்டு அங்குலம் ஆகும்.

இருபத்து நான்கு அங்குலம் கிருஷ்ணம் என்னும் ஹஸ்தமாகும் (ஹஸ்தம்–முழம்)

சிரேஷ்டம் மத்தியம் அந்தரம் (உத்தமம் மத்தியம் அதமம்) இந்த அங்குலங்களி னாலே கற்பிக்கப்படும் ஹஸ்தமானது அவ்விதமாகக் கூறப்பட்டிருக்கிறது.

ஹஸ்தம் 4 கொண்டது 1 தண்டமாகும். அதனால் பூமிகளை அளக்க வேண்டும்.

| | |
|---|---|
| 25 அங்குலம் | பிராஜா பத்தி ஹஸ்தமாகும் |
| 26 அங்குலம் | தனுர்முஷ்டி |
| 27 அங்குலம் | தனுர்கிரஹம் |
| 28 அங்குலம் | பிராச்சியம் |
| 29 அங்குலம் | வைதேகம் |
| 30 அங்குலம் | வைபுல்யம் |
| 31 அங்குலம் | பிரகீரணம் |

1:5:9

இவை,

1. உறஸ்தம்

2. பிராஜா பத்யம்

3. தூர் முஉத்டி

4. தூர் பிரஉறம்

5. பிராச்சியம்

6. வைதகம்

7. வைபுல்யம்


8. பிரகீரணம்

என்ற 8 விதமாகக் கூறப்படுகிறது.

அது அதமம் மத்யமம் உத்தமம் என்ற பேதத்தில் 24 விதம். இவ்விதம் அளவு முறைகள் சொல்லப்படுகின்றன!

<u>நம் தேசமானது, நெல்விந்பூமி:</u>

நம் தேசத்தின் அளவையும் நெல்விளைந் தன்மையையும் கூறுகிறார்; உறிமயமலை, கன்னியாகுமரி, இவைகளின் மத்தியில் இருப்பது நம் தேசம் எனப்படும். இது சாஸ்பபர் கூறிஞர். பின்னல் வந்த சில்பரெத்தினம் என்ற (சில்பம்) சிற்பி உறிமயமலை முதல் கன்யாகுமரி வரை இருக்கும் இடம் பாரத தேசம் என்று கூறியிருக்கிறார்.




GUNA — GODS — TYPES OF TEMPLE
1 SATVIKA DESAM — BRAHMA — NAGARA
2 RAJASA DESAM — VISHNU — DRAVIDA
3 TAMASA DESAM — RUDRA — VESARA

1:5:11

மனிதர்களின் சரீரமானது வாத சரீரம், பித்த சரீரம், கப சரீரம் என்று பிரிப்பதைப் போல இந்தத் தேசமும் அந்தந்தப் பிரதேசங்களிலுள்ள குணங்களினால் 3 விதம்.

அவ்விதம் இந்த உலகம் முழுவதும் மூன்றுவித குணங்களை உடையதாகும்.

அவைகள் சாத்துவிக குணம், தாமஸ குணம், ராஜஸ குணம் என்று 3 குணங்கள் ஆகும்.

ஹிமயமலை விந்திய மலை, இவைகளின் மத்தியில் இருப்பது சாத்விக பூமி ஆகும்.

விந்தியம் முதல் கிருஷ்ணவேனி (கிருஷ்ண நதி) வரையுள்ள பூமியானது ராஜஸ பூமி ஆகும். கிருஷ்ணவேனி முதல் கன்னியாகுமரி வரையில் உள்ள பூதலமானது தாமஸ பூமி ஆகும்.


சாத்துவிக தேசத்தில் நாகரவிமானம் கூறப்பட்டிருக்கிறது.

தாமஸ தேசத்தில் வேஸர விமானத்தைக் கல்பிக்கவேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. ராஜஸ தேசத்தில் திராவிட விமானத்தைக் கல்பிக்க வேண்டும்.

சாத்வ தேசத்தில் நாகர ஹர்மியம், தாமஸ தேசத்தில் வேஸர ஹர்மியம், ராஜச தேசத்தில் திராவிட ஹர்மியம் என்று இவைகள் முறையே விசேஷித்துக் கூறப்பட்டிருக்கின்றன.

இவைகளுக்கு முறையே விஷ்ணு, மஹேச்வரன், பிரம்மா இவர்கள் அதி தேவதையானார்கள்.


## 1:5:12 பிராசாத வடிவங்கள்.
## (ஆதிய வடிவங்கள்)

(1) 


1. சதுரம்.

(2) 

2. நீண்ட சதுரம்
(தீர்க்க சதுரஸ்ரம்).


(3) 


8பட்டம்.

(4) 

+ விருத்தம்.

(5)  5. நீண்ட விருத்தம்

(6)  6. பெட்டம்

(7)  7. ஹஸ்தி ப்ருஷ்டம்

இதில் ஒவ்வொன்றும் அநேக வித மாகச் சொல்லப் படுகின்றது. இவ்வாறு பிராசாத வடிவங்களைப் பற்றிச் சில்ப சாஸ்திரம் கூறுகிறது.

1:5:14

(பிராசாதம்) கோயிலில் வரும் உப அங்கங்கள்.


உபபீடம். பாதி அதிஷ்டானம் என்ற உபபீடத்தையும் அதன் பாகங்களையும் கூறுகிறேன்.

द्विभागं पादुकोत्सेधं
द्विभागं पंकजोर्ध्वम्।
कम्पमेकेन कर्तव्यम्
एकेनान्तरितं भवेत्॥
द्विभागं प्रति तुंगं तु
एकेनैव तु वाजनम्।
अष्टांशं गलमानं तु
कम्पमेकेन कारयेत्॥
अब्जमेकेन कर्तव्यम्
कपोतोच्चं गुणांशकम्।
एकेनालिंगमेकेना-
-न्तरितं तु प्रकल्पयेत्॥
प्रतितुंगं द्विभागेन
वाजनं चैकभागकम्।
सप्तविंशति भागे तु
मानतः प्रति सुन्दरम्॥

(படம்-1. பார்க்க)

*உயரத்தை 27 பாகம் செய்து*

| | |
|---|---|
| பாதுகம் | 2 |
| பங்கஜம் | 2 |
| கம்பம் | 1 |
| அந்தரி | 1 |
| பிரதி | 2 |
| வாஜனம் | 1 |
| களம் | 8 |
| கம்பு | 1 |
| அப்ஜம் | 1 |
| கபோதம் | 3 |
| ஆலிங்கம் | 1 |
| அந்தரி | 1 |
| பிரதி | 2 |
| வாஜனம் | 1 |
| | 27 பாகம் |



1;5:16

உபபீடத்திற்கு மேல் வரும் அதிஷ்டானத்தில் பாதபந்த அதிஷ்டானத்தைக் கூறுகிறார்.

பத்மபந்த அதிஷ்டானம்

एकोनत्रिंशदंशान्तु तत्तोत्सेधं विभाजिते ।
उपानमेकभागेन ~~अब्जमानुच्चं युगांशकम्~~
अंभोरु मनलांशकम् ॥

कम्पोच्चमर्धभागेन
जगत्युच्चं युगांशकम् ।
अंबुजं त्वर्धभागेन
कुलमर्धांश मानतः ॥

अर्धांशं पद्मतुंगन्तु
युगांशं पट्ट मानकम् ।
पद्ममर्धांश मानेन
तत्समं कम्पमुच्यते ॥


अर्धांशेनतु कण्ठोच्चं
कम्पमर्धेन कारयेत् ।
पद्ममंशेन कर्तव्यं
पट्टिका सार्ध भागतः ।
अंबुजं सार्धभागेन
कम्प मंशेन कारयेत् ।
पुष्पपुष्कल नाख्यातं
पादबन्धन्तु भेदितम् ।

(படம்.2.பார்க்க)

## பாத பந்தபேதம் :

புஷ்ப புஷ்கள அதிஷ்டானம் மொத்தம் 19 பாகம்.

| | |
|---|---|
| உபானம் | 1 |
| பத்மம் | 3 |
| கம்பு | ½ |
| ஜெகதி | 4 |
| அம்புஜம் | ½ |
| களம் | ½ |
| பத்மம் | ½ |
| பட்டம் | 3 |
| பத்மம் | ½ |
| கம்பு | ½ |
| கண்டம் | 1½ |
| பத்மம் | ½ |
| கம்பு | ½ |
| பட்டிகை | 1½ |
| பத்மம் | ½ |
| கம்பு | ½ |
| | 19 பாகம் |



1:5:18

ஏகதல விமானம். சர்வ காமிகம்.

उत्तुंगे अष्टभागे तु

व्योमांशान्तु धरातलम्।

पादांशं पादयुग्मन्तु

शिलांशं प्रस्तरोदयम्॥

शिखरोच्चं गुणांशकम्


स्तूप्युत्सेधं तथैकांशं

एतत्स्यात् सार्वकामिकम्॥

உயரத்தை 8 பாகம் செய்து

| | |
|---|---|
| தராதலம் | 1 |
| பாதம் | 2 |
| மஞ்சம் | 1 |
| சிகரம் | 3 |
| ஸ்தூபி | 1 |
| | 8 பாகம் |


(படம் 3. பார்க்க)




ஒரு நிலை விமானம் [சர்வ காமிகம்]

உயரத்தை 40 பாகம் செய்து.


| | |
|---|---|
| அதிஷ்டானம் | 4 |
| ஸ்தம்பம் | 8 |
| மஞ்சம் | 4 |
| ஸ்தம்பம் | 7½ |
| பிரஸ்தரம் | 3 |
| வேதிகை | 2 |
| கழுத்து | 3 |
| சிகரம் | 7 |
| ஸ்தூபி | 1½ |
| | 40 பாகம் |




இரண்டு நிலை விமானம்
சார்வகாமிகம் (40பாகம்)

உயரத்தை 48 பாகம் செய்து.

| | |
|---|---|
| அதிஷ்டானம் | 4 |
| ஸ்தம்பம் (சரணம்) | 8 |
| மஞ்சம் | 4 |
| தலிபம் | 7½ |
| மஞ்சம் | 3½ |
| தலிபம் | 7 |
| பிரஸ்தரம் | 3 |
| வேதிகை | 1 |
| களம் | 2 |
| சிகரம் | 6 |
| ஸ்தூபி | 2 |
| | 48 பாகம் |



1:5:22

<u>இனி சிவலிங்க லக்ஷணத்தை விசேஷித்துக் கூறுகிறேன்!</u>

ஆக்கமும் அழிவுமாகிய ஸம்ஸாரமானது லயத்தை அடையும்பொழுது பூத ஜாலங்கள் யாவும் ஸ்ருஷ்டி காலத்தில் எவ்வாறு தோன்றினவோ அவ்வாறே லயத்தை அடைகின்றன. சிவலிங்கமானது அவைகளைப் படைக்கும் தன்மை வாய்ந்த தாகையால் அதற்கு <u>லிங்கம்</u> என்று பெயர்.

நிஷ்களமாயும் சாந்தமாயும் மனத்திற்கும் வாக்குக்கும் அப்பாற்பட்டதும் ஆத்மாவுக்கும் அப்பாற்பட்டதுமான அதுவே ஸம்ஸார சாகரத்தில் உழலும் ஸகல பூத ஜாலங்களுக்கும் முக்தியைக் கொடுக்கும் தன்மை வாய்ந்ததாம்.

அதுவே எல்லாவற்றிலும் வியாபித்து அவைகளுள் மறைந்து ஸகல உலகங்களுக்கும் நாயகனாக விளங்குகிறது. அதனிடமிருந்து ஸ்ருஷ்டி காலத்தில் சாந்தி தத்துவமுண்டாயிற்று.

அந்தச் சாந்தி தத்துவத்திலிருந்து சக்தி தத்துவம் தோன்றிற்று. அதிலிருந்து நாதம் தோன்றிற்று. நாதத்திலிருந்து பிந்து தோன்றிற்று. அந்த நாதமே ஸத் என்று கூறப்படுகிறது.

பிந்துவானது மனோன்மனி என்று கூறப்படுகிறது. அதிலிருந்து ஈசுவரன் தோன்றினான். ஈசுவரனிடமிருந்து மஹேஸ்வரன் தோன்றினான். மஹேஸ்வரனிடமிருந்து விஷ்ணு தத்துவமுண்டாயிற்று. (விஷ்ணு தோன்றினார்) விஷ்ணுவிடமிருந்து பிரஹ்மா உண்டானார். அந்தப் பிரஹ்மாவிடமிருந்து ) 3, 30, 300, 3000, என்று முறையே விசேஷித்து தேவர்களும் ருஷிகளும் தாநவர்களும், ரஸத்தின் வழியே உண்டாகும் பற்பல ஜீவராசிகளும் (அஸுரர்களும்) உண்டானார்கள். ஹே அந்தணனே! உலகத்தில் உற்பத்தியானது இவ்வாறு கூறப்பட்டுள்ளது. இவைகளில் முதலில் கூறப்பட்டுள்ள லிங்கம், சாந்தி, சக்தி என்ற 3 நிஷ்களங்களாகும். (உருவமற்றதும் விவரித்துக் கூற முடியாததுமாகும்). சிவமானது சகலம் எனப்படும். நாதம் பிந்து இரண்டும் மிச்ரம் எனப்படும். நாதமே லிங்க வடிவம் என்றும் பிந்துவே அதன் பீடம் என்றும் கூறப்பட்டிருக்கிறது. லிங்கமானது சிவரூபமாகும். பீடமானது சக்தி ரூபமாகும். லிங்கமும், பீடமும் சேர்ந்து ஒன்றாகவே இருப்பதால் நெருப்பும் உஷ்ணமும் சேர்ந்து ஒன்றாக இருப்பதுபோல சிவமும் சக்தியும் சேர்ந்து ஒன்றாகவே விளங்குகிறது.

ஸந்பாவமானது உலகத்தின் தீமைகளைப் போக்கி ஸகல பிராணிகளுக்கும் நன்மையைக் கொடுப்பதற்காகவும் தேவாதிகளான ஸகல ஜீவராசிகளும் நன்மையையடைவதற்காகவும் (அவர்கள்) 'தியானம்' 'பூஜை' முதலியவைகளைச் செய்யவேண்டியதற்காகவும் லிங்கம் யோநீ என்ற பாகுபாடுடன் விளங்கலாயிற்று.

தேவிகளான ஸகல ஜீவராசிகளும் தர்மம், அதர்மம், காமம், மோக்ஷம் என்ற (புருஷார்த்தங்கள்) எல்லாவற்றையும் அடையும் பொருட்டு லிங்க லக்ஷணத்தைக் கூறுகிறேன், என்கிறார் காஸ்யபர். ஆலயங்களில் விமானம் ஸ்தூலலிங்கம் எனவும் ஸதாசிவம் ஸூக்ஷ்மலிங்கம் எனவும் பலிபீடம் பத்ரலிங்கம் எனவும் கூறப்படும். விமான தரிசனமே பரமேசுவரனைத் தரிசனம் செய்த பலனைக் கொடுக்கும்.

स्थूल लिङ्गं विमानं स्यात् सूक्ष्मलिङ्गं सदाशिवः ।
बलि पीठं भद्रलिङ्गं लिङ्गं त्रिविधमुच्यते ॥

தூய விமானமுந் தூலமது ஆகுமால்
ஆய சதாசிவ மாருநற் சூக்குமம்
ஆய பலிபீடம் பத்ரலிங்கமாம்
ஆய அரநிலை ஆய்ந்து கொள்வார்கட்கே!

வர்ண உற்பத்தி:

சிவத்தைக் காட்டிலும் சிறந்தது வேறொன்றுமில்லை. அவ்வியக்தத்திலிருந்து சாந்தி தோன்றிற்று. சிவத்திலிருந்து சக்தி தோன்றிற்று. அதிலிருந்து நாதம் தோன்றிற்று. நாதத்திலிருந்து, ஆகாசமும், ஆகாசத்திலிருந்து வாயுவும் வாயுவிலிருந்து அக்னியும், அக்னியிலிருந்து ஜலமும், ஜலத்திலிருந்து பூமியும் தோன்றின. (வாயு முதலிய) பூதங்களிலிருந்து வர்ணங்கள் (நிறங்கள்) உண்டாயின.

இவ்விதம் வர்ணங்களைத் தயார் செய்வது முதல், பூசுவது வரை அழியாத வெள்ளத்தில் அழகாகச் செய்திருப்பதைப் பற்றியே வர்ண சம்ஸ்காரம் (நிற உற்பத்தி) பற்றி ஒரு சில அத்யாயங்கள் கூறப்பட்டிருக்கிறது.

பிரதிமா லக்ஷணம் முதல் ஒவ்வொரு
மூர்த்தியின் உடைய நிர்ணயம் செய்து
இவ்விதம் காஸ்யபர்முனிவர் அதில்
கல்யாண சுந்தர மூர்த்தி லக்ஷணத்தைக் கூறினார்.

கல்யாண சுந்தர மூர்த்தி லக்ஷணம்:

இப்பொழுது கல்யாண சுந்தர மூர்த்தியின் லக்ஷணத்தைக் கூறுகிறேன். இந்த மூர்த்திக்கு மத்திய சூத்திரமானது நெற்றியின் நடுவில் இடதுபாகம் இடது கண் போடி, இடது நாஸாபுடம் (இடது மூக்குத் துவாரத்தை ஒட்டிய இடம்)

நடுக்கழுத்து நாபி மத்யத்திற்கு வலது பக்கத்தில் 4 அல்லது 3 அங்குலத்திலுள்ள இடம் அன்றிய காலின் மணிக்கட்டின் மத்தியம் இந்த இடங்களில் விழவேண்டும். மத்ய சூத்திரத்திற்கும் அங்கங்களுக்கும் இடையில் உள்ள ஒதுக்கமும் நதமானமும் ஸம பங்க ஸ்தானத்திற்குக் கூறியது போலவேயாம்.

பரமேசுவரனுடைய இடது கால் அன்றியும் வலது கால் குஞ்சிதமாகவும் இருக்கவேண்டும். வலது பின் கை பூர்வ ஹஸ்தமானது கௌரிதேவியின் வலது கையைப் பிடித்திருக்கவேண்டும். பரஹஸ்தங்கள் இரண்டுகளில் வலதுகையில் மழுவும் இடது கையில் மானுமிருக்கவேண்டும்.

கல்யாண சுந்தரர் ஜடாமகுடம் தரித்து இருக்கவேண்டும். ஸகல ஆபரணங்களையும் தரித்திருக்கவேண்டும். ஸ்வாமியானவர் பவழம் போன்ற நிறம் உடையவரானார். ஸ்வாமியின் (வலது) பக்கத்தில் பயிர் பச்சை நிறமான மேனியுடன் பார்வதி தேவியானவள் இருக்கவேண்டும். தேவியின் அளவுகள் யாவும் முன்பு கூறியுள்ளதுபோலவே ஆகும். தேவியின் இடது கையில் நீலோத்பலம் இருக்கவேண்டும். வலது கையானது பரமேசுவரனாலே பிடிக்கப்பட்டிருக்கவேண்டும்.

அம்பாள் நாணத்துடனிருக்கவேண்டும். பார்வதி தேவி விவாஹத்திற்குரிய கோலத்துடன் ஸகல ஆபரணங்களையும் அணிந்திருக்கவேண்டும். உமா தேவியின் கையைப் பற்றி இருக்கும் பரமேசுவரனுடைய கையானது, உமா தேவியின் கடிபாகத்தைத் தொட்டிருக்கவேண்டும். (கையைப் பற்றி இருக்கும் கையானது இடுப்பு மட்டமாக இருக்கவேண்டும்)

பரமேசுவரனுடைய முன்பக்கத்தில் பிரம்ம தேவர் அக்னி குண்டத்தில் ஹோமம் செய்து கொண்டிருக்கவேண்டும். (ஹோமம் செய்து கொண்டு இருப்பதுபோல கல்பிக்கவேண்டும்)

பிரம்ஹாவின் உயரமானது பரமேசுவரனுடைய ஸ்தன மட்டமான அளவாகும். பிரம்ஹாவானவர் 4 முகங்களும் 4 கைகளுமுடையவராவர். ஸகல ஆபரணங்களையும் அணிந்திருக்கவேண்டும்.

பிரம்ஹாவின் பிரஹஸ்தங்களில் இடது கையில் கிண்டியும், வலது கையில் ஜெபமாலையும் இருக்கவேண்டும். பூர்வ ஹஸ்தங்களில் வலது கையில் ஸ்ருக்கும் இடது கையில் ஸ்ருவமும் இருக்கவேண்டும். (ஸ்ருக்கு சிறிய கரண்டி முட்டையைப் போல மரத்தினாலே செய்யப்பட்டது)

ஸ்ருவம் சுமார் 4.5 அங்குலம் அகல நீளத்துடன் சதுரமாகக் கரண்டி போலே மரத்தினாலே செய்யப்பட்டது. இவ்விரண்டும் ஹோமம் செய்வதற்குச் சாதனமானவைகள்.

1:5:25

பிரம்மதேவர் வடக்கு முகமாகப் பத்மபீடத்தில் உட்கார்ந்த வடிவமாக இருக்கவேண்டும்.

பார்வதியும் பரமேசுவரரும் கிழக்கு முகமாக இருக்கவேண்டும். பார்வதி தேவியார் பரமசிவனுக்கு வலது பக்கத்திலிருக்கவேண்டும்.

விஷ்ணுவானவர் அக்னி குண்டத்திற்கு வடபக்கத்திலிருக்கவேண்டும். அவருடைய உயரமானது பரமேஸ்வரருடைய நாபி மட்டமாக இருப்பது உத்தமம். ஸ்தனமட்டமாக இருப்பது அதமம்.

இவ்விரண்டு அளவுகளின் மத்தியத்திலுள்ள அளவை 8 பாகங்களாகச் செய்த விஷ்ணுவின் உயரமானது 9 விதம். மஹாவிஷ்ணுவின் உடலின் நிறமானது கருப்பு நிறமாகும். இவருடைய பரகரங்களில் சங்கும் சக்கரமும் இருக்கவேண்டும். இவர் பூர்வ ஹஸ்தங்களில் இடது கையில் தங்கக் கலசத்தை வைத்துக்கொண்டு வலது கையில் தாரையாக விழும் ஜலத்தோடு கூட கோத்திரம் சொல்லுவதற்கு இல்லாமல் அநாதியாகத் தோன்றிய "ஹே சம்போ ஹே பரமேஸ்வரா! ஆதி கோத்திரத்தில் உதித்த உமை என்னும் கௌரி தேவியை இப்பொழுது தங்களுக்குக் கன்னிகாதானம் செய்து கொடுக்கிறேன்" என்று சொல்லி பரமேசுவரருடைய வலது கையில் சுத்த தீர்த்தத்தை விட வேண்டும். (சுத்த தீர்த்தத்தை விடும் பாவனையில் மூர்த்தியானது கல்பிக்கவேண்டும்)

எட்டு திக்குகளின் அதிபர்கள், வித்யாதரர்கள், யக்ஷர்கள் முதலியவர்கள் மஹரிஷிகள், கந்தர்வர்கள், அப்ஸரஸ்ஸுக்கள் (ஸப்தமாதர்கள்), தேவர்கள் ஆகிய எல்லாரும் பக்தியுடன் மார்பில் கைகூப்பி வைத்துக்கொண்டு நிறைந்த மனத்துடன் கூடியவர்களாக பார்வதி பரமேசுவர விவாஹ வைபவத்தைப் பார்த்துக் கொண்டிருக்கவேண்டும். (பார்த்துக் கொண்டிருப்பது போலக் கல்பிக்கவேண்டும்.) இவ்விதமாகக் கல்யாணசுந்தரேச மூர்த்தியின் லக்ஷணமானது கூறப்பட்டிருக்கிறது. இந்தவித கல்பனையைக் காஸ்யபர் கண்டார். இதுவே கல்யாணசுந்தரமூர்த்தியாகும்.

நம்முடைய தேசத்தில் சிவபக்தியும் முருகபக்தியும் விஷ்ணு பக்தியும் வளருவதற்கு சிற்ப ஆகம சாஸ்திரங்கள் காரணமாக இருந்தாலுங்கூட முக்கியமாக நாயன்மார்களும் ஆழ்வார்களும் "ஈசுவரனைப் பார்த்து எம்மை அவன் புகழே நிறைந்திருக்க வேண்டும் என்று வேண்டினார்கள். அதனால் பக்தி வளர்ந்தது.

"ஞாலம் நின் புகழே மிக வேண்டும்" என்றும் "அரன் நாமமே சூழ்க" என்றும் பாடி இருக்கிறார்கள்.

1:5:26

"பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பலகோடி நூறாயிரம்"

என்று பகவானுடைய கீர்த்தி மேலும் மேலும் உலகத்தில் விளங்கவேண்டும். என்று பாடியிருக்கிறார்கள். ஆழ்வார் அவர்கள் பிரார்த்தித்துக் கொண்டு பாடியதால் அவர்களுடைய அனுக்கிரஹம் நமக்கு ஏற்பட்டிருக்கிறது. அதனால் தான் அக்காலத்தில் இருந்து "வாழையடி வாழையாக" அடியார்கள் திருக்கூட்டம் குறையாமல் வளர்ந்து வந்துகொண்டு இருக்கிறது. இந்த நாயன்மார்களும் ஆழ்வார்களுமே பக்தி வளருவதற்கு முக்கிய காரணம். அவர்கள் எல்லாரும் வாழவேண்டும் பகவான் உடைய கீர்த்தி எங்கும் பரவவேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

முக்கியமாகத் தென்னாட்டில், சமயத் தலைவர்களால் தேவாரம் பாடப் பெற்ற 274 தலங்களும், ஆழ்வார்களால் மங்களாசாஸனம் பெற்ற 108 திவ்யபதிகளும், திருப்புகழ் பெற்ற முருகன் கோயில்களும், பெயர் மட்டும் குறிக்கப் பெற்ற வைப்புத்தலங்களும், தலபுராணங்களைப் பெற்ற கோயில்களும் தனிப்பாடல்பெற்ற தலங்களும் அரசர்களால் அமைக்கப்பெற்ற அபிமானத்தலங்களும், பிற தலங்களும் அடங்கியுள்ளன.

தமிழ்நாட்டில் எங்கே பார்த்தாலும் கோயில்களும் தீர்த்தங்களும் சிவ சிவலிங்கங்களும் நிறைந்து, அடைந்தவர்க்கு அருள் வழங்கும் நிலையில் இருப்பதைத் திரிசிரபுரம், மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை பின்வரும் பாடலில் காட்டுகிறார்.

"நோக்கிய இடங்கள் எல்லாம் நல்லருள் தலங்களாகத்
தேக்கிய தீர்த்தமாகச் சிவலிங்கமூர்த்தியாக
ஆக்கிய தவத்தால் நாமும் அடைந்தவர்க்கறமென்றேத்தும்
பாக்கியமாக்கி மேம்பத முதல் தென்னாடு"

மனிதர்களேயல்லாமல் மனிதர்க்குக் கீழ்ப்பட்ட அறிவை உடையவர்களாகிய எறும்பு முதல் யானை ஈறாயுள்ள உயிர்களும் தனித்தனியே வழிபட்ட கோயில்களும் உள்ளன. யானை, பசு, எறும்பு, பாம்பு, ஈ, முயல், ... தவளை, நாரை, மயில், முதலியன வழிபட்ட தலங்கள் முறையே திருவானைக்கா, ஆவூர், ஆடுதுறை சீகாளத்தி, ஈங்கோய்மலை, திருப்பாதிரிப்புலியூர், திருவெறும்பூர், ஊற்றத்தூர் நாரையூர், மயிலாடுதுறை முதலியன.

1:5:27

சைவ சித்தாந்தத்தின் முப்பொருளாகிய பதி, பசு, பாசம் மூன்றையும் அறிவிக்கும் இடமாகவும் கோயில் விளங்குகிறது. சிவலிங்கமே, பதியாகவும், இடபம் பசுவாகவும், பலிபீடம் பாசமாகவும் அமைந்துள்ளன.

"ஆயபதி தான் அருட் சிவ லிங்க மாம்
ஆயபசுவும் அடல் ஏறென நிற்கும்
ஆய பலிபீட மாகும் நற் பாசமாம்
ஆய சுரநிலை ஆய்ந்து கொள்வார் கட்கே" (திருமந்திரம்)

இவ்வாறே புறத்தே கோயில் கொண்டு விளங்கும் பெருமான் பக்தியுடன் வழிபடும் அடியார்களின் உள்ளத்தையும், பெருங்கோயிலாகக் கொண்டு அருள்செய்கிறான்.

"காலையும் மாலையும் கைதொழுவார் மனம் ஆலயமாகும்" (அப்பர்)

"உள்ளம் பெருங் கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே" (திருமந்திரம்)

அரிதில் பெறற்கருமையான மனிதப் பிறவியைப் பெற்றவர் அனைவரும், ஆன்றோர்கள் அமைத்த கோயில்களில் குடிகொண்ட பசுபதியான பரமனை அன்பினால் வழிபட்டு, அவன் வகுத்த நன்னெறியில் சென்று அருள்பெற முயலவேண்டும்.

உடம்பினைப் பெற்ற பயனதெல்லாம்
உடம்பினில் உத்தமனைக் காண்" (ஔவையார்)

"மானுடப் பிறவி தானும் வகுத்தது மனவாக்காயம்
ஆனிடத் தைந்தும் ஆடும் அரன் பணிக்காக அன்றோ!
வானிடத் தவரும் மண் மேல் வந்தரனை அர்ச்சிப்பர்
ஊனெடுத்துழலும் ஊமர் ஒன்றையும் உணரார் அந்தோ!
(சிவஞான சித்தியார்)

சரீரமே தேவாலயம் என்பதைக் கூறினார்கள். அதில் உள்ள பரம்பொருளைக் காண மனது ஒருமைப்படவேண்டும். ஞானிகள் கண்ட பரம்பொருள்தான் (கடவுள்) பிரகாசமான [illegible].

1:5:23

"கடவுள்" ஒருவர் உண்டு. கடவுள் அநேகரூபமாய் வணங்கப்படுகிறார். அவருக்கு ஆலயம் வேண்டுவது அவசியம், ஏன் என்றால் கடவுள் எங்கும் வியாபியாய் இருக்கிறபடியால், சுக துக்க ரூப அலைகள் நம்மை ஓர் நிலையில் இருந்து வழிபட ஒட்டாததினால் அதற்கு என்று ஒரு தனியிடம் அவசியம் வேண்டும். வேண்டுவதாலேயே பெரிய பெரிய மகான்களெல்லாம் கூடி ஆலயம் வேண்டியது அவசியம் என்று ஏற்படுத்தி அதற்குரிய சிற்ப சாஸ்திரங்களையும், பூஜைக்கான ஆகமங்களையும் ஏற்படுத்தி நித்ய நைவேத்யம், நித்ய பூஜைகள் நடந்து வரும்படி செய்யப்பட்டு நடந்து வருகின்றன என்பது எல்லாரும் அறிந்ததே. ஆலயம் என்பது ஆ + லயம் எல்லாம் ஒடுங்குமிடம். ஆலயம் பரிசுத்தமான இடம் என்பது பொருள்படும். மனதானது ஒருநிலை அடைவதற்கே ஆலயங்களை அமைத்தலானார்கள் என்று கூறி நாம் ஆலயங்களையும் சாஸ்திரங்களையும் பாதுகாக்கவேண்டும் என்று கூறி விடைபெறுகிறேன்.

***

<u>கோயிற் சிற்பம் — வாஸ்து சமயம்</u>

1:6:1

வை. கணபதி ஸ்தபதி
முதல்வர்
அரசினர் கட்டிடக்கலை மற்றும் சிற்பக்கலைக் கல்லூரி
மாமல்லபுரம்.

இந்திய சமயத் துறையில் — குறிப்பாகத் தமிழக சமயத்துறையில் இறை வழிபாட்டிற்கு இன்றியமையாதன — அடிப்படையான — இருவகைப்பட்ட பெருநூல்கள் தொன்றுதொட்டு இன்றுவரை வழக்கில் இருந்து வருகின்றன. ஒன்றை வாஸ்து நூல் என்றும், மற்றொன்றை ஆகம நூல் என்றும் சொல்லு- கின்றோம். அவை சமயத்துறையின் இரட்டைக் காப்பியங்களாக விளங்கு- கின்றன. செய்முறைகளை விளக்கிப் பேசிடும் 'செய் நூல்களாக வாய்த்- தமையால் அவை 'செந்நூல்கள்' என்றும் சொல்லப்படும். இரண்டு நூல்களையும் தந்திரம் என்ற சொல்லாலும் சுட்டிச் சொல்வதுண்டு. 'தந்திரம்' என்ற சொல்லுக்குச் செய்கை என்பதுதான் பொருள். அத்துடன் செந்நூல் என்ற சொல்லுக்கேற்ப அவை செம்மையான நூல்களாகவும் விளங்குகின்றன. மேலும் அந்நூல் செய்திகள் காலத்தால் இறந்துபடாமல் நிலையானதாகவும் ஆற்றல் மிகுந்தனவாகவும் திகழ்கின்றன. இவ்விரு நூல்களும் தோன்றியிராவிட்டால் செம்மையான — நிலையான — ஒளிமிகுந்த — சமயத் — துறையொன்று நம் நாட்டில் முகிழ்த்திருக்கவே இயலாது. வரலாற்றுக் காலத்தில் ஏற்பட்ட புறக் கருத்துக்களாலும், கருத்து விளக்கங்களாலும் அந்நூல்கள் புதுமெருகேறியும், விரிந்தும், ஓங்கியும் வளர்ந்துள்ளன. என்றாலும் அந்நூல்கள் தந்தமக்குரிய அடிப்படையை — மூலத்தை — மூலமரபை — பறிகொடுத்து விடவில்லை. அதனை உள்ளடக்கிக் காத்தே வந்திருக்கின்றன.

வஸ்து என்ற சொல்லானது பொருள் எனப்படும். இப்பொருள் மெய்ப்பொருளை இறைப்பொருளையே குறிப்பிடும். அதுவே முழுமுதற் பொருள் என்றும் சொல்லப்படும். இப்பொருள் தொடர்புடையன அனைத்தும் 'வாஸ்து' எனப்படும். வஸ்து சம்பந்தப்பட்டது வாஸ்துவாகும் என்பது மொழியிலக்கண விளக்கமாகும். எனவே வாஸ்து நூல் என்பதை மெய்ப்பொருள் நூல் என்று கூறலாம். <u>மெய்ப்பொருளே பல தெரிபொருள்களாகவும் செவிவழி — உணர்பொருளாகவும் உருமாற்றம் கொள்கின்றதென்பது வாஸ்துமரபின் அடிப்படைக் கொள்கை</u>. எனவே தெரிபொருள்களில் நிலமாகிய 'மண்' பொருளும் வஸ்துவென்றே

1:6:2

இம்மரபில் கொள்ளப்படுகிறது. எனவே நிலத்திலிருந்து தோற்றுவிக்கப்படும் கட்டிடங்கள் அனைத்தும் வாஸ்துவெனப்படுவதாயிற்று. ஆகமம் என்ற சொல்லானது 'வழிவழி வந்தது' என்ற பொருளைத்தரும். மரபு என்றும் கொள்ளப்படும். சிவனாரின் திருவாய்களிலிருந்து வெளிப்பட்டு உமையிடம் வந்திறங்கி, நெறியில் சிவனடியார்களின் மரபாகி, ஆகமமெனப்பட்டதென சிவாகமங்கள் விளக்கம் தரும்.

வாஸ்து நூல்களானவை குறிப்பாகக்கோயிற் கட்டிட அமைப்-பிலக்கணங்களையும் அக்கோயிற் கட்டிடத்தில் வைத்து வழிபடுவதற்கேற்றதான கடவுட் படிமங்களின் அமைப்பு இலக்கணங்களையும் விளக்கிப் பேசும் அடிப்படை நூல்களாகும். வாஸ்து நூல் வழிநின்று கட்டுவித்த கோயில்களையும், வடித்திட்ட படிமங்களையும் மரபு வழிப்பட்ட சடங்குகளின் வாயிலாக [illegible]ப்படுத்தியும் நிலைப்படுத்தியும் வழிபாட்டிற்கு உரியனவாக்கியும் தருவன ஆகம நூல்களாகும்.

இன்று கைவசமுள்ள வாஸ்து நூல்கள் அனைத்தும் பல்வகைப்பட்ட கோயிற் கட்டிட அமைப்புகள் பற்றியும், வெவ்வேறு வழிபடு படிமங்கள் பற்றியும் அவற்றைச் செய்தலுக்கேற்ற அளவு முறைகள் பற்றியும் விளக்கமுறச்சொல்லும் தொழில் நுட்ப நூல்களாகவே விளங்குகின்றன. ஆனால் உற்று நோக்கின், அவை கோயிலோடும் படிமத்தோடும் தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்ளாத ஒரு-பொறியியற் றுறைக்குரிய அடிப்படையும் விரிவும் கொண்ட விஞ்ஞான நூல்களாகவும் விளங்குவது தெரியவரும். எடுத்துக் காட்டாக, அவை கட்டிடம் நிறுவுதற்-கேற்ற நிலங்களின் குணநலன்கள் பற்றியும், மண்ணின் உறுதி பற்றியும், மனை இடத்தின் சூழல் பற்றியும், தொழில் நுணுக்கத்தோடு பேசிடும். மேலும் கோயிற் கட்டிடங்களைவிடுத்து மக்கள் குடியிருப்பதற்கேற்ற மனைக் கட்டிடங்கள் பற்றியும்; அரண்மனை, பொதுமன்றம், கோட்டை, கொத்தளம் ஆகிய அமைப்புகள் பற்றியும்; அவற்றிற்கெல்லாம் மேலாக, மேற்சொன்ன அத்தனை அமைப்புகளையும் உள்ளடக்கிக் கொள்ளும் கிராமம், நகரம், பட்டணம் ஆகியவற்றின் அமைப்பிலக்கணங்கள் பற்றியும் வாஸ்து நூல்கள் மிகத் தெளிவாகப் பேசுகின்றன. கிராம-நகர-பட்டணங்களைப் பற்றிய அமைப்பிலக்கணமே முதல்-முதலில் தமிழகத்தில்தான் தோன்றியது என்றுகூட இக்கால ஆய்வாளர்கள் கூறுவார்கள். தொல் இலக்கியங்கள் கூறும் கூடலூர் என்ற கபாடபுரம், துவாரகை, இந்திரப்-பிரஸ்தம், மொகஞ்சதரோ, ஹரப்பா, காஞ்சிபுரம், பூம்புகார் ஆகிய பழைய நகரங்கள் மட்டுமல்லாது இன்றளவும் பாரத நாட்டில் காணப்படும் அத்தனை நாடு நகரங்களும் இந்த வாஸ்து நூல் இலக்கண வழிப்பட்ட அமைப்புகளேயாகும்.

வாஸ்து மரபானது தொடக்கத்தில் - தொல் பழங்காலத்தில் -

தமிழகத்தில் தோன்றி, வடக்கு நோக்கிச் சென்று பாரதம் முழுவதும் விரிந்து பரவி நின்றதும் உயிரோட்டமுள்ளதும் ஒரு தொன்மை மரபு ஆகும். எனவே வாஸ்து மரபு ஒரு தேசிய மரபு எனில் மிகையன்று. இம்மரபை ஒரு தமிழ்மாமன்னர் தோற்றுவித்துக் கொண்டு பாரதம் முழுவதும் எடுத்துச் சென்று, பரப்பி, பாரத நாட்டையே தமிழ் நாடாக மாற்றிக் கொண்டுவிட்டார் என்று சொன்னால்கூட மிகையாகாது. பாரதநாட்டில் வெவ்வேறு மாநிலங்களில் வாஸ்து மரபை ஒழுகி வருபவர்கள் - ஸ்தபதியாயினும் சிற்பிகள் - அன்றும் இன்றும் ஒரே நிலைப்பட்டவர்-களாகவே இருந்து வருகிறார்கள். இவர்கள் வளர்த்துவிட்ட கலையால் - கலாச்சாரத்தால்தானோ இப்பாரதநாடு ஒன்றுபட்ட நாடாக இன்றும் விளங்கு-கிறது? அம்மரபு வழிப்பட்ட சமய உணர்வுகளும், சமய ஒழுக்கங்களும், சமயச் சார்புடைய தெய்வத் திருவுருவங்களும் ஒன்றுபட்டு மிளிர்கின்றன. பண்டைக் கலைச் சின்னங்களை உற்றாய்வோர்க்கு இது புலனாகுமன்றோ! இது போன்ற உண்மையையும் கருத்தையும் வலியுறுத்திக் காட்டிடவே பாரதநாடு முழுவதும் தொன்று பழங்காலத்தில் தோன்றிட்ட சிவாலயங்களை ஒன்று திரட்டி 12 ஜோதிர்லிங்கங்களைக் கொண்ட நாடு பாரதநாடு-என்ற சொல்லும் வழக்கொன்று நிலைத்துவிட்டதெனக் கூறலாம். அம்மரபு அங்ஙனம் நிலைத்துவிட்ட உண்மையை நடைமுறையில் இருந்திட அந்தவகைய ஜோதிர் லிங்கத் தலங்களை தென்னகமக்களும் வடபுல மக்களும் அவரவர் நேரடியாகச் சென்று, பார்த்து, மகிழ்ந்து, வழிபடத் தலயாத்திரைகள் மேற்கொள்ளப்படும் மரபு ஒன்றும் சமய உலகில் தோன்றலாயிற்று. வாஸ்து மரபினால் பாரதம் ஒன்றுபட்டு விளங்குகிறது என்ற கருத்தை எதிர்வரும் பகுதிகளில் மேலும் விளக்கிடக் காணலாம்.

வாஸ்து நூல்கள் மேற்குறிப்பிட்ட நாடு நகரங்களின் அமைப்பு-களோடு மட்டும் நம்மைச் சுருக்கிக் கொள்ளாது, மக்கள் தம் அன்றாட வாழ்க்கைக்கேற்ற மரத்தாலான பொருள்களையும், உலோகத்தாலான பொருள்களையும் அவற்றை வழங்குவதற்கேற்ற செய்முறைகளையும் உள்ளடக்கியே இருக்கின்றன. மேலை நாட்டவரின் ஆட்சி இந்தியத் துணைக்கண்டத்தில் புகுந்து நிலைபெறத் தொடங்கிய சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்பு வரை, கிராம-நகர நிர்மாணங்கள், கட்டிட நிர்மாணங்கள், கோயிற் கட்டுமானங்கள், நீர்-நிலைகள், வருதிகள், குளங்கள், வீடுகள் நிறுவுதல், வாழ்க்கைச் சாதனங்-கள், அணிகலன்கள், ஊர்திகள், போர்க்கருவிகள் செய்தல் ஆகிய அனைத்தையும் இந்த வாஸ்து மரபே நமக்குக் கொடுத்து வந்திருக்கிறது. நமது தமிழ் மன்னர்கள் கடல் கடந்து சென்று பல நாடுகளை வென்றுவந்த செய்திகளைக்

கல்வெட்டு மற்றும் செப்பேடுகள் வாயிலாகவும் இலக்கியங்கள் வாயிலாகவும் பார்த்தால் பெருமை கொள்கிறோம். இத்தகைய படையெடுப்புகளை வெற்றிகரமாக நிகழ்த்திட எத்தனை வீரர்களை அரசர்கள் கடல் கடந்து அழைத்துச் சென்றிருக்க வேண்டும்? அவர்களைச் சாதாரண கட்டுமரங்களிலா ஏற்றிச் சென்றிருப்பார்கள்? பெரிய பெரிய கப்பல்களிலல்லவா அவ்வீரர்களை ஏற்றிச் சென்று வந்திருக்க வேண்டும்? எனவே கப்பல் கட்டும் தொழிலும் வானூரால் வழிப்பட்டதாகவே பண்டை நாட்களில் இருந்திருக்கிறது. இக்-குறிப்பிற்கேற்ப மரக்கலக் கட்டுமானச் செய்திகள் இடம்பெறாவிடத்திருக்கின்றன. அதுமட்டுமல்ல விக்கலக்கட்டுமானச் செய்திகளும் கிடைத்துள்ளன. அவை இரண்டும் தமிழில் யாத்த அறிவியல் நூல் வகையினதாக இருக்கின்றன. வட-நாட்டிலிருந்து சீதையைத் தேடி வந்த இராமன் கால்நடையாகவே இலங்கை வரை சென்று, இராவணனை வென்று திரும்புங்காலில் இராமன், இலக்குவன், சீதை, அனுமன் ஆகியோர் இலங்கையிலிருந்து விமானத்திலேயே வந்தார்கள் என்று சொல்லும் ஓர் இலக்கியக் குறிப்பானது கவிஞரின் கற்பனையில் விளைந்-ததன்று அல்ல. அதுவொரு வரலாற்றுச் செய்தியே ஆகும். விக்கலத்தை ஓட்டியவன் வலவன் எனப் பெயர் பூண்டிருந்தான் என்ற இலக்கியக் குறிப்புக்-கேற்ப விக்கலம் பற்றிய அறிவியல் நூலிலும் அப்பெயர் காணப்படுகிறது.

ஒளிஒளி யாற்ற லாலே கதிரொளி இயக்கத் தாலே
வெளியுறும் விக்கு லத்தை விசையுற முடுக்கிக் கண்டேன்
வெளியுறும் விக்கு லத்தை விசையுற முடுக்கிக் கண்ட
வித்தகர் திறனை யெல்லாம் விக்கலச் செந்நூற் கூறும்
கலைநிலை யுணர்வே கண்டு கருதிய மதியி னாலே
நிலையறி வாற்ற லாலே நினைப்பினால் நெறியு கார்ந்த
கலையறி வலவன் ஓங்கே களிப்புறும் முறையே கண்டு
கலைபெறும் விக்கு லத்தை நீள்விசை முடுக்கிக் காப்பான்
நீள்விசை முடுக்கிக் காக்க கீழ்விசை முறை செலுத்தி
நீள்விசை முடுக்கிக் காவ மேல்விசை முடுக்கிக் கண்டு
நீள்விசை முடுக்கிக் காய இடைவிசை யேற்ற லாலே
நீள்விசைக் கதிரி யக்கம் நெறியுறக் கண்டு தேர்ந்த
கீழ்விசை முறைநிறுத்தி நத்தால் கிளர்விசை நிறுத்தி நத்தால்
கீழ்விசை நவியே கட்டி அரும்பெரும் முறையும் கண்டா

1:6:5

ஏற்றிசை நிலையும் கண்டு ஞாயிறைக் குறியாக் கண்டு
குற்றிசைத் தன்மை யாவே விண்கலம் கடந்த வாறே
வலவனும் ஒளியால் ஆய்ந்தா உள்ளும் நோக்கிக் கண்டு
நலமுற் வெளியில் ஆய்ந்த வெளிவழித் தொன்மை தேர்ந்த
ஒலமுற உருவும் ஆய்ந்த கூறுள் முறையும் கண்டு
நிலமுற ஆய்ந்த வண்ணம் நல்விலை நேரும் அற்றோ
திசைநிலை இயலை எல்லாம் விரிவுறக் கண்டு தேர்ந்த
விசைநிலை யாந்த வாலே மேவிய தன்மை ஆய்ந்த
விசைநிலைக் குறியே கண்டு விண்ணுலகம் இயல் புரிந்த
விசைநிலை யாந்த வாலே விண்கலம் கடந்த வாமே

— ஒளிநூல்

இத்தகைய பறக்கும் விண்கலம் ஒன்று அந்நாளில் தென்னாட்டில் இருந்ததென்ற வரலாற்றுக் குறிப்பாக இதனை ஏற்கலாம். விண்கலம், மரக்கலம், நாவாய், ஓடம் பற்றிய செய்முறைச் செய்திகளை வெகுவிரைவில் நூல்வடிவில் தமிழ் மக்கள் பார்த்து வியந்து மகிழவிருக்கிறார்கள். இதற்கிடையில் ஏற்கனவே சமஸ்கிருதத்தில் வைமானிகப்பிரகரணம் என்ற விமான அமைப்பிலக்கண நூல் ஒன்றும் அச்சேறி இருக்கிறது. அந்நூல் ஆய்வர்கள் கவனத்திற்கு இன்னும் வரவில்லை என்றே தெரிகிறது.

நவீன காலத்து விஞ்ஞானமும், தொழில் நுட்பத் துறையும் விரிவடைந்து ஒப்பற்ற காரணத்தால் தொன்றுதொட்டுவந்த நம் வாழ்க்கை நடைமுறையில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. வாஸ்து வழிநின்று செய்து வந்த அனைத்துப் பணிகளும் தடைபட்டுவிட்டன. வாஸ்து நூல்களில் திரட்டு கிடந்த பண்பட்ட செய்முறைகள் வழக்கொழிந்து போயின. இறுதியில் கோயிற் கட்டட இயலும், படிம அமைப்பியலும், எப்படியோ அழிந்துபடாமல் நிலைத்துவிட்டன. இந்த நிலையிற்றான் வாஸ்து நூல்களைப் பற்றிப் பேசவரும் சிற்பிகளும், ஆய்வர்களும், கோயிலையும், படிமத்தையும் ஒருசேரப் பேசிடும் நூலே வாஸ்து நூல் என்று சுருக்கிச் சொல்லிடும் நிலைக்கு அருகி வந்துவிட்டனர். நல்ல வேளையாக, தமிழ்நாடு அரசு இவ்வாஸ்து மரபு தழைப்பதற்கு மாமல்லபுரத்தில் ஒரு கலைக் கல்லூரியை ஏற்படுத்தி 30 ஆண்டுகளாக விசேட ஆதரவினை நல்கி, வாஸ்து-மரபின் புத்துணர்ச்சியையும் வளர்ச்சியையும் மகிழ்ச்சியையும், பொங்கிடச் செய்த அறிஞர்களும், ஆய்வர்களும் கூடிய இத்தகைய பேரவையில் சிற்பிகளையும்

1:6:6

பேசிடச் செய்ய வளர்ந்தும் விட்டிருக்கிறது. இப்பரந்த பாரத நாட்டிலே தமிழ்நாட்டில்தான் வாஸ்து மரபு மறுமலர்ச்சி பெற்றிருக்கிறது என்று சொன்னால் கூட மிகையன்று. அதோடுமல்ல. அப்போதும் இன்றும் இத் தென்னக மரபே பாரதநாடு முழுவதும் பரவி வருகிறது. மேலும் அன்று போல் இன்றும் கடல் கடந்து சென்று உலகம் முழுவதும் பரவி வருகிறது. பாரத நாட்டின் கலை மற்றும் சமய வரலாறு வீட்டுத் தெற்கிலிருந்து புறப்படுகிறதோ, என்று சொல்லவும் தோன்றுகிறது. இந்த இயற்கையும் ஏதோ செய்கிறது. இப்பரப்பிற்குரிய விதையும், அதோடு சேர்ந்த முறையும் தென்னகத்தில் அல்லவோ இன்றும் இருக்கிறது? இன்று தொழில் நுட்பவியலாக விளங்கிடும் வாஸ்து சாஸ்திரத்துக்கு அடிப்படையான அறிவியல் நுட்பம் அல்லவா இப்போது வந்து சேர்ந்திருக்கிறது? அந்த எல்லாம் எதைப் பற்றியும் இக்கட்டுரைப் போக்கில் சுட்டிப் பேசிடலாகிறது.

வாஸ்து நூல்களில் காட்டப்படும் கிராம நகர அமைப்பிலக்கணச் செய்திகளையும் அப்படியே மக்கள் வாழ் மனைக் கட்டிடங்கள் பற்றிய நுட்பங்களையும், அமைப்பு விதிகளையும், அளவை முறைகளையும், ஆய்ந்தறியத் தனியொரு ஆய்வு நிலையம் இந்நாட்டில் இன்னும் தோன்றிடவில்லை. இன்று நாம் வாழ்ந்து வரும் பெரும்பான்மையான பழைய வீடுகள், மடங்கள், கிராம நகரங்கள் ஆகிய அனைத்தும் வாஸ்து மரபைச் சார்ந்தனவேயாகும். கோயிற் கட்டிட அமைப்பில் காணப்படும் பொருளும், நுட்பங்களும் இவ்வீடுகளுக்கும் உண்டு. பழங்கால வீடமைப்புகள் ஏதோ மக்கள் தங்கி இளைப்பாறிச் செல்லும் தற்காலிக இருப்பிடங்கள் அல்ல. இயற்கையின் இயல்புகளை உணர்ந்து இயற்கையோடு இயற்கையாய்க் கலந்து நின்று, நலத்தையும் இன்பமும் அனுபவித்திடச் செய்யும் கட்டக நிலைக்களனாகவே வடிவமைக்கப்பட்டிருக்கின்றன.

இயற்கையின் புறச் செயல்களின் விளைவான காற்று, மழை, வெயில், குளிர் ஆகியவற்றை எதிர் கொள்ளவும், வேண்டுமட்டும் கட்டுப்படுத்திப் பயன் கொள்ளவும் செயற்கையான தடைகளை ஏற்படுத்திக் கட்டிடங்களை அமைத்துக் கொள்வதென்பது ஒரு வகை. இதனை அறிவியல் முறை எனலாம். ஆனால் இயற்கையின் உள்ளுணர்வுகளை உணர்ந்து, உட்செயல்களைப் புரிந்து கொண்டு அதற்கேற்ற வீடுமனைகளைக் கட்டிக் கொள்ளுதல் என்பது பிறிதொரு வகை. இதனை உளவியல் முறை எனலாம். அறிவியலும் உளவியலும் கலந்த முறையே வாஸ்துவியல் அல்லது வாஸ்து மரபு என்பது இங்கே வலியுறுத்திச் சொல்ல விரும்பலாகிறது.

இயற்கையின் உள் உணர்வுகளும் இயற்கையின் ஒரு கூறான நம்முடைய உள் உணர்வுகளும் ஒத்திருப்பின் அதனால் நமக்கு உயர்வான அல்லது விளைவு நலத்தையும் களியுணர்வுமேயாகும். வெவ்வேறான சூழ்நிலையில் பிறந்திட்ட

சுருங்கங்கள் ஒன்றுபட்டு விளங்கும் நிலையில், தனி ஒருவனுடைய பாட்டுணர்வு இன்ப உணர்வாக — அடிப்படியாக நெறிவடிவம் பெறவில்லையா? அதுபோலவே மேற்சொன்ன இயற்கையின் உணர்வுகளும் மனிதனின் உணர்வுகளும் ஒன்றுபட வேண்டும். உள்ளத்தில் உயர்வே ஆன்மாவெனில் இரு ஆன்மாக்கள் ஒன்றுபடுவதால் விளைந்திடும் இன்பத்தைத் துய்க்கச் செய்தலே வாஸ்து மரபின் நோக்கம் என்பது கருத்தாயில்லையா? இயற்கையின் உணர்வும் இருப்பிடமும் பிறப்பிடமும் வெளி ( SPACE ) என்றும் வீடு என்றும் வாஸ்து மரபு சொல்லும். அதேபோல் நம் அகமிடமே நம் உணர்வுகளின் இருப்பிடமாகும். 'அகமே' ஆகிய இடமே வட்டுப்பட்டு, உணர்வாய் முகிழ்ந்து, பல நிலைமாற்றங்கள் எய்தி இறுதியில் உருப்-பெற்ற இன்பச் சுவையைத் தருவதாய் அமைகிறது. இக் கருத்தை அடியாக வைத்து, நிலையில் இட்டு — மண் வெளியாக — நிலைக்களமாகக் கொண்டு அவ்வெளியால் உணர்வைத் தோற்றுவித்து, அவ்வுணர்வோடு நம் உணர்வுகளையும் சேர்த்து வைத்து, இன்பச் சுவையைத் துய்க்க வைத்தலே வாஸ்துமரபின் நோக்கமாகும். இதனையே வாஸ்து ரகசியம் என்றும் சிற்ப ரகசியம் என்றும் தொன்றுதொட்டு சிற்பிகள் சொல்லிவருகிறார்கள். இஃதொரு கடினமான செய்தி. எதிர்வரும் பகுதிகளில் இதன் விளக்கத்தைத் தெரிந்தபின் வாஸ்து ரகசியம் வெளிப்பட்டுவிடும். அதுவரை பொறுத்திருக்க வேண்டுகிறேன்.

எனவே இத்தகைய அரிய கருத்துக்களைக் கொண்டு எடுப்பித்த நாடு நகரங்களும், வீடு மனைகளும் ஒருகாலை குறைவற்ற இன்பம் தந்தும் இடமாகத் திகழ்ந்திருந்தன. மேலும், கால வெள்ளத்தால் நசிந்து உருக்குலைந்து போனாலும் அவற்றுக்கென ஆய்வுநிலையங்களைத் தோற்றுவித்து வாஸ்துமரபின் உட்பிரிவுகளை உற்று நிறுத்தி, அவற்றின் வெளிப்பாடுகளையும் அவ்வாறு விளைந்திட்ட அல்லது விளைந்திடும் நன்மை தீமைகளையும் பொறுப்புடன் கவனித்துக் கொண்டுவரின் பழைய வாஸ்துமரபினை மக்கள் மீண்டும் வரவேற்று ஆதரவு காட்டி, இன்பவாழ்க்கை துய்த்திட முடியும் என்பதை இத்தருணத்தில் சொல்லிவைத்தல் பொருந்துமெனத் தோன்றுகிறது.

இதற்குமாறாக, பலரால் உறுதி செய்யப்பட்ட செய்திகளையே திரும்பத் திரும்ப ஆய்வு செய்திடும் ஆராய்ச்சி நிலையங்கள் மென்மேலும் நம் நாட்டில் தோன்றிடத் தேவையில்லை. இவற்றின் ஆய்வுகள் மக்கள் நலனைப் பெருக்கிடும் நோக்கில் மக்களை வந்து அடையவில்லை. பழைய வரலாற்றுக்கே அவை செல்லுகின்றன. இதனால் பழம்பெருமையினை அறிவதோடே தவிர அதனை மீண்டும் துய்த்திட வழிவகை ஏற்படுத்தப்படாமல் சோர்வினை ஏற்படுத்துகிறது. 'ஆராய்ச்சிகள் ஆராய்ச்சிக்காகவே அல்லாமல்

ஆராய்ச்சிக் வாழ்க்கைக்காகவும்' என்ற கோட்பாடாக நம் ஆய்வின் நோக்கங்கள் மாறிட வேண்டும்.

வாய்மொழி மரபு பற்றி ஆய்வுக் `நிகழ்ச்சியைத்` மிகப்பெரும் அளவை எடுத்துரைக்கும் நிகழ்ச்சியில் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

வாய்மொழிப்பாடலை, சேர சோழ பாண்டிய மன்னர்களும், பல்லவ, விஜயநகர நாயக்க மன்னர்களும் ஆண்டிருந்த வரலாற்றுச் செய்திகளை நாடறியும். ஆனால் அவர்களுக்குப் பின் நம்மைப்பிடித்து ஆண்டோர் யாவர் என்ற கேள்விக்குப்பெரும்பாலோருக்கு விடை தெரியாதென்றே தோன்றுகிறது. காரணம் அவை பாளையப் பட்டயக் கோயிற் பட்டயங்களில் ஈடுபட்டு ஆதாரங்களோடு பதியாதிருக்கிறார்கள். எந்திசை திரும்பினாலும் கோயிற்பட்டயங்கள் நடப்பதாக ஒரு தோற்றம். செய்தித்தாள்கள் வழியாகவும் அத்தகைய தோற்றமே கிடைக்கிறது. ஆனால் இவையெல்லாம் உண்மையான வாய்மொழி மரபிற்கும் பண்பாட்டுச் சின்னங்களுக்கும் ஊக்கமும் ஆக்கமும் அளிக்காதா என்று கேட்டால், இல்லையென்றே சொல்லத் தோன்றுகிறது. நாட்டில் இப்போது பக்தி முகமூடித் தொட்டியில் அரசியல் பயிர்களே இக்கொள்கையின் நற்கொள்கையாக நடைபெற்றுவருகின்றன. அவை மரபையுணர்ந்து, மரபுவழி நின்று, செய்யப்படும் பணிகளாகத் தோன்றவில்லை. ஒரு காலக் கட்டத்திலிருந்து வேறொரு காலக்-கட்டத்திற்கு மாற்றம் கொள்ளும் இடைக்காலப் பணிகளாகவே தென்படுகின்றன. உரியனவாக—நிலையானவை—பணிகள் அவை அல்ல. உண்மையுணர்வோடு, நிஜமான பக்தி மேலீட்டால், பண்பாட்டு உணர்ச்சியால் ஏற்பட்ட பணிகள் அல்ல. இவற்றுக்கு மாறாகப் பெரும்பாலும் விளம்பரச் செயல்களாகவே காணப்படுகின்றன. அப்படியானால் இக்காலக் கட்டத்தில் இருக்கவும் ஏதும் போலிருக்கிறது. உண்மை உணர்வுகள் அடர்ந்து பெற்றபின் — நிலையானபின் — தோன்றிடும் செயல்களே மரபுக்குதவும் என்றே சொல்லத் தோன்றுகிறது. இந்தச் சூழ்நிலை-யில் இவ்விடத்தில் ஒன்றை நினைவுபடுத்த வேண்டியது கட்டுரையின் பெருங் கடமையாகிறது.

நாயக்க மன்னர் காலத்திற்குப் பிறகு இடைப்பட்ட சுமார் 200 ஆண்டுகள் யார் யார் ஆட்சிமரபாளர் யாருடைய அரவணைப்பில் ஒன்றியிருந்து வாழ்ந்தது என்பதை இன்றைய இளைஞர் சமுதாயம் தெரிந்து கொள்ள வேண்டியது இன்றியமையாததாகிறது. குறிப்பிடும் இடைக்காலத்தில் என்ன நிகழ்ந்தது என்பதை வரலாறு இன்னும் கண்டு கொள்ளவில்லை என்றே சொல்லத் தோன்று-கிறது. காரணம், அவர்கள் அவ்வக் காலக் கட்டத்திலிருந்து விடுபடவு-மில்லை, திருப்பிவிடப்படவுமில்லை. அதனை நிகழ்காலத்தோடு இணைத்துவிட்டு

1:3:9

எதிர்கால ஆய்வாளர்களுக்கென ஒதுக்கிவிட்டார்களோ, என்னவோ புரியவில்லை.

நாயக்க மன்னர்களுக்குப் பின் வந்த மறவர், செட்டிநாட்டு தலைவர்ப் பெருமக்களிடம் ஆட்சியும் புகலாயிற்று. நாடாண்ட மன்னர்களும் திருப்பணி புரிந்திட்ட செல்வநிலை வாய்க்கப்பெற்ற நிலக்கிழார் சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு கூட்டமே அமைந்தது. வரலாற்றில் நிலைத்து நிற்கின்ற அரும்பெரும் பணிகளைச் செய்திட்ட சமூகம் அது. சைவசமயத்தின்பால் ஆழ்ந்த உறுதியான சமயப்பற்றோடு, உண்மைப் பக்தியுணர்வோடு, ஒரும்ப நலனுக்கென்று உழைத்துச் சேர்த்திட்ட பொருளாதாரத்தைக் கொண்டு (வணிகம் செய்ததில்) நாடு அறிய அளவில் திட்டமிட்டு பலகோயில், தங்கம், வெள்ளி இரதங்கள், வாகனங்கள் பலவும் செய்து, வந்தது - அவை மரபினை நன்கு புரிந்திருந்து - படித்துக் கேட்டறிந்து - பட்டைப் பட்டயங்கள் சென்று பார்த்து; பலமுறை சிற்பிகளைக் கொண்டு ஆய்வுகள் நிகழ்த்தி, திட்டமிட்டுத் திட்டங்களைத் தீட்டி, வல்லுநருடன் செயல்படுத்தி, நாட்டு மக்களுக்கிடையே பெருமை கொண்ட முடிசூடா மன்னர் இவர்கள் அவர்கள் என்று இன்றும் நாடறியவில்லை. கோவில் கட்டுவதோடு நகரங்கள் கட்டுப்படுத்தில் கொண்டாடு, நாடாண்ட அரசர்கள் போல் பொது மக்கள் நலம்பேணும் அறங்கள், குளங்கள் பல தோண்டி கல்லால் முறைப்படி கட்டிக் கொடுத்தனர்; இன்றும் கூட. பள்ளிகள் அமைத்து கல்வியை வளர்த்திட்ட சமூகம். வேதாகமப் பாடசாலைகள் பல நிறுவி சமயக் கல்வியையும் போதிக்கச் செய்தவர்கள். ஆகம நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்து, அச்சேற்றி தமிழ் மக்கள் தம் சமய அறிவைப் பெருக்கியவர்கள். தமிழ் மொழி, தமிழ்ச் சமயம், தமிழ்க்கலை, தமிழிசை என கொள்கையொன்று வகுத்துக் கொண்டு தமிழ்ப் பண்பாடு காத்த தமிழ்ப் பெருங்குடியாகத் திகழ்ந்திட்ட செம்மையும் பெற்றவர்கள். தாம் வாழ்ந்திட்ட வீட்டுக் கட்டிடங்களையும் மரபுவழி நின்றே கட்டி, தம் வாழ்க்கையினைத் தமிழ்க் காட்டிய பெருங்குடி மக்களும் இவர்களே. இவ்வாறான மரபினை, ஆய்வு செய்திட விரும்பும் எதிர்கால ஆய்வுலகம் செட்டிநாட்டினரால் நிறைவுபட்ட இவ்வகை ஆய்வுக் கட்டுரையில் பல நோக்கங்களில் ஒன்றாகும். தொகையியல் அமைப்பர் 'பக்கனைக் கழகம்' என்ற போதுமானால், இவ்விடம் - இம்மரபு - உயிர்த்துடிப்பும் என்ன தெரிந்திருந்தாம், இடம் இருக்கிறது; காலமே தேவை. இக்கருத்துரங்களே எதிர்நோக்கும் காலத்தில் தொடக்கமாக இருக்கலாமே! மேதகு மேலவேந்தர் கவனிப்பார்களா.

இவை அப்படியிருக்க, ஆகம நூல்களில் கூறும் நிலைகளைப் பற்றியும், கோயில் கட்டிடம் மற்றும் வழிபாடு பற்றியும் ஆகியவற்றின் பிரதிநிதிகள்

வாஸ்துவியலானது தமிழ் ஒரு கொள்கையினை வகுத்துக் கொண்ட மிகப் பெரியதொரு மரபாகும். காலத்தை வென்ற நீடுநிலைத்துவிட்ட நல்லதொரு மரபுமாகும். கடவுளைப் போல் உயர்வுடையதான - சமயச் - சார்புடைய மரபாகும். அஃதொரு விஞ்ஞான - தொழில் நுட்பச் சார்புடையது; தொழில் நுட்பங்களையே வலியுறுத்துவது; அவைகளுக்கே முக்கியத்துவம் அளித்து நிற்பது; அவைகளே வடிவங்களுக்குக் காரணம் என்று கூறுவது; அவைகளாலே எல்லையில் எல்லையில் வெளிப்பாடு என வலியுறுத்துவது; அவ்வெளிப்பாடுகள் உயிரின் அலைகள் என்று கூறுவது; உயிரின் ஒளியெழுச்சி கண்டு சொல்வது. அவ்வெளியே வஸ்துவென்றும், வஸ்துப் பிரம்மம் என்றும், விஸ்வப் பிரம்மம் என்றும், விராட் விஸ்வப் பிரம்மம் என்றும் விரித்துப் பேசியது; இறைவனை உயிரிடமே உள்ளம் எனச் சொல்வது. உயர்ந்த நிலையாகக் கொண்டு அவ்விடமே முப்புரம் உயிர்வாக முகிழ்ந்த, அவ் உயிர்நிலையிலேயே உந்தப்பட்டு, உயிரின் ஒளி அலைகளையே அளவாகக் கணித்துக் கொண்டு, கலையெழில் நிலைக்கப்பட்டு, வெளிப்பட்ட நிலையில் உயர்வுறும் கோலங்களாக வரையுறுத்தித் தருவது. அவ்வகையே கோயில்களும், கோயில் கட்டிடங்கள் அமையும் மனை இடமும், கோயில் கட்டிடத்திற்குள் அமர்ந்த படிமமும் ஆகிய இயல்பினை உருவகித்திடும் திருக்கோலங்கள் அமைப்பதே வாஸ்துமரபின் முடிவு. அருவமான பிரம்மத்தினை - அருவமான வஸ்துவுக்கு - அவ்வப் பொருளுக்கு - உருக்-கொடுத்தது வாஸ்து மரபே. உருக் கொடுத்தது மட்டுமில்லாது பயன் மிக்க வழியாக செய்ததும் இம்மரபே. அருவமான ஒலியாலும் அசைவினாலும் வடிவம் பெற்ற அவ்விசை வடிவும் உருவெடுத்து உணர்வூட்டுவது உணர்ந்த சிற்பம் போல ஒளியும் வெளியும் சேர்ந்த இடமாகும், இட வடிவமாவதைக் கண்டு சொல்லும் மிக்க சாத்திரம் இம்மரபே என்பதை விளக்கமாக எடுத்துரைக்க இக்கட்டுரை முயற்சிக்கும்.

சைவமும் வைணவமும் தமிழ்நாட்டிலேயே தோன்றிய தொல்-பழஞ்சமயங்கள். அவற்றின் வழித்தோன்றல்களாக சாக்தம், காணாபத்யம், கௌமாரம், சௌரம் ஆகிய நான்கு சமயங்கள் சைவச் சார்புடையதாகவே இருப்பதினால்; சைவசமயத்தோடு ஒன்றிவிட்டன. என்றாலும், அவ்வகைச் சமயங்களுக்குச் சிற்பிகள் கட்டிக் கொடுத்த கோயில்களைத் தனித்தனியாக உற்று நோக்கினால், கோயில் கிடையமைப்பும் ( Lay out plan ) கட்டிட அமைப்பும் ( Structural Form ) ஒரே வகையினதாகக் காட்டிடும். இவ் ஒவ்வொரு சமயமும் தனக்கென ஒரு குறிப்பிட்ட

அமைப்பை ஏற்படுத்திச் சொல்லவேயில்லை. அதனைச் சொன்னால், வாஸ்து மரபு நான்கெனத் தொகுத்துக் கொண்ட சிறப்பு வாய்ந்த ஓர் அமைப்பையே அச்சமயங்கள் ஏற்றுக்கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு கோயிலும் அச்சமயத்தைச் சார்ந்த தெய்வ வடிவைக் கட்டுகொள்ள, அந்தச் சமயங்களுக்குள்ள சமயச் சின்னங்களையும், சமயச்சார் படிமங்களையும் பார்த்தே கொள்ள வேண்டிய-திருக்கிறது! கோயில் அமைப்பு முறை, பரிவார அமைப்பு முறை, அளவுமுறை எல்லாம் வாஸ்துமரபு வழிப்பட்டதேயாகும். அதுமட்டுமல்ல, அந்தந்தச் சமயத்-தைச் சார்ந்த படிமங்களை உருவாக்கக் கொள்கைத் திட்டம் உருவாக்கிக் கொடுத்ததும் வாஸ்து மரபேயாகும். அதனைச் சொன்னால், ஒவ்வொரு சமயத்திற்கும் தேவையான அமைந்தக் கட்டட அமைப்புகளையும், திருவுருவங்-களையும், விதிமுறைகளையும், பல நூற்றாண்டுகளாக வாஸ்து மரபே பூர்த்தி செய்து வந்திருக்கிறது. இதுவரை சொல்லியது அச் சமயங்கள் எல்லாம் கடவுளை நம்புபடும் சமயங்களாகும்.

இந்த வாஸ்து மரபானது, இன்னும் வேறு பல தேசியச் சமயங்-களுக்கும் பெருதவி செய்திருக்கிறது. கடவுளை நம்பிடாத பௌத்தம் சமணம் ஆகிய இருபெரும் சமயங்களுக்கும், தங்கள் தேவைக்கென வகுத்துக் கொள்ளப்பட்ட வாஸ்து வழிப்பட்ட கட்டடங்களையே உரித்தாக்கி இருக்கிறது. காஞ்சியில் இத்தொன்மைப்படிமங்களையும் கட்டடங்களையும் இன்றும் காணலாம்.

அது மட்டுமல்ல, வாஸ்து மரபைச் சேர்ந்த புத்த அமை-லக்கணங்களை முழுக்க முழுக்கப் பயன்படுத்தி உலகப் புகழ் வாய்ந்த புத்தர் படிமத்தையும், போதி சத்துவர் படிமத்தையும் இம்மரபே அளித்திருக்கிறது. அதேபோல் சமணத் தீர்த்தங்கரர் ஜைனதேவர்களின் படிமத்தையும், தீர்த்தங்கரர் படிமங்களையும் இவ்வாஸ்து நெறியே வகுத்துக் கொடுத்திருக்கிறது. இவ்வளவு ஏன் ஒவ்வொரு அமைப்பு எல்லாச் சமயங்களுக்கும் பொதுவென ஆகி-விட்டதால் சைவ கோயில்கள் சமணக் கோயில்களாகவும், சமணக் கோயில்-கள் சாக்கியக் கோயில்களாகவும், சைவக் கோயில்கள் வைணவக் கோயில்-களாகவும் வரலாற்றுக் காலத்தில் கைமாறிக் கொண்ட — பெயர்மாறிக் கொண்ட — செய்திகளையும் — படிமங்களையும் நம்நாட்டு வரலாற்று ஏடுகள் இன்றும் சுட்டிக்காட்டிக் கொண்டுதானிருக்கின்றன. எனவே, இவ்வேறுபாடுகள் எல்லாம் நடந்து ஓர் உண்மை வெளிப்படத் தோன்றும். அதாவது வாஸ்து மரபு என்பது ஏதோ வலுவான ஓர் அடிப்படையில் கிளர்ந்தெழுந்ததும், நாளை உருப்படுத்தமான தொல்பழம் மரபு அல்லது தலைசிறந்ததோர் மரபு என்பதே ஆகும்.

வாஸ்து மரபானது மதச்சார்புத் தன்மையிற் தோய்ந்த — உணர்வுபூர்வமான மரபு என்று சொல்லப்படும் போது, அதனை ஒரு நாஸ்திக மரபாகச் சொல்வதற்கும் கொள்வதற்கும் இடமில்லை. ஆஸ்திக மரபுகளுக்—கெல்லாம் பொதுமரபாக — தமிழகச் சமயப் பண்பாட்டின் ஆணிவேர் கூட — அந்த மரபாகவும் விளங்குகிறது. இம்மரபின்வழி ஒரேயொரு வழிபாட்டுமுறையும் தொடர்ச்சியாக நிலைத்தே வந்திருக்கிறது. இம்மரபில் கோயிற் கட்டிடமே வழிபடத்தகுந்த முதற் பொருளாகக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதன்பின்னரேதான் ஒளி வடிவம், உரு வடிவம் வழிபாடுகள் இம்மரபில் இடம்பெறலாயின. கட்டிடத்தை வழிபடும் பொருளாகக் கொண்ட இத்தொல் வழக்கு, பின்னாளைய அறுவகைச் சமயச் சடங்குகளில் நிலையாக இடம்பெற்றிருப்பதையும் காணலாம். கோயில் திருப்பணிகள் முடிந்த, குடமுழுக்குச் செய்வது முதலில் கட்டிடங்களுக்கேயன்றி, கட்டிடங்களில் வீற்றிருக்கும் கடவுட் படிமங்களுக்கல்லவே? உலகப்பெருஞ் சமய வழக்குகளில் எங்கும் காணாவொரு பெருவழக்காகும் என்றால் மிகையாகாது. இத்தகைய சமய வழிபாட்டு முறை அறுவகைச் சமயங்களுக்கும் பொதுவானதாகவே இன்றும் இருந்து வருகிறது. இவ்வழக்கு, வாஸ்து மரபைச் சார்ந்ததாகும். இவ்வழக்கின் தடயங்கள் வரலாற்றுக் காலத்திலும் இன்றும் சிறப்பிடம் பெற்று வருகின்றன. இவ்வழக்கின் தொடர்ச்சியையும் எதிர்வரும் பகுதியில் இக்கட்டுரை விளக்கிக் காட்டும்.

இத்தகைய வாஸ்துமரபின் அடிப்படைக் கொள்கைதான் என்ன? அக்கொள்கையின் விளக்கந்தான் என்ன? அக்கொள்கை வழிப்பட்ட வழிபாட்டுப் பொருள் மற்றும் முறைதான் என்ன? என்பவற்றை விளக்குவதே இக்கட்டுரையின் தலையாய நோக்கமாகும்.

ஒவ்வொரு சமயத்திற்கும் தலையாய பொருள் ஒன்றுண்டு. அப்—பொருளின் பெயரை வைத்தே அச்சமயம் அழைக்கப்படுகிறது. சிவனைத் தலைப் பொருளாக வைத்த சைவ சமயம் எனப்பட்டது. விஷ்ணுவை இறைப் பொருளாகக் கொண்டு வைணவ சமயம் எனப்பட்டது. புத்தரைத் தலைவனாகக் கொண்டு பௌத்த சமயம் எனப்பட்டது. இல்லையா? அதுபோல் கட்டிடத்தையே தலைப் பொருளாக — முழுமுதற் பொருளாகக் கொண்டு — கட்டிடத்தின் பெயராகிய கோயிலையே பெயராக வைத்த — கோயிற் சமயம் என்ற ஒரு சமயம் தமிழகத்தில் பண்டைக்காலத்தில் இருந்துள்ளது! அக் கோயிற் சமயமே வாஸ்து மரபு பெற்றுக் கொடுத்த சமயமாகும். இப்படிக் கோயிற் சமயம் என்ற ஒரு சமயம் இருக்கிறது என்பதைக் கேட்டதும் இக்—காலத்தவர் வியப்படையாமல் இருப்பதற்கில்லை. அறுவகைச் சமயங்களுட்

1;6:14

பற்றியும், அனாதி மடம், இன்பறம் என்ற பெயர்களையும் திருப்பத் திருப்பக் கேட்டுவரும் இக்கால இளைஞர்களுக்கும் பெரியோர்களுக்கும் இஃதொரு புதுமையாகத் தோன்றலாகவே தோன்றும். ஆனால் இக்கோயிற் சமயம் இவைகளைச் சுமந்துகொண்டு உயிர்ப் பெற்றிருக்கிறது; இன்றைய அடையாளம் இதுக்கிறது. மிகத் தொன்மையானவுமானது.

தென்னாட்டில் பல்வேறு சமயக் கோயில்கள் இருக்கின்றன. பதிவு பெற்ற கோயில்களே 30,000 என்பர் அறநிலையத் துறையினர். ஆனால் அத்தனை கோயில்கள் இருக்க, கோயில் என்றால் தில்லை நடராசனார் கோயிலையே குறிப்பிடும் என்றும் சொல்லுவர். இஃது அனைத்துச் சைவர்களுக்கும் தெரிந்த செய்தியேயாகும். இதுவே சிதம்பரம் கோயிலென்றும் சொல்லப்படுகிறது. அதுபோல் வைணவர்களுக்குக் கோயில் என்றால், திருவரங்கப் பெருமாள் கோயிலே கோயிலாகும். இவையிரண்டும் மற்ற கோயில்களுக்கு அப்பாற்பட்டு விளங்குவதோடு, ஆதிக்கோயில்களாகவும் மரபில் கொள்ளப்பட்டிருக்கின்றன. திருவரங்கக் கோயில் வழிபாட்டிலிருந்து வேறுபட்டதொரு ஆகம வழிபாட்டு முறை இங்கும் இருந்து வருகிறது. அங்குச் செயல்படும் ஆகமத்தின் பெயர் பாரமேசுவர சம்ஹிதை என்று சொல்லப்படும். மற்ற வைணவத் தலங்களுக்குப் பாஞ்சராத்திர வைகானச சம்ஹிதைகள் பல உள. பாரமேசுவர சம்ஹிதை அவற்றிலிருந்து வேறுபட்டதாகும்; தனிப்பட்டதுமாகும். தொடக்க காலத்தில் இத்தனித்தன்மை தனிப்பட்டதாக இருந்தது. ஆனால் வரலாற்றுக் காலத்தில் பல்வேறு மாற்றங்களுக்கும் விரிவுகளுக்கும் இஃது உட்பட்டுவிட்டதா என்றாலும் ஆகமத்தைப் பொறுத்தவரையில் அத் தனித்தன்மை, அன்று முதல் இன்று வரை ஓரளவு இருப்பதாகவே சொல்லிவிடலாம். வைணவர்களுக்குக் கோயில் திருவரங்கம் என்பதும், சைவர்களுக்குச் சிதம்பரம் என்பதும் இன்றும் நிலைத்துவிட்ட சமயக் கூற்றாகும்.

இக் கட்டுரையில் சிதம்பரத்தை விரித்துக் காட்டி, திருவரங்கத்தைச் சுட்டிக்காட்டி கோயிற் சமய வழக்கினை – கொள்கையினை – வழிபாட்டு நெறியினை – அதின் அளவில் படைத்திட முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

சிதம்பரம் கோயிலில் ஓர் இரகசியம் இருப்பதாக நீண்ட நெடுங்காலமாகச் சொல்லப்பட்டு வருகிறது. அந்த இரகசியம் என்ன என்பதை பலர் பலவாறாகப் பேசியும் எழுதியும் வந்திருக்கிறார்கள். வழிபாட்டு முறையினைப் பொறுத்தவரையில் அந்த நிகழ்வில வைதீக முறை என்று சொல்லப்பட்டு வருகிறது. இவற்றைப் பின்வியர்க் கூற்று இக்கோயிற் சமயத்தை ஒப்பிட்டுக்காட்டுவோம்.

சிதம்பரம் என்ற சொல் சிற்றம்பலம் என்ற சொல்லுக்கு நிகரான வடமொழிச் சொல் என்று கொண்டிருக்கிறோம். அம்பலம் என்ற சொல் அவையைக் குறிக்கும். அம்பரம் என்ற சொல் ஆகாசத்தைக் குறிக்கும். சித் என்ற சொல் மரியாதை அடைமொழியாகும். அவை தப்பரம் ஞானாகாசம் எப்பரம் இன்று மிகவும் சிறப்புடைய சொற்களாகும். இச் சொற்களிலேயே சிதம்பர ரகசியமே அடங்கியிருக்கிறது. பொதுவாக சிதம்பரம் கோயில் ஆகாசத் தத்துவம் பொருந்தியிருக்கிறது என்று சொல்லுவார்கள். ஆகவே வெற்றிடம் ( [illegible] ) ஒரு தத்துவம் பொருளாக இக்கோயிலில் விளங்கிவருகிறது. இவையெல்லாம் பழங்காலத்தில் தோன்றி இன்றுவரை நிலைத்துவிட்ட ஒப்பச் சொற்களாகும். இன்னும் சொல்லப்போனால் அவை சிற்பச் சொற்களாகும்.

சைவ சமய உலகத்தில் ஐந்துக் கோயில்கள் சிறப்பிடம் பெற்று விளங்குகின்றன. அவை பஞ்சபூதத்தலங்கள் என்று சொல்லப்படும். அக்கோயில் ஒவ்வொன்றிலும் லிங்கங்களே வழிபடு பொருளாக இடம்பெற்றிருக்கின்றன. திருவாரூரில் இருப்பது நிலத்தையும், திருவானைக்காவில் இருப்பது நீரையும், திருவண்ணாமலையில் இருப்பது தீயையும், திருக்காளத்தியில் இருப்பது வாயுவையும், திருச்சிற்றம்பலத்தில் (சிதம்பரம்) இருப்பது ஆகாசத்தையும் உருவகிப்பதாகக் கொள்ளப்பட்டிருக்கிறது. முதல் நான்கு கோயில்களில் சிவச்சின்னமாகிய லிங்கமே மூலஸ்தானத்தில் இருக்கின்றது. ஆனால் சிதம்பரத்தில் மட்டும் அத்தகைய அடையாளம் ஏதுமில்லை; கருவறைக்குள் இருப்பது வெற்றிடமே (ஆகாசமே). ஆனால் ஏதுமற்ற வெற்றிடமே இருக்கும் இந்தச் சிதம்பரம் கோயிலானது மற்ற நான்கு கோயில்களைக் காட்டிலும் முதலிடம் பெற்று விளங்குகிறது. முன்பு குறிப்பிட்டது போல சைவர்களுக்கு "கோயில் என்றால் அது சிதம்பரம் கோயிலே" என்ற புகழ் அக்கோயிலுக்கே நிலைத்துவிட்டது.

கோயிற் கட்டிட அமைப்பை மட்டும் உற்று நோக்கினால், முதல் நான்கு கோயில்களே — கல்லாலான — சிற்ப நுட்பம் செறிந்த — எழிலார்ந்த கலைக்கூடங்களாய்த் திகழ்கின்றன. ஆனால் சிதம்பரம் கோயில் கருவறைக் கட்டிடத்தின் அமைப்பானது எளிமையிலும் எளிமையான — மரத்தாலான — சுவர்களும், கைகளும் கூரையும் கொண்டிருக்கிறது. ஆனால் அக்கூரைக்கு ஒரேயொரு சிறப்பு மட்டுமுண்டு. கூரை பொற்தகடுகளால் வேயப் பெற்றிருக்கிறது: பொற்கூரையே பொன்னம்பலம் என்று சொல்லத்தக்கவாறு பொன்னாகாசமாக விளங்குகிறது." இருப்பினும் ஏழை எளி மக்கள் — குடியிருக்கும் குடிசையின் வடிவமைப்பே இங்கே கோயிற் கட்டிட அமைப்பாகவுள்ளது.

தஞ்சைப் பெருவுடையார் கோயிலைப் போல் வானளாவி நிற்கும் கற்-கோயில்களைக் கட்டுவித்த மாமன்னர்கள் தோன்றிய நற்றமிழ் நாட்டில் - கட்டிக் கொடுத்திடும் பேராற்றல் வாய்ந்த பெருந்தச்சர்களாம் கட்டிடக் கலை மேதைகள் எண்ணற்றோர் வாழ்ந்த நாட்டில் - இக்கோயிலை மட்டும் எளிமையின் சின்னமாகக் கட்டி வைப்பானேன்? இது இயல்பாக எவருக்கும் தோன்றிடும் கேள்வியாகும். கோயில் உயர்ந்ததாம் தத்துவம், அத்தத்துவத்தின் தொன்மையும் தத்துவப் பொருளின் எளிமையுமே இதற்குக் காரணம் என்று சொல்லத் தோன்றுகிறது. நல்ல வேளையாக, இக்கோயிலின் உள்ளிடம் வெற்றிடமாக இருப்பினும் ஓர் அரும்பொருள் 'கொட்டிட்ட கொள்ளிடமாக-விருப்பு' நிலைமையால் காப்பாற்றப்பட்டுவிட்டது! இங்கு மாற்றாக செல்வ-நிலையினோரும், அதிகாரம் பெற்றோரும் இக்கோயிலைப் புதுப்பிக்க முயன்றிருந்தால் அதன் உருமாறி, கருவுமாறி, ஆகாசத்தோடு ஆகாசமாகக் கலந்து போய்விட்டிருக்கும்! இக்கோயிலின் தனித்துவத்தைக் காப்பாற்றிட வரலாற்றுக் காலத்தில் தீக்ஷிதப் பெருமக்கள் செய்திட்ட தியாகங்களை எண்ணிப்பார்த்தால் உடல் நடுங்கும்; உள்ளமும் உருகிப் போய்விடும். அப்-பெரியோர்களின் தியாகத்தை -- உயிர்ப்பலியிட்ட -- இந்நேரத்தில் நன்றியுடன் நினைவு கூர்வோமாக. மேற்சொன்ன எளிமை ஒருபக்கமிருக்க மற்றொரு பக்கத்தில் மாபெரும் பெருமையொன்று அங்கே இருக்கிறது.

இன்று உலகப் பெருங்கலைஞர்களாலும், சமயப்பெரியோர்களாலும், அறிவறிஞர்களாலும், விஞ்ஞானிகளாலும் ஒருசேரப் புகழ்ந்து போற்றப்படும் ஒரேயொரு சிற்பம் யாதெனில் அஃது 'நடராஜா' என் தொன்மரபில் சொல்லப்பட்ட ஆனந்த தாண்டவ நடராசனின் செப்புத் திருமேனியேயாகும், அத்திருமேனியே பொன்னம்பலத்தில் சிற்சபையில் வைத்துப் பூசிக்கப்படுகிறது; வலப்பக்கத்தில் வெற்றிடம். இன்று உலக மாந்தர்கள் ஒருமிக்கச் சென்று, அவர்கள் உடனே பாவித்து வணங்குதற்குரிய பொற்புடை பெற்று விளங்கும் ஒரேயொரு திருக்கோலம் இருக்குமேயானால் - அங்ஙனமொன்று இருக்க முடியுமேயானால் அவ்வாடற்கோல 'சிவநடராசனே' என்று அறிஞர்கள் சொல்லுவர். அதற்கேற்ப ஆழமானவொரு விஞ்ஞானக் கருத்தும் மதச்சார்பற்ற ஒரு பொது நிலையும் இக்கோலத்திற்கு உண்டு. இந்த ஞாலம் முழுவதும் பரவி, ஞாலப் பொருள் அனைத்திலும் ஊடுருவி நின்று, அண்டங்கள் அனைத்தையும் இயக்கி நாமும் அவற்றோடு இணைந்தியங்கிடும் ஏதோவொரு பொருள் இருக்குமானால் - அதுவே பிரம்மம் என வேதங்கள் ஆகமங்கள் முழங்கிடுவது உண்மையானால் - அதுவே நம் கடவுட் கொள்கையெனப்படுமானால் - அவ்வுண்மை நம்கண்முன் எதிர்ப்படக்கூடுமானால் - அந்த உருவமே இந்த நடராசனின் திருக்கோலம்

என்று ஐயமின்றி நிறுவிடலாம். மேலும் அப்படியுள்ள உருவ நோக்கினால் அருவமான பிரமத்தில் உடன் நிகழ்ந்த உருவமானது, நிலையான உருவமே என்று [illegible] புலப்படும். ஆனால் இந்நாள் வரை இவ்வுண்மையை எவரும் வெளிப்படையாக — உறுதிப்படக் கூறியதில்லை; மேலைநாட்டோரும் இப்படியுள்ள உண்மையை உணர்ந்தவரில்லை. இதற்கு மாறான பிற்காலத் தமிழர் கருத்துக்களை ஏற்றுக்கொண்டு பொருள் காட்டிக் கற்பித்து வந்திருக்கிறார்கள். உரையாசிரியர்கள், வான்மரபில் நிலையாய் இடம்பெற்றது — உண்மை நிலையும் நீங்கும் நிலையில் காட்ட எவரோ முயற்சியை மேற்கொள்கிறார்..

அருவமான — கட்புலத்துக்கும் அறிவுக்கும் அகப்படாத — நிலையான — ஒப்பரிய ஆற்றல் பெற்றிட்ட — தூய்மையான — திட்பமுமான பிரமத்தின் இடவடிவே (Spatial Form ) அம்பலம் என்றும் — அவ்விடம் மேல் முறைவழி ஏற்படும் காலஅளவாலும் சிவத்தாலும் விளைந்த கலைவடிவே நடராசத் திருக்கோலம் என்றும் நெஞ்சுயர்த்தி நல் அவையார் சமய உலகிற்குச் சொல்லப் போகிறார்கள் என்பதை எதிர்நோக்கி இக்கட்டுரையும், இந்த வான்மரபும் இந்நேரத்தில் இயங்குகின்றன. இக்கட்டுரை சொல்லும் முறை நிரூபணம் — திருட்டமான — சொல்வருவது — இம்முயற்சி இந்த ஆயிரம் அறிஞர்களிடம் ஒப்புதல் பெற்றுவிடுமானால் தமிழ் சமயத்துறையில் ஏற்படும் மகிழ்ச்சியே பொங்கிவழியும் என்று இக்கட்டுரையாளரின் உள்ளம் முன்கூட்டியே சொல்லி வைக்கிறது. ஆகாசமாகவுள்ள உள்ளம் இடமேயாகி, அஃதே உளியாய் மலிந்த, ஒளியாய்த் திகழ்ந்த — ஒட்டாய்த் துலங்கி — அலையாய் விரிந்த, அளவாய், எல்லாய், காலக்கோடாய்த் திரிந்த — எல்லையாய்க் குவிந்த — எழிலுருவாய் மலர்ந்த — சிற்பியே சிற்பமாகி — செயல் உருவாய் — வெளிப்பட்ட திருவுருவாய் — வடிவு பொருளாய் — விளக்கி அருள்பாலிக்க வருவதே ஆடல்வல்லான் திருக்கோலமாகும். இதனைப் பெற்றிட்டபேறு சிதம்பரம் என்ற சிற்றம்பலத்திற்கல்லவோ வாய்த்திருக்கிறது? அப்பாவப் பொருளுக்கெல்லாம் மூலமாய் — முழுமுதலாய் விளங்குவது திருச்சிற்றம்பலம் அல்லவா? எனவே சைவர்களுக்கு "கோயில் என்றால் சிதம்பரம் பொன்னம்பலவாணரின் கோயிலே" என்ற மரபில் நிலைத்து விட்டிருப்பதில் வியப்பென்ன இருக்க முடியும்?

இத்தகைய ஆடல்வல்லான் திருக்கோலம் பெருமை பெற்றிருப்பினும், சிற்றம்பலமே — சிற்றம்பலமென்ற கோயிலே — கோயிற் கட்டிடமே — சிறப்புற்று விளங்குகிற உண்மையை மறந்திடல் கூடாது. கோயிலைக்குறித்தான

1:6:13

முயலகன்; பின்பு நடராசப்பெருமான். எனவேதான் [illegible] - அடியவர்கள் 'திருச்சிற்றம்பலம்', 'திருச்சிற்றம்பலம்' என்று [illegible] முப்பிலோ [illegible] காலத்தில் [illegible]. பல [illegible] பிற்காலத்தில் [illegible] போற்றப்படவே இல்லை. [illegible], [illegible] பெரியோர்கள் இம்முறை [illegible] தெரிகிறது. [illegible] 'திருச்சிற்றம்பலம்' [illegible]. வெகுகாலத்திலிருந்து முற்பட்டதைச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். [illegible] இராமச்சந்திரரிய தலைப்பாகும். [illegible] விட்டுவிடலாம்.

திருச்சிற்றம்பலக் கோயிலின் மற்றொரு புதுமையையும் ஒரு சிறு காட்டலாகிறது. இக்கோயில், கல்லாலான ஒரு மேடையின் மீது நிறுவப் பட்டிருக்கிறது. இம்மேடை மீது ஏறியே இக்கோயிலுக்குள் செல்ல வேண்டும். அம்பலம் செல்வதற்கு ஐந்து படிகள் இருக்கின்றன. அப்படிகளுக்குப் பஞ்சாட்சரப் படிகள் என்று பெயர். 'நமசிவாய' என்பது பஞ்சாட்சரமாகுமல்லவா? பண்டைய மரபில், அஃது ஐந்தெழுத்து எனப்பட்டது. அவ்வெழுத்துக்கள் அ, இ, உ, எ, ஒ ஆகும். இந்த ஐந்தெழுத்தைப் பற்றியும் அதன் தொன்மை பற்றியும் அதன் அறிவியல் நுட்பம் பற்றியும் பிறிதொரு இடத்தில் மீண்டும் குறிப்பிடுவோம்.

இக்கோயிலைத் தரிசிக்கவரும் அடியவர்களுக்கு நடராசரும், சிவகாமியும் காட்சி தருகிறார்கள்; தீப தரிசனமும் கிடைக்கிறது. அடுத்திருக்கும் வெற்றிடமான பகுதிக்குத் தீபம் எடுத்துச் செல்லப்பட்டு, அங்கு சுவர் மீது தொங்கவிடப்பட்டுள்ள வில்வமாலைக்கு அருகே மீண்டும் தீபம் காட்டப்படுகிறது. சிதம்பர தரிசனம் இத்தோடு முடிகிறது. இதனை நினைவுக்களமாக வைத்து, [illegible] மரபு சொல்லும் அறிவியல் உட்பொருளை ஆய்ந்து காண்போம். ஆகாசம் என்பது என்ன?

நம்மைச் சுற்றியும், நமக்கு மேலும் கீழும் இருப்பதும் வெற்றிடமாகத் தோன்றுவதும் ஆகாசமேயாகும். அவ்வாறே இரண்டு பொருள்களுக்கு இடைப்பட்ட இடைவெளியும் ஆகாசமேயாகும். இவ் ஆகாசமானது வெளியே மட்டும் இருப்பதல்ல: பானையொன்று இருக்குமானால், அப்பானைக்கு உள்ளும் பானைக்கு வெளியேயும் இவ் ஆகாசம் இருப்பதாகும். பானைக்குள்ளிருக்கும் ஆகாசத்தை கடாகாசம் என்றும் பானைக்கு வெளியே இருக்கும் ஆகாசத்தை மடாகாசம் என்றும் தத்துவ நூலோர் குறிப்பிடுவர். இதி

ஆகாசம் பானைக்குள் மட்டுமல்ல; ஒவ்வொரு பொருளுக்குள்ளும், அணுவுக்குள்ளும் நமக்குள்ளும் இருக்கிறது. நமக்குள்ளிருப்பது அந்தராகாசம் என்றும் சிதாகாசம் என்றும் தஹராகாசம் (இதயத்தின் உள்ளிடம்) என்றும் பல பெரியோர் மேலும் சொல்வர். அச்சொற்கள், ஆகாயம், நமது உள்ளான உள்வெளியையே ( inner space ) குறிப்பிடுகின்றன. தமிழ் மரபில், வெளியிலிருக்கும் ஆகாசத்தைப் புறவெளி என்றும், நமக்குள்ளிருக்கும் ஆகாசமானது அகவெளி என்றும் குறிக்கப்பெறுகின்றன. வெளி என்றால் விரிவு என்ற பொருள்படும். பெருவெளி, அகல் விசும்பு, வானம், அண்டம் அதன் நிகர்ச் சொற்களாகும்.

ஆகாசமானதென்றும் எங்கும் நீக்கமற நிறைந்த பொருள் என்று சுருக்கமாகச் சொல்லிவிடலாம்.

இத்தகைய ஆகாசத்தை நமது வேதங்கள் பல சொற்களைக் கொண்டு நமக்கு விளக்கிக் காட்டுகின்றன. அவற்றில் "ஆகாச சரீரம் பிரம்ம" என்பது மிக முக்கியமான சொற்றொடர் ஆகும். ஆகாசமானது பிரம்மத்தின் சரீரமாக விளங்குகிறதென்பதே அதன் பொருளாகும். ஆகாசமானது பிரம்மத்தின் சரீரம் என்றால், பிரம்மம் எனப்படுவது ஆகாசத்திற்கு உயிர்ப் பொருளாகிறதல்லவா? ஆம், நமது உடலுக்குள் உயிர் எப்படிப் பரவி இருக்கிறதோ, அதுபோல ஆகாசத்திற்குள் பிரம்மமானது உயிராய்ப் பரவி விளங்குகிறது என்பது பொருளாகும்.

இப்பொழுது ஆகாசமென்ற சொல்லை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும் நேரத்தில், மேற்சொன்ன 'வேதவாக்கியத்தால்' 'பிரம்மம்' என்ற சொல்லையும் ஆகாசம் என்ற சொல்லோடு ஆராயப்பட வேண்டிய ஒன்றாகச் சொல்லாகவும் வந்து சேர்ந்திருக்கிறது. ஆகவே இப்பொழுது நாம், 'ஆகாசம்', 'பிரம்மம்' என்ற சொற்கள் ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றன. இவ்-விரண்டுச் சொற்களும் உணர்த்தும் பொருளைப் புரிய வைத்திட முடியுமானால் அல்லது புரிந்துகொள்ள முடியுமானால் சிதம்பர ரகசியத்தை நாம் நன்கு புரிந்து கொண்டவர்களாவோம். இந்துக் கோயிற் சமயத்தையும், அதன் அறிவியல் தத்துவத்தையும், அதன் தொழில் நுட்பவியலையும், அதனால் விளைந்த இறை அனுபவத்தையும் (பிரம்மானுபவம்) அறியக் கூடியவர்களாவோம்.

இப்பொழுது, பிரம்மத்திற்கு உடம்பாக இருக்கக்கூடிய ஆகாசம் எப்படி இருக்கிறது? இதைப் பற்றி நூலாசிரியர்கள் என்ன சொல்கிறார்கள்? என்ற வினாக்கள் ஒரு பக்கம் இருக்க, நமது மரபானது ஆகாசம் பற்றி என்ன சொல்கிறது? எப்படிச் சொல்கிறது? என்பதைப் பார்ப்போம்.

1:6:20

ஆகாசமும் ஒளியணுக்களும்

ஆகாசம் என்ற விண் மிக மிக நுண்ணிய அணுக்களால் ஆனது என்பது வாசில மரபின் கொள்கை. அவ் அணுக்கு வாசில மரபில் பரமாணு என்ற பெயர். இந்த அணு கண்களால் பார்க்க இயலாத அளவில் மிக நுண்ணிய பொருளாகும். மேலும் இவ் அணு எப்பொழுதும் ஒளியை உமிழ்ந்த வண்ணம் [illegible]. ஆதலால் அது ஒளியணு என்று சொல்லப் படுகிறது. 'வாயுடல் ஒளியே யாகும்' என்பது ஓர் அறிவியல் சொற்றொடராகும். இந்த ஒளியணு தாமாகவே, உலகத்தில் காணப்படும் தெரிபொருளாக, அறிவுப்பொருளாக உருமாறுகின்றது என்றும் சொல்கிறது. வாசில மரபு கண்டு சொல்லிய இஃதொரு ஆர்வமான அறிவியல் செய்தியாகும். (Scientific Truth ).

அணுவியலும் எண்ணியலும்

எனவே, அணுவாய் இருந்து தாமாகவே உருவாய் வருவதால்; அதாவது திரிபுறுவதால் இப்பொருள் 'ஒளிக்கரு' என்ற சொல்லாலும் குறிப்பிடப்படுகிறது. ஆகாசத்திற்கு விண் எனும் தமிழ்ச் சொல்லை வைத்து, ஒளிக்கருவானது விண்கரு என்றும் சொல்லப்படுகிறது: அவ்வாறு வரும் தன்மையுடைய ஒவ்வொரு தனி அணுவும் ஒரே மாதிரியானவை. வெவ்வேறு தன்மைத்தானதோ அல்லது வெவ்வேறு அளவினதாகவோ இல்லை என்பதும் ஓர் அடிப்படை அறிவியல் [illegible]. இதனால் அப்பொருள்களின் வளர்ச்சியில் ஒரு கணக்கியல் அல்லது ஒருவகைத்தான சீலம் ( [illegible] ) அமைந்துள்ளதென்று வாசில மரபு கூறுகின்றது. இவ் உயிர்ப்புள்ள அணுக்கள் சேர்ந்த உருப்படுதலில் அடங்கிய அடிப்படைக் கணக்காகும். இதனால்தானோ ஓர் அடிப்படை எண்ணியலே ( Science of Numbers ) தோன்றியுள்ளதென வாசில மரபு கூறுகின்றது? இக் கணக்கு இல்லையேல் தோற்றப்பொருள்களில் சீலமும் அழகும் இயைகாட்சியும் தோன்றியிருக்கவே முடியாது என்பது வாசில மரபின் உறுதியான கோட்பாடாகும். மேலும் புள்ளி என்ற சொல்லாலும் அணு குறிப்பிடப்படுகிறது. மேலும் இஃதொரு மூலப் பொருளாகையால் — அனைத்துப் பொருள்கள் தோன்றுவதற்கும் ஒடுங்குவதற்கும் நடுவிடமாக விளங்குவதால் — 'மையம்' என்றும் பெயர்பெற்றது. எல்லாவற்றுக்கும் மேலாக, அச்செயல்கள் நடக்கும் இடமாக அமைந்திருப்பதால் 'இடம்' என்றும் அது வெற்றிடமாகத் தோன்றுவதால் 'வெளி' என்றும் சொல்லப்படுகிறது. இவ்வகை மரபில் அணு, பரமாணு, விண்அணு, ஒளியணு, ஒளிக்கரு, விண்கரு, புள்ளி, மையம்,

இடம், வெளி என்ற பல பெயர்களைக் கொண்டும் ஒரே [illegible] ஆக அறியப் படுகிற [illegible] ஆகாயம் என்று கொள்ளப்படுகிறது. வான்ற மரபார் 'இடம்' என்ற சொல்லை 'ஆகாயம்' என்ற சொல்லுக்கு நிகராக — ஒரு பொருள் சொல்லாக — [illegible] நிலையில் கொண்டிருக்கிறார்கள். [illegible] தெரிந்த 'இடம்' என்ற சொல்லாற்றால் வெவ்வேறு நிலையில் [illegible] வாழ்க்கையில் பயன்படுத்தி வருகிறோம். ஆயினும் உடமையாகிற்றும் நிலைகளெல்லாம். இந் தத்துவம் விரிவையும் காணலாம். இம் மொழியில் காட்சியாகும்.

[illegible] இடம்:

இவ் அணுக்கள் இரண்டு நிலைகளில் இருப்பதாக (Two [illegible] [illegible]) வான்ற மரபு சொல்லுகிறது. ஒன்று செயல்படுநிலை; மற்றொன்று செயல்படாநிலை. இதனை பக்குவிக்கப்பட்ட நிலை — பக்குவிக்கப்படாநிலை என்றும் சொல்லலாம். செயல்படுநிலையிற்றான் நம்முடைய விஞ்ஞானமும், விஞ்ஞானக் கருவிகளும் இந்த அணுக்களை பார்க்கின்றன. செயல்படுநிலையில் அவ் அணுக்கள் வட்டமாக அல்லது உருண்டையாகத் தெரிகின்றன. வான்றமரபும் அங்ஙனமே கருத்துக் கொண்டிருக்கும் அதே நேரத்தில், செயல்படாநிலையொன்றிருப்பதாகவுமின்று அவ் அணு அந்நிலையில் எவ்வடிவமாக இருக்கிறது என்றும் உறுதிபடச் சொல்லுகிறது. அந்த அணு சதுர வடிவமாம். இது மற்றுமொரு வியப்பிற்குரிய அறிவியல் அல்லது விஞ்ஞான உட்டமாகுமல்லவா? நவீன விஞ்ஞானத்திற்கு இன்னும் தெரிந்திராத உட்டம் என்று கூட இதனைச் சொல்லிவிடலாம். காரணம், புறப்பொருள்களையே ஆய்வது இன்றைய விஞ்ஞானம். அக ஆய்வுகளை அது கண்டதே இல்லை. 'புறம்' விரிந்து கொண்டே செல்வது; எந்தப்போது முடிகிறது என்பதைக் கண்டுபிடியாதது. ஆனால் விஞ்ஞானமானது 'அகம்' நோக்கிச் சென்றால் முடிவு விரைவில் கிட்டிடும். அகமும் புறமும் பகுக்கப்பட்டது நம் நாட்டிலேதான். அதனால் புறத்தையும் புறத்தாரை அகத்தையும் அறிந்த சொல்லது நம் மரபு தான். 'அகமறியாதார் புறமறியாரே' என்பது வான்ற மரபின் தோற்றம்.

மேலும் செயல்படாநிலையிலிருக்கும் சதுர அணுவைக் காட்பொருளாகக் காணும் போது ககசதுரமாகிறது. அச்சதுர அணுவைச் சதுரவடிவம் என்று சொல்லும் பொழுது, அவ்வணு அதிட்டமாக (சிறிதாக) இருந்தாலும் அல்லது திட்டமாக (பெரிதாக) இருந்தாலும், அஃதும் ஓர் இடந்தானே?

இதை அசையா வெளியாகவும் கொள்ளத் தோன்றுகிறதல்லவா? ஆம், இஃதொரு சால்பு. வெட்ட வெளி என்பது சர்வமரபு ஒப்புக்கொண்ட கொள்கை. அறிவியலில் இஃதொரு திட்டத் தெளிவாகும். இவ் 'வெளி' ஒளி உயிருள்ள வெளி; உயிர்க்கு ஏற்ற வெளி; உயிர்ப்பும் உயர்ச்சியும் மற்ற நிலைகளோடு கூடிய உயர்ச்சியில் பெருக்கமான வடிப்பில், தன்னைத்தானே நிலைத்த பொருளை, உருமாற்றிக் கொண்டு, வெளிப்பட்டு ஒளிப் பொரு-ளாகவும் ஒலிப் பொருளாகவும் ஆகிறது என்பது வான் மரபின் அறிவியல் கோட்பாடாகும். இவ்வகைத் தோற்றிய கட்டமைப்புப் பொருள்களாகும்: வெளியே இப்படித் தெரிபொருள்களாகவும் (ஒளிப்பொருள்கள்) உயிர்பொருள்-களாகவும் (ஒலிப்பொருள்கள்) திரிபுறுகிறது என்பதே வான்மரபின் முடிந்த முடிவாகும். இதைத்தான் Spatial Form என்றும் Manifestation என்றும், Transformation என்றும் அறிஞர்கள் குறிப்பிடுகிறார்கள். புதிய விஞ்ஞானமும் இக்கருத்தை ஏற்கும் நிலைக்கு வந்துள்ளது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

'வெளியை' வடிப்புறச் செய்வது உயர்ச்சிப் பெருக்கந்தான். என்றால், இத்தகைய - வடிப்புறும் தொடக்க நிலையைக் 'காலம்' என்ற சொல்லால் வான்மரபு குறிப்பிடுகிறது. உயர்ச்சியே காலத்தைத் தோற்றுவிக்கிறது. அதாவது உயர்ச்சியே காலமாகத் திரிபுறுகிறது. அதாவது உயர்ச்சியுள்ள வெளியே காலமாகிறது. வெளியென்பது உள்ளமெனப்-படுவதால், உள்ளமே காலமாகத் திரிபுறுகிறதென்பது தேற்றம். நமக்கு அடையாளந்தெரியாத காலம் நீங்கிய - காலம் கடந்த - காலமற்ற வெ-ளியாகும். இதை 'இடவுணர்வு' என்று வான்மரபு சொல்கிறது. அறிவியலில் Spatial Consciousness of Experience என்று சொல்லலாம். கண்ணுக்குத் தெரிந்திடும் தெரிபொருள்களைப் பார்த்தும்-பேசியும் பழகுவதற்குத் தெரிந்திடும் உயிர்பொருள்களைக் கேட்டிடும் போது நமக்கு அனுபவமாவதெல்லாம் இடவுணர்வே. அசைவற்ற வெளியே உணர்வாகிறது. அசைவற்ற வெளி வடிவாகிறது. Expansion of Space in Stillness வடிவமாகி உணர்வாகிறது. உள்ளத்தில் இத்தகைய பேராற்றலாக்கம் இசைய வடிவாகத் தோற்றுவித்திடும் மகத்தான ஆற்றல் நம்மிடம் காணப்படுவதாயினும். "உள்ளமே வெளியாகி உணர்வும் கோலமாகி" என்ற வான்மரபுப் பாடல் ஒன்றுண்டு.

எனவே உள்ளமாகிய (வெளியாகிய) மனம். அஃது எப்போதும் அசைவற்றதாகவே இருப்பது. இத்தகைய பெருக்கமடையும்போது காலம்

1;3;23
[illegible] அந்த உண்மையே காலத்தைத் தோற்றுவித்துக் கொண்டிறார்:
பிரம் 'காலமே' பிறகு உயிர்களும் முதலிய விசயமாய் - காலத்தையாகி -
அதைத்தையும் தோற்றுவிட்டாரிறார். இந்த படைப்பின் சிறு நிலை என்னும்
பாலன் நடைம் ( [illegible] ) வரையறுக்கப்படுகிறது
எட்டாம் உதரைநாக்கும்.

முதல் குறிப்பிட்ட உயிர்களின் பொருளாகிய ஒளியாய் உள்ள நிலை
நினைவு கூர்வோம். படைப்பிற்கு உள்ள இந்த செயலால் [illegible]. படைப்-
பின் தொடக்கத்தோடு [illegible] வெளிப்படுத்துகிறது. தொடக்கத்தில்
மறைபொருளாக இருந்து, அணுவுக்குள்ளிருந்து, பரம்பொருளாகத் திகழ்ந்த
நிலையில் அப்பொருளுக்குள்ளிருந்து, என்றும் ஒளியாய் நிற்கும் [illegible].
நிற்பவர் அப்பொருள்தான்: இப்பொழுதுதான் வெளிப்பட்டுள்ளார். வெளிப்பட்ட
அதனையும் காண்கிறான். இதில் யாதொரு ஐயமுமில்லை. அந்த ஒளி; அந்த
ஒளியால் விளைந்த ஒளிப்பொருள். ஒளி - பிரம்மம். அதுவே அன்றி
பிரம்மமாயிற்று.

இங்குப் பேசப்படும் கொள்கையினை உற்று நோக்குங்கள். படைப்பின்
[illegible] பிரபஞ்சத்தின் ரகசியம் புலப்படும். [illegible] மாபெரும்
அற்புதம்.

'ஒளி' என்ற சொல்லை சற்று உற்றுநோக்குவோம். 'உள்'
என்ற வினைச் சொல்லானது 'நினை' என்ற பொருளைத் தரும்: 'உள்ளுவ-
தெல்லாம் உயர்வுள்ளல்' என்ற சொற்றொடர் நாம் அறிந்த தொன்மை
மற்றும் வள்ளுவர் குறளாகும். 'நினைத்து' என்ற வினையெச்சத்திற்கு 'உள்ளி'
என்பதும் 'உன்னி' என்பதும் நிகர்ச் சொற்களாகும். இந்த 'உள்' என்ற
வினைச்சொல் 'உளர்' என்ற பொருளையும் தரும். ஆனால் 'உள்ளுதல்',
'உன்னுதல்' ஆகிய இரண்டு பெயர்ச்சொற்களும் ஒன்றே.

இந்த 'உள்' என்ற வினைச்சொல்லே 'ஒள்' என்று திரிந்து
'ஒள்ளி' என்ற வினையெச்சமாகி, பெயர்ச்சொல் நிலையில் 'ஒளி'யாயிற்று.

'ஒள்ளி' என்பது 'ஒளி'யானது போல 'உள்ளி' என்பது 'உளி'
என்ற பெயர்ச் சொல்லாக மாறுமல்லவா? ஒளியானது அணுவுக்குக்
காரணமாயிருப்பது போல 'உளி' யானது புற உருவுக்குக் காரணமாக
அமைகிறது! அதனால்தான் கல்லை மரத்தை மறைத்துச் செதுக்கிட உதவும்
கருவிக்கு 'உளி' என்றாயிற்று.

எந்த ஒன்றும் - கண்ணால் பார்த்திடும் காட்சியாயினும் சரி காதால் கேட்டிடும் காட்சியாயினும் சரி - உள்ளத்தில் உள்ளாகிடும் முன்னர் காட்சி ஒளிநிலை எய்திடச் செய்வதே உளவியல் மரபு ஆகும். ஒளிநிலை-யிலேயேதான் அறிவம் என்பது நிகழ்கிறது. இந்த அறிவம் நிறையும் நிலையே உள்ளம் எனப்படுகிறது. உள்ளத்தில் ஒரு புள்ளியிலாம் இந்த அறிவம் நிகழ்கிறது என்பது மற்றொரு கொள்கை. அப்புள்ளிதான் ஒளிப்புள்ளியம் - அதுவே ஒளியணு - அதுவே பரமாணு. அதுவே நேரம் - அதுவே சிற்றிடம் - அதுவே சிற்றலை. அதுவே சிற்றம்பலம். இவ்விடத்தில் உள்ளாவதே 'நேரறிவு' என முற்குறிப்பிடப்பட்டது. இத்தகைய நிகழ்ச்சி புறவிடமாகிய ஆகாயத்தில் நிகழ்கிறதென்பதும், அதே நிகழ்ச்சி அகவிடமாகிய சிதாகாசத்தில் நிகழ்கிறதென்பதும் சொல்லி அண்ட உள்ளத்திற்கும் பிண்ட உள்ளத்திற்கும் ஒரு சாம்யம் இருக்கிறதாக வாசிய மரபு நிறுவியிருக்கிறது. நம் உள்ளம் திரிபுற்ற பொருள்களை மாறுவது போல, பெருவெளியாகிய ஆகாசமும் திரிபுற்ற பொருள்களைப்பிடிக்கிறது. செயல் நிலையில் இரண்டும் ஒன்றே.

ஒளியும் ஒலியும்:

இந்த இடத்தில் நமக்குத் தெரிந்திருக்கும் ஒன்றை நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். இப் பிரபஞ்சத்தில் என்றும் நிறைந்து காணப்படும் பொருள் ஒன்றாயினும், வெளிப்பட்ட நிலையில் இரண்டு வகையினதாயிருக்கின்றன. அவற்றுள், கண்ணால் பார்த்தறியக்கூடிய பொருள்கள் ஒருவகையின. அவை தோற்பொருள் எனப்படும் (Visual Phenomena ). காதால் கேட்டறியக்கூடிய பொருள்கள் பிறிதொருவகை. அவை சொற்பொருள்கள் எனப்படும் (Audible Phenomena) பின்னையவை ஒலியால் விளைந்தவை. (அருந்திறள் ஒலியே எழுத்தொலிச் சிறப்பாம் - ஐந்திறம்., பொருளுறைந்த சாரமாம் மனுத்திவொலி - நன்னூல்) இதனை எல்லோரும் அறிவார்கள். ஆனால் முன்னையவை எதனால் விளைந்தன? இந்தொரு அறிவியல் அடிப்படையிற் றாக்கும் கேள்வி, இதற்கு வாசிய மரபு கூறும் விடையானது வருங்காலத்-திலும் மிகப்பெரிய வியப்பினைத் தோற்றுவித்திடும். "கண்ணால் பார்த்தறியும் பொருள்கள் (Visual Phenomena) அனைத்தும் ஒளியால் விளைந்தவை" என்பதே அவ்விடையாகும்! அவ்விரண்டு பொருள்களையும் முறையே ஒளிப்-பொருள்கள் என்றும், ஒலிப்பொருள்கள் என்றும் வாசிய மரபு பிரித்துச் சொல்கிறது. ஆனால் ஒளியால் உருப்படுவதும், ஒலியால் உருப்படுவதும் வெவ்வேறான பொருள்கள் அல்ல. இரண்டும் ஒரே பொருள். சொல்லும் சொல்லப்படும் பொருளும் ஒன்றே. ஆனால் பொருளில்லாமல் சொல்

இல்லையல்லவா? இசைந்தே, ஒலிப்பொருள் என்பதும் ஒளிப்பொருள் என்றழைக்கப்படலாம் தோற்றங்கள். மேலும் ஒலிப்பொருள் ஒளிப்பொருள் ஆகிய இரண்டும் ஒலி வடிவில் ஒலித்து, ஒரு புள்ளியில் ஒடுங்கி ஒருபொருளாக உள்ளத்தில் அடைவதாகிறது. உலகம் முற்றும் ஒலியாலேயே ஏற்படு- கிறது என்பது நூற்றுப். "ஒலியொளி யற்புத வடிவினர் முதல்" — திருமந்திரம் (82) ... ஒளி ... பொருள் ... அறிவு ... ஆகவேதான். அந்தச் சொல்லால் ஒலி பொருளும் (எழுத்தும் சொல்லும்) ஒன்றாக ... ஒலிப்பொருளே. ("ஒளியொலி வடிவாய் ஒன்றும் எழுந்தே" — திருமந்திரம் (16) ஒலிக்கு மூலமாக — ஒலி மூலமாக — இப்படி ஒளி நாதம்.

மூல ஒலி என்பது வேறு. சொல் வடிவில்லாத ஒலியானது (ஒலிச்சேர்க்கையானது) ஒருநிலையில் (...) எழுத்தொலி- யாகவிருந்து அதற்கும் மற்றிய நிலையில் அருவமான நேரொலியாக இருந்து வெளிவருகிறது. பாட்டுக்குச் சுருதி போல் அமைந்திட்ட இந்த நேரொலியே மூலவொலி எனப்படும். அவ்வொலியே சொற்களுக்கெல்லாம் அடிப்படை ஒலியான ஆதாரசுருதியாகும். மேலும் இந்த மூலவொலியும் படிப்படியாகச் சுருங்கிச் சென்று — உள்ளிழுக்கப்பட்டு — ஒரு புள்ளியில்தான் ஒடுங்குகிறது; ஒடுங்குமிடம் உள்ளம். இந்த நிகழ்ச்சியை மாற்றிச் சொல்லி விளக்கிடலாம். இதனால் உள்ளத்தில் ஒரு புள்ளியில் ஒடுக்கமுற்றுக் கிடந்த மூலவொலியானது உள்ளத்தில் மலர்ச்சியால் ... வரிந்தோடி இறுதியில் சொல் வடிவம் — பெறுகிறது. மேற்குறிப்பிட்ட ஒடுக்கம் நிலையே (... நிலையே) ஓம் நாத உருவம் ஓங்காரம் என்றும் மரபில் நம்மால் சொல்லப்பட்டு வருகிறது. இந்த ஓங்காரத்திற்கு ஓர் எல்லையான விளக்கந்தான அனுபவமாயிற்றா *சிற்றொலி ஓம்தட்டிவுடன் அந்த மூலவொலி எல்லெல்லா மாறுபாடுகளையுடைய எழுத்தாகிச் சொல்லாகிறதென்பது உலகியல் சார்ந்த அறிவியல் நுட்பமாகும். இங்கே ஓங்காரமென்ற பிரணவ தத்துவமாகும். இது மிக நுட்பமானதும் அறியப்படத்தக்க-தத்துவமும் ஆகும். இதனை விளக்கிடக் கேட்கும்போது மிகச் சுவையாகவுமிருக்கும், உடம்பும் சிலிர்க்கும். இதனைப் பிறிதொரு இடத்தில் விளக்கிக் காட்டுவோம்.

ஆகவே இப்பிரபஞ்சத்திலே அடிப்படையில் ஒளி, ஒலி ஆகிய இரண்டுதான் நிறைந்திருக்கின்றன. இவ்விரண்டில் ஒலியானது ஒளியில் ஒடுக்கும்;

* சிற்றலை — சிற்றொளி — சிற்றொலி — சிற்றலைக்கோல்.

எனவே எப்போதாயினும் ஒரே பொருள்தான். அதன் இயல்பாகும். அப்படிப் பொருள் தானும் ஒவ்வொரு பொருளிலும் அமைந்திருக்கிறது. இவ்வொளியைத் தான் உள்ளப் பொருள் உணர்வு ( Experience of Singleness ) என்பதும். ஆனால் இந்த ஒரே பொருள்தன்மையாக எண்ணப்படுகிறது. இந்நிலைமை இயல்பான உள்ளத்தில் நெட்டுநாள் (அகநிலையில், புறநிலையில்) உள்ள ஒரே பொருளே மயமாக்குகிறது. இவ்வோர் பொருட்போருள், உள்ளத்தில் உணர்வாகாத பொருளே இல்லை. உணர்வு வெளிப்படுத்தாதவொரு பொருளில்லை. உள்ளமாயுள்ளப் பொருள் ஒரு புள்ளியில் ஒடுங்கி உணர்வாகும். உணர்வாய் வெளிப்படுபொருள் எல்லாம் அப்புள்ளியிலிருந்தே ஒடுங்கியிருக்கிறது. எனவேதான் இந்த தத்துவம் — 'பொருள் — வடிவெல்லையுடைமை கொண்டு அறி விரிப்பட்ட அலையின வரிசையை என்னும் அப்போர்த்தளிற்ற மரபையாவற் மரபெனும் சொல்லி ஓர் உலகியல் — அறிவியல் — இறையியல் புதிய எல்லாம் இணைந்த மகத்தான ஒரு மரபையே தோற்றுவித்து நடத்தும் கொடுத்திருக்கிறது,

உள்ளத்தில் மறைந்திருந்த ஓர் உணர்வானது அல்லது எண்ணமானது எல்லாம் காதுகளால் கேட்டறியும் சொற்களாகவோ, அல்லது கண்களால் பார்த்தறியும் பொருளாகவோ வெளிப்படுகிறது என்பதை நாமும் நன்றும் உற்றறிய முடியாமல் மட்டுமில்லை. ஏற்கிறோம்; அதே நேரத்தில் பேசியுமிருக்கிறோம். ஆனால் அவ்வெண்ணம் மறைந்திருந்த நெஞ்சத்தும், சொல்லாய் பிறந்த நொடிக்கும் இடையில் என்ன நிகழ்ந்தது? எப்படி நிகழ்ந்தது? என்பதை நோக்காமல் உற்றுப்பார்த்தோமில்லை. அவ்வாறு நாம் பார்க்கவிட்டு நினைந்திருந்தால், நமது உள்ளம் அளப்பரிய பேராற்றல் செயல்படுகிறது என்பது தெரியவரும். அத்தகைய பேராற்றல் மனோசக்தி என்று குறிப்பிடுகிறோம். ஆனால் உள்ளம் செயல்படுகிறது — செயல்படுவதற்கான தேவை முடிகிறது — என்ற அடிப்படைக் கருத்து மட்டும் எமக்கும் எப்போதும் உண்டு.

இதே போல நமது உள்ளத்தில் மறைந்த ஓர் எண்ணமானது கண்களால் பார்த்தறியும் வடிவமாக அல்லது உருவமாக வெளிப்படுகிறது என்பதையும் அறிய முடிகிறது. ஆனால் எண்ணத்திற்கும் வடிவத்திற்கும் இடையே நடக்கும் நிகழ்ச்சிகள் யாதென ஆய்ந்தோமில்லை. அதை உற்றறிய உளவியல், அறிவியல், தொழிலியல் ஞானம் தேவைப்படுகின்றன. இம்மூன்றும் ஒருமிக்க வாய்க்கப் பெற்ற ஒருவரே இதற்கு விளக்கம் கொடுத்திட முடியும் அல்லவா?

இவ்வாறு ஆகாசம், உள்ளம், இடம், காலம், ஒளி, ஒலி ஆகிய சொற்களின் பொருளும் ஒரே சொல்லில் அடங்கியிருக்கும் அறிவியல் நுட்பங்களும் சுருக்கமாகவே சொல்லப்பட்டன. அந்தப் பிரிவினராக வந்த - அவர்களைப் படைப்புகளைக் கொண்ட - இப்படிப்பட்ட அறிவியல் நுட்பங்களை உணரும் அறிவியலார்.

நமது உள்ளமானது அமைதி நிலையில் இருப்பதையும் இயக்கமுள்ள நிலையில் இருப்பதையும் அன்றாட வாழ்க்கையில் நாம் அறிந்திருக்கிறோம். நமது உள்ளம் எப்பொழுது அமைதியாக இருக்கிறது? என்பதற்குக் கண்டறிவதற்கு ஒரு குறிப்புரை. நாம் ஒன்றை நினைக்காமல் இருப்போமானால் அப்போதே உள்ளம் அசைவறக் காலம் என்ற வழக்கு மரபு சொல்கிறது. "நெஞ்சமா நோக்கே அமைவுறும் பரம்" - என்றிடும். இந்த நிலையில், நமது உள்ளத்தில் படர்ந்த நீண்ட ஒளியணுக்கள் அல்லது விந்துக்கள் அமைதியாக இருக்கின்றன என்பது பொருள். அசைவுறும் நிலையில் நமது உள்ளமானது உள்ளவெட்டியதை உன்னி, அதனை மேலும் உன்னி, உள்ளத்தில் ஒரு விரிவை உண்டாக்குகிறது. இந்த விரிவுக்குத்தான் விந்து என்று பெயர். 'விந்தே விரிவே' என்பது நிகண்டு. அதாவது உள்ளத்தின் விரிவே விந்து எனப்படும். தன்னைத்தானே இயக்கிக் கொள்ளும் உள்ளமானது உன்னி, உன்னி உள்ளத்தில் முதலில் ஒளியைத் தோற்று- விக்கிறது. இங்ஙனம் தோன்றிய ஒளியானது வெளியோடு உராய்வதால் விண்ணில் அசைவு தோன்றும். அது அசைவால்-வளி தோன்றி மூலவொலி தோன்றிடும். பின் அதே சுழற்சியால் வலிவுறும் வளியினால் ஓசை தோன்றும். அவ் ஓசையே ஒலியாகச் சிறக்கும். இந்த ஒலியே உள்ளத்தின் கருத்து வெளிப்பாட்டால் ஒலி அலைகளைத் தோற்றுவிக்கிறது.

"வெளிஒளிந் தன்னால் மூலம் விரிநிலை யசைவு தோன்றும்
விரிநிலை யசைவு தன்னால் வளிஒலி மூலந் தோன்றும்
சுரிவளி மிசைவினாலே தங்கிலா ஓசை தோன்றும்
புரியோசை முறைமையாலே அசைவொலி சிறக்கின்றதோ"

"ஒலியிசை சிறந்த தோன்ற வெளிஒலி வகையே தோன்றும்
ஒலியோசை நிறை வதாலே விசையை வளர்ந் திகழும்
ஒலிநிலை மூல மோங்கி உலகத்தில் அலையுந் தோன்றும்
ஒலியலைத் தன்மைத் தாலே அலையொலி மூலம் தோன்றும்"

இந்த ஒலி அலைகள் அமைப்பில் ஒன்றையொன்று தொடர்புடைய ஒரே செயல்-நிலைகளாக - ஒரே வகை நிலைகளாய் - பிரித்தறிய முடியாதபடி - ஒட்டுமொத்தமாக - இசை நிலையில் உயிர் பெற்ற, ஒலியுருவாக - வடிவ-மாக - தோன்றும் பொழுது என்ற, [illegible] பொருள் ( [illegible] ) என்று வெளிப்பட்ட நிலையில் அதுவே ஆற்றலாகவும் - சொற்பொருளாக - [illegible] மறைபடு சொல்கிறோம். இவ் ஒலியானது தொடர்ச்சியில் ஒரு புள்ளியில் ஒலியோடு ஒலியாக ஒடுங்கி கிடக்கும் ஒருவகையாக ஒலியற்றதே - ஓசையற்ற ஒலி-யாகவே - இருக்கிறது. பேசும் பொழுது போலால், ஒலியும் ஒலியும் ஒன்றிய பேராற்றல் பொருளின் ஒலி ஆயவாக - ஆகாசமாகவே (ஆகாயம் உருவற்ற உருவமாகவே) - கிடந்திருக்கிறது. இந்த ஆகாசத்தை [illegible] (space in stillness) என்று சொல்லலாம்.

மரத்தில் தீ போல உறைந்து கிடக்கும் இவ்வாற்றலுக்குத்தான் உயிர்ப்பு என்ற பெயர்: இதனை potential energy என்று சொல்லலாம். ஒலி நிலையிற்றான் எல்லாம் உள்ளத்தில் அடங்குவதாகும். எங்ஙனமே சொல்லியபடி கண்ணால் பார்க்கப்படும் பொருளும், காதால் கேட்கப்படும் பொருள்-களும் அதனிலே 'ஒலிநிலையிற்றான் அடைவிக்கப்படுகின்றன என்பர் வாதிகள். மரபு சார்ந்த உலகியல் மரபின் தேற்றம். ஓசையற்ற, அசைவற்ற அந்த, அசைவு நிலையிற்றான் (Form felt - Experience in stillness) வானவெளியும் நிறைவாக மேவும் சொல்வோம். அப்போது உள்ளத்தில் அடைவிக்கப்பட்ட இடமே (Experience of space in consciousness of space) என்றும் சொல்வோம். ஆனால் அறிவுநிலையில், ஒலியுணர்ச்சி உயர்ந்த நிறைந்த நிலையில் ஒன்றின் படமாகக் காட்சி தருவது என்றும் அது இடமாக உணர்வாகிறது என்று சொல்வது (spatial consciousness ) ஓர் அறிவியல் சட்டமாகும். இங்கே உள்ளமாகிய நிறையில் காட்டுவது ஒலிப்-படமே. ஒலியற்ற படமே உணர்வாகிறது என்பது மற்றொரு வகையான விளக்க விளக்கம். இடவுணர்வு ( spatial consciousness ) என்பர் பெரியோர். உள்ளத்தில் உணர்வாவது இடமே என்பது முடிவு. இவ் இடம், தக்க வெட்டிடைச் சுவை [illegible] ஏற்படுகிறதென்பதே பொருளாகிறது. இவ் இடவுணர்வு உள்ளத்தில் எத்தகைய மாற்றின் அடிப்படையில் வடிவம் கொள்-கிறது என்பதைப் பிறிதொரு இடத்தில் சொல்வோம்.

எவ்வாறு உள்ளத்தில் ஒன்றைக் கருதிக்கொண்டாலும் [illegible] – அல்லக்-
கண்டில் – வருவது (சூரிய சந்திர சுழற்சியால்) உண்டாகவில்லையா?
பிரபஞ்சமே ஒரு கட்டில் கட்டுண்டு இயங்கிக் கொண்டிருக்கிறதே? இக்கட்டு-
ப்பாட்டால் பிரபஞ்சமே, என்றும் செல்ல வருகிறோம். [illegible] உள்ளே-
நோக்கிச் சென்ற பெரியோர், இந் வயத்தை [illegible]
[illegible] என்று குறிப்பிடுகிறார்கள். [illegible]
சொன்னார்களே தவிர கட்டளைச் சொல்லவில்லை. காலம் அந் கட்டளை
[illegible]விட்டது; மறைத்துவிட்டது. ஆனால் மீண்டும் [illegible].
ஆனால் அதனை நோக்காமல் அறியாமலேயே வழிவழியாகச் செயல்படுத்தி வந்து-
கொண்டிருக்கிறோம். வழக்கத்தில் இதனை Rhythm: அல்லது சீர் என்று
சொல்கிறோம். நெறி என்றும் இதற்கொரு மாற்றுச் சொல் உண்டு. இந்தக்
கட்டமைப்பைத்தான் வாஸ்துசாஸ்திரமானது கணக்கில் அடக்கி வைத்துக் கொண்டு
நீண்ட நெடுங்காலமாகச் செயல்பட்டு வருகிறது. வாஸ்துசாஸ்திரம் மிகைக்காக
கட்டிடம், ஓவியம், சிற்பம் ஆகிய கலைகள் முற்றிலுமட்டுமல்லாமல் இசை,
நடம், கவிதை ஆகியவற்றிலும் இக்கட்டுப்பாடு/சீர் அல்லது லயம் மிளிர்கிறது.
பின்சொன்ன மூன்று துறைகளில் அந்த லயக்கட்டுப்பாடு பூர்த்தி செய்யப்படச்
செய்யும் வாஸ்துசாஸ்திரம் என்பதும் இங்கு நினைவில் கொள்ளத்தக்கதாகும்.

மேற்குறிப்பிட்ட காட்சியானது அகவிலும் புறவிலும் ஒரே
அடக்கில் நடைபெறுவது, உற்றுநோக்கிச் சொன்னார் வாஸ்துசாஸ்திரத்தார்.
இயற்கைய உலகாட்சிகளின் வேறுபாடுகள் – எதிர்மாறுகள் – தொடர்க்
விளைந்திட்ட அமைவு அளவில் கூடுதல் குறைவுகள் ஏற்பட ஏற்படுகிறது என்று
மேலும் உட்புகுந்து நடக்கும் செயலில் வாஸ்துபடியாக. [illegible]
நிலைகளில் உட்புகுந்தால் கிடைக்கும் பிரபஞ்ச லயத்தை – சக்தியை –
சாதிப்படுத்தி விடுவிக்கும் மக்களுக்குக் கொடுத்த பிறகே கலைவழியாக
நடைமுறைப்படுத்தி நல்ல அறிவு மெய்யுறுதி நிலைக்கச் செய்யும் இவ்-
வாஸ்துசாஸ்திரம். குடியிருக்கை வீடு, கோயில், நாடு நகரம் ஆகியவற்றின்
அமைப்பில் பூர்த்தி பல்வேறு நிலைகளில் பல்வேறு மக்கள் வாழ்ந்திடவும்
வழிவகை செய்து கொடுத்தது இப்பேராக.

மீண்டும் அணுவுக்கும், அணு நிறைந்திருப்பின் விந்தான விந்தைக்குச்
செல்வோம். எப்போதும் உயிர்ப்புடனேயே இலங்கும் ஒளியணுவானது,
[illegible] உணர்ச்சியால் உந்தப்பெற்றவுடன் [illegible] உருவெடுத்து [illegible] அருகிலுள்ள
அணுக்களையும் அந்நிலைக்கு உள்ளாக்கி, ஒரு ஒளியாகான வெளியையே

தோற்றுவித்துக் கொள்கிறது. அப்படி நிலையில் 64 ஒலியணுக்கள் சேர்ந்த ஒலியமான வெளியைத் தோற்றுவிக்கக் கொள்கிறது என்றவாறு கூறப்படு கொள்கிறது. இந்த 64 ஒலியணுக்களைக் கொண்ட வெளிக்குத்தான் விண் என்ற பெயர். (விண் என்றால் விரிவு எனப்படுகிறது. விண் என்பது விரிவாய்; பிரபஞ்சத்தில் என்பது பொருந்துகிறதல்லவா? இப்பிரபஞ்சம் வெட்டவெளியால் விளைந்த ஒன்று. வெட்டமான ஒலி, சுற்றிய வெட்டத்திலிருந்து பிரித்தறி-யாமல் விரிந்த அல்லது கரு அல்லது விட்டது.) இவ் அணுக்கள் ஒவ்வொன்றும் சதுரவடிவினதாகுமல்லவா? (இவ்வகை ஒவ்வொரு அணுவும் சதுரமாக இருப்பதை நாம் அறியலாம். எனவே இதனை 'நாற்புறத்தியல்' என்று கணமாகக் கூறுகிறது. நாற்புறம் என்ற சொல் நாற்பக்கம் அதாவது போல நாற்புறம் என்பது நாற்பக்கமாகும் (நாற்சதுரமும் நாற்பக்கமும் ஒரே பொருள் தரும் - நிகர்ச் சொற்கள்). இங்ஙனம் ஒரே அளவினதான 64 சதுரங்களில் பரப்புவது கிடக்கிறது. ஒவ்வொரு பக்கத்திலும் எட்டெட்டு சதுரங்கள் கொண்ட பெரிய சதுரம் ஒன்று இங்கே அமைவதைக் காணலாம். அணுக்கள் எட்டெட்டாகக் கூடுவதும் அணுவின் இயல்பெனக் கூறுகிறது. இதனை அணுவியல் அதாவது அணுவின் இயல்பெனக் கூறுகிறது. அணுக்கள் சேர்வதால் ஏற்பட்ட வடிவத்தினடி இச்சதுரப் பரப்பாகும். இப்பரப்பிற்றான் காட்சிகள் தோன்று-கின்றன. காட்சிக்-காட்சி இடமாக அமைவது — மூலஸ்தானமாக அமைவது ஒலியமான இப்பரப்புதான்: (இன்றைய காலமரபில் டி.வி. எவ்விடத்தில் எப்படிப் பொருத்திப் பயன்படுத்தப்படுகிறது என்ற தொழில்நுட்ப நெறிமுறையைக் கேட்டறிந்தால் நம்மரபின் அறிவியல், சீரியல், தொழில்நுட்பம் வியப்புக்-குரியவாகும்). இந்த நிலையில் ஒலியமான விண்ணாக — ஒலிவெளியாக — ஒலிய இடமாக — உள்ளமானதாகிறது. இதனால் முற்பட சொன்ன ஒலிநிலை எப்படி அமைகிறது அப்படியே இருக்கும் இடமே இது. இவ்வாறு அணுக்களாலான ஒலியிடத்தில் (இதுவும் பரிச்சிறிய முதலாவதாக அளவில் உள்ள இடத்தால்) சுற்றியிலான் — நன்றாகவே அந்த இடமாகச் சுற்றிக் கொள்வதால் — வளியாகிறது என்றுந் தோன்றுகிறது. பிறகு அடுத்த நிலையில் ஒலியும் வளியும் வெளியும் சேர்ந்த அசைவுற்று, ஓசையாகக் கிளப்பி அவ் ஓசையே ஒலியாகத் திரிபுகிறது. —இதுவே அறிவியல் மொழியிலே கீழ்க்-கண்டவாறு விளக்கம் பெறுகிறது. ஒரு புள்ளியில் உறங்கிக்கிடந்திடும் அக்ந-நொலி அசைவுற்று, ஒன்றுபடாது — ஓர் உள்ளத்திலேயே உள்ளிழுக்கப்பட்டு — ஒடுக்கமுற்று — அதாவது அமிழ்ந்து; பிறகு வெளியில் பொங்கியெழுந்து — அதாவது இமிழ்ந்து; பிறகு நிரவி — அதாவது குமிழ்ந்து; அப்பால்

குவிந்த ஒலியாலே உள்ளுறக் கூட்டப்பட்டு லய வடிவச் சக்தி (எழுத்தாகி), நாதமே உயிர்த்த; அதுவே அன்னையின் செறிவாக் கொழுந்த, அதுவே உருப்-பெற்ற ஆதார ஒலிந்த, ஒன்றாய்த் ஒலித்த அமிழ்து ஒரு உருவாகி – தமிழ் எனப்பெயர் பெற்றது என்ற மரபு சொல்கிறது. தமிழ்ச் சொற்-கள் உள்ளத்திலேயே உயிர்வாக ஒலிக்கின்றன என்ற சொல்லும் பொருளும் உள்ளத்தில் உழைப்பினாலேயே அச்சொற்கள் அருட்பெருமையாகி, அவற்றில் விளைச் சொற்களாகவே பிறக்கின்றன. வெளியிட்டதால் பெயர்ச் சொல்லாக வடிவம் பெற்றிடச் செய்தோர் அறிய தமிழ்ப் பெரும் நாட்டின் சான்றோர் சிறப்பு-நாமம். இதன் மூலம் உள்ளத்தொடர்புடைய மொழி தமிழ் என்பதால், உள்ளத்தில் தோன்றும் எண்ணமே உணர்வுகளும் இசை வடிவில் தமிழாகவே பிறக்-கின்றன என்ற ஒரு விந்தை நிகழ்ச்சியும் நடக்கத் தெரிய வருகின்றது. இது தமிழ் மொழிக்கு வாய்த்திட்ட ஒரு சிறப்பியல்பாகும். உலக மொழிகளில் எந்த மொழியாகத் தமிழ் வாய்த்துவிட்டதால், உள்ளத்திலிருந்தே பேச்சொலிகள் தோன்றுவதால் – உளம் சார்ந்த மொழியாக – இயற்கை மொழியாக – இயல் மொழியாக – தமிழ் தனித்தவொரு சிறப்பிடம் பெற்று நிற்கிறது. எனவே தான் தமிழ் என்கிற மரபு. உளச்சார்புடைய ( [illegible] or Intellectual ) எம்மொழிக்கும் இச்சொற்கள் பொருந்தவும்-கூடும்.

உயிர்வாழ ஐந்தைந்தாகப் பிரிந்த ஐந்தைந்து ஒலி அலைகளாகவும் ஒலி அலைகளாகவும் விரிந்த, ஒரு நிலையில் ஐந்து உயிரொலிகளாகவும் மற்-றொரு நிலையில் ஐந்து உயிரொலிகளாகவும் மலர்கின்றன. உயிரொலிகளாக உள்ளத்தில் ஒலிப்புள்ளிகள் மலர்கின்றன. உயிரொலிகளாக அ,இ,உ,எ,ஒ ஒலிப்புள்ளிகள் (புள்ளிகள்) மலர்கின்றன. ஓங்காரப் பொருள்தரும் மொழிக்கு மூலம் தோன்றும் 'ஓ' என்ற ஒலியேயாகும். அதனால் ஓம்ஒலி என்ற பெயர். "மொழி மூலம் ஓங்காரத்தில் வருமே" – என்றும். வெளி ஆகாயத்திலும், உள் ஆகாயத்திலும் ஆதாரமாகிய உள்ளத்தினுள் பட்ட உள்ளத்-தினுள் இருந்திருக்கும் புள்ளிகள் எல்லாம் என்று முடிவு செய்தோம். அப்-புள்ளிகளாகிய பரமாணுவினால் ஒளியும் ஒலியும் குடிகொண்டிருக்கின்றன. (பட்டபரமாணுவின் ஒளி குடிகொண்டிருப்பதால் பரமாணுவைக் குடில் என்பர் அதில் நடமிடும் ஒளியைக் குடில் என்றும் மரபு சொல்கிறது) இப்-பொழுதே எங்கும் நிறைந்த, நிறைபொலிவாகவும் ஒரே தன்மையில் ஒலித்திடும் பேரொலியாகவும், வெளியாகிய ஆகாசத்தில் கேட்கும் வெளிஒலியாகவும்,

அதே நூலைக்கொண்டு விண்ணில் கேட்பதால் விண்மொழியாகவும், அம்மொழியின் பொருள் மறைந்திருப்பதால் மறைமொழியாகவும் குறிப்பிடப்படுகிறது. இவையெல்லாம் ஒருங்கிணைந்து, பொருட் பெயராக - ஒலிப் பெயராக - 'ஓம்' என்ற பெயர் சூட்டி ஒலி என ஒலிப்பதாகவும் குறிப்பிட்டுச் சொல்கிறது. ஒரு புள்ளி அல்லது துடிப்பிலிருந்து கிளம்பும் ஒலி-ஒளியின் நாதம் ஓம்ஒலி என்றும் 'ஓம்ஒலி' என்றும் சொல்லப்படுகிறது.

"நாதமொலி, 'தேவோல், வானியல், விண்மொழி,
மறைமொலி ஒலியை அறிந்து பார்த்தே" - என்பது ஒன்றிய திருக்குறள். முன்பு குறிப்பிட்டது போல, நுண்ணொலியாக ஒலியிலிருந்து வெளிப்பட்டு அல்லது ஒளியே ஒலியாகத் திரிந்து, அதே நேரத்தில் ஒலி-நிலை வெளிமொழியென்றும் (spatial sound) விண்மொழியென்றும் சொல்லப்பட்டு அஃதே ஓம் எனப்படும் என்றும் குறிப்பிடுகிறது. ஐந்-திறத்தில் தொடக்கப்பாட்டே இதனால்.

"ஒலியுருந்தகட்ட விண்ணொலி ஓசை, வெளிமொழி
ஒலியை விளம்பத் பாத்தே" என்பது ஐந்திறக் கூற்று,

இன்னுமொரு வியப்பான செய்தியைச் சொல்லிவிட்டு, அடுத்தக் கொண்ட பொருளுக்கு நேரே செல்லுவோம். ஒலியானது 'ஓம்' என்ற மூல-ஒலியிலிருந்து - மூல ஒலிப்புள்ளியிலிருந்து வெளிப்பட்டு சொற்பொருளாகத் திரிகிறது என்று சொல்லப்படுவது இன்று நேற்றல்ல, தொன்றுதொட்டுவரும் கொள்கையாகும். எனவே, ஓம், நல்லொலியென்பதை யாவரும் அறிவர். அதனால் ஒன்றுபட்டதாக ஓம்ஒலி என்ற மற்றுமோர் அறிவியல் பட்டம் நேரடியாக இவ்வாறு அந்த நூலாலும் கூடு சொல்லவில்லை; கூடு கொள்ளவுமில்லை. எல்லாம் தெரிந்த விஞ்ஞானமும் இதுபற்றி மௌனமாகவே இருக்கிறது.

சொல்லுக்கு; சொற்பொருளுக்கு எல்லையான மூலமாக 'ஓம்ஒலி' இருக்கிறதாகச் சொல்லப்படுகிறதோ அதுவே சொற்பொருளின் மூலமாக 'ஓம்ஒளி' இருக்கிறதாகவும் அவ் ஒளியே ஒலிக்கு மூலமாகவிருக்கிறதாகவும் வாய்ப்பாடு உதாரணமாகச் சொல்லக் கீழே காட்டுவோம். ஓம் ஒலியைக் கேட்பது போல ஓம் ஒளியைப் பார்க்கலாம் என்று சொன்னால் வியப்பிலும் வியப்பாகவும் இனிமையாகவும் இருக்கிறது!

"ஓம்ஒலி கேட்டுணர்ந்தால், உள்ளொளி காணத்தோன்றும்
ஓம்ஒளி கண்டுணர்ந்தால், ஒலிபெரும் உருவேதோன்றும்
ஓம்ஒளி உருவந்தானே ஒளிஒலி உருவமாகி
ஓமெனும் உருவமன்றோ ஆடலாய் ஆடல்தோ"

- பல்விரு ஞானசாரம் - பாடல் 34

மாறுபாடிய ஓர்ஒலி, ஒலியமைப்பான பொருள்களாகத் திரிகின்றது. அவ்வாறு திரிந்துத் தோன்றிய சுற்றுச்சார்பு – சொல் ஒலிகள் ஒலியமைப்பான காட்சிகளை ஒலியின் நாமலொட்டி அகத்தில் உணர்த்துகிறது. இந்த உணர்வுக்கு ஞானம் என்று பெயர். அவ்வாறு தோற்றுவிக்கப்பட்ட அகம் ஞானவடிவ-மானதாகும். இவ்வாறு ஒலியால் உணர்த்தப்படும் ஒலிப்பொருள்கள் என்றும் சொல்லலாம்.

அவ்வாறே ஓர் ஒலி பல ஒலியாக ஒலித்து, ஒளிர்ந்த அவ்-வெளியில் (ஒலி அலைகள்) அடர்த்தி வேறுபாட்டால் பல ஒலிப்பொருள்-களாகத் திரிந்துத் தோன்றுகின்றன. இவற்றை ஒலிப்பொருள்கள் என்று சொல்-லலாம். வெளி, காற்று, தீ, நீர், நிலம் ஆகியவை இங்ஙனம் தோன்றிட்ட ஒலிப்பொருள்களாகும்.

ஒலிப்பொருளானது உயர்நிலையில் அல்லது அறிவுநிலையில் ஒளியாக மாற்றமடைகிறது. இதற்குப் பிறகே ஒலி குறிக்கும் பொருள் உள்ளத்தில் உணர்வாகிறது அல்லது அறிவாகிறது என்பது மிக முக்கியமான உளவியல் பற்றிய அறிவியல் கருத்தாகும்.

ஒப்பரும் ஒலி என்னும் ஆடலான் உருவமாக – ஒலிநடராசனாக – மரபில் நிலவப்பட்டிருக்கிறது என்பதை பிறிதொரு இடத்தில் விளக்குவோம். இதன் மூலம் கோயில் சமயத்தின் உண்மை, தொன்மை, அருமைப்பாடு நிலவப்-பட்டுவிடும்.

அகத்தில் நிறைந்திருக்கும் பொருள்களை உற்றுநோக்கினால், அவை கேட்கப்படும் ஒலிப்பொருளாகவும் பார்க்கப்படும் ஒளிப்பொருள்களாகவும் – இரண்டு வகைப்பான பொருள்களாக இருப்பதை முன்பொருமுறை சுட்டிக்-காட்டினோம். அதாவது அகத்தில் நிறைந்து காணப்படுவது ஒளியும் ஒலியும் என்று சுருக்கியும் (abstraction .) சொல்வோம்.

இந்த ஓர் ஒளியும் ஓர் ஒலியும் ஆகாசமாகிய வெளியும், மண்-பொருளாகிய நம்முடைய அகவெளியும் ஆய் தோன்றுவதென்றும் சொல்வோம். மேலும் அகவெளியும் புறவெளியும் இந்தத் தன்மையால் ஒத்திருப்பதாகவும் சொல்வோம். மேற்கொண்ட விளக்கங்களின் மூலம் ஒலி தோன்றுவதற்குக் காரணம் வெளியில் முகிழ்ந்த உணர்வே என்றும் சொல்வோம். நமது உள்ளத்தின் வெளியில் உணரப்படுவது இடமே – இடத்தான் ஆய காட்சியே என்றும் இந்த உணர்வுக்கு இடவுணர்வு என்றும் சொல்வோம். இதை Spatial experience or Spatial consciousness என்றும் சொல்வோம்.

1:3:34 :

இந்த நிலையில் – காட்சி நோக்கும் நிலையில் – 'உள்ளிருந்தே ஒரு அறிவு தோன்றுவதாகவும் இந்த அறிவு நிலையே ஞானநிலை' என்றும் சொல்வோம். இந்த நிலையில் அடைவிக்கப்படுவன ஞானநிலை எனப்படும். இதனைச் சொல்லாக இது வரியுருவு என்றும் குறிக்கப்படும்.

இதில் உள்ளார்ந்த முக்கிய செய்தி யாதெனில் உள்ளமானது தன்னையே தோற்றுவிக்கின்ற சொல் அல்லது பிறப்பிக்கின்ற பொருள் அதில் தன்னையே காட்டி மகிழ்கிறது. உள்ளமானது தன்னைத்தானே காட்டும் சொல்லினுள் எட்டப்படும் ஆகும் பொருள். இந்த இயக்கமுடன் அல்லது அனைத்துடன் என்று சொல்லப்படுகிறது. நடிப்பவர் தங்கள் நடையிற் தன்மைகள் ஈன்றிடும்; ஒரு கவிஞன் தான் இயற்றும் கவிதையொன்றில் தன்னையே புலப்படுத்திக் கொள்கிறான். தன் உள்ளத்தின் வடிவத்தையே அதில் காட்டுகிறான். இவ்வடிவத்தை 'நாவியல்வடிவு' என்று ஐந்திறம் குறிப்பிடுகிறது.

"வாளியல் ஒலியே ஓசை மொழியாய்த்
நாவியல் வடிவுறும் ஒலி எழுத்தெனப்"

அவ்வாறே ஒரு கலைஞன் தான் இயற்றும் வடிவங்களில் தன்னையே பார்க்கிறான். தன் உள்ளில் – தன் சுவையுள்ள வடிவத்தையே காணுகிறான். கவிஞனே கவிதையாகிறான். சிற்பியே சிற்பமாகிறான். கவிதையில் உள்ள – சொல் வடிவில் – அக் கலைஞர்கள் உறைகிறார்கள். இதுவொரு அதிசயக் கருத்தாகும்.

# ஞானம்

முதுபெரும்புலவர் சி. அருணைவடிவேல் முதலியார், காஞ்சிபுரம்.

## தோற்றுவாய்:

- 'ஞானம்' என்பது வடசொல். அதற்கு நேரான தமிழ்ச் சொல் 'அறிவு' என்பது. எனினும், வட சொற்களைத் தமிழ் மொழியில் இடைப்பெய்து ஆளும் பொழுது அவை வேறொரு மேலான பொருளைத் தருவனவாய் அமைதல் வழக்கத்தில் காணப்படுகின்றது. எடுத்துக்காட்டாகச் சிலவற்றைக் கூறலாம்.

'பெரிது, பெரியார்' - என்னும் தமிழ்ச் சொற்களுக்கும், 'மகத்து, மகான்' என்னும் வடசொற்களுக்கும் இடையில் வேர்ச் சொல்லிற்கூட வேற்றுமை சிறிதும் இல்லை. எனினும் 'பெரிது', பெரியார்', எனக் கூறுவதைவிட 'மகத்தானது, மகான்' எனக் கூறுவது சிறப்புடையதாக எண்ணப்படுகின்றது.

இம்முறையில் 'ஞானம்' என்னும் வடசொல் தமிழ் மொழியில் 'அறிவு' அல்லது 'உணர்வு' என்னும் பொதுப் பொருளோடு அமையாமல், 'மெய்யறிவு' அல்லது 'மெய்யுணர்வு' என்னும் சிறப்புப் பொருளில் வழங்கப்படுகின்றது. 'மெய்யறிவு', அல்லது 'மெய்யுணர்வு' எனக் கூற விரும்பினால், வடமொழியில் 'தத்துவ ஞானம்' என, 'தத்துவம்' என்னும் அடைமொழி கொடுத்தே கூறுதல் வேண்டும். இதனைத் திருக்குறள் 'மெய்யுணர்தல்' அதிகார முகவுரையில் பரிமேலழகர், "இதனை (மெய்யுணர்தலை) வடநூலார் - தத்துவ ஞானம் - என்ப". எனக் கூறியதனாலும் அறியலாம். ஆகவே, 'ஞானம்' என்பது இங்கும் 'மெய்யறிவு' அல்லது 'மெய்யுணர்வு' என்னும் பொருளிலேதான் வழங்கப்படுகின்றது.

## அறிவின் வகைகள்:

திருவள்ளுவர், "அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்" (குறள்-430)

என, 'அறிவே ஒருவன் பெறத்தக்க பொருள்களில் தலையாயது' என அறிவின் சிறப்பைப் பொதுவாக எடுத்தோதினார். எனினும் பயன்பற்றி, ஓர் அறிவே பலவாகக் கருதப்படும்.

அறிவின் பயன்கள் பலவற்றை அவர் பட்டியல் போட்டுக் காட்டினார். அவை,

மனத்தை அது சென்ற வழியில் செல்லவிடாது, தீய நெறியினின்று விலக்கி நல்ல நெறியில் செலுத்துதல் - இது பகுத்தறிவு.

உ : 2,

சொல்வார் எவராயினும் சொல்பவரை நோக்காமல் அவரால் சொல்லப்படும் சொல்லால் விளைவனவற்றை அறிந்து அவற்றைக் கொள்ளுதல், அல்லது தள்ளுதலைச் செய்தல் — இது நல்லறிவு.

தான் பிறர்க்கு ஒரு பொருளைச் சொல்லுங்கால் ஐயந் திரிபுகட்கு இடமின்றி, அது மிக நுண்பொருளாயினும் எளிதில் விளங்கும்படி தெளிவாகச் சொல்லுதலும், தனக்கு ஒரு பொருளைச் சொல்லுகின்றவர் அவ்வாறு — தெளிவாகச் சொல்லாவிடினும் அவரது கருத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளுதலும், இது வல்லறிவு.

நண்பர்கள் பால் தொடக்கத்தில் விருப்பங்கொண்டு, போகப் போக வெறுப்புக்கொள்ளுதல் இல்லாது, போகப்போக விருப்பம் மிகக் கொள்ளுதல் இது பண்பாட்டறிவு.

உலகத்தோடு ஒட்ட ஒழுகல் — இஃது உலகியல் அறிவு. என்பன.

இவைகள் எல்லாம் அவர் பொதுவாக 'அறிவுடைமை' என வைத்த அதிகாரத்தில் கூறியன. எனினும் அவர் 'மெய்யுணர்தல்' — எனச் சிறப்பாக வைத்த அதிகாரத்திற் கூறிய அறிவே அறிவுகளில் எல்லாம் மேலான அறிவாகும்.

<u>மெய்யறிவு</u>:

மெய்யாவது நிற்றற்பொருள். அஃதாவது, என்றும் ஒரு படித்தாய்; மாற்றம் இன்றியிருப்பது, இதுபற்றி அது 'செம்பொருள்' என்றும் சொல்லப் படுகிறது. உயர்ந்த வழக்குப் பற்றித் திருவள்ளுவர் அதனை, 'உள்ளது' என்றும் கூறினார். உள்ளதாவது, என்றும் இல்லதாகாது, உள்ளதாகவே இருப்பது. 'நீர்க்குமிழியும்', நீர்மேல் எழுத்தும், போல்வன சிறிது போது உள்ளனவாய் இருந்து; பின் விரைவில் இல்லனவாகி விடுதல் பற்றி அவை, 'பொய்ப்பொருள்' எனப்படுகின்றன. எனவே, 'பொய்' என்பதற்குப் பொருள், 'நிலையாமை' என்பதேயாதல் விளங்கும்.

நிலைத்த பொருளை விடுத்து, நிலையாத பொருள்களை விரும்பிப் பற்றுவது, 'அறிவு' எனப்படாது. 'அறியாமை' என்றே சொல்லப்படும்.

"நில்லாத வற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை" — குறள் 331

என்பது திருக்குறள். எனவே அந்நூலில்

"பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரும்
மருளானாம் மாணாப் பிறப்பு" — குறள் 351.

என்ற குறளில், பிறப்பிற்குக் காரணமாகக் கூறப்பட்ட 'மருள்' என்பது மேற்கூறிய புல்லறிவாண்மையே என்பது விளங்கும்.

2.1:5

'மருள், மயக்கம், விபரீத ஞானம்' என்பன ஒரு பொருட் சொற்கள். மெய்ஞ்ஞானத்திற்கு எதிராகச் சொல்லப்படும் 'அஞ்ஞானம்' என்பதும் இதுவே. மெய்ஞ்ஞானமே மெய்யுணர்வாம்.

'மெய்யுணர்வு எவ்வாறு உண்டாகும்' — என்பதன் விடைக்குத் திருவள்ளுவரே,

"கற்று ஈண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்று ஈண்டு வாரா நெறி" — குறள் 356

என விடை கூறினர்.

**கற்றல்:**

'கற்றல்' என்றவுடனே இக்காலத்தில், ஏட்டில் எழுதப்பட்டு, அல்லது அச்சடிக்கப்பட்டு இருக்கும் எழுத்துக்களைப் பார்த்துப் படித்து, அவற்றால் ஆய சொல், சொற்றொடர் என்பவைகளையும் அப்படியே உருப்போடுவது' என்று நினைத்துக்கொள்கின்றார்கள். 'கற்றல் என்பதற்கு அது பொருள் அன்று. இயற்கையில் தனக்குத் தெரியாதிருந்ததைத் தெரிந்தவர்கள் சொல்லக் கேட்டுத் தெரிந்து கொள்வதுதான் கற்றல். ஏட்டில் உள்ளவைகளை உருப்போட்டு — விட்டாலும் அவற்றின் உண்மையான பொருளைத் தெரிந்தவர்களிடம் கேட்டுத்தான் தெரியவேண்டும். அவ்வாறு தெரிவிப்பவர்கள் யாராயினும் தெரியாததைத் தெரிவிக்கும் நிலையில் அவர்கள் ஆசிரியர்களேதான். ஏட்டில் உள்ள சொற்றொடர் களின் பொருளை உண்மையாக இளைஞர்கட்குத் தெரிவிப்பதையே தொழிலாகக் கொண்டவர்கள் ஆசிரியத் தொழிலை உடையவராவர். அவர்கள் 'வித்தியா குருக்கள்' — எனப்படுவர் 'கல்வி யாசிரியர்' என்றும் கூறலாம்.

**ஆசிரியர்கள்:**

இனி, வாழ்க்கையில் மேற்கொள்ளவேண்டிய தொழில்களைக் கற்றுத் தருபவர்கள் தொழில் ஆசிரியர் ஆவர். சிறப்பாக அரசர்கட்குப் போர்ப் பயிற்சி செய்விப்பவரை, 'வில்லாசிரியர்' என அக்காலத்தில் கொண்டனர்.

ஏட்டுக் கல்வியானும், தொழிற் கல்வியானும், மற்றும் எவ்வாற்றானும் இருப்பினும் அதனைத் தெரிவிப்பவர் இன்றித் தாமே தெரிந்து கொள்பவர் எவரும் இல்லை. ஒருவரிடம் ஒன்றை நேர்முகமாக அறியாவிடினும், அவர் எழுதிய எழுத்தைப் பார்த்தோ, அவரது நடத்தையைப் பார்த்தோதான் யாரும் தெரிந்து கொள்கின்றார்களேயன்றித் தாங்களாகவே ஒன்றைத் தெரிந்து கொள்கிறவர்களாக உலகில் ஒருவரும் இல்லை.

- அறிவியல் வல்லுநர்கள் சிலர் புதியனவாகக் கண்டுபிடித்த கண்டு பிடிப்புக்களும் அவர்கள் தங்கள் வழக்கமான ஆராய்ச்சியில் ஈடுபடுகின்ற

பொருள் அதில் தொடர்புபட்டு நிகழ்ந்த நிகழ்ச்சியன்றேயன்றி, எந்தத் தொடர்பும் இல்லாமல் முற்றிலும் புதியவொன்றாகத் தோன்றியதல்ல.

**உயிர்ப்பு:**

உயிர்ப் பேற்றை, "உகந்த உடற்பேறு"[1] என்றும், "அறிவிக்க அறிய அறிபவர உணர்த்தல்" என்றும் கூறுகின்றது சிவஞானபோதம்.

'யார் யார் எதை எதை அறிய விரும்புகின்றார்களோ அவர் அவர் அதை அதை அறிந்தவரிடம் சென்றுதான் அறிகின்றார்கள்; தாங்களாகவே அறிந்து கொள்வதில்லை' என்பதைத் 'திருவருட்பயன்' நூல் சிறக்கக் கூறுகின்றது

எமக்கென் எவர்க்கு எவரெறும்பும், அல்லல்
நமக்கவனை வேண்டுந் தவிர — 46

**ஞானாசிரியர்:**

"தொட்டுக் காட்டாத வித்தை சுட்டுப் போட்டாலும் வராது" — என்பது பழமொழி. உலகியல் நிலையே இவ்வாறிருக்குமாயின், உலகத்திற்கு அடுத்த நிட்டதாகிய மெய்யுணர்வு எவ்வாறு ஒருவருக்குத் தானே வந்துவிடும்? வராது. மெய்யுணர்வை உடையோரிடமே சென்று அதைப் பெற வேண்டும். மெய்யுணர்வு ஆசிரியரே 'ஞானாசிரியர்' என்றும், 'ஞானகுரு' என்றும் சொல்லப்படுகின்றார். 'அருட்குரு' எனவும் கூறுவர்.

"பலசொல்லக் காமுறுவர், மன்ற மாசற்ற
சில சொல்லல் தேற்றா தவர்" — குறள் 649

என்று திருவள்ளுவர் கூறியபடி, மிகச் சாதாரண மக்கள்தாம் அதிகமாகப் பேசுவார்கள். பெரியோர்கள் குறைவாகவே பேசுவார்கள். அதிலும் முக்கியப் பொருள்களை இரண்டொரு சொற்களில் அவர்கள் சுருக்கிச் சொல்லிவிடுவார்கள்.

**மகா வாக்கியங்கள்:**

வேதங்களில் ஒவ்வொன்றின் பொருளையும் ஒவ்வொரு தொடரால் தெரிவிக்கின்ற வாக்கியங்கள் உண்டு. அவற்றுக்கு, 'வேதாந்த மகாவாக்கியங்கள்' என்று பெயர். அவைபோலச் சிவாகமங்களின் பொருளைத் தெரிவிக்கும் வாக்கியமும் உண்டு. அதற்கு, 'சித்தாந்த மகாவாக்கியம்' என்பது பெயர். இந்த மகாவாக்கியங்களைப் போலத்தான் ஞானகுருவின் உபதேசமும் சுருக்கமான ஒரு வார்த்தையாய் இருக்கும். அதிலே 'எல்லா உண்மைகளும் அடங்கியிருக்கும். அந்த ஒரு வார்த்தை வேதாந்த சித்தாந்த '

1) சூ. 3    2) சூ. 8 அதி. 2

மேற் சாத்திரங்களின் பொருளை உடையதாய் இருப்பினும் அவைகளைத் திரட்டிச் சொல்லுவதாக மட்டும் இராது; வேறு வடிவில் இருக்கும்.

'மாணிக்கவாசகரைச் சிவபெருமான் இவ்வாறு ஒரு வார்த்தையாலே தான் ஆட்கொண்டான்' - என்பது அவர்,

'மன்னா, என்னை ஒர் வார்த்தையுட் படுத்துப் பற்றினாய்'[1]

எனக் கூறியுள்ளமையால் அறியலாம். அன்றே, 'மெய்யுணர்வு, நல்லாசிரியரின் அறிவுரையாலேதான் பெறத்தக்கது' என்பதை நன்கு விளக்கும்,

"ஞானம் இவன் ஒழிய நண்ணியிடும், ஞானி அவன்
தானா ஒழியப் படின்" — திருவருட் பயன் - 50

என்றார் உமாபதி சிவாசாரியார். இப்பகுதியிற்றான் பரிமேலழகர் மேற்காட்டிய "கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார்" என்னும் குறளுக்கு

"உபதேச மொழிகளை அநுபவம் உடைய
தேசிகர்பாற் கேட்டு"

என உரை எழுதினர். தேசிகர் - குருமார், எனவே, ஞானம் குருக்கள் கேள்வியால் நிகழ்தல் அறியப்படும்.

'அநுபவமுடைய தேசிகரை அடைந்து வழிபட்டுக் கேளாதவர் - ஞானநூலாகவே சாத்திரங்களை எவ்வளவு படித்தாலும் ஞானம் உண்டாக மாட்டாது' என்பதை

"சாத்திரத்தை ஓதினர்க்குச் சற்குருவின் தன்வசனம்
மாத்திரத்தில் வாய்க்குநலம் வந்துறுமே — ஏத்துகடல்
தண்ணீர் அருந்தினர்க்குத் தாகம் தவிர்ந்திடுமோ?
தண்ணீர்மை யாயிருக்கச் செப்பு"

எனத் திருக்களிற்றுப்படியார் கூறினர். (வெண்பா 6) குருவின் உபதேசத்தைக் கேட்ட பிறகு அதனைச் சிந்திப்பதற்கு உதவுபவையே சாத்திரங்கள்.

<u>ஞானத்தின் படிகள்:</u>

மாணிக்கவாசகர் போன்ற அதிதீவிர பக்குவம் உடையார்க்குக் கேட்ட மாத்திரத்தாலே ஞானம் பூரணமாய் நிறைந்துவிடும். அவ்வாறுதல் மிக மிக அருமை: பெரும்பாலோரும் கேள்விக்குப் பின்னர், கேட்ட பொருளைப் பலகாலும் பலவாறாகச் சிந்தித்தலால் ஞானம் முதிரும். அதனைத் திருவள்ளுவர்,

"ஓர்த்துள்ளம் உள்ளது உணரின், ஒருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு"

என்றார். ஓர்த்தல் - ஆராய்தல்; சிந்தித்தல். இந்நிலையில் உள்ளம் ஒருப்பட்டதாய், அமைவுடையதாய் இருக்கும். அதன் முடிவு அமைவு நீங்கி

1. திருவாசகம் செத்திலாப்பத்து - 2

உண்மையை உணர்ந்த ஒருநிலையில் நிற்றலாகும். அதனையே குறளில் — திருவள்ளுவர், "ஒருதலையா உணரின்" என்றார். எனவே, 'கேள்வியால் தோன்றிய ஞானம், சிந்தித்தலால் முதிரும்' என்பது விளங்கும்.

கேள்வியாலும், சிந்தனையாலும், 'உணர வேண்டிய பொருள் இதுதான்' என்பது, முடிவாக விளங்கும். அந்த விளக்கம் பெறாதவர் சிலருக்கு, 'ஆசிரியர் அறிவுறுத்தும், நாம் அதனைச் சிந்தித்தாலும் உண்மைதான், ஆயினும் அது அப்படியேதான் இருக்குமா? வேறுவகையாக முடிவு நாம் கொள்ள முடியாதா?' என்னும் ஒரு சில ஐயம் நிகழ்தல் உண்டு. அந்த ஐயமும் நீங்கித் தெளிவு பெற்ற பிறகுதான் முடிவு பற்றிய ஞானம் அப்படியே நிலைபெற நிற்கும். அந்தத் தெளிவு வாராவிடின், அந்த ஞானம் நிலைபெறாது. சிலர் அவரவர்களை பற்றுவ நிலையைப் பொறாதவராய், இவ்வாறு அறிவைப் பெற்றும் தெளிவைப் பெறாது அதனை மறந்து விடுபவர்கள் உண்டு. அதனையும் திருவள்ளுவர் வேறோர் இடத்தில்,

"தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால்" — குறள் 249

என்று கூறினார். தெருளாதான் — தெளியாதவன்; மெய்ப்பொருளை உணர்ந்தும் அதனைத் தெளியாதவன். "மெய்ப்பொருள் — மெய்ந்நூலில் சொல்லிய பொருள்: "நிலைபெற்ற ஞானம் இல்லாதவன் இடையே மெய்ப்பொருளை உணர்ந்தான்; அங்ஙனம் தன் ஞானமின்மையால் தானே அழிந்துவிடும்" என்பது இக்குறளுக்குப் பரிமேலழகர் தந்த விளக்கம். இதனால், சிந்தனைக்குப் பின்பு 'தெளிதல்' என்பது ஒரு படியிருப்பது விளங்கும். தெளிதலையே, 'காண்பது' என்கின்றார் திருவள்ளுவர்.

"பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு" — குறள் 358

<u>நிட்டை நிலை:</u>

'விடத் தக்க பொருள் இவை, பற்றத் தக்க பொருள் இது' என்பன பற்றி ஒரு தெளிவு பிறந்துவிட்ட பின்னர், அவைகளை நடைமுறைப்படுத்திக் கொள்வதற்குத் தடை ஏதும் இல்லை. ஆகவே, விடற்பாலனவாகிய பொய்ப் பொருள்களைச் சிறிதும் பற்றாது விட்டு, பற்றற்பாலதாகிய மெய்ப்பொருளைப் பற்றி, அதில் ஆழ்ந்துவிடுவதே சமய நூல்களில் 'நிட்டை' எனப்படுகிறது. தெளிதல் நிகழ்ந்த உடனே இந்த நிட்டை நிலை தானாகவே வாய்த்துவிடும். ஆகவே, நிட்டை கூடாவிட்டாலும், 'தெளிவு உண்டாகவில்லை' என்பதுதான் பொருள். இந்த நிட்டை நிலையையே திருவள்ளுவர்

"சார்புணர்ந்து சார்பு கெடஒழுகின், மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்" குறள் 359 எனக் கூறினார்.

3.1.7

இக்குறளின் பொருளை, 'திருக்களிற்றுப்படியார்' என்னும் சித்தாந்த சாத்திரம் பின்வருமாறு விளக்கிற்று.

"சார்புணர்ந்து சார்பு கெட ஒழுகின் எந்நாளும்,
சார்புணர்ந் தானே சிவமாகும் — சார்பு
கெடஒழுகின் நல்ல சமாதியுமாம்; கேடில்
படவருவ தில்லைவினைப் பற்று" — வெண்பா 34.

இவ்வெண்பாவில் (முதலாவதாக) வந்துள்ள 'சார்பு' என்பவற்றின் முதலில் உள்ள சார்பு என்பது, எல்லாப் பொருட்கும் மேலானதாகவே சார்பாய் உள்ள மெய்ப்பொருளைக் குறிக்கும். இரண்டாவது 'சார்பு' உயிர்களின் பிறவிப் பிணிக்குக் காரணமான வினைகளைச் செய்தவனைச் சார்ந்துள்ள பாசங்களைக் குறிக்கும்.

செயற்கைச் சார்புகளாகிய பாசங்கள் நீங்க வேண்டுமாயின், இயற்கைச் சார்பாகிய மெய்ப்பொருளைப் பற்றியாக வேண்டும். இதனால் 'சார்பு உணர்ந்து, சார்பு கெட ஒழுகின்' என்று திருவள்ளுவர், இறந்து கூறினர்,

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு" குறள் 350

எனக் கூறினர்.

தியானமும் சமாதியும்:

தியானத்தில் மெய்ப்பொருளைப் பற்றுதல் உண்டாகும். ஆயினும் சமாதி நிலையால் மெய்ப்பொருளில் அழுந்துதலாகும். அப்பொழுதுதான் பாசத்தின் மீட்டும் தொடராத நிலை ஏற்படும். அதனால் திருவள்ளுவர், 'சார்பு கெட ஒழுகின்' என்றார்.

சார்தரு நோய்:

'சார்தரு நோய்' — என்றது, 'சார இருக்கின்ற', அஃதாவது, 'வந்து பற்ற இருக்கின்ற நோய்' — என்றபடி. அவையே சாத்திரங்களில் 'சஞ்சித கன்மங்கள்' எனப்படுகின்றன. சஞ்சித கன்மங்களே பின்பு — பிராரத்தத்தில் வந்து புகுந்து வருவன. நீட்ட மெய்திய உயிரை அவை வந்து பற்ற மாட்டா, இதனையே பரிமேலழகர்,

"பிறப்பு அறுப்பான் முயல்வான் உயிரால்
அநாதியே ஈட்டப்பட்ட வினைகளில்
பயன்தரல் இறந்து உடம்பினால் அனுபவிக்கப்பட்டனவும்,
பிறந்த உடம்பால் நுகர்ந்து நிற்பனவும்
ஒழியப் பின்னர் அனுபவிக்கக் கடவனவாய்க்
கிடந்தன"

2 : 6
எனவும் (ஞானமே சஞ்சித கன்மங்களை)

"அவை ஏன் செய்யும் (எனின்) அவை
ஞான யோகங்களின் முதிர்ச்சியுடைய
உயிரைச் சாரமாட்டாமையானும்,
வேறு சார்பின்மையானும் கெட்டுவிடும்"

எனவும் விளக்கினார்.

சஞ்சித கன்மங்கள் இவ்வாறு கெட்டொழிதலைச் சித்தாந்த சாத்திரங்கள் 'திருவருள் தீக்கையால் அவை அழிக்கப்படும்' என்கின்றன.

மேல்வரையில் கூறி வந்தவைகளால், 'மெய்ஞ்ஞானம்' அல்லது மெய்யுணர்வு அனுபவம் வாய்ந்த ஒரு குருவின் அறிவுறுத்துகின்ற அருள்மொழி வழியாகவே கிடைக்கும் — என்பதும், அது முதலில் கேள்வியாக நிகழ்ந்து, பிறகு சிந்தித்தல் தெளிதல்களால் முதிர்ச்சியடைந்து, முடிவில் நிட்டையாகிப் பயன்தரும் — என்பதும் போந்தன.

இங்ஙனம் ஞானத்தின் தோற்றம் முதல் முதிர்தல் முடிய அதன் படிநிலைகளை நான்காகவே சித்தாந்த சாத்திரங்கள் கூறுகின்றன.

"கேட்டலுடன், சிந்தித்தல், தெளிதல், நிட்டை
கிளத்தல் என ஈரிரண்டாம் விளக்கின் ஞானம்" *

என்பது சிவஞான சித்தி. திருக்குறளிலும் இவ்வாறே சொல்லப்படுவதை மேலே பார்த்தோம். ஆரிய வைதிக நெறியில், 'சிரவணம், (கேட்டல்) விமரிசம், (சிந்தித்தல்) பாவனை (தெளிதல்) என நிலைப்படிகளே சொல்லப்படுகின்றன. சைவாகமங்களை உணர்ந்திருந்தும் பரிமேலழகர் வைதிக நெறியே பற்றி 'மெய்யுணர்தல்' — குறள்களுக்கு உரையெழுதினார். மேற்காட்டிய திருக்குறட்படி வைப்பினை நோக்கினால், சித்தாந்த உரை வேறு என்பது விளங்கும்.

<u>ஞானிகள்</u>:

ஞானத்தின் முதிர்நிலையாகிய நிட்டையைத் தலைப்பட்டோரே உண்மையில் 'ஞானிகள்' எனப்படுகின்றனர். இவர்கள் உலகத்தை மறந்திருத்தல் மட்டுமன்றித் தம்மையும் தாம் அறியாது மறந்து, இறையருளில் மூழ்கியிருப்பர்.

உடம்புள்ள வரையில் ஓரோவழித் தம்மைத் தாம் அறிந்து நிற்கும் நிலை தோன்றுமாயினும், அப்பொழுதும் இவர்கள் முன்புபோல, 'யான், எனது' என்னும் அகங்கார மமகார உணர்ச்சிகளை அடையாமல், 'எல்லாம் அவன் செயல்' என்ற தன் முனைப்பு இன்றி, இறையுணர்வே உடையராய் இருப்பர்.

*சுபக்கம். சூ. 10.1

இந்நிலையில் அவர்கட்கு, 'இவர் உறவர், இவர் அயலார் — இவர் நண்பர், இவர் பகைவர்' என்றுபோலும் பகுத்துணர்வுகள் இன்றித் தாம் செய்வனவும், பிறர் செய்வனவும் எல்லாம் இறைவன் செய்வனவாகவே தோன்றும். ஆதலின், இவர்கள் செய்யும் நன்மைகட்கோ, தீமைகட்கோ இவர்கள் பொறுப்பாதல் இல்லை. இறைவனே பொறுப்பாகிவிடுவான்.

'யான் செய்தேன், பிறர் செய்தார்' — என எண்ணுகின்ற வரையில் அவ்வவர் செய்வனவற்றுக்கு இறைவன் அவரவரையே பொறுப்பாக்கி, அவற்றின் பயனை அவரவர் நுகரச் செய்வான். அவ்வாறின்றி, 'எல்லாம் அவன் செயலே' என்று, தன்மை யிழந்து நிற்பார்களது செயலுக்கு இறைவன் தானே பொறுப்பாளி ஆவன். அவர் வினைகளையும் தன்னுடையனவாகவே ஏற்றுக் கொள்வான்.

"பாதகங்களைச் செய்தாலும் பழியாகா விடுமே!" *.

எனச் சிவஞான சித்தி கூறியது. இவர்களது நிலை பற்றியேயாகும்.

<u>சீவன் முத்தர்</u>:

இந்நிலையில் நிற்போர் வடமொழியில் 'சீவன் முத்தர்' என்றும், தமிழில் 'அணைந்தோர்' என்றும் கூறப்படுகின்றனர். இவர்களைச் சிறப்பை எல்லாம் சித்தாந்த சாத்திரங்கள் மிக மிக விரித்துக் கூறும்:

இவர்களுக்கு உலகத்தில், 'வேண்டியார், வேண்டாதவர்' என்னும் வேறுபாடே யில்லாமையால், எல்லாரிடத்தும் — ஏன்? எல்லா உயிர்களிடத்தும் ஒரு பெரிய கருணையையே உடையவர்களாய் இருப்பார்கள். இவர்களைப் பட்டினத்து அடிகள்

"மகவெனப் — பல்லுயிரையும் ஒக்கப் பார்க்கும்
செல்வக் கடவுள் தொண்டர்" **

என்க் கூறுவர். இன்னும்

"எவ்வுயிரும் நீக்கமற உறையும் இறைசிவன் என்று
எவ்வுயிர்க்கும் அன்பாய் இரு"

எனச் 'சைவ சமய நெறி' — கூறியதுபோல, இவர்கட்கு எல்லா உயிர்களும் சிவன் எழுந்தருளியிருக்கும் திருக்கோயிலாகவே தோன்றுதலால்,

"பிறிதின் நோயைத் தம்நோய் போல் போற்றலும்"
பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்" ***

ஆகிய 'சீவ காருணியம்' அல்லது 'உயிர் இரக்கம்' என்பது இவர்களிடம் இயற்கையாகவே அமைந்துவிடுகின்றது.

* சுபக்கம் சூ. 10.1
** திருமுறை. 11. திருவிடைமருதூர் மும்மணிக்கோவை - 7.53
*** குறள் 315, 322

[illegible]

'இன்பம் இவர்கள் உலகோர் தம் அறியாமையால் அடைகின்ற துன்பங்களைக் கண்டு பெரிதும் இரங்கியருள்வார்கள்' என்பதை,

"கள்ளத் தலைவர் துயர்கருதித் தம் கருணை
வெள்ளத் தலைவர் மிக". திருவருட் பயன் - 100

என உமாபதி சிவனார் கூறுவர். இறைவனுடைய செயல்களைத் தம்மின் செயல்களாக எண்ணி நடப்பதால் பற்றி உலகத்தாரை, 'கள்ளத் தலைவர்' என்றார்.

இவ்வாறு அருளார்ந்த தொண்டும் உயிர் இரக்கமே உள்ளமையால் உயிர் இரக்கம். எல்லோரும் உயிர் இரக்கங்கள் எல்லாம் இறைவனையாய் நிலையற்ற உயிர் இரக்கங்களாம். ஆகவே, எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பவர்கள் யாவரும் இறைவன் அருளைப் பெறவே முயலல் வேண்டும். முயன்றால் அவன் அருள்புரிவான். யாவர்க்கும் எல்லா நலன்களும் பெருகும். அத்தகைய அருள் நாட்டத்தால் யாவரும் கொண்டு பயன் பெற்று வாழ்வார்களாக.

***

2:2:1.

# பக்தி

டாக்டர் ச. [illegible], சைவசித்தாந்தத் துறை.
மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை

மனிதனைப் பெருமையுடையனாகச் செய்வது பக்திநெறி. பொருள் — இவ்வுலக வாழ்க்கை சிறக்க உதவுவதுபோல, இவ்வுலக வாழ்வின் நன்மையைப் பெறுவதுடன், இவ்வுலக வாழ்வின் முடிவுப்பொருளாக உள்ள அருளைப் பெறுவதற்கு தலைசிறந்த வாயிலாக உள்ளது பக்திநெறி. பக்தியானது தன்னைக் கைக்கொள்பவரின் ஆன்மீக நிலைக்கேற்பத் தன்னை வெளிப்படுத்தும் தன்மையுடையது.

## பக்தியின் தோற்றம்:

ஒருவகையில் பக்திநெறி என்பது ஒரு தொல்நெறி; வாழையடி வாழையாம் மரபின் அடிப்படையில் வருவது. மனிதன் என்று தோன்றினானோ, அன்றே மனிதனின் கடவுள் பற்றிய கொள்கை தோன்றியது எனலாம். வெளிப்படுத்துகிற முறையில் வேறுபட்டாலும் அதனைப் பண்படுத்தக் கற்றுக்கொண்ட மனிதன் கடவுள் — கொள்கையை—பக்தி நெறியைப் பின்பற்றியே வந்திருக்கிறான். எனினும் பக்தி நெறியை ஆராயும்போது பக்திநெறி அக்காலத்திலிருந்த மரபை மீறிச் செல்லும் தன்மையை அறியலாம். தமிழ்மொழி, வடமொழி ஆகிய இரு மொழிகளிலும் இந்த நிலையைக் காணலாம். வடமொழியில் உள்ள வேத இலக்கியத்தை நோக்கும் போது அக்காலத்திலிருந்த மரபுக்கு மேற்பட்டு — இன்றியமையாத வேளைகளில் மரபை எதிர்த்துமே பக்திநெறி தோன்றியிருக்கிறது.

சமுதாயம் வளரும்போது கடவுள் பற்றிய மனிதன் கருத்தும் வளர்கிறது. அமைதியான காலத்து அமைதிக்குணம் உடையவராகக் காணப்பட்ட சிவபிரான் சமுதாயம் வளர்ந்து மனிதர்களிடையே வாழ்க்கைப் போட்டி ஏற்படும்போது சிவபிரானும் வளர்ந்து வரும் சமுதாயத்தைக் காப்பவராகக் கருதப்படுகிறார். ஆகவே அவர் வலிமையுடைய அரசராகக் கருதப்படுகிறார். "நான்கு கால் பிராணிகள், இரு கால்களுடைய மனிதர்கள் ஆகிய அனைவரும் வேண்டிய உணவை பெற்று, நோயிலிருந்து நீங்கி வாழ்வதற்காக உங்களிடம் இவ்வேண்டுதல்களைச் செய்கிறோம்" (ரிக்வேதம் 1.114.1) "சிறந்த மருந்துப் பெட்டியைக் கையில் உடைய சிறந்த மருத்துவராக ருத்திரர் அழைக்கப்படுகிறார்" (ரிக்வேதம் 2.33.4) "உங்களால் அளிக்கப்படும் மருந்துகளால், நூறாண்டுகள் வாழ்வோமாக. பகை, நோய், துன்பம் போன்றவற்றை எங்களிடமிருந்து விரட்டுங்கள்" (ரிக்வேதம் 2.33.2)

அமைதியுள்ள ரிக்வேதம் காலத்தில் இவ்வாறு வணங்கப்பட்ட ருத்திரர், சமுதாயம் வளர்ந்து வாழ்வில் போட்டிகள் நிறைந்த அதர்வ வேத காலத்தில்

வேறுவிதமாகக் கருதப்படுகிறார். தங்கீழ்ப் பணிபுரியும் வலிமை வாய்ந்த போர்க் கருவிகளையுடைய ருத்திரர்களை உடையவராக உருத்திரர் கருதப்படுகிறார். ரிக்வேத காலத்தை அடுத்து வரும் சதருத்ரியம் எனப்படும் ருத்திரம் வழங்கப்படும் காலத்தில் நன்மை செய்யும் ருத்திரரின் புதல்வர்களாகக் குறிக்கப்படும். (ரிக்வேதம் I.85.1; I.114.1, II.1.6; II.33.6, II.34.2 .4.1.2) மருத்துக்கள் பற்றிய குறிப்பு இல்லை. தீமை செய்பவர்களைத் தண்டிக்கும் ருத்திரரின் பணியாளர்களாகிய ருத்திரர்களைப் பற்றியும் குறிப்புக் காணப்படுவது உருத்திரரைப் பற்றி மக்கள் கொண்டிருந்த கருத்தை தெரிவிக்கிறது. ருத்திரரின் நன்மை செய்யும் குணம் ஸ்ரீ ருத்திரத்தில் மறைக்கப்பட்டிருக்கிறதே யொழிய, மறக்கப்படவில்லை என்பது 4.11, 29; 41 ஆகிய பாடல்கள் மூலம் தெரிகிறது. வட இந்தியாவில் ஆரியர்கள் பரவத் தொடங்கும்போது நிலம் தொடர்பாக ஆரியர்களுக்கும் ஏற்கெனவே அங்கிருந்த குடிகளுக்குமிடையே போட்டி ஏற்பட்டது. பவன் என்னும் உருத்திரர் 'அரசராகிய பவர்' என அழைக்கப்படுகிறார். அந்தந்த மக்களின் அனைத்துச் செயல்களையும் கண்காணிக்கும் ஆயிரம் கண்ணுடையவராக உருத்திரர் குறிப்பிடப்படுகிறார். (அதர்வவேதம் XI .2.3)

அதர்வவேதத்தில் நீண்ட முடியுடைய முனிகள் அல்லது கேசிக்கள் ருத்திரரின் சிறப்புப் பணியாளர்களாகக் குறிப்பிடப்படுகிறார்கள். முனிகளைப் பற்றிய பேச்சு ரிக்வேதத்தில் வந்தாலும், அங்கு அவர்கள் உருத்திரரின் பணியாளர்கள் என்பதைப் பற்றிய குறிப்பு இல்லை. முனிகள் ரிக்வேதத்தில் எந்தத் தெய்வத்தாலும் உணர்ச்சி ஊட்டப்படக்கூடிய பொதுவானவர்களாகக் காணப்படுகிறார்கள். குறிப்பிட்ட முறையில் வாழும் தவ வாழ்க்கை மேல்நிலையை அடையத் துணை செய்யும் என்னும் நம்பிக்கை மக்களிடையே வளர்ந்தது. கேசிக்கள் என்பவர்கள் யார்? ரிக்வேதத்திலும் அதர்வ வேதத்திலும் அவர்கள் எவ்வாறு கருதப்பட்டனர்? தங்கள் பக்தி, தவ வாழ்க்கையால் சில சிறப்புத் தகுதிகளைப் பெற்றவர்களாகக் கருதப்படுகிறார்கள். சிறப்புத் தகுதிகளை முனிகள் பெற்றதால் இந்நிலையை அடையப் பலரும் முயன்றிருத்தல் கூடும். இப்படிப்பட்ட முனிகள் அக்கால மக்கள் பொதுவாக வாழ்ந்த வாழ்விலிருந்து வேறுபட்ட பக்தி வாழ்க்கையை மேற்கொண்டிருக்கவேண்டும். பக்தி என்ற சொல் வேதத்தின் பயன்படுத்தப்படவில்லை சிரத்தை (ஶ்ரத்தா) என்ற சொல் பக்தி என்ற சொல்லின் பொருளைக் குறிக்கும் வகையில் வேதத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த முனிகள் தாம் வடமொழி இலக்கியத்தில் பக்தி நெறியைப் பின்பற்றியவர்களாக இருக்கவேண்டும் பக்தி நெறி இல்லாத காலத்தை நம்மால் கருத இயலாது என்றே கூறலாம். வேள்வி செய்யப்பட்ட காலத்தில் கூட வேள்வி வேத தெய்வங்களை நோக்கி

2:2:3

செய்யப்பட்டதால்; தெய்வங்களை அக்கால மக்கள் போற்றினார்கள் என்றே எண்ண வேண்டியுள்ளது.

இம்முனி என்ற சொல் நினைத்தல் என்னும் பொருள் உடையமனிதன் என்ற சொல்லோடு தொடர்புடையது. வேத வேள்வியைச் செய்தவர்கள் பொதுவாக இவ்வுலக வாழ்வின் நன்மையை வேண்டிச்செய்ய, முனிகள் இவ்வுலக வாழ்வை விரும்பாமல் அப்பாலிருந்த முழுமையான விடுதலை பெறவே விரும்பினர்கள். இவ்வுலக இன்பம் வேண்டும், உலகத் துன்பம் நீங்கவேண்டும் என்னும் பொருளுடைய மந்திரங்கள், வேள்விகள் ஆகியவற்றை அவர்கள் தவிர்த்தார்கள். 'மௌனம்' என்ற சொல்லும் 'முனி' என்ற சொல்லோடு தொடர்புடையது. மௌனம் என்பது முனிகள் தங்கள் வாழ்வின் நோக்கத்தை நிறைவேற்றப் பயன்படுத்திய முறையைக் குறிக்கலாம். பொதுவானவர்கள் மந்திரத்தை உரத்த குரலில் சொல்லி வேள்வி செய்யும்போது, இம்முனிகள் மௌனத்தைக் கடைப்பிடித்திருக்க வேண்டும். இம்மௌனம் என்பது வாய்பேசாதிருத்தல் என்னும் பொதுக அளவில் நில்லாமல் எண்ணங்கள் அடங்கியிருந்ததையும் மனம் அடங்கி இருந்ததையும் குறிக்கவேண்டும். தெய்வத்தைத் தியானித்தல் மூலமே உண்மையான மௌனத்தைப் பெற இயலும் என்று முனிகள் கண்டார்கள். கௌஉதகி பிராமணத்தில் ( , 4) இக்கருத்துக்கு ஆதாரமாக ஒரு நிகழ்ச்சி குறிப்பிடப்படுகிறது. பொன்னிறப் பாவை ஒன்று நார்ப்பியா எனப்படும் சேகினிடம் வந்து, பின்வருமாறு கூறுகிறது. "நீ தானம் செய்யப்படவில்லை. தானம்யடைவதற்கான" வழி எனக்குத் தெரியும். வேள்வி செய்தாலும் அழிந்துவிடுவேனோ என்னும் அச்சம் எனக்குள்ளது; எனக்குத் தெரிந்த தானமை செய்தல் பற்றி நான் உனக்குத் தெரிவிக்க, உனக்குத் தெரிந்த அழியாமை பற்றி எனக்கு அறிவிப்பாய்"; நார்ப்பியா என்னும் சேகின் 'வேள்வி செய்வதன் மூலம் உடல் தானம் செய்யப்படுகிறது. உள்ளிருக்கும் தெய்வத் தன்மையை அறிவதன் மூலமே மனிதன் உண்மையில் தானம் செய்யப் படுகிறான். நம்பிக்கையோடு இருந்து அழியாமை எய்தப்படுகிறது; நம்பிக்கையோடு வேள்வி-செய்பவனே அழியாமையைப் பெறுகிறான். நம்பிக்கையின் இன்றியமையாமை மனிதனிடம் இருக்கும் அழியாமையைப் பற்றிய அறிவு ஆகிய இரண்டும் இந்நிகழ்ச்சியால் தெளிவாகின்றன. வேத காலத்திலிருந்த இந்நம்பிக்கையுடைய முனிகளின் வரலாறு நமக்குத் தெளிவாகக் கிடைக்கப்படவில்லை. முனிகளின் வாழ்க்கையைத் தம் வாழ்க்கையில் உரைக் கூடியவர்களே இவர்கள். அறிவுத் திறமை, பெருமை முதலியவற்றை உணர்வர். இவரும் பிற்காலத்தில் பக்திமார்க்கம் என்று அழைக்கப்பட்டதைத்தான் இம்முனிகள் வாழ்ந்திருக்கவேண்டும்.

இம்முனிகளால் வணங்கப்பட்ட தெய்வம் யார்? மனிதர்களிடமிருந்து வேள்வியைப் பெற்று, அதற்குப் பதிலாக உலக நன்மையை அளிக்கும் வேதத்

தெய்வங்களை முனிவர்கள் வணங்கவில்லை. இம்முனிகள் தெய்வங்கட்குச் சமமாக மதிக்கப்பட்டு, தெய்வங்களைப் போல உயிர்கட்கு உதவி செய்தார்கள். நீண்ட முடியுடையவர், நம் அழைப்பை உணர்ந்தார், இனிமையான நண்பர் (ரிக்வேதம் X.136.6) என முனிவேதத்தில் குறிப்பிடப்படுகிறார். முனிகளில் ஒரு சிலரே இந்த உயர்நிலையை எய்தியிருக்க முடியும். முனிகளில் பலர் உருத்திரருக்குப் பலியானோர் குறிக்கும் அந்தச் சாதாரண நிலையைத்தான் எய்தியிருக்க முடியும். பலர் முனிவரின் உயர்நிலையை அடைய விரும்பியும்; சிலர்தான் உயர்வு, உயர்வும் உயரிய நிலையை அடைந்திருக்க முடியும். உயர்ந்த நிலை அடையாத முனிகளில் பலர் வேதத்தில் உள்ள வேள்வியை வெறுத்திட்டதால் அவர்கள் அக்காலத்து ஆரியர்களால் நாத்திகர் என அழைக்கப்பட்டனர். முனிகளில் சிலர் செய்த வேலைகள் அதர்வ முனிகள் பற்றியும் ஐயத்தை எழுப்பியிருக்கக்கூடும். ஆயினும் விராத்தியர்களில் உண்மையில் உயர்ந்த நிலையை அடைந்த முனிகளின் பெருமையைச் சிலராவது உணராமல் இல்லை. அதர்வ வேதத்தில் XV.5.1 என்னும் முழுப் பகுதியே உயர்ந்த நிலை அடைந்த விராத்தியர்களின் பெருமையைப் பேசுகிறது. மரபு வழியை மீறி, வைதீகமல்லாத நாடுகளில் பயணம் செய்த விராத்தியர் கட்கு பவ, சர்வ, உக்ர எனப்படும் ருத்திரரே காப்பவராகக் கூறப்படுகிறார். தமிழிலக்கியத்தை நோக்கும்போதும் பக்தி இலக்கியம் என்பது அக்காலத்தைய மரபை மீறித் தோன்றிய வளர்ச்சியாகவே இருந்தது. சங்க இலக்கியங்களில் திருக்கோயில்கள் இருந்தன என்று கூறுவதைத் தவிர இத்திருக்கோயில் பற்றிய விளக்கங்களை நம்மால் கண்டு கூற முடியவில்லை. கோயில்களிலிருந்த சிற்பங்களைப் பற்றிய அளவிலும் நமக்குப் போதுமான விளக்கங்கள் கிடைக்கவில்லை. சங்க இலக்கியம் என்று கூறப்படுவன ஓராசிரியரின் படைப்போ, ஒரு காலத்துப் படைப்போ அல்ல. ஒரு சில நூற்றாண்டுகளின் மக்கள் வாழ்க்கை எதிரொலிகளைச் சங்க இலக்கியத்தில் கேட்கிறோம் என்று கூறலாம். பத்துப் பாட்டுக்களில் ஒன்றாகிய திருமுருகாற்றுப்படையும், எட்டுத் தொகையுள், பரிபாடல், கலித்தொகையும் ஏனைய இலக்கியங்களுக்குப் பின் தோன்றின என்பர்.

சங்க இலக்கியத்தில் சமய உணர்வு வெளிப்பட்டபோதும் அது சமய நெறியாக – பக்தி நெறியாக விரிவுபட்ட கூறு எழவில்லை என்று கூறும்படி உள்ளது. சங்ககாலத் தமிழர்கள் காதல், வீரம் என்னும் இரு துறைகளில் தங்கள் சிந்தனையைச் செலுத்தினர். அகம் (காதல்) புறம் (காதல் – அல்லாதது, வீரம் போன்ற உணர்வு) பற்றியே சங்க இலக்கியம் சிறப்பாக மொழிகிறது. காதல், வீரம் என்னும் இரு நெறிகளை மட்டும் வற்புறுத்தும் சங்க இலக்கிய நெறியிலிருந்து அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று உறுதிப் பொருள்களை வற்புறுத்தும் திருக்குறள் சங்க இலக்கியத்திலிருந்து ஏற்பட்ட திருப்பத்து வளர்ச்சியாகக் கொள்ளலாம்.

திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலையில் அறம் பற்றிய கருத்தின் வளர்ச்சி காணப்படுகிறது. முதல் நூல். திருக்குறள் வருண தருமத்தைப் பேசவில்லை. பொதுவான அடிப்படை அறத்தையே பேசுகிறது. அதனால் '(அறம்), நால்வகை நிலைத்தாய் வருணத்தோரும் வேறுபாடு உடைமையின் சிறப்பின்மையாகிய 'அச் சிறப்பு, இயல்புகளை ஒழித்து, எல்லோர்க்கும் ஒத்தலின் பெரும்பான்மையாகிய பொது இயல்பு பற்றி 'இல்லறம், துறவறம்' என இருவகையால் கூறப்பட்டது' என விளக்குவர். பரிமேலழகர். (திருக்குறள் பாயிரம், பரிமேலழகர்) அதனால் வினைப்போது வருண-தருமம் இந்நூல் எழுந்த காலத்தில் இருந்தது, எனினும், அதைப் பேச எடுத்துக் கொண்டது அடிப்படையான சிந்தனைகள் என்றும் கருதியமை புலப்படுகிறது. வருண தருமம் தெளிவாகவே சிலப்பதிகாரம், மணி மணிமேகலைகளில் பேசப்படுகிறது. வாழ்க்கை முழுமையினையும் "உறுதிப் பொருள்" அடிப்படையில் சிந்தித்து "இலட்சியத்திலிருந்து" வந்தார் வாழ நமக்கு வழிகாட்டியது திருக்குறள். இதனால் உறுதிப் பொருள் அடிப்படையில் படைக்கப் பட்டுள்ளது. எடுத்துப் பேசும் பொருள் முழுமையும் எனக் கொண்டாலும் -- வாழ்க்கையினை அகம், புறம் என்று பாகுபடுத்தாது அறம், பொருள், இன்பம் என்ற நோக்க அடிப்படையில் சிந்திப்பது சங்க இலக்கியத்திற்கு வேறான -- அதற்கு மேற்பட்ட வளர்ச்சியே. அதனால் என்ற காரணத்தால் இவ்வாறு பிரித்தார் எனக் கூறமுடியுமாயினும் அற அடிப்படையில் ஒரு சிறந்த இலக்கியத்தைப் படைக்க முயன்ற முயற்சி சங்க இலக்கிய நெறிக்கு வேறானதாகவே கொள்ளத் தக்கது. மெய்ம்மையின் உலகியல் அறம் இது; நிலையற்றதிலிருந்து நிலையானதிற்கு வழிநடத்தும் சமய அறமே. சமய அறத்தின் வெளிப்பாடாக எழுந்ததே பக்தி நெறியாகும். ஆகவே, பக்தி நெறி என்பது இருப்பதை இருக்குமாறே வியந்தும் நிலையாகக் கொள்ளாமல் ([illegible]) சமய அறத்தின் அடிப்படையில் சமுதாய மாற்றத்திற்கு இடம் கொடுக்கும் ஆற்றலுள்ள -- உயிர்ப்புடைய சமுதாயத்தை நிறுவுவதற்கும் வழிவகுக்கிறது.

<u>பக்தியும் ஞானமும்</u>:

கருமம், ஞானம், பக்தி என்னும் மூன்றுக்கும் இடையில் உள்ள தொடர்பை நோக்கலாம். ஒவ்வொரு செயலும் ஒரு நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டது. "கிரியையென மருவும் அவையாவும் ஞானம் கிடைத்தற்கு நிமித்தம்" என்பது சிவப்பிரகாசத் தொடர். சமயத்தில் விதிக்கப்படும் செயல்கள் -- ஞானத்தைப் பெறுவதற்கு ஏதுவானவே. ஞானம் என்பது என்ன? இது பரஞானம், அபரஞானம் என இருவகையாக விளக்கப்படுகிறது. தொன்று தொட்டு உயிர்க்குலம்போல உயிர்க்குப் புறமாய்க் கட்டியிருக்கிற பாசம்

நீங்கும்படி அறிவுக்கறிவாய் விட்டு நீங்காமல் உடன் நிற்கும் திருவருள் ஞானம் ஒன்று. நம் வாழ்வில் பயன்படும்படியாக உள்ள ஞானம் பரஞானம். வாழ்வில் பயன் படுவதற்கு முன், அறிவில் தோன்றும் சமய உண்மைகள் பற்றிய தெளிவு அபரஞானம் அதாவது அபரஞானம் என்பது மறைகள் கூறிய [illegible]. சமயம் பற்றி நம் அறிவில் அறிதல். இந்நிலையில் குறிக்கும் தெளிவு நம் வாழ்க்கையில் வெளிப்படும் ஞானமாகும்போது திருவருள்ஞானம் அல்லது பரஞானம் ஆகிறது. இத்திருவருள் ஞானம் குறிப்பிட்ட காலம் மட்டும் வெளிப்படாமல் வாழ்வின் நெறியாகத் தொடர்ந்து வெளிப்படும் தன்மை பக்தியாகும்.

பக்திக்கும் அடக்கத்திற்கும் மிகுந்த தொடர்பு உண்டு. வாழ்வில் வெளிப் படும் ஞானம், அடக்கத்துடன் சேரும்போது பக்தியாகிறது. "கரும் காதற் கற்ற அடியவர் ஆற்றுவான்" என்னும் திருவள்ளுவரின் தொடரும் நோக்குதற்குரியது. அடக்கம் என்பது ஐம்பொறி அடக்கம், மன அடக்கத்தைக் குறிக்கும். கிரியையாகத் தொடங்கி; ஞானமாக வளர்ந்து, பக்தியாக ஞானமே முகிழ்க்கிறது. என்பது சைவசித்தாந்தக் கொள்கை. "ஞானம் ஈசன்பால் அன்பே என்றவர் ஞானம் உண்டார்" என்பது திருஞானசம்பந்தர் ஞானம் பெற்றமை பற்றிச் சேக்கிழார் கூறும் வாக்கு.

<u>பக்தியும் சக்தியும்:</u>

இப்படிப்பட்ட பக்தியானது உணர்வின் வெளிப்பாடாக மட்டும் அல்லாமல் சமுதாய வளர்ச்சிக்குப் பயன்படும் சக்தியாகவும் உள்ளது. விளக்கோட்பாடு ([illegible]) பற்றி நம் சமய ஆசிரியர்கள் எவ்வாறு நோக்கினார்கள் என்பதை நாம் கண்டு நோக்கலாம். சுந்தரர் திருப்புக்கொளியூர் அவிநாசியில் இறைவனை வணங்குதற்கு வரும்போது ஒரே தெருவில் ஒரு வீட்டில் மங்கல ஒலியும் அதற்கு எதிர்வீட்டில் அழுகை ஒலியும் கேட்டார். சுந்தரர் மங்கல ஒலி வரும் வீட்டுக்குச் செல்லாமல், அழுகை ஒலி வருவதற்கான காரணத்தை அறிந்து அந்தச் சிறுவனைத் திருவருளால் எழுப்பி அழுகையை நீக்கி மகிழ்ச்சியை ஏற்படுத்தினார். திருஞானசம்பந்தரும் அவ்வாறே திருமருகலில் பாம்பு தீண்டி இறந்த வணிகனை எழுப்பி உடன் வந்த தமிழ்ப் பெண்ணுக்கு வாழ்வு அளித்தார். இவ்வாறு தனிப்பட்டவர்க்கு உதவி செய்ததுடன், திருவீழிமிழலையில் பஞ்சம் வந்தபோது திருஞான சம்பந்தரும் அப்பரும் இறைவனிடமிருந்து படிக்காசு பெற்றுப் பசி தீர்த்துச் சமுதாய அளவில் உதவியமை, திருக்கொடிமாடச் செங்குன்றூரில் குளிர்சுரம் வராமல் சமுதாயம் முழுமையும் காத்தமை போன்ற சமுதாயச் செயல்களும், நாம் தற்போது சமுதாயத்தில் எவ்வாறு செயல்படவேண்டும் என்பதைத் தெரிவிக்கும் அறிவு- கோலாகும். ஒருவன் துன்பப்படும்போது அதைப் பார்த்து "அது அவன் கருமம்" என்றல், தன் கருமத்தை அதிகமாக்கிக் கொள்ளும் வழியே; தலைக்குத்தப்பம்

2:2:7

எப்போது அப்போது அது நான் செய்த தொண்டின் பயனாகுமெனலாம் என அறிந்த் தெளிவு பெற்று, மேற்கொள்ளும் வாழ்வில் அன்புடன் செயல்படுவதற்குத் தகும் புரியும். அன்பும் அந்த சாஸ்திர அறிவும் அம்பலத்து ஆடுவான் பணி செய்கின் றான், பிறர் அன்பும் அடைந்த நற்றொண்டு செய்ய யாருக்குப் பயன்படும் பிய செயலாகும்.

இரு சமய குரவர்கள் நமக்குக் காட்டிய வழி. பக்தியின் சக்தி இதிலேதான் காணப்படுகிறது. அப்பர் அடிகளின் உழவாரப் பணி சமுதாய நன்மைக்கு உடலுழைப்பின் இன்றியமையாமையைக் காட்டுகிறது. சமயகுரவர்களின் இக்கோட்பாட்டை மற்றும் சம்பந்தர், உடலுழைப்பின் அவசியத்தை "அங்கி வேட்கின் வினை" என்று தொடங்கும் பதிகத்தில் 'சொன்ன செய்து எம்பிரான் கழல் போற்றும்" என்று காட்டுகிறார். 'கிருத்தியம் செய்ய வேண்டா; பணி செய்யவேண்டும்' என்பது சுந்தரர் வாழ்வில் செய்தியாகப் பெரிய புராணம் நமக்கு இயம்புகிறது. இங்ஙனமாயின் தற்கால சமுதாயத்தின் நன்மைக்குப் பணியின் இன்றியமையாமையைப் பக்திநெறி வலியுறுத்துகிறது.

***

2:3:1

## சரியை

"சிவாகம வித்தகர்" கே.எஸ். சுந்தரநாத சிவாச்சாரியார்,
தலைமை ஆசிரியர், வேதசிவாகம பாடசாலை,
திருப்புகலூர், தஞ்சை மாவட்டம்.

சுருக்கம்.

(உலகில் நல் வாழும் மக்கள் அனைவரும், அன்பு, அறம், பண்பு, பக்தி, ஒழுக்கம் முதலியன இன்றியமையாதனவாகும். மேற்கூறிய பண்புகளைப் பெற இறையருள் பெற்ற குருவழியே உற்ற துணையாகும்.

அவர்கள் பின்பற்றி வந்த ஆசாரங்களை அந்தணர்வழியும் அம்மா வழியினர் அறிந்து கொள்ளவே ஏட்டுச் சுவடிகளில் தம் அனுபவங்களைக் குறித்துள்ளார். அவைகளே ஆகமபத்ததியாகும். இவ் ஆசாரம் என்றால் என்ன என்பதைத் தெளிவுபடுத்த

"யத்யத் ஆசரதிச்ரேஷ்ட; லோகஸ்தத்அநுவர்த்ததே"

"எவ்வழி நல்வழி என்று முன்னோர் பின்பற்றினரோ அதுவே நம்வழி யாகும்"

சிவபிரானே முழுமுதற் கடவுள் என்றும் வேதமும் சிவாகமுமே அவர் அருளிச்செய்த முதல் நூல்கள், சிவாகமம் சிறப்பு நூல் எனவுங்கூறப்படுகிறது.

நாம் எடுத்த மனிதப் பிறவி கடைத்தேற சதாசிவமூர்த்தமான அருவுருவான சிவலிங்க வடிவமே சாலச்சிறந்தது எனவும் கூறப்படுகிறது.

சிவலிங்க வழிபாட்டுக்கு 'நாலுபேர் சென்றவழி போ' என்றபடி அவர்கள் திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரர், மணிவாசகர் ஆகியோர் ஆவர். அவர்கள் பின்பற்றிய வழியே சரியா, கிரியா, யோக, ஞானம், தாஸமார்க்கம் சத்புத்திரமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் எனவும் பேசப்படுகின்றன.

சரியையில் சரியை, சரியையில் கிரியை சரியையில் யோகம் சரியையில் ஞானம் எனவும் கூறப்படுகிறது.

சரியாபாதத்தில், திருக்கோயில், அப்புறவு செய்தல், மெழுக்கிடுதல் கோலம் போடுதல், திருநந்தவனம் அமைத்தல், புஷ்பம் எடுத்தல், மாலை கட்டுதல், தூபமிடுதல், தீபம் ஏற்றுதல், அமுதளித்தல்; தோத்திரித்தல், புகழ்ந்து பாடல், வாழ்த்தல், [illegible] எனபனவாம்.

மேற்குறித்த செயல்கள் ஒவ்வொன்றுக்கும் திருத்தொண்டர் புராண நூலே சான்றாகும். திலகவதியார், முருகநாயனார், குங்குலியக்கலயர், நமிநந்தி அடிகள் கலியநாயனார், மெய்ப்பொருள் நாயனார் இளையான்குடிமாறர், பூசலார், கண்ணப்பர், அப்பூதி அடிகள் முதலானோர்.

மேலும் திருக்கோயில் அமைப்பு முதலியன பிராயசித்தம் முதலியன எனபதாம்.)

உலகில் நன்கு வாழும் மக்கள் அனைவரும் இன்புற்று வாழ — பண்பு, பணிவு ஒழுக்கம் முதலியவற்றுடன் ஆரோக்கியமாக வாழவே நம் முன்னோர்கள் இறையருள் பெற்ற ஒரு வழியாகச் சில ஆசாரங்களைப் பின்பற்றி வாழ்ந்தனர்.

தமிழ்மறையின் அவ்வழியாக நடக்க ஏட்டுச் சுவடியில் நம் எல்லோர்க்கோ பொறித்தனர்.

இனி, ஆசாரங்கள் என்பன எவை? என்பதைக் காணுமிடத்து

"யத்யத்ஆசரதிஸ்ரேஷ்ட; லோகஸ்தத்அனுவர்த்ததே"

இதன் கருத்து "எவ்வழி நல்வழி என்று நம் முன்னோர்கள் பின்பற்றினரோ, அவ்வழி நம் வழியாகும்" என்பதாம்.

"நால்வர் போன வழி பேர்" என்பர்

அந்த நால்வர் சந்தானாசாரியார்களான மெய்கண்ட தேவர், அருணந்தி- சிவாசாரியர், மறைஞானசம்பந்தர், உமாபதிசிவம் முதலியவர்களும், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் முதலியவர்களும் ஆவர். அவர்கள் திருவாய்மலர்ந்தருளிய திருமுறையாம்; தமிழ்மறையாகும்.

தமிழ்மறைகள் ஓதப்பட்ட இடங்கள் திருக்கோயில்கள். அத்திருக்கோயில்கள், வேதசிவாகம முறைப்படி கட்டப்பட்டவைகளாகும். வேதாகமங்கள் இரண்டும் எல்லா நூல்களுக்கும் முதனூலாகி அநாதிமுத்தராகிய பரமசிவனால் ஆன்மாக்களைப் பொருட்டு அருளிச் செய்யப்பட்ட நூல்களாகும்.

"வேத முதல் நூல்கள் பதிபசுபாசம் விளக்கு
போதியுரைத்திடும் சிற்றுயிர்க்கு" (சைவசமய நெறி.)

"முதலாகும் வேத முழுதாகமம்
பதியான ஈசன்பகர்ந்த இரண்டு."

வேதம் நான்கு. இருக், யசுர், சாமம், அதர்வணம் என்னும் வேதங்கள் நான்கும் சிவபெருமானுடைய திருமுகங்கள் நான்கினின்றும் தோன்றியன. சிவாகமங்கள் இருபத்தெட்டும் ஐந்தாவதாகிய ஈசான முகத்தில் தோன்றியன.

ஆகமம் என்னும் சொல்லுக்கு 'ஆ' என்பது ஞானமும், 'க' என்பது மோக்ஷமும் 'ம' என்பது மலநாசமுமாம். ஆகவே ஆன்மாக்களது மலத்தை நாசம் பண்ணி ஞானத்தைப் புகுப்பித்து மோக்ஷத்தைக்கொடுப்பது எனப் பெயராயிற்று.

ஆகமங்கள் இருபத்தெட்டும் முற்பத்தும் விஞ்ஞானகலரும், பரமசிவனது அனுக்கிரகத்தைப்பெற்ற பிரணவர் முதலிய அணுசதாசிவர் பதின்மருக்கும் அருளிச் செய்யப்பட்டமையால் சிவபேதம் என்றும் ஏனைய பதினெட்டாகமங்களும் அநாதிருத்திரர் முதலிய பதினெட்டு உருத்திரர்களுக்கும் அருளிச் செய்யப்பட்டமையால் உருத்திரபேதம் என்றும் சொல்லப்படும்.

இவ்வாகமங்கள் சதாசிவ மூர்த்தியால் அனந்த தேவர்க்கும், அனந்த தேவரால் ஸ்ரீகண்டருக்கும், ஸ்ரீகண்டரால் தேவர்களுக்கும், தேவர்களால் முனிவர்களுக்கும், முனிவர்களால் மனுடருக்கும், மனுடரால் மனுடருக்கும் பரம்பரையாய் உபதேசிக்கப்பட்டு உலகத்தில் பரவினவாம்.

ஆகமங்கள் தனித்தனி நான்கு பாதங்கள் உடையன. இவ்விருபத்தெட்டாக-மங்களும் தனித்தனி சரியாபாதம், கிரியாபாதம், யோகபாதம், ஞானபாதம் என நான்கு பாதங்களையுடையன.

இவற்றுள் சரியாபாதம் சமயாசாரம் முதலியவற்றையும், கிரியாபாதம் அநுட்டானம், பூசை, செபம், ஓமம், பிரதிட்டை, உற்சவம், பிராயச்சித்தம் முதலியவற்றையும், யோகபாதம், பிராணாயாமம் முதலிய அங்கங்களோடு கூடிய சிவயோகம் முதலியவற்றையும், ஞானபாதம் பதி, பசு, பாசலக்ஷணங்களையும் உபதேசிப்பனவாம்.

"மஹாஜன: யேந கத: ஸபந்தா:" என்பது போல் சிவபெருமான் திருவடியை அடைவதற்குரிய நான்கு மார்க்கங்கள் உள்ளன. அவை தாஸமார்க்கம், சற்புத்திரமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என்பனவாம்.

சித்தாந்தசாராவளியும் ஞானம், யோகம், கிரியை, சரியை எனப் பிரிந்தனர். நம் கட்டுரையின் நோக்கம் சரியைப் பற்றித் தொடர்கிறது.

சரியை என்றால் என்ன? அதைப்பற்றி நூல்கள் என்ன கூறுகின்றன? அதன் மூலம் நாம் அறிய வேண்டியவை எவை? என்பதைச் சிந்திப்போமாக.

சரியையின் பொருள் மானிடப்பிறவி எடுத்து, கள், சூது, கேடு நீங்கிப் பிறந்தோர், புகழுக்குக் காரணமான செயல்களில் ஈடுபடாதிருப்போரை நம் முன்னோர்கள் அவர் சரியை அறியிலர் என்பர். சரியை என்பது ஒழுக்கம் தோற்றும் நடத்தையாகத் தெளிந்து சிவார்ப்பிதம் செய்தலாகும்.

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு பாதங்களும் தனித்தனி உபாயம், உண்மை என இரு வகைப்படும். புகழ் முதலியவற்றை விரும்பி உலகப்பயனை நோக்கிச் செய்யும் உபாயச்சரியை முதல் நான்கும்; மெய்யன்போடு முத்தி நோக்கமாகச் செய்யும் உண்மைச் சரியை முதல் நான்குமாகச் சிவபுண்ணியம் எட்டாம். இவை ஒவ்வொன்றும் நான்காகி முப்பத்திரண்டாக விரிந்து பல திறப்படும்.

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற"

மனத்துக்கண் மாசிலன் ஆதல், மனத்தில் உண்டாகும் பாவங்களும், புண்ணியங்களும் அறும். அருளுடைமை, பொறை, பிறர்பொருள் விரும்பாமை,

செய்ந்நன்றி மறவாமை, நடு நிலை நிற்றல், [illegible], அபிமானம் பேணுதல், அழுக்காறின்மை, அவா வெகுளாமை, பிறர் [illegible], சிவயோகம் முதலியன. இறைப்பணியால் வாக்கினால் உண்டாகும் புண்ணிய பாவங்கள் புறங்கூறல், உண்மை பேசுதல், தரும போதித்தல், இனிய சொல்லுதல் முதலியனவும், சரீரத்தினால் செய்யப்படும் புண்ணிய பாவங்கள், அரிய தவங்களைச் செய்தல், நந்தவனச் சோலைகள் அமைத்தல், மடங்கள் கட்டுதல், குளங்கள் அமைத்தல் முதலியனவாம். மேற்குறித்த அனைத்தையும் குன்றத்தூர் அடிகளார் பாடியுள்ளார்.

<u>சரியையிற் சரியை</u>:

சிவபெருமான் வீற்றிருக்கும் திருக்கோயிலில் ஆசாரமுடையவர்களாகச் சென்று மெல்லிய துடைப்பத்தினால் திருஅலகிடுதல்; பசுவின் சாணி கொண்டு பூதப்பிரேத பைசாச தோஷங்கள் நீங்குவதற்கும், அசுத்த வாயு, துர்நாற்றம் நீங்குவதற்கும் செய்கிற மெழுகுதல். இவை இலட்சுமிகரமும் சாந்திக குணமும் தருமென்பது உண்மை. இத்திருத்தொண்டைத் திலகவதியார் நியதியாகச் செய்து முத்தியடைந்த சரித்திரம் விளக்கும்.

திருக்கோயில்களில் நியதியாகத் திருப்பணியிடுபவர்கள் ஆன்மாவை — மறைந்திருக்கும் ஆணவ மலசக்தி குன்றி முத்தியடைவார்கள் என்பது திண்ணம். இத்தொண்டை குங்கிலியக்கலயர் செய்து முத்தியடைந்தார்.

திருவிளக்கிடுபவர்கள், தீபத்திற்கு நெய் கொடுப்பவர்கள் பாவம் நீங்கி உண்மை ஞானம் விளங்கப்பெற்றுச் சிவபெருமானுடைய திருவடியை அடைவார்கள். இதனை நமிநந்தி அடிகள் செய்து முத்திபெற்றார். இதனைத் திருநாவுக்கரசு சுவாமிகள் திருநேரிசையில் "பெரும்புலர்காலை மூழ்கி ....... வீரட்டனாரே" என்றும்; திருத்தாண்டகத்தில் "நிலைபெறுமாறு .......... அலகுதிலே!" எனவும் திருவாய்மலர்ந்தருளியிருக்கிறார்.

திருவருட்பா முதல், தேவாரம் முதலிய திருவருட்பாக்களைப் பண்ணமைப்புடன் பக்தி ரசத்துடன் கண்ணில் நீர் ததும்ப ஆனந்த மேலிட்டு நெஞ்சு நெக்கு நெக்குருக மயிர் சிலிர்ப்புத் தானும் கேட்போரும் மெய்யன்பு கடுமாறு பாடுதலாம். இதனை நால்வர்களும் செய்து முத்தியடைந்தார்கள். இளையான்குடிமாறர் அன்னம் அளித்தலால், அடியார்களுக்குக் குறைவின்றி உணவு வழங்கியதால் சிவப்பேறு பெற்றார்.

திருவேடம் தாங்குதல், திருநீறு, உருத்திராட்சம் முதலிய திருவேடமுடையாரும் பஞ்ச பிரம்ம ஷடங்க நியாசம் முதலிய நியாசங்கள் வாயிலாகச் சிவோகம் பாவனை செய்வோரும் அகப்பூசை, புறப்பூசை செய்வோரும்,

தம்பிரான் தோழமை பூண்ட சிவத்தோடு நட்பு நிற்போரும் சிவமேயாவர். அவரைச் சிவமாகப்பாவித்து வழிபடுதல் வேண்டும்.

சிவனடியாரோடும் மெய்யன்பிற்கலந்து, அவர் புரி சகுணமொழுகி அவர் முன் தாம் பொருந்திப் பணிவுடன் நின்று, அவர் சொல்படி, திருமொழி கூற பற்றி பணிதல் வேண்டும். இவ்வகை மெய்ப்பொருள் நாயனார் சிவவேடம் தாங்கிய பகைவனையும் அடியார் என வழிபட்டதால் முத்தி-யடைந்தார்.

மனத்தில் பெருமானே வழிபட்ட பூசலார் மனக்கோயில் சொல்லிட மாதிரியல்லவா? இதைப்போல் பல உள.

"அப்பர் பணி செய்ய என்னை யாளாக்கி விட்டு விட்டால்
இப்ப நிலை நாமே வந்த சம்மதம் பராபரமே"

இச்சரியை இந்திரியத் தொழிலாகிய புறத்தொழில் மாத்திரையானே சிவபெருமானை உருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடாம். இந்நிலை அடைந்தோர் சிவலோகத்தில் இருத்தலாகிய பதமுத்தியைப்பெறுவர்.

சரியையாளர் திருக்கோயில்களில் சுயம்புவாக அமைந்துள்ள இலிங்கத்திலும் தேவர்கள் இருடிகள் குரவர்கள் முதலியோரால் சிவாகம முறைப்படி பிரதிட்டை செய்யப்பட்ட சிவலிங்கம் முதலிய திருமேனியிலும் சிவமெனக்கண்டு வழிபடுவார்கள். சிவபெருமான் அவர்களுக்கு அத்திருவுருவங்களில் வெளிப்பட்டு நின்று திருவருள் செய்வர்.

சரியையாளர்களுக்குத் தீக்கை என்பதை ஆராய்வோம்.

ஆன்மாவைப் பாசத்தைச் செறுத்துச் சிவத்தோடு தொடுப்பதாகிய சிவசக்தி சரியையே தீக்கை எனப்படும். இது பலவகைப்படும். தீக்கை - மாணுக்கர் ஞானமார்க்கத்திற்குரியவரும், கிரியா மார்க்கத்திற்குரியவரும் என இரு வகைப்படுவர். இருவகைத்தவரும் உத்தமர், மத்திமர், அதமர் என மூவகையாவர். அவருள் கற்றறிந்து சரியையாதி ஒழுக்க நெறியில் நிற்பவர் உத்தமர். கற்றறிந்தும் ஒழுக்க நெறியில் நில்லாதவர் மத்திமர். கல்லாமையும் ஒழுக்க நெறி நில்லாமையும் உடையவர் அதமர். இத்தகையோருக்கு அவரவர் பக்குவத்திற்கேற்ப ஞானதீக்கை, கிரியாதீக்கை என்னும் இரண்டினுள் ஒன்றைச் சிவபெருமான் குருவாயிலாக நின்று செய்தருளுவர்.

மாணாக்கரது சஞ்சித வினை, நோக்காலும் மந்திர சத்தியாலும் அழியும். பிராரப்தம் உடலோடழியும். ஆகாமியமும், மாயமும், ஞானத்தாலும் சிவோகம் பாவனையாலும் அழியும். ஆதலால் வினை நீக்கத்திற்குரிய தீக்கையும் இன்றியமையாத வேண்டப்படும். தீக்கை மாணாக்கரது பக்குவமும் ஆற்றலும் நோக்கிப் பலவகையாக அருளப்படுவதாம்.

2:3:6

சகலருக்குத் தீட்சை செய்து பாசத்தை அறுக்கும் முறையானது நயனதீட்சை, பரிசதீட்சை; வாசகதீட்சை, மானச தீட்சை, சாத்திர தீட்சை முதலிய பலவாம்.

அத்தீட்சை சமயம், விசேடம், நிர்வாணம், ஆசாரியாபிஷேகம் என நான்கு வகைப்படும். இந்நான்கையும் பெற்றவர் திருக்கோயில் பூசைக்குரியவராக இருப்பர்.

இம்முறையில் எல்லாம் ஆகமாதி ஆலயங்களும் உபாசனைகளும், பத்திகளும் ஒன்றுக்கொன்று தொடர்பு உள்ளதாம் விரிவாய்ச் சொல்லப்படும். இப்படி யின் அருமையாகப்பெற்ற மனிதப்பிறவியில் வரும் பயன் சரியை, கிரியை யோகம், ஞானம் என நான்கு பாதங்களும் நின்று வழிபட்டுச் சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் பெற்று நித்யானந்த முத்தியைப் பெறுவதாம்.

விரும்பும் சரியை முதல் மெய்ஞ்ஞான நான்கும்
அரும்பு மலர் காய்கனி போலன்றோ பராபரமே!

நாமும் ஆன்றோர்கள் கூறிய வழியைப் பின்பற்றிச் சிவாநுபவத்தைப்பெற்று வாழ்வாங்கு வாழ்வோமாக.

***

## சமயநெறி — சாத்திரங்கள் யோகம்:

முனைவர் சுப்பாரத்தினம்,
இணைப் பேராசிரியர், சைவசித்தாந்தத் துறை
சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை

2:4:1

### அ. தமிழ் நூல்கள்:

யோக நெறியைப் பற்றி முறைப்படக் கூறும் நெடும்பாட்டோ நூலோ சங்ககாலத்தில் எழுதப்படவில்லை எனினும், சீர்மை மிக்க யோக நெறியில் [illegible] நின்று சிவப்பேறு பெற்ற சான்றோர்களைப் பற்றியும் முனிவர்களைப் பற்றியும் பல குறிப்புகள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. ஆதலின், யோகநெறி தமிழகத்தில் பண்டைக் காலத்திலேயே வேரூன்றி இருக்க வேண்டும் எனக் கருத இடமுள்ளது. திருமுருகாற்றுப்படையில் திருவாவினன்குடிப் பகுதியில் வரும் முனிவர்களைப் பற்றிய வருணனை குறிப்பிடத் தக்கதாகும். மணிமேகலைக் காப்பியத்திலும் யோகநெறி பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

தலைசிறந்த யோகநூலாகக் கருதப்படும் திருமந்திரமே யோக நெறியைப் பற்றி மிகவும் விளக்கமாகக் கூற எழுந்த முதல் தமிழ் நூலாகும். பிற்காலத்தே யோகநெறி பற்றி எழுந்த பல தமிழ் நூல்களிலும் திருமந்திர நூலின் செல்வாக்கினைத் தெளிவாகக் காணமுடிகிறது.

சைவத் திருமுறைகள் பன்னிரண்டிலும் மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கிலும் யோகநெறியைப் பற்றிய குறிப்புகளையும் சிறப்புகளையும் நன்கு காணலாம். வாகீச முனிவரின் ஞானாமிர்தம் என்னும் நூலும், தத்துவப் பிரகாசம், சிட்டானுபூதிசாரம், அத்துவிதக் கலிவெண்பா, ஒழிவிலொடுக்கம், சிவநெறிப்பிரகாசம், சிவானந்தமாலை, சைவசமய நெறி முதலான நூல்கள் பலவற்றிலும் யோகநெறியின் சிறப்பு விளக்கப்பட்டுள்ளது.

இன்று கிடைத்திருக்கும் திருப்புகழ்ப் பாடல்களுள் முந்நூற்றுக்கும் மேற்பட்ட பாடல்கள் யோக நெறியின் நுட்பங்களையும் முறைமையையும் நன்கு விளக்குவனவாகத் திகழ்கின்றன. தாயுமானவரின் பாடல்களிலும் பட்டினத்துப் பிள்ளையார் பாடல்களிலும் யோகநெறிக் கருத்துக்கள் பயின்று வந்துள்ளன. குமரகுருபர சுவாமிகள் அருளியுள்ள பிரபந்தங்களிலும் சிவஞான முனிவரின் பிரபந்தங்களிலும் கச்சியப்ப முனிவரின் நூல்களிலும் யோகத்துறைக் கருத்துக்களைக் காணலாம். யோக உபநிடதங்களிலும் சிவாகமங்களிலும் காணப்பெறும் நுண்மைக் கருத்துக்களையெல்லாம் அமைத்து அண்மைக்காலத்தே பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் பல திருப்பாடல்கள் அருளியுள்ளார்.

2:4:2

ஆ. <u>மொழிபெயர்ப்பு நூல்கள்</u>:

கந்தபுராணம், சூதசம்ஹிதை (ஞானயோககாண்டம்), வாயுசம்ஹிதை, ஞானகாண்டம், தணிகைப்புராணம், திருப்பரங்கிரிப் புராணம், திருவேரகப் புராணம் முதலான நூல்களிலும், சிவமகாபுராணம், லிங்கபுராணம் முதலான நூல்களிலும் யோகநெறியின் முறைமை குறித்தும் சிறப்பு குறித்தும் பல விளக்கங்கள் கூறப்பட்டுள்ளன.

<u>வடமொழி நூல்கள்</u>:

நூற்றெட்டு உபநிடதக் கோவையுள் (அத்வயதாரகம் முதல் உறம்சோபநிடதம் வரை உள்ள) இருபது உபநிடதங்கள் பல்வேறுவகைப்பட்ட யோக நெறிகளைப் பற்றியும் விளக்கமாகக் கூறுகின்றன. பதஞ்சலியாரின் யோக சூத்திரம் தனிச்சிறப்பு வாய்ந்தது. சிவாகமங்களுள் மூலாகமம் என்ற வகையில் சுப்பிரபேதம், மகுடம், கிரணம் எனப்படும் மூன்று நூல்களிலும் யோகபாதப் பகுதிகள் காணப்படுகின்றன. ரௌரவ ஆகமத்தில் வித்தியாபாதப் பகுதியில் யோக நெறிக் கருத்துக்கள் சில காணப்படுகின்றன. உபாகமம் என்றவகையில் மதங்க பாரமேசுவரம், மிருகேந்திரம் என்னும் இரண்டு ஆகமங்களிலும் அமைந்துள்ள யோகபாதப் பகுதிகள் பல நுண்ணிய கருத்துக்களைக் கூறுவனவாகத் திகழ்கின்றன. சிவாகமங்களின் அடிப்படையில் எழுந்த அகோரசிவாசாரிய பத்ததி, சோமசம்பு பத்ததி முதலான நூல்களிலும் சித்தாந்த சாராவளி முதலான நூல்களிலும் யோகநெறி பற்றிய விளக்கங்களையும் செயல்முறைகளையும் காணலாம்.

அட்டாங்க யோகமே பெரு வழக்கு என்றும் சிவாகம மரபு ஆறங்க யோகநெறிக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றது. மேற்கூறப்பட்ட நூல்களின் அடிப்படையில் இக்கட்டுரை அட்டாங்க யோக முறையையும் ஆறங்க யோக முறையையும் விளக்கிக் கூறுவதாக அமைகின்றது.

**

## 2:4:3 சாத்திரங்கள் — யோகம்

**தமிழ்நாட்டில்:**

யோகநெறியைப் பற்றி நாம் தமிழ்நாட்டின் சங்ககாலத்தில் எழுவினால் எனினும் யோகப்பயிற்சி அக்காலத்தில் அறிந்த நிலையில் இருந்திருக்க வேண்டும் எனக் கருத இடமுண்டு. திருமுருகாற்றுப்படையில் அமைந்துள்ள 'புலியின் காட்சி முனிவர்ப் பற்றிய' செய்திச் சொல்லோவியம், அம்முனிவர்கள் சிறந்த யோகியர்களாக இருந்திருக்க வேண்டும் என்பதைப் புலப்படுத்துகிறது. அவர்களுடைய முனிவர் ஒருவர் ஒருங்காலில் தவமிருந்திருந்த போது யானை முதலான விலங்குகள் அவருக்குப் பணிசெய்த நிகழ்ச்சியைப் பற்றிக் கூறும் பாடலொன்று புறநானூற்றில் காணப்படுகிறது. திருமுருகாற்றுப்படை யோகத்தைப் பற்றிக் கூற எழுந்த நூலன்று; எனினும் இடைகலை விளக்கும் ஆறாதாரங்களைக் குறிக்கும் சொல் அடிப்படையில் அருளாளர் பலர் யோகப் பயிற்சிக்குரியவை செய்யும் காலாக அதைக்கொண்டு நாள்தோறும் முறைப்படி ஓதி வந்திய வழிபாட்டு வழிப்படி சிறப்பாக இக்கால் காணலாம்.

யோகநெறியில், மதிமண்டலத்தைத் தாக்கி அதனின்று பெருகும் அமிழ்தத்தைப் பருகி இன்புறும் நிலை, யோகப்பயிற்சி உடையோர்க்குக் கைகூடும். அமிழ்தைப் பருகுவதால் வருகின்றதாகிய யோக இன்பமே எனக்கொண்டு கவிஞர் ஒருவர் "உண்டுதெளிந்த இவ் யோகத்தின் உறுபயன் கண்டாள்...." என்கூறுவதாக மணிமேகலையில் வரும் பகுதியும் இங்கே நினைவு கூரத்தக்கது.

யோகநெறியை விளக்க எழுந்த முதல் தமிழ் நூல் திருமந்திரமே. திருமந்திர நூலின் மூன்றாம் தந்திரம் முழுவதும் (335 பாடல்கள்) யோக நெறியையும் அதன் பயனையும் மிகவும் விரிவாக விளக்குவதே. மூன்றாம் தந்திரம் தவிர்த்த ஏனைய தந்திரங்களிலும் இடைப்பிறவரலாக யோகக் கருத்துகள் மிகுதியாகக் காணப்படுகின்றன.[1]

தேவாரம் முதலான திருமுறைகளிலும் அங்கங்கே யோகநெறி, யோகப் பயன் முதலானவற்றைப் பற்றிய குறிப்புகளைக் காணலாம்.

"ஊனில் உயிர்ப்பை ஒடுக்கி ஒண்சுடர்
ஞான விளக்கினை ஏற்றி நன்புலத்
தேனை வழிதிறந் தேத்துவார்க் கிடர்
ஆன கெடுப்பன அஞ்செழுத் துமே"

(மூன்றாம் திருமுறை).

திருஞானசம்பந்தப் பெருமான் அருளியுள்ள திருவீழிமிழலைப் பதிகங்களுள் ஒன்று திருவிடைக் காப்பிப் பதிகப்பயனாக "அந்தர வுலகத்தவர்களாகி அமபோகமோடு யோகம் அவரதே" என்கிறார்.

"திரு சிந்தையைத் தீர்த்துச் செம்மை செய்த
பருதி வானைப் பற்றிப் பரம் ஆகிற"

— திருவானைக்காப் பதிகம்; 5 ஆம் திருமுறை.

"உயிராவணமிருந்து உற்றுநோக்கி
உள்ளக்கிழியின் உருவெழுதி
உயிரா வணஞ்செய்திட்டுன்கைத் தந்தால்
உணரப்படுவாரோடு ஒட்டிவாழ்தி"

—திருவாரூர்ப்பதிகம்: 6 ஆம் திருமுறை

இவை திருநாவுக்கரசர் பெருமான் அருளும் யோகக் குறிப்புகள்:

"தேடுவன் தேடுவன் செம்மலர்ப் பாதங்கள் நாள்தொறும்
நாடுவன் நாடுவன் நாபிக்கு மேலேயோர் நால்விரல்"

—திருவாமாத்தூர்ப்பதிகம்: 7 ஆம் திருமுறை

இவை சுந்தரர்பெருமான் அருளும் யோகக் குறிப்பு. யோகப்பயிற்சியில் முதிர்ந்த நிலையில் கேட்கப்பெறும் தசநாதங்களைப் பற்றிய குறிப்பினை மாணிக்கவாசகப் பெருமான் அருளிய திருப்படையாட்சியில் காணலாம் 'நாதம் பம்பி ஆரூரர் நாமம் நவின்ற நவிற்றாலே; ஆம்படியாடி அமுதாதி சித்தியவா!' அவ்வாறு பெருமிழலைக் குறும்ப நாயனார் யோகத்தால் நாவலர் பெருமானுக்கு முன்பேயே நடந்து திருக்கயிலைமலையை நண்ணிய பெருவிருத்தையைப் பெரியபுராணம் பேசுகிறது.

திருமுறைகளைப் போன்றே மெய்கண்ட சாத்திரங்களிலும் யோக நெறிபற்றிய விளக்கங்களையும் குறிப்புகளையும் காணலாம். திருச்சிலம்போசை ஒலிவழியே சென்று நிருத்தனைக் கும்பிடும் நெறி யோகநெறியே. ஆதார யோகம் நிராதார யோகம் என்பவற்றைப் பற்றிய செய்திகளைத் திரு உந்தியாரிலும் திருக்களிற்றுப்படியாரிலும் காணலாம். சிவஞான சித்தியாரிலும் சகமார்க்கம் எனப்படும் யோகமார்க்கத்தைப்பற்றிய குறிப்புக்களைக் காணலாம்.[2]

சருவோத்தமம் எனப்படும் சிவாகமத்திற்கு உரிய உபாகமங்களுள் ஒன்று சிவதருமோத்தரம் என்பது. இதன் மொழிபெயர்ப்பாக 'சிவதருமோத்திரம்' என்ற பெயரிலேயே தமிழில் ஒன்று அமைந்துள்ளது.[3] இதன் ஆசிரியர் மறைஞானசம்பந்த நாயனார் எனக் கூறுவர். இந்நூலின் ஐந்தாவது

படலம் ஒன்பது யோகங்களில் செல்லும் கூறுகிறது. கருமயோகம், ராஜயோகம், மந்திரயோகம்(செபம்), தியானயோகம், ஞானயோகம் எனப்படும் ஐந்தனை தியானயோகம் என்ற யோகத்தைக் குறிப்பிடுகிறது. தியான யோகத்தில் பயன் சாருதல் எட்டுப் படிகள் என நிலைகள் குறிப்பிடுகிறது.

"ஆதாரம், ... யோகம் ... தோன்றும் பொருள் ...
சிறந்த பயன் போகமும், சிறந்த செய்த பயன்களெலாம்
மறைந்த ... விலைமதிக்க, மறம் உறும் வேதாகம்
நிற்கும் பிந்தும் ஞானயோகே நெஞ்சக என்னும் நெறியதில்"

(3:8)

தொன்ற காலத்தை அடுத்து, தோன்றிய ஒழிவிலொடுக்கம் என்னும் நூல் மிகச் சிறந்த உவமைகளின் வாயிலாக அரிய கருத்துகளைக் கூறும் ஒப்பு-யர்வற்ற நூலாகும். பொதுவாகவே தமிழ் யோகமரபு மூச்சை அடக்கியும் உடம்புகளை ஒடுக்கியும் செய்யும் அடயோகமுறையை ஏற்காதது ஒன்று. இந்த அடிப்படையில்தான் கண்ணுடைய வள்ளலார் யோகக் கழற்றி என்னும் ஒருபகுதியை அமைத்துக் கொண்டு, மிகச் சிறந்த சிவயோக முறை என்னாது இருக்க வேண்டும் என்று தெளிவாக விளக்குகிறார்.

"உடலேசப் பிடித்தோ உடம்பைப் பிடித்தோ
விடாத போமழுக்கோ வேறோ — துறவி நீ
கல்லுடா விடுடைத் தேடும் கழுசலைப்போல்
என்னுடா யோகம்பெறு என்"

(ஒழிவிலொடுக்கம்: 5:8)

எனக் கண்ணுடைய வள்ளலார், அருளினிப் பெறுநர்க்குப் போகின்ற அசட்டு யோக முறையைக் கடிக்கின்றார்.[4]

சீகாழித் தத்துவப்பிரகாச சுவாமிகள் அருளிச்செய்த தத்துவப் பிரகாசம் என்னும் நூல், சிவாகமங்களைப் போன்ற சரியை, கிரியை, யோகம், ஞானம் எனப்படும் நான்கு பகுதிகளைக் கொண்டு திகழ்கிறது. யோகப்பகுதியில் உள்ள பதினெட்டுப் பாடல்கள் யோகநெறி முறைகளை சிவாகமக் கருத்துக்-களோடு முரணாவகையில் சிறப்பாகக் கூறுகின்றன.

"யோகத்தில் யோகம் நிராதாரமே அதனால்
உயர்புலனும் கருமேந்திரியமும் உள் அடக்கி
யோகத்தில் வளிகட்டுந்த ஒருவிதப்பி ஏற்ப
மூச்சுக்கரம் ஆதாரம் அடைவே நீக்கி
மாகத்தில் மதிக்கலையில் அமுதம் தேக்கி

3:4:6 வளருமகா நடுவொளியின் நடந்தது மதியை
சந்திரனாம் சுடர் செய்யானாம் சுடர்

மேட்டுத்திறந் சொல்லியுந்து செல்லுதல் பல (161)
என்ற பாடல் பிராணாயாமத்தைப் பற்றிக் கூறுவதாகும்.

இதற்கு அடுத்த காலகட்டத்தில் தோன்றியவர் பக்தி-நெறிநின்ற அருண-கிரியும் சிறப்புடைய அருணகிரிநாதராவார். இவர் பாடியருளிய திருப்புகழ்ப் பாக்களுள் சில யோகம் பற்றிய பாடல்கள், யோகநிலை பற்றிய அருமை பாடல்களாகத் திகழ்கின்றன. யோகத் திருப்புகழின் பெருமை அறிந்து கொள்ள, எடுத்துக்காட்டாக ஒரு பாடலைக் காண்போம்:

"நாலுசய் நந்த பஞ்சாக்ர லகம லத்தில் அமிர்ந்திய
நாடியிடைத்தி மந்திர பந்தியாலே
நாரத புரத்தில் இந்துவின் கரு நேக்கி நக்ஷர
நாதிசை நடத்தி மண்டல சந்தியாறில்
கோலமும் உதிப்ப கண்டு நாலினை மறித்தி தம்பொ
கோவென முழக்கு சங்கொலி விர்நாதம்
கூடிய முகட்டில் நித்ய வானவ முகத்தை உட்கொரு
கோடிநடனம் செய்பதம் காண என்று சேர்வேன்
(சிதம்பரத் திருப்புகழ்)

அருணகிரிப் பெருமானின் காலத்திற்குப் பிறகு தோன்றிய அருளாளர்களுள் தாயுமானவரும் பட்டினத்து அடிகளும், யோகநெறிப் பாடல்கள் அருளியவர்களில் குறிப்பிடத்தக்கவர்களாவர். தாயுமானவரின் சித்தர்கணம் என்ற பகுதி யோகசித்தி பெற்ற பெரும் ஞானியரின் பெருமையை எடுத்துரைக்கின்றன.

"யோகியர்க்கே ஞானம் ஒருங்காம், பேரன்பால்
ஆகியரும் யோகியர்க்கே சார்ந்தோர் பராபரமே"
(பராபரக்கண்ணி: 90)

எனக் கூறும் தாயுமானவர், ஞானம்பெற்றுக் கருத்தியே யோகப்-பெற்றியை அறிவுறுத்துகின்றார்:

".........மந்தரச நாடிதீர்ம்
சுத்திசெய் மூலப் பிராணனோ டக்கினியைச்
சோமவட்டத் தடைத்து-
சொல்லரிய அமிர்தமுண்டு அற்புதமுடன் கற்பங்கள்

தோராயிலை நிற்கவில
2:4:7 சித்திசெய்யும் ஞானம் அலாக் கூடுமோ?"
(சிவயோகநூற் சூ: 11)

சிவமகா புராணத்தைச் சார்ந்த வாயுசம்ஹிதையைக் குலசேகர வரகுணராம பாண்டியர் தமிழ்ச் செய்யுளில் மொழிபெயர்த்துப் பாடியுள்ளார். பூர்வகாண்டம் உத்தரகாண்டம் என இரு பிரிவுகளாக அமைந்துள்ள நூலில் 1334 பாடல்கள் காணப்படுகின்றன. ஞானயோகம் உரைத்த அத்தியாயம் என்னும் பகுதி 70 பாடல்களால் ஞானயோக நெறிமுறைகளையும் பேறுகளையும் விளக்கிக் கூறுகிறது.

"அடியவர்க் குரைப்பச் சிவனே நன்றாகும் யோகம் பற்றி
ஒருமையே உத்தமப் பிரவர்த்தி நாலைந்தால் யோகங்களால்
தொடியுமா மந்திர யோகம் பரிச யோகத்தவர் பாவ யோகம்
வருவிலா அபாவயோகம் திகழ்மா யோகம் ஐந்தாம் மன்னும்"

என நூல் மந்திரயோகம், பரிசயோகம், பாவ யோகம், அபாவ யோகம், மா(ஞான) யோகம் எனும் ஐவகை யோகநிலைகளைப் பற்றிக் கூறுகிறது.

வல்லூர்த் தேவராசப்பிள்ளை அவர்களால் மொழிபெயர்த்து இயற்றப்பட்ட ஈசர்கீதை எனும் நூலில் யோகநெறி பற்றி விளக்கப்பட்டுள்ளது.[5] ஞானயோக காண்டம் என்னும் பகுதியில் அமைந்துள்ள பதினாறு படலங்கள் அட்டாங்க யோகத்தைப் பற்றி விரிவாகக் கூறுகின்றன. நாடிச்சக்கரம், நாடிசுத்தி, இயம முறை, நியம முறை, ஆசனவிதி, பிராணாயாம விதி, பிரத்தியாகாரவிதி, தாரணை விதி, தியானவிதி, சமாதிவிதி - என்பனவே யோகம் பற்றிக் கூறும் பகுதிப்பாடல்கள்.

யோகத்தை உடையவராக ஞானிகளிடையே பெருநிலையை அடைந்து அற்புதமாக விளக்க எழுந்த நூல் நிட்டானுபூதி சாரம் என்பதாகும். இந்நூல் அருளியவர் திருக்கோவலூர் ஆதீனம் ஸ்ரீமத் ஞானியார் மடாலயம் பிரதம குருமூர்த்திகள் ஸ்ரீலஸ்ரீ ஞான மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் ஆவர். இந்நூல் உத்தர காரணாகமத்தில் இடம்பெற்றுள்ள[6] படலமான நிட்டா-னுபூதியின் மொழிபெயர்ப்பு என்பர். பாவனாதீத நிட்டானுபூதியை இந்நூல் 91 பாடல்களால் விளக்கிக் கூறுகிறது.

அரிய யோக நிட்டைகளை உணர்த்துவனவாக அமைந்துள்ள தோத்திர நூல்களும் குறிப்பிடத்தக்கன, ஔவையார் அருளிய விநாயகர் அகவல், சிற்றம்பல நாடிகள் அருளிய அருட்செந்நூர் அகவல் முதலியன. யோக நெறிக்கும் [illegible]
பிரசாத மந்திரம் முதலிய எழுந்த நூல்களில் பிரசாத அகவல், பிரசாத

மாலை, பிராசாத சட்கம், பிராசாத தீபம், பிராசாத விதி முதலியவும் யோகத்தோடு தொடர்புடையன எனக் கொள்ளலாம்.

குமாரதேவரின் பிரமசித்தி என்பதும் குறிப்பிடத்தக்க ஒரு நூலாகும். இயமம், நியமம் முதலானவற்றைக் குமாரதேவர் விளக்கும் முறை ஞானநெறிக்கு ஒத்ததாகவும் தனிச் சிறப்புடையதாகவும் அமைகின்றது.

"அஞ்ஞான நீக்கமே கொண்ட இயமம்
விட்ட பொருள்கள் மேவிடல் தவிர்
நிற்றல் நியமம்; நிமல நிலையாய்
ஓர் ஆசனத்தில் உறைதல் ஆசனம்
நாடி சுத்தி நாடும் மாற்றை
இதயம் அறவிடு நோக்கப் புரிதல்
பிராணா யாமம்; புலவிட யத்தைப்
பெயர்த்தே மீட்டல் பிரத்தியா காரம்
விடய வாதனை விடல்பர நிறுத்தல்
தாரணை யாம்; தற்சொரு பத்தை
நாடல் தியானம்; நவிற்றிடு புலமும்
உற்றும் அறிவு அறி வொழிதா வேறாய்
ஒன்றாகி நிற்றலே ஒன்றிய சமாதி
ஆகிய இந்த அட்டயோகம் அதன்
பிரம சித்தி பெறத்தரு அங்கம்".

பிற்காலத்தே யோகநெறியைத் தமிழில் விளக்கிக் கூறிய அருளாளர்களுள் தலையானவர் தாயுமான சுவாமிகளும் ஆவர். வள்ளலாரின் திருமுறைப் பாடல்களும், தாயுமான சுவாமிகளின் தமிழ்ப்பாடல் பாடல்களும் சிவயோக மணம் கமழ்கின்ற செந்தமிழ்ப் பாடல்களாகும்.

2

<u>வடமொழி நூல்கள்</u>:

வேதங்களில் யோகத்தொடர்பான கருத்துக்கள் இடம்பெறவில்லை. ஆனால் உபநிடதங்களில் காணப்படும் யோகபாதப் பகுதிகளை பிற்காலத்தெழுந்த யோகசாத்திரங்கள் அமைப்பின் அடிப்படைகளாக கொள்கின்றன. இருபத்தெட்டு மூல ஆகமங்களும் கிரியை, ஞானம், சரியை என்பவற்றுடன் யோகபாதத்தை அமைத்துள்ளன. உபாகமங்களைப் பொறுத்தவரையில்

மூலம், மந்திரத்தில் (தாரக நிலை) ஏனோதாரம் எட்டப்படும் இந்த ஆகமங்கள் யோகநெறியை விரிவாகக் கூறுகின்றன. இந்தச் சிறு நூல்கள் மருத்துவத்தில் அட்டாங்கயோகம் ஒன்றி மருவிய மாதிரி ஆறங்கயோக (ஷடங்கயோக) முறையை வகுக்கின்றன.[7] இவை, பிராணா-யாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பவற்றை ஆறு அங்கங்களென இலக்கில் யோக உறுப்புகளாகக் கூறப்பட்டுள்ளன. சைவ நூலும், இலக்கு நூல் என்பவற்றின் காலப்பகுதியைப் பற்றிய விபரங்களை ஆதாரங்களில் காணலாம்.

உபநிடதத் தொகுப்பில் சிறந்தனவான உபநிடதங்கள் யோகநெறியைப் பற்றிக் கூறுவனவாகும்:

இருக்கு வேதத்தைச் சார்ந்த நாதபிந்து உபநிடதம்,

யஜுர் வேதத்தைச் சார்ந்த அக்ஷி உபநிடதம், அத்யாத்ம உபநிடதம், அத்வயதாரகோபநிடதம், அமிருதநாதோபநிடதம், அமிருதபிந்து உபநிடதம், க்ஷுரிகோபநிடதம்; தேஜோபிந்து, திரிசிகி பிராம்மணம், தியானபிந்து, நிராலம்பம், பைங்கலம், பிரம்மவித்யா, மண்டலபிராம்மணம், முக்திகம், யோககுண்டலி, யோகதத்வம், யோகசிகை, வராகம், சாண்டில்யம், ஹம்ஸம் என்பவும் உபநிடதங்கள்.

சாமவேதத்தைச் சார்ந்த ஜாபாலோபநிடதம், மஹோபநிடதம், யோக சூடாமணி உபநிடதம்,

அதர்வ வேதத்தைச் சார்ந்த அதர்வசிகா உபநிடதம், பாசுபத-பிரம்ம உபநிடதம், மஹாவாக்ய உபநிடதம், சாண்டில்ய உபநிடதம் ஆக இருபத்திரண்டு உபநிடதங்கள். சிவாகமங்களைப் பற்றிய குறிப்புகள் உப-நிடதங்கள் சிலவற்றில் காணப்படுகின்றன.

பதஞ்சலி முனிவரின் யோக சூத்திரம் சிவாகமங்களை அடிப்படை-யாகக் கொண்டது. அபிநவ குப்தரால் சிவஞான உபநிடதம் என்றும் ருத்ர-யாமள சாரம் என்றும் ஆகமம் என்றும் குறிக்கப்பெறும் விஞ்ஞானபைரவம் என்பது 112 தாரணைகளைச் சிறப்பாகக் கூறும் யோக சாத்திரமாகும். சிவாகமங்களை அடிப்படையாகக் கொண்டு தோன்றிய ஈசானசிவ குருதேவ பத்ததி முதலாய பத்ததிகளும் சித்தாந்த சாராவளி என்னும் நூலும் யோகபாதங்களைக் கொண்டு திகழ்கின்றன.

யாழ்ப்பாணம் ஞானப்பிரகாச சிவாசாரியார் இயற்றிய சிவயோக-ரத்தினம், சிவயோக சாரம் என்னும் இரண்டு நூல்களும் யோகரட்டங்களைச்

2:4:10

[illegible] சிறந்த சாத்திரங்களாகும்.

[illegible] புராணத்திலும், [illegible], யோகவாசிட்டம் முதலான [illegible] யோகத்திறமை [illegible] காட்டப்படுகிறது.

[illegible] நூலில் [illegible] உள்ளனவாகத் [illegible] கூறப்பட்ட யோகமுறைகளைத் [illegible] யோகநெறிய [illegible] உள்ளன.

[illegible] அரிய [illegible] பெருமையெல்லாம் புறக்கணித்து-விட்டு 'எளிய முறை' என்ற போக்கில் [illegible] எண்ணற்ற நிலையங்கள் யோகப்பயிற்சி [illegible]. யோகம் பயில வேண்டும் என்ற ஆர்வம் உடையோர் [illegible] நிறுவனங்களில் 'கூச்சலிட்டுக்கொண்டு' [illegible] இருக்கின்றனர். [illegible], பெரும்பாலும் [illegible]. தொழில் நுட்பங்கள் அறிவியல் நுட்பங்களும் நாளுக்குநாள் மாறலாம். ஆனால் யோக நுட்பங்கள் என்றும் மாறாதவை; மறுக்க முடியாதவை; புறக்கணிக்கக் கூடாதவை: மெய்த்தவ வல்லவர்கள் யோகமாக்கள் [illegible] புறக்கணித்து-விட்டுப் புதிய உத்திகளையும் பொருந்தா முறைகளையும் [illegible] [illegible] கொள்ளவேண்டும். யோக சாத்திரங்களை உரிய முறையில் [illegible] [illegible] காட்ட ஆசிரியர் [illegible]; [illegible] வேண்டும்.

**** ****

<u>அடிக்குறிப்புகள்:</u>

1. திருமந்திரம் - ஐந்தாம் தந்திரம் : 1457 - 1466
   ஆறாம் தந்திரம் : 1704 - 1711
   ஒன்பதாம் தந்திரம் : 2935 - 2953
2. சிவஞான சித்தியார்: சுபக்கம் : 8ஆம் சூத்திரம் 2ஆம் அதிகரணம், செய்யுள் 21
3. பதிப்பு, திருநெல்வேலி [illegible] 1967 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.
4. "அமிர்தமான அக்கரம் [illegible] வேதாச
   அடைந்த வாயு ஓடாத [illegible]
   தலத்திலே குவாக் [illegible] ஆசை
   அசட்டு யோகி"

—திருவாலங்காட்டுத் திருப்புகழ்

கந்தர் அலங்காரம் : 85

2:4:11

5. [illegible]
[illegible]
[illegible] வெளியிடப்பட்டது, [illegible] 1912.

6. [illegible]
[illegible]
[illegible]
1960ஆம் ஆண்டு வெளியிட்டது.

7. [illegible] நாடோடி [illegible]
[illegible].

2:5:1

# கோயிற் பணிகள்.

டாக்டர் அ.மா.பரிமணம், எம்.ஏ.,எம்.லிட்.; பி.எச்.டி.,
தஞ்சாவூர் 5

கோயிற் பணிகள் என்னும் தொடர், கோயிலுக்கு மக்கள் செய்யும் பணிகளையும் கோயில் மக்களுக்குச் செய்யும் பணிகளையும் குறிக்கும். இவ்விரு வகையாலும் அமையும் பணிகளைப் பற்றி ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கோயில் என்னுஞ்சொல் கோ + இல் எனப் பகுக்கப்பெறும், பகுபதமாம் பொருள்வகையால் அரசன் உறையும் அரண்மனையினையும், ஆண்டவன் உறையும் ஆலயத்தையும், சிறப்புவகையால் சிதம்பரம், திருவரங்கம் ஆகிய தலங்களில் அமையும் திருக்கோயில்களையும் அவற்றுள் அவ்விரண்டனையும் சுட்டும்.

சங்க இலக்கியங்களில் கோயில் என்பது பலவிடங்களில் அரண்மனையினையும், சிலவிடங்களில் தெய்வம் உறையும் இடங்களையும் குறித்து வழங்கப்பட்டுள்ளது. சிலப்பதிகார காலத்தில் அச்சொல் இருபொருளிலும் பரவலாக வழங்கப்பட்டுள்ளது. அதற்குப் பிற்பட்ட காலங்களில் அச்சொல் அரண்மனையைக் குறிப்பது ஆட்சி குறைந்து, திருக்கோயிலைக் குறிக்கும் ஆட்சி மிக்கது.

சங்க காலத்தில் அமைக்கப்பட்ட கோயில்கள் — தெய்வம் உறையும் கோட்டங்கள் ஆகியன எளிதில் அழியத்தக்க மரம் முதலியன கொண்டு அமைக்கப் பட்டனவேயாகும். அவை, செங்கல் அல்லது ஓடு எனப் பொருள்படும் சுடுமண் கொண்டு அமைந்தன. அதனால், அவை காலத்தால் சிதையப்பட்டு அழிவுற்று — வாய்ப்பாக விளங்கின. சங்க காலத்தில் கோயில்கள் பல அமைக்கப்பட்டிருப்பினும் அக்காலத்தைச் சார்ந்த கோயிற் கட்டடம் இது என்று காட்டுவதற்கு இன்று எந்தச் சான்றும் கிடைக்கவில்லை.

பல்லவர் ஆட்சிக் காலம், தமிழகக் கோயிற் கட்டடக் கலை வரலாற்றில் ஒரு புதிய திருப்பத்தினை உண்டாக்கியது எனலாம். குடைவரைக்கோயில் (Rock-cut Temples). ஒற்றைக் கற்கோயில் (Monolithic Temple) என வளர்ந்த கோயிற் கட்டடக் கலை, கற்களை உடைத்து அடுக்கி அமைக்கும் கோயிலாக (Structural Temple) வளர்ந்தபோது, அது தமிழகத்தில் மிக்க செல்வாக்கும் வளர்ச்சியும் பெற்றது. சுடுமண்ணும் மரமும் கொண்டமைந்து எளிதில் அழிவுறும் கோயில்களுக்குமாற்றாக அழியாத கோயிற் கட்டடங்கள் உருவாயின.

தமிழகத்தே ஆழ்வார்களும் நாயன்மார்களும் தோன்றி ஆற்றிய தொண்டின் பயனாக வைணவ, சைவ உலகில் உருவாகிய பக்தி இயக்கம், தமிழ் மக்களின்

2:5:2

சமய வாழ்வில் தீவிரமான எழுச்சியுணர்வைத் தோற்றுவித்தன. அந்நிலையில் சமய உணர்வு சான்ற மக்களின் ஒழுக்கத்திற்குத் திருக்கோயில்கள் பெருநிலையாக அமைந்தமையால், அவற்றைப் பேணிப்புரப்பது இன்றியமையாததாயிற்று. அரசர்களும் அவர்கள் உறவினரும், அரசியல் அதிகாரிகளும் கோயிற் பணிகள் செய்வதைத் தங்கள் வாழ்க்கைக் கடமையாகக் கொண்டாராயினர். புதியதாகத் தோன்றிய கற்கோயிற் கட்டடக் கலைத் திறமும், திருக்கோயிலைப் பேணும் பக்தி உணர்வும் ஒருங்குசேர்ந்து, பழைய மட்கோயில்களைப் புதுப்பிக்கவும், புதிய கற்கோயில்களை — கற்றளிகளை உருவாக்கவும் அவற்றுள் தெய்வத் திருமேனிகளை அமைக்கவும் முற்பட்டன. அரசர்கள் தம்முள் மாறுபட்டுப் போர்புரியினும் வென்றபின்னர்; தாம் வென்ற நாடுகளிலும் திருக்கோயில்களை அமைப்பதிலும் அவற்றிற்கு நிவந்தங்கள் முதலியன அளிப்பதிலும் ஈடுபடுவாராயினர்.

இடைக்காலத்தில் சிறப்புற்று விளங்கிய சோழர் ஆட்சி, தமிழகத்தின் பெரும்பகுதியிலும், தமிழகத்திற்கு அப்பாலுள்ள பகுதிகளிலும், கடல் கடந்த சில பகுதிகளிலும் செல்வாக்குப் பெற்றிருந்தமையால், சோழவேந்தர் தம் சமய வாழ்வு பற்றி விரிவாக அறிவதற்குச் சான்றுகள் கிடைத்துள்ளன. அம்மன்னர்களுள் பெரும்பாலோர் சைவர்களாக இருப்பினும், சமயக் காழ்ப்பின்றிச் சமயப் பணிகள் புரிந்துள்ளனர். சைவ வேந்தர் வைணவத் திருக்கோயில் எடுத்துப் பணிபுரிந்தமைக்கும், புத்த விகாரம் அமைத்து நிவந்தங்கள் அளித்தமைக்கும், சைன ஆலயம் அமைத்தமைக்கும் சான்றுகள் உள்ளன. அச்சமயத்தில் பாண்டியர் அரசியற் செல்வாக்குக் குறைந்திருந்தமையாலும், சேரர் மொழியால் வேறுபட்டிருந்தமையாலும் அக்காலப் பகுதியில் அவர்கள்தம் கோயிற் பணிகளை ஓரளவே அறியமுடிகிறது.

மன்னர்கள் முதலாயினோர் ஆற்றிய கோயிற் பணிகளின் விவரங்களை, அவர்களும் அவர்களின் முன்னோர்களும் எடுப்பித்த திருக்கோயில்களாகிய கற்றளி-களின் சுற்றுச் சுவர்களிலும், தூண்களிலும் கல்வெட்டுக்களாகப் பொறித்துள்ளனர். காலதேவனின் தாக்குதல்களை எதிர்த்து, நிலைத்து நிற்கும் கற்றளிகள், மன்னரும் மக்களும் திருக்கோயில்களுக்குச் செய்த திருப்பணிகளை எடுத்துக்காட்டி நிற்கும் வரலாற்றுக் கருவூலங்களாகவும் திகழ்கின்றன. சோழர்களுக்குப் பின்னர் தமிழகத்தை ஆளும் வாய்ப்பினைப் பெற்ற விசயநகர மன்னர்கள், நாயக்க மன்னர்கள், மராட்டிய மன்னர்கள் போன்றவர்கள் மொழியால் மாறுபட்டவர்களாயினும், திருக்கோயிற் பணிகளில் தளராது ஈடுபட்டனர். அதன் பயனாகப் பிற்காலத்தில் தமிழ்ச் சமயங்களுக்கு மாறான சமயங்கள் தமிழகத்தில் இடம் பெற்றபோதிலும், ஓங்கு கல்லின கோபுரங்களைக் கொண்ட கோயில்கள் யாண்டும் தோன்றி நிலைபெறுவனவாயின.

2:5:3

இடைக்காலச் சோழர்கள் கோயில்கள் எடுப்பதிலும், அவற்றிற்குக் கொடை நல்குவதிலும் சிறந்து விளங்கினர், முதலாம் ஆதித்தசோழன் காவிரியின் இருமருங்கும் பல ஆலயங்களைக் கற்றளிகளாக எடுப்பித்தான். இராசராசன் தஞ்சையில் பெரிய கோயிலையும், முதலாம் இராசேந்திரன் கங்கைகொண்ட-சோழபுரத்தில் பெரியதொரு கோயிலையும் அமைத்தனர். இராசராசன், நாகையில் அமைந்த புத்தவிகாரத்திற்கு ஆனைமங்கலம் ஊரைப் பள்ளிச் சந்தமாக விடுத்தான். பஞ்சநதிக்கு அருகே மணாளியம், நலங்காட்டிற்கு அருகேயும் திரும திருமாலுக்குரிய விக்கிரகங்களை அமைத்தான். அவன் தேவி, திருவையாற்றில் உலகமாதேவீச்சரம் என்னும் கோயில் எடுப்பித்து நிவந்தங்கள் அளித்துள்ளார். அவன் தமக்கை குந்தவைப் பிராட்டியாரும் ஏனைய அரசியரும் நிவந்தங்கள் பல வழங்கியுள்ளனர். இராசராசன், மனைவியர், தமக்கை, அரசியலதிகாரிகள் ஆகியோர் தஞ்சைப் பெரிய கோயிலுக்குப் பல் செம்பொன் திருமேனிகளையும், அவற்றிற்குப் பொன்னும் மணியாலும் புனைந்த அணிகலன்களையும் வழங்கியுள்ளனர். மன்னர் பலர் தம் பிறந்த நாள் விழாக்களைத் தம் நாட்டுக் கோயில்களிலும், தாம் வென்ற நாடுகளிலும் நடக்க ஏற்பாடுகள் செய்துள்ளனர். இந்த மன்னர் பெயரால் பள்ளிப் படைக்கோயில்களையும் அமைத்து, நாள் வழிபாட்டு நடைமுறைக் கொடையளித்துள்ளனர். திருச்சிற்றம்பலத்தினைச் சூழ மாளிகைகள், கோபுர வாயில், கூடசாலை, பலிபீடம் ஆகியவற்றிற்குப் பொன்வேய்ந்தமை, இறைவன் திருத்தேர்க்குப் பொன்வேய்ந்தமை, அதற்கு முத்துவடங்கள் அளித்தமை, திருவமுதுக்குப் பொற்கலங்களும், பொற்கற்பகத்தரு அளித்தமை, திருச்சுற்றும், திருவீதியும் அமைத்தமை போன்ற விக்கிரம சோழன் தில்லையில் செய்த திருப்பணிகள் அக்காலச் சோழமன்னர்கள் கோயில் திருப்பணியில் கொண்டிருந்த ஆர்வத்தைக் காட்டும். திருவிளக்கு முதலானவற்றிற்குச் சாவா மூவாப் பேராடுகளை மக்களும், அதிகாரிகளும் வழங்கியுள்ளனர். இதனால் மன்னர் — மக்கள் ஆகியோர் ஆற்றிய கோயிற் பணியின் பரப்பினை ஒருவாறு உணர்தல் கூடும்.

திருக்கோயிலை அமைத்தல், அதன் நடைமுறைக்கு வேண்டும் நிவந்தங்கள் அளித்தல் போன்ற பணிகள் செல்வமும் செல்வாக்கும் உடையவர்களாலேயே நடைபெறுதல் கூடும். அக்காலத்தில் திருக்கோயில் அமைத்து வழிபடும் பணியில், எளிய மக்களும் கொண்டிருந்த ஆர்வத்தை, கோயில் அமைத்தற்கு வேண்டும் அனைத்தையும் மனத்தினால் எண்ணி, மனத்தகத்தே திருக்கோயில் அமைத்துக் குடமுழுக்கும் செய்த பூசலாரின் வரலாற்றினால் பெரிய புராணம் உணர்த்துகிறது.

தனிமனித — சமுதாய நலக்கருத்தில் அமைந்த திருக்கோயிலாற் பயன் எய்த விரும்பி ஆலயங்களுக்குச் செல்லும் அன்பர்கள் திருக்கோயிலுக்காகத் தங்கள்

ஆற்றல்களுக்கேற்ப மேற்கொள்ளும் பணிகள் — தொண்டுகள் — மதித்துப் போற்றிக் கொள்ளப்பட்டன. தனிப்பட்டோரால் ஆத்மார்த்தமாக அன்றாடு மேற்கொள்ளப் பெறும் செயல்களைச் சரியை நெறி நிற்பாரின் சமய ஒழுக்கங்களாகச் சைவ சித்தாந்தம் சாத்திரப்படுத்தியுள்ளது.

திருக்கோயிலை அலகிட்டுப் பெருக்குவது, மெழுக்கிட்டுத் தூய்மை செய்வது, நந்தவனஞ்செய்து மலர் பறித்துக் கொணர்வது, அதனை மாலையாகத் தொடுப்பது, விளக்கெரிப்பது, நறுமணப் பொடிகள் கொண்டு புகையூட்டுவது, கோயிலைச் சுற்றி அமைந்த தெருவீதிகளைத் தூய்மை செய்வது போன்ற செயல்கள் தனிப்பட்டவர்கள் செய்யும் கோயிற் பணிகளாக — தொண்டுகளாக — மதிக்கப்பெற்றன. இத்தகு பணிகளில் ஏதேனும் ஒன்றையோ சிலவற்றையோ தொடர்ந்து மேற்கொண்டொழுகிப் பேறுபெற்ற தொண்டர்களைப் பெரியபுராணத்தில் காணலாம். திருக்கோயில்களை நாடி வருவோர் நன்மைக்காக திருக்கோயில் திருவீதிகளை உழவாரப் படைகொண்டு தூய்மைப்படுத்துவதனை அப்பரடிகள் தம் மெய்ம்மைத் திருப்பணியாக—திருத்-தொண்டாக ஏற்றுச் செயற்பட்டார். அவர் செய்த திருக்கோயிற் பணியின் அருமை உணர்ந்த சேக்கிழார், அவரை, 'பார் வாழத் திருவீதிப் பணி செய்து பணிந்தேத்திப் பரவிச் செல்வார்' எனக் கூறிப் போற்றியுள்ளார்.

இவ்வாறு தனிப்பட்டோரால் அமையும் கோயில் தொண்டுகள் சரியை நெறி நிற்போர்க்குரியன என்றும், அந்நெறி தாதமார்க்கம் என்று கூறப்படும் என்றும் சிவஞான சித்தியார் குறிப்பிடுகிறது. அது வருமாறு:

'தாத மார்க்கம் சாற்றிற் சங்கரன்றன் கோயில்
    தலம் அலகிட்டு இலகுதிரு மெழுக்குஞ் சாத்திப்
போதுகொய்து பூந்தார்மாலை கண்ணி
    புனிதற்குப் பலசமைத்துப் புகழ்ந்து பாடித்
தீதில் திருவிளக்கிட்டுத் திருநந்தவனமும்
    செய்துதிரு வேடங் கண்டால் அடியேன் செய்வது
யாதுபணி யீரென்று பணிந்தவர்தம் பணியும்
    இயற்றுவதிச் சரியை செய்வோர் ஈசனுலகிருப்பர்'

(சி.சி. 8-2-18)

இதனை அப்பரடிகள்,

2.5.5

"நிலைபெறு மாறெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலும் எம்பிரானுடைய கோயில்புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்குமிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி என்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதீ என்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே"

என்று தோத்திரப்படுத்திக் காட்டியுள்ளார்.

மன்னரும் மக்களும் ஆற்றிய பணியாலும் அளித்த ஆதரவாலும் கோயில்கள் வழிபாட்டு நிலையங்கள் என்னும் நிலையினின்று வேறுபட்டுயர்ந்து, சமுதாயத்தையும் உறுப்பினர்களாக மக்களையும், அவர்களின் புற அக வாழ்வுக் கூறுகள் அனைத்தையும் நெறிப்படுத்தும் ஆற்றல் மிக்க நிறுவனங்களாயின; மக்களின் பொருளாதார நிலையினையும் ஒழுங்குபடுத்தும் வாயில்களாகவும் திகழ்ந்தன. கருவறை நிலையிருந்து அர்த்தமண்டபம், மகாமண்டபம், நூறு, ஆயிரங்கால் மண்டபங்கள், பரிவார தெய்வக் கோட்டங்கள் திருச்சுற்றுக்கள், திருக்குளங்கள், இவற்றை உள்ளடக்கிய திருவீதிகள், குடியிருப்புகள் போன்றவற்றால் அமைப்பாலும், நிவந்தம், தேவதானம் முதலிய கொடைகள், அணிகலன் கொடைகள் போன்றவற்றால் செல்வநிலையாலும் வளர்ச்சியுற்ற திருக்கோயில் நிறுவனங்களைப் பேணுவதற்கு, அரசு, அதிகாரிகளையும் வாரியத்தையும் நியமித்தது. பண்டைய ஆட்சி அமைப்பில் திருக்கோயில் நிர்வாகம் 'ஸ்ரீகாரியம்' அல்லது 'கோயில் காரியம்' என்னும் அமைப்பு மூலமாக நடைபெற்றது. இவற்றால், அரசால் அறமனையாகிய கோயில் செய்து வந்த செயல்கள் பலவற்றை ஆட்சி மனையாகிய கோயில் மேற்கொள்ளும் நிலை ஏற்பட்டது.

குடிமக்கள் கோயில்களின் உறவு, ஒன்றை ஒன்று சார்ந்து நன்மை செய்வதாக அமைந்தது. தனிமனிதனின் இம்மை மறுமை வாழ்விற்குத் தேவையானவற்றைப் பயக்கும் அறநிலையமாகத் திருக்கோயில் திகழலாயிற்று. சமுதாயத்தில் கல்விப் பயிர்வளர்க்கும் பண்ணையாகவும், கலைகள் பலவற்றைப் புரக்கும் கலைக் கூடமாகவும், மக்களின் உடற்பிணி அகற்றும் மருத்துவமனையாகவும், உணவுக் கூடமாகவும், உயிர்ப்பிணி அகற்றி அருள்புரியவல்ல ஆற்றல் நிலையமாகவும் பஞ்சம் முதலியவற்றால் மக்கள் துன்புறுங்கால் அவர்தம் துயர் துடைக்கும் புகலிடமாகவும் விளங்கியது. இக்காலத்தில் "தமிழகச் சமுதாய வாழ்வில், 'குடிமக்களைத் தழுவிய கோயிலும் கோயிலைத் தழுவிய குடிமக்களுமாக வாழும் அமைப்பு முறை மீண்டும் உருவானால்தான் தமிழ் மக்களின் வாழ்வு சிறக்கும்" என்று

எடுத்துக் கூறிவரும் நாட்டிய முறைப்படி அடியாரின் [illegible] அடிப்படையாக அந்நாட் கோயிற்பணிகள் அமைந்தன எனலாம்.

<u>கல்விச்சாலை:</u>

திருக்கோயில்கள் பலவற்றில் வேதம், வியாகரணம், தருமசாத்திரம் போன்றவற்றைக் கற்பிக்கும் பள்ளிகள் இருந்தன. முதலாம் இராசேந்திரன் காலத்தில் எண்ணாயிரம் என்னுமிடத்திலுள்ள கோயிற் கல்வெட்டொன்றில், 340 மாணவர்கள் மறைபயின்றதும், 13 ஆசிரியர்கள் மறைபயிற்றியதும், அவர்கள் பராமரிப்பிற்காக 45 வேலி நிலம் தானம் அளிக்கப்பட்டதுமான செய்திகள் காணப்படுகின்றன. கோயில்களில் பூசைக் காலங்களிலும் விழாக்காலங்களிலும் திருமுறைப் பதிகங்கள், பிரபந்தப் பாசுரங்கள் பாடுதற்கு ஆட்கள் நியமிக்கப் பெற்று நிவந்தங்கள் வழங்கப்பட்டன. அன்றும் பாரதம் போன்ற நூல்களைப் படித்து விளக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. பாரதம் படித்து விளக்கி-யவருக்குப் 'பாரத விருத்தி' அளிக்கப்பட்டது. திருவொற்றியூர்க் கோயிலில் 'வியாகரணதான வியாக்கியான மண்டபம்' அமைக்கப்பட்டிருந்தது. திருமுக்கூடல் என்னும் ஊரிலுள்ள கோயிலில், 60 மாணவர்களுக்கு வேதக் கல்வியளிக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. திருவையாற்றில் தேவாரம் பயிற்ற ஒரு பள்ளி அங்குள்ள கோயிலில் நடைபெற்றதைக் கல்வெட்டு உணர்த்துகிறது.

<u>கலைக்கூடம்:</u>

இசை: ஏழிசையாம் இசைப் பயனும் விளங்கும் இறைவனைத் தேவார திவ்வியப் பிரபந்த ஆசிரியர்கள் இசையால் வழிபடற்கு வாய்ப்பாகத் திருப் பாடல்கள் பாடியுள்ளனர். அவற்றைக் கோயில்களில் பாடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. தஞ்சைப் பெருங்கோயிலில் தேவாரம் இசைக்க 48 ஓதுவார் களும் நிலையாகக் கொட்டி மத்தளம், உடுக்கை வாசிக்க இருவரும் நியமிக்கப்பட்டு நாட்படி வழங்கப்பெற்றனர். திருவிழாக்களின்போது நாதசுரம் முழவு முதலிய கருவிகள் கொண்டு இசை வழங்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

கூத்து:

இறைவன் அல்லது அரசன் தொடர்பான நாடகங்கள் திருக்கோயில்களில் நடித்துக்காட்டப்பெற்றன. தஞ்சைப் பெரிய கோயிலில் இராசராசச் நாடகம் விழாக் காலங்களில் நடத்தப்பட்டது. அம்மரபு மாறிய பின்னர், மராட்டிய மன்னர் காலத்தில், 'சரபேந்திர பூபால குறவஞ்சி' என்னும் நாடகம் நடிக்கப் பட்டது. மன உணர்வுகளை நுட்பமாகப் புலப்படுத்த வல்ல நாட்டியக்கலை கோயில்களில் போற்றப்பட்டது. இராசராசன் தான் அமைத்த பெரிய கோயிலில் 400 நாட்டிய மடந்தையரை நியமித்து, அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு வேலி

2:5:7

நிலமும் கோயிலின் அருகே வீடும் அளித்துள்ளார். கோயில் ஆகமவிதிப்படி நிலைகளிலும் அமைக்கப்பெற்றுள்ள நாட்டியக் கலைச் சிற்பங்கள் அக்கலையின் சிறப்புக்குரிய கரணங்கள் பலவற்றையும் எடுத்துக்காட்டி விளங்குகின்றன.

**ஓவியம்:**

சில கோயில் சுவர்களில் தீட்டப்பெற்றுள்ள ஓவியங்கள் பொருளை உணர்த்துவதோடு, ஓவியக் கலையின் சிறப்பையும் காட்டுவனவாக உள்ளன. தஞ்சைப் பெரிய கோயிலின் கருவறையினை அடுத்துள்ள சுற்றுச் சுவரில் அமைந்துள்ள சோழ ஓவியங்கள், உலகச் சிறப்புற்றவையாம், அக்கலையின் மாட்சியினைத் தெரிவிப்பனவாக உள்ளன.

**சிற்பம்:**

திருக்கோயில்கள் சிற்பக் கலைக்கூடமாகத் திகழ்வதனை விளக்கச் சான்றுகள் தேவையில்லை. ஐம்பொன், செம்பு முதலியவற்றால் சிலையாக அமைக்கப் பட்டுள்ள தெய்வத் திருமேனிகள் மாறுபட்ட சமய மக்களையும், வேற்று நாட்டார் களையும் கவரும் அளவு சிறப்புற்றுள்ளன. கருவறைச் சுவர்களிலும், மண்டபத் தூண்களிலும், கோபுரங்களிலும் கல்லாலும் மண்ணாலும் அமைக்கப்பட்டு விளங்கும் தெய்வத் திருவுருவங்களும், பிற உருவங்களும் தமிழகத்தின் சிற்பக் கலை — மாட்சிக்குச் சான்றாகத் திகழ்கின்றன.

**கட்டடம்:**

கல்லும் சுடுமண்ணும், சுதையும் கொண்டு அமைக்கப்பட்டுள்ள கோயிற் கட்டடங்கள் அக்கலையுயர்வினைக் காட்டி நிற்கின்றன. தஞ்சைப் பெரிய கோயில் கங்கைகொண்ட சோழீச்சுரம், திருவில்லிபுத்தூர், மதுரை, திருவரங்கம், தில்லை திருவாரூர் போன்ற இடங்களிலுள்ள கோயில்கள் தமிழகக் கட்டடக் கலைக்குக் கட்டியம் கூறுவனவாக உள்ளன.

**மருத்துவம்:**

திருமுக்கூடல் அருகிலுள்ள திருமால் கோயிலில் வேதக் கல்வி கற்பிக்க விடுதியொடு கூடிய கல்லூரியும், மருத்துவமனையும் செயற்பட்டு வந்தமையினைக் கல்வெட்டு கூறுகிறது. அக்கோயிலைச் சேர்ந்த மருத்துவமனையில் 18 படுக்கைகள் அமைக்கப்பட்டிருந்தன. அறுவைச் சிகிச்சை மருத்துவர், நோயாளியைக் கண்காணிக்கச் செவிலியர், மருந்து மூலிகை கொணர்வோர் ஆகியோர் நியமிக்கப்பட்டிருந்தனர். அவர்களின் பராமரிப்பிற்கு வேண்டிய நிவந்தங்கள் விடப்பெற்றன.

2:5:8

எல்லாக் கோயில்களும் ஆக்கையிலார் எல்லாப் பணிகளையும் செம்மையாகக் கற இயலாது. தத்தம் ஆற்றலுக்கும் வசதிக்கும் ஏற்ற வகையில் அவை மக்களுக்குப் பணிபுரிந்து வந்தன. ஒரு கோயில் அதன் நடைமுறையில் — அருச்சகர், பூசைப்பணிப் பணியாளர், மலர்தொடுத்து மாலை அமைப்போர், திருமஞ்சன நீர் கொணர்வோர், ஓதுவார், மேளக்காரர், சுந்த விளக்கு எரிப்போர், புராணர், திருமேனி தாங்குவோர் எனப் பலருக்கும் பணியளித்துப் புரக்கும் பணியினை மேற்கொண்டிருந்தது.

காலப்போக்கில் கோயிற் பணிகளின் நிலைமையில் மாறுதல்களும், சிதைவுகளும் தோன்றலாயின. முற்றிலும் வேறுபட்ட அன்னியர் ஆட்சி, அயற் சமயச் செல்வாக்கு போன்றன அதற்குக் காரணமாகலாம். குடிகளுக்கும் கோயில்களுக்கும் இருந்த உறவின் நெருக்கத்தில் விரிசல்கள் தோன்றிப் — பெரிதாயின. அரசியலில் தம்மை மறந்த அடிமைப்பட்டதுபோல, ஆன்மீக நிலையிலும் பெரிய தொய்வு தமிழ் மக்கள் வாழ்வில் தோன்றிற்று. அதன் விளைவாகக் கோயிலைப் புறக்கணிக்கும் உணர்வோடு, அதனை இகழும் உணர்வும் தோன்றியது. திருக்கோயில் சொத்துக்களையும், தெய்வத் திருமேனிகளையும், திருடிச் சென்று விலைப்படுத்தும் உணர்வும் மக்களில் மிகச் சிலரிடம் காணப்படு-கிறது. இஃது ஒருபுறமாக, மற்றொரு புறம் திருக்குட முழுக்கு, தலப்பயணங்கள் போன்ற செயல்களால் கோயில் வழிபாட்டு மரபு தளிர்ப்பது போன்ற தோற்றத்தையும் காணமுடிகிறது. இந்நிலையில் மக்களை நெறிப்படுத்திக் 'கோயிற் பணியின்' சிறப்பினை உணர்ந்துப் பயன் அடையுமாறு செய்யும் முயற்சியில் சமயத் தலைவர்களும் சமய நிறுவனங்களும் ஒன்றுபட்டுத் திட்டமிட்டுச் செயற்படவேண்டும். 'குடிமக்களைத் தழுவிய கோயில், கோயிலைத் தழுவிய குடிமக்கள்' என்னும் குறிக்கோள் வாசகத்தின் நடைமுறை வெற்றியில், தமிழ் மக்களின் எதிர்கால நல்வாழ்வு அமைந்திருப்பதனை உணர்ந்து செயற்படுதல் வேண்டும்.

***

3:1:1 நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்.

அருங்கலைக்கோன் ஸ்ரீ சடகோபன் பொன்னடி பேராசிரியர் டாக்டர்
ந. சுப்புரெட்டியார், சென்னை 40.

நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் தென்னாட்டில் தமது வைணவப் பெருமக்களால் பெரிதும் போற்றப் பெறும் பக்தி நூல். இதில் பன்னிரண்டு ஆழ்வார்களால் அருளிச் செய்யப்பெற்ற 23 பிரபந்தங்களும் இராமாநுசர் காலத்தில் திருவரங்கத்தமுதனார் அருளிய இராமாநுச நூற்றந்தாதியும் ஆக 24 பிரபந்தங்கள் அடங்கியுள்ளன. வேதவியாசர் வேதங்களை நான்காக வகுத்ததுபோல் நாதமுனிகள் இவற்றை முதலாயிரம், பெரிய திருமொழி, இயற்பா, திருவாய்மொழி ஆகிய நான்கு தொகுதிகளாக அடைவுபடுத்தியுள்ளார். இந்த நூலிலுள்ள தத்துவக் கருத்துக்களை எடுத்துக் காட்டுவதே இந்த ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாகும். எல்லா ஆழ்வார் பாசுரங்களிலும் அறியப்படும் தத்துவங்கள் நம்மாழ்வார் பாசுரங்களில் அறியப்படும் தத்துவங்களையொட்டியே அமைந்துள்ளன. இதனால் ஏனைய ஆழ்வார்களை நம்மாழ்வாரின் ஒவ்வோர் அவயவமாகவும், நம்மாழ்வாரை அவயவியாகவும், வழங்குவது மரபு. ஆழ்வாரின் திருமுடி நம்பெருமாள் பூதத்தாழ்வாரைத் தலையாகவும், பொய்கை பேயாழ்வார்களைத் திருக்கண்களாகவும், பெரியாழ்வாரைத் திருமுக மண்டலமாகவும், திருமழிசையாழ்வாரைக் கழுத்தாகவும் குலசேகராழ்வாரையும் திருப்பாணாழ்வாரையும் திருக்கைகளாகவும், தொண்டரடிப் பொடியாழ்வாரைத் திருமார்பாகவும், திருமங்கையாழ்வாரைத் திருநாபியாகவும், மதுரகவிகளையும் எம்பெருமானையும் திருவடிகளாகவும் பெரியோர் அருளிச் செய்வர்.

(அ) அர்த்த பஞ்சக நோக்கில்: திருவாய்மொழிப் பதிகங்கள் வைணவத் தத்துவமாகிய அர்த்த பஞ்சக ஞானத்தை உணர்த்துவனவாக இருக்கும்.[1] அர்த்த பஞ்சகம் என்பன (1) ஈசுவரனின் இயல்பு (2) ஆன்மாவின் இயல்பு (3) ஆன்மா அடையும் பயன், (4) அப்பயனை அடைதற்கு உபாயம், (5) அப்பயனை அடைதற்குப் பயனும் உள்ளவைகள் — ஆகிய ஐந்து ஆகும். திருவாய்மொழியிலுள்ள "உயர்வற" (1.1) 'திண்ணன்வீடு' (2.2) 'அணைவது' (2.8) 'ஒன்றும் தேவும்' (4.10) ஆகிய இந்த நான்கு திருவாய்மொழிகளும் — எம்பெருமானுடைய சொரூபத்தை ( Essential nature ) விளக்குவன. 'பயிலும் சுடரொளி' (7.5), 'ஏறாளும் இறையோனும்' (4.8), 'கண்கள் சிவந்து' (8.8), 'கருமாணிக்கம்' என்ற நான்கு திருவாய்மொழிகளும் அடைகின்ற ஆன்மாவின் விடயமாக இருக்கும். 'எம்மா வீடு'. (2.9), 'ஒழிவில் காலமெல்லாம்' (3.3) 'நெடுமாற்கடிமை' (8.10),

1. ஆசா. உறு. 211

3:1:2

'வேய்மரு' (10.3) என்ற நான்கு திருப்பதிகங்களும் ஆன்மா அடையும் பயனைப் பேசுவனவாக இருக்கும். 'நோற்ற நோன்பு' (5.7), 'ஆரா அமுதே' (5.8), 'மானேய் நோக்கு' (5.9), 'பிறந்தவாறும்' (5.10) என்ற நான்கும் எம்பெருமானை அடையும் வழியைக் (உபாயம்) கூறுவனவாக இருக்கும். 'வீடுமின் முற்றவும்' (1.2), 'சொன்னால் விரோதம்' (3.9), 'ஒரு நாயகமாய்' (4.1) 'கொண்ட பெண்டிர்' (9.1) என்ற நான்கு திருவாய்மொழிகளும் அடைதற்குத் தடையாயிருப்பவற்றைப் பேசும். ஏனைய எல்லாத் திருப்பதிகங்களும் இவற்றை விளக்கிக் கூறுவனவாக அமைந்துள்ளன.

பராசரபட்டர் மேற்கூறிய கருத்துக்களை இரத்தினச் சுருக்கமாக

மிக்க இறைநிலையும், மெய்யாம் உயிர்நிலையும்
தக்க நெறியும் தடையாகித் – தொக்கியலும்
ஊழ்வினையும் வாழ்வினையும் ஓதும் குருகையர்கோன்
யாழின்இசை வேதத்து இயல்[2] என்ற தனியனில் அடக்கிக்கூறுவர்.

<u>பிரபத்தி நெறி</u>: மேலே கூறப்பெற்ற விரோதியைக் கழித்துப் புருஷார்த்தம் கைகூடுவதற்கு உபாயமாகக் கூறப்படுவன <u>பக்தியும் பிரபத்தியும்</u> ஆகும். இவற்றுள் எல்லாருக்கும் எளிதாக இருக்கும் பிரபத்தி நெறியை உபதேசித்தவர் நம்மாழ்வார். பிரபத்தி என்பது சரணாகதி ஆகும். 'பிரபன்ன ஜன கூடஸ்தர்' என்று நம்மாழ்வாருக்கு ஒரு சிறப்புப் பெயரும் உண்டு. பிரபத்தி நெறியை அனுட்டிக்கும் வைணவர்கள் யாவருக்கும் தலைவர் என்பது இதன் பொருள். ஆழ்வார் பிரபத்தி பண்ணியது அர்ச்சாவதாரத்திலே. 'ஆறு எனக்கு நின்பாதமே தந்து ஒழிந்தாய்' (5.7.10) என்றும், 'நம்பெருமான் அடிமேல் சேமங்கொள் தென்குருகூர்ச் சடகோபன்' (5.4.11) என்றும் 'உன் அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே' (6.10.10) என்றும் இப்படிப் பல இடங்களிலும் பிரபத்தி செய்தது அர்ச்சாவதாரத்திலே யாகும்.

<u>கைங்கரியம்</u>:

வைணவத் தத்துவத்தின் நவநீதம் போலிருப்பது கைங்கரியம் ஆகும். வைகுந்தத்தில் பரமபத நாதனுக்குக் கைங்கரியம் புரிவதே வைணவர்கள் விரும்பும் வீடு பேற்றின் பயனாகும். நம்மாழ்வாரும் இதனையே விரும்புகின்றார். ஏழுமலையானின் திருவடிப் பேற்றை விரும்பும் ஆழ்வார்,

"ஒழிவில் காலமெல்லாம்
உடனாய் மன்னி
வழுவிலா அடிமை
செய்யவேண்டும்"[3]

2. திருவாய்மொழித் தனியன். 3. திருவாய்மொழி 3.3:1

3:1:3
என்று அவர்க்குச் செய்தியும் புரியவிருப்பவரையும் இப்பாசுரப் பகுதியில் காணலாம்.

"ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையர் திருவாய் மொழியைப் பாடப் புக்கால் "ஒழிவில் காலமெல்லாம், ஒழிவில் காலமெல்லாம்... என்று இவ்வளவும் நெடும் போதெல்லாம் பாடி, மேலே போகவொட்டாதே அவ்வளவிலே தலைக்கட்டிப் போவாராம்" என்பது ஈட்டில் காணப் பெறும் ஐதிகமாகும்.

(ஆ) <u>தத்துவத்திரயப் பார்வையில்:</u>

வைணவ சமயத்தின் கொள்கைகளைத் <u>தத்துவம், ஹிதம், புருஷார்த்தம்</u> என்று வகைப்படுத்திப் பேசுவர் (திரயம்-மூன்று), நம்மாழ்வார் பிரபந்தங்களிலும் பிற ஆழ்வார்களின் பிரபந்தங்களிலும் இம்மூன்றும் ஆங்காங்கே அமைந்து கிடக்கின்றன.

<u>தத்துவங்கள்</u>: இவை மூன்று, சித்து, அசித்து, ஈசுவரன் என்பன. இவை மூன்றும் முறையே சைவ சித்தாந்தத்தின் பசு, பாசம், பதி என்ற மூன்றுடன் வைத்து ஒப்பிட்டு நோக்கலாம். <u>சித்து</u> என்பது, உயிர்களின் தொகுதி. <u>அசித்து</u> என்பது மக்கள் விலங்கு முதலியவற்றின் உடம்பு முதலிய உலகப் பொருள்கள் எல்லாவற்றிற்கும் காரணமான பிரகிருதியாகும்; பிரகிருதியை மூலப்பகுதி என்பர். ஈசுவரன் என்பது, இறைவன். இவை மூன்றும் 'தத்துவத்திரயம்' என்றும் வழங்கப்படும்.

<u>சரீர.சரீரிபாவனை:</u>

ஈசுவரனுக்கு அடிமையாகவுள்ள (சேஷமாகவுள்ள) ஆன்மா, ஆன்மாவை விட்டுப் பிரிந்திராத உடலைப் போல் சேஷியான (ஆண்டான்) ஈசுவரனை யொழியவும் தான் வேறாகக் காணப் பெறுதல் இல்லை. இந்த முறையில் ஒவ்வோர் ஆன்மாவும் ஈசுவரனின் உடலாக இருக்கும். இங்ஙனமே அசித்தின் மூன்று பகுதிகளும் (சுத்த சத்துவம், மிச்ர தத்துவம், சத்துவசூன்யம்) ஈசுவரனுக்கு உடலாகத் திகழ்கின்றன. அதாவது சேதநாசேதநங்கள் எம்பெருமானின் சரீரமாக அமைந்துள்ளன. இந்நிலையே <u>சரீர-சரீரி</u> பாவனை (உடல்-உயிர், உறவு) என்று வழங்கப்பெறும். இது,

திடவிசும்பு எரிவளி
நீர்நிலம் இவைமிசைப்
படர்பொருள் முழுவதும்
ஆய்அவை அவைதொறும்
உடல்மிசை உயிரெனக்
கரந்தெங்கும் பரந்துளன்.[4]

என்ற பாசுரத்தில் விளக்கம் அடைகின்றது.

4. திருவாய் 1.1:7

3:1:4

## ஈசுவரன்

இது மூன்றாவது தத்துவம். ஸ்ரீமந் நாராயணனே சர்வேசுவரன். இவனே உடல்மிசைக் கரந்தெங்கும் பரந்திருக்கும் பரம்பொருள். வைணவ தத்துவப்படி ஈசுவரனின் திருமேனி பரம், வியூகம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சை என்ற ஐந்து நிலையில் இருக்கும். பரம் என்பது பரமபதத்தில் எழுந்தருளியிருக்கும் பரவாசுதேவனுடைய உருவம். வியூகம் என்பது, வாசுதேவன் சங்கர்ஷணன் பிரத்யும்னன், அநிருத்தன் என்ற உருவங்கள், இவை உலக நிர்வாகத்தின் பொருட்டுத் திருப்பாற்கடலில் இருப்பவை. விபவம் என்பது, எடுத்த அவதாரங்கள். அந்தர்யாமி என்பது, எல்லாருடைய இதயகமலத்தில், அர்ச்சை எழுந்தருளியுள்ள நிலையும், மற்றும் பக்தர்களின் வேண்டுகோளின்படி அவரவர் விருப்பத்திற்கேற்றவாறு திருமேனி கொண்டு நிற்கும் நிலையுமாகும்.

## கிளைவியூகங்கள்:

மேற்குறிப்பிட்ட நான்கு வியூகங்களும் ஒவ்வொன்றும் மும்மூன்றாகப் பன்னிரண்டு கிளைவியூகங்களாகப் பிரியும். வியூகவாசுதேவனிடத்துக் கேசவன், நாராயணன், மாதவன் என்ற கிளைகளும்; சங்கர்ஷணனிடம் கோவிந்தன், விஷ்ணு, மதுசூதனன், என்பவைகளும் பிரத்தியுமனனிடமிருந்து திரிவிக்கிரமன், வாமனன், சிரீதரன் என்பவைகளும்; அநிருத்தனிடத்து இருடிகேசன், பதுமநாபன் தாமோதரன் என்பவைகளும் தோன்றி அவ்வப் பெயர்களையும் பெறும்[5] இவை யாவும் பன்னிரு திங்களின் தலைவர்களாக இருக்கும். இவற்றின் அறிகுறியாக வைணவர்கள் தம் திருமேனியில் துவாதசமாகத் திருமண் காப்பிட்டுக் கொள்வர்.

## ஹிதம் (இதம்)

வீடுபேற்றிற்குச் சாதனமாக அமைக்கப்பெறும் வழியே 'இதம்' என்பது வைணவ சமயத்தில் 'சித்தோபாயம்', 'சாத்தியோபாயம்' என்ற இரு நெறிகள் பேசப்பெறுகின்றன. சித்தோபாயம் என்பது நம்மால் செய்யப்பெறவேண்டியதன்றி முன்பேயுள்ள நெறி; இது சர்வேசுவரன்; 'மகன்பாசுரங்களில்' சித்தோபாயம் சிறப்புற்று ஓங்கி நிற்பதைக் கண்டு மகிழலாம். சாத்தியோபாயம் என்பது நம்மால் மேற்கொள்ளப்பெறும் உபாயமாகும். இது பக்திநெறி என்றும் பிரபத்திநெறி என்றும் சாத்திரங்களில் இரு வகையாகப் பேசப்பெறும்.

## பக்திநெறி:

இதுகர்மயோகம், ஞானயோகம், பக்தியோகம் என்ற மூன்று நிலைகளில் பயிற்சியடைய வேண்டிய நெறி என்று கூறுவர். பக்தி நெறியில் பல படிகள் உண்டு. இவற்றை எட்டு அங்கங்களாக முறைப்படுத்தி விளக்கிக்காட்டுவர். தவிர பக்தியையும் பரபக்தி, பரஞானம், பரமபக்தி என்ற மூன்று பிரிவுகளாக

5. திருவாய் 2.7 (பன்னிரு திருநாமப்பாட்டு)

வெளிப்படுத்திக் காட்டும் மரபும் உண்டு. இந்த மூன்று நிலைகளிலும் முறையே பொய்கையார்; பூதத்தார், பேயார் ஆகிய மூன்று ஆழ்வார் பெருமக்கள் எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றனர்.

பிரபந்த நெறி:

இக்கட்டுரையின் பிரிவு (அ) இல் அர்த்த பஞ்சக நோக்கில் என்றப் பகுதியில் இது காட்டப் பெற்றுள்ளது.

புருஷார்த்தம்:

ஆன்மா அடையவேண்டிய குறிக்கோள் நெறியைக் குறிப்பிடுவது. அஃதாவது 'நலம் அந்தம் இல்லதோர் நாடு' புகுவது. இந்த நாட்டைத் திருவள்ளுவர் பெருமான் 'வரன் என்னும் வைப்பு' (குறள்-25) 'வானோர்க்கு உயர்ந்த உலகம்' (குறள் 346) 'வானம்' (குறள் 353) என்றெல்லாம் விளக்குவர். நம்மாழ்வார் இவ்வுலகை 'வைகுந்தம்' (திருவாய் 1:2:11, 2:5:11, 4:4:1, 5:10.11) என்றும், 'இலங்குவான்' (டை 3:8:11) என்றும் 'பொன்னுலகு' (டை 6:7:11) என்றும் குறிப்பிடுவர். இதுவே பரமபதம் ஆகும். இங்கு முத்தி நிலையை அடைந்து ஆன்மா எம்பெருமானுக்கு அடிமை செய்து ஆனந்தத்தை அனுபவிக்கின்றது.

தொண்டே செய்து
என்றும் தொழுது வழியொழுகப்
பண்டே பரமன்
பணித்த பணிவகையே (டை 10:4.9)

என்று செம்மாந்து நிற்கின்றது:

(இ) மந்திர நோக்கில்:

முத்தியை அடைய விரும்புகின்றவர் திருமந்திரம், த்வயம், சரமசுலோகம் என்ற மூன்று மந்திரங்களையும் அறிந்து கொள்ளுதல் வேண்டும். நம்மாழ்வாருடைய திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி என்ற பிரபந்தங்கள் நான்கும் இந்த மூன்று இரகசியங்களோடு சேர்ந்தனவாகச் சொல்லப் பெறும்.[6]

திருமந்திரம்:

இது 'ஓம் நமோ நாராயணாய' என்பது. இதன் 'ஓம்' 'நமோ' என்ற இரண்டு பதங்களின் பொருள் திருவிருத்தத்திலும், 'நாராயணாய' என்ற பதத்தின் பொருள் திருவாசிரியத்திலும் கூறப்பெற்றுள்ளன.

6. ஆசாரஹ்ருதயம் 208 அடுத்த சூத்திரத்தில் இதன் விளக்கம் தரப்பெறுகின்றது.

3:1:6

<u>த்வயம்:</u>

ஸ்ரீ, ஸ்ரீமத் நாராயண சரணௌ சரணம் பிரபத்யே।

ஸ்ரீமதே நாராயணாய நம; என்பது. இரண்டு பொருள்களைச்சொல்லு வதால் (த்வயம்-இரண்டு) த்வயம் என்ற திருநாமம் பெற்றது. இதில் உள்ள இரண்டு வாக்கியங்களும் பத்துப் பொருள்களைச் சொல்லுகின்றது. அவை: 1. திருமகள் கேள்வனாக இருத்தல், 2. நாராயணனாக இருத்தல், 3, எல்லா உலகங்களுக்கும் புகலிடமான நாராயணனுடைய இரண்டு திருவடிகள், 4. அத் திருவடிகளே உபாயமாக இருத்தல், 5. அத்திருவடிகளைப் பற்றிய ஆத்மாவினுள்ள வேண்டுதலை உள்ளடக்கியுள்ள அறிவு, 6, திருமகள் அவனுடைய நாயகன் இவர்களுடைய நித்திய சம்பந்தம், 7. கைங்கர்யத்துக்கு எதிர்த் தலையான சர்வேசுவரனுடைய எல்லை இல்லாத இனிமை, 8. எல்லாப் பொருள்கட்கும் தலைவனாக இருத்தல், 9. நித்திய கைங்கரியம், 10. கைங்கர்யத்திற்குத் தடைகளாகவுள்ள அஹந்தை நீங்குதல், மந்திர இரத்தினமாகிய த்வயத்தின் இந்தப் பத்துப் பொருள்களும் திருவாய்மொழியின் பத்துப் பத்துகளால் விளக்கப் பெறுவதாகக் கொள்வர், நம் பூர்வாசாரியர்கள். விரிவஞ்சி விளக்கம் விடப்பெற்றது.

<u>சரமசுலோகம்:</u>

இது பகவத் கீதையிலுள்ள

சர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் சரணம்
அகம் த்வா சர்வ பாபேப்யோ விரஜ।
மோட்சயிஷ்யாமி மாசுச:।

என்ற சுலோகம் (18:66) அப்படியே ஸ்ரீவைஷ்ணவ மந்திரமாக எடுத்துக் கொள்ளப்பெற்றது. இதன் ஒவ்வொரு சொல்லின் பொருளையும் நம்மாழ்வாரின் பெரிய திருவந்தாதியின் பாசுரங்களைக் கொண்டு விளக்கலாம். விரிவஞ்சி விளக்கத்திற்குப் போகவில்லை. இதற்குரியவைகள் யாவும் 'முக்திநெறி' என்ற எனது நூலில் விரிவாக விளக்கப்பெற்றுள்ளது.

****

# திருநாவுக்கரசர் தேவாரம்

3:3:1

## உழவாரம்.

வித்துவான் வி.சா. குருசாமிதேசிகர், எம்.ஏ., தருமபுரம்

சமயவளர்ச்சி, தொண்டை அடிப்படையாகக் கொண்டது. சமய நெறியில் நிற்க விழைவோர் முதற்படியாக சரியை எனப்படும் தொண்டுநெறி நிற்க வேண்டுமெனவும் அதன்பின் கிரியை, யோகம், ஞானம் எனப்படும் இந் நெறிகளையும் முறையே கடைப்பிடிக்க வேண்டுமெனவும் சித்தாந்த நூல்கள் கூறுவதைக் காணலாம்.

'விரும்பும் சரியைமுதல் மெய்ஞ்ஞானம் நான்கும்
அரும்புமலர் காய்கனி அன்றோ பராபரமே'

என்றார் தாயுமானார். இந்நால்வகை நெறிகளைத் தாசமார்க்கம், சற்புத்திர மார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் எனவும் கூறுவர்.

சமயாசாரியர்கள் நால்வரும் இந்நால் வகை நெறிகளை நமக்கு வற்புறுத்தியுள்ளனர். அந்நால்வரில் அப்பரடிகள் தேவாரத் திருமுறைகளில் தொண்டுநெறி எனப்படும் சரியை நெறி மிகுதியாகப் பேசப்படுதலால் அவரைச் சரியைக்கும், இவ்வாறே ஞானசம்பந்தரைக் கிரியைக்கும், சுந்தரரை யோகத்திற்கும், மணிவாசகரை ஞானத்திற்கும் உரியவர்களாகக் கூறுவதுமுண்டு.

சரியை எனப்படும் தொண்டுநெறி நம்மைச் சமய வாழ்வுக்கு மிகவும் பக்குவப்படுத்தும் திறமுடையது. திருக்கோயிலுக்கு நந்தவனம் வைத்தல், மலர் கொய்தளித்தல், மாலை கட்டிக்கொடுத்தல், திருவலகிடுதல், திருமெழுக்கிடுதல், உழவாரப் பணி செய்தல், பழங் கோயில்களைப் புதுக்குதல், நித்திய நைமித்திக வழிபாடுகள் செய்வித்தல், அவ்வழிபாடுகளுக்கு வேண்டப்படும் பொருள்களை வாங்கி உதவுதல், சிவபுராணங்கள் தோத்திரங்கள் ஆகியவற்றை ஓதுதல், ஓதுவதை மனம் உருகிக் கேட்டல், தலயாத்திரைகள் புரிதல் முதலியன சரியைத் தொண்டுகளாகும்.

'தாதமார்க் கம்சாற்றில் சங்கரன்றன் கோயில்
தலம்அலகிட் டிலகுதிரு மெழுக்கும் சாத்திப்
போதுகளும் கொய்துபூந் தார்மாலை கண்ணி
புனிதற்குப் பலசமைத்துப் புகழ்ந்து பாடித்
தீதில் விளக்கிட்டுத் திருநந்த வனமும்
செய்துதிரு வேடங்கண் டால்அடியேன் செய்வது
யாதுபணி யீரென்று பணிந்தவர்தம் பணியும்
இயற்றுவதிச் சரியை செய்வோர் ஈசனுல கிருப்பர்'

எனச் சிவஞான சித்தியார் கூறும்.

3:3:2

திருநாவுக்கரசர் சமணம் சார்ந்திருந்த பின்பு சைவ சமய நெறியைச் சார்ந்தபோது தொண்டு நெறியையே விரும்பி மேற்கொண்டார். இதனைச் சேக்கிழார் பெரிய புராணம் சுட்டிக் காட்டுவதைக் காணலாம்.

'மையல்துறை ஏறிமகிழ்ந்தவர்சீர் வாகீசர்
மனத்தொடு வாய்மையுடன்
மெய்யுற்ற திருப்பணி செய்பவராய்
விரவும் சிவ சின்னம் விளங்கிடவே
எய்துற்ற தியானம்அரு உணர்வும்
ஈறின்றி எழுந்திரு வாசகமும்
கையில்திரு முழ வாரமுடன்
கைக்கொண்டு கலந்து அணைந்தனரே'

என்பது திருநாவுக்கரசர் புராணம். சைவம் சார்ந்த அப்பர் சமயநெறி தழைத்தற்கும், தான் கடைத்தேறுவதற்கும், உரியதாகத் தொண்டு நெறியை மேற்கொண்டார் என்பதை இப்பாடலால் அறிகின்றோம். இறைவருக்குத் தொண்டு செய்வது அவருக்குப் பயன் விளைத்தற்காக அன்று. இறைவன் ஒன்றும் குறையுடையன் அல்லன். நம் உயிர்களைப் பற்றியுள்ள ஆணவ மலம் பரிபாகமாதற் பொருட்டே தொண்டுகள் மக்கட்கு வற்புறுத்தப்படுகின்றன. திருக்கோயில்களில் நிகழும் வழிபாடுகள் திருவிழாக்கள் திருக்கோயிலுக்கு வேண்டும் உபகரணங்கள் அனைத்தும் மக்கள் தாங்களாகவே விரும்பிக் கொடுத்தலிலும் செய்வதிலும் நடைபெற்று வந்தன; ஆனால் இன்றோ ஒவ்வொரு பணியும் கூலியும் குறித்த தொண்டர்களே உள்ள நிலையைக் காண்கிறோம்.

இந்நிலைத் திருக்கோயிலிற் போல் சுவாமியை எழுந்தருளச் செய்து, சுமந்து செல்லுதல், தேர் இழுத்தல் முதலியன எல்லா ஆலயங்களிலும் மக்கள் விரும்பிச் செய்யும் தொண்டாகத் தொடங்கி தொழிலாக மாறி விட்டன எலாம். நந்தவனம் அமைத்தல், மலர் கொய்தல், மாலை தொடுத்தல் அனைத்துமே கூலியங் குறித்த பணிகளாக மாறிவிட்ட நிலையில் சமய வளர்ச்சி எங்ஙனம் நிகழும்? ஆலயங்களிலுள்ள புல்லை அகற்றல், மண்டபங்களில் முளைக்கும் மரங்களைக் களைதல் போன்றவையும் இவ்வாறே பயன் குறித்த பணிகளாக இன்று மாறிவிட்டன.

சமய வளர்ச்சி தொண்டைத்தான் அடிப்படையாகக் கொண்டது என்பதை மக்கள் உணர அப்பரடிகள் உழவாரத்தின்படை ஏந்தி திருத்தொண்டு புரிந்து காட்டினர். இன்று நம் சமயத்தில் ஈடுபாடு கொண்டவர்களாகப் பக்தர்கள்

பலர் உள்ளனர். ஆனால் தொண்டர்கள் என்று எண்ணிப்பார்த்தால் சிலர் கூடத் தேறுவது கடினமாக உள்ளது. இன்று சமய விழிப்புணர்வு மக்களிடையே — ஏற்பட்டிருப்பது உண்மை. அனைவரும் ஆலயம் சென்று வழிபாடுகள் செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். ஆயினும் சமயத் தொண்டுகளாக நாம் என்ன செய்கிறோம் என்று எண்ணிப் பார்க்கவில்லை என்றுதான் சொல்லவேண்டும். நாயன்மார்கள் தாங்கள் மேற்கொண்டிருந்த தொழில்கள் மூலம் சமயத் தொண்டுகள் செய்து நடந்து வழிகாட்டியுள்ளனர்.

நாயன்மார்கள் ஒவ்வொருவரும் தாங்கள் மேற்கொண்ட தொழில் மூலம் ஏதேனும் ஒரு தொண்டைப் பயன் கருதாது செய்து சிவனருள் பெற்றவர்கள் என்பதைப் பெரிய புராணத்தால் அறியலாம்.

அப்பர் வாழ்க்கையில் அவர் தம் தொண்டின் சிறப்பை விளக்க ஓர் அற்புத நிகழ்ச்சி நடந்ததை எண்ணுதல் ஏற்றம் தரும்.

திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் அடியவர்கள் புடைசூழ திருவீழிமிழலைக்குச் சென்று அங்கு திருமடங்களில் தங்கியிருந்தனர். அப்போது நாட்டில் ஏற்பட்ட பஞ்சத்தால் அடியவர்கள் இன்னற்படத் தொடங்கினர். வீழிமிழலை இறைவன் பஞ்சம் நீங்கும்வரை ஞானசம்பந்தர், அப்பர் ஆகிய இருவருக்கும் தனித்தனியே பொற்காசுகள் வழங்கியருளினார். இறைவனருளிய பொற்காசுகளில் ஞானசம்பந்தருக்கு அருளிய காசு வாசி உள்ளதாகவும் நாவுக்கரசர்க்கு அளித்த காசு வாசி இன்றியும் இருந்தன. ஞானசம்பந்தர் தமது திருமடத்தில் மட்டும் அடியவர் திருவமுதுண்ணக் காலம் தாழ்ப்பதற்குக் காரணம் வினவியபோது அடியவர் மூலம் இதனை அறிந்தார். இறைவனைப் பாடி வாசி தீர்ந்த காசு அருளப் பெற்றார் என்பது வரலாறு.

ஞானசம்பந்தர் சிந்தனையில் இறைவன் அப்பருக்கு வாசியில்லாக் காசும் தமக்கு வாசி உள்ள காசும் வழங்கக் காரணம் என்ன என்ற எண்ணம் — தோன்றியது. திருவருளால் தெளிவும் பிறந்தது. அப்பர் வாய்த்தொண்டோடு கைத்தொண்டும் செய்து இறைவனிடம் பக்தி செலுத்துபவர். தாமோ வாயால் வாழ்த்துவதை மட்டுமே செய்கிறோம். அதனாலேயே இறைவன் தமக்கு நாவுக்கரசருக்கு அளித்த காசை விட மாற்றுக் குறைந்த காசினை வழங்கி உள்ளார் என்று ஞானசம்பந்தரே சிந்தனையின் முடிவாகத் தொண்டின் சிறப்பை உணர்ந்து உணர்த்துவதாகச் சேக்கிழார் கூறியுள்ளார்.

'ஈசர் மிழலை இறைவர்பால் இமயப் பாவை திருமுலைப்பால்
தேசம் உய்ய உண்டவர்தாம் திருமா மகனார் ஆதலினால்
காசு வாசி யுடன் பெற்றார் கைத்தொண் டாகும் படிமையினால்
வாசி இல்லாக் காசுபடி பெற்று வந்தார் வாகீசர்'

என்று திருநாவுக்கரசர் புராணத்திலும்,

'திருஞான சம்பந்தர் அதனைக் கேட்டுச்
சிந்திப்பார் சிவபெருமான்
ஒருகாசு வாசிபட மற்றக் காசு
நன்குவி வாசிபட்டா தொழிவான் அந்நம்பி
பெருவாய்மைத் திருநாவுக் கரசர் தொண்டால்
படைத்த காசாம் ஆதலினால் பெரியோர் நல்லை
வருநாள்கள் தருங்காசு வாசிதீரப்
பாடுவன்என் றெண்ணியத் மனத்துட் கொண்டார்'

என்று ஞானசம்பந்தர் புராணத்திற் அருளிச் செய்கின்றார். திருநாவுக்கரசர் தாம் அருளிய 'தேவாரத் திருப்பதிகங்களில்' தொண்டுகளின் சிறப்பைப் பல இடங்களில் உணர்த்தக் காணலாம்.

<u>நெஞ்சறிவுறுத்தல்:</u>

திருநாவுக்கரசர் தம் நெஞ்சை விளித்து, நீ இவ்வுலகில் நிலைபெற்றுப் பல்லாண்டுகள் வாழ விரும்பினால் இக்கடமைகளை வழுவாது செய்துவா. நாள் தோறும் காலையில் எழுந்து கோயிலுக்குச் செல், திருவலகிடுதல் திருமெழுக்-கிடுதல் முதலானவற்றைச் செய், மலர்கள் பறித்து மாலை தொடுத்து இறைவனுக்கு அணிவி. இறைவன் புகழை வாய்விட்டு அரற்றிப்பாடு; சங்கரா ஜய போற்றி என்று பலகால் உரைத்து மகிழ் என்று அருளிச்செய்கிறார்.

'நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலும்எம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்தும் ஆடி
சங்கரா ஜயபோற்றி போற்றி என்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதீ என்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே'

ஆலயங்களுக்குச் சென்று திருவலகிடுதல், திருமெழுக்கிடுதல், மலர் கொய்து மாலை தொடுத்து அணிதல், திருவிளக்கேற்றுதல், இறை புகழ்பாடி ஏத்துதல் ஆகிய தொண்டுகள் ஒன்றுக் கொன்று உயர்வுடைய தொண்டுகளாதலை அப்பரடிகள் பின்வரும் பாடலால் அருளிச்செய்திருக்கக் காணலாம்.

3:3:5

'விளக்கினால் பெற்ற இன்பம் மெழுக்கினால் பதிற்றி யாகும்
துளக்கில்நல் மலர்தொடுத்தால் தூயவிண் ணேறலாகும்
விளக்கிட்டார் பேறுசொல்லின் மெய்ந்நெறி ஞானமாகும்
அளப்பில கீதம் சொன்னார்க்கு அடிகள்தாம் அருளுமாறே'

என்ற பாடல் திருத்தொண்டுகளில் சிறந்தன சிலவற்றை முறைப்படுத்தி — விளக்குவதாக உள்ளது.

இறைவன் திருத்தொண்டர்களின் நெஞ்சங்களைத்தம் ஆலயங்களாகக்கொண்டு எழுந்தருளியுள்ளான் என்பதை அப்பரடிகள் நம் நெஞ்சு நெகிழச் சொல்லும் அரிய திருப்பாடல் ஒன்றைக் காண்போம்.

'சகமலா தடிமை யில்லை தானலால் துணையுமில்லை
நகமெலாம் தேயக் கையால் நாண்மலர் தொழுது தூவி
முகமெலாம் கண்ணீர் மல்க முன்பணிந் தேத்தும் தொண்டர்
அகமலால் கோயில் இல்லை ஐயன் ஐயாறனார்க்கே'

என்று திருநேரிசை அப்பர் பெருமானுக்குத் திருத்தொண்டில் இருந்த ஈடுபாட்டை நமக்குப் புலப்படுத்துகிறது.

திருநாவுக்கரசரைச் சேக்கிழார், 'வளர் திருத்தொண்டின் நெறிவாழ வருஞானத் தவமுனிவர்' என்று போற்றுகிறார். அப்பூதி அடிகள் புராணத்தில் 'நாவின் அமண் பதகருடன் ஒன்றிய மன்னவன் சூட்சியைத் திருத்தொண்டின் உறைப்பாலே வென்றவர் என்று பாராட்டுகிறார். நாயன்மார்களில் தொண்டின் சின்னமாக விளங்கும் உழவாரத்தைக் கையில் படைக்கலம் போலக் கொண்டு விளங்குவது அவருக்குத் தனிச் சிறப்பைத் தருகிறது.

'சிந்தை இடையறா அன்பும் திருமேனி தன்னில் அசைவும்
கந்தை மிகையாம் கருத்தும் கையுழ வாரப்படையும்
வந்திழி கண்ணீர் மழையும் வடிவில்பொலிதிரு நீறும்
அந்தமி லாத்திரு வேடத்து அரசும் எதிர்வந் தணைய'

பெரிய. ஞானசம். 270

என அப்பரடிகளின் திருவுருவத்தைச் சொல்லோவியமாக்கி அவரை நம் நெஞ்சில் நிலை நிறுத்துகிறார் சேக்கிழார். உழவாரப் படையாளி என்பது அப்பருக்குச் சேக்கிழார் சூட்டும் பெயர்களில் ஒன்றாகும். பதினோராம் திருமுறையில் நம்பியாண்டார் நம்பிகள் அப்பரடிகளை உழவாரப்படை கையில் உடையவன் எனக் குறிப்பிடுகிறார்.

3:3:6

மாதவச் சிவஞான சுவாமிகள் காஞ்சிப் புராணத்தில்,

"சடையும் பேரன்பும் மழைவாரும் இணைவிழியும்
உழவாரத்தின்
படையும் திருக்கரமும் சிவபெருமான் திருவடிக்கே
பதிந்த நெஞ்சும்
நடையும் பெருந்தவமும் வாகீசப் பெருந்தகைதன்
ஞானப் பாடல்
தொடையுறச் செவ்வாயும் சிவவேடப் பொலிவழகும்
துதித்து வாழ்வாம்'

எனப் போற்றுகிறார்.

அப்பரடிகள் தாம் செல்லும் திருக்கோயில்களில் உழவாரத் திருப்பணிகள் செய்தபின்தான் வழிபாடு செய்ததைப் பெரிய புராணத்தால் நாம் அறியலாம். திருநாவுக்கரசர் திருவாரூரை அடைந்தபோது அங்குத் தங்கித் திருத்தொண்டுகள் பல செய்து வழிபட்டதைச் சேக்கிழார்,

'மார்பாரப் பொழிகண்ணீர் மழைவாரும் திருவடிவும் மதுரவாக்கில்
சேர்வாகும் திருவாயில் தீந்தமிழில் மாலைகளும் செம்பொன் தாளே
சார்வான திருமனமும் உழவாரத் தனிப்படையும் தாமும் ஆகிப்
பார்வாழத் திருவீதிப் பணி செய்து பணிந்தேத்திப் பரவிச் செல்வார்'

என்று அருளிச் செய்கிறார். திருப்புகலூரில் அத்தகைய திருத்தொண்டு செய்யும் போது உழவாரத்திடையே, அகப்பட்ட செம்பொன்னையும் மணிகளையும் ஏனைய கற்களோடு சமமாகவே கருதி அவற்றை வாவியில் அள்ளிக் கொட்டியதையும் சேக்கிழார் அப்பரடிகளின் சமநிலைக்குச் சான்றுகளாகக் காட்டுகிறார்.

இன்றைய நிலையில் அப்பரடிகளைப் போலச் சமய வளர்ச்சிக்குப் பயன் கருதாது தொண்டு செய்யும் பக்தர்கள் பலர் உருவாக வேண்டும். சமயஞ் சார்ந்த அன்பர்கள் தம்மால் இயன்ற பொருளை வழங்குவதோடு உடலுழைப்பையும் ஆலயங்களுக்கு அளிக்க வேண்டும்.

3:3:7

குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் உழவாரத் திருத்தொண்டை அறிமுகப்படுத்தி, தமிழ்நாடு இந்து-சமய அறநிலையத்துறையினர் துணையோடு அன்பர்கள் பலருடன் தாமே சென்று உழவாரப் பணி செய்து சமயத்தொண்டின் பெருமையை மக்களறியச் செய்து வருகிறார்கள். சமயம் சார்ந்த சங்கங்கள் பல இன்று இத்தகைய திருத்தொண்டைச் செய்ய முற்பட்டுள்ளன. 'ஆண்டுக்கு ஒரு வாரம் உழவாரம்' என்ற குறிக்கோளுரையோடு அன்பர்கள் பலர் அப்பர் திருத்தொண்டைப் போற்றிச் செயல் வடிவு கொடுக்க முற்பட்டுள்ளனர். உழவாரம் என்ற பெயர் நம் சிந்தையில் நிலைக்க மதுரை அன்பர்கள் அழகிய திங்கள் இதழ் ஒன்றை வெளியிட்டு வருகிறார்கள்.

அப்பர் காட்டிய தொண்டு நெறியை மேற்கொண்டு அன்பர்கள் இறையருள் பெற்று இன்புறுவார்களாக.

'என்று சிவபோகம் இங்கிவர்க்கே என்னஉழ
வாரம்கொள் செங்கையர்தாள் வாரம்வைப்ப தெந்நாளோ'

— தாயுமானவர்.

***

[illegible]

[illegible]

[illegible]

3:5:1

## ஆகமங்கள்.

டாக்டர் டி.பி. சித்தலிங்கையா, எம்.ஏ., பி.எச்டி.,
தலைவர், சைவசித்தாந்தத் தத்துவத்துறை,
மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை.

சுருக்கம்)

(வேதங்களும் ஆகமங்களும் இறைவனால் அருளப்பட்டவை. அதனால்தான் அவையிரண்டுமே சைவசித்தாந்தத்தின் அடிப்படையாக ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளன. வேதம் பொதுவாகவும், ஆகமம் சிறப்பாகவும் சமய நெறிகளைக் கூறுகின்றன. சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு பாதங்களாக ஆகமங்கள் பகுக்கப்பட்டுள்ளன.

சமய தத்துவங்களை மட்டுமன்றிச் சமய நெறிமுறைகள், சடங்குகள், உற்சவங்கள், கோயில் அமைப்பு, கோயில் வழிபாட்டு முறைகள், மந்திரங்கள் முதலிய பல்வேறு பொருள்களைப் பற்றியும் ஆகமங்கள் பேசுகின்றன. சைவத்திற்குரியவை சிவாகமங்கள். வைணவ நெறிக்குரியவை வைகானசமும் பாஞ்சராத்திரமும். சாக்த நெறிக்குரிய ஆகமங்கள் "தந்திரங்கள்" என வழங்கப்படும். தந்திரம் என்பது ஆகமத்திற்கான மற்றொரு பெயர் என்றாலும், அது சிறப்பாகச் சாக்த ஆகமங்களையே குறிக்கும் வகையில் வழங்கப்படுகின்றது.

ஆகமங்கள் எண்ணற்றன. ஆயினும் இருபத்தெட்டை மட்டுமே சித்தாந்த சைவம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. திருமூலர் ஒன்பது ஆகமங்களை எடுத்துக் கொண்டு அவற்றின் சாரமாகத் தமது திருமந்திரத்தை இயற்றியிருக்கிறார். தமது நூலையே ஆகமம் என அவர் குறிப்பிடுகிறார். தேவாரத்தில் ஆகமத்தைப் பற்றிய குறிப்புகள் உண்டு. திருவாசகத்தில் பல குறிப்புகள் இருக்கின்றன. ஆகமங்களைத் தேடும் முயற்சி தொடர்ந்து வந்ததை எடுத்துப் பெரியபுராணம் குறிப்பிடுகின்றது.

(அ) ஆகமம் என்ற சொல் 'வந்தது' என்று பொருள்படும். இறைவனிடமிருந்து வந்தது என்பதைக் குறிக்கும்.

(ஆ) 'ஆ' என்பது அறவு, அறிவு, மரபு எனப்படுவதாகும். 'கம' வருதல், போதல், இறைவனை உணர்தல் என்பதைக் குறிக்கும். அதாவது, இறைவனிடமிருந்து வந்தது இறைவனை உணர்வதற்கு வழிகாட்டும்.
(இ) 'ஆ' என்பது பாசம்; 'க' என்பது பசு; 'ம' என்பது பதி. எனவே ஆகமம் என்பது பதி, பசு, பாசம் மூன்றையும் பற்றிக் கூறுகிறது.
(ஈ) 'ஆ' என்பது சிவஞானம்; 'க' என்பது மோட்சம்; 'ம' என்பது மலத்தை ஒழித்தல்.

ஆகமங்களின் அடிப்படையில் அமைந்தவையே சித்தாந்த சாத்திரங்கள். தமிழ்நாட்டில் திருக்கோயில்களும் ஆகமங்களையே அடிப்படையாகக்கொண்டவை. வழிபாட்டு முறைகளும் அவ்வாறே.

## 3:5:2 ஆகமங்கள்

வேதங்களும் ஆகமங்களும் இறைவனால் அருளப்பட்டவை.[1] அதனால் அவை இரண்டுமே சைவ சித்தாந்தத்தில் ஒப்புடையனவாக ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளன. வேதம் பொதுவானதாகவும் ஆகமம் சிறப்பானதாகவும் கொள்ளப் பட்டுள்ளன.[2] வேதம் பொதுவாகவும் ஆகமம் சிறப்பாகவும் சமயநெறிகளைக் கூறுகின்றன. சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு பாதங்களாக ஆகமங்கள் பிரிக்கப்பட்டிருக்கின்றன. [illegible], சாதனம் என்று குறிப்பிடுவதுண்டு. சாதகர்கள் அடையக்கூடிய பயனைப்பற்றியும் அவை பேசுகின்றன. சமய தத்துவங்களை மட்டுமின்றி, சமய நெறி முறைகள் சடங்குகள், சம்ஸ்காரங்கள், கோயில் அமைப்பு, கோயில் வழிபாட்டு முறைகள், மந்திரங்கள் முதலிய பல்வேறு பொருள்களைப் பற்றியும் ஆகமங்கள் பேசுகின்றன. சைவநெறிக்குரியவை சிவாகமங்கள், வைணவ நெறிக்குரியவை வைகானசமும் பாஞ்சராத்திரமும், சாக்தநெறிக்குரிய ஆகமங்கள் தந்திரங்கள் என வழங்கப்படும். தந்திரம் என்பது ஆகமத்திற்கான மற்றொரு பெயர். என்றாலும் அது சிறப்பாகச் சாக்த ஆகமங்களையே குறிக்கும் வகையில் வழங்கப்படுகிறது.

ஆகமம் என்பது இறைவனிடமிருந்து வந்தது என்பதைக் குறிக்கும். 'ஆ' என்பது அளவு, அறிவு, மரபு என்பதாகும்; 'கம' வருதல், போதல், இறைவனை உணர்தல் என்பதைக் குறிக்கும். அதாவது இறைவனிடமிருந்து வந்தது, இறைவனை உணர்வதற்கு வழிகாட்டும்.[3] மற்றொரு விளக்கமாவது: 'ஆ' என்பது பாசம். 'க' என்பது பசு. 'ம' என்பது பதி. எனவே ஆகமம் என்பது பதி, பசு, பாசம் மூன்றையும் பற்றிக் கூறுகிறது.

பிறிதொரு விளக்கம் 'ஆ' என்பது சிவஞானம். 'க' என்பது மோட்சம், 'ம' என்பது மலத்தை ஒழித்தல்.[4]

ஆகமம் என்னும் சொல்லின் பொருள், அது வெளியிலிருந்து வந்தது. அதாவது வேறொருவரிடமிருந்து பெறப்பட்டது என்பதையும் குறிக்கிறது. அந்த ஒன்று தமிழினமாகவும் இருக்கலாம். அல்லது ஆகமங்கள் முதலில் தமிழில் எழுதப்பட்டு, பிறகு வடமொழியில் பெயர்க்கப்பட்டிருக்கலாம் எனவும் பொருள்படும். இவ்வாறு சிலர் கருதுகின்றனர்.[5] 'ஆகமச் சைவம் சிறப்பாகத் தென்னாட்டுக்கு உரியது.[6] 'இது பற்றியே ஆகமங்கள் தமிழில் எழுந்த பின்னர் வடமொழியில் பெயர்க்கப்பட்டிருக்கலாம் என்னும் கருத்து வளர்ந்தது. ஆனால் வடமொழி, பிராகிருதம், பிராந்திய மொழிகள் ஆகியவை மூன்றிலுமே அவை தோன்றியதாகச் சிவதருமோத்தரம் கூறுகிறது.[7] இந்த நூல்கள் வழக்கிலிருந்தது உண்மையே ஆனாலும் ஒரு காலகட்டத்தில் அவை காணாமல் போயின. அல்லது அந்த நிலப்பகுதியில் வழக்கொழிந்து போயின. எனவே ஆகமங்களைத் தேடும் முயற்சியும் மொழி பெயர்க்கும் முயற்சியும் இருந்து

வந்தன. தேடும் முயற்சிக்கு எடுத்துக்காட்டு முத்தநாதன் மெய்ப்பொருள் நாயனாரிடம் கூறிய 'உங்கள் நாயனார் முன்னம் உரைத்த ஆகமநூல் மண்மேல் எங்கும் இலாத தொன்றுகொடு வந்தேன் இயம்ப'[8]. என்று கூறியது ஆகும். மொழிபெயர்ப்பு முயற்சிக்கு நல்ல எடுத்துக்காட்டு, திருமந்திரம் ஆகும். திருமூலர் தமது நூலை ஆகமம் என்பர் (திருமந்திரம் 135) சிவாகமம் (136) என்றும் கூறுகிறார். தமக்குச் சிறப்பை ஒரு பாடலில் கூறும் அவர் 'என்னை நன்றாக இறைவன் படைத்தனன், தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே' (152) என்று தமது மொழி பெயர்ப்பு முயற்சியைக் குறிப்பிடுகிறார்.

பெரும்பாலான ஆகமங்களில் வித்தியாபாதம் என்னும் ஒரு பகுதி உண்டு. அந்தப்பகுதி எந்த ஒரு குறிப்பிட்ட சைவப்பிரிவுக்கான ஆகமமாக அது பயிலப் பட்டு வருகிறதோ, அந்தச் சைவப்பிரிவைப் பற்றிய கொள்கைகளை அந்தப் பகுதி விளக்கும். பொதுவாக, உலகத்தோற்றம், நிலை, அழிவு, உண்மை, அருள் மறைப்பு, முக்தி ஆகியவற்றை எல்லா ஆகமங்களுமே பேசுகின்றன. ஆகமங்களின் காலத்தைப்பற்றிக் குறிப்பாக எதையும் வரையறுத்துச் சொல்ல முடியாது. என்றாலும் கி.பி. இரண்டு அல்லது மூன்றாவது நூற்றாண்டிலிருந்து பதினொன்றாம் நூற்றாண்டு வரை என்று குறிப்பிடலாம். சமயச் சடங்குகள், ஒழுக்கங்கள், நடைமுறைகள், மந்திரங்கள், கோயில் அமைப்புத்தாபன முறைகள், சிவலிங்கங்களை அமைக்கும் முறை, வழிபாட்டு முறைகள் ஆகியவற்றைப் பற்றியும் ஆகமங்களிலிருந்து தெரிந்து கொள்கிறோம். கந்தபுராணத்தின் ஒரு பகுதியான சூத சங்கிதை, காமிகம் முதலிய ஆகமங்களைப் பற்றிக் குறிப்பிடுகிறது. இந்த ஆகமங்களின் அடிப்படையில் பல்வேறு சைவப்பிரிவுகள் தோன்றின என்று சொல்லலாம். சிவ மகாபுராணமும் அவற்றைப் பற்றிக் குறிப்பிடுகிறது. பாசுபதம், மா விரதம், காஷ்மீர சைவம், வீரசைவம், காளாமுகம் வயிரவம் முதலிய பல்வேறு பிரிவுகள் தத்தமக்கென்று சில ஆகமங்களை ஏற்றுக் கொண்டிருந்தன. எடுத்துக்காட்டாக, வாதுள தந்திரம், வீரசைவ தந்திரம், வீராகமம், சிவசித்தாந்த தந்திரம், காமிகம், வாதுளம், மகுடம், சுப்பிரபேதம், சுயம்பு முதலிய ஆகமங்களை வீரசைவர் தமக்குரியனவாக ஏற்றுக்கொள்கின்றனர். வாதுள தந்திரம் வாதுளாகமத்தின் வேறானது. அது 'ஷட் ஸ்தல'ங்களைப் பற்றிக் கூறுகிறது. சித்தாந்த சைவத்திற்குரியனவாக இருபத்தெட்டு ஆகமங்கள் குறிக்கப்படுகின்றன. அவை தவிர, மிருகேந்திரம் பௌஷ்கரம், மாதங்க பரமேசுவர தந்திரம், வாதுள தந்திரம் முதலியவையும் சித்தாந்தக் கொள்கைகளைக் கூறுகின்றன.

ஆகமங்களில் முப்பத்தாறு தத்துவங்கள் குறிக்கப்படுகின்றன. இந்தக் கருத்துக்களையே பின்னர் வந்த சித்தாந்த நூல்கள் விரிவாக எடுத்துரைத்தன. சிவமகாபுராணத்தின் வாயவீய சங்கிதை இருபத்தெட்டு சிவாசாரியர்களை

பற்றிக் குறிப்பிடுகிறது. ஆனால் இந்த ஆசிரியர்களும் இருபத்தெட்டு சிவாகமங்களையும் தொகுத்துக் காட்டியதாகத் தெரியவில்லை.

தமிழில் திருமூலர் ஆகமங்களைப் பற்றி விரிவாகச் சொல்கிறார். ஆகமங்கள் எண்ணற்றவை என்ற சொல்ல வந்தவர், 'அண்ணல் அருளால் அருளுஞ்சிவாகமம் எண்ணில் இருபத்தெண் கோடி நூறாயிரம்' (69) என்கிறார். என்றாலும் இருபத்தெட்டு ஆகமங்களே அவற்றுள் முக்கியமானவை என்றும், அவற்றைச் சிவபெருமானிடமிருந்து இருபத்தெட்டு அறிஞர்கள் ஐந்து முகங்களில் இருந்தும் கேட்டார்கள் என்றும், அவர் குறிப்பிடுகிறார்.[10] அவையாவன:
1. காமிகம், 2. யோகஜம், 3. சிந்தியம், 4. காரணம், 5. அஜிதம்
6. தீப்தம், 7. சூட்சுமம், 8. சகஸ்ரம், 9. அம்சுமான், 10. சுப்ரபேதம்
11. விஜயம் 12. நிஸ்வாசம் 13. சுவாயம்புவம், 14, அனலம்,
15. வீரம், 16. ரௌரவம் 17. மகுடம் 18. விமலம் 19. சந்திரஞானம்
20. பிம்பம் 21. புரோத்கீதம் 22. லலிதம் 23. சித்தம், 24. சந்தானம்
25. சர்வோக்தம் 26. பாரமேசுரம் 27. கிரணம் 28. வாதுளம்.

இவ்விருபத்தெட்டுள் ஒன்றாகிய ரௌரவ ஆகமத்தின் பாசமோசனப் படலத்தின் ஒரு பகுதி சிவஞான போதம் என்றும், அதன் தமிழ் மொழிபெயர்ப்பே மெய்கண்டாரின் சிவஞானபோதம் என்றும் ஒரு கருத்து, பல நூற்றாண்டுகளாக நிலவி வந்தது. அதனை அறிஞர் பலர் மறுத்தனர். இப்போது அச்சில் கிடைக்கும் ரௌரவாகமத்தில் அந்தப்பகுதி இல்லை. மேலும் ஆகமங்கள் ஒன்பதே என்றும் அவற்றை இருபத்தெட்டாகப்பிரித்து வெவ்வேறு பெயர்கள் கொடுத்தார்கள் என்றும், ஒவ்வோர் ஆகமமும் கர்மகாண்டம், ஞான காண்டம், உபாசனா காண்டம் என்னும் மூன்று பிரிவுகளை உடையன என்றும் திருமூலர் குறிப்பிடுகிறார். இந்த ஒன்பது ஆகமங்களை நவ ஆகமங்கள் என்பர். அந்த ஒன்பதும் எவை என்பதை மற்றொரு திருமந்திரப் பாடல் குறிப்பிடுகிறது (73). ஆகமத்தைக் குறிக்கத் 'தந்திரம்' என்ற சொல் அந்நூலில் ஆளப்பட்டுள்ளது.

திருமூலர் தமது நூலையே ஓர் ஆகமம் என்று குறிப்பிடுகிறார். அந்நூல் ஒன்பது ஆகமங்களை அடிப்படையாகக் கொண்டது. அந்த ஒன்பது ஆகமங்களாவன:

காரணம், காமிகம், வீரம், சிந்தம், வாதுளம், வியாமளம், காலோத்தரம், சுப்பிரம், மகுடம் என்பன.

மேற்கூறிய ஒவ்வோர் ஆகமத்தின் அடிப்படையிலமைந்த திருமந்திரப் பகுதிகள் ஒன்பதும், முதல் தந்திரம், இரண்டாம் தந்திரம், மூன்றாம் தந்திரம் என்ற தொடர்ச்சியாகப் பெயர் சூட்டப்பட்டுள்ளன.

முதல் தந்திரம் காரணாகமத்தை அடிப்படையாகக் கொண்டது. யாக்கை

நிலையாமை, இளமை நிலையாமை, செல்வம் நிலையாமை, கொல்லாமை, புலால் மறுத்தல், அன்புடைமை, கல்வி, கேள்வி, கல்லாமை, நடுவுநிலைமை கள்ளுண்ணாமை முதலிய பலவற்றைப் பற்றிக் கூறுகிறது.

காமிகாகமத்தின் அடிப்படையில் அமைந்த இரண்டாம் தந்திரம் புராணக் கதைகள், இறைவனின் ஐந்தொழில்கள், விஞ்ஞானகலர் (ஒரு மலமுடையோர்) பிரளயாகலர் (இருமலமுடையோர்) சகலர் (மும்மலமுடையோர்), திருக்கோயில், தீர்த்தம்; சிவநிந்தை, குருநிந்தை, அடியார் நிந்தை, பெரியோரைத் துணைக் கோடல் முதலிய பலவற்றைப்பற்றிக் கூறுகிறது.

மூன்றாந்தந்திரம் (வீராகமம்), அட்டாங்க யோகம், அட்டமாசித்தி கலைநிலை, காலச்சக்கரம், கேசரி யோகம், பரியங்க யோகம், அமுரிதாரணை, சந்திரயோகம் போன்றவற்றை விளக்குகிறது. இதனை யோகநூல் பகுதி என்றே குறிக்கலாம்.

நான்காந் தந்திரம் (சிந்தாகமம்), மந்திரங்கள், உபாசனைகள், சக்கரங்கள், ஆதார ஆதேயங்கள் முதலியவற்றைக் கூறுகிறது.

வாதுளாகமத்தின் அடிப்படையில் அமைந்த ஐந்தாம் தந்திரம் சைவத்தின் பல வகைகள் (1394-14). சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நால்வகை நெறிகள் (1417-49), சன்மார்க்கம், சகமார்க்கம், சத்புத்திர மார்க்கம், தாசமார்க்கம் என்னும் நான்கு முறைகள் (1450-80) நால்வகை முத்திகள் (சாலோகம், சாமீபம், சாயுச்சியம் (1481-87), மந்தம், மந்ததரம், தீவிரம், தீவிர தரம் என நால்வகையில் அமைந்த சத்திநிபாதம் (1488-1502) ஆகிய பலவற்றைப் பற்றிப் பேசுகிறது.

ஆறாந் தந்திரம் (வியாமளாகமம்), சிவகுரு தரிசனம், ஞானம், துறவி தவம் முதலியவற்றைப் பற்றியும் அவற்றோடு தொடர்புடையவற்றைப் பற்றியும் கூறுகிறது. 'திரிபுடி ஞானம்' - அதாவது அறிவான், அறியும் பொருள், அறிவு என்பதனை அது குறிப்பிடுகிறது.(1579-87). திருநீற்றின் பெருமையையும் (1637-39) அது விளக்குகிறது.

காலோத்தராகமத்தைத் தழுவி எழுந்த ஏழாம் தந்திரம் ஆறு அத்துவாக்கள் (1676-82) அண்டம், பிண்டம், சதாசிவம், ஆன்மா, ஞானம், சிவம் என்னும் ஆறு லிங்கங்கள் (1683-1746) திருவருள் (1761-82, 1783-91) சிவபூசை, அடியார்பூசை, குருபூசை (1792-1830), அடியார்பெருமை (1831-46) முதலியவற்றைப்பற்றி எடுத்துரைக்கிறது. சமாதியைப் பற்றியும், பசுவிலக்கணத்தைப் பற்றியும், ஐம்பொறிகளை அடக்கும் முறை பற்றியும் கூட அது பேசுகிறது.

எட்டாந் தந்திரம் (சுப்பிரகமம்) உடலமைப்பு, அவத்தை பேதம் (2103-2314), முக்குணங்கள் (2257) பதி, பசு, பாசமிவற்றின் விளக்கம் (2360-85) தத், துவம், அசி என்னும் மூன்று சொற்களின் விளக்கம் (2398-2405) மூன்று துரியங்கள் (2427-34) முதலியவற்றை விளக்குகிறது.

மகுடாகமத்தை ஒட்டி எழுதப்பட்டதும் ஒன்பதாவதும் ஆகிய கடைசித் தந்திரம் குரு, குருதரிசனம், சமாதி, ஐந்தெழுத்து, (தூலம், சூக்குமம், அதிசூக்குமம் - 2649-73) இறைவனின் கூத்து (2674-2758), ஞானோதயம் (2768-2781), சிவ சொரூப தரிசனம் (2812-20), மறைபொருட்கூற்று (2826-2895), மோனசமாதி (2896-2913), அறிந்தோர் நன்மை (2917-39), இறைவனின் பெருமை (2940-3000) முதலியவற்றைப் பற்றி பேசுகின்றது. இதில் வரும் 'மறைபொருட்கூற்று' என்னும் பகுதி அறிதற்கும் புதிராய் உள்ளது.

வேதம், ஆகமம் என்னும் இரண்டு பேராறுகளைச் சொல்லி வரும் திருமூலர் இரண்டுக்கும் உள்ள தொடர்பைத் தெளிவாக விளக்குகிறார். இரண்டுமே இறைவன் அருளியவை. வேதம் பொது, ஆகமம் சிறப்பு. வேதத்தின் அந்தம் வேதாந்தம் எனப்படும். ஆகமத்தின் அந்தம் ஆகமாந்தம். இதுவே சித்தாந்தம் (காஷ்மீரச் சைவமும் ஆகமாந்தம் என்றே வழங்கப்படுவது இங்கே குறிப்பிடத்தக்கது) வேதாந்தம், சித்தாந்தம் என்பவை வெவ்வேறானவை என்று சிலர் சொல்வர். ஆனால் பெரியவர்களுக்கு இவ்விரண்டுக்கும் இடையில் வேறுபாடு தெரிவது இல்லை, என்கிறார் திருமூலர். (2358)

இந்தக் கருத்தைப் பின்னால் வந்த சிவஞான சித்தியார் விரித்துரைக்கிறது.

"வேதநூல் சைவநூ லென்றிரண்டே நூல்கள்
வேறுரைக்கும் நூலிவற்றின் விரிந்த நூல்கள்
ஆதிநூல் அநாதி அமலன்தரு நூ லிரண்டும்
ஆரணநூல் பொதுசைவம் அருஞ்சிறப்பு நூலாம்
நீதியினால் உலகர்க்குஞ் சத்திநிபாதர்க்கும்
நிகழ்த்தியது நீள்மறையின் ஒழிபொருள் வேதாந்தத்
தீதில்பொருள் கொண்டுரைக்கும் நூல்சைவம் பிறநூல்
திகழ்பூர்வம் சிவாகமங்கள் சித்தாந்தமாகும்." (சித்தியார் சுபக்கம் 267)

இவ்வாறாக, சித்தாந்த சைவத்திற்கும் சைவத்திற்கும் சைவ சமயப் பிரிவுகள் பலவற்றிற்கும் ஆகமங்கள் அடிப்படையாக அமைகின்றன. தென்னாட்டுத் திருக்கோயில்களும் ஆகமங்களின் அடிப்படையிலேயே அமைந்துள்ளன. அங்கு நடைபெறும் வழிபாடுகளும் ஆகமத்தின் அடிப்படையிலேயே அமைந்துள்ளன.

## அடிக்குறிப்புகள்.

1. அங்கமொராறும் அருமறை நான்கும் அருள்செய்து — 1-100.2
   - வேத நான்கும் பதினெட்டொடாறும் விரித்தார் — 2.114.2
   - விண்ணர் வேதம் விரித்தோத வல்லார் — 2.118.6
   - பங்க மில் பதினெட்டொடு நான்குக் குணர்வுமாய் அங்கமாறும் சொன்னான் — 2.6.6
   - தொகுத்தவன் அருமறை அங்கம் ஆகமம் வகுத்தவன் — 3.23.6
   - பொங்கழல் உருவன் பூதநாயகன் நால்வேதமும் பொருள்களும் அருளி — 3.120.1
   - வேதமோதும் விரிசடை அண்ணலார் — 5.14.9
   - பாடினார் சாம வேதம் — 4.27.2
   - வேதகீதம் முறையொடும் வல்ல... மிடறர் — 4.8.8
   - ஓதினார் வேதம் வாயார் — 4.22.5
   - நால் மறையோடு ஆறங்கம் நவின்ற நாவார் — 6.10.6.10
   - அங்கங்களும் மறைநான்குடன் விரித்தான் — 7.71.3
   - மறை நான்கும் விரித்துகந்தீர் — 7.25.4
   - வேதந்தான் விரித்தோத வல்லானை — 7.61.7
   - அங்கமும் நான்மறையும் அருள்செய்.... மங்கையொர் கூறுடையான் — 1.108.4

   வைணவர்களும் கூட வேதங்கள் சிவபெருமானுடைய வாய்மொழி என்று சொல்கிறார்கள்.

   "இருக்கிலங்கு திருமொழிவாய் எண்தோளீசர்" — திருமங்கையாழ்வார் பெரிய திருமொழி — 6.6.8
   - அரன் ஆகமம் — 3.79.6
   - ஆகமச் செல்வனார் — 3.57.10
   - அண்டர் தமக்காக ஆகம நூல் மொழியும் ஆதியை — 7.84.8
   - ஆகமங்கள் அறிவார்.... உத்தமனே — 7.100.8
   - ஆகம சீலர்க்கு அருள் நல்கும் பெருமானே — 7.96.6
   - மன்னுமா மலை மகேந்திரமதனில் சொன்ன ஆகமம் தோற்றுவித்தருளியும் — கீர்த்தித் திரு — அகவல் அடி — 10
   - மற்றவை தம்மை .... ஐம் முகங்களால் பணித்தருளியும் மேற்படி அடிகள் — 19-20
   - ஆகமமாகி நின்றண்ணிப்பான் — சிவ புராணம் அடி — 4

3:5:8

2: வேதம் பசு அதன்பால் மெய்யாகமம் நால்வர்
ஓதும் தமிழ் அதனின் உள்ளுறு நெய் - போதமிகு
நெய்யின் உறுசுவையாம் நீள்வெண்ணெய் மெய்கண்டான்
செய்த தமிழ் நூலின் திறம்
வேதமோ டாகமம் மெய்யாம் இறைவனூல்
ஓதும் பொதுவுஞ் சிறப்பு மென்றுள்ள
நாதன் உரையவை நாடில் இரண்டந்தம்
பேதம தென்பர் பெரியோர்க் கபேதமே - திருமந்திரம். 2358

3. ஸ்ரீ நிச்சயப்பேருரை 1946 - முன்னுரை ப். 25

4. பரஞ்சோதி - The Saiva Siddhanta, 1946, பக். 16-17

5. Dr. Ponniah - The Saiva Siddhanta Theory of Knowledge
1952. ப. 7

6. S. N. Dasgupta. A History of Indian Philosophy Vol V
1962. P 18

7. ஸம்ஸ்க்ருதை: ப்ராக்ருதைர் வாக்யைர் யஸ்ச சிஷ்யானுரூபத:
தேச பாஷாத்யுபாயைஸ்ச போதயேத் ஸ குரு:
ஸ்ம்ருத: - மேற்படி நூல் ப.15

8. பெரிய புராணம் - 5, 10

9. S.N. Dasgupta முற்கூறிய நூல் ப. 96

10. அஞ்சன மேனி அரிவையோர் பாகத்தன்
அஞ்சொ டிருபத்து மூன்றுள ஆகமம்
அஞ்சலி கூப்பி அறுபத் தறுவரும்
அஞ்சா முகத்தில் அரும்பொருள் கேட்டதே - 68

11. ஆகமம் ஒன்பான் அதில்ஆன நான்மறை
மோகமில் நான்மறை முப்பேத முற்றுடன்
வேகமில் வேதாந்த சித்தாந்த மெய்மையொன்
றாக முடிந்த அருஞ்சுத்த சைவமே - 74

12. பரனாய்ப் பராபரம் காட்டி உலகில்
தரனாய்ச் சிவதன்மம் தானேசொல் காலத்து
அரனாய் அமரர்கள் அர்ச்சிக்கும் நந்தி
உரனாகி ஆகமம் ஓங்கிநின் றானே - 71

***

## பரிவாரதேவதைகள் -- வழிபாட்டுமுறைகள்.

4:1:1 முதுபெரும்புலவர், முனைவர் ச. தண்டபாணி தேசிகர்.
மயிலாடுதுறை.

### தொடக்கவுரை:

தவத்திரு அடிகளார் அவர்களுடைய திருவடிகட்கும், மாண்புமிகு துணை வேந்தர் அவர்களுக்கும் செந்தமிழோடு சிவமணங்கமழும் மனமலரையுடைய செம்மைச் செல்வர்களுக்கும் வணக்கங்கள் பலப்பல.

அடியேற்கு அவை வாயிலாக அடிகளார் அருளிய பணி பரிவார தேவதைகளையும், அவற்றின் வழிபாட்டு முறைகளையும் அடியேன் அறிந்த அளவு தெரிவித்துக் கொள்ளும் சிறிய பணிதான். சிவநேயச் செல்வர்கள் செவிமடுத்துச் சிந்தையில் தேக்கி தெளிவுகண்டு அடியேனுடைய சிந்தனைகளையும் விடுவிட்ட வாயிலாகத் தேடி மேன்மேலும் பல ஆகமங்களையும் அவற்றைப் பெரியோர்கள் ஆய்ந்து கண்ட முடிவுகளையும் ஒப்புநோக்கித் தெளிந்து செயற்படுத்த வேண்டிக்கொள்கிறேன்.

இக்கருத்தரங்கைக் கூட்டுவித்த உங்களுடைய நோக்கம், பல்லாண்டு பல்லாண்டுகளாகக் குடிகளுக்கும் கோயில்களுக்கும் இருந்து வளர்ந்து வந்த, வளர்ந்து வந்த பழம்பெருந்தொடர்பு ஏன் இடையிட்டது போலத் தோன்றுகிறதே! செட்டிநாட்டில் கோட்டீஸ்வரர் குடும்பமானாலும் 'கோயில் வழிக்குடி மரபு இன்னும் இருந்து நிலைநாட்டி வருகிறதே! தமிழகம் முழுவதும் அப்படித்தானே இருந்திருக்கும் ஏன் இடையில் தொடர்பு அற்று வருகிறது, உழைப்பு வகையாலும் உள்ளன்பாலும் குலதெய்வம் என்ற அச்சத்தாலும் அடுத்து அடுத்த கிராமத்தான் வந்து -- அறத்தாலும் அடையீடுபடாத உறவு இன்று அற்றது போலத் தோன்றுகிறதே ஏன்? இதனை உரியகாலத்தே ஒட்டி வளர வைக்கவேண்டும் என்ற உள்ளக்-கிளர்ச்சிதான்.

கடவுள் என்ற அச்சம் துரள்வு எல்லார் உள்ளத்தும் ஒட்டியிருந்தது. மழையின்மை பெருமழை முதலான இயற்கை நிகழ்ச்சிகள் அச்சத்தை வளர்த்து வந்தன. அச்சத்தால் உண்டியான அன்பு உள்ளத்தே ஊறிக்கொண்டேயிருந்தது. கடவுள் வாழ்த்துக்குப் பின்பு அடுத்து வான் சிறப்பை வைத்த வள்ளுவர் கருத்தும் அதுதானே! "அஞ்சியாயினும் அன்பு பட்டாயினும் நெஞ்சமே நினைநின்றிடுவரை நீ" என அச்சத்தால் நினைப்பதைக் காட்டிலும் அன்பால் விளையும் உளநெகிழ்ச்சி தான் உயர்ந்தது என்று நமக்குத் தெரிவித்தருளினரே ஞானசம்பந்தப்பெருமான்.

திருமூலதேவநாயனாராகிய சிவாகமங்களைத் தமிழ் செய்து நம்மனைவரையும் வாழவைக்க வந்த சிவயோகியார், தம்பிகளே! ஒரு நாள் இரண்டு நாள் உங்களுக்கு உணவு இல்லாமல் இருந்தாலும் பொறுத்துக்கொள்ளுங்கள்! கடவுளையும்

4:1:2

கோயிலுக்கும் மக்களுக்கும் உள்ள தொடர்பு அறுந்து போக வேண்டாம். "முன்னவனார் கோயில் பூசைகள் முட்டிடின் மன்னர்க்குத் தீங்குள; மாரிவளம் குன்றும்; கன்னம் களவு மிகுந்திடும் காசினி" என்கிறார்; "இது எங்கோ இல்லை; பெருநாதன் வாக்கு சத்தியம் என்பார்," "என்அருள் நந்தி எடுத்துரைத்தானே" என்று ஆசிரியவசனத்தை எடுத்துக்காட்டுகிறாரே!

சிவயோகியார் எச்சரிக்கையை ஏட்டளவில் மட்டுமா பார்க்கிறோம். கண் எதிரே கண்டு கலங்குகிறோமே! நாள் இதழ்களைப் பிரித்தால் அங்கே கொள்ளை, இங்கே கொலை, அங்கே மோதல், சாதல், இங்கே பட்டினி, அங்கே பஞ்சம் என்பதைப் பார்க்காத நாள் படிக்காத நாள் ஒன்றாவது உண்டா?

மக்களுடைய வாழ்வியலை வகுத்துக்கொடுக்கும் கோள்கள் கூட ஒன்பதாக இருந்தவை பதினொன்றாகிவிட்டனவாமே! நாம் கண்டு வழிபடும் ஒளித் தெய்வமாகிய நன்னெறித் யாருமே இல்லாத சூரியனுக்கும் போட்டி முளைத்து விட்டதாமே! (தினமணி அறிவியல் பகுதி)

மற்றொரு பெரியார் எச்சரிக்கிறார்:- நாம் செய்யும் அநியாயத்தை யார் பார்க்கப்போகிறார்? எவருக்குத் தெரியும்? என்று ஏமாந்து போகாதே! எங்கும் உளன் ஒருவன் காணுங்கொல் என்று அஞ்சி அகங்குழைவதே அறிவு" என்கிறார்.

திருக்கோயில் இழிவு என்ற பகுதியிலே திருமூலதேவர் நாம் அனைவரும் கண்டு கேட்டுத்தெளிய அபாயச்சங்கை ஊதிக்கொண்டே இருக்கிறாரே! பிறர் மறையின்கண் செவிடாக இருக்கலாம். அது நம் மறையல்லவா? இந்த நிலையில் நாம் வாழ நாம் செய்யவேண்டிய முதற்கடமை என்ன? கோயிலுக்கும் குடிகளுக்கும் உள்ள தொடர்பை அறிவிக்கும் பழைய சாசனங்களைப் புதுக்கிக் கொள்ள வேண்டியதுதான்!

எப்படிப் புதுக்குவது? ஆலய பரிபாலனத்தையா? இல்லை; இல்லை. உழவு, விளைவு, நிர்வாகப் பொறுப்புக்களை அந்தந்த ஊரிலே நிலையாக வாழ்ந்து கொண்டிருக்கிற தன்னலமற்ற சிவபக்தி நிறைந்த குடிமக்களிடமே ஒப்படைத்துத்தான் உறவை வளர்க்கமுடியும். தப்பித்தவறி அரசன் தவறு செய்தால் தவறுகளின் பயன் நம்மையுந்தானே பாதிக்கும் என்று அஞ்சி எச்சரிப்பான்; திருத்துவான். இப்படியேதான் நடந்துவந்ததாக நம் கிராம வரலாறுகள் காட்டுகின்றன.

கேட்டீர்களா? "சிவசொத்து குல நாசம்", "கோயில் சொத்து குடிகெடுக்கும்" "அரசு அன்று கொல்லும், தெய்வம் நின்று கொல்லும்" என்ற பழமொழிகள் எவ்வளவு உண்மையான அநுபூதிவாக்குகள்! இந்த நிலைமை வளர்ந்துகொண்டே வராமலிருக்க நீங்கள் அன்பு நெறித் தொடர்பைக்

சொன்னீர்கள். கடவுள் அருள்நெறித் தொடர்பை காட்டுவாரே! ஒன்று —
கொடுத்து பதிலு வாங்கலாமே!" தந்தது உன்தன்னைக் கொண்டது என் தன்னை
சங்கரா! யார்கொலோ சதுரர்! அந்த மொன்றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாது நீ பெற்றது ஒன்று" என்று சொல்லி விடலாமே!

இப்படி உண்மையான உறவைக் கடவுளிடமும் கோயிலிடமும் கொண்டோ-
மானால் கடவுள்தான் நம்மை மறப்பாரா? நாம் தான் கடவுளை மறக்க முடியுமா?
உறங்கி எழுந்தால் "சிவசிவா", இருந்தால் "சிவசிவ" இடறி விழுந்தால்
"சிவசிவ"! எழுந்தவுடன் "கடவுளே! நான் என்ன தவறு செய்து விட்டேன்"
என் முழங்கால் சில்லைப் பெயர்த்துவிட்டீரே!" என்று கதறிக்கொண்டே போய்க்
கடவுளைத் தொழுவார். இப்படி வாழ்விலும் தாழ்விலும் குடி மக்களுக்குக் கோயில்
தொடர்பு வந்துகொண்டே இருக்கும். இப்படி அந்த நாளில் தொடர்பு வளர்ந்து
வந்ததை 7 ஆம் நூற்றாண்டிலேயே ஞானசம்பந்தக் குழந்தை பால் குடித்த
நன்றியை மறந்து விடாமல் "இடரினும் தளரினும் நின் திருப் பெயரல்லால் மற்று
அறியேன் மறு மாற்றம்" "இடரினும் தளரினும் எனதுறு நோய் தொடரினும்
உன்கழல் தொழுதெழுவேன்" என்ற பதிகம் முழுதுமே குடிகளுக்கும் கோயிலுக்கும்
உள்ள தொடர்பைக் காட்டுகிறாரே!

இப்படியிருந்த தொடர்பு எப்படி எங்கே யாரால் வேர் அறுந்தது?
என்று நீங்கள் ஆழ்ந்தாழ்ந்து சிந்தித்த பயனே உயர்தரக் கல்வியும், மனமாசகற்றி
மகேசன் அருளைச் சுரக்கச்செய்யும் இந்தப் பெரிய முயற்சி.

இறை திருவருளால் உங்கள் உள்ளத்தெழுந்த இந்த முயற்சி வெற்றிகரமாக
வளர சிவ சிந்தனை — சிவபூசை நேசம் வேண்டும். அதற்குரிய வழிவகைகளில்
ஒன்றே பரிவார தெய்வங்களை வழிபட்டு அவர்கள் வழிவிட, முதல்வனைக்கண்டு
காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கப் பூசிக்க முதலில் பரிவாரங்களைப் பற்றிச்
சிறிது அறிவோம். அறியப் பல நூல்கள் துணை செய்கின்றன. முயன்றால் முடியாப்
பொருள் உளவோ! முயன்று பார்ப்போம்.

அரசனைக் காண அரண்மனைக்குப் போகிறோம்; அங்கே கோபுர
வாயிலில் இருந்து அந்தப்புரவாயில்வரை அகப்பரிவாரங்களும் புறப்பரிவாரங்களும்
நாம். அவர்களை முறையே கண்டு அணுக வேண்டிய முறைகளையும்; விண்ணப்பித்துக்
கொள்ள வேண்டிய வழிவகைகளையும்; அவர்களுடைய இருப்பாலும் சொல்லாலும்
குறிப்பாலும் உணர்ந்து அணுகுகிறோம்; காரிய சித்தியுடன் திரும்புகிறோம்.

இங்ஙனம் பல படிகளாக இறைத் தொடர்போடு தொடர்ந்த கோயில்
குடிகள் தொடர்பு, மொழியாலும் சாதியாலும் இவைகளால் மட்டுமா?
கேவலாத்வைதம், சுத்தாத்வைதம், விசிஷ்டாத்வைதம், துவைதம் முதலான

4:1:4

அநுபூதி நிலைகளாலும், இதுதான் முதல் தெய்வம், இதுதான் முதல் தெய்வம் என்ற தெய்வத் தலைமைப் போராட்டங்களாலும் பிளவு ஏற்பட்டது. இந்த அநுபூதிநிலை இவர்கட்குத்தான் சொந்தம் என்பது முதலான வேறுபாடுகளால் பிளவு விளைந்தது. கும்பிட இருந்த கோவில்கள் கூலி கொடுக்கும் தொழிற்சாலைகளாகவும் மாறின. பின்பு அதில் நல்லம், இலாபப்பற்று நுழைக்க, நிர்வாகம் சூழலால், அரசாங்கம் தலையிடத் தொடங்கியது. ஆலயச் சடங்குகளும், சமயப்பண்பாடும் அறியாத பொதுவான படிப்பாளிகள் நிர்வாகிகள் ஆயினர். அந்த நிலையில் உயர்நிலைக் கண்காணிப்பாளராக இருந்த உத்தண்டராமபிள்ளை அவர்கள் நிர்வாகிகள் சிறந்த குடிக்குரிய சடங்குகளையும், வழிபாட்டுக்குரிய செப்பங்களையும் அறியத்தான் வேண்டும் என்று ஓரளவு முயன்றார். இந்த வளர்ச்சியும் மாற்றமும் ஏற்பட்ட காலம் அவ்வச்சமயங்களுக்குரிய தீட்சைகளையும் சமஸ்காரங்களையும் பயின்றவர்கள் பணியில் ஈடுபட்டனர். திருமேனி தீண்டிப் பூசிக்கத் தொடங்கினர்; முற்பட்டனர்; விரும்பினர். அந்நிலையிலேயே சில சமயப் பேரறிஞர்கள்

वने ... इच्छु अन्या भीतो गजेन्द्रः (तन्त्रा)

अद्रौ ... लिङ्गं यत्रा भीतो महेश्वरः

என்ற காமிக வசன மேற்கோளைக் காட்டி உபதேசங்களும் கிரியை முறைகளும் அவ்வச்சமயத்திற்குரிய வகையில் தரப்பட்டன. அதனால் சமய வழிபாட்டு முறையில் ஓரளவு ஒருமைப்பாடுண்டாயிற்று.

இவ்வகைய வேறுபாடுகளைப் போக்க நாயன்மார் வரலாறுகளும், ஆழ்வாராசிரியர் பாசுரங்களும் திருவருளால் தோன்றின. இந்நிலையில் அனைவருக்கும் சரியை கிரியை யோக ஞானங்களை ஓரளவாவது உணர்த்தவேண்டும். குடிகளும் கோயில்களும் நிலையும் என்று எண்ணுகின்ற உங்கள் அனைவருக்கும் பல நூல் வகைகள்:- ஞான சாதனங்களாக வேதமொடு ஆகமங்கள் உள்ளன. இவையனைத்தும் இறைவனே அருளியவை. "வேதமொடாகமம் மெய்யாம் இறைவனூல்". அன்புநெறி தழைக்கத் தேவார-திருவாசக-திவ்யபிரபந்தங்கள் உள்ளன. அநுபூதி நெறியை விளக்கவும் - பழக்கவும் சிவஞான போத முதலான சாத்திர நூல்கள் உள்ளன. வழிபாட்டு முறைகளை விளக்க பத்ததி நூல்கள் உள்ளன. இவையனைத்துமே "அவரவரை தமரானையாக" வந்தவை என்பதை மறந்து விடாதீர்கள்.

இவற்றின் துணைக்கொண்டு ஓரளவு பரிவார தேவதைகளை நினைத்துப் பார்ப்போம். மூல மூர்த்திகளை முன்னின்று காவல்புரி ஏவல்மூர்த்திகள் எங்கெங்கு எப்படி உள்ளார் என்பதைப் பத்ததி நூல்கள் பகர்கின்றன.

4:1:5

பூஜை:- "பூஜ்யந்தே சர்வகர்மாணி; ஜாயந்தே ஞானம் ஆத்மனி" என்ற காரணாகமக் கூற்றின்படிக் கிரியைகள் அனைத்தையும் பூசிக்கிறன். அதாவது செய்து வழிபடுகிறன். அதனால் ஆன்மாவினிடத்தில் சிவப்பெருக்கும் பரஞானத்தைத் தோற்று வித்துக் கொள்கிறன் என்பது. "இதனாற் போந்த பொருள்" எவ்வளவு சிவபூசை செய்கிறனே அவ்வளவுக்கவ்வளவு ஆன்மாவினிடத்தில் சிவம் பிரகாசிக்கிறது" என்பதாம் இதுதான் ஆத்மார்த்த பூசை.

ஆத்மார்த்தம் செய்து வந்தவனே சிவஞான அநுபவம் கைவரப்பெற்றவன். அவனிடம் உள்ள ஆணவ கன்ம மாயாமலங்கள் உலர்ந்த புளியம்பழத்தோடு போலத் தானே கழலும். இதுதான் ஆன்மார்த்த பூசையின் பயன். முறையாகத் தவறு நேராமல் பலகாலம் பூசித்துப் பழகியவனே பரார்த்த பூசை செய்யத் தகுதி யுற்றவன்.

ஆன்மார்த்தம், விசேஷ தீட்சையளவு பெற்றவனே செய்யலாம். அதனால் அவன் பரார்த்த பூசை செய்யத் தகுதி பெற்றவனாகான்; மேலே நிர்வாண தீட்சையும் பெற்றே ஆகவேண்டும். மேலும் அஸ்திராபிஷேகம் என்ற ஆசாரிய அபிஷேகமும் பெறுதல் இன்றியமையாதது. அதிலும் ஆதி சைவராக இருத்தல் அவசியம். பரார்த்த பூசை என்பது மற்றவர்கள் நலனுக்காகச் செய்யப் பெறுவதாகும். இதையும் நிர்வாண தீட்சை பெற்ற சிவாச்சாரியாரே செய்ய வேண்டும். பரார்த்த பூசை பெற்று எழுந்தருளியுள்ள மூர்த்திகளை சிவதீட்சை பெற்றவர்கள் எவரும் தீண்டிப் பூவும் புனலுமிட்டு வழிபாடு செய்து கொள்ளலாம். ஒரோவழி தீவிரமான பக்திமை நலம் பெற்றவர்கள் தீட்சை முதலியன பெறாமலும் வழிபாடு செய்திருக்கிறார்கள் என்று பெரிய புராணம் கூறும். இது பொது விதியல்ல சிறப்பு விதி.

என் கட்டுரை, மூலமூர்த்தி எழுந்தருளியுள்ள பீடத்திலிருந்து வலமாக வரும் சுற்றிலே அல்லது ஆவரணத்தில் ஆகம சாஸ்திரம் குறிக்கும் திசைகளில் எழுந்தருளச் செய்யப்பெற்ற பரிவார தெய்வங்களைப் பற்றிய விளக்கங்களேயாகும்.

பொதுவாகப் பூசையோ, பிரதிஷ்டையோ சூரியகணபதிமூர்த்திகளிலிருந்து தான் தொடங்கும். நாடோறும் ஆத்மார்த்தத்திலோ பரார்த்த பூசையிலோ சூரிய வழிபாட்டைத் துவார பூசையிலிருந்து தொடங்காவிட்டால் நாம் செய்யும் பூசை பயனற்றதாய்விடும். இவைகளை உணர்வதன் முன்பு பூசை வகைகளைப்பற்றி ஆகமங்கள் சொல்வதைக் கேளுங்கள். இந்தப் பரிவார பூசையினாலே பூசைகள் ஒன்பது வகைப்படுகின்றன என்று ஆகமம் கூறும்.

ஆகமங்கள் இருபத்தெட்டு. அவைகள் அனைத்தும் நேரே சதாசிவமூர்த்தி யினிடமிருந்து வந்தவை. அதனாலேயே ஆ + கமம் = ஆகமம். கம் — போதல்; ஆ என்ற உபசர்க்கம் (ஒரு இடைச் சொல், போதல் என்ற பொருளை மாற்றி

வந்தது என்ற பொருளைத் தந்து சக்கதி—போகிறான் ஆகச்சதி — வருகிறான் .. என்பது போல) சிவ + ஆகமம் என்றது சிவபெருமானிடம் இருந்து வந்தது. அதாவது சிவதந்த்ரம் சக்தி தத்துவங்களிலிருந்து நாத வடிவாக (ஒலியாக) வந்தது. இதனாலேயே திருமூலர் "வேதமொடு ஆகமம் இறைவன் நூலே. மெய்யே" என்று உறுதிமொழி தந்திருக்கிறார். அத்தகைய ஆகமங்களில் சூக்ஷுமம் ஏழாவது ஆகமம். அது சூட்சுமர் பொருட்டு உபதேசிக்கப்பெற்று அவிச்சின்ன உபதேச உரையாக வருகிறது என்கிறார். அது சொல்கிறது; சிவபூசை சுத்தம், கேவலம், மிசிரம் என்றும் அசத்திகமாகவும் சத்திமாகவும் உள்ள சூரிய பூசை முதல் சண்டேசுரபூசை முடிவாக உள்ளவுமான பூசைகள் அம்சுமான் என்றும் ஆகமத் கூறுவது போல் கேவலம் என்றும் பூசையானது சத்தியும் பரிவாரங்களுமில்லாத தனித்தலிங்க பூசையாகும்.

சகசம் என்றும் பூசை ரிஷபம், கணபதி, கந்தர், பார்வதி என்னும் நால்வருடன் கூடிய லிங்க பூசையாகும்.

மிஸ்ரம் என்பது மாகேஸ்வரர் நிருத்தமூர்த்தி, தக்ஷமூர்த்தி என்பவர் களுடன் கூடிய லிங்க பூசையாகும்.

இவ்வாறே 1. கேவல சுத்தம்; 2. சகசசுத்தம்; 3, மிசிர சுத்தம்., 4. கேவலகேவலம், 5. சகஜ கேவலம் 6, மிஸ்ர கேவலம், 7, கேவமிஸ்ரம் 8. சகஜமிஸ்ரம், 9. மிஸ்ரமிஸ்ரம்; என பரிவாரங்களோடும் சத்தியோடும் சத்தியின்றியும் லிங்கத்தைப் பூசிப்பதால் பூசை ஒன்பது வகைப்படுகின்றன என்றால் இவ்வேறுபாடுகள் பரிவாரங்களால் விளைவன ஆதலைக்கண்டறியலாம்.

1. இவற்றுள், கேவல சுத்தமானது சிவத்தைப் பூசிப்பதற்கு முன்னர் சூரிய பூசையையும் அதன் பின்னர் சண்டேஸ்வரரையும் பூசை செய்து லிங்கத்தில் சத்தியையும் ஆவாஹனம் செய்யாமல் தனித்தது. சிவத்தை மட்டும் ஆவாஹனம் செய்து பரிவாரங்கள் ஒன்றுகூட இல்லாமல் செய்யப்பெறும் பூஜை சிவபூசையாம். சூரியனும் சண்டரும் பரிவாரம் ஆகார் என்பது கருத்தா?

2. சகசசுத்தமானது நான்கு பரிவாரங்களுடன் முன்னர்க் கூறியவாறு பூசித்தலாம்.

3. மிஸ்ரசுத்தமானது மகேஸ்வரர் முதலியவர்களுடன் முன்கூறியவாறு பூசித்தலாம்.

4. கேவல கேவலமானது முன்னரும் பின்னரும் சூரிய பூசையையும் சண்டேசுர பூசையையும் செய்யாது விட்டு, லிங்கத்தை சத்தியுடன் கூட மட்டும் பூசித்தலாம்.

5. சகலகேவலமானது நான்கு பரிவாரங்களுடன் முன்னர்க் கூறியவாறு சிவலிங்கப் பூசை செய்தலாம்.

6. மிஸ்ர கேவலம், மகேஸ்வரர் முதலானவருடன் முன்கூறியவண்ணம் பூசித்தலாம்.

7. கேவல மிஸ்ரமானது முதலிலும் கடைசியிலும் முறையே சூரிய பூசையையும் சண்டேச பூசையையும் செய்துகொண்டு சந்நிபட்ஜவது—இல்லாமலானது பரிவாரதேவதை இல்லாமலே லிங்க பூசை செய்தலாம்.

8. சகளமிஸ்ரமானது அதே பூசையை நான்கு பரிவாரங்களுடன் செய்வது

9. மிஸ்ரமிஸ்ரமானது மகேஸ்வரர் முதலானவருடன் பூசித்தலாம்.

ஆகவே கேவல கேவலத்தில் பரிவாரங்கள் இல்லையாயினும் சகளகேவலத்திலும் மிஸ்ரகேவலத்திலும் பரிவாரங்கள் இருத்தலால், மந்திர சுத்தி செய்த பின்னர் கேவல பூசையில் பரிவார பூசையைக் கூறியது பொருந்தியதேயாகும் என்று சிவார்ச்சனாசந்திரிகை என்னும் தொகுப்பு நூல் கூறுகிறது. (இக்கட்டுரையில் பூஜையின் வகை என்னும் தலைப்பிற் காண்க)

<u>பரிவாரங்களை வைக்கும் இடங்களும், அவர்கள் நோக்கு திசைகளும்:</u>

சிவலிங்கப் பெருமானுக்குக் கிழக்குப் பாகத்தில், மேற்குமுகமாக இருக்கச் செய்து இடபத்தையும், தெற்கில் கணபதியை மேற்குமுகமாகவும், மேற்கில் முருகனைக் கிழக்கு முகமாகவும், வடக்குப் பாகத்தில் கிழக்குப் பார்க்கப் பார்வதியையும் அமர்த்துச் செய்து பூசிக்க வேண்டும். பார்வதி துர்க்கை வடிவிற் பூசிக்கப்பெறுங்கால் தெற்குப் பார்க்க வைத்துப் பூசிக்க வேண்டும்.

பௌராணிகர்கள் சூரியன் கணபதி விட்டுணு துர்க்கை ஆகிய நால்வரையும் நான்கு பரிவாரங்களாக வைத்துப் பூசிக்கலாம் என்பர்.

பூசை செய்பவன் விரும்பினால் ஆரோக்கியமாதிய பயனை விரும்பின் இடபம் முதலான நால்வரையும் பூசிக்குங்காலத்தில் பரிவாரங்களின் நடுவில் சூரியன் முதலியோரையும் பூசிக்க வேண்டும் என்பர்.

எங்ஙனம் எனின், இடபத்தின் இடப்பாகத்தில் சூரியனையும், ஈசனுக்குத் தென்பாகத்தில் நடேசமூர்த்தியையும் மேற்கில் சுப்பிரமணியக் கடவுளையும் இடப் பாகத்தில் விட்டுணுவையும், ஈசனுக்கு வடக்குப் பாகத்தில் தேவியையும், தேவிக்குக் கிழக்கில் நிருத்த மூர்த்தியையும் பூசிக்கவேண்டும். இவ்வாறே நம் விருப்பத்திற்கேற்ப பரிவார தேவதைகளை அமைத்துப் பூசிக்கும் முறை ஆகமங்களில் ஆங்காங்குக் கூறப்பெற்றுள்ளன. அவற்றை ஆங்காங்குத் தம் விருப்பிற்கேற்பப் பயன்கருதி அமைத்துக்கொள்க என ஆகமம் கூறுகிறது.

இவைகளை நாம் ஆகமச் செய்யுட்களைக் கொண்டு கருத்தாற் காண்கிறோம். கண்ணுல் கண்டாலல்லது கருத்திற்பதியாது. அதற்காக மண்டபங்களை அதாவது பரிவார தேவதைகள் இருக்கவேண்டிய இடங்களைக் கோடுகளால் வரைந்து அங்காங்கே பார்க்கும் திசையறிந்து பரிவாரங்களை எழுந்தருளச் செய்து பூசித்தால் எளிதில் எண்ணியாங்கு எய்தலாம். இக்கருத்துக்களைக் கைவல்ல ஓவியன் கருத்தில் ஏற்றி, தெளிவாக அவை வரையச் சொல்லிக் கண்டு பயனுடன் கருதிப் பூசிக்கவேண்டும்.

இங்ஙனம் மூலமூர்த்தியோடு பரிவாரங்களையும் சிவபூசை முற்றப் பெறுவித்தல் நியாசாதிகளால் தன் கருவிகரணங்கள் மாயாகாரியமாக இருந்த நிலை மாறிச் சிவகரணமாக விளங்குவதால் சிவமாந்தன்மையால் பரிசுத்தான் மாவாக விளங்கும். அருளுபதேசத்திற் கூடிய நாம் நிலை தளராமல் இருக்க அகோர சிவாசாரியர் அருளிய பத்ததியை அன்றிப் பல்காலும் படித்து உள்ளத்திற் பதிவிக்க வேண்டும். அதற்குத் தேவகோட்டை சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கத்தார், இருமொழியும் சித்தாந்த சாஸ்திரத் தேர்ச்சியும் உடையார் பலர் ஆய்ந்து 1927 இல் வெளியிட்ட சிவார்ச்சனாசந்திரிகை பெரிதும் பயன்படும்.

ஆகம – உபாகம பேதங்களாலும், பத்ததி, அவ்வவர் ஆசாரிய மரபு இயல்களை யொட்டி விதிமுறையும் அநுட்டானமும் மாறுதல் இயல்பே. ஆயினும் நூல்களில் – ஆசிரியரின் உபதேச அருளில் நிலைகண்டு ஏதாயினும் ஒருமுறையைச் சிக்கெனப்பிடித்த நம்மனக்கண் முன் அறிவே ஆற்றலாகு, அருளேயுருவாகக் காட்சியளிக்கும் பரசிவத்தைக் காணுதே கண்டு, எய்த இயலாத எல்லையில்லை பேரானந்த வெள்ளத்தழுந்தி இன்புறுவோமாக. இதுதான் சிவபூசையால் விளையும் சிவானுபவம்.

இங்ஙன் பரிவாரங்கள், அவை எழுந்தருளியிருக்கும் இடங்கள் மூர்த்தி – பேதங்கள் இவைகளைத் தலங்கள் தோறும் சென்று தெரிந்தநுபவித்தல் இன்றியமையாததே யாகும். அதற்கு இறங்குதுறையாக நாம் அன்றாடம் செய்யும் பூசையில் சூரிய பூசை முதல் சண்டேச்சுர பூசை வரையுள்ள பரிவாரங்களின் திருநாமங்களையேனும் தொகுத்து எழுதிப் பார்போம்.

அடுத்துச் சிதம்பரம், திருவாரூர் முதலான சில தலங்களின் அமைப்பையும் அதன் காரணத்தையும் சாஸ்திர ஒளிகொண்டு சிற்றறிவுக்கெட்டியவரையில் சிந்தனையில் அடைப்போம்.

ஆன்மார்த்த–பரார்த்தங்களில் பூசை முறையும் மூர்த்தியும் பரிவாரங்களும் பெரும்பாலும் ஒத்தனவே. அவற்றின் அமைப்பு முறையும் திருமேனி அமைப்பும் பூசிக்கும் முறைகளும் தோன்ற அமைப்பு முறை இவையே.

குறிய_ஏகார_பூசைக்கு: மேற்கு வாசல் தென்பக்கத்தில் நந்தி; செந்நிறம் பெருவயிறு, தொங்கும் நலேமுடி, வலக்கையில் எழுதுகோல், இடக்கையில் மைக்கூடு கொண்டு அவ்வப்போது ஆன்மாக்கள் செய்கிற வினைகளை எழுதிக் கொண்டிருப்பவராகத் தியானிக்க என்கிறது சிவாகமம். நம்மம் வெளிப்பட்ட காலத்தில் எழுத்தாணியும் ஓலையும் இருந்திருக்கலாமேயன்றி, பேனாவும் மைக்கூடும் ஏது? என்ற ஐயம் எழுதல் இயல்பே. பூர்ஜபத்திரம் என்னும் மரப்பட்டையும் மையுங்கொண்டு எழுதப்பெற்றதாகக் காளிதாசன் போன்ற பழம்பெரும் கவிஞர் குறித்துள்ளார்கள். அதனால் அது அன்றும் வழக்கில் உள்ளதொன்றே. எவ்வும் தெய்வங் களுக்கும் அமைந்துள்ளதாகக் கூறப்படுகின்றது. "எழுதுங்கீழ்க் கணக்கு இன்னம்பர் ஈசனே" என்ற திருமுறைப் பகுதியும் இதனை ஒருசார் ஒத்தது எனலாம். கருடபுராணம் போன்றவைகளில் "சித்ரகுப்தன்" (அந்தணருக்கு சர்மா என்பதும், அரசர்க்கு வர்மா என்பதும், வணிகர்க்கு குப்தா என்பதும், சூத்திரருக்கு தாசன் என்பதும் சாதியைக் குறிக்கும் பட்டப்பெயராக வழங்கியது. ஆதலின், கன்மவினைக் கணக்கெழுதும் யமதர்மக் கணக்கன் சித்ரகுப்தன் எனப்பட்டான்) என்ற யமன்பரிவாரமான கணக்கன் எழுதுவான்; காலமுடிவில் வாசிப்பான்; யமன் அவன் உயிரைக் கொண்டுவர தூதர்களுக்கு உத்தரவிடுவான் என்ற வரலாறும் இத்துடன் ஒருபுடை ஒத்ததே...

பீடத்தின் நடுவில் உள்ள 8 இதழ்த் தாமரையில் ஈசான மூலையில் உள்ள இதழில் (வடகிழக்கில்) கணபதியும், அக்னி மூலையில் அதாவது தென்கிழக்கில் குருவும், குறயன் எழுந்தருளும் வெள்ளிப் பீடமும் அதன் தென்கிழக்கு மூலையில் விமலா என்னும் சிங்கமும், தென்மேற்கு மூலையில் சாரா என்னும் செந்நிறமுள்ள சிங்கமும், வடமேற்கில் பொன்னிறமான ஆராத்யா என்னும் சிங்கமும், வடகிழக்கில் பச்சைநிறமான பரமசுகா என்கிற சிங்கமும்; தாங்குகிற சிம்மாஸனத்தில், கிழக்குத் திசையில் தீப்தையும், தெற்கில் சூக்ஷ்மையும், தெற்கில் ஜயையும் தென்மேற்கில் பத்ரையும் மேற்கில் விபூதியும், வடக்கில் விமலையும், வடகிழக்கில் அமோகையும் எல்லாத் திசைகட்கும் பொதுவாக ஈசானத்தில் சர்வதோமுகியும், வடகிழக்கில் வித்யுதையும் ஆக நவசக்திகள் தாமரை இதழ் நுனியில் இருப்பர். அவர்களை அர்ச்சிக்க எட்டு முறையே சொல்கிறது ஆகமஸ்லோகங்கள். இவைகளை அகோரசிவாசார்யபத்தி பக்கம் 40-43ல் அறியலாம். இதில் (பத்ததிக்கும்) சிவபூஜாவிதி தமிழ்ப் பதிப்புக்கும் சிறிய பாடபேதங்களும் ஆங்காங்கு உள்ளன.

சிவார்ச்சனா சந்திரிகையில் பக்கம் 130ல் கண்டவண்ணம் வருமாறு:

சிவாசனம் ஒரு தாமரை போன்றது. அத்தாமரையின் பொருட்டில் பெருமான் எழுந்தருளியிருப்பார். அவர் எழுந்தருளிய தாமரையின் மூல பாகங்களிலும் இதழின் நுனியாகிய பீடத்தின் மேற்பாக நுனிகளிலும், பீடத்தின்

கண்டத்தியும் அடியும், பிரமபாகமாகிய பத்மபீடத்தியும் ஆக ஐந்து ஆவரணங்களை அமைக்கவேண்டும்.

(1) முதல் ஆவரணத்தில் ஈசானதிசையில் ஈசானர் பார்வதியுடன் எழுந்தருளியிருப்பர். வெண்பளிங்கு போன்ற நிறத்தினர், கையில் மூவிலைச் சூலமும் அபயமுத்திரையும் உடையவராக இருப்பர்.

(2) அவரையடுத்து இந்திரன் திசையில் தத்புருஷ தேவர். அவரை, முகத்தைக் குறித்து தத்புருஷ வக்த்ராய நம: எனப்பூசித்தல் வேண்டும். அவர் பொன்னிறமானவர்; பூணூல் பீதாம்பரமாகிய பொன்னுடை பூண்டிருப்பர். உருத்திராக்கம் ஸ்படிக மாலைகளை அணிந்திருப்பர். அவர் கௌரி தேவியுடன் வீற்றிருப்பர்.

(3) மூன்றாவதாக முதலாவரணத்திலேயே யமன் திசையில் தத்புருஷ தேவரை அடுத்து அகோரதேவரை இருதய மந்திரஞ் சொல்லிப் பூசிக்கவேண்டும். அவர் மேகவண்ணர். அவர் மீசையும், தலைமுடியும் செந்நிறமானவை. கோரப் பல், பயங்கரமான முகம்; பாம்பு தேள் மண்டையோடு இவற்றாலாகிய மாலை அணிந்திருப்பர். இவருக்கு எட்டுக் கைகள். அவற்றில் இடக் கை நான்கிலும் கட்வாங்கம் (கத்தி), கபாலம், கேடகம், பாசம் இவைகளையும், வலது நான்கிலும் திரிசூலம், பரசு, கட்கம், தண்டம் இந்நான்கையும் ஏந்திருப்பர்.

(4) நான்காவதாக அகோர தேவரையடுத்து குபேர திசையில் வாமதேவ குஹ்யாய நம: என்று பூசிக்கவேண்டும். அவர் நிறம் செம்மை; ஆடை, மணி, மாலை ஆகியவைகளும் அதே நிறம். உபவீதமும் செம்மைதான். கட்கம், கேடகம் உடையவர். கரங்களோடு அம்பிகையையும் உடையவர்.

(5) அடுத்து வருணன் திசையில் ஐந்தாவதாக ஹம் சத்யோஜாதமூர்த்தயே நம: என்று அர்ச்சிக்க. வெண்மை நிறம், மாலை, சந்தனம், ஆபரணம், தலைப்பாகை, உடை அனைத்தும் வெள்ளையாகவே தரிப்பவர். அம்பிகையோடு கூடியவர்.

வேறு சில ஆகமங்கள் தியான எளிமைக்கு சூலம், டங்கம், வரம், அபயம் இவைகளை மட்டும் நான்கு கரங்களோடு மட்டும் தியானிக்கச் சொல்கின்றன.

வேறு சில ஆகமங்கள் முறையே இதயம், சிரசு, சிகா, கவசம் நேத்திரம், அஸ்திரம் ஆகிய மந்திரங்களுடன், சந்திரன் நிறம், பொன், குங்குமநிறம், [illegible], மின்னல், அக்னி என்னும் இந்நிறங்களையுடையவர்களாகவும் பத்மாஸனத்தில் இருப்பவர்களாகவும், பிறை மதியோடு கூடிய சடை

முடியையுடையவர்களாகவும், நான்கு முகம் உடையவர்களாகவும், மூன்று - உடையவர்களாகவும், கபாலம், சூலம், வரம், அபயம் நான்கும் நான்கு கைகளையுடையவர்கள் ஆகவும் தெரிவிக்கின்றன என்று மந்திரம், திசை, ஆயுதம் முதலியவற்றையும் முறையே அறிவிக்கின்றன. மேலும் சில மாற்றங்களையும் அறிவிக்கின்றன.

2. இரண்டாவதாக ஆவரணத்தில், அஷ்ட வித்யேஸ்வரர்கள் ஆவரணமூர்த்திகள் ஆவர்.

| | | நிறம் | கை | கண் | சக்தி | திசை |
|---|---|---|---|---|---|---|
| 1. | அநந்தல் பூமி | பொன்னிறம் | வரதம், அபயம் | மூன்று | | |
| 2. | சூட்சும் சுவாகாசத்தி | அக்னி | ஞானமுத்திரை உருத்திராட்சமாலை | " | | |
| 3. | சிவோத்தமர் சுவதாசக்தி | மேகம் | கைநான்கும் முன்கூறிய அடையாளமும் | " | | |
| 4. | ஏகநேத்ரர் சாந்தி | வண்டு | கை | " | | |
| 5. | ஏகருத்ரர் புஷ்டிசகிதர் | பானம் | கை | " | | |
| 6. | திரிமூர்த்தி ஸ்ரீசகிதர் | பனி | கை | " | | |
| 7. | ஸ்ரீகண்டர் கீர்த்திசகிதர் | பவழம் | கை | " | | |
| 8. | சிகண்டி மேதாசகிதர் | படிகம் | கை | " | | |

(சக்தி column, printed vertically:) நந்தம் சக்திகள் எல்லாம் முற்கூறிய சக்திகளே ஆகும்.

(திசை column, printed vertically:) கிழக்கு முதல் ஈசான முடிவு ஈக திசை விதிக்குகளில் புகிக்கலாம்.

(3) மூன்றாவது ஆவரணம்:

1. மண்டலீசகிதநந்தி; செந்நிறம், சூலம், அக்கமாலை, வரம், அபயம் உடைய 4 கைகள்

2. பத்மனி சகித மகாகாளர்; பொன்மையும் கருமையும் கலந்த நிறம் செந்நிறமான மீசை; நிலைமுடி, சூலம், கட்கம், கபாலம் கேடயம் ஆயுதங்கள்

3. உமார்த்தசகித பிருங்கி: வெள்ளை, நகையற்ற உடல், தண்டம், அட்சமாலை, சிகைகளையுடையவர் சிவனையே பார்ப்பவர்.

4. பிருங்கீசமேத கணபதி: இரத்த நிறம்; பாசம், அங்குசம் தந்தம் மாங்கனியுடையவர்.

5. பத்ராசகித விருஷபர்: படிகநிறம், தருமசொரூபம், சிவதியானமே செய்பவர்.

6. தேவயானிசகித ஸ்கந்தர்: பொன் நிறம், குழந்தை வடிவம், வேல் கோழி வரதம் அபயம் ஏந்திய 4 கைகள்; தெய்வ யானை சகிதர்

7. அம்பிகை: கருநிறம்; சிங்கவாகனம், சூலம், கண்ணாடி, இரண்டையும் ஏந்திய இரு கைகள், பார்வதி மறுபெயர்.

8. குபிலி சகித சண்டேசர்: மேகம்போல் நிறம், நான்முகம், கமண்டலம் அக்ஷமாலை, சூலம் பரசு ஏந்திய 4 கைகள்; பாம்புகங்கணம், சர்ப்பஉபவீதம், உடையவர் இவ்வாறு கிழக்கு முதல் ஈசானம் வரை பூசிக்க. அல்லது இடபம், நந்தி, கணேசர், மகாகாளர், கந்தர், பிருங்கி, பார்வதி சண்டேசர் என்னும் இம்முறையில் கிழக்கு முதலாகவாவது, அல்லது நந்தி, கணபதி, மகாகாளர், பிருங்கி, ரிஷபம் கந்தர், கௌரி சண்டேசர் என்னும் வரிசை-யிலாவது கிழக்கு முதலாக வைத்தும் பூசிக்கலாம். பார்வதி, ரிஷபம், கணபதி நந்தி, மகாகாளர், பிருங்கி, சண்டேசர், கந்தர் என்ற இம்முறையில் வடக்கு கிழக்கு, தெற்கு, மேற்குத் திசைகளிலும் நிருதி, வாயு, ஈசானம், முதலிய உபதிசைகளிலும் பூசிக்கலாம். தியானமுறை ஒவ்வொரு ஆகமங்களிலும் கூறப்பட்டு உள்ளன. இந்த முதல் மூன்று ஆவரணத்திலும் இருப்பவர்கள் கணநாதர்கள்.

<u>4 வது ஆவரண தேவதைகள்</u>:

1. இந்திரன், சசி (இந்திராணி) பொன்னிறம், அயிராவத யானை வாகனம், வச்சிரம், அங்குசம், வரம், அபயம் இவை கைகளில்.

2. ஸ்வாஹா சகித அக்னி, செம்மை நிறம்; கமண்டலம், அக்ஷமாலை சக்தி, வரம் இவற்றை ஏந்தியவர் ஆடு வாகனம்.

3. யமன்: காலகண்டிதேவி, கருநிறம், தண்டம், பாசம், வரம், அபயம், இவற்றைக் கையிற்றரிப்பவர். எருமைக்கடா வாகனம்.

4. நிருதி: நாகினி, செம்மைநிறம், கட்கம், கேடயம், வரம் அபயம் இவற்றையுடைய நான்கு கைகள்; பூத வாகனம்.

5. வருணன்: போகினி: சந்திரன்பேரன். நிறம் கூறப்படவில்லையாயினும் சந்திரன் பேரனும் வருணத்தையுடையவனும் என்றதால் அவன் நிறமாகவே

இருக்கலாம். தும்ச்சாவ்ரு வேண்டும். பாசம், கமலம், வரம், அபயம் தாங்கிய 4 கைகள் மகரமீன் வாகனம்.

6. வாயு-கோரா, புகைநிறம், அங்குசம், கமலம், வரம், அபயம், 4 கைகளில்; மான் வாகனம்.

7. குபேரன்-சம்பிரிதி; பொன்நிறம், கதை, நிதி, வரம், அபயம் 4 கைகள்; குறுகிய வடிவம். மனித வாகனம் (நரவாகனம்),

8. ஈசானன்: உர்த்வஜினி: சந்திரன் போன்ற நிறம், சூலம், பாசம், வரம், அபயம், ஏந்திய 4 கைகள். கிழக்கு முதலாக ஈசானதிக்கு ஈறாகப் பூசிக்கவேண்டும்.

9. பிரமா-சாவித்ரி, பொன்னிறம் 4 முகம், கமண்டலம், அட்சமாலை ஸ்ருக், தண்டம் ஏந்திய 4 கைகளை உடையவர். அன்ன வாகனம்

10. விஷ்ணு: லக்ஷ்மி - மின்னல் நிறம், ஆயிரம் படங்களால் அலங்கரிக்கப்பெற்ற அனந்தரின் வடிவம் உடையவர். சங்கம்-சக்கரம்-கதை-தாமரை ஏந்திய 4 கைகளை உடையவர். ஆமை வாகனர்.

இவ்வாறு கிழக்கு-ஈசானதிக்குக்கு இடையே பிரமாவையும் நிருதி திசைக்கும் இடையே விஷ்ணுவையும் பூசிக்க அல்லது யமனுக்கு வடக்குப் பக்கத்திலும் குபேரனுக்குத் தெற்கிலும் இவர்களையும் பூசை செய்யலாம்.

5 ஆவது ஆவரணம் லோகபாலர்களின் ஆயுதங்கள்:

1. வச்சிராயுதம்: பிரசண்டாத்மசக்தி: பலவகை நிறங்கள், திண்மையும் கடினமுமான வடிவமும் உடைய வச்சிரத்தை (100 அங்கங்களையுடைய) கருவியை தலையில் உடையது, ஒளியுமானது, 'பிரசண்டு' என்னும் சக்தியையுடையது.

2. தண்டம்-கோபாத்மசக்தி: கருமை நிறம், வரம்-அபயம் ஏந்திய 2 கைகள். சிவந்த கண், சிரசில் தண்டத்தையுடையது.

3. கட்கம் - ருத்ரமசக்தி: கருமைநிறம், வரம்-அபயம் ஆன 2 கைகள், கோபக்கண்கள், கட்கத்தால் அலங்கரிக்கப்பட்ட சிரசுஉடையது.

4. பாசம்-கோமளாத்ம சக்தி: புரசம்பூவின் நிறம்; நாபிக்கும் கீழ் பாம்பு வடிவமும் அதற்கு மேல் புருஷ வடிவமும்உடையது. ஏழு படங்கள் உடைய சிரத்தையுடையது.

5. த்வஜம்-சீக்ராத்ம சக்தி: பொன்நிறம், வரம்-அபயம் கைகளில் உடையது. பிராந்தவாயுடன் சிரத்தில் கொடியுடையது.

<u>ஆவரணங்களும் - பரிவாரங்களும்:</u>

பூசை, வீட்டுப் பூசையும், கோயில் பூசையும் என இருவகைப்படும். வீட்டுப் பூசையிலே இடம் சுருக்கம். கோயில் பூசையிலே கோயிலின் அகல நீளப் பரப்பளவு மிகுதி. அங்குள்ள தெய்வங்களுக்கெல்லாம் முறைமாறுமல்

4:1:14

தனித்தனிக் கோயில். சிறப்புத் தெய்வமும், பரிவாரத் தெய்வங்களும் பெரும்பாலும் ஒத்தே உள்ளன. அதனால், பூசைமுறைகளும் தக்கவாறு அளவாக ஆகமங்களால் அறிவிக்கப் பெறுகின்றன.

ஆன்மீகச் சட்டப் புத்தகமாகிய ஆகமங்கள் இருபத்தெட்டு. அவற்றுள் 'சூக்ஷ்மம்' என்பது ஒன்று. அதில் சுத்த பூசை, கேவல பூசை, மிஸ்ர பூசை என மூவகைப்படும். அவைகளில் தெய்வங்கள் சத்திகமாகவும், அசத்திகமாகவும் அதாவது அவையவைகளுக்குரிய பெண் தெய்வங்களோடும், இன்றியும் இயற்றப்படும். இந்த மூவகை வழிபாடுகளே கேவலம், சகஜம், மிஸ்ரம். ஒவ்வொன்றும் மும்மூன்று வகைப்படும் என்றும், அதனால் பூசை ஒன்பது வகையாகும் எனவும் 'அம்சுமான்' என்னும் ஆகமம் அறிவிக்கிறது. இந்தப் பிரிவுகள் அனைத்தும் சக்திகள் பரிவாரங்களின் நிறைவு குறைவுகளால் விளைவனவே.

இவற்றுள் கேவல பூசை என்பது பரிவாரங்கள் ஒன்றுமில்லாத தனித்து சிவலிங்கத்தை மட்டும் பூசிப்பதாகும். கேவலம் என்ற சொல் இன்று வழக்கில் தாழ்வு என்ற பொருளைத் தருவதாகும். இங்கு 'தனிமை' 'ஈடும் இணையும் அற்றது' என்ற பொருளையே தருவதாகும். கேவலாத்துவிதம் என்பதுபோல.

'சகஜம்' என்பது, இடபம், 'கணபதி' கந்தர், பார்வதி என்ற நால்வருடன் கூடிய லிங்கபூசையாகும்.

மிஸ்ரம் என்பது, மகேசரமூர்த்தி, நிருத்தமூர்த்தி, தட்சிணாமூர்த்தி என்னும் இவர்களுடன் கூடிய சிவலிங்க பூசையாகும். இவ்வாறே கேவலசுத்தம் சகஜசுத்தம், மிஸ்ரசுத்தம், கேவல கேவலம், சகசகேவலம், மிஸ்ரகேவலம் கேவலமிஸ்ரம், சுத்த மிஸ்ரம், மிஸ்ர மிஸ்ரம் எனப் பூசைகள் ஒன்பது வகைப் படும் எனக்கூறுகிறது. இவ்வகைகள் அனைத்தும் சிவலிங்கத்தை மட்டும் வைத்து பூசிப்பதாயும், அம்மை, கணபதி, கந்தர், பரிவாரங்களுடன் பூசிப்பதாயும் விளைந்தனவேயாகும்.

கேவலசுத்தம் சிவபூசை செய்வதற்குமுன் சூரியனையும் முடிவில் சண்டேசரையும் பூசிப்பதாகும். சண்டர் தேஜஸ்சண்டர் எனப்படுவார். இதில் சிவம் சத்தியுமின்றித் தனிமையில் பூசிக்கப் பெறுவார்.

சகல சுத்தம் கணபதி கந்தர், பார்வதி இடபம் நால்வருடன் முற்கூறியவாறு பூசிப்பதாகும்.

மிஸ்ரசுத்தம் மகேசுரர், நிருத்தமூர்த்தி, குருமூர்த்தி, இவர்களுடன் கூடிய லிங்கபூசை.

இனிக் கேவல கேவலம் முன்னர் சூரியனையும், பின்னர் சண்டேசரையும் பூசை செய்யாமல், லிங்கத்தில் சத்தியைப் ஆவாகனஞ் செய்து பூசித்தலாம்.

4:1:15

<u>சுத்த கேவலம்</u> முன்கூறியவாறு நான்கு பரிவாரங்களுடன் மட்டும் பூசிப்பது.

<u>மிஸ்ர கேவலம்</u> மகேஸ்வரர், நடராசர், குருமூர்த்தி இவர்களுடனும் பூசிப்பது.

<u>கேவல மிஸ்ரம்</u> முன் கூறிய பூசையையும், பின் சண்டேசரையும் பூசித்துக்கொண்டு அந்தந்தச் சந்நிதியுடனாவது தனித்தனியாவது பூசிப்பது.

<u>சுத்த மிஸ்ரம்</u> அதே பூசையை நான்கு பரிவாரங்களுடன் மட்டும் செய்வது.

<u>மிஸ்ர மிஸ்ரமாவது</u> மகேஸ்வரர் முதலானவருடன் பூசிப்பது.

இவ்வளவு பரிவாரங்களாலே சிவபூசை ஒப்பு வகைப்படுமாதலின் பரிவாரங்களுக்கு உள்ள தனித்தன்மை நம்மவரால் அறியப்பெறுதல் வேண்டும்.

<u>திருக்கோயிலில் உள்ள பரிவாரங்கள்</u>:

தேவி: சிவாலயத்தில் சிவபெருமானுக்கு இடப்பாகத்தில் தேவி கோயில் கொள்கிறாள். கோயிலோ திருக்காமக் கோட்டம் என வழங்கும் தனி அம்மன் கோயில். இறைவற்கு இடப்பாகத்தில் கணபதி வலப்பக்கத்தில் கந்தவேள்; கோயிலில் அடிவைத்து உள்ளே நுழைந்ததும் நமது சந்தான குரவர்களில் ஒருவராகிய நந்திப்பெருமான் சிவசந்நிதியில் சிவபெருமானையே நோக்கிக் கொண்டிருக்கிறார். பிரதோஷ காலங்களில் அவருடைய இரு கொம்புகளிடையே சிவத்தைத் தரிசனம் செய்யவேண்டும். அதனால் சிவதரிசனத்திற்கு வருவோரும் வந்து திரும்புவோரும் வழிபட்டுத்தான் போகவேண்டும். குறுக்கிட்டுச் செல்லுதல் ஆகாது. நந்தி கண் இமைக்காது, சிவத்தையே நோக்கிச் சிந்தனையைச் சிதறாமல் செய்தலைப் பழக்குபவர் அவராதலின்.

தேவியின் வெவ்வேறு அம்சங்களான காளி, துர்க்கை, சாமுண்டி முதலிய தெய்வங்களுக்கும் தனிக் கோயில்கள் உள. இவைகளும் சிவாலயம் போலவே விளங்குகின்றன. இங்கும் கணபதி முதலிய தெய்வங்கள் பரிவாரங்களாக விளங்கக் காண்கிறோம். ஆனால், சிவாலயத்தில் நந்தி விளங்குமிடத்தில் கணபதி கோவிலில் மூஷிகமாகிய பெருச்சாளியும், தேவி கோயில்களில் சிங்கமும், கந்தன் கோவிலில் மயிலும், திருமால் கோயில்களில் கருடனும் ஆகிய அவரவர் வாகனங்களே விளங்கும். தியாகராச லீலையில் மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் "தியாகேசப் பெருமான் திருவருள் சுரக்க எண்ணும்போது ஏனைய தலங்களைப் போல் நந்தி படுத்திருக்கும் நிலையில் இருந்தால் அன்பர்களைக் காக்க அருள் காப்பொழுதேனும் காலந்தாழ்க்குமே" என்றும் "என்றும் எழுந்து நிற்கும் மால்விடையே" என்று நந்தி தியாகர் சந்நிதியில் நின்ற கோலத்தில் இருப்பதை நினைவூட்டுகிறார்கள். பொதுவில் சிவாலயத்தில் நந்தியெம்பெருமான் சிறந்த

எல்லாச் சந்நிதியும் கோயில் கொண்டிருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு பரிவாரத் தெய்வங்களின் கோயிலும் விருத்தியாகச் சூழ இருக்கும் என்பதைத் தியாகராச லீலையில் "குவிந்தகரம் விரிந்தநல் செலாக்கோயில்களும் பூலவுணவரல்" எனக் குறிப்பிடுவார்கள்.

**சண்டேசர்:**

சண்டேசர் சண்டேச தேவகன்மி என்ற கல்வெட்டுக்களில் குறிக்கப் பெறுகின்றார். சிவவழிபாடு செய்வோர் அது முடிந்துக் கோயிலை விட்டுச் செல்பவர் இறுதியாக அவர் சந்நிதிக்கு வந்து வணங்கிச் சிவதரிசன பலனை அருளுக என வேண்டிச் செல்வதல் மரபு. அவர் எக்காலமும் இறைவனை மறவாது சிவயோகத்தமர்ந்திருக்கும் சிவசிந்தையர் ஆதலின் மும்முறை கைதட்டிக் கும்பிட்டுச் சிவதரிசன பலனை அருளுக என விண்ணப்பித்துச் செல்லுதல் மரபும் கடமையுமாகும்.

திருவாரூர், சிதம்பரம் போன்ற தலங்களில் சண்டேசர் கோயிலில் இரு வகைச் சண்டர் எழுந்தருளியிருப்பர். தில்லையைத் தரிசித்தார் அனைவருக்கும் முத்தியாதலின் மறு பிறப்பில்லையாதலின், தலைமைத் தன்மையாதலின் அங்கு, நான்கு திருமுகங்களையுடைய சண்டர் ஒருவரும், ஒரு திருமுகம் உடைய சண்டர் ஒருவரும் இருப்பர். சண்டேசர் வரலாற்றில் தெய்வச் சேக்கிழார் "சண்டேசனும் பதம் தந்தோம்" எனக் குறிப்பதாலேயே பதவி ஒன்று என்றும் உளது. அப்பதவியைத் தொண்டினால் — சிவபூசையால் பெற்ற விசாரசருமராகிய சண்டர் ஒருவர் ஆகிய இரு திருவுருவங்கள் உள்ளன. இதனை வரலாற்றுக் கல், மறைந்த தில்லை வாழ்ந்தவர்கள் நான்கு தலையுண்மையால் பிரமசண்டர் என்பர். இந்த எண்ணம் இவர்கள் மனத்து உதித்தமைக்குக் காரணம் திருவாரூரில் இரண்டு சண்டர் திருவுருவங்கள் உள்ளன. ஒன்று, யமச்சண்டர், திருவாரூர்ப் பிறந்த அத்தனை உயிருமே சிவகணமாகப் பரமுத்தி பெறுதலின் யமனுக்கு வேலையில்லையாயிற்று. அதனால் யமன் தவஞ் செய்து சண்டேச பதவி பெற்றான் என்பது தலபுராண வரலாறு. ஆதலின் அங்கு யமச்சண்டரும், பதவியில் உள்ள த்வனிச் சண்டரும் உள்ளனர்.

அந்த வரலாறு தில்லை வாழ் மக்களின் உள்ளத்து விளைய, இங்கும் தில்லையைக் கண்டோர் அனைவருக்குமே முத்தியாதலின் பிரமனுக்குப் படைத்தல் தொழிலற்றுப் போயிற்று. அதனால் பிரமன் சண்டேச பதவி பெற்றான் என்ற வரலாறு ஒட்டி பிரமச் சண்டராக்கினர். இது சிவாகம நெறி வந்த திருவுருவம் அன்று. சிவாலயங்களில் சிற்சில இடங்களில் என்றுஞ் சண்ட பதவியில் உள்ளார் நான்கு திருமுகங்களும், நான்கு திருக்கரங்களும்பெற்று விளங்குவர். பதவிக்கு வந்த சண்டர் ஒரு திருமுகத்துடன் விளங்குவர்.

4:1:17

சிவபூசையில் சூரிய பூசைப் பயனை அளிக்கும் சண்டர் தேஜஸ்சண்டர் (ஒளி மயமான சண்டர்) எனவும், சிவபூசைப் பயனை அளிப்பவர் த்வனிச்சண்டர் எனவும் வழிபடப் பெறுகிறார்.

அதன் காரணம், சூரியன் ஒளிமயமானவன். அவன் வழிபாட்டால் எய்தும் பயன் ஒளி. ஆதலால் அவ்வாலயத்தில் உள்ள அவன் பூசையில் நிர்மாலிக்கப்பெற்ற சண்டர் ஒளிச்சண்டர் ஆகிறார்.

சிவபெருமான், சிவாகமங்களிலும், சித்தாந்த சாத்திரங்களிலும் ஆகாயமே வடிவானவர், எங்கும் வியாபித்திருப்பவர் என்று போற்றப் பெறுகிறார். இறைவனை நீராட்டுங்காலத்தில் நாம் கூறவேண்டிய பதமந்திரத்தில் "வியோமவியாபினே வியோமரூபாய, சர்வ வியாபினே சிவாய" என்று போற்றப்படுகிறார். அவர் வான்பூதவடிவராகும்போது வான் ஆகிய பூததத்துவம் ஒலியாகிய குணம் உடைய-தாதலின் சப்தகுணம் ஆகாசம் என்பது சித்தாந்த சாத்திரமாதலின். அவர் குணம் ஒலி வடிவமாதலின், இதனைக் கருதியே 'திருமுறையில் அப்பர் சுவாமிகள் 'ஓசை ஒலி எலாம் ஆனாய் நீயே" என்றருளுதலால், 'ஓசை பெருகுமாற இயலாத பூதாகாரமான சத்தம், ஒலி பொருளையுணர்த்தும் ஒலியாம், எடுத்தல் படுத்தல் நலிதல் ஆகிய இயக்க வேறுபாட்டால் வேறு வேறு பொருள்களையுணர்த்திக் கேட்பார் உள்ளத்தில் பல்வேறு பொருள்களையுணர்த்தி நிற்பதாலும்; இரண்டுமே ஒலி வடிவாதலால் அந்த இரண்டுமாயிருக்கிற சிவத்தை வழிபடுதலால் பயன் அவ்விரண்டுமேயாதலின் வழிபடுவார்க்கு அதன்பயனையளிப்பவர் த்வனிச்சண்டர் எனப் போற்றப்பெறுவது பொருத்தமேயல்லவா?

பரிவார தேவதைகள் தலங்கள் தோறும் வெவ்வேறு திருநாமங்களுடன், வெவ்வேறு அருட்செயல்களையுணர்த்தும் வரலாற்றுப் பின்னணியுடன் திருவுருவ அமைப்பிலும் வேறுபட்டு விளங்குவதை ஓரளவு உணர, 'கோயில்' என்ற பெயரையே பெயராகக் கொண்ட சிதம்பரத்தின் பரிவார அமைப்பை எண்ணிப் பார்ப்போம்.

<u>சிதம்பரம் கோயில்</u>:

மொட்டைக் கோபுரங்களுக்கும், பெரிய கோபுரங்களைச் சார்ந்த திருமதில்களுக்கும் இடையிலுள்ள சுமார் ஐந்நூறு முழ அகலத்திற்கு மேற்பட்ட பரப்புள்ள முதல் ஆவரணத்திற்குக் கோப்பெருஞ்சிங்கன் தெங்கந்திருவீதி என்று கல்வெட்டுக்களில் பெயர். அது இன்று முழுதும் பூந்தோட்டம், தென்னை, மா, பலா நிரம்பிய தோட்டம், வடசார்பு முழுதும் நந்தவனம் ஆக விளங்குகிறது. மக்கள் நடமாட்டம் இல்லை. அன்று வரலாற்றுக் காலத்தில் அது ஒரு

வீதியாகவும், பல பரிவார தேவதைகளையுடையதாகவுமே விளங்கியிருக்கிறது. அதில் பொன் வேய்ந்த திருஞானசம்பந்தர் திருக்கோயில் ஒன்று இருந்திருக்கிறது. அக்கோயில் பொற்கோயிலாக இருந்தமையால் இடிபட்டுத் திருஞானசம்பந்தர் திருவுருவம் மட்டும் சுமார் 4 அடி உயரமுள்ளது. திருக்காமக்கோட்டமாகிய சிவகாமியம்மன் திருக்கோயிலின் 2வது மதில் வாயிலின் இடக்கைப்புறத்து மேடையில் சுவரில் சாத்தி வைக்கப்பெற்றிருந்தது. சென்ற ஆண்டு நடைபெற்ற மகா கும்பாபிஷேகத்தில் மூன்றும் பிரகாரத்து திருமுறை இருந்த அறை என்ற வரலாற்றுப் பெருமை படைத்த அறையிருந்த இடத்தில் நால்வர் சிலையில் ஞானசம்பந்தர் சிலை பழுதுபட்டமையால் அங்கு இன்று விளங்கிக் கொண்டிருக்கிறது. இத்திருவீதியில் ஆனித்திருவிழாவில் தேரோடியதாகக் கூடக் கல்வெட்டால் அறியப் பெறுகிறது. இதுபோலச் சில கோயில்கள் அந்தத் திருவீதியில் இருந்த சுவட்டை சிதைந்த அடையாளமட்டும் அறிவிக்கின்ற கோயில்கள் பறிக்கின்றன. அந்த வீதியோடு வந்து தெற்குக் கோபுரத்தின் தென்வாயிலையடைந்தால் திருமாளிகைப் பத்தி 2ம் மண்டபத்தில் ஆட்கொண்டார் உய்யக்கொண்டார் என்ற இரு துவார பாலகர்கள் பெருமிதத்துடன் காட்சியளிக்கின்றனர். அவர்களுடைய அருளாடலைப் பற்றிய வரலாறுகளும் இன்றும் செவிவழிச் செய்தியாகப் பல கேட்கப்படுகின்றன. அவர்களுக்கென்று அவர்கள் எதிரில் தனித்தனி நாலுகால் மண்டபமும் அதில் நந்திகளும் விளங்குவதைக் காணலாம்.

இவர்களை வழிபட்டுச் சென்று தெற்குக் கோபுர வாயில் வழியாக 2ம் பிரகார வழியாக உள்ளே புகுந்தால் எதிரிலே ஒரு தென்முகக் கடவுள் பரிவார நிலையில் இருப்பார். அவருக்கு எதிரில் வடக்கு நோக்கி முருகப்பெருமான் இருக்கிறார். அதே பிரகாரத்தின் தென்மேற்குக் கோடியில் முக்குறுணி விநாயகர் என வழங்கப்பெறும் முக்கட்டண விநாயகர் உள்ளனர். இவர் மிகப் பெரிய திருவுருவம் படைத்தவர். இவருக்கு சதுர்த்திதோறும் முக்குறுணி அரிசியால் இடித்த மாவாக்கி ஒரே கொழுக்கட்டையைப் பூரணத்துடன் அவித்து நிவேதித்து வந்தார்களாம். இது செவிவழிச் செய்தி. இத்தலம் ஆடல்வல்லான் தென்திசை நோக்கியாடும் சித்தலமாதலின் இக்கோயிலுக்குத் தெற்கு வாயிலே சிறந்தது. அங்குள்ள பிள்ளையாருக்குக் காணிக்கை செலுத்தி உத்தரவு பெற்று உள்ளே வலமாகச் செல்வது வழக்கமாதலின், அதற்குரிய கட்டணத்தைப் பெற்றமையால் அவர்க்குக் கட்டண விநாயகர் என் பெயர். அது இன்று முக்குறுணி விநாயகர் என வழங்குவதாயிற்று.

4:1:19

அடுத்த மேலக் கோபுரம், அதன் வழியாக வெளிப்போந்தால் கோபுர வாயிலின் இடது பக்கத்தில் கற்பக விநாயகர். இவர்தான் நலத்தலைபதி. வலப்புறம் பாலசுப்பிரமணியர் கோயில். வழிபட்டுக் கொண்டு மேலக் — கோபுரத்தின் வழியாக உட்புகுந்தால் கோபுரத்தின் ஓரமாக ஒரு முருகன் கோயில் உள்ளது. இது செங்குந்தப் பெருமக்களின் குல தெய்வம். ஆதலால் ஐப்பசி மாதம் கந்தசஷ்டி விழா மிகச் சிறப்பாக நடைபெறும். அடுத்து அப்படியே வலம் வந்தால், சிவகங்கை தீர்த்தமும் அதன் மேல்கரையில் மீனாட்சி சுந்தரேசர் கோயிலும் உள்ளன. இவர் மதுரையில் தனிப்பெருந்தலைமைத் தெய்வம். இங்குப் பரிவாரமா? சிந்தியுங்கள். அடுத்து நூற்றுக்கால் மண்டபம். இது திருமுறை பாராயண மண்டபமாக இருந்தது என்று கல்வெட்டுக் குறிக்கிறது. இங்கிருந்து கடவுள் கடல் விழாவிற்கு மாசி மகத்திற்கு எழுந்தருளும்போது திருமுறை பாராயணம் செய்துகொண்டே திருமுறைவாணர்களும் அன்பர்களும் நடந்தே சென்று கடலாடிப் பெருமானுடன் திரும்பி வருவது வழக்கம் எனக் கல்வெட்டுச் சான்று உள்ளது.

அதனை ஒட்டியே சிவகங்கையை நோக்கிக் கொண்டு ஒற்றைக் கால் மண்டபத்தில் விநாயகர் வீற்றிருக்கிறார்.

இதனையடுத்து வடக்கு நோக்கிச் சென்றால் சிவகங்கை மேல்கரையிலே திருக்காமக்கோட்டமாகிய சிவகாமியம்மன் திருக்கோயில் கொண்டெழுந்தருளி யுள்ளார். அம் நடராசப் பெருமானை நோக்கப் பரிவார தெய்வமாயினும் அங்குள்ள அர்த்தமண்டபம், மகாமண்டபம், துவஜஸ்தம்பம் இவைகளை நோக்கியும் பிரகாரத்தில் உள்ள சித்திரபுத்திரர் கோயிலை நோக்கவும் தலைமைத்தானத் தெய்வமாகவே கருதவேண்டியுள்ளது.

சித்திரா குப்தன் எமதருமருக்கு மக்களைப் பற்றிய ஆயுள் புண்ய பாவ கர்மங்கள் இவைகளைப் பற்றி எழுதும் கணக்கராகக் கருதப் பெறுகிறார். இவருக்கு சித்திரா பூர்ணிமை நாளில் அபிடேக ஆராதனைகள் சிறப்பாக நடைபெறும்.

அம்மையைச் சுற்றியுள்ள திருமாளிகைப் பத்தி மண்டபம் சுற்றிலே பல வரி முழுதும், இசைக்கலை, நாட்டியக்கலை பற்றிய சிற்பங்கள் மிகுதியாக உள்ளன. இதனால் அம்மையை உணர்வரிய மெய்ஞ்ஞான கலைஞானம் பற்றிய தலைவி என்பர் சிற்பக்கலைஞர்.

அம்மன் கோயிலுக்கு வெளிப்புறத்தில் இடப்பக்கத்தில் ஓர் உருவம் இருந்தது. அதனைச் சாக்கியநாயனார் கோயில் என்பார்கள். பள்ளி — மாணவர்கள் வேண்டிக்கொண்டு கல்லால் அடித்து வழிபடுவார்கள். அதற்கு

பூசை முதலிய இல்லை. இப்போது மாற்றி வேறு பெயரிட்டு வழங்கி - வருவதாகக் கேள்வி. இதனையடுத்து வடக்கு முகமாக இருப்பது மகிடாசுர-மர்த்தனி-துர்க்கை. இம்மூர்த்தி சுரமாகப் பிரார்த்தனைத் தெய்வமாகப் போற்றப்பட்டு வருகிறது. இதனையடுத்து வடக்கில் விளங்கும் பெரிய கோயில் பாண்டிய நாயகம் என்னும் வள்ளி தேவசேனாசமேத ஆறுமுகநாயனார் கோயில். சுவாமி மயில் வாகனத்தில் இருக்கிறார். இருபெருந்தேவியரும் பக்கத்தில் நின்ற கோலத்தில் உள்ளனர். கொடிமரம் முதலியன அனைத்தும் உண்டு.

இதற்கு எதிரில், சிவகங்கை வடகரையில் திருத்தொண்டத் தொகையீச்சரம் எனக் கல்வெட்டுக்களில் வழங்கப்பெறும், நவலிங்கக் கோயில் உள்ளது. திருத் தொகையடியார் ஒன்பதின்மரும் ஒவ்வொரு கூட்டத்தினராதலின் அவர்களுக்குத் தனித்தனியே திருவுருவம் சமைக்க இயலாமையின், அவர்கள் முத்தியடைந்தபின் சிவலிங்கத் திருமேனியாவர் என்ற சமய உண்மை உண்மையின் நிலைவாழ்ந்தனர் முப்பொழுதுந் திருமேனி தீண்டுவார் அப்பாலுமடிச்சார்ந்தார் முழுநீறு பூசிய முனிவர், முதலிய ஒன்பதின்மருக்கும் நவலிங்கங்கள் தாபித்து வழிபட்டனர். இதுவும் பரிவாராலயமாயிற்று.

பின்பு சிவகங்கையை வலமாக வந்து ஆயிரக்கால் மண்டபத்தையும் கண்டு கிழக்கு நுழைவாயில் வாயில் வழியாக நுழையின் வாயில் மண்டபத்து இருபுறமும் 'புருஷா மிருகம்' என்னும் சிங்கத் தலையும் மனித உடலும் உடைய இரு தெய்வங்கள் உள்ளன. அவை வழிபட வருவாருடைய பாவகன்மங்களை நீக்கிப் புனிதமாக்கி வழிபட உள்ளனுப்பும் என்பது மரபு.

அங்கிருந்து நேரே வலமாக வந்தால் வழியிலே தெற்குப் பிரகாரத்திலே நிருத்தசபை என்ற சிற்பந்திறமும், செம்பித்த சோழ மன்னனுடைய உருவச் சிற்பமும் உடைய மண்டபம் ஒன்று.

இதில் தெற்பக்கத்துச் சுவரோரமாக சரபமூர்த்தியும், நந்தனாராகிய திருநாளைப்போவார் திருவுருவம் உள்ளன.

இதனையடுத்து மகாலட்சுமி கோயிலும், அதன் வட பக்கத்தில் தண்டபாணி கோயிலும் உள்ளன. இவற்றைக் கடந்து வலம் வந்தால் மேலைக் நுழைவாயிலின் வழியிலே உச்சிப்பிள்ளையார் என்ற திருமுறைகண்ட விநாயகர் கோயில் உள்ளது. இந்தப் பிரகாரத்தின் வடமேற்குக் கோடியில் - சமயாசாரியர் நால்வர் கோயிலும் திருமுறைகள் இருந்த இடமும் உள்ளன. அதனையடுத்துக் கிழக்கே போனால் நடராசமூர்த்தி கல்லலைப் விநாயகர் - உச்சிட்ட விநாயகர் இருப்பிடங்களைக் காணலாம்; அடுத்து நலமூர்த்தியான

4:1:21

திருமூலட்டானர் திருக்கோயில் அதன் இடப்பாகத்து உமய பார்வதி கோயில் இவற்றின் எதிரில் இடபம் - பலிபீடம். இக்கோயிலைத் தனியே வலம் வந்தால் தலவிருட்சமாகிய மூலமரம், தனியடியார் அறுபத்து மூவர் இருக்கை, அவற்றை யடுத்து அண்ணாமலையார் கோயில் சிவலிங்கம் மட்டும் சண்டேசர் கோயில் அமைந்தும் உள்ளன. அதற்கு எதிரில் நடராசர் சந்நிதியையடையின் வழியிலே அர்த்தசாம அழகர், அடுத்துச் சங்கநிதி பதுமநிதி, வழியில் நவகிரகங்களும் சனி பகவானும் கோயிலும் கடந்தால் கனகசபையையடையலாம். கனகசபையின் கிழக்கு வழியாக ஏறிச் செல்லின் வியாக்ரபாத முனிவரையும் கனகசபையின் நடுவிலே நடராசப் பெருமானுக்கு எதிரில் நந்தியும், சிற்சபைக்குள் பெருமானுக்குப் பின்புறம் சிதம்பர சக்கரமும், அதன் ஈசானிபாகத்தில் சொர்ண காலபைரவர் சந்நிதியும் உள்ளன. சபையைச் சுற்றி விநாயகர் முருகன் பள்ளியறை, பின்பக்கம் பிட்சாடனர் உருவங்களும் உள்ளன.

இவைகளில் தலவரலாறு பற்றிய பரிவாரங்களுடன் சமய வரலாறு பற்றியன பலவும் பரிவாரங்களாக அமைந்துள்ளன.

இவற்றையாராய்ந்து முடிவு காணவேண்டின், தலபுராண வரலாறுகள் சிவாகமங்கள், சிற்பசாஸ்திரங்கள், பிற புராணங்களில் காணப் பெறும் தியான சுலோகங்கள் இவற்றையும் பார்த்தல் இன்றியமையாததாம்.

<u>இக்கட்டுரைக்கு உதவிய நூல்கள்</u>:

காரணாகமம், சுப்பிரபேதாகமம், சிவார்ச்சனாசந்திரிகை, சைவக் கோயில், கிரியை நெறி, பிரதிஷ்டா விதிகள், அகோர சிவாசாரியர் செய்த கிரியாக்கிரம ஜோதி, சிவபூஜாவிதியும் விளக்கமும் முதலான 13 நூல்கள்.

***

# சமயம் — வழிபாடு — திவ்வியப்பிரபந்தங்கள்

பேராசிரியர் டாக்டர் கா. அ. மணவாளன், எம்.ஏ., பி.ஓ.எல்.,
பிஎச்.டி.,

4:2:1 செல்வே 6

சுருக்கம்:

(1. சமயம் — பொருள் விளக்கம் — பாரதநாட்டில் பல்வேறு சமயங்களின் தோற்றமும் வளர்ச்சியும்: அகச் சமயங்களும் புறச் சமயங்களும். சிறப்பாகத் தமிழர் சமயம். மனித சமுதாயத்திற்குச் சமயத்தால் விளையும் நன்மைகள்.

2. திருக்கோயில்கள் — இறைவழிபாடு — இறைநிலை — உயர்நிலை. நெறி — நடை — வழிவினை — வாழ்வினை — (ஆழ்வார்களின் அருளிச் செயல்களின் வழிவிளக்கம்).

3. வழிபாடு — வழிபாட்டின் வகைகள் — மனமொழி மெய் வழிபாடுகள் வழிபாட்டு முறை: அகவழிபாடு, அன்புவழிபாடு, ஆன்மீக வழிபாடு. முற்கால தற்கால வழிபாட்டு முறைகள், தேவையான சமுதாய நல மாற்றங்கள்.

4. ஆழ்வார்களின் சமுதாய நாட்டம் — உலக இயற்கை, கோயிற் படிகள், விழாக்கள், பூசைகள், கலையார்வம், பண்பாடு முதலியன.

5. குடிமக்களும் கோயில்களும் — கோயிலைச் சார்ந்த குடிமக்கள் — குடிமக்களைச் சார்ந்த கோயில்கள் — இவ்வகையில் ஆழ்வார்களின் திவ்விய பிரபந்தக் கருத்துக்கள். சமுதாய முன்னேற்றத்திற்காக மேற்கொள்ள வேண்டிய — இன்றியமையாத சீர்திருத்தங்கள்.)

உலகில் அறம் குன்றி மறம் பெருகி மக்கள் அல்லலுறும் காலங்களிலெல்லாம் சமயாசாரியர்கள் தோன்றி அறவழியைக் காட்டி மக்களை நல்வழிப் படுத்தியுள்ளார்கள். அவர்கள் மேற்கொண்ட நெறிகளே சமய நெறிகளாகும். சமயம் என்பதே பொதுமையான தத்துவந்தான். மனிதனை அவனுடைய பொறிகளை — அவனுடைய புலன்களை நெறிப்படுத்தி — செம்மைப்படுத்திப் பக்குவப் படுத்துவதேயாகும். மனிதரை ஒருமைப்பாடு பேச்சாலும் எழுத்தாலும் மட்டும் உருவாகிவிடுவதில்லை. நேர்மை நிறைந்த வாழ்க்கையினாலேயே மனிதரை ஒருமைப்பாடு தோன்றமுடியும். நேர்மை மிக்க வாழ்க்கையே சமய வாழ்வின் அடிப்படையாகும்: மனிதகுல ஈடேற்றமே சமயத்தின் இலக்காகும்.

4:2:2

<u>சமுதாயப் பொதுநெறி:</u>

சமயமே சமுதாயப் பொது நெறியாகும். அந்த நெறி குடிகளைத் தழுவிய கோயில்களும் கோயில்களைத் தழுவி வாழும் கிராமங்களும் என்ற சமுதாய நெறியை உருவாக்குவதற்குப் பயன்பட்ட பொதுநெறியாகும். தெளிவாகச் சொல்ல வேண்டுமானால் கீழ்நிலையிலுள்ள மக்களை மேல்நிலைக்கு உயர்த்த சமயக் கருத்துகளே மிகவும் உதவி வருகின்றன. பிறப்புக்கும் இறப்புக்கும் இடையே நாம் வாழ்கின்ற காலத்தில் நல்ல செயல்களைச் செய்யவும் நற்பயனைப் பெறவும் சமயக் கொள்கைகள் பெரிதும் உதவுகின்றன. சமயம் என்பது தத்துவந்தான். தத்துவ அறிவினால்தான் இறைவனை உள்ளபடி அறியமுடியும் என்று வேதாந்த நூல்கள் கூறுகின்றன. ஆயினும் தத்துவ விளக்கங்களின் மூலம் கடவுளை அறிந்து இறை உண்மையை உணர்ந்து கொள்ளும் ஆற்றலில்லாதவர்களுக்குச் சமய நெறி, சமய வழிபாட்டு முறைகள், சமயக் கருத்துகள் மிகவும் உதவுதலை செய்கின்றன. தெரிந்த ஒன்றிலிருந்து தெரியாததற்குச் செல்லுதல் என்பதே வரையறை செய்யப்பட்ட நிலை.

<u>சமயப்பிரிவுகள்:</u>

இந்திய மதங்களை இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஒன்று வேதங்களையும் உபநிடதங்களையும் பிரமாணமாக (கட்டளைக் கல்லாக) — சான்றாக ஏற்றுக் கொள்வது. மற்றொன்று வேதங்களைப் பிரமாணங்களாக ஏற்றுக் கொள்ளாதது. வேதத்தை ஏற்றுக் கொள்ளாதவர்களை நாம் இங்குப் புறச்சமயிகள் என்று கூறுகிறோம். வேதத்தை ஏற்றுக் கொண்டவர்களுக்குள்ளும் கருத்து ஒற்றுமை இல்லை. அவரவர் அறிவுக்கு ஏற்றவாறு பல விளக்கங்களை — உரைகளைக் கூறிப் பிரிந்து நிற்கின்றனர். எது எப்படியாயினும் பாரத தேசமெங்கும் பரவி நிற்கும் சமயங்களுள் சைவமும் வைணவமும்தான் தொன்மையான சிறப்புக்களையுடைய, சமுதாயம் தழுவிய சமயங்களாக இன்றும் காட்சியளிக்கின்றன. ஒழுக்க நெறியையும் பக்திநெறியையும் பரப்புவதில் இவ்விரு சமயங்களும் இணைந்து செயல்பட்டு அந்நாளில் நடைமுறையில் ஏட்டளவு முறையில் முற்றிலும் மாறுபட்டு ஒன்றை ஒன்று தாக்கிக் கொள்கின்றன.

<u>சமயங்களின் தொன்மை:</u>

மனிதர் குலத்தின் மூலச் சிந்தனையில் எழுந்த நூல்கள் என்று வேதங்களைப் பற்றிச் சொல்லப்படுகிறது. மற்றும் சிலர் இறைவனைப் போலவே வேதமும் அநாதி என்கிறார்கள். ஒரு மனிதனால் இயற்றப் பட்டதல்ல வேதம் என்பது அவர்கள் கொள்கை. இவர்களை 'நித்யத்வ வாதிகள்' என்று தத்துவ நூல்கள் கூறுகின்றன. வேதத்தை அபௌருஷேயம், நித்யம், நிர்தோஷம் என்று

வடமொழியில் வல்லுநர்கள் கூறுகிறார்கள். இப்படிச் சொல்லப்படுகிற வேதமாகிய மறைநூல்கள், தமிழர்களின் அருளாளர்களான ஆழ்வார்கள் நாயன்மார்களால் அருளப் பெற்ற நாலாயிர திவ்வியப் பிரபந்தங்களும் தேவார திருவாசகங்களுமே யாகும் என்பது சிலர் கொள்கை. புரியாத வடமொழி வேதங்களைத் தமிழ் மறையாக்கித் தந்த வள்ளல்களே இவர்கள் என்று கூறுவாரும் உண்டு. எப்படியாயினும் ஒரு உண்மையை மறுப்பதற்கில்லை. இவ்விரு வேதவடிவினன் இறைவன் என்பதேயாகும்.

ஆழ்வார்களும் நாயன்மார்களும் இக்கருத்தைப் போட்டி போட்டுக் கொண்டு பல இடங்களில் தங்கள் பாக்களில் குறிப்பிட்டுள்ளார்கள். சான்றாகச் சில தொடர்களைப் பார்ப்போம்.

"வேதமொடு ஆறு அங்கம் ஆயினான்" என்று தேவாரம் செப்புகின்றது.

"அங்கமாறும் வேதநான்குமாகி நின்றவற்றுளே
தங்குகின்ற தன்மையாய்" (திருமழிசையாழ்வார்)

"செஞ்சொல் மறைப் பொருளாகி நின்ற தேவர்கள் நாயகனே"
(பெரியாழ்வார்)

"வேதத்தை வேதத்தின் சுவைப் பயனை" (திருமங்கையாழ்வார்)

"உளன் சுடர்மிகு சுருதியுள்" (நம்மாழ்வார்)

"மறையாய நால் வேதத்துள் நின்ற பரஞ்சுடரே"

இவ்விதம் பல இடங்களில் அருளாளர்களான ஆழ்வார்களின் பாடல்களில் வேதமாய், வேதவடிவினனாய், வேதத்தின் உட்பொருளாய் இறைவன் வருணிக்கப்பட்டுள்ளான்.

இப்படி, கால நிர்ணயம் செய்ய இயலாத கடவுளொடு இணைத்து வேதம் சொல்லப்படுவதால் வேதத்தின் தொன்மையையும் அவ்வேத அடிப்படை நெறிகளில் தோன்றி மக்களை நல்வழிப்படுத்தும் சமயங்களின் தொன்மையையும் ஒருவாறு அறியலாம்.

<u>இறைவழிபாடும் வழிபாட்டு வகைகளும்:</u>

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பன மெய்யுணர்வாளர்கள் பெற்ற தெளிவுகளாகும். அந்த ஒரு தேவனை திருமாலாகவும் சிவபிரானாகவும் ஏன் இன்னும் அவரவர் விரும்பும் கடவுளர்களாகவும் பலபல உருவங்களிலே பல பல பெயர்களிலே வழிபடலாம். எப்படி எக்கடவுளை யார் வழிபட்டாலும் அவ்வழிபாட்டிற்குரிய கடவுளர்களின் உள்ளே இருப்பவனாகிய நாராயணனே மறை பொருளாய் நின்று அருள்பாலிக்கிறான் என்பது வைணவ சமயக் கொள்கை. ஆழ்வார்களும் இக்கருத்தைத் தமது பாக்களில் கூறியுள்ளனர். "தமருகந்தது எவ்வுருவம் அவ்வுருவம் தானே

தமருகந்தது எப்பேர் மற்றப்பேர் — தமருகந்து

எவ்வண்ணம் சிந்தித் திமையா திருப்பரே
அவ்வண்ணம் ஆழியானாம்" (பொய்கையாழ்வார்
இயற்பா 1-14)

"அடியார்கள் (பக்தர்கள்) எதைத் தமக்குத் திருமேனியாகக் கொள்கிறார்களோ அதனையே இறைவன் தனக்கு வடிவமாகவும் அவர்களுக்கு எந்தப் பெயரையே தனக்குப் பெயராகவும் கொண்டு சிந்திப்பவர்களுக்கு ஆழியானாகிய திருமால் பலனளிக்கிறான்" என்பதே இப்பாடலின் பொருளாகும். இந்நிலையில் இறைவன் இன்ன இடத்தில் இன்ன காலத்தில் இன்னாரிடத்தில் தோன்றி இப்படியிருக்க வேண்டும் என்ற நியமமில்லாதபடி (நினைத்தனை நினைத்தபடி) பக்தர்கள் விரும்பும் எந்த இடத்திலும் எந்தக் காலத்திலும் எந்த உருவத்திலும் எந்தப் பெயரிலும் தோன்றி அவர்களுடைய பூசையாகிய வழிபாட்டை ஏற்றுக் கொள்கிறான் என்ற உண்மை புலனாகின்றது. ஆனால் இப்பாட்டில் 'தமருகந்தது எவ்வுருவம்' என்று உருவம் பற்றித் தெளிவாகச் சொல்லப்பட்டிருப்பதால் விக்ரக வழிபாடாகிய திருமேனி வழிபாட்டைத்தான் நாம் கொள்ளவேண்டும். உருவமற்ற இறை வழிபாடு ஆழ்வார்களுக்கு உடன்பாடுடைய கொள்கையல்ல. "பச்சைமாமலைபோல் மேனி பவளவாய் கமலச் செங்கண் அச்சுதா' என்றும் "திருக்கமல பாதம்' என்றும் "அயனைப் படைத்ததோரெழில் உந்தி", "முடிச்சோதியாய் உனது முகச்சோதி" என்றும் தொட்ட தொட்ட இடமெல்லாம் எம்பெருமானாகிய இறைவனுடைய எழிலார் திருவுருவத்தையும் அங்கங்களையும் வருணித்துப் போற்றியிருப்பதால் உருவ வழிபாடே (திவ்விய மங்கள விக்ரகமே) அவர்களுக்கு நோக்கு என்பது புலனாகிறது.

<u>வழிபாட்டில் அர்ச்சை:</u>

அர்ச்சை என்பது அர்ச்சாவதாரம். இறைவனுடைய ஐந்து நிலையில் அர்ச்சாவதாரமே எளிதாக இனிதாகப் பற்றக் கூடிய ஒன்று. அர்ச்சாவதாரம் என்றால் தன்னைத் துதிப்பவர்களுடைய கண்ணுக்கும் கருத்துக்கும் <u>இனியதாய்</u> திருவுருவை மேற்கொண்டு <u>எளியதாய் யாவரும் வணங்க ஏற்றதாய் — பூசை செய்யலாம்படி இருக்கும் நிலையேயாகும்.</u> அப்படிப்பட்ட நிலையில் திருக்கோயில்களில் கோயில் கொண்டிருக்கும் திவ்விய மங்கள விக்ரகங்களிலே — தெய்வத் திருமூர்த்திகளிலே ஈடுபட்டு மயங்கிய ஆழ்வார்கள் ஆனந்த மாகிய பரமபதத்தையும் வேண்டாம் என்று விலக்கி இவ்வுலகிலேயே பரமபத இன்பத்தைத் திருவரங்கம், திருப்பதி போன்ற திவ்விய தேசங்களிலேயே பெறுவதாகக் கூறியுள்ளார்கள். "இச்சுவை தவிர யான் போய் இந்திர லோகமாளும் அச்சுவை பெறினும் வேண்டேன்" என்றும் "அடியார்கோள்

வியரங்கள் என் அமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே" என்னும் முறையே தொண்டரடிப் பொடியாழ்வாரும் திருப்பாணாழ்வாரும் கூறியுள்ளார்கள்.

இந்த அர்ச்சாவதார இன்பம் (திருமேனி இன்பம்) வைணவத்து மாத்திர-மமைந்த ஏகபோக உரிமையன்று. சைவ சமயாசிரியர்களிலே இராமானுசரைப் போலே அருளின்பங் கொண்டு தொண்டுக்கே கோவணம் பூண்ட அப்பர் சுவாமிகளின் அனுபூதி நேசமும் "குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும் பனித்த சடையும் பவளம் போல் மேனியிற் பால் வெண்ணீறும்" என்று வருகின்ற முடிவில் வேண்டாத மனிதப் பிறவியையும் வேண்டும்படி வியப்பிக்கின்றதன்றோ! காதல் நிலைக் கருத்தின் சொல்லோவியமான [illegible] காட்சியல்லவா?

<u>இறைநிலை – உயிர்நிலை – சரீர சரீரி தன்மை விளக்கம்:</u>

இறைவன் சித்தாகிய உயிருக்குள்ளும் அசித்தாகிய உடலுக்குள்ளும் மறை பொருளாய் (அந்தரியாமியாய்) இருக்கிறான். அதுவே இறைவனின் நுண்ணிய நிலை (சூட்சுமநிலை) மேற்பகுதி விரிவடைந்த மக்கள், விலங்கு முதலியவற்றின் வடிவங்களாகவும், மற்றுமுள்ள பொருள்களாகவும் பரிணமிக்கின்றது.
இறைவன் எல்லாப் பொருள்களுக்குள்ளும் எல்லா உயிர்களுக்குள்ளும் அந்தர்யாமியாக மறைந்துள்ளான். இதனை நம்மாழ்வார் மிகத் தெளிவாக அருளியுள்ளார்.

"திட விசும்பெரி வளி நீர் நிலம் இவைமிசை
படர்பொருள் முழுவதுமாய் அவை அவைதொறும்
உடல்மிசை உயிரெனக் கரந்த எங்கும் பரந்துளன்
சுடர்மிகு சுருதியுள் இவையுண்ட சுரனே." (நம்மாழ்வார்)

இங்கே அழகான ஒரு தத்துவக் கருத்தையும் காணலாம்.
இவ்வுலகங்களுக்குக் காரணமான பஞ்சபூதங்களிலெல்லாம் இறைவன் இருக்கிறான் என்பதனை விளக்க 'உடல்மிசை உயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன்' என்று ஆழ்வார் கூறியுள்ள உவமை விளக்கத்திலிருந்து, இவ்வுலகம் இறைவனுக்கு உடலாகிறது; இறைவன் உயிராய் விளங்குகிறான் என்ற உண்மை தெரிகிறது. இதனை "சரீர சரீரி பாவம்" என்பர், [illegible]. இதைப் போன்ற நம்மாழ்வாருடையவும் மற்ற ஆழ்வார்களுடையவும் கொள்கைகளே இராமாநுசருடைய விசிட்டாத்வைதக் கொள்கைகளுக்கு வழிகாட்டி என்பர் பெரியோர்.

<u>தமிழர் வழிபாடும் தமிழ் வழிபாடும்:</u>

இயற்கையோடு இயைந்த வழிபாட்டு-முறையே தமிழர் வழிபாட்டு முறையாக இருந்து வந்தது. இயற்கை, கடவுளின் உடல், இயற்கையாகிய உடல் முழுவதும் கடவுள் நிறைந்து நின்று அதனை இயக்குகிறான். இயற்கைக்கு

அப்பாற்பட்டும் அவன் திகழ்கிறான். மரம், கல், மண் முதலிய இயற்கைப் பொருள்களை முழுமையாக (சிதைந்து மாறுபடுத்தாமல்) அப்படியே கடவுளாகப் பழந்தமிழர் வழிபட்டனர். காலப் போக்கில் மரத்தின் விழுதுகளும் கிளைகளும் வேர்களும், அதுபோலவே கல்மண் முதலிய பொருள்களின் சேர்வும் கூட்டும் சிதைவும் சில வினோதங்களை இயற்கையில் உண்டாக்கின. அவைகளையும் கடவுளின் ஒரு பரிணாம வளர்ச்சியாகக் கருதிப் பழந்தமிழர் வழிபடலாயினர். பிற்காலத்தில் அரசர்களின் சிறு கற்கோயில்களும் மரக் கோயில்களும் கட்டப்பட்டு பிடி உருவங்களும் அமைக்கப்பட்டு வழிபாடுகள் நடந்தன.

இந்த நிலையில் சாதி வேறுபாடின்றி அத்தெய்வச் சிலைகளுக்கு அவரவர் அறிந்த வகையில் – விரும்பிய வகையில் அந்நாட்டவர் அவர்களே பூசை வழிபாடு நிகழ்த்தி வந்தனர். பின்புதான் சிற்பக்கலை வல்லுநர்களும் ஆகம பண்டிதர்களும் நாகரிகம், பண்பாடு வளர்ச்சி என்ற பெயர்களால் எளிய தூய இயற்கை வழிபாட்டிலிருந்தும் மாதவனையும் மகேசனையும் பிரித்து ஆடம்பர ஆரவார முழுமையில்லாத பக்தி வழிபாட்டு முறைக்கு வித்திட்டனர். அதுவரை நாட்டுப்புறத் தெய்வங்களாக – ஏழை எளிய மக்களுக்குத் தெய்வங்களாக இருந்த அவர்கள் - நாகரிக நகர தெய்வங்களாக மாறின. எளிய ஆடைகளையும் எளிய உணவுகளையும் எளிய மக்களிடமிருந்து பெற்றுவந்த தெய்வங்கள், பட்டுப் பீதாம்பரங்களையும் பல்வகை ஆபரணங்களையும் பஞ்சாமிர்தங்களையும் பணக்காரர்களிடமிருந்து பெற்று மகிழ்ந்தன. அவனுக்கு எல்லாம் தகும் என்று சமுதாயமும் இந்த மாற்றங்களைப் போற்றி ஏற்றது.

- இந்த மாற்றங்களைச் சமயமறிந்து பயன்படுத்திக் கொள்ளத் தெரிந்த சில புத்திசாலிகள் பெருங்கோயில்களிலே முதலிடங்களைப் பிடித்துக் கொண்டனர். எளியவர்களிடமிருந்து இறைவனைப் பிரித்துத் தாய்மொழி வழிபாட்டை அகற்றினர். வேற்று மொழி வழிபாடு, பூசைகள், விழாக்கள் இடம் பெற்றன.

ஆழ்வார்களின் பக்தி வழிபாடு:

இந்த நிலையில்தான் ஆழ்வார்கள் அவதரித்தார்கள். அருமைத் தமிழை ஆலயங்களில் புகுத்தினார்கள். புரியாத மொழி ஒலிகள் நிறைந்த திருக் கோயில்களில் புரியும் மொழி – பூசை – வழிபாடு உண்டாயின. ஆழ்வார்களின் அருளிச் செயல்களாகிய நாலாயிர திவ்வியப் பிரபந்தப் பாடல்களை ஆண்டவன் கேட்டு மகிழ்ந்தான்; சுவைத்தான். அவர்கள் செய்த மறைமொழி மெய் பூசைகளை விரும்பி ஏற்றான். இந்த ஆழ்வார்களின் திவ்வியப் பிரபந்தச் சான்றுகள் பல உண்டு.
சில காண்போம்.

4:2:7

வழிபாடு (1) செய்முறை பக்தி (காயிகம்)

(1) "நாரார்ந்திடை நாண்மலர் கொண்டு நந்தமர்காள்
ஆராவன்போடு எம்பெருமானை அடிமின்கள்"

(2) "நின்றவினையும் துயரும்கெட மாமலரேந்தி
சென்று பணிமின் எழுமின்தொழுமின் தொண்டீர்காள்"

(3) "நீரீர் வல்ல மாமலர் கொண்டு விரையேற்றி
ஊர் சீர் பரவித்தொழுமின் எழுமின் தொண்டீர்காள்."

(4) "மிக்கசீர் தொண்டரிட்ட பூந்துளவின் வாசமே"

(5) "சுனையார் மலரிட்டுத் தொண்டராய் நின்ற" என்பன.

வழிபாடு (2) வாய்மொழி பக்தி (வாசிகம்)

கலி காலத்தில் இறைவன் திருப்பெயரை நாத்தழும்பச் சொல்லி வழிபட்டாலே போதுமென்பர் சான்றோர். நமக்குப் பல புலன்களை வழங்கிய இறைவன் நாக்கையும் வாக்கையும் சேர்த்தே ஓரிடத்திலேயே படைத்தான். நாராயண நாமத்தையும் காட்டியுள்ளான். நாத்தழும்ப நாராயண நாமத்தைச் சொல்லிப் பேறு பெறலாமாயிருக்க, ஏன் சோறு கூறைக்காக மற்றவர்களைப் புகழ்ந்து நீசருக்குச் செல்கிறார்கள் என்று ஆழ்வார் கேட்கிறார். பாட்டையும் பார்ப்போம்:

"நாவாயிலுண்டே நமோ நாரணா என்று
ஓவாதுரைக்கும் உரையுண்டே - மூவாத
மாக்கதிக்கண் செல்லும் வகையுண்டே என்னொருவர்
தீக்கதிக்கண் செல்லும் திறம்."

— திருமழிசையாழ்வார்

பெரியாழ்வாரும் இறைவன் திருப்பெயரை ஓதி வழிபாடு செய்யும் சிறப்பை (நாம சங்கீர்த்தனப் பெருமையை) மிகவும் அழகாகக் கூறியுள்ளார்.

"உண்ணாநாள் பசியாவதொன்றில்லை ஓவாதே நமோ நாரணா என்று
எண்ணாநாளும் இருக்கெசுச்சாம வேதநாண்மலர் கொண்டு உன்பாதம்
நண்ணாநாள் அவை தத்துறுமாகில் அன்று எனக்கு
அவை பட்டினி நாளே" என்கிறார்.

இம் மாத்திரமன்று - இறைவனுடைய திருவடிப் பூசனையைத் தங்கள் நேர்த்தியில் தவறாது செய்வதில் நாட்டமும் பேறு பெறுவதே ஆழ்வார்களின் நெறிமுறைகளாகும். இதனையும் ஆழ்வார் வாக்கால் அறியலாம்.

"பருப்பதத்துக் கயல்பொறித்த பாண்டியர்குல பதிபோல்
திருப்பொலிந்த சேவடி என் சென்னியின்மேல் பொறித்தாய்"
என்கிறார்.

இந்த வாய்மொழி பகுதியில் ஆண்டாளின் அருமை வாக்கையும் காணலாம்
"நாம நுதம்பொழில் [illegible] நம்பிக்கு நான்
[illegible] உடலின் [illegible] பதாவி வந்தேன்"
என்பதுவே அவ்வரிகள்.

இறைவன் திருப் பெயரினை வாயால் சொல்லிப் பாடுதலைப் பற்றித் திருமங்கையாழ்வார் தம் அனுபவத்தை அருமை தோன்றக் கூறியுள்ளார். "குலம் தரும்" என்ற திருமொழிப் பாசுரத்தில் "நலந்தரும் சொல்லை நான் கண்டுகொண்டேன் நாராயணா என்னும் நாமம்" என்கிறார். மேலும் தாம் பெற்ற பேற்றை எல்லோரும் பெற வேண்டும் என்கிற பேருள்ளத்தால்
"எக்கெல்லும்
தேனும் பாலும் அமுதுமாய திருமால் திருநாமம்
நானும் சொல்வேன் நமரும் உரைமின்!" மற்றும்
"என்வாய் மாமணிவண்ணன் கண்ணனை யன்றி வேறொன்றை உரையாது"
என்றும் கூறியுள்ளார்.

இப்படிப்பட்ட மெய், வாய் வழிபாட்டு முறையோடு மானசீகமான நெஞ்சார்ந்த அன்புநெறி வழிபாட்டையும் பல இடங்களில் அருளியுள்ளார்கள்.

(1) "நல்லை நெஞ்சே நாம் தொழுதும் நம்முடை நம்பெருமான்"
(2) "வணங்கி வாழ்த்தென் நெஞ்சமே"
(3) "என்பிலெள்கி நெஞ்சுருகி உட்கனிந்து எழுந்ததோர்
அன்பிலன்றி ஆழியானை யாவர் காணவல்லரே
(4) "துயரறு சுடரடி தொழுது எழு என்மனனே"

என்பன போன்ற பல வரிகள் இறைவனை நெஞ்சால் தொழும் வழிபாட்டு முறையை உணர்த்துகின்றன.

இவ்விதம் மனம் மொழி மெய் என்ற முக்கரணங்களாலும் வழிபாட்டு முறையை வைணவ சமயிகளான ஆழ்வார்கள் உலகுக்குக் காட்டியுள்ளார்கள். இவர்கள் பகவத் பக்தியைவிட பாகவத பக்தியை மிகவும் சிறப்பாகப் போற்றியுள்ளார்கள். "மெய்யடியார்கள் ஈட்டம் கண்டிடக் கூடுமேல் அது காணும் கண் பயன் ஆவதே" என்கிறார் குலசேகராழ்வார். இந்த ஆழ்வாரே "அரங்கன் கோயில் திருமுற்றம் சேறு செய்யும் தொண்டர் சேவடி செழுஞ்சேறு என் சென்னிக் கணிவனே" என்று அடியார்களின் பாத தூளியைப்

பெரிதாக மதித்துப் போற்றியுள்ளார். இந்தப் பக்தர்கள் வரிசையிலே உயர்வு தாழ்வு கிடையாது. பலதைக் குலங்களை விட்டுத் தொண்டர் குலமாவார்கள் இவர்கள்!. பரமனைப் பயிலும் திருவுடையார் "யவரேனும் அவர்கண்டீர் பயிலும் பிறப்பிடைதோறு எம்மை ஆளும் பரமரே" என்கிறார் நம்மாழ்வார். இப்படித் திருமால் பக்தியையும் திருமாலடியார் சிறந்த பக்தி வழிபாட்டையும் ஆழ்வார்கள் காட்டியுள்ளார்கள்.

வழிபாட்டில் தமிழ்:

திருமால் திருக்கோயில்களில் ஆழ்வார்களின் அருளிச் செயல்களைப்பாடித் வழிபடும் முறையுண்டு. காலைமுறை நேரங்களில் நாள்தோறும் திருப்பாவை ஒரு பாமலரால் — நலம் மாகிய திருத்தமிழால் திருமால் திருவடிகளைப் போற்றி வழிபடுதல் இன்றும் நடைமுறையிலுள்ளது. ஆழ்வார்களின் அருளிச்செயல்வழி அருமைத் தமிழ் மந்திரமும் திருமால் திருக்கோயில்களிலெல்லாம் இன்று நடையாடு- கிறது. அபிஷேகம் என்ற சொல் மறந்தும் வைணவர்களின் வாயில் வராது. திருமஞ்சனம் என்றே வழங்குவர். எங்கும் திரு—அமுது என்ற தமிழ் மணம் கமழ்ந்த சொற்களே ஒலிக்கும். இருப்பினும் யாருக்கும் புரியாத மொழி அர்ச்சனைக்கும் செய்து வருவதை மறுக்க இயலாதே. குடிகளைத் தாங்கிய கோயில்களாக இருந்த காலத்தில் இந்த நிலை இருந்திருக்க முடியாது. மாலவன் முன்பு மக்களனைவரும் சரிநிகர் சமம் என்ற பொற்காலம் மாறி; சாதி, இனம், மொழி, செல்வம் என்ற நிலைகளில் ஏற்றத்தாழ்வுகளை அமைத்துக் கொண்டு பிரிவினைகளையேற்றுச் சமுதாயம் சிதறுண்டு கிடக்கிறது.

இக்காலக்கோயில்களின் நிலை. விழாக்கள்:

விழா என்றால் விசித்திர முழக்கங்கள் என்ற நிலையில் அசுர வாத்தியங்- களின் ஒலிகள் நிறைந்து அமைதியாக இறைவனைச் சிந்திக்கவோ வணங்கவோ திருநாமங்களைச் சொல்லிக் களிக்கவோ முடியாமல், ஒழுக்கம் பக்தி ஆகியவைகள் கொஞ்சமேனும் இல்லா வியாபாரச் சந்தைக் கடையாகப் பொருட்- காட்சிச் சாலையாக மாறிவிட்டன கோயில்கள்.

கல்விக் கூடங்களாக, கலைக் கூடங்களாக, மக்கள் சமுதாய மன்றங்- களாக, அறச்சாலைகளாக விளங்கவேண்டும் என்றுதான் மாமன்னர்கள் பெரிய பெரிய கோயில்களைக் கட்டினார்கள். அங்கே இன்று கலையுமில்லை; கல்வியுமில்லை. சரியாகச் சொல்லப் போனால் பக்தியுமில்லை. சிலகோயில் நடைமுறைகளையும் வழிபாட்டு முறைகளையும் பார்த்தால் கடவுள் கூட அங்கு இருக்கிறாரா என்ற ஐயம் எழுகிறது. அந்த அளவுக்கு அங்கே கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன. மேலாதிக்கம் பெற்றவர்கள் எளியவர்களை இறைவனிடம்

அண்டவிடாமல் தடுத்து நிறுத்தியுள்ளனர். பதவியும் பணமும் உள்ளவர்களுக்குத்தான் கோயிலில் இறை வழிபாட்டில் முன்னுரிமை என்றாகிவிட்டது.

அந்தமிழால் நற்கலைகளை ஆய்ந்தறிந்த ஆழ்வார்களின் திவ்வியப் பிரபந்தங்களைப் பாடிப் போற்றுவதற்குக் கூட நீதிமன்றத் தீர்ப்புத் தேவைப்படுகின்றது. இப்படித் தாய்மொழிக்கும் ஏழை எளிய மக்களுக்கும் பயன்படாத வகையிலும் சமூக நீதிக்கும் பொருளும் பயன்படாத வகையிலும் திசை மாறிச் செல்லும் நம் தமிழகக் கோயில்கள் இன்றைய சமுதாயத்திற்கு, மனிதக் குலத்திற்குப் பயன்படும் வகையில் செயல்பட, தமிழகச் சான்றோர்கள் நல்வழி காட்டவேண்டும்.

காசியைப் போல் இறைவனை நாம் தொட்டு வழிபட விரும்பவில்லை. பண்டரிபுரம் போல் இறைவனை நாம் கட்டி (தழுவி) வணங்கவும் விரும்பவில்லை. தடையேதுமின்றி இறைவனாகிய எம்பெருமானை நாம் கிட்டி (நெருங்கி) வழிபடவே விரும்புகிறோம். அவன் எளியனாய் ஆயர்சாதியில் வளர்ந்தான்; கன்றுகாலிகளை மேய்த்தான்; அன்போடு யார் கொடுத்த பண்டமாயினும் வாங்கி உண்டான். வேற்றுமை பார்க்கவில்லை; உயர்வு தாழ்வு கருதவில்லை யானைக்கும் பானைக்கும் கூட வீடு பேற்றை வழங்கிய வள்ளல் அவன். ஆனால் அப்பரம்பொருளை இன்று ஏழை எளியவர்கள் கிட்டி வணங்கி வழிபாடு செய்ய எத்தனை தடைகள். இதற்கு யார் காரணம் என்று ஆராய்வதைவிட இழந்த இடங்களைப் பிடிக்கவும் உரிமைகளைப் பெறவும் சமுதாயம் சமயப் புரட்சியை மேற்கொள்ள வேண்டும். முயன்று வெற்றி பெறுவோம்.

*****

# திருக்கோயில் வழிபாட்டில் திருமுறைகளின் பங்கு.

4:3:1 சிவத்திரு அ. பிச்சைக் குருக்கள்.
பிள்ளையார்பட்டி 623 207

இமயம் முதல் குமரி வரையிலும் வெளிநாடுகளிலும் சிவபெருமானை — வழிபடும் பலப்பல திருக்கோயில்கள் உள்ளன. இவற்றுள் தமிழகத்துத் திருக்கோயில்கள் சிறப்புற்று விளங்குவதற்கு முக்கிய காரணம் நமது திருமுறைகளே என்பதை முதலில் உணர்தல் அவசியம். திருமுறைகள் சிவபெருமானின் திருவருட்கருணையால் நமக்குக் கிடைத்த பெரும்பேறு. வேத சிவாகமங்களை எவ்வாறு சிவபெருமானே அருளினார் என்று கருதுகிறோமோ அதேபோல் தமிழ் மறையாகிய திருமுறைகளையும் அவரே அருளியதை உணர்தல் முக்கியம்.. நமது சமயாசாரியப் பெருமக்களை அதிட்டித்து நின்றும், உள்ளிருந்து உணர்த்தியும், முதலெடுத்துக் கொடுத்தும் வெளிப்படுத்திய அருள் வாக்குகள். இவற்றை 'மதிமலிபுரிசை' எனத் தொடங்கும் திருவாலவாயான் திருமுகப் பாசுரத்தாலும் "எனதுரை தனதுரையாக" என்னும் ஆளுடைய பிள்ளை வாக்காலும் உணரலாம். திருக்கோயில் வழிபாட்டில் திருமுறைகள் பெரும்பங்கு வகித்ததாலேயே இன்றும் நாம் திருநீறு அணிந்து மகிழ முடிகிறது.

சிவபரம்பொருள் ஒன்றே முழுமுதற் கடவுள். அவரால் தான் நம்மை உய்விக்க முடியும். சிறு தெய்வ வழிபாடுகளால் முழுப் பயன்கள் விளையாது என்பதை திருமுறைகள் வலியுறுத்தும்.

"மற்றுமோர் தெய்வந்தன்னை உண்டென நினைந்தெம் பெம்மாற்கு
கற்றிலாதவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சுமாறே".

என்பது திருவாசகம். திருக்கோயிலில் நாம் வழிபாடு செய்கின்ற உருவமே பரம் பொருள் ஆகிவிடாது. இக் கடவுளைச் சுட்டிக் காட்டும் ஓர் அடையாளப் பொருள். இலிங்கம் என்ற சொல்லுக்கே அடையாளம் என்பது தான் பொருள். இவ்வடையாளம் உலகம் முழுவதும் பரந்த மனம்-வாக்குக்கு எட்டாத பரம்பொருளை நினைவூட்டுவது.

"காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய்
நீள்நாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம்"

(பெரி—சாக்கி. 8)

என்பது சேக்கிழார் வாக்கு. காண்கின்ற உருவத்தின் மூலமாய்க் காணாத அருவத்திடம் மனம் செல்ல வேண்டுமானால் அதற்கு உதவுவது திருவுருவம் அதன்

வழிபாடும். நமது திருமுறை ஆசிரியர்கள் திருக்கோயில் உள் உறையும் சிவன் தன்னைச் சிவனெனவே கண்டு மகிழ்ந்தனர்.

"ஆர் அவன் திருவுரு. அவன் அவனெனவே" என்பது திருவாசகம். வழிபாடு மெய்யுணர்வு அன்போடு நிகழ்தலே பேரின்பம் தரவல்லது. உயிர்கள் எல்லா வினைகளையும் நீக்கி சிவஞானம் பெறுவதற்கு வழிகாட்டுவதே வழிபாடு எனப்படும். இதனை வடமொழியில் பூஜை என வழங்குவர். இந்தப் பூஜைகள் ஆன்மார்த்தம், பரார்த்தம் என இரு வகைப்படும். தன் பொருட்டு வழிபடுதல் ஆன்மார்த்தம் எனவும், உலக நலன் கருதித் திருக்கோயில்களில் திருவுருவங்களை நிறுவி வழிபடுதல் பரார்த்தம் எனவும் கூறப்படும். பரார்த்த வழிபாட்டை நிகழ்த்துபவர்க்கும் இறைவனிடம் உள்ளன்பு வேண்டும். திருக்கோயிலில் சிவசிந்தனை தவிர மறு சிந்தனை கூடாது என்பதைத் திருமுறைகள் நமக்குக் காட்டுகின்றன. கண்ணப்பருக்கு ஏற்பட்ட மெய்யுணர்வும் தவிப்பும் சிவகோசாரியாருக்கு ஏற்பட-வில்லை.

திருவைந்தெழுத்தையும் திருமுறைகளையும் திருக்கோயிலில் ஓதுவதால் அளவற்ற பயன் கிடைக்கும் என்பதை உறுதியாக நம்பவேண்டும். வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது திருவைந்தெழுத்தே. நமச்சிவாயவே ஞானமும் கல்வியும் என உணரும் நிலை வேண்டும். இவை எல்லாம் திருக்கோயில் வழிபாட்டுக்கு மட்டுமின்றி ஆன்மார்த்த வழிபாட்டுக்கும் திருமுறைகள் காட்டும் வழியாகும்.

திருக்கோயில்களில் நடைபெறும் திருவிழாக்களையும் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாக்களையும் மக்கள் தரிசித்து மகிழ வேண்டும் என்பதைத் திருமுறைகள் வலியுறுத்துகின்றன. இதனை,

"பெருஞ்சாந்தி காணாதே போதியோ"
"கார்த்திகை விளக்கீடு காணாதே போதியோ"
"தைப்பூசம் காணாதே போதியோ" — என வரும் திருமயிலைத் தேவார வரிகளால் அறியலாம்.

திருமுறைகளைத் திருக்கோயிலில் ஓதுபவர்களை ஓதுவார்கள் என அழைப்பர். ஓதுவது என்றாலே, உள்ளத்தின் உணர்வுகளை ஒன்று கூட்டி தெய்வீக உணர்வுடன் வெளிப்படுத்துவது தான். படிப்பது என்பது வேறு, ஓதுவது என்பது வேறு. வேதம் ஓதுதல் போல் திருமுறைகளையும் திருக்கோயில்களில் ஓதுவதால் பெரும் பயன் விளையும். நமது கோயில்களின் நான்குமாட வீதிகளிலும் திருவிழாக் காலங்களிலும் திருமுறைகளை ஓதுவார்கள் ஓதி வந்தனர். மாதம் மும்மாரி.

பொழிந்து வந்தது. காவிரி முதலிய நதிகள் நீர்நிறைந்தோடும் நாடு முப்போகம் — விளைவித்தன. 'ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்' என்று கூறியதே — திருமுறைகளை ஓதாமல் ஒரு நாளும் வீண் செல்ல வேண்டாம் என்ற கருத்தின் அடிப்படையில் தான். தேவார திருவாசகங்கள் என்றும் உயிர்த்துடிப்பு உள்ளவை. புற்றீசல்கள் போல் அவ்வப்போது தோன்றி மறையும் பாடல்கள் போன்றவையல்ல என்பதை உணர்ந்த பக்தியுடன் ஓதுவார்க்கு எல்லா நாட்களும் இன்பமயமானவையே.

இறைவன் திருக்கோயிலில் வாழ்த்துப் பொருளாக மட்டுமின்றி வாழ்வுப் பொருளாக அடியார்களுக்காக இரங்கி அருள்செய்த பெருமை திருமுறைகளுக்கு உண்டு. முழவு ஒலியும் யாழ் ஒலியும் கூத்தொலியும் ஏத்தொலியும் கூடிய விழா மலி விண்ணளவு செல்லும் புகழ்மிக்க திருவாரூர் வீதிகளில் சுந்தரருக்காக நடந்த செயல்களை நினைத்து மகிழலாம். மேலும் சுந்தரருக்காகத் திருக்கச்சூரில் இல்லங்கள்தோறும் உணவுக்கு அலைந்ததையும், மணிவாசகருக்காக் நரியைக் குதிரையாக்கிப் பின்னர் மண் சுமந்த பெருமைகளையும் திருமுறைகளால் அறிய முடிகிறது. நீற்றறையில் வேகாதிருந்ததையும், முதலைவாய்ப் பிள்ளையை அழைத்ததையும், எலும்பைப் பெண்ணாக்கியதையும் இன்னும் பல அற்புதங்களையும் இறைவன் திருமுறை வாயிலாக நிகழ்த்தியுள்ளதை உணரலாம்.

திருக்கோவிலுக்குச் செல்பவர்கள் கோள்களை மட்டும் வழிபட்டுத் திரும்பும் அறியாமையைக் காண்கிறோம். திருநள்ளாற்றுக்குச் செல்பவர்கள் தர்ப்பாரண்யேசுவர மூர்த்தியை வழிபடுதல் குறைவு.

"வினை விளைக்கும் கேடுபடாத் திறமருளி
கோளாய நீக்குமவன் கோளிலி எம்பெருமான்"

என்பது திருமுறை. பரம்பரைக்கும் நல்லதையே வழங்கும் சிவன் பெருங்கருணையை நமக்குக் காட்டுபவை திருமுறைகளே. 'திருநெடுங்களப் பதிகத்தை ஓதி இடர் களையப் பெற்ற சிவனடியார்கள் இன்றும் உள்ளனர். மழையை அழைக்கவும் பெருமழை தவிர்க்கவும் திருமுறைகளால் முடிந்தது. திருக்கோயில்களைத் தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகவே அப்பர் உழவாரப் பணி மேற்கொண்டார். இவையெல்லாம் திருக்கோயிலையும் திருமுறைகளையும் பிரித்துப் பார்க்க முடியாது என்பதை வலியுறுத்தும்.

திருக்குறிப்புத் தொண்டர், திருநீலகண்டர், திருநாளைப்போவார், ஆயர் போன்ற பல்வேறுபட்ட சாதியில் தோன்றியவர்களை ஒரே சமமாகத் திருக்கோவில்களில் இடம் பெறச் செய்த பெருமை திருமுறைகளுக்கே உரியது. பக்தியின் எல்லையாகிய கண்ணப்பரையும், நந்தனாரையும் ஆலயப் பிரவேசம்

செய்து மகிழ்ந்த வரலாறுகள் திருமுறைகளில் நாள் பெரிதும் காணப்படுகிறது.

"பாத்திரம் சிவமென்று பணிதிரேல் மாத்திரைக்குள் அருளும் மாற்பேறரே" என்பது அப்பர் பெருமான் திருவாக்கு. "சிவநெறிப்பால் அன்புடையவர் ஆவுரித்துத் தின்று உழலும் புலையராயும் அவரே எம் தெய்வம்" என்பதும் அப்பர் வாக்கே.

உலகில் உள்ள பல்வேறு சமயங்களிலும், பல்வேறு நிலைகளில் வழிபடப் பெறும் எல்லாத் தெய்வங்களாகவும் நின்று மன்னுயிர்க்கு அருள் வழங்குபவன் சிவபெருமானே என்பதை நமது திருமுறைகள் தெளிவுபடுத்துகின்றன.

"எங்கேனும் யாதாகிப் பிறந்திடினும் தன்னடியார்க்
இங்கேயென்றருள் புரியும் எம்பெருமான்"

என சம்பந்தரும்

"ஆரொருவர் உள்குவார் உள்ளத்துள்ளே
அவ்வுருவாய் நிற்கின்ற அருந்தோன்றும்"

என நாவுக்கரசரும்,

"அறிவினால் மிக்க அறுவகைச் சமயம்
அவ்வவர்க்கே ஆரருள் புரிந்து"

என சுந்தரரும் கூறுவதைக் காணலாம்.

இதனால் திருக்கோவில் உள்ளிருக்கும் சிவபெருமான் கருதுவார் கருதும் உருவமாய் வெளிப்பட்டு அருள்வான் என்பது உறுதியாகிறது.

"அர்ச்சனை பாட்டேயாகும்" என்பதற்கிணங்க திருக்கோயில்களில் தாம் மொழியால் மெய் உணர்ந்து வழிபட, திருமுறைகளில் எளிய பதிகங்களைக் — காணலாம். திருவிடைமருதூர் ஈசம் "பனிமலர்க் குழற்பாவை நல்லாரினும் தனிமுடி கவித்தாளும் அரசினும் இனியன்" எனக் காட்டுவதும், "ஆடிப்பாடி அண்ணாமலை கைதொழ ஓடிப்போம் நமது உள்ள வினைகளே" எனக் காட்டுவதும் தமிழ் மறையே.

திருக்கோவில்களில் எளிய முறையில் திருமணங்கள் நிகழ்ந்த பல வரலாறுகளையும் திருமுறைகள் காட்டுகின்றன. சிவபெருமான் ஆதிசைவ மரபில் தோன்றிய ஆலால சுந்தரருக்கு, சடங்கவி சிவாசாரியரின் மகளை மணம் முடிக்காமல் தடுத்தாட் கொண்டான். அவர்தம் குலத்தைச் சாராத பரவையாரைக் காதல் மணம் புரிய உதவியும் செய்தான்.

திருமுறைகள் திருக்கோவில் வளர்ச்சிக்கு எக்காலத்திலும் பெரும்பங்கு அளிக்க வேண்டியவைகளே. ஆனால், தற்போது அதன் பங்கு சிறிது குறைந்து காணப்பெறுகிறது. அதற்குப் பல காரணங்கள் இருந்தாலும் சிவபரம்பொருளை முழு முதற்பொருளாக ஏற்றுக் கொள்ள இயலாத கொள்கைப் பிடிப்பற்றவர்கள்

திருக்கோவில்களில் ஒலிக்கச் செய்வதும் இல்லை. திருநீற்றை அணிந்து கொண்டு வேறு பல நாமங்களை உச்சரிப்பவர்கள் எங்ஙனம் திருக்கோவில் வளர்ச்சிக்குப் பாடுபட முடியும்? திருமுறைகளையும் வேதசிவாகமங்களையும் பேணிக் காக்க அவதரித்தவர்கள் எனக் கூறிக்கொண்டு திருக்கோவில் வழிபாட்டைத் தகர்ப்பதால்தான் நம் சமயத்திற்கு ஒரு தாழ்வுற்ற நிலை. நமது திருக்கோவில்களில் விளக்குகள் இல்லை. வலம் வரும் வீதிகளெல்லாம் முட்புதர்கள். நல்ல மெய்யுணர்வை வழங்கும் இனிய ஒலிகள் இல்லை. இவை மாற வேண்டும். திருக்கோயில்கள் தோறும் திருமுறை ஓதுவோர் அதற்குரிய தகுதியுடன் விளங்க வேண்டும்.

ஏறத்தாழ இளைய தலைமுறையில் பண்முறையுடன் ஓதுபவர்கள் பெரும்பகுதி குறைந்து விட்டனர். மக்களுக்கு மன அமைதியும் மனமகிழ்ச்சியும் தரவல்ல ஒரே இடம் திருக்கோவில்கள். அங்கே திருமுறைகள் ஓதப் பெற்றால்தான் முழுப் பயனும் மக்களைச் சென்றடையும். எதற்கும் பயந்தே வாழும் சூழல், மன நிம்மதியையும் மகிழ்ச்சியையும் போக்கி விடுவதை உணர முடிகிறது. மக்கள் வாழ்வாங்கு வாழ, திருக்கோயில்கள் தோறும் கூட்டு வழிபாடுகள் மிக அவசியம். கூட்டு வழிபாடுகளும் தாய்மொழியில் நிகழ வேண்டும். அதிலும் அருளாளர்கள் காட்டிய திருமுறைகளே பங்கு வகிக்க வேண்டும். நமக்கு நிரந்தர மகிழ்ச்சியும் தரவல்லவை திருமுறைகளே.

வைணவத் திருக்கோயில்களைச் சார்ந்த அர்ச்சகர் பெருமக்கள் நாலாயிரத் திவ்யப்பிரபந்தத்தை அன்றாடம் திருக்கோயில்களில் ஓதி வருவதை அறிவோம். அதுபோல சைவத் திருக்கோவில் அர்ச்சகர் பெருமக்கள் அனைவரும் திருமுறைகளையும் தினமும் ஓதி வழிபட வேண்டுமென்பது பேரவா.

திருக்கோவில் வழிபாட்டில் திருமுறைகள் பெரும் பங்கு வகித்து வந்தன என்பது உண்மை. தற்போது பெரும் பங்கு வகிக்க வேண்டிய நிலை. எதிர்காலத்தில் பெரும் பங்கு வகிக்கச் செய்வோமாக.

***

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

# புராண இலக்கியம்

டாக்டர் ச. சாம்பசிவன், தமிழ் இணைப் பேராசிரியர்,
4:4:1 அஞ்சல்வழிக் கல்வித்துறை, மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்
மதுரை - 21.

****

## முன்னுரை:

இலக்கியம் பலவகைப்படும். செய்யுள், உரைநடை எனப் பொதுவாக இருவகைப்படும். எனினும் காப்பியம், சிற்றிலக்கியம், நாட்டுப்புறப்பாடல், புராணம், நாவல், சிறுகதை எனப் பல உட்பிரிவுகளாகவும் பகுக்கலாம். இவற்றுள் 'புராண இலக்கியம்' பற்றி ஒரு சிறிது ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

## 'புராணம்' – ஒரு விளக்கம்:

"புராணம் வடசொல். புரா – நவம் என்னும் இரு சொற்களின் இணைப்பே 'புராணம்'" என்பர் அறிஞர்[1]. பழமையாகவும், புதுமையாகவும் இருப்பதால் புராணம் எனப்பட்டது. "புராணம் என்னும் சொல் பழமை மரபுடையது என்னும் பொருட்டு, அதனை ஈட்டுப் பழமை சார்ந்த வரலாறு-களுடைய நூலுக்கேற்றி வழங்கலாயிற்று" என்பர் திருநாராயணையங்கார்[2]. "எது தொன்றுதொட்டு இன்றுவரைக்கும் பரவி இருக்கின்றதோ அதுவே புராணம்" என்பது வாயு புராணம்[3]. "பழமை, பழங்கதை, 64 கலையுள் ஒன்று, வியாசரால் சொல்லப்பட்ட நூல்கள்" என்று விளக்கும் தமிழ் அகராதி - (லெக்சிகன்)[4]. புராண நூல்களில் அடங்கியுள்ள கருத்துக்கள் பழமையானவை; ஆயினும் கேட்கக் கேட்கப் புதியனவாகத் தோன்றும் எனவே புரா நவம் எனப்பட்டது[5]. 'புராணங்களுக்குரிய' ஐவகை இலக்கணம் கூறுவர் பிற்காலத்தார்: (1) சர்க்கம் (சிருட்டி). (2) பிரதி சர்க்கம் (அழிந்த மறுபடி உண்டாக்குதல்). (3) வம்சம் (தெய்வ பரம்பரை). (4) மன்வந்தரம் (மனுக்களின் காலம்). (5) வம்சியாரு (அரச வம்ச வரலாறு)[6].

சுருங்கச் சொன்னால், "பழைய மரபினைப் – பழைய வரலாற்றினைத் தெய்வங்களோடு தொடர்புபடுத்திக் கதைகள் வாயிலாகத் தெரிவிப்பது புராணம்"[7] எனலாம்.

## தமிழ்த் தொன்மை:

கதை கூறும் பாங்கு, உலக மொழிகள் பலவற்றிலும் காணப்படுவதொன்று. தமிழ் மொழியிலும் இதனைக் காணலாம். சாலப் பழமைசான்ற

4:4:2

தொல்காப்பியத்தில் செய்யுள் உறுப்பு பற்றிய நூற்களுள் 'தொன்மை' என்பதொன்றையும் சுட்டுகின்றார் தொல்காப்பியர்.

"தொன்மை தானே சொல்லுங் காலை
உரையொடு புணர்ந்த <u>பழமை மேற்றே</u>"[8]

என்பது அவர் நூற்பா. "பழமையாகிய பொருள்மேல் வருவது தொன்மை" என்பர். இதற்கு உரையாசிரியர் 'இராம சரிதம், பாண்டவ சரிதம்' என எடுத்துக்காட்டுத் தருவர். இராமாயணமும், பாரதமும் காப்பியங்களேயாயினும், இவை பழைய வரலாற்றினைத் தெய்வத்தோடு தொடர்புபடுத்திக் கூறும் புராணக் கூறுகளைத் தம்முள் அடக்கியுள்ளவை எனலாம்.

மேலும், தொல்காப்பியர் கூறும் 'உரை' என்பதற்கு இருபொருள் கொள்ளல் பொருந்தும். (1) பாட்டுக்கிடைச் சொல்லப்படும் உரை (பரவுரை, பொழிப்புரை போல்வன) (2). தொன்றுதொட்டுப் புராணிகர்கள் சொல்லிவரும் வாயுரை.

தலைவனைப் பிரிந்தவாடும் தலைவிக்குச் செவிலித்தாயர், பழங்கதைகள் கூறிப் பொழுதுபோக்கினர் எனும் கருத்து 'நெடுநல்வாடை'யில் வருகின்றது[9].

எனவே, 'புராணம்' என்பதைத் தமிழில் 'தொன்மை' எனக் கூறலாம்.

<u>வடமொழியில் 'புராணம்':</u>

'புராணம்' என்ற சொல், உபநிடதங்களிலும், சூத்திரங்களிலும் காணப்படுகின்றது. அதர்வண வேத காலத்தில், புராணங்கள் சிறந்த இலக்கியங்களாகக் கருதப்பட்டிருக்கின்றன. மகா பாரதத்தில் புராணங்களின் பெயர்கள் கூறப்பட்டிருக்கின்றன. இந்திய நாட்டின் பண்டைய இலக்கியங்களை (1) வேத நூல்கள்-(2) இதிகாச – புராண நூல்கள் என இரண்டாகப் பிரித்தனர். மகா புராணம்-18; உப புராணம்-18 என்பர். கி.மு. 4ஆம் நூற்றாண்டில், கௌடில்யர், தமது 'அர்த்த சாஸ்திரத்தில்', "இளவரசர்கள் கட்டாயமாகக் கற்க வேண்டிய நூல்களில் புராணமும் ஒன்று" என்கின்றார்[10].

"உலகில் தோன்றிய மக்களுயிர்கள் நன்கு தேர்ந்து உய்யும் பொருட்டு இறைவன் அருளிய கலைகளின் தொகுதியை 'அட்டா தசவித்தை' என ஆன்றோர் வழங்குவர். அவ் வித்தையாவன:- வேதம்-4; வேதாங்கம்-6; உபாங்கம்-4; உப வேதம்-4. இவற்றுள் புராணம் என்பது உபாங்கம் எனும் பகுதியைச் சார்ந்ததாம் உரைக்கப்படும்[11].

'புராணம்' என்ற சைனர்கள் வழங்குவது பிராகிருத மொழியில் உள்ள

'ஆதி புராணம்' ஆகும். அதில், தீர்த்தங்கரர்கள் வரலாறு, அரசர்கள் கதை செப்பப்பட்டுள்ளன[12].

வடமொழி வாணர்கள், இலக்கியங்களை மூன்றாகப் பகுத்துள்ளனர்: (1) கட்டளையாகச் 'சத்தியத்தைப் பேசு, தருமத்தைச் செய்வாயாக' என்று விதிப்பனவாகிய வேதங்கள்; இவை 'பிரபு சம்மிதை' எனப்படும். (2) உயிர்த் தோழன் ஒருவன், நல்லது இதுவென்று, நமக்கேற்ற உண்மை வழிமுறைகளை, ஒரு கதையை அடிப்படையாக வைத்துத் தெளிவுபடுத்துவதுபோலப் பழைய வரலாறுகளைக் கொண்டு நீதிகளை விளக்குவன. இவற்றைச் சார்ந்தன, புராண இதிகாசங்களாகிய சுகிருத் சம்மிதைகளாகும். (3) மனைவிபோல் அன்பையும் இன்பையும் அடியாகக் கொண்டு நீதிகளை அறிவுறுத்துவன. இப்பகுப்பைச் சார்ந்தன காவியங்களும் நாடகங்களுமாகிய காந்தா சம்மிதைகளாகும். புராணங்கள் உயிர்த்தோழன்போல், உற்ற இடத்து உதவுவனவாம்.[13]"

<u>தமிழில் 'புராணம்' என்ற சொல்லாட்சியும் இலக்கணமும்:</u>

தொல்காப்பியர் கூறிய 'தொன்மை' எனும் சொல், வழக்கில் மிகுதியாகப் பயில்ப் பெறவில்லை. புராணம், புராதன் எனும் சொற்கள் ஆட்சிபெற்றன. பழைய இலக்கண மரபைக் கூறும் ஒரு நூல் '<u>மாபுராணம்</u>' எனப்படுவதாக நச்சினார்க்கினியரின் தொல்காப்பிய உரையால் தெரியவருகின்றது. எல்லாம்வல்ல இறைவனைப் 'புராணன்' என்றனர்[14]. வயது முதிர்ந்தோனையும் 'புராணன்' என்றனர்[15]. அப்பர் பதிகங்களுள், ஒரு குறுந்தொகைப் பதிகம் '<u>இலிங்க புராணம்</u>' என்பர்; மற்றொன்று பழம் பஞ்சுரப் பண்ணில் 'தச புராணம்' என்னும் பெயர்பெற்றமை இவண் குறிக்கத்தக்கது. திருவாசகத்தின் முதற்பகுதி 'சிவ புராணம்' என்பதை அனைவரும் அறிவர். கி.பி. 10ஆம் நூற்றாண்டில் தோன்றியவை புராண சாகரம், சாந்தி புராணம்[16]. இதன் பின்னர்த் தோன்றிய புராண நூல்கள் பலவாம்.

'புராணம் என்பதற்குரிய சரியான இலக்கணத்தை' தமிழ் இலக்கண நூல்கள் கூறியனவாகத் தெரியவில்லை. எனினும், யாப்பருங்கல விருத்தி ஒழிபியலில், "விளம்பலத்தியற்கை' எனும் தொடர் காணப்படுகின்றது. இதற்கு மு. அருணாசலம், "விளம்பலம் என்பது, இன்று நாம் கருதுகிற புராணம் போன்ற ஒரு நூலின் பொருளைக்கொண்டு செய்யப்பட்டது என்று தோன்றுகிறது" என்கின்றார். வச்சணந்தி மாலையில், "குலவரவு காரிகை யாப்பில் புராணமேயாம்" என்று கூறப்படுவதைக்கொண்டு, காரிகை யாப்பில்

"நூலாரவு" ஆனவை முடிமரபு, அரச மரபு ஆகியவற்றைப் பாடினால் அது புராணம் எனப்படும் என்று அறியமுடிகிறது. திவ்யப் பாட்டியலில், "அறம் பொருள் இன்பம் வீடெனும் நான்கும் பொருளாகப் பெறுவன காப்பியமாகும் - புராணமாகும்" என்று கூறப்பட்டுள்ளன[17]. எனவே காப்பியமும் புராணமும் ஒன்றெனக் கூறும்.

தன்னேரில்லாத் தலைவனைப் பற்றி உரைப்பதே காப்பியத்தின் இலக்கணம்[18]. 'தன்னேரில்லாத் தலைவன்' இறைவன் ஒருவனேயாதல் வேண்டும். அவனைப்பற்றி உரைப்பன புராணங்கள்-காப்பியங்கள். பாரதமும் இராமாயணமும் முறையே, கண்ண பிரானையும், இராம பிரானையும் பற்றி எழுந்தன. காலப் போக்கில், தெய்வ அருள் பெற்ற அருளாளர்களின் மாண்பு உரைப்பனவும், மக்களிலே மிக உயர்ந்தோரைப்பற்றி உரைப்பனவும் காப்பியங்களின் இயல்பாயின. இவ்வகையில் எழுந்தவை பெரிய புராணம், சீவக-சிந்தாமணி போல்வன. இறைவனைப் பற்றியல்லாத பிற காப்பியங்களிலும் புராணக் கதைகள் பல இடம் பெற்றுள்ளன. 'சீவக சிந்தாமணி'யைச் 'சீவக புராணம்' என்று கூறுவதும் இவண் உன்னத்தக்கது[19].

## சமய உணர்வால் எழுந்த 'பெரியபுராணம்':

மக்களை, விலங்கினின்று பிரித்துத் தெய்வ நிலைக்கு உயர்த்த இன்றியமையாது வேண்டப்படுவது 'சமய உணர்வே' என்பர் அறிஞர்[20]. இத்தகைய உயர்வு, சிந்துவெளி நாகரிகத்திற்கும் முற்பட்டே இருந்துவந்துள்ளது[21]. பண்டைத் தொல்காப்பியத்திலும் சமய உணர்வைத்-தமிழ் மக்கள் கொண்டிருந்தனர் என்-கருத்தினைக் காட்டக்கூடும்[22]. சங்கப் புலவர் பலர், தாம் பாடவந்த அக-புறப்பாடல்களில் சமய உண்மைகளைப் புகுத்தியுள்ளனர்[23]. சங்க இலக்கியங்களில் மட்டுமன்றி, அடுத்துத் தோன்றிய சிலப்பதிகாரம் போன்ற-வற்றிலும் சிவன்,-திருமால் பற்றிய செய்திகள் பேசப்படுகின்றன[24]. இவையெல்லாம் புராண, இதிகாசக் கால்வழியே வருவனவாம். பொதுமறை எனப் பேசப்படும் திருக்குறளிலும் 'எண்குணத்தான்' இயல்புகள்[25] சொல்லப்-பட்டமை அனைவரும் அறிந்ததே.

வாழையடி வாழையாக வந்த சமய உணர்வால் எழுந்த ஒப்பற்ற நூலே, 'பெரிய புராணம்'. இக்காலத்தே, சிறுகதை, நாவல் முதலானவற்றை மக்கள் விரும்பிப்படித்தல் போல், அக்காலத்தே புராணங்களை விரும்பிப்படித்தனர். அதனால்தான், தெய்வச் சேக்கிழார், 'அடியவர் புராணம்' என்பதுபோல் பெயர் சூட்டாமல், 'திருத்தொண்டர் புராணம்' எனப் பெயரிட்டார்[26]. கம்பரும், 'ஆசில் கொற்றத்து இராமன் கதை'

கருவூலமாகவே உரைக்கின்றார்[27]. நூலின் பெயர், 'பெரிய புராணம்' எனினும், அது, சேக்கிழாரின் 'செந்தொடர்க் காப்பியம்'[28]. தமிழ்நாட்டிற்கும் தமிழ் மொழிக்கும், தமிழினத்திற்கும் பெருநூல். "நாள்தோறும் பெரிய புராணத்தை ஒரு பாட்டுப் படித்துக் கொண்டால், மனம் அடங்கும்; மலம் கரையும்; அருள் முதிர்க்கும்: சிவானந்தத் தேன் சொட்டக் கிடைக்கும்" என்பார் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள்[29]. பெரிய புராணத்தைத் தமிழ்த் தேசியக் காப்பியம் என்பாரும் உளர்; உலகப் பொதுநூல் என்று உரைப்பாரும் உளர்[30]. பெரிய புராணம் ஓர் இலக்கியக் கருவூலம் என்றால் மிகையன்று.

<u>பக்தியும் புராணமும்:</u>

பக்திக்கும் புராணத்திற்கும் நெருங்கிய தொடர்புண்டு. ஒன்றினின்று ஒன்று பிரிக்க இயலாதது.- பக்தியால் பாடுவது புராணம்; புராணத்தால் விளைவது பக்தி. பெரியபுராணம் போன்ற நூல்களைப் படிக்கும் ஒருவர்க்குப் பக்தி உணர்வு தோன்றல் உண்டு. திருவாசகத்தைப் படித்துக் கண்ணீர் சிந்தி, உள்ளம் உருகி, இறைவனின் பேரருட்திறத்தை நினைந்து, தம் வாழ்வை ஒளிமயமாக்கியோரும் உண்டு[31]. பக்தியால் இறப்பைப்பற்றிய அச்சமும் இல்லாமற்போகும் என்பர் அடியார்[32].

சங்க இலக்கியங்களில் திருமுருகாற்றுப்படையும், பரிபாடலும் சிறந்த பக்திப் பாசுரங்களாக விளங்குகின்றன. அடுத்த நாயன்மார்களும், ஆழ்வார்களும் பக்தியை வளர்த்தனர். அண்மைக்காலத்தே தாயுமானவர், இராமலிங்க அடிகளார், பாரதியார் போன்றோர் பக்திப் பயிர் வாடிவிடாமற் காத்தனர்.

மேனாட்டு இலக்கியங்களிலும் பக்திப் பாக்களைக் காணலாகும். "ஹோமர் வாழ்ந்த காலத்தில், அதனையடுத்தும் இயற்றப்பட்ட சில பாடல்களே கிரேக்க மொழியின் தொன்மை மிக்க பக்திப் பாடல்களாகும்... இவை 'ஹோமர் காலப் பாசுரங்கள்' ( Homeric Hymns ) என்றழைக்கப்பட்டன" என்பர் அறிஞர்[33].

<u>தமிழில் 'தலபுராண' இலக்கியம்:</u>

"புராண மரபுக் கதை என்பது, மனிதர், மனிதனுக்கு அப்பாற்பட்டவர் ஆகியோரின் அடிப்படைக் கூறுகளை உள்ளுறை குறியீடாகக் கொண்டு விளங்கும் கதை அல்லது கதைத் தொகுதியாகும்[34]. இத்தகைய புராண மரபுக் கதைகளை உள்ளடக்கியதே 'தலபுராணம்'. தமிழகத்தைப் பொறுத்தமட்டில் 'புராணம்' என்றதுமே 'தல புராணங்களே'. நினைவில்

எனும். அத்தனையையும் தலபுராணங்கள் (ஏறத்தாழ 600க்கும் குறையாமல்) பல்கியுள்ளன[35]. இவை, தமிழிலக்கியத்தில் சிறப்பானதோர் இடத்தைப் பெற்றுள்ளன.

தமிழ் இலக்கிய வரலாற்றை நோக்கினால், காலந்தோறும் வெவ்வேறு வகை இலக்கிய வடிவம் உருவானமை தெரியவரும். சங்க காலத்தே 'பாட்டும் தொகை'யும்; அடுத்துக் 'காப்பிய' காலம்; அதனையடுத்துப் 'பத்திமைக் காலம்; பின்னர்ப் 'புராண இலக்கிய' காலம்; அடுத்துச் சிற்றிலக்கியம்-தனிப்பாடல்கள்-உரைநடை-சிறுகதை-நாவல்-புதுக் கவிதை எனப் பல்வேறு இலக்கிய வடிவங்களைக் காணலாம்.

"வரலாறு அறியாத காலத்திலிருந்தே, மக்கட் குலத்தை ஒட்டி அலைந்து வருகின்ற உணர்ச்சிக்குப் பொருளாகின்ற——கண்டறிதற்கும் கருதற்கும் ஒண்ணாத அந்தக் கடவுளையே மக்கள் முன்னிலையில் கொணர்ந்து காட்டுகின்ற ஒப்பற்ற தெய்வக் கருவிகளே நம் புராணங்கள்" என்கிறார் பொ.வே. சோமசுந்தரனார்[36].

தலபுராணம் பாடுதல் என்பது மிகப் பிற்காலத்தது என்றாலும், திருத்தலங்கட்குப் புராணப் பெருமைகளும் வழக்கு நெடும் பல்லாண்டுகட்கு முன்பே வந்துவிட்டது. தேவாரம் பாடிய மூவரும், பல திருத்தலங்கட்குப் புராண - காப்பியப் பெருமையினைக் குறிப்பிட்டுப் பாடுதல் காணலாம். அப்பர் தேவாரத்தில் மட்டும் 55 புராண மரபுக் கதைகள் இடம் பெற்றுள்ளன என்கிறார் ம.சா. அறிவுடைநம்பி[37].

புராணம், "உள்ளதைக் கூறும்; உள்ளதைப் புனைந்து கூறும்; இல்லாததை இருப்பது போலவும் கூறும்". புராணம் புனைந்துரையா? வரலாறா? இரண்டும் கலந்த ஒன்றா எனின், 'இரண்டும் கலந்த ஒன்று' என்றே கூறுகிறார் ஞா. நம்பி ஆரூரன்[38].

'பழங்கதை' அல்லது 'தொன்மம்' பற்றி ஆராயும் ஒப்பீட்டறிஞர்கள், "தொன்மங்கள் ( Myth ) நம்ப இயலாதனவாக இருக்கலாம்; கற்பனையிலிருந்து வெளிப்போந்த வினைபொருளாக இருக்கலாம்; ஆயினும் அவை படைத்தறியும் "உலகத்தையும், உள்ளார்ந்த உணர்வு உலகத்தையும் இணைக்கும் திண்ணிதின் உளவியல் தத்துவத்தின் அடிப்படையில் எழுந்தவை" என்பர்[39]. இக்கூற்றுத் தலபுராணங்கட்கும் பொருந்தும்.

தமிழில் புராண நூல்கள் பெருகுதற்குக் காரணமாயிருந்தது சமண சமயமே என்பர் தமிழறிஞர்[40]. சமணர், மக்களை ஈர்த்தற்கு 'மேரு மந்தர புராணம்' போன்றவற்றைத் தமிழில் யாத்தனர். அவர்களைப் பின்பற்றிச் சைவ, வைணவர்கள் தமிழ்ப் புராணம் பாடினர். இம்மரபைப்

பிற்காலத்தில் சிறிதே, இஸ்லாமியப் புலவர்களும் 'புராண நூல்களை' இயற்றினர் என்பதும் குறிப்பிடத்தக்கது[41].

தமிழ்ப் புராண வேறுபாடு (1) வடமொழிப் புராணத் தழுவல் (2) தமிழ்க்கே உரிய தல புராணங்கள் ஆகியன[42]. வடமொழியில் உள்ள புராணங்களைத் தமிழில் பாடும் முயற்சியால் உருவான பனுவல்கள், கச்சியப்ப சிவாசாரியார் ஏறத்தாழ 10,000க்கு மேற்பட்ட செய்யுளால் பாடிய 'கந்தபுராணம்', செவ்வைச் சூடுவார் ஏறத்தாழ 5,000 பாக்களால் பாடிய 'பாகவதம்' இவற்றைக் குறிப்பிடலாம்[43]. தமிழ்த் தலபுராணங்களுள் காலத்தால் முற்பட்டவை இரண்டு. முதல் குலோத்துங்கசோழன் காலத்தில் வீரைத் தலைவன் பரசமய கோளரி என்பவன் இயற்றிய திருப்பாதிரிப் புராணம்-2: (1) அட்டாதச புராணம். (2) கன்னிவன புராணம். ஆனால் இவ்விரண்டும் கிடைக்கவில்லை[44]. தலபுராணம் சீரும் சிறப்புமாக எழுந்தது கி.பி.14ஆம் நூற்றாண்டில்தான். அக்காலத்தில் தோன்றிய உமாபதி சிவம், 'கோயிற் புராணம்' என்ற அரிய நூலைச் செய்தார்.

நெல்லைத் தமிழ் சைவத் திருமடங்களின் தோற்றத்தால் புராண நூல்கள் பல எழுந்தன. 17ஆம் நூற்றாண்டில், தல புராணம் பல பாடிப் பெருமை பெற்றவர் சைவ எல்லப்ப நாவலர்[45]. அதற்குப் பின் அக்காலத்தே வாழ்ந்த மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை 22 தலபுராணங்கள் பாடிப் பெருமை கொண்டார்.

தமிழ்ப் புராண இலக்கியத்தை 4 வகையாக வகைப்படுத்துவர்: (1) பெரியோர் வரலாறு உரைப்பன (2) இறைவனின் திருச்செயல்களைக் கூறுவன. (3) இறைச்செயலை ஒரு திருத்தலத்தோடு இணைத்துச் சொல்வன. (4) விரதங்கள், தலங்கள், பருவங்கள் ஆகியவற்றைச் சிறப்பித்துப் பாடுவன[46].

தமிழ்ப் பெருமக்கள், திருக்கோயில் வழிபாட்டைக் கடமையாகக் கொண்டிருந்தனர். 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்று சொல்வழக்கு வாழ்ந்து காட்டினர். இறைவன் எங்கும் நிறைந்திருக்கின்றபடி என்றும் நீக்கமற நிறைந்திருப்பவன் என்றாலும், ஆவின் மடியிலே பால் சுரப்பது போல், திருக்கோயிலில் எழுந்தருளியிருந்து அருள் சுரக்கின்றான்[47]. 'ஆலயந்தானும் அரன் எனத் தொழுமே' என்பது சிவஞானபோதம்[48].

'புராண நூல்கள் இலக்கியம் ஆகுமா?' என்னும் கேள்வி சில நேரத்தில் எழக்கூடும். 'இலக்கியம்' என்பதற்கு மேலைநாட்டறிஞர் கூறும் விளக்கத்தை நோக்கினால் இவ்வினாவிற்கு விடை கிடைக்கும். "இலக்கியம் என்பது சிறந்த கருத்துக்கள் அடங்கிய நூல் என்பர் எமர்சன். "படிப்போர்க்கு

4:4:3

இன்பம் தரும் வகையில் நன்றாக்கமைந்த அறிஞர்கள் தம் உணர்ச்சிகளையும் கருத்துக்களையும் முறைப்படுத்தி எழுதுவது இலக்கியம்" என்பர் ஸ்டாபோர்டு ப்ரூக்[49]. "பொதுவாக மக்களைக் கவரும் வகையில் அமைந்த வடிவம் இன்றியமையாததாகி, அதன் வாயிலாக இன்பம் நல்குவது இலக்கியம்" என்பர் டபிள்யூ.எச்.அட்சன்[50]. சிறந்த கருத்துக்களும், உயர்ந்த நீதிகளும் கொண்டு படிப்போர்க்கு அரா இன்பம் நல்கிப் பாமர மக்களும் தம் உள்ளத்தைப் பறிகொடுக்குமளவில் கற்றுவல்ல பெரும் புலவர்களால் உருவாயினவே புராண நூல்கள்.

"வார்கொண்ட கொங்கையெனும் கோடு தன்னால்
வடிவேலர் பன்னிருதோள் வரையைப் பாய்ந்த
தார்கொண்ட கடம்பதனை யுழக்கி யோகத்
தற்பரனைப் படிந்திறைவர் தடங்கண் வண்டின்
போர்கொண்ட விழிக்கருணை மதத்தை யூற்றிப்
பொருபடையா மெய்வினையைப் பொடித்த நாளும்
பார்கொண்ட பரங்கிரிவாழ் தெய்வ யானை
பதமலரை யிதயமலர் பதித்து வைப்பாம்"[51]

எனும் திருப்பரங்கிரிப் புராணப் பாடலில் கற்பனை நயம் அமைந்துள்ளமை அறிந்தின்புறலாம்.

"மடுக்கும் காலையிற் புறைய வாங்கியும்
விடுக்கும் கால மிதப்ப நல்கியும்
அடுக்கும் செல்வமின் னரசு மேசற
எடுக்கும் பன்பினர் யாரு மென்பவே"[52]

எனவரும் தணிகைப் புராணத்தில், மக்கள் கடைப்பிடிக்கவேண்டிய நீதி — உரைக்கப்பட்டமை அறியலாம்.

"அடியர் போல வெம்பி யிலையுதிர்ந் தயிரக் காரைக்
கடியர் போல வெம்புங் பழமரந் தழைத்த நீங்கி
வடியர் போலக் கண்ணீர் வாரவெம் பசந்த வெயில்
நீடிய ரவர்போற் பூத்த நெருஞ்சிக மரங்க ளெல்லாம்"[53]

என்னும் திருவிளையாடற் புராணத்துப் பாடலில் இலக்கியச் சுவையில் எதுவும் திளைக்கக் காணலாம்.

"பெருமையால் தம்மை ஒப்பார் பேணலால் எம்மைப் பெற்றார்
ஒருமையால் உலகை வெல்வார் ஊனமேல் ஒன்றும் இல்லார்
அருமையாம் நிலையில் நின்றார் இவரைநீ அடைவாய் என்று"[54]

எனும் பெரிய புராணப் பாடல் நயத்தில் தம்மை மெய்ம்மறந்த நிற்பவரையும் காணலாம். இத்தகைய பல்வேறு சிறப்புக்கள் பொருந்தி புராண நூல்களை 'இலக்கியம்' எனல் முற்றிலும் பொருந்தும்.

4:4:9

<u>தலபுராணச் செய்திப் பயன்கள்:</u>

தல புராணச் செய்திகளால் ஏற்படும் நன்மைகள் பலப்பல. இவற்றுள் சில பற்றிக் காண்போம்:

1. மனிதன் நம்பிக்கை ஒன்றினாலேயே வாழவேண்டியவனாகின்றான். அவனை வாழ்வில் வளர்க்கின்ற சக்திகளில் 'கடவுள் நம்பிக்கை' ஒன்றேயாம். இதனை அளிப்பது தலபுராணம்.
2. "நாடு, போரின் பிடியில் பட்டினியால் வாடி, உரிமை இழந்து, அறியாமை இருளில் மூழ்கிக் கிடந்த போது, இப்புராணங்கள், மக்கள் மனத்திற்கு ஆறுதல், சாகாநடை ஊக்கம் கொடுத்துத் தட்டி எழுப்பிப் புத்துணர்வோடு மகிழ்ந்து உலவிவரச் செய்தன"[55].
3. சிற்சில ஊர்களுக்குப் புலவர் பெருமக்களால் புனைந்துரைக்கப்பட்டுக் கடவுளொடு தொடர்புடையனவாகப் பாடப்பட்டமையின், தாம் வாழும் ஊர் இந்திர உலகம் போல் பெருமையுடையது என்று எண்ணித் தம் ஊரைவிட்டுப் போகாமல் நம்பிக்கையுடன் வாழ்வு நடாத்தினர்.
4. "நன்மை செய்தால் இறைவனின் நல்லருள் கிட்டும்; பாவம் செய்தால் நரகம் கிட்டும்" என்று அஞ்சி, நல்லொழுக்கம் பேணத் துணைபுரிந்தன.
5. தனி மனிதனின் நல்வாழ்விற்கு வழிகோலியது.
6. தம் ஊர் பற்றி மட்டுமன்று, தம் நாட்டு வரலாறும் அறியத்துணைபோயது.
7. இலக்கியச் சுவையில் திளைத்து இன்புறத் துணை நின்றது.
8. தமிழ் இலக்கியம் கூறும் அக வாழ்வு பற்றியும், போர் முதலாய புறத்திணை நெறி பற்றியும் எளிய மக்களும் அறிய வாய்ப்பளித்தது[56].
9. சின்னஞ்சிறு பருவத்தில் இத்தகைய நீதிகளைக் கேட்டு, வாழ்வில் உயர்ந்தோரும் உண்டு[57].
10. சமயக் கோட்பாடு, இயம, நியம, நிட்டை, நோன்பு முதலாயினபற்றி அறிய முடிந்தது.
11. பல நூல்களைப் படித்து அறிய வேண்டியவற்றை, உள்ளூரிலேயே- இருந்த இடத்திலேயே அறியும் வாய்ப்பினை நல்கின.
12. கற்றுத் துறை போயவர்க்கே புரியக்கூடிய அரும்பெரும் தத்துவங்களை <u>மக்களின் பொதுவுடைமையாக்கின</u>[58].

13. பல சித்திரங்கள் [illegible] பல்பொருள்களை எளிதில் அறிந்து- [illegible] நிற்பன.
14. உலகியல் பற்றி அறியும் வகை புரிகிறது.
15. இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு உதவுவன[59].
16. தமிழ் இலக்கியத்தின் வழி [illegible] [illegible] அறியவும் நிற்பன.

<u>தலபுராணங்களின் சில குறைகள்:</u>

நன்மைகள் பல இருப்பினும் ஒருசில குறைகளும் கொண்டனவாகத் தலபுராணங்கள் அமைந்துள்ளன. அவற்றுட் சில வருமாறு:

1. தலபுராணம் ஒத்துக்கொள்ள வேண்டியதாய்ப் பாடப்பட்டது. இதனால், முன்னர் ஒன்றைக் கேட்டவர், அதே கருத்தமைந்த மற்றொன்றைக் கேட்க விரும்பவில்லை.
2. பா அமைப்பு-வருணனை-உட்பிரிவு ஆகியவையும் ஒரே அமைப்பில் இருந்தன.
3. பாடிய புலவர் பலர், தம் சுற்றுப் புறத்தாரின் வாழ்வை- யொட்டி நடப்பியலாகப் ( Realism ) பாடுவதை மறந்து, வெறுங்கற்பனை, சொல் விளையாட்டைப் புகுத்தினர்[61].
4. காலப்போக்கில், தலபுராணத்தில் சொல்லப்பட்ட அரிய பெரிய தத்துவங்களைப் பாமரரும் புரியுமாறு சொல்லத் தவறிவிட்டனர்[62].
5. கடவுள் நம்பிக்கையற்ற இயக்கங்களால், தமிழ் மக்களிடையே சமய உணர்வு குறையலாயிற்று; அதன் விளைவாகப் புராண நூல்களைப், (பெரிய புராணத்தையுங்கூட) பழித்தும் இழித்தும் பேசலாயினர். தமிழ்ச் சமுதாய இளைஞர்கள், சிந்தனை- யோரால் ஈர்க்கப்பட்டனர். இதனால் புராணப் பயிற்சி, வரவரக் குறையத் தலைப்பட்டது.
6. எதனையெழுந்தாலும் 'இது வடமொழியிலிருந்து வந்தது' என்ற கூற்றை வழக்கமாக்கிவிட்டமையால், செந்தமிழ்ப்பற்றுடையோர், இதனை வெறுக்கத் தொடங்கினர்.
7. புராணத்தை முதன்முதல் தமிழில் பாடியபோதும், ஒருசிலர் அதனை வடமொழியிலும் எழுதி வைத்துவிட்டனர். அங்ஙனம் செய்யுங்கால் ஒரு சில தவறுகளும் நேர்ந்துள்ளன. ஊரின் பெயர் முதலியவற்றிற்குப் பின்னர் வந்தோர் உண்மைக்காரணம்

4:4:11

தெரியாமல் தந்தமக்குத் தோன்றியவாறெல்லாம் பொருள் உரைக்கலாயினர். 'தும்மாள் புலியூர்' என்பது, தும்மாள் என்ற வள்ளல் பெயரால் அமைந்த—தும்மாள் நாட்டில் உள்ள ஒரு புலியூர். அதை 'தமாம் புலியூர்' என மருவிட.. அதனால், புராணிகர்கள், 'தமம் விரும் ஊர்' எனக் கற்பனைக் கதை கட்டிவிட்டனர். இவ்வாறே, எருப்பியூர் என்பதற்கும் ஒரு கதை. எப்பி என்றால் 'மலை' மலையுள்ள ஊர் எருப்பியூர்: இது தூய தமிழ் வழக்கு. இதனையறியாது போனதால் 'எருமை ஊர்' என்றாக்கி வடமொழியில் 'மகிஷபுரி' என மொழிபெயர்த்தனர்[63]. வடமொழிப் பற்றாளர்கள் செய்த இத்தகு செயல்களால், புராண இலக்கியம் தன் பெருஞ்சிறப்பை இழக்கத் தொடங்கியது.

3. புராண இலக்கியங்கள் பல மறைந்து போயின[64]; பல பதிப்பிக்கப்படாமல் அழியத் தொடங்கும் நிலையில் உள்ளன.

முடிவுரை:

"உலக நீதிகள், ஆட்சிமுறை, நாட்டு வருணனை, அறநெறி முதலியவற்றைப் புராணங்களில் பார்க்கும்போது, இவை பிற எந்த இலக்கியத்திலும் பின்தங்கியவையல்ல" என்பர் அறிஞர்[65]. புராணத்தில் ஒரு சில குறைகள் காணப்படினும்—அதனுள் அமைந்த பல்வேறு நன்மைகளைக் கருத்திற்கொண்டு, இனியேனும் புராண இலக்கியத்தை வளர்த்தல் அறிஞர் கடமையாம். புராணங்கள் பெரும்பாலும் வரலாற்றுப் பயன் இல்லாதவை என்று கருதி, அண்மைக் காலம் வரை நிலவி வந்தன. ஆனால் இப்போது, தம்நாட்டின் பல்வகைப் பண்பாட்டினை உணர; அவை ஆதாரம் மிகுந்த அங்கமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன; வரலாற்றாசிரியர்கள்—இவ்வாறே ஏற்றுக்கொண்டு புராணங்களை ஆராய்ந்து வருகின்றனர். "புராண இலக்கியத்தால் அளவாலும், பொருளாலும் மிகவும் பரந்துபட்டது; சிறந்த பலன் தருவது. மேலும் புராண இலக்கியப் பகுதி இடைக்காலத் தமிழில் தனியான ஒரு பெரும்பகுதி. இதைப் புறக்கணிக்கின்ற அல்லது ஒதுக்குகிற எந்த வரலாறும் குறையுடையதாகும்[66]" என்கிறார் மு. அருணாசலம். ஆகவே, பல்கலைக் கழகங்கள், பாடத் திட்ட வரிசையில் 'புராண இலக்கியத்'தையும் மிகுதியாகச் சேர்த்து அதன்வாயிலாக மாணவர் பலரையும் ஈடுபாடுகொள்ளச் செய்தல் வேண்டும்; அதனுள் அமைந்த தத்துவ உண்மைகளை வெளிக் கொணர்தல் வேண்டும்; ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் தத்துவத் துறையோடு "புராண இலக்கியத் துறை" என்றும் தனித்தோர் இடம் அமைத்தல் வேண்டும். இலக்கியச் சுவையில் திளைத்து இன்புறவும், மறைப்பொருளைக் கொண்டு அதனால் பல நன்மை பெறவும், புராண இலக்கியப் பயிற்சி மிக மிக இன்றியமையாதது.

## சான்றெண் விளக்கம்


1. ச. தண்டபாணி தேசிகர், 'முன்னுரை', திருவிளையாடற் புராணம், ப.xx
2. திரு. நாராயணையங்கார், 'முன்னுரை', திருவிளையாடற் புராணம், ப.5.
3. ஆதாரம்: கலைக் களஞ்சியம், தொகுதி 7, ப.[illegible]
4. தமிழ் லெக்சிகன், தொகுதி 5, ப. 2772.
5. சுவாமி சித்பவானந்தர், திருவாசக விளக்கம், ப.76
6. நாவலியூர் நடராசன், வடமொழி இலக்கிய வரலாறு, ப.144.
7. ஆதாரம்: க.த. திருநாவுக்கரசு, 'கந்தபுராணம்', தமிழ் இலக்கியக் கொள்கை.
8. தொல்காப்பியம்: செய்யுளியல்: 229.
9. நெடுநல்வாடை: "செம்முகச் செவிலியர் .. உரைப்பல பயிற்றி". 153-154
10. கலைக் களஞ்சியம், மு.கு.
11. திரு. நாராயணையங்கார், மு.கு.
12. கலைக் களஞ்சியம், மு.கு.
13. ச. தண்டபாணி தேசிகர், மு.கு.
14. சிலப்பதிகாரம்: 10 : 179; மணிமேகலை 5:98; திருமந்திரம்.1557.
15. மணிமேகலை 27:108
16. மு. அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு (13ஆம் நூ.) ப,234.
17. ஷ., (16ஆம் நூ.), பக். 3,4.
18. தண்டியலங்காரம்: 8
19. மு. அருணாசலம், மு.கு. (13ஆம் நூ.) ப.234.
20. ச. சச்சிதானந்தம் பிள்ளை, சைவ சமயத்தின் தற்கால நிலை, ப.17.
21. மா. இராசமாணிக்கம் பிள்ளை, மொஹெஞ்சொ-தரோ அல்லது சிந்துவெளி நாகரிகம், ப. 205.
22. தொல்காப்பியம், அகத்.5; புறத்.4,5,23; களவியல்; 1 போல்வன.
23. ப. அருணாசலம், பக்தி இலக்கியம், ப.11.
24. நற்றிணை, குறுந்தொகை, கலித்தொகை, அகநா. புறநா. கடவுள் வாழ்த்து; பரிபாடலில் செவ்வேள், திருமால் பாக்கள், திருமுருகாற்றுப்படை, ம. காஞ்சி 40-42, 453-55; 590-91; முல்லைப்பாட்டு 1-3; கலித். 38,104,105,108,124; அகநா.70,181; புறநா.37,39,43,56,378.

25. திருக்குறள்: கடவுள் வாழ்த்து:9.
26. பெரியபுராணம்: பாயிரம் 10.
27. கம்பராமாயணம்: சிறப். பாயிரம்:1.
28. மா. இராசமாணிக்கனார், பெரியபுராண ஆராய்ச்சி, ப.250
29. குன்றக்குடி அடிகளார், 'முன்னுரை, பெரியபுராணச் சொற்பொழிவுகள், ப.,20.
30. தெ.பொ. மீனாட்சிசுந்தரனார், 'பெரியபுராணம்-உலகப் பொது நூல்.' பெரிய புராணச் சொற்பொழிவுகள், பக்.,160,164.
31. Dr. (mrs.) Radha Thiagarajan  A study of mysticisimin Thiruvasankam preface.(P.iii)
32. "காவலில்... நின்நாமம் கற்ற ஆவலிப்பு உடைமை கண்டாய்" – தொண்டரடிப் பொடி ஆழ்வார். (2) "நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்" – அப்பர்.
33. தமிழண்ணல், சங்க இலக்கிய ஒப்பீடு, ப.123.
34. "Myth may be defined as a story or a complex of story elements taken as expressing amd therefore implicity symvolozing cortain deeplying aspects of human and transhuman existence"- princeton Encyclopedia of Poetry and politics p. 538.
35. [illegible], இலக்கிய வகைகள், பக். 157,158.
36. பொ.வே. சோமசுந்தரனார், 'ஆராய்ச்சி முன்னுரை', தணிகைப் புராணம் ப.32
37. ம.சா. அறிவுடைநம்பி, திருநாவுக்கரசர் தேவாரத்தில் காணப்படும் இலக்கியக் கொள்கைகள், ப.237.
38. ப, நம்பி ஆரூரன், 'பெரிய புராணம் – வரலாற்று நூல்' பெரியபுராணச் சொற்பொழிவுகள், ப.96.
39. ஜி. மகாதேவன், 'தொன்மம்', ப.5.
40. தமிழண்ணல், புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, ப.257.
41. கந்தபுராணம், திரு.வி.புராணம், கோயிற் புராணம், அருணாசல புராணம், திருக்குற்றால தல புராணம், காஞ்சிப் புராணம், தணிகைப் புராணம் முதலாய பலவும் சைவச் சமயப் புராணங்கள், கூடற் புராணம், திருவேங்கடத் தல புராணம், திருவிடந்தைத் தல புராணம், போன்றவை வைணவப் புராணங்கள். சீறாப் புராணம்,

4:4:14

41. மயிலைப் புராணம், திருக்கோவைப் புராணம், தணிகைப் புராணம் போன்றவை தோன்றிய காலம். [illegible] புராணம், [illegible] புராணம் போன்ற [illegible].
42. ச. வே. சுப்பிரமணியன், தமிழ் [illegible], ப.285.
43. மு. வரதராசன், தமிழ் இலக்கிய வரலாறு, ப. 198.
44. மு. அருணாசலம், மு.நூ. (15ஆம் நூற்.) பக். 236, 237.
45. மு. வரதராசன், மு.நூ. ப.198.
46. எ.எஸ். பெருமாள், 'திருவிளையாடற் புராணம்', தமிழ் இலக்கியக் கொள்கை பக். 124, 125.
47. கிருபானந்தவாரியார், வாரியார் வழங்கும் சிந்தனை, ப.104.
48. சிவஞானபோதம் சூ. 12.
49. ஆதாரம்: தா. ஏ. ஞானமூர்த்தி, இலக்கியத் திறனாய்வியல், ப.57.
50. W.H.Hudson An Introduction to the study of literature P.10
51. திருப்பரங்கிரிப் புராணம்: 1.6 (மு. ரா. அருணாசலக் கவிராயர் பதிப்பு)
52. தணிகைப் புராணம், (கழகப் பதிப்பு) ப.32.
53. திருவிளையாடற் புராணம்: தருமிக்குப் பொற்கிழி: 14
54. பெரிய புராணம்: தடுத்தாட்கொண்ட புராணம்: 196
55. கலைக் களஞ்சியம், மு.கு. ப. 438.
56. கந்தபுராணம் வள்ளியம்மை திருமணப்படலம் பிறவும் காண்க
57. அரிச்சந்திரன், சிரவணன் கதைகளைக் கேட்டு அண்ணல் காந்தியடிகள் சத்தியவீரர் ஆனார்.
"அரிச்சந்திரன் சரித்திர புருஷனாக இருந்திருக்க முடியாது, என்று என் பகுத்தறிவு எனக்குச் சொல்கிறது. என்றாலும், என்னைப் பொறுத்த வரையில் அரிச்சந்திரனும் சிரவணனும் வாழ்கின்ற உண்மைகள்" என்பது அவர் கருத்து. - மகாத்மா காந்தி நூல்கள் - சுய சரிதை (காந்தி நூல் வெளியீடு ப.18).
58. சுவாமி சித்பவானந்தர், மு.கு. பக். 78-79.
59. தென்னாட்டார், வடநாட்டுக் கங்கையில் மூழ்குவதும் கயிலைக் காட்சி காண்டலும்; அவ்வாறே வடநாட்டார், தென்னிந்தியாவிலும் ராமேசுவரத்திலும் மூழ்கி நீராடுதலும் கண்கூடு. இவை இந்திய ஒருமைப்பாட்டுக்கு வழிகோலும்.
60. "கொண்டுதேர் வாழ்க்கை" என்பது குறிப்பாகப் பாடல். இதை

4:4:15

விளக்கமாக அமைவர, திரு.வி. புராணத்தில் [illegible] பொருத்தியமைந்த படலம்!

61. மு. வரதராசன், மு.நூ. பக். 199, 200.

62. "எல்லாவற்று உட்பட்ட பொருள் ஒன்று, எல்லா [illegible] அளக்க-மாட்டார்" என்ற தொடர், '[illegible]' என்ற உவமைத்-தக்கது. [illegible] பல தலங்களையும் [illegible] விளக்குவார் ஆயினர்.

63. கலைக் களஞ்சியம், (தெ.பொ.மீ.கட்டுரை). மு.நூ. பக். 439-441.

64. புராண சாகரம், இறைவாளமுறையூர்ப் புராணம், சுவேதவன புராணம், அதிகடநச புராணம், திருமேற்றளிப் புராணம், பட்டீச்சுரப் புராணம், திருவலஞ்சுழிப் புராணம் போல்வன, மறைந்துபோன நூல்களிற் சில; மயிலை சீனி. வேங்கடசாமி, மறைந்துபோன தமிழ் நூல்கள், பக். 135-168.

65. }
66. } மு. அருணாசலம், (16ஆம் நூ.) மு.கு.ப. XII

# தோத்திர இலக்கியங்கள்.

டாக்டர் இரா. செல்வக்கணபதி, எம்.ஏ., பி.எட்., பிஎச்டி
தமிழ்ப்பேராசிரியர், தருமை ஆதீனப் பல்கலைக் கல்லூரி
தருமபுரம், மயிலாடுதுறை.

4:5:1

***

## தோற்றுவாய்:

தமிழ் இலக்கிய வரலாற்று ஆசிரியர்கள், சமயஞ்சார்ந்த இலக்கியங்களைத் தோத்திரங்கள், சாத்திரங்கள் என இரண்டாகப் பகுப்பர். தமிழில், வேத வழிப்பட்ட வைதிக சமயங்கள் என்று அழைக்கப்படும் சைவம் மற்றும் வைணவ சமயங்களிலேயே தோத்திர இலக்கியங்கள் மிகுதி. இவ்வகைத் தோத்திர இலக்கியங்களின் தோற்றம், வளர்ச்சி, உள்ளீடு, சமூகத் தாக்கம் என்பன நிரலே இக்கட்டுரையில் ஆய்வுக்குட்படுத்தப் பெற்றுள்ளன.

## சமய இலக்கியங்கள்:

தமிழ் இலக்கிய வரலாறு, ஒரு வகையில் கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதல் சமய இலக்கிய வரலாறாகவே காணப்படுகிறது. சமயஞ்சார்ந்த இலக்கியங்களைப் பொதுப்பட, தோத்திரம், சாத்திரம் எனப்பகுப்பினும் அப்பகுப்பு நிறைவானதன்று. சமயஞ்சார்ந்த இலக்கியங்களாக அவற்றின் வடிவம் பற்றி 1. காப்பியங்கள், 2. சிற்றிலக்கியங்கள், 3. தோத்திரங்கள், 4. சாத்திரங்கள் எனப்பகுத்தலே நிறைவானது. காட்டாக சைவத்தைப் பொறுத்தவரை பெரியபுராணம் – திருவிளையாடற் புராணம் முதலியன காப்பியங்களாகக் கருதத்தக்கன. சேரமான் பெருமான் நாயனாரின் திருக்கயிலாய ஞான உலா, காரைக்கால் அம்மையாரின் அற்புதத் திருவந்தாதி முதலியன சிற்றிலக்கியங்களாகக் கருதத்தக்கன. மூவர் தேவாரம்; திருவாசகத்தின் முதல் நான்கு அகவல்கள் போல்வன தோத்திரத் தன்மை கொண்டன. அருணந்தி சிவாசாரியாரின் சிவஞான சித்தியார், குருஞான சம்பந்தரின் சிவபோகசாரம் போல்வன சாத்திரங்களாகக் கொள்ளத்தக்கன.

## தோத்திர இலக்கியங்கள்:

தோத்திர இலக்கியங்களுக்கெனத் திட்டவட்டமான இலக்கண வரையறை ஏதும் இல்லை. பொதுவாக இறைவனை அடியவர்கள் புகழ்ந்துரைப்பனவாக அமைந்த பாமாலைகளே தோத்திர இலக்கியங்களாகக் கருதப் பெற்று வருகின்றன. இவ்வகை இலக்கியங்களில் இறைவனின் ஆற்றல்–புகழ்–அருளிப்பாடு–அடையாளங்கள் முதலியன புகழ்ந்துரைக்கப்படுகின்றன. உயிர்களின் இயலாமை

4:5:2

அறியாமைக்குற்றம் முதலியன எடுத்துரைக்கப்பட்டு இறைவனின் அருளை வேண்டி இரக்கும் திறமும் இவற்றுள் காணப்படுகின்றன. இவை சிறிய தனிப் பாடல்களாகவும்-பல் பாடல்களின் தொகுப்பாகவும், நீண்ட பெரும் பாடல்களாகவும் அமைகின்றன. சிற்றிலக்கிய வடிவிலமைந்த தோத்திர இலக்கியங்களும் சில உள்ளன. முறையே இவற்றிற்கு, ஔவையாரின் தனிப்பாடல்கள் – திருநாவுக்கரசரின் திருத்தாண்டகங்கள் – மணிவாசகரின் போற்றித் திருவகவல் – திருவாசகத்தில் இடம்பெறும் திருவெம்பாவை போன்றவை எடுத்துக்காட்டுக்களாகக் கருதத்தக்கன.

<u>தோத்திர இலக்கியங்களின் தோற்றம்:</u>

தொல்காப்பியத்திலேயே கடவுள் சார்ந்த தோத்திரப் பாடல்கள் – பண்டே இருந்தமைக்கான சான்றுகள் காணப்படுகின்றன. "அமரர்கள் முடியும் அறுவகை", "கொடிநிலை கந்தழி வள்ளி" என்று தொடங்கும் புறத்திணை இயல் நூற்பாக்கள் சிலவகைக் கடவுள் தோத்திரங்களை நினைவூட்டுகின்றன. சங்கத் தொகை நூல்களில் காணப்படும் சிவன் திருமால் முருகன் பற்றிய கடவுள் வாழ்த்துக்கள் கடைச்சங்க காலத்திற்குப் பிற்பட்ட காலத்தவை என்பர். சங்க நூல்களுள் நக்கீரரின் திருமுருகாற்றுப்படை முதல் தோத்திர நூலாகக் கருதத்தக்கது. இந்நூலின் 263 முதல் 276 வரையிலான வரிகள் முருகப் பெருமானை முன்னிலைப் பரவலாகப் போற்றும் அரிய தோத்திரப் பகுதியாக அமைகின்றன. சிலப்பதிகாரத்தில் வரும் இசைப்பாடல்களுள் சில தோத்திர வகையைச் சார்ந்தன. சிலம்பிலும் மேகலையிலும் அருகனையும் புத்தனையும் போற்றியுரைக்கும் சில தோத்திர வரிகள் காணப்படுகின்றன. இருண்ட காலப் பகுதி இலக்கியங்களாக அறிஞர் சிலர் கருதும் திருமந்திரத்திலும், காரைக்கால் அம்மையார் பாடல்களிலும் தோத்திரக் கருத்துகள் நிறைந்த பாடல்கள் – காணப்படுகின்றன. தோத்திர இலக்கியங்களின் இந்த வளர்ச்சி கி.பி. ஏழாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் பெரிதும் சிறந்தது.

<u>தோத்திர இலக்கியங்களின் வளர்ச்சி:</u>

கி.பி. ஏழாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் தமிழ்நாட்டின் வடபகுதியில் திருநாவுக்கரசரும் தென்பகுதியில் திருஞானசம்பந்தரும் சமண மதத்திற்கு – எதிரான போராட்டங்களைத் தொடங்கி அதில் வெற்றியும் பெற்றனர். அரசியல் மற்றும் சமூக அளவில் இம்மாற்றம் நிகழ்ந்தது. முன்னரே சமணர்களால் வீழ்த்தப் பெற்றிருந்த பௌத்தம், இவர்கள் காலப் பகுதியில் மேலும் – நலிவுற்றது. இருநூற்றுக்கும் மேற்பட்ட, தமிழகத்துச் சிவாலயங்களுக்கு

4:5:3

இவ்வருளாளர்கள் இருவரும் எழுந்தருளி இசையொடு கூடிய இன்றமிழ்ப் — பதிகப்பாமாலைகளைப் பாடி சைவசமய எழுச்சிக்கு வித்திட்டனர். அவர்களை அடுத்து ஏறத்தாழ 200 ஆண்டுக்கால இடைவெளியில் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் இவ்வாறே நாடெங்கும் சென்று பதிகப்பாமாலைகளாகப் பாடியருளினர். இம்மூவரின் இசைப்பாடல்கள் பிற்காலச் சோழர்கள் காலத்தின் பின் அடிப்படையில் ஏழு திருமுறைகளாகத் தொகுக்கப்பெற்றன. பின்னர் மணிவாசகரின் திருவாசகம் எழுந்தது. சைவத்தோடு ஒப்ப ஏறத்தாழ ஒரே காலப்பகுதியில் வைணவமும் எழுச்சி பெற்றது. ஆழ்வார்கள் பன்னிருவர் மங்களாசாசனம் செய்த பதிகப்பாமாலைகள் பின் வந்தோரால் நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம் எனத் தொகுக்கப்பெற்றன. வைதிக சமயத்தின் தலையாய தோத்திர — இலக்கியங்கள் இவையே. 'பிற்காலச் சோழர்' ஆட்சிக் காலத்தில் வாழ்ந்த சைவ அருளாளர்கள் ஒன்பதின்மரின் இசைப்பாடல்கள் திருவிசைப்பா திருப்பல்லாண்டு எனப் பெயரிடப்பெற்று ஒன்பதாம் திருமுறையாகக் கொள்ளப்பெற்றது. சிவபெருமான் முதலாகப் பன்னிருவர் அருளிய நாற்பது பனுவல்கள் பதினோராம் திருமுறையாகவும் சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணம் பன்னிரண்டாம் திருமுறையாகவும் கொள்ளப் பெற்றன.

இறைவன் சந்நிதியில் தேவாரம் பாடும் மரபும், பன்னிரு திருமுறை ஓதி வழிபடும் மரபும், பஞ்சபுராணம் ஓதி வழிபாடாற்றும் மரபும் அடுத்தடுத்து வழக்கில் வந்தன. அடியவர் வரலாறு கூறும் பெரியபுராணம் தோத்திரமாகக் கருதப்பெற்று இறைவன் முன் ஓதப் பெற்றமை புலனாகிறது. சைவத்தில் பன்னிரு திருமுறைகளைத் தொடர்ந்து கவிஞர் பலர் தோத்திரப் பனுவல்களைப் பாடியுள்ளனர். அவர்களுள் சைவத்தில் பட்டினத்தார், குமரகுருபரர், தாயுமானவர், மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை முதலியோரும், வைணவத்தில் அஷ்டப்பிரபந்த ஆசிரியரும், வீரசைவத்தில் சிவப்பிரகாசர், சாந்தலிங்க சுவாமிகள் முதலியோரும் சன்மார்க்கத்தில் இராமலிங்க சுவாமிகளும் குறிக்கத்தக்கவர்கள். சைவ தோத்திரங்கள் பெரியபுராணக்காலத்திற்குப் பின் சிவதோத்திரம்—குரு தோத்திரம் எனவும் பிரிந்தியல்கின்றன. உமாபதி சிவத்தின் நெஞ்சுவிடு தூது, ஞானசம்பந்தரின் பண்டாரக்கலித்துறை என்பன குரு தோத்திர இலக்கியங்களாகக் கொள்ளத்தக்கன.

காலப்போக்கில் தோத்திர இலக்கியங்கள் சிவன், விஷ்ணு மூர்த்திகள் மேல் மட்டுமின்றி சக்தி, முருகன், விநாயகர் மற்றும் சில சிறு தெய்வங்கள் மீதும் பாடப்பெற்றன. மணிவாசகர் காலம் வரையில் சக்திக்கெனத் தனித் தோத்திரம் எழவில்லை. சிலம்பில் காணப்பெற்ற கொற்றவை வழிபாடு

4:5:4

கி.பி. 12 ஆம் நூற்றாண்டுப் பின் மீண்டும் நலை எடுத்தன. வடமொழியில் சங்கரர் முதலியவர்களால் சில தோத்திர நூல்கள் பாடப்பெற்றன. தமிழில் சில தனிப்பாடல்கள் அல்லது சிற்றிலக்கியங்கள் இருந்திருக்கக்கூடும். கம்பரால் கலைமகள் மீது சரஸ்வதி அந்தாதி பாடப்பெற்றதாகக் கூறுவர். குமரகுருபரரின் சகலகலாவல்லிமாலை பிற்காலத்தது. உமையம்மை மீதுபல தோத்திர நூல்கள் கி.பி. 16 ஆம் நூற்றாண்டுப் பின் தோன்றின. மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், அபிராமி அந்தாதி முதலியன சிறந்த சக்தி தோத்திரங்கள். பதினொராந் திருமுறையில் சில விநாயகர் தோத்திர நூல்கள் காணப்படுகின்றன. பிற்கால இலக்கியக்காப்புப் பாடல்கள் பல விநாயகர் மேலன.

தோத்திர இலக்கிய வரிசையில் முருகப்பெருமான் மீது எழுந்த தோத்திரங்கள் தனித்தன்மை உடையன. தேவார மூவர்களைத் தொடர்ந்து தல யாத்திரை மேற்கொண்டு முருகப்பெருமானைத் தலங்கள்தோறும் சென்று சந்தத்தமிழ் பாடிய அருணகிரிநாதரின் திருப்புகழ்ப்பனுவல்கள் சிறந்த முருக தோத்திரங்கள். இவர் வழியில் அறுபடை வீடுகள் மீதும் பிற முருகத் தலங்கள் மீதும் நூற்றுக்கணக்கான சிற்றிலக்கியங்கள் பாடப்பெற்றன. குமரகுருபரரின் கந்தர்கலி வெண்பா, கந்தசஷ்டி கவசம், தண்டபாணி சுவாமிகளின் ஆயிரக்கணக்கான பனுவல்கள்; பாம்பன் சுவாமிகளின் பிரபந்தங்கள், குமரகுருதாச அடிகளார் பாடல்கள் முதலியன குறிக்கத்தக்க முருக தோத்திரங்கள். இறைவர்களைப் பழிப்பதுபோலப் புகழ்ந்துரைக்கும் நிந்தாஸ்துதிகள் காளமேகம் முதலிய கவிஞர்களால் பாடப்பெற்றன. சிறு தெய்வத் தோத்திரங்கள் பலவும் கி.பி. 18 ஆம் நூற்றாண்டை ஒட்டிய காலப்பகுதியில் தோன்றி வளர்ந்தன.

<u>தோத்திர இலக்கியங்களின் உள்ளீடு:</u>

தோத்திர இலக்கியங்களின் இலக்கியவடிவம், யாப்பு, பாடல்தொகை முதலியன வேறுபட்டிருப்பினும் இவற்றின் உள்ளீடு பெரும்பாலும் ஒரே தன்மையுடையனவாகவே தோன்றுகின்றன. இறைவர்களின் ஆற்றல், அருள் விளக்கப் பெற்று மக்களை வணங்கி வாழ ஆற்றுப்படுத்துவனவாகவே தோத்திரங்களின் உள்ளீடுகள் அமைகின்றன. சிவதோத்திரங்களில் சிவபெருமானின் அட்டவீரட்டச் செயல்களும், புராணங்கள் சுட்டும் அருளிப்பாடுகளும் இருபத்தைந்து சிவமூர்த்த பேதங்களும், அடையாளப்பொருள்களும் திருமபத்திருப்ப இடம் பெறுகின்றன. விஷ்ணு தோத்திரங்களில் தசாவதாரச் செய்திகளும், பாகவத அருளிப் பாடுகளும், விஷ்ணு மூர்த்தியின் அடையாளப் பொருள்களும் போற்றியுரைக்கப் படுகின்றன. முருக இலக்கியங்களில் அறுபடை வீடுகளும், ஸ்காந்தம் சுட்டும் முருகனின் அவதார அற்புதங்களும் இடம் பெறுகின்றன. பிறவும் இவ்வாறே

அமைகின்றன. தலங்கள் தோறும் தோறும் சென்று ஆங்காங்கே வாழும் மக்களை மெய்நெறியில் ஈடுபடுத்தப் பாடப்பெற்றவையாதலின், ஒரே செய்தி நூற்றுக் கணக்கான இடங்களில் இடம் பெறுவதின் நோக்கம் புலப்படுகிறது. திருஞானசம்பந்தர் பதிகத்தில் எட்டு முதல் பதினொரு பாடல்கள் ஒரே உள்ளீடு கொண்டிலங்குவன இதைப்பற்றியே என அறிய முடிகிறது. இவை தமிழ் இசை வளர்ச்சியில் வகிக்கும் பெரும்பங்குதனியே ஆராயத்தக்கது.

<u>தோத்திர இலக்கியங்களின் சமூகத்தாக்கம்</u>;

தமிழ் இலக்கியங்கள்—பெரிய சமூக மாற்றங்களை விளைவித்திருப்பதாகக் கூற இயலாது. அற இலக்கியங்கள் கூட தமிழ் மக்களால் நயங்காணவும், ரசித்து மகிழவும் பட்டவையன்றிப் பின்பற்றப்பட்டதாகக் கொள்ளச் சான்றில்லை. சமயஞ்சார்ந்த தோத்திர இலக்கியங்கள் குறிப்பிட்ட சமயத்தாரை எழுச்சிக்குக் காரணங்களாகத் திகழ்ந்தன என்பதை மறுப்பதற்கில்லை. இவ்விலக்கியங்கள் பெரும் பக்திக்கூறுபாடுகள் மக்களால் ஏற்கப்பட்டனவே அன்றி, சமயஞ்சார்ந்த சமூகக் கருத்துகள் ஏற்கப்பெறவில்லை. வருணபேதம், சாதிப்பகுப்புகள், கோத்திரச் சண்டைகள், மதப்போராட்டங்கள், முதலியனவற்றைக் கண்டித்த திருநாவுக்கரசர், திருமூலர், தாயுமானவர், இராமலிங்க சுவாமிகள் முதலியோர் அருளாளர்களாக ஏற்கப்பெற்றனரே அன்றி. அவர்தம் சமூகஞ்சார்ந்த சிந்தனைகள் ஏற்கப்பெறவில்லை. இவ்வகை இலக்கியங்கள் தமிழ் மொழி வளர்ச்சியில் ஆற்றியிருக்கும் பங்கு பெரிது. இவை தமிழ்மொழிக்கு மட்டுமல்லாது தமிழ் இசை-கலைவளர்ச்சி-நாகரிகப் பதிவுகள் — வரலாற்று ஆக்கம் முதலிய துறைகளிலும் அரும்பங்காற்றியுள்ளன.

<u>நிறைவுரை</u>:

தமிழ் தோத்திர இலக்கியங்கள் பற்றிய ஆய்வு மிகப்பெரிது. இக்கட்டுரை ஏறத்தாழ பதின்மூன்று நூற்றாண்டுக்கால பல்சமய தோத்திர இலக்கியங்களை அறிமுகப்படுத்தும் நோக்கிலேயே எழுந்தது. எந்த ஒரு இலக்கியத்தையும் உட்புகுந்து இனங்காட்டும் முயற்சி மேற்கொள்ள வாய்ப்பில்லை. முற்குறித்தவாறு இவற்றின் தோற்றம், வளர்ச்சி உள்ளீடு பற்றிய பொது மதிப்பீடுகளை மட்டுமே இது கொண்டுள்ளது. சமயங்கள் வாரியாக அல்லது நூற்றாண்டு வாரியாக அல்லது தனித்த ஒவ்வோர் ஆசிரியர் வாயிலாக இவை ஆராயப்பெறவேண்டும். அத்தகு முயற்சிக்குரிய எடுகோளாகவே இக்கட்டுரை நிறைகிறது.

***

## ஞானசம்பந்தரின் நல்லிசையே அனைத்து இசைக்கும் ஆதாரம்

வித்வான். முனைவர். வீ.ப.கா. சுந்தரம்
இசைத் தமிழ் ஆய்வுப் பேரறிஞர்
4/4 பசுமலை, மதுரை.4.

****

### 5:1:1 கட்டுரைக் குறிக்கோள்.

1. ஞானசம்பந்தரின் தேவாரத்தில், கீர்த்தனையின் இயல்புகள் யாவும் உள்ளன. கீர்த்தனைகளின் தந்தை, சம்பந்தரே.
2. கீர்த்தனை என்னும் சொல் மிகப் பிற்காலத்தில் தோன்றியது.
3. ஆனால் அதன் இசை வடிவமும் இயல் வடிவமும் தேவாரத்தில் உள்ளன.
4. பல்லவி, அநுபல்லவி, சரணம் என்ற சொற்கள் 15ஆம் நூற்றாண்டில் தோற்றுவிக்கப்பட்டன; இவற்றின் வடிவம் தேவாரத்தில் உள்ளன.
5. சம்பந்தரின் இசை முறைக்கு வழிகாட்டியன சிலப்பதிகாரமும் பிறவும்.
6. இன்று நடைமுறையில் உள்ள அனைத்துவகை இசைக் கால நடைகளும் சிலம்பில் காணப்படுபவையே. இவற்றால் இசை வடிவுகளின் தொன்மையும், தொடர்மரபும், தோன்றிய வளர்ச்சியும், மலர்ச்சியும் அறியலாகும். இக்கட்டுரை இங்கு முதன்முதல் நிலைநாட்டுவது இதுவே.

அனைத்துவகை இசை வடிவுக்கும் ஆதாரம், "நாளும் இசைத்தமிழ் பரப்பிய ஞான சம்பந்தரே."

### 1. இசைப்பாடலின் உறுப்புகள்:

சங்க காலத்தில் இசைப்பாடல்கள் – கலியும் பரிபாடலும், வெண்பாவும் அகவலும் ஆகும். கலிப்பாடல்களின் உறுப்புக்களாகப் பகுப்புகள் இருந்தன. அவை முதல்நிலைப்பாட்டு, இடைநிலைப்பாட்டு, முடிநிலைப்பாட்டு என்பன. முதல்நிலைப்பாட்டைத் தரவு என்றும் குறித்தனர்; இதை ஒட்டி வருபவைகளைத் தாழிசைகள் என்று குறித்தனர். முதல்நிலைப் பாட்டினைப் பிற்காலத்தில் பல்லவி என்ற சொல்லாலும் இடைநிலையை அநுபல்லவி என்ற சொல்லாலும் அடுக்கி வந்த தாழிசைகளைச் சரணம் என்ற சொல்லாலும்

குறிக்கத் தொடங்கினார்கள் (சிலம்பு. – ஏ – டு கருடச் சாமிநாதைத் தருப).

2. <u>பிற மொழிச் சொல்லாட்சி:</u>

தமிழ்ச் சொல்லை முற்றிலும் நீக்கிவிட்டுப் பிறமொழிச் சொல்லையே வழங்குவது உண்டு. பிறமொழிச் சொல்லால் கூறினாலும், அப்பொருள் பிற மொழிக்கு உரிமையாகிவிடாது. (எ–டு: 'ஜன்னல்' என்பது போர்ச்சுகீசியச் சொல். இதற்குரிய தமிழ்ச் சொற்கள் – பலகணி, காலதர், சாளரம் என்பன; இவை ஒழிந்தாலும், 'ஜன்னல்' போர்ச்சுகீசு நாட்டுக்கு உரிமையாகிவிடாது).

3. <u>புரந்தரதாசர் கீர்த்தனைத் திறம்:</u>

இவர் பூனா மாவட்டத்தில் பிறந்தவர்; (1480–1504) 15ஆம் நூற்றாண்டினர். பல்லவி, அநுபல்லவி, சரணம் என்ற உறுப்புடைய கீர்த்தனைகளைக் கன்னட மொழியில் இவர் இயற்றினார் என்றும், இவரே – சுராவளி, அலங்காரம், கீதம் முதலிய பகுப்புகளை உண்டாக்கினார் என்றும் அனைத்து நூல்களிலும் கூறப்பட்டு வருகின்றன. இவர் "கருநாடக இசையின் பிதாமகர்" என்று போற்றப்படுகிறார். கீதம் என்பன பெரும்பாலும் நாலுவரிப் பாடல்கள்; இவை புரந்தர தாசர்க்கு முன்னரே பல நூற்றாண்டு– கட்கு முன்னரே இசைத் தமிழிலும் தமிழிசையிலும் இடம் பெற்று இருந்தன. மாதவி கீதம் பாடினாள்; வேனிற்காதை (8:23..) கூறுவது

அமிரா மரபின் யாழ்கை வாங்கி
மரபு கீதம் பாடினள் மயங்கி
..(சிலப்.)

மேலும் இசைப் பாட்டுகள் அனைத்தையும் தாளத்தின் அடிப்படையில் இரண்டாகப் பகுத்திருந்தனர் என்று சிலம்புரையில் அடியார்க்கு நல்லார் (சிலப். 3:14) ஒரு தாளத்திற்குப் புணர்க்கப்பட்டவை – "சுத்தம்" எனப்பட்டன; (சுத்த – பந்த) ஒரு தாளப்பற்றுமை உடையவை – சுத்தம்; பல தாளத்திற்குச் சுற்றிக் கட்டப்பட்டவை – பந்தம் (தாளமாலிகை) (பந்த – சுற்றிக் கட்டு). (இது பற்றித் திருத்தாளச் சதியில் விரிவாய் உரைக்கின்றேன்). மேலும் நாலு அடி இசை உருக்கள் நிறைய இருந்தன; அவற்றை "நான்கின் உரு" என்றனர்;

4. <u>சுத்தத்தின் உறுப்புக்கள்:</u>

முதல் அடியை முகம் என்றனர்; இரண்டாம் அடியை நிருத்தம் என்றனர்; மூன்றாம் அடியை சநீலக்கயமடி என்றனர்; நான்காம் அடியை முடிப்பு அடி என்றனர். சுத்தவகையில் மூன்றடி இசை உருக்களும் வழங்கின.

5:1:3

(சிலப். 3:15 உரைகள்) இவற்றை நிகாரும் சாத்திர விளக்கவுரையால் புரந்தரதாசரத்தான் – கீர்த்தனைத் தோற்றுவித்தார் என்ற பிழைபட்ட கருத்தை என்றும், எதற்கும், எப்போதும் சொல்லிக்கொண்டே வருவதும் தமிழிசைக்கு இவரே தந்தையும் பாட்டனும் ஆவார் என்று சொல்லிக் கொண்டே திரிவதும் முற்றிலும் பொருந்தாத கூற்றுகள். தேவாரத்தில் கீதம் என்ற சொல் எத்தனையோ இடத்தில் வருகின்றது. கீதம் பாடுபவர்கள் கோயிலில் தங்கி அதைக் குடியாகக் கொண்டதை – கீதத்தை மிகப்பாடும் அடியார்கள் குடியாக (சம். 179:5) என்றார். செந்தமிழ்க் கீதம் (சம். 246:3) கீதநாம் கீதம் கேட்டும் கின்னரம் தன்னை வைத்தார் (நாவுக். 330) கைநரம்பால். வேத கீதம் பாட (நாவுக். 485) ஏறத்தாழ 20 இடங்கட்கு மேலே மூவர் தேவாரத்தில் "கீதம்" விளக்கப்படுகிறது. எனவே 15 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த புரந்தரர் கீர்த்தனைத் தோற்றுவித்தார் என்பது வரலாறு – அறியாதோர் கூற்று.

5. அலங்காரத்திற்குத் தந்தையார்?

இனி அடியார்க்கு நல்லார் (12 நூ ற்.) எடுத்துக்காட்டிய ஓர் வெண்பா. வட்டணையும், தாசியும் மண்டலமும் பண்ணிய எட்டுடன் ஈரிரண்டாகு எழுத்தியபின் – கட்டளைய சோதித் தரங்கேறச்–சூழ் – (சிலப்.3:10–11 அரும்பத... மேற்...) எனவே கீதம் சிலம்புக் காலத்திலும் தேவார காலத்திலும் பெருஞ் செல்வாக்குப் பெற்றிருந்தது. "அலங்காரம்" 12 நூ ற். முந்தைக் காலத்துக்கு முந்தியது. இவற்றிற்குப் புரந்தரர் தந்தையல்லர். ஆராய்ந்த மெய்ம்மை கூறினால் இந்தியாவின் ஒற்றுமை நாடாதவன் என்றும், பிரிவினைக்காரன் என்றும் முத்திரை குத்துவோர் உண்டு. நாட்டு ஒருமைப்பாடு என்பது வேற்றுமையில் காண்பது.

6. கீர்த்தனையின் தன்மைகள் எவை?

கீர்த்தனையில் உள்ளே இசை வடிவங்கள் பல உண்டு. 1. நடைகள், 2. முடுகுகள், 3. எடுப்புகள், 4. தாளங்கள்; 5. தாள உட்பிரிப்புகள் 6. விரிவாக்கங்கள் அல்லது சந்தது வளர்த்தல் (சங்கதிகள்), 7. நிரவல்கள் 8. திரிகாலம் பாடுதல், 9. தொகை அராகங்கள். (தொகையறு). கீர்த்தனைகளில் காணப்படும் இவையாவும் தேவாரத்தில் உண்டு; தேவாரத்தில் இருந்து இவற்றைக் கீர்த்தனைகள் பெற்றன.

மேலும் சம்பந்தர்தேவாரத்தில் பல்லவி அமைப்புகள் உண்டு.

5:1:4

7. தொன்மை இசை உரு:

தமிழில் தேவாரம் தோன்றிய 7, 8 முதலிய நூற்றாண்டுகளிலே தென்னகப் பிற மொழிகளில் நல்ல இசைப்பாவலர்கள் மொழியமைப்பிலும் இசையமைப்பிலும் சிறந்தோங்கிய இசை இலக்கியப் பாவலர்கள் தோன்றவில்லை; இவை தமிழில் இசை இலக்கணத் துறைச் சொற்களை ஒப்பு நோக்கினால் மிகத் தொன்மையானவை இசைத்தமிழ் என்பதை அறியலாகும்.

8. பரவிய முறை:

தேவாரப் பாடல்கள் கோயில் தொழுகையில் மலர்ந்தன; முதற்காலத்தில் சாலச் சிறந்து நின்றன. நாட்டியத்திற்கு வீடுகளிலும், விழாக்களிலும், தெருக்களிலும் அரங்குகளிலும் நங்கையரால் ஆடப்பாடப் பட்டவை; துள்ளலோசை உடைய நடனப்பாடல்கள். எனவே தென்னகம் மெங்கும் பரவின. வட நாடுகளும் அறிந்து கொண்டன. தெய்வத்தின் திருமுன் தோன்றிய தெய்வப் பாடல்கள் தெய்வத்தன்மை தோன்றியவை; தெய்வத்தோடு தோன்றியவை; தெய்வத்திற்காகத் தோன்றியவை. இவை பரவாவிட்டால் பின்னர் எவை பரவும்? எனவே இந்தியாவெங்கும் பரவின; செல்வாக்குச் செலுத்தின. இசைச் செழிப்பை — இசை வளர்த்த மலைபோல் உண்டாக்கிக் குவித்தன. மலையாளம், தெலுங்கு, கன்னடம் முதலிய இசைப்பாடல்கள் மலரத் தோன்றுவனவாக, வழிகாட்டியாகத் தேவாரப் பாடல்கள் விளங்கின என்பதை முறையாக ஆராய்ந்தால் அறியலாகும்.

9. நடைவகைகள்:

இசை உருக்கள் அமைதற்குச் சொல் நடைகள் இன்றியமையாதன. நடைகள் என்பன 3, 4, முதலிய எழுத்து அளவுகளால் கட்டப் பெற்ற சொற்கள். இவற்றின் வகை வருமாறு:

| தமிழ்ச் சொல் | வடசொல் | முழுச் சொல் |
|---|---|---|
| 1. நான்கு நடை | (சதுரச்சர நடை) | தகதிமி - தகதிமி |
| 2. மூன்று நடை | (திசுர நடை) | தகிட - தகிட |
| 3. ஐந்து நடை | (கண்ட நடை) | தகதகிட - தகதகிட |
| 4. ஏழு நடை | (மிசுர நடை) | தகிடதகதிமி - தகிடதகதிமி |
| 5, [illegible] நடை | (திசுர நடை) | தகதிமிகிட - தகதிமிகிட |
| 6. எட்டு நடை | | தகதிமி தகதிமி / தகதிமி தகதிமி |

5:1:5

7. ஒன்பான் நடை (சங்கீர்ண நடை) தகஜிம தகதிமிட..

தமிழில் இவற்றிற்கும் மேலே கலப்பு நடைகளாகிய 11,13,15 எழுத்து நடைகளும் உண்டு. 1, இவற்றின் தொன்மை தமிழிலக்கியத்தில், இந்நடைகள் சிலப்பதிகாரத்திற்கும் முன்பிரே இருந்து இன்றுவரை தொடர்ந்து வருகின்றன. "நடை மிகுத்தேத்தும் குடை நிழல் மரபு" என்று தொல்காப்பியம் கூறிய இலக்கணத்திற்கு இலக்கியமாக அமைக்கப்பட்டதே "மங்கல வாழ்த்துப் பாடல் ஆகும்", என்று உரையாசிரியர்கள் குறித்துக் காட்டியுள்ளமையால் சொல் நடையின் தொன்மையும் தொடர்மரபும் அறியலாகும். அனைத்துவகை நடைகளையும் சிலம்பும் தேவாரப் பாடல்களும் பிற்கால இசை உருக்களும் நல்கியுள்ளன. இசை உருக்களின் நடை வகைகள் தேவாரத்திலிருந்து தோன்றியவைகளே. அனைத்திற்குரிய இசை நடைகளுக்கும் மூல இலக்கியச் சான்றுகள், ஆயிரக்கணக்கான தேவாரப் பாடல்களே ஆகும்.

10. <u>நாலன் நடை:</u>

எட்டு நான்கு எழுத்துக்கள் கொண்ட சொற் கட்டுநடை.

<u>தகதிமி - நடை:</u>

இடரினும் தளரினும் எனதுறு நோய்
தொடரினும் உனகழல் தொழுதெழு வேன்.

<u>தாங்கிட - நடை:</u>

உற்றுமை சேர்வது மெய்யினை யே.
உணர்வது நின்னருள் மெய்ப்பினை யே..
கற்றவர் காய்வது காமனை யே
கனல்விழி காய்வது காமனை யே (3 பிரமபு).

<u>கலப்பு நாலன் நடை:</u>

தேவிரு மிளிய பாலன நீற்றர்
தீங்கரும் படையர் நம் திருவடி தொழுவார்
உய்ந்நயந் தருக உவகைகள் தருவார்
உச்சிமேல் உறைபவர் ஒன்றலா தூரார்.

-- (சம் 1 அச்சிறு பாக்கம்)

<u>இரட்டைச் சிட்டு எடு.</u>

"இருபெரும் குரவரும் ............."

11. <u>மூன்றன் நடை:</u>

கனைத்த மேதி/காணா தாயன்

5:1:6

கைமேல் முழவ,/உ; . . ;

அலைத்தும் செல்ற/திரளும் சாரல்

அண்ணா மலை/யா ,ரே;

(சம்.1. திருவண்ணா.)

கீர்த்தனை: "கால வர" – (தியாகராஜ.)

"சரணம் சரணம் நயைசெய் வாயீசம் – யா"

(மாயூரம் வேதநாய.)

12. ஐந்தடி நடை:

நீ நாளும் நன்னெஞ்சே/நினைகண்டாய் யாரறிவார்

சாநாளும் வாழ்நாளும்/சாய்க்காட்டெம் பெருமாற் கே

– (இந்தளம்) – சம். . . திருச்சாய்க்காடு)

கீர்த்தனை: நனுமோடு கலவேலி நாஜாலி தெலியு.

– (தியாக.)

13. நான்கடி நடை:

நேமாங்கனி கடுவன் கொள விடுகொம்பொடு – தீண்டித்

மா மழை நறவல்மிசை சிறு நங்கனி – சிதற

(சம்.1. திருவண்ணா.) (நட்டபாடை)

பண்ணொலி சேர் நான்மறை யான்

பாடொலிவோ – டாடலினான்

கண்ணொளிசேர் நெற்றியினான்

காதலித்த – தொல் கோயில்

(சம்.2. திருவாக்கூர் தான்தோன்றி மாடம்) சீகாமரம்.

14. ஏழடி நடை: (ஏக தாளத்தில் உள்ளமைப்பு ஏழடி நடை)

1. மாசில் வீணையும் மாலை மதியமும்

வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்

(அப்.1. குறுந்தொகை)

2. நக்கு நாளும் ஏழும் நல்லும்மை

–கருவி யும்பூறவில்.

கொண்ட பூதமும் உடையார்–கோலமும்

–பலபல வுடையார்

(சம்.2. திருவாழ்கொளிபுத்தூர்) (வியத்தாக்குறிஞ்.)

(இசை நடைத்தில் ஏழடிநடை உள்ளமைப்பு)

15. இரட்டுள்ளே பகுப்பு பெறு நடை:

இதுவே தலையாய உயிரான நடை; இதனைச் சுருக்கமாக விளக்கு-வோம்; தகதிமி தகதிமி என்ற 8 எழுத்துக்களால் அமைவது 2 என்னும் எண்ணிக்கை

4 + 4. 8/4 = 2. இந்த எட்டு எழுத்துக்களை
3 + 3 + 2 எனப் பிரித்து அமைக்கலாம்.

1 + 1 = 2 தகதிமி தகதிமி = 4 + 4 = 8 (எழுத்து)

---

3/4 + 3/4 + 1/2 = 2 தகிட தகிட தக = 3 + 3 + 2 = 8 எழுத்து

3/4 3/4 1/2 = 2 என்னும் பகுப்பு முறை திருஞான சம்பந்தர் பெருமான் வழக்குக்குக் கொண்டு வந்தார்; எங்கும் பரப்பினார்.

1

வாசி தீரவே – காசு நல்குவீர்
மாசில் மிழலையீர் – ஏசல் இல்லையே

2

இறைவ ராயினீர் மறைகொள் மிழலையீர்
கறைகொள் காசினை முறைமை நல்குமே.

| | |
|---|---|
| மேற்கண்ட | தாங்கு தாங்கு தோம் |
| வைக்கு | தகிட தகிட தோம் |
| வாய்பாடு | ததீம் ததீம் தோம் |
| | 3/4 3/4 1/2 |
| | தக தாங்கு தாங்கு |
| | தோம் தாங்கு தாங்கு |
| | தாங்கு தக தாங்கு |
| | ததீம் தா ததீம் |
| | தகிட தக தகிட |

இவைபோன்ற பல்வேறு வகைகள் இசையில் கலப்பாகித் தாளச் சுவை நல்கும்.

16. திரு இருக்குக் குறள்:

திரு இருக்குக் குறள் என்பதில் திரு அடைமொழி. இது இருக்கு வேதத்தைப் பின்பற்றிப் பாடியது என்ற மரபாகக் கூறிவருகிறார்கள். இது சம்பந்தரும் அப்பரும் – நாட்டின் வறுமை தீரக் காசு பெற்ற போது பாடியது. இவ்வரலாற்றில் இருக்கு வேதக் கருத்து ஒன்றும் இல்லை. இருக்கு வேதம்

பாடிய ஆதிட்டன் என என்று முடிவாக வுறைக்கூடிய சான்றுகள் கிட்டவில்லை. உதாத்தம், சுவரிதம் அநுதாத்தம் எனும் மூன்றோசையால் பாடப்பட்டது வடவர் வேதம்; திரு இருக்குக் குறுக்குரியிச் முறைமைப் பக்... குறிச்சிப்பது (நடபைரவியாகிய படுமலைப் பாலையில் பாடப்பட்டது) எனவே இது இருக்கு வேத இசையுடையது என்பது பொருந்தாது

17. இருக்குக்குறள்:

இருக்கு + குறள்; இருக்குகை இருக்குதல், 'இருக்கை' - இச் சொற்கள் "இருக்கு" என்பதில் பிறப்பன. இருக்குஇருந்தல். காசு இருந்தல் கட்டு பாடிய பாடல் அமைப்பு என்ற பொருள் பொருந்தமுடையதாகத் தோன்றுகிறது. குறள் என்பது இருவரிப் பாடல். இக்குறள் பாடல் அமைப்பில் பிற்வரி பல தலங்களில் வேறு சூழலில் பாடல்கள் மலர்கின்றன. சிலம்பில் ஒப்புமை அமைப்பு.

தீர்த்தலையில்:

இருக்குக் குறளமைப்புகள் : அலைபாயுதே - (ஊத்துக்காடு வெங்கடசுப்பு ஐயர்)

-சரணம்-

கதறி மனமுருக நான் அழைக்க வோ
இதர மாதருடன் நீ களிக்க வோ
(இது தகுமோ இது முறையோ - (3)
இது, தரு, மம், தா, வோ, குழல் (3) + (2)
பதிடும் பொழுது ஆடிடும் குழைகள்
போலவே மனது வேதனை மிகவொடு
- அலைபாயுதே.

18. பல்லவி அமைப்பு:

1. தலையே நீ வணங்/ காய் - தலை
மாலைத லைக்கணிந்/ த.
2. என்ன புண்ணியம் செய்தனை, - நெஞ்சமே
இருங்கடல் வையத்து
முன்னம் நீபுரி நல்வினைப் பயனிடை
முழு மணித் தரளங்கள்
(சம்.2 திருவலஞ்சுழி) (நட்டராகம்)

<u>விளக்கம்:</u>

இவ்விருபாடலிலும் - நெட்டிசை அறுதியும் நலிச் சொல்லும் - கீர்த்தனைகளில் வருவதுபோன்றே அமைந்துள்ளன.

19. <u>மேல்வைப்பு:</u>

மேல்வைப்பு என்பது சரணம் முடிந்த பின்னர் ஒருவரி அல்லது இருவரிகளாக நிற்கும் அமைப்பு. ஒருவரிப் பல்லவி போன்றும் இருவரிப் பல்லவி போன்றும் மேல் வைப்புகள் விளங்குகின்றன. நாலடிமேல் ஒருவரி வைப்பு என்றும் இருவரி வைப்பு என்றும் கூறலாம். எ-டு.

இடரினும் தளரினும் எனதுறு நோய்
தொடரினும் உனகழல் தொழுதெழு வேன்
கடலினில் அமுதொடு கலந்தநஞ் சை
மிடறினில் அடக்கிய வேதிய னே
இதுவோ எமை/ஆளுமா/றீவ தொன்றெமக்/கில்லையேல்
அதுவோ வுன தின்ன ருள்/ஆவடுதுறை/யரனே

இது நாலடிப் பாடற்குமேல் இருவரி வைப்பு ஆகும்.

20. <u>நாலடிப் பாடற்கு மேல் ஓரடி மேல் வைப்பு:</u>

மாதர்ப் பிறைக் கண்ணி யானை மலையான் மகளொடும் பாடி
போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவார் அவர்பின்புகுவேன்
யாதுஞ் சுவடு படாமல் ஐயா றடைகின்ற போது
காதல் மடப்பிடியோடுங் களிறு வருவன கண்டேன்.
கண்டேன் அவர்திருப் பாதம் கண்டறி யாதன கண்டேன்.

கடைசி வரி பாடற்குமேல் ஓரடிமேல் வைப்பு; இது கீர்த்தனையின் பல்லவியே; இதற்குப் பல்லவி என்ற பெயர் பிற்காலத்தில் ஆகியது. அப்பல்லவியில்லாமல் பல்லவியும் பல சரணங்களும் கொண்ட கீர்த்தனைகள் உண்டு. இந்தக் கீர்த்தனையாவிற்கும் மூலவடிவம் இங்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. எனவே கீர்த்தனைகளையும், இரண்டு வரி நாமாவளிகளையும் புரந்தரதாசர்தான் முதன்முதல் தோற்றுவித்தார் என்பது வரலாற்றோடு பொருந்தாத திருந்தாத புனைவேயாகும். புரந்தர தாசர்க்கு மூலம் தேவாரம்.

21. <u>தேவாரத்தின் செல்வாக்குக் கீர்த்தனைமேல்:</u>

1. அவ்வினைக் கிவ்வினை
யாமென்று சொல்லும் அஃதறி வீர்

உய்வினை நாடா

திருப்பதும் உந்தமக் கூனமன்றே

கைவினை செய்தெம்

பிரான்கழல் போற்றுதும் நாமடியோம்

செய்வினை வந்தெமைத்

தீண்டப்பெறாதிரு நீலகண்டம்

(1. நீலகண்.)

இப்பாடலிசையைத் தழுவியதே — "ஸ்ரீகணபதிநீ சேவிம்ப ரா" — எனும் திருவாரூர்த் தியாகராசர் கீர்த்தனை.

2. "காதலாகிக் கசிந்து" எனும் தேவாரத்தை "ராம நீயடா" என்பது தழுவி, வேறு ஓர் நெருங்கிய பண்ணிலே யமைந்துள்ளது; இசை உருவத்தில் ஒற்றுமை காணப்படுகிறது. இவைபோல் பல கீர்த்தனைகள் தேவாரத்தைத் தழுவியவை.

22. <u>தாள மாலிகையை முதன்முதல் தோற்றுவித்தவர் சம்பந்தர்</u>:

திருத்தாளச் சதியில் "பந்தத்தால்" என்று தொடங்குவதே தாள மாலையைக் காட்டுவது. ஒப்பு நோக்குக, "ஐந்தாளப் பிரபந்தம்" என்று சுட்டுகின்றார் — அடியார்க்குநல்லார். சிலப்பதிகார உரையில் 3, 4, 5, 7, 8 என்னும் ஐந்து தாளத்திற்கும் உரியவாறு எழுத்துக்களை நீட்டியும் குறுக்கியும் பாடுதற்கேற்பத் திருத்தாளச் சதியில் அமைந்துள்ளார் தாள வேந்தராகிய சம்பந்தர்.

வரியின் முதற் பாகத்தில் 7 நெடில் உள்ளன.

வரியின் இரண்டாம் பாகத்தில் 9 குறில் உள்ளன.

இப்பாட்டில் ஏழுச் சாப்பு தாளத்தில் அமைந்துள்ளது. அதுவும் முறை மாறிய ஏழுச் சாப்புத் தாளத்தில் உள்ளது; 4 + 3 = 7 என்ற பகுப்புடையது, இப்பகுப்பை "நாலே மூன்று" என்ற ஒரு சரத்தில் சம்பந்தரே குறித்துக்- காட்டியுள்ளார்.

23. <u>ஏழே ஏழே நாலே மூன்று</u>:

என்பது பல்பொருள் தருவது.

1. 1 இர தொடர் 2. பண்களைச் சுட்டியது:

- 7 + 7 + 4 + 3 = 21 பண்ணியல் — என்பது ஏழு இறங்கு நிரலில் 7 நரம்புடைய பண்களைக் குறிப்பது. ஒரு பெரும்பண்ணில் 6 பண்ணியல்கள் கிடைக்கும்; திறம் என்பது 5 நரம்புப்பண். 15 திறப்பண்கள் ஒரு பெரும்-

பண்ணில் கிடைக்கும். 6 + 15 = 21 தமிழகத்தில் 21 கிளைப் பண்கள் (வர்ணராகம்) பெருவழக்குப் பெற்றிருந்தன. பெரும்பண்கள் ஏழு; இந்த ஏழு பண்ணிற்கும் மொத்தம் கிளைப் பண்கள் கிடைத்தன. (7× 21 = 147). இந்த 7 பண்களில் கிளைப் பண் காணுகையில் வந்த பண்களே மீண்டும் வர நேரிடும். அவற்றைக் கழித்து நீக்க 103 பண்கள் சிறப்புப் பெற்று வழக்கில் இருந்தன. தேவார ஆசிரியர்கள் சில பண்களையே பெரிதும் பாடி மக்களிடைப் பரப்பினார்கள்.

21 பண்முறையைச் சுட்டிக்காட்டும் பழம் செய்யுள் வரிகள் வருமாறு:

அ. நாற்பெரும் பண்ணும் எழுவகைப் பாலையும்
மூவேழ் திறத்தொடு முற் கூட்டி
நலமிகு சிறப்பொடு நல்லவை புகழ.
- (பெருங்கதை 1:37:114..)

ஆ. "மூவேழ் துறையும் முறையுளிக் கழிப்பி
- புற.152

குழலினும் யாழினும் குரல்முதல் ஏழும்
வழுவின்றி இசைந்து வழித்திறம் காட்டும்
அரும்பெறல் மரபின் பெரும்பாண் இருக்கையும்
- (சிலப். 5:35..)

என்றும் சிலம்பு வரியிலே, திறப்புக்களை இசைக்கத் தெரிந்தவரே பெரும்பாணர்கள் என்பதையும் அவர்கள் குடிவாழ்ந்த சேரி பெரும்பாண் இருக்கை எனப் பெயர் பெற்றமையையும் பிற இசை நுணுக்கங்களையும் அறியலாகும். (பெரும்பாணிருக்கை - மதுரை 342:40; மணிமே. 4:37) திருநீலகண்ட யாழ்ப்பாணர் என்பவர் பெரும்பாணர் என்று சேக்கிழார் குறித்துக் காட்டுகிறார்.

24. சம்பந்தர் காலத் தாளங்கள்:

தாளங்கள் 3,4,5,7,8 என்றும் தாளங்கள் ஐந்து இருந்தன. இவைகளைச் சம்பந்தர் காலத்தில் அவரே பயன்படுத்தியுள்ளார். நாலன் நடை, மூன்றன் நடை, ஐந்தன் நடை, ஏழன் நடை, எட்டன் நடைச் சொற்களை நான்முறை அடுக்கினால் அந்தந்தத் தாளம் எண்ணிக்கை கிடைத்துவிடும். எ-டு 5 ஐந்தன் நடை நாலு சேர்ப்போம்:

$1\frac{1}{4} \times 4 = 5/4 = 5$ என வரும்;

$1\frac{3}{4} \times 4 = 7/4 = 7$ என வரும் பழைய மரபுப்படி.

5:1:12

5 நாள்கள் இருந்தன. பஞ்சமரபுப் பிரபந்தம் என்று அடியார்க்கு நல்லார் குறிப்பிட்டுள்ளார். இந்நூலிய மொத்த எண்ணிக்கையை இளங்கோ சுட்டுகிறார் "ஆறும் நாலும் அம்முறை போக்கி" என்றார் இளங்கோ. 6 × 4 = 24 எண்ணிக்கை; ஈர் ஆறிற்கும் (8 × 3 = 24) மூன்று முறை வரும்; திசுரத்திற்கும் (6 × 4 = 24) நான்குமுறை வரும்; 5 × 4 = 20 4 என்ற முறையில் கண்டத்திற்கு வரும்; 7 × 3 = 21 3½ 24½ என்ற முறையில் மிச்ரத்திற்கு வரும். இந்த ஐந்துவகை நடைச் சொல்களை-யும் பயன்படுத்தியே தேவாரங்களைப் பாடியுள்ளனர். இந்த ஐந்துவகை நடையும் தொல்காப்பியர் காலத்திற்கும் முன்னர் இருந்து வருவன-என்பதை மறுத்து விடமுடியாது. "நடை மிகுந்து ஏத்திய குடை நிழல் மரபு" என்ற இலக்கணத்திற்கேற்பவே, சிலம்பின் மங்கல வாழ்த்துப் பாடலில் இளங்கோ நடைவகைகளைப் பின்பற்றி இசைக்கோலங்களை வரைந்துள்ளார். இந்த ஐந்து நடைகளே சம்பந்தர் பாடலில் பயன்படுத்தப்படுகின்றன. இன்றைய இசைக் கீர்த்தனைகளிலும் இந்த ஐந்து நடைகளே பயன்படுத்தப்படுகின்றன. தேவாரம் பயன்படுத்திக் காட்டியுள்ள ஐந்து நடைகள் இல்லாவிட்டால், கீர்த்தனைகள் இல்லை; வர்ணங்கள் இல்லை; கீதங்கள் இல்லை; சிட்டா சுரம் இல்லை.

25. முடுகுத் தோற்றம்:

குறில் வடிவங்களிலிருந்தும் கீர்த்தனையின் முடுகுகள் தோன்றின; மேலும் இருக்கின்றனவும் நடை வகைகளும் - கீர்த்தனை முடுகுகளைத் தோற்றுவித்தன. எனவே - கீர்த்தனையமைப்புகட்கும், இயல்புகட்கும் தோற்றுவாயாக இருந்தவை தேவாரத்திருப்பாடல்களே.

26. பறவல்:

மிகுந்த இசை ரஞ்சகம் உடைய உருக்களை இசைப் பறவல் என்றனர். பல்லவி - பின்னுதல் இசை நடைகள் பின்னப்பட்டவை - இசைப்பின்னல்.

27. எடுப்பு வகைகள் - தேவாரத்தில்:

முக்கால் எடுப்பு; "செற்றுமை வேதியன்; அரை எடுப்பு - "காதலாகி" கால் எடுப்பு: ....

28. பல்வகை எடுப்பு:

வாய்பாடு - தரிகிடதக நக்திண தகதிம

5:1:13

ஓரிடத் தள்ளி – தரிகிட/சிறை வா . . ரும் . . .
3/4 இடம் தள்ளி – தகிட/மடக் கிளி . . யே . .
1/4 இடம் தள்ளி – த/இங்.கே . . வா . . .

29. <u>வாரம் பாடுதலின் தொன்மையும் முறையும்</u>:

தேவாரத்திலிருந்து பல்லவி பாடும் முறைக்குச் சென்றது. முக்காலம் பாடுதல் என்பது முதல் நடை, வீர நடை, கூட்ட நடையில் பாடுவது.

30. <u>முரிவரி</u>:

பாடுதலின் முறைகள்
எடுத்த இயலும் இசையும் தம்மில்
முரித்துப் பாடுதல் முரியா கும்மே — (சிலம்புரை)

அ. "முரி" இடையின ரகரமே இருக.
ஆ. "முறி" என்றது தவறு; முரி என்றதும் தவறு:
இ. "முரி" ஒரு இராகமன்று.
ஈ. "முரி" வரிப்பாடல் சம்பந்தர் தோற்றுவித்ததன்று.
உ. முரிவரி என்பது பாடும் முறை பற்றி எழுந்த பெயர்.

31. <u>தேவதாசியர் நடனமுறை</u>:

12 முதல் 15 ஆம் நூற்றாண்டுவரை தேவதாசியர் நடனக் கலை தமிழகமெங்கும் கோயில்கள் எங்கள் பரவின; நாகசுரமும் மங்கள வாத்தியமாகப் பெரிதும் பயன்பட்டது; இவை பன்னிரண்டு நூற்றாண்டில் தோன்றின. இக் காலத்தில் நடனத்திற்குப் பயன்படுத்திய தேவார இசை உருவங்கள் சிலவற்றைத் தழுவிப் பதங்கள் தருக்கள் இயற்றப்பட்டன. தருக்கள் என்பவைகள் கீர்த்தனைகளே இவற்றோடு நொண்டிச் சிந்து, பள்ளு, குறவஞ்சி முதலிய நாடகங்களில் இசைத் தருக்கள் செல்வாக்குப் பெற்றன.

32. <u>திருப்புகழ்</u>:

15 ஆம் நூற்றாண்டில் சந்தத் தேவாரப் பாடல்களிலிருந்து சந்தத் திருப்புகழ்கள் தோன்றின. எனவே 12, 13 ஆம் நூற்றாண்டுகளில் வழக்கில் இருந்து வந்த பதங்களை ஒட்டித் தருக்கள் என்னும் வடிவங்கள் தோன்றின; முன்னரே வழக்கில் இருந்த முதல்நிலைப் பாட்டு, இடைநிலைப்பாட்டு, முரிநிலைப்பாட்டு என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பல்லவி, அநுபல்லவி, சரணம் என்னும் சொற்கள் தென்னிசையில் இடம் பெறும் இசைப் பருவல், இசைத்தரு என்னும் சொற்களுக்குப் பதிலாகக் கீர்த்தனை என்னும் சொல் இடம் பெறும் வழக்கலாயின.

33. தென்னிசைக் கீர்த்தனை மூலவர் நால்வர்:

16ஆம் நூற்றாண்டில் முத்துத்தாண்டவர் முத்தமிழ்க் கவிராச சேகர பாப நாச முதலியார். தமிழ்ப் பெரும்புலமையுடன், இசைமாமேதைகளாக வாழ்ந்த கீர்த்தனை மழைபொழிந்த தமிழிசை மூலவர்கள் இவர்கட்குப் பின்வரே அருணாசலக் கவியும் (1712-79). இவரது சமகாலத்த மாரி முத்தாபிள்ளையும் பதங்களையும் கீர்த்தனைகளையும் இயற்றிய இசைத்தமிழ் வித்தகர்கள்.

34. அன்னமாச்சாரியார்:

தேவார இசை அடிப் புதிதாகத் தமிழில் 12-14 ஆம் நூற்றாண்டு வரை மலர்ந்து வந்த கட்டிகள், தருக்கள், சிந்துகள், சித்தர் பாடல்கள் - இவற்றின் நெறிமுறை பரவி இருந்த காலத்தில் தல்லக்குப்பம் அன்னமாச்சாரியார் (14[illegible] - 1503) பதங்களையும் கீர்த்தனைகளையும் இயற்றினார். இவை பெரும்பாலும் பாம்பாட்டிச் சித்தர் முதலிய சித்தர் பாடல்களைப் போன்றவையே. இவரைப் பின்பற்றிக் கிருட்டிணப்ப நாயக்கர் என்னும் வடுகத்தரைப் புரந்தர-தாசர் (1480 - 1564) முதலியாகக் கீர்த்தனைகளும் - இசைப் பயிற்சி-முறைகளையும் இயற்றினார். இவர்கட்கு எல்லாம் பிற்பட்டவர்களே பிறமொழி இசை வல்லுநராகிய தியாகராசர், சியாமா சாத்திரி, முத்துச்சாமி தீட்சிதர் முதலியோர்கள். இவர்களும் தத்தம் தாய் மொழியில் தென்னிசைக் கீர்த்தனைகளை வளர்த்தவர்களே. இங்ஙனம் கூறியவற்றால் தேவார இசையே தென்னகம் முறையிலும் உள்ள இசைக்கு அடிப்படையும் வேரும் விதையும் ஆகும் என்னும் வரலாறு அறியலாகும். ஐயப்பாடு கொள்வோர் கலந்துரையாடிக் கருத்து நல்கலாம்.

35. இனி செய்ய வேண்டுவன:

1. தேவார இசைவாணர்க்கு முறையான நெறியான இசைப்பயிற்சிகள் தொடக்கத்திலிருந்து தருவதற்குப் பாடத்திட்டத்துடன் இசைக்கல்லூரி வேண்டும். 2. தமிழிசை வரலாறு பற்றி இதுகாறும் ஒரு நூல் கூட வெளிவரவில்லை. 3. பழந்தமிழிசை இலக்கணம் மிகச் சிறந்தது; ஆழமும் நுணுக்கமும் முறைமையும் உடையது. என்பதை இன்று நம்நாடு உணரவில்லை. கல்லூரிகளில் இன்று நடைமுறையில் உள்ள இசையிலக்கணங்கள் 300 ஆண்டுக்கு உட்பட்டவையே. தென்னக இசை, தமிழ்வழியாக வளர்ந்து வந்துள்ள வளர்ச்சி நெறிமுறைகளைக் கற்பித்தல் வேண்டும். 4. இசைக்கல்லூரிகளில் தெலுங்கு இசைப்பிரிவு, தமிழிசைப் பிரிவு என்று பகுத்துக் கீர்த்தனைகளைக் கற்பித்தல் வேண்டும். 5. தேவாரப்

5:1:15

டகையர்களின், தமிழ் மொழி வெறுப்பாளர்களின் சொந்தப் பாடத்திட்டமே இவைக் கல்லூரிகள் அனைத்திலும் நடைமுறையில் இருந்து வருகிறது.

6. கொள்கைப் பிடிப்பும் மெய்ப்பற்றுமையும் கூடிய தமிழிசை தம்மால் துறைப் பேராசிரியர்கள் தலைமை ஆசிரியராக, இசைக் கல்வி இயக்குநர்களாக அமர்த்தும் காலம் மலர்வது ஆட்சிக்கு உவந்து தருவதாகும்.

*****

## "புல்லாங்குழல்"

5:2:1 கொ.சு. பக்கிரிசாமி பாரதி, எம்.ஏ., எம்ஃபில்.,
திருப்பரங்குன்றம்.

சுருக்கம்.

(1. சங்க இலக்கியம் கூறும் புல்லாங்குழல் இன்றும் நன்கு அமைப்பில் மாறாமல் இயற்கையாக இருக்கின்றது.

2. ஆயர்களின் கொன்றை, ஆம்பல், முல்லைத் தீங்குழல்கள் இன்றைய மூங்கில் புல்லாங்குழல்களே.

3. வைணவக் கண்ணனும், சைவ ஆயரும் "பக்கமுகப் புல்லாங்குழலை" ஊதியே உயிர்களை வசப்படுத்தியுள்ளனர்.

இசையே இறைவனை அடையும் எளிய மார்க்கம்.)

ஆயக்கலைகள் அறுபத்து நான்கில் புல்லாங்குழல் இசைப்பதும் ஒரு கலையாகும். "புல் ஆகிய குழல்" என்னும் பொருளில் புல்லாங்குழல் ஆயிற்று. புல்வகையைச் சேர்ந்த மூங்கிற் புல்லால் செய்யப்படுவது புல்லாங்குழல். இதனை வேய்ங்குழல், வெதிர்க்குழல், கழைக்குழல், வங்கியம் என்னும் அழைப்பர். இது இயற்கையே அளித்த இன்னிசைக் கருவியாகும். ஆயர் அல்லது கோவலரால் கண்டுபிடிக்கப்பட்ட இக்காற்றிசைக் கருவி, பிற்காலத்தில் அதன் இனிமை காரணமாகத் தீங்குழல், இன்குழல், அறல்குழல் என்றெல்லாம் சிறப்பிக்கப் படுகின்றது. நரம்பின் தீங்குழல் நிறுக்கும் குழலாகவும், "குழலளந்து நிற்க" என்றும் "குழல்வழி நின்றது யாழும்; தண்ணுமையும் முழவும் கூடி நின்றிசைக்க ஆமந்திரிகை" என்றும் சிறப்புப் பெறுகின்றது.

### குழலின் தோற்றம்:

முல்லை நிலத்தில் மூங்கிற்காடுகள் ஓங்கி வளர்ந்திருக்கின்றன. மேய்ச்சலுக்காக ஆநிரைகளை ஓட்டிக் கொண்டு ஆயர்கள் அங்குச் செல்கின்றனர். மூங்கில் மரங்களில் வண்டுகள் துளையிட்ட வாய் வழியே தென்றற்காற்று உட்புகுந்து இனிய கீதத்தை எழுப்புகின்றது. இதனைக் கவனித்த இடையர்கள் மூங்கிலை வெட்டி, செந்தீக்கோலால் சுட்டு, கருந்துளைகளை உண்டாக்கிப் புல்லாங்குழல் செய்வதற்குக் கற்றுக் கொண்டனர். இந்த வரலாற்றுச் செய்தியைச் சங்க இலக்கியமான பெரும்பாணாற்றுப்படை

"ஒன்று அமர் உடுக்கைக் கூழ் ஆர் இடையன்
கன்று அமர் நிரையொடு கானத்து அல்கி
அம்நுண் அவிர்புகை கமழக் கைமுயன்று
ஞெலிகோல் கொண்ட பெருவிறல் ஞெகிழிச்
செந்தீத்தொட்ட கருந்துளைக் குழலின்
இன் தீம்பாலை" (பெரும். 175-179)

என்று புலப்படுத்துகிறது. ஆரம்பத்தில் ஓரிரு துளைகளையே இட்டு ஊதினர். நாகரிக வளர்ச்சி பெறாத மனிதனின் பாடல்களும், இசையும் சிறியனவாகவே இருந்தன. பின்னர் ஐந்து துளைகளை இட்டு ஐந்திசைச் சிறுபண்களையும், பின்னர் எட்டுத் துளைகளை இட்டு ஏழிசைப் பெரும்பண்களையும் ஊதக் கற்றுக்கொண்டனர்.

<u>குழலின் அமைப்பு</u>:

குழலை மூங்கிலால் செய்வது இயற்கையானது. நல்ல காற்றதிர்வையும் இனிய நாதத்தையும் எழுப்பக்கூடியதுமான முதல் தரமானது. வெண்கலம் போன்ற உலோகங்களால் செய்வது உறுதியைத் தந்தாலும், இசை நயத்தில் இடைப்பட்டதாகும். கருங்காலி, செங்காலி, சந்தனம் ஆகிய மூவகை மரங்களில் கடைந்து செய்வது இசை மந்தமான கடைநிலையாகும். இம்மரங்களிலும் கருங்காலியே பெரிதும் வேண்டப்படுகிறது. இம்மரங்களில் உயர்ந்த சமநிலத்தில் பெருகாமமும், சிறுகாமமும் நடுவயதுடையதும், நாறு காற்று மயங்காத இடத்தில் வளர்ந்த மரங்களே தகுதியானவை. இம்மரத்தை வெட்டி, ஆளின் பருமனுக்குச் செதுக்கி நிழலில் ஆறவிட்டு, ஒரு ஆண்டு கழிந்துத் திருத்தல், பிளத்தல் கல்படுத்தல் செய்வது மரபு.

குழலின் நீளம் இருபது விரலும், சுற்றளவு நாலரை விரலும், துளையளவு நெல்லரிசி அளவுமாக மரத்திருத்திக் கடைந்து, வெண்கலத்தாலே அணைசு செய்து இடது முகத்தை அடைத்து வலது முகம் திறந்த வெளியாக இடம்பெறும். கணுமுனையின் சாம்பு, முகத்தில் இருவிரல்கள் விட்டு முதல்வாய் இடல் வேண்டும் இதற்குத் துளைவாய் என்று பெயர். முதல்வாய்க்கு ஏழங்குலம் விட்டு, வளைவாயினும் இரண்டு விரல் நீக்கி நடுவில் நின்ற ஒன்பது விரலிடத்தில் எட்டு துளைகள் இடம் பெறும். துளைகளின் இடைப் பரப்பு ஒரு விரலகலமாகக் கொள்ளப்படும்.

இடக்கையின் பெருவிரல், சிறுவிரல் நீக்கி ஏனைய மூன்று விரல்களையும் வலக்கையில் பெருவிரல் தவிர ஏனைய நான்கு விரல்களையும் கொண்டு முன்னின்ற ஏழு துளைகளையும் வரிசைப்படி மூடி, வளைவாயைச் சேர்ந்த துளையை முத்திரையாகக் கொண்டு நீக்கி வாசிக்கவேண்டும். இந்த வங்கியத்தில் ஏழு துளைகளிலும் "சரிகமபதநி" எனும் அவற்றின் எழுத்துத் தோன்றி, இவ்வெழுத்துக்களை மாத்திரைப்படுத்தித் தொழில் செய்ய, அவற்றின் இசையில் பண்கள் தோன்றும்

5:2:3 குழலின் முழுத் துளைகளை முடியும் திறந்தும் ஒலித்தால் அரிகாம்-போதிப்பண் ஒலிக்கும். அரி-வண்டு; காம்பு-மூங்கில்; தி-தரப்படுவது அரிகாம்பூதி (அரிகாம்போதி) பண்ணாகும். சிலர் அரி என்பதற்கு திருமால் என்னும் பொருள் கொண்டு, திருமாலால் மூங்கில் குழலில் தரப்படும் பண் அரிகாம்போதி என்றும், கூறுவர். இந்தச்-செம்பாலைப்பண்ணே தமிழன் கண்ட முதல் ராகமாகும். இதனையே அடிப்படையாகக் கொண்டு, வலமுறையாகக் குரல்திரிபு, (ராகபேதம்) செய்து 7 பாலைப்பண்களையும், 103 பண்களையும் 11991 ஆதி இசைகளையும் இசைத்து மகிழ்ந்தனர்.

முதலில் ஒவ்வொரு பண்ணிற்கும் ஒரு குழல் என இருந்தது. (இது ஏகராக மேள வீணை போன்றது) பின்னர் குழல் துளைகளைப் பாதி மூடிச் சுரங்களை வாசிக்கக் கற்றுக் கொண்டனர். (இது சர்வராக மேள வீணை போன்றது) இதனால் ஒரே குழலில் எல்லாப் பண்களையும் (72 மேளகர்த்தா) அதன் கிளைப் பண்களையும் வாசிக்கக் கற்றுக் கொண்டனர். இந்த வகைக் குழலைப் 'பக்க முகக் குழல்' (Horizontal Flute or Side Flute ) என்பர். 'கண்ணார் குழல்' (பரி. 17;11) என்பது கணுக்களை உடைய மூங்கில் குழலாகும்.

"கண்ணுவந்த குழைக்கிலை யாமெக்குழ்" (பஞ்சமரபு பா. 23) (சிலப் 3,26 அடியா.உரை.பக்.100) என்பதில் குழலுக்குகுழை, மூங்கில் என்றும், அதுவே கண்ணுக்கு உகந்தது என்றும் கூறுகின்றார். அதுவே இசைந்திறன் கொண்டதும் இன்னிசை மிக்கதும், இசைவிக்கைக்கு உகந்ததுமாகும். சங்க இலக்கியங்கள் கூறும் மேற்கண்ட குழல் அமைப்பு முறையே இன்றும் மாறாமல் வழக்கிலுள்ளது.

<u>குழலின் வகைகள்:</u>

1. <u>ஆயர்குழல்</u> (Shepherd's Flute).

சங்ககால இலக்கியங்களில் கோவலர், அல்லது ஆயர் குழலுக்கும், அவற்றின் இசைக்கும் தனி இடம் தரப்பட்டுள்ளது. ஆயர்கள் கொன்றையங்குழல் ஆம்பற்குழல், முல்லையங்குழல் ஆகிய மூன்றையும் ஆநிரையைக் காத்து வந்துள்ளனர். கொன்றை மரத்தின் பழம், ஆம்பல்செடி, முல்லைக்கொடி ஆகிய மூன்றும் ஆகுழலாகப் பயன்படுத்தமுடியுமா? முல்லைத் தீம்பாணி 1 என்ற குறிப்பால் முல்லைப் பண்ணையும், 'ஆம்பலந்தீங்குழல் தெள் விளியிற்ற' 2 என்ற குறிப்பால் ஆம்பல் பண்ணை ஆநிரையைப் பழக்குவார்கள்

5:2:4

என்று கொள்வோமானாலும் கொன்றைப் பழம் என்பது ஒன்றில்லை. எனவே இவைகளைப் பகுக்கக் கொள்ளமுடியாது. கொன்றை மரத்தில் குழல் செய்து வாசித்திருப்பர் என்ற கருத்தும்; முல்லைக் கொடியும், ஆம்பல் செடியும் குழல் செய்ய இயலாது. எனவே இவைகளைப் பிண்டமாகவும் கொள்ளமுடியாது. 'கொன்றைத் தீங்குழல் 3, கொன்றையங்குழல் 4, கொன்றையந் தீங்குழல் 5, கொன்றைக் குழலூதி 6, கொன்றைக் கொடுங்குழல் 7, கொன்றையம் தீங்குழல் 8, கொன்றைப் பழக்குழல் 9, கொன்றைவேய்ந் தீங்குழல் 10, போன்ற குறிப்புக் களால், கல்லாக் கோவலர் முல்லை நிலத்தொடு தொடர்பு கொண்டு கொன்றைக்குழலூதி வந்ததை அறியமுடிகின்றது. 'கொன்றைப் பழக்குழல் கோவலர் என்பதற்குக் கொன்றையின் வற்றிய பழக்குழல் என்று பொருள் கூறுவர் கொன்றைப் பழக் கொட்டை வற்றிய குடுக்கை போன்றிருக்கும். அதில் துளையி துளையிட்டு ஊதினால் ஒரு ஓசை பிறக்கும். ஆனால் விரல் துளைகளுக்கு இடமில்லாத-தால் இசை வேறுபாட்டையோ, இசை நயத்தையோ வாசித்துக் காட்ட இயலாது. எனவே 'தீங்குழல்' என்ற இசைச் சிறப்பும் பெற்றிருக்க முடியாது.

கோவலர் ஆம்பல் குழலூதியை செய்தியைக் குறிஞ்சிப்பாட்டும், சிலப்பதிகாரமும் குறிப்பிடுகின்றன. ஆம்பல் செடியின் தண்டு துளையுடையது. அதனை குழலாகப் பயன்படுத்தமுடியும். ஆனால் இன்னிசை நயம் எழுப்ப இயலாது இலைகளைச் சுருட்டி, ஒரு பக்கத்தில் சப்பட்டையாக மடித்து ஒத்து நாகசுரம் போன்று ஒரே இசையை எழுப்பலாம். ஆனால் விரல் துளைகளுக்கு இடமில்லாததால் பண்ணிசை பிறக்காது. 'மேலும் பூவரசு இலைச்சுருளி? பூசணி இலைக் காம்புக் குழல் நாணல் தண்டு இவைகளுக்குக் கிடைக்காத இச்சிறப்பு அல்லிமலர்த் (ஆம்பல்) தண்டுக்கு மட்டும் கிடைத்திருக்குமா? என்பதும் வியப்பாகிறது. 'நேர்முகக் குழல்' வகையைச் சேர்ந்த கொன்றைக் கொட்டையும், ஆம்பல் தண்டும் 'தீங்குழல்' என்று ஒரு நாளும் சிறப்புற அமையாது.

கோவலர் முல்லைக்குழல் ஊதிய செய்தியை மணிமேகலையும், சிலப்பதி-காரமும் கூறுகின்றன. இது முல்லைக் கொடியால் முப்பிரியாகத் தெற்றிச் செய்யப்பெற்ற குழல் என்று உரை கூறுகின்றது. முல்லைக்கொடி துளையும் துளையற்றதுமாகும். இதில் குழல் செய்து ஊதியது முல்லைக் குழல் என்று கூறியிருப்பது வியப்பையே அளிக்கின்றது. மாறாக முல்லை நிலத்தைச் சேர்ந்த மூங்கிற் புல்லால் குழல் செய்து ஊதியது முல்லைக்குழல் என்றும், இவற்றுடன் கொன்றைக் குழலும், ஆம்பல் குழலும் சேர்ந்து மூவகைக் குழலாகப் பொருள் கொள்ளலாம். கொன்றை குடுக்கையாக மகுடி போன்றும், ஆம்பல் நேர்முகக்

குழலாகவும், முல்லையங்குழலான மூங்கில் பக்கமுகக் குழலாகவும் மூன்று வகையில் அமைகின்றது.

சிலப்பதிகார ஆய்ச்சியர் குரவை கண்ணன் ஒருவனே கொன்றையந்தீங்குழல் ஆம்பலந்தீங்குழல், முல்லையந்தீங்குழல், ஆகியவற்றை எப்பால் மூன்றும் ஒரே குழலைக் குறிப்பிடுவனவையோ என்ற உணர்வு தோன்றுகிறது. அறிஞர் 'கண்ணன் உவந்த குழல்' என்பதால் மூங்கிலே கண்ணன் விரும்பிய புல்லாங்குழல் என்பதும் அறிய முடிகின்றது. மேலும் கம்பர் '<u>கொன்றை வேய்ங்குழல் கோவலர் முன்றில்</u>' (சு.கா.65) என்று குறிப்பிடுவதால் மூங்கிலுக்குக் கொன்றை முன்னடையாகத் தரப்பட்டுள்ளதை உணரமுடிகின்றது. எனவே குழலின் இடப்பக்கம் வெண்கலத்தால் ஆம்பல்பூ, முல்லைப்பூ, கொன்றைப்பூ, வடிவில் அணிசெய்து அழகுடன் அடைத்திருப்பரோ என்னும் தொழில் நுட்பத்திறன் அதற்கு இடந்தருவதாய் இல்லை.

அவ்வாறாயின் அது தற்காலத்திலுள்ள புல்லாங்குழலைப் போன்றதாகவே இருந்திருக்க வேண்டும். கொன்றை, முல்லை, ஆம்பல் ஆகிய மூன்றும் முல்லை நிலத்தைச் சார்ந்தவை. ஆயர்கள் வீட்டுக்கு வெளியே இயற்கையுடன் இயைந்து கழிக்கும் வாழ்வினைக் கொண்டவர்கள். ஆகவே இவர்கள் கொன்றை, ஆம்பல், முல்லை ஆகியவற்றின் மலர்களைக் குழலில் செருகி (நாட்டுப்புற இசைக்கருவி அமைப்பில்) ஆடு மாடுகளை மேய்க்கும் பொழுது அவற்றில் இசையெழுப்பி மகிழ்ந்திருப்பர் என்பது தவறாகாது. (இன்றும் கண்ணனின் குழலில் மயில் இறகு செருகுவதும், குஞ்சம் அல்லது அணி, பூக்கள் கட்டி அழகுபடுத்துவதும் நடைமுறையிலுள்ளன) மூங்கில் குழலின் வாய்ப்பு முகத்தில் கொன்றை, முல்லை, ஆம்பல் ஆகிய மலர்களைச் சொருகி, அழகுபடுத்தி, இசைத்திருப்பர். இனிமைக்கும் இத்தகைய குழல் ஒலியில் சிறப்பிடம் பெற்று 'தீங்குழல்' என்று போற்றப்பட்டிருக்கும் என்பதும் உண்மையாகின்றது. இத்தகைய வேய்ங்குழலை ஊதித்தான் ஆயர்களின் தலைவர்களான கண்ணனும், ஆயரும் உயிர்களையும் மனிதர்களையும், தேவர்களையும் கவர்ந்திருக்கின்றனர்.

<u>ஆயரும் குழலும்</u>:

சங்க காலத்தில் கண்ணனும், இடைக்காலத்தில் ஆயரும் கோவலர் குலத்தில் பிறந்து, ஆயர் குலத்தைக் காக்கும் காவலர்களாக விளங்குகின்றனர். முல்லை நிலத்தில் வாழ்ந்த, ஆயர்களின் இயல்பான பொது இயல்புகளிலிருந்து மாறி தங்களுடைய சிறப்புத் தன்மையால் அக்குலத்திற்குச் சிறப்பும், புகழும் பெற்றுத் தருபவராகக் காட்சியளிக்கின்றனர். கோவலர்கள் இவர்களுக்கு ஏவல் புரிகின்றனர். இருவருமே குழலிசையில் வல்லுநர், கலையாற்றல் மிக்கவர் என்பது வெளிப்படுகின்றது. இவரின் புல்லாங்குழலும் இசை நூல் விதிப்படி இலக்கண முறைப்படித் துளையிடப்பட்டவை. அதிகப்படியாக அசையையும் எழுப்ப வல்லவை. இவை தற்காலத்திலுள்ள 'பக்கமுகப் புல்லாங்குழல் வகையே' ஆகும்.

இசைத்திறன் அறிந்த கோவலர்களும், ஆயர்களும் இக்குழலிலேயே இசை வித்தை புரிந்து மகிழ்ந்திருக்கின்றனர் என்பது தெளிவாகின்றது. கண்ணன் வைணவம் என்றால் ஆனாயர் சைவம்-கண்ணன் இறைத் தன்மை நிறைந்தவன் என்றால் ஆனாயர் மானிடத் தன்மை நிறைந்தவர். ஆனால் இருவரின் குழலிசைக்கும் உயிரினங்கள் அனைத்தும் மனம் உருகி, இசை பருகி நிற்கின்றன. ஆநிரை, மான், மயில் போன்ற விலங்குகள் பறவைகள் அனைத்தும் இசைக்கு மயங்குகின்றன.

ஆனாயரின் குழலில் இசை அமுதமாகப் பொங்கிப் பாய்கின்றது. அது அமுத இசையாகும். ஐந்தெழுத்தை நினைந்து பாடும் தமிழிசையாகும். அதனைக் கேட்டு அனைத்து உயிர்களின் உள்ளமும் உருகுகின்றது. இவ்வுலக வாழ்வில் அனைத்தையும் இறைவருக்கே உரிமையாக்கி மனம் களிக்கின்றார். மனத்தில் இறையுணர்வே ஆட்கொண்டுள்ளது. மனக் கடலை ஒரு நிலைப்படுத்தும் கருவியாக இசையைத் துணை கொள்கின்றார். வழக்கம்போல் ஆநிரையை ஓட்டிக்கொண்டு காட்டிற்குச் செல்கின்றார். ஒரு நாள் கொன்றை மரம் பூத்திருக்கக் காணுகின்றார். அதனைக் கொன்றை மலர் சூடிய சிவபெருமானாகவே கருதுகின்றார். அக்கருத்தை மயக்கமறத் தன் நெஞ்சில் இருத்திக் குழல் ஊதுகின்றார். இசையமுதைக் குழல் வழியாக வழியவிடுகின்றார்.

"அன்பூறி மிசைப்பொங்கும் அமுதவிசைக் குழலொலியால்
வன்பூதப் படையாளி எழுந்தைந்தும் வழுத்தித்தாம்
முன்பூதி வருமளவின் முறைமையே எவ்வுயிரும்
என்பூடு கரைந்துருக்கும் இன்னிசை வேய்ங்கருவிகளில் (ஆ.புரா.22)

என்பார் சேக்கிழார். இதில் "வேய்ங்கருவிகளில்" என்று பன்மை சுட்டுவதால் கொன்றை, முல்லை, ஆம்பல் மலர்கள் செருகப்பட்ட மூவகைக் குழலையும் ஆனாயர் வைத்திருப்பாரோ என்னும் எண்ணம் தோன்றுகின்றது. முல்லைப் பண்ணை முறைமை வழுவாது நமசிவாய—சிவாயநம என்ற ஐந்தெழுத்தாகக் குழலில் இசைக்கின்றார். இது முல்லை நிலத்திற் சிறு பண்ணாகிய 'முல்லைத் தீம்பாணி. மோகனராகமாகும்'. இதனைக் கேட்டு அனைத்துயிரும் இசைமயக்கத்தில் திளைக்கின்றன. இசை இறைவனைச் சென்றடைகின்றது. ஆனாயருக்கு இறையுணர்வு மேலிடுகின்றது. இந்நிலையில் இறைத்தோற்றம் ஆனாயருக்குக் கிடைத்து, இறைவனால் ஆட்கொள்ளப்படுவதாகப் பெரியபுராணம் கூறுகின்றது.

2. <u>நேர்முகக் குழல்</u> (Duct Flute or Beak Flute)

சங்கு, மிருகங்களின் கொம்பு, பறவைகளின் நடுத்துளையுள்ள சிறிய எலும்பு; களிமண் குழல்கள் ஆகியவைகளுக்கு அடுத்த நிலையில் மூங்கிலால் நேர்முகக் குழல்கள் செய்யக் கற்றுக் கொண்டனர். நீளம் சற்றுக் குறைவாகவும் சுற்றளவும், சுவர்ப் பகுதியும் சற்று தடித்துமிருக்கும். வாயின் நேராக வைத்து

5:2:7

ஊதுவர். முகம் சப்பட்டையாக மடிக்கப்பெற்று, கொடிக்கு அமைக்கப்-பட்டிருக்கும். எட்டு விரல் துளைகள் இடப்பெற்று வளைமையாக ஊதப்பெறும். ஓசை தாழ்வாகவும் இனிமையாகவும் ஒலித்து ஆடுமாடுகளை ரசிக்கும்படிச் ஈர்க்கும். இசைவளம் குறைந்துபோன காரணத்தால் தற்காலத்தில் இதனையே ஆயர்கள் ஊதுகுழலாக கொண்டுள்ளனர். இதன் பிற்கால வளர்ச்சியே - உலோகங்களாலான கொம்பு, பிறைக்கொம்பு, கோணக் கொம்பு, கரிகாளம், எக்காளம், தாரை, துத்தாரி, திருச்சின்னம், பூரி, நாகபனி டிரம்பட், சேக்சபோன், ஆகியவைகளும் மரத்தினால் செய்யப்பெற்ற நாகசுரம், ஒத்த நாகசுரம், முகவீணை, செறும் ஷானாய் வகைகளும் ஆகும்.

3. குறுங்குழல் (Short Flute)

இதனை இலக்கியம் 'சீர்சால் சிறுகுழலோசை' 11, சிறுவெதிர்ங்குழல் 12, பைதலந்தீங்குழல் 13 என்றெல்லாம் குறிப்பிடுகின்றது. சிறுகுழல் ஐந்து துளைகளை உடைய மூங்கில் குழலாகும். இதனை ஆயர்களும், பழங்குடி மக்களும் ஊதுகின்றனர். உருமி, கோமாளியாட்டங்களில் ஊதப்படுகின்றது.

4. நெடுங்குழல் (Nedumkuzhal)

இது மூன்று அடி நீளம் கொண்ட மூங்கில் குழலாகும். குழலின் மையத்தில் வாய்த்துவாரம் அமைக்கப்பட்டிருக்கும். காற்று மேலும், கீழுமாக இரண்டு பக்கமும் செலுத்தப்படும். மேல்பகுதி சுருதியை இசைப்பதற்கும், கீழ்ப்பகுதியில் விரல் துளைகள் இடப்பெற்று இன்னிசை எழுப்புவதற்குத் தக்கவாறும் அமைந்திருக்கும்.

5. நீண்ட குழல்: (Nīnda Kuzhal or Long Flute).

இதனை வங்கியம், நெடுவங்கியம், தாம்பு என்றும் அழைப்பர். இது மூங்கிலை அடித்துச் செய்யப்பட்ட இசைக்குழல், யானையின் மூச்சைப் போன்று இரைந்து, கடினமான ஒலியை எழுப்பும். கிராமியப் பகுதிகளிலும் ஆடுகளமான உருமி, கோமாளி வேத்ராட்டம் போன்ற நிகழ்ச்சிகளிலும் இசைக்கப்படுகின்றது. கருங்குழல் தாம்பு, யானையின் பிளிக்கையைப் போன்றிருக்கும் (Long Flute)

6. இரட்டைக் குழல்: (Double Flute

இது இரண்டு குழல்களாக அமைக்கப் பெற்ற ஒரு இசைக்கருவி. முகத்தின் நேராக வைத்து ஊதுவர். வாய் வைத்து ஊதும்பொழுது ஒன்று சுருதியையும் மற்றது இசை வாசிப்பதற்கும் பயன்படும். இசைக்குழலில் விரல் துளைகள் அமைக்கப்பட்டிருக்கும். இதன் வளர்ச்சியே மகுடி இசைக்கருவியாகும்.

7. முக்குக் குழல்: (Nose Flute)

இதில் மூக்கில் நாசித் துவாரத்தின் வழியாக காற்றை இசைக்குழாய்க்குள் செலுத்தி, இசைப்படுத்தி வாசிக்கப்படும்.

8. அடுக்குக் குழல் (Reed Dulcimer)

இது பல குழல்களாக இணைந்து அமைந்தது. இதன் முகத்தில் கொழுக்கை அமைக்கப்பட்டு, பல குழல்களாக வைத்துக் கட்டப்பட்டிருக்கும். குழல்களின் அளவு இடமிருந்து வலமாக பல அளவு நீளங்களில் ஆரோகணக்கிரமத்தில் அமைக்கப்பட்டிருக்கும். தாழ்ந்த ஒலியை எழுப்பும் பெரிய குழல்கள் வலப்புறமும், நெடிய ஒலியை எழுப்பும் சிறிய குழல்கள் இடப்புறமும் இருக்கும்படி வைத்து, படிப்படியாக அடுக்கிக்கொண்டு செல்வர். இதன் பிற்கால வளர்ச்சியே பேன்பைப்ஸ். ஆர்மோனியம், பியோனே, சுருதிப்பெட்டி, மவுத் ஆர்கான் போன்றவைகள் ஆகும்.

மேற்கண்ட எட்டு வகையான புல்லாங்குழல் வகைகளையே ஆதிகாலம் தொட்டு இன்றுவரை இலக்கியங்கள் வாயிலாகவும் நடைமுறைவாயிலாகவும் அறியமுடிகின்றது. கொன்றைக்குழலும், ஆம்பற்குழலும் 'தீங்குழல்' (Sweet Tonea Flute) என்று போற்றப்பட்டிருப்பின் இன்றும் நடைமுறை வழக்கில் இல்லாதுபோயிருக்குமா? எனவே அவைகள் தற்கால புல்லாங்குழல்களே ஆகும். கணுமுளையில் கொன்றை, முல்லை, ஆம்பல் மலர்களைச் செருகி (நாட்டுப்புறக் கருவி அமைப்பில்) ஊதியதால் அப்பெயர்களைப் பெற்றிருக்கும். சங்க இலக்கியங்களில் கூறப்படும் புல்லாங்குழல் அமைப்பே இன்றும் நடைமுறையில் (யாழைப்போல் அழியாமலும் வீணையைப்போல் மாற்றம் பெறாமலும்) நிலையாகவும் இயற்கையாகவும் உள்ளது. இந்த வகைப் புல்லாங்குழல்களை ஆதியே மாயக்கண்ணனும், புலித ஆயரும் உயிர்களை மெய்மறக்க வைத்திருக்கின்றனர். இத்தகைய இயற்கையின் கண்டுபிடிப்பான புல்லாங்குழலை, அதி இறைவனைக் கண்டுபிடிக்கும் எளிய மார்க்கமாக நாம் அனைவரும் இசைக்கடலில் திளைப்போம். வாரீர்!

5:2:9

1. சிலப்பதிகாரம் (17, பா. 17; 5)
2. குறிஞ்சிப்பாட்டு (222)
3. கலித்தொகை (106; 3)
4. அகநானூறு (54; 11)
5. நற்றிணை (364; 10) சூளாமணி (14;2) சூளா (34;3)
6. ஐந்திணை எழுபது (22.1)
7. ஐந்திணை எழுபது (30;3)
8. சிலப்பதிகாரம் ஆய்ச்சியர் குரவை (பா. )
9. வளையாபதி (72;3)
10. கம்பராமாயணம் (65)
11. ஐந்திணை ஐம்பது (7;3)
12. கலித்தொகை (119, 3)
13. கலித்தொகை (129; 16)

***

* தமிழர் புறத்திணை விளக்கமாக வெட்சிப்பூ, கரந்தைப்பூ, வஞ்சிப்பூ, காஞ்சிப்பூ, நொச்சிப்பூ, உழிஞைப்பூ, தும்பைப்பூ ஆகியவற்றைச் சூடுவது மரபு. போருக்கு உடன் செல்லும் இசைப்பாணர், பொருநர், விறலியர், துடியர், கிணைவர், கடம்பர் (முரசு) முதலியோரும் இப்பூக்களைச் சூடிச் செல்வது சங்ககால வழக்கமாகும்.

## நாகசுரம்.

தருமை அ. கோவிந்தராசன்
தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி நாகசுர விரிவுரையாளர்
மதுரை.

5:3:1

**முன்னுரை:**

தமிழ்நாட்டின் தனிப்பெருஞ் சிறப்புடைய புராதன இசைக்கருவி நாகசுரம். காற்று இசைக் கருவிகளிலேயே மங்கலம் நிறைந்த இசைக்கருவி 'நாகசுரம்'. ஓம்கார நாதத்தை எழுப்பக்கூடியதும், இந்து மதக் கலாச்சாரத்துடன் — நெருங்கிய தொடர்பு கொண்டதும் நமது நாகசுர இசைக்கருவியாகும்.

இது மிகத் தொன்மை வாய்ந்தது; மற்ற இசைக் கருவிகளைக் காட்டிலும் சிறப்பாக ஒலிப்பது; இனிய ஒலியைக் கொடுப்பது; எல்லா வகைக் கமகங்களையும் இசைப்பது; உலகில் வேறு எங்கிலுமே காணப்படாதது. தமிழரின் தனிப்பட்ட இசைக் கருவியாக முழங்கி வருவது போன்ற பல காரணங்களினால் ஏழை, பணக்காரர், கற்றவர்; கல்லாதவர், கிராமத்தார், நகரத்தார் என்ற பேதமின்றி அனைவராலும் ரசித்து மகிழப்படுகின்றது.

பிரணவமென்றும் ஓம்கார நாதத்தின் உட்பொருளாம் இறைவனின் ஜோதிசொரூபத்தின் 33 கூறுகளால் இணைக்கப்பெற்ற 'மேரு' எனும் ஜீவ தண்டத்தின் பிரதிபிம்பமே நாகசுரம் எனக்கொள்ளப்படும். 'மூல வாத்தியத் தலைக் கருவியாம்' இறைவனால் தோற்றுவிக்கப்பட்டது. இதனை ஓம் எனும் பிரணவ ஓசை தரும் 'உத்தம நாகசுரத்தில்' நாதத்தில் சுரக் கோர்வைகளை இணைத்து ராக மாறுபாடற்ற முறையில் வாசிக்கக் கேட்டால் தேவாமிர்தம் போல' செவிக்குத் தீஞ்சுவையாக இனிக்கும்.

இத்தகைய சிறப்பு மிக்க நாகசுரத்தை தோன்றிய காலம், பெயர்க்காரணம், அமைப்பு முறை, சிறப்பு அம்சங்கள், வாசிக்கும் முறை, இதில் சிறந்த கலைஞர்கள், ஆலய இசைமுறை, நாம் செய்யவேண்டுவது ஆகிய தலைப்புகளில் இச்செய்திகளைக் காண்போம்.

**நாகசுரம் தோன்றிய காலம்:**

ஆதி காலத்தில் இயற்கைப் பொருளான சங்கு, மிருகங்களின் கொம்பு, பறவைகளின் எலும்பு ஆகியவற்றை ஊதி இசை எழுப்ப மனிதன் கற்றுக் கொண்டான். இதுவே காற்றுக் கருவிகளின் அடிப்படைத் தோற்றமாகும். பண்டைக் காலத்தில் வழிபாட்டின்போதும், குடும்பச் சடங்குகளின்போதும், போரின் போதும் சங்கினை ஊதினர். பின்னாளில் மிருகங்களின் கொம்புகள் தோன்றின. எருமை, காளை, மாடுகளின் மிக நீண்ட வளைந்த கொம்புகளைத் துளையிட்டு —

5:3:2

இசைக்கருவியாக ஆயின. பின்னர் உலோகங்களிலும் மர வயிரத்திலும் இது செய்யப்பட்டது. இத்தகைய கருவிகள் 'நேர்முகக் குழல்கள்' என்று அழைக்கப்பட்டன. முகத்தின் நேராக வைத்து ஊதுவர். குழலின் முகத்தைச் சப்பட்டையாக (சிப்பு வைத்து) மடித்துச் சீழ்க்கை ஒலியை உண்டாக்குவர். வாய் வைத்து ஊதும் இடம் கொடுக்கை போல் இருக்கும். இதன் பரிணாம வளர்ச்சியில் தோன்றியவைகளே மரவயிரத்தாலான நாகசுரம், ஒத்து நாகசுரம், முகவீணை, செகும், மகுடி போன்றவைகளும் உலோகத்தாலான கொம்பு, பிறைக் கொம்பு, கோணக் கொம்பு, காளம், கரிகாளம், எக்காளம், தாரை, பூரி, துத்தாரி, திருச்சின்னம், நாகபாணி போன்றவை-களும் ஆகும்.

கடைச்சங்க நூலான கூத்த நூலில் குழல், ஏனை, கொறுவினை, முன்னை நாக்கு, நீக்கு, நாகம் (நாகசுரம்), சுருதை, வத்திரி எனும்9 வகை காற்றுக் கருவிகளைச் சாத்தனார் குறிப்பிடுகின்றார். எனவே சங்க காலத்தில் நாகசுரம் 'நாகம்' என்றே அழைக்கப்பெற்றது. இதன் தோற்றமும் நாகம் போன்றே வளைந்து அமைந்திருக்கும். வாய்ப்பகுதி அகன்றும், வால் பகுதி குறுகியும் இருக்கும். வால் பகுதியில் கொடுக்கை அமைத்து, வாய் வைத்து ஊதுவர். விரலால் துளைகளை மூடியும், திறந்தும் இனிய நாதத்தை எழுப்பலாம். இதன் மாதிரி வடிவங்களைச் சிறப்பாகச் செய்து அசைத்து சென்னை 'வாத்தியாலயம்' நிறுவனத்தார் வெற்றியைக் கண்டுள்ளனர்.

பிற்காலத்தில் நாகம், 'நாகசின்னம்' என்னும் வடிவத்தினையும் பெயரினையும் பெற்றது. நாகம் போன்ற வளைவு நீங்கி முறைப்படுத்தி இசைப்பதற்காக நீண்ட வடிவத்தினைப் பெற்றது. சின்னம் அல்லது திருச்சின்னம் என்ற இரட்டைப் பித்தளைக் கருவிகள் 2½ அடி நீளம் கொண்டதாக, இரண்டு குழலையும் ஒரே நேரத்தில் வாயில் வைத்துப் பிளிறும் ஒலியை உண்டாக்கி ஊதுவர். ஆதலால் நாகசின்னம் என்பது ஒரு குழல் சுருதிக்காகவும், மற்றொரு குழல் இசைப்படுத்தி வாசிப்பதற்காகவும் அமைக்கப்பெற்றது. பிற்காலத்தில் இதன் இசைத்தன்மை மிகுதி காரணமாக இரண்டு குழல்களையும் தனித்தனியாக இருவர் வைத்து வாசிக்கும்முறை வந்தது. நறுக்கு என்னும் நாணல் தண்டைச் சப்பட்டையாக மடித்து ஒலியை உண்டாக்குவர்.

இசைப் பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி நாகசுரம் மகுடியிலிருந்து வளர்ச்சி பெற்றது என்று கூறுவதும், 'கருணாமிர்த சாகரம்' எழுதிய அபிரகாம் பண்டிதர் பூவரசு இலைச்சுருள் மடித்து அதிலிருந்து நாகசுரம் வளர்ச்சி

5:3:3 ---

பெற்றது என்ற கருத்தும், எந்த வகையிலும் பொருந்துவதாக அமையவில்லை. சிலர் நாகசுரம் 600 வருடங்களுக்கு முன்புதான் புராதன வழக்கிற்கு வந்தது என்றும் தவறுதலாகக் கூறி வருகின்றனர்.

சங்ககால இலக்கியங்களில் குழல், சங்கு, தூம்பு, வயிர் என்னும் நான்கு காற்றிசைக் கருவிகளை அறிய முடிகின்றது. மூங்கிலால் ஆன தூம்பு சிறு வங்கியம் என்றும், நெடு வங்கியம் என்றும் இரு வகைப்படும். மர வயிரத்தால் ஆன வயிர் கொம்புகளைப் போன்ற இசைக்கருவியாகும். சங்கினை ஊதுபவர் கோடியர் என்றும், கொம்புகளை ஊதுபவர் வயிரியர் என்றும் அழைக்கப்பட்டனர்! இவ்வாறே நாகசுரத்தை வாசிப்பவர் நாகர் என்று அழைக்கப்பெற்றனர்.

<u>நாகசுரம் பெயர்க் காரணம்</u>:-

சுமார் 5,500 ஆண்டுகளுக்குமுன்னால் தமிழ் நாட்டின் தெற்குக் கடற்கரை ஓரப்பகுதியில் "நாகபாசுரம்" என ஓர் ஊர் இருந்தது. அவ்வூரில் பெரும்பகுதி குடிமக்கள் நாகபாசத்தினர் எனும் மரபைச் சேர்ந்தவர்களாகவே வாழ்ந்து வந்தனர். அவ்வூரே தற்பொழுது நாகப்பட்டினம், நாகூர்ப் பகுதிகளாகத் திகழ்கின்றது. இந்நாகர்கள் வாசித்ததால் இசைக் கருவிக்கும் நாகசுரம் எனப் பெயர் வந்தது.

நாகம் நாக்கினை நீட்டவும், முடக்கவும் செய்கின்ற காரணத்தால் "முடக்கவும் நீட்டவும் செய்வது நாகம்" என பிங்கலம் (38) நிகண்டு கூறுகின்றது. இவ்வாறே நாகசுரத்தில் வாசிக்கும் நாக்குப் பகுதி வாயினுள் செல்வதும், வெளிவருவதுமாக உள்ளதால் நாகசுரம் எனப் பிற்காலத்தில் விளக்கம் அளிக்கின்றனர். இக்கலையைக் கையாளும் நாகபாசத்தினரை நாகம் தீண்டுவதே இல்லை. மாறாக நண்பனாகவும் இருந்து வருவது தெரியவருகின்றது.

கலியுகத்திற்கு முன் ஜலப் பிரளயம் ஏற்பட்டது. அதற்கு முன்பே நாகசுரம் வழக்கத்திலிருந்து வந்திருக்கின்றது. அதாவது 5387 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே நாகசுரம் வாசிக்கப்பட்டு, வழக்கத்தில் இருந்து வருவதாக மோசே முனிவரின் ஆதியாகமம் (சுவிசேஷம்) நூலிலிருந்து தெரியவருகின்றது. பாபிலோன் தலைநகரின் நேபுகாத் நேசர் நிறுவிய பொற்சிலை முன்பு நாகசுரமும், மற்ற இசைக்கருவிகளுடன் வாசிக்கப்பட்டதாகச் சத்திய வேதம் கூறுகிறது. பாபிலோன் மன்னர் காலையில் தூங்கி எழும்பொழுதும், மாலையில் உல்லாசமாக இருக்கும் காலத்தும் இரவு உணவுக்குப் பின்பு உறங்கச் செல்வதற்கு முன்பும் இசைக் கருவிகள் முழங்குவது வழக்கம்.

"தாவில் நல்லிசை கருதிய கிடந்தோர்க்குச்
சூதர் ஏத்திய துயிலெடை நிலையும்"

என்பது தொல்காப்பியம் (பொருள் 1034) கூறும் நூற்பாவாகும்.

5:3:4

பண்டைக் காலத்தில் இருந்த நரபலி மலிந்த வழிபாடுகள் பிற்காலத்தில் இறைவனுக்கு எடுக்கப்பட்டன. ஆலயங்களில் நாகசுரம் வாசிக்க முற்பட்டனர்.

<u>நாகசுரத்தின் அமைப்புமுறை</u>:

நாகசுரம் இறைவனின் பிரதிபிம்பமாக அமைந்ததால், எழுப்புக்கு நிகரான ஆச்சாமரம், கருங்காலி, சந்தனம் மற்றும் யானைத்தந்தத்தாலும் வெண்கலம், வெள்ளி, பொன் போன்ற உலோகங்களினும் செய்யப்பட்டது. பிற்காலத்தில் வாசிப்பதற்கு இனிய சுத்தசுவர நாதத்தைக் கொடுப்பதான ஆச்சா மரத்தாலேயே தொழில் வல்ல சிற்பிகளால் இலக்கண முறைப்படிச் செய்யப் பட்டது. சிலப்பதிகாரம் வங்கியத்தின் பண்ட அளவு கூறும்பொழுது,

"சொல்லு நீளளவு நாலிந்தாஞ் சுற்றளவு
நல்விரல்களுலரையாம் நன்னூலாம் — மெல்லத்
துளையளவு நெல்லரிசி ஆம்பிடமாம் (மாய) நல்ல
வளைவல வேய்வங் கியம்" என்று கூறுகின்றது.

நீளம் 20 விரல், சுற்றளவு 4½ விரல், துளையளவு நெல்லரிசியில் ஒரு பாதி; முடம் முந்தை வெண்கலத்தால் அதனைப் பண்ணி அடைப்பர். பிறகு தோன்றிய திமிரி நாகசுரம் 33 விரல் நீளத்தில் உச்ச சுருதியைக் கொடுத்து வந்தது.

தற்காலத்தில் திமிரி நாகசுரம் 18½ அங்குலம் 4½ கட்டை சுருதியில் தோன்றியது. பின் இடைபாரி நாகசுரம் 31½ அங்குலம் 2½ கட்டை சுருதியில் தோன்றியது. மிகச் சமீப காலத்தில் பாரி நாகசுரம் 34½ அங்குலம், 2 கட்டை சுருதியில் தோன்றியது. நாகசுரத்தில் சப்த சுரங்கள் என ஏழும், பிரம்ம சுரங்கள் என ஐந்தும் கூடிப் பன்னிரண்டு சுரங்கள் உண்டு. மந்திர ஸ்தாயி காந்தாரம் முதல் தார ஸ்தாயி காந்தாரம் வரை மட்டுமே இதில் சஞ்சாரம் செய்வதற்கு வாய்ப்புகள் உண்டு. திருவாரூர்த் தியாகராஜர் கோயிலிலும், குடந்தை நாகேஸ்வரர் கோயிலிலும் ஆழ்வார் திருநகரி கோயிலிலும் கல் நாகசுரம் கொண்டு வாசித்த செய்தியும் அறிய முடிகின்றது.

<u>சிறப்பு அம்சங்கள்</u>:

நாகசுரம் இறைவன் சொருபமாம் அமைந்துள்ளதால், ஆதியில் அதைப் புனிதத் தன்மை வாய்ந்ததாகக் கருதி வாசித்துள்ளனர். அவர்கள் மிகுந்த ஆசார சீலர்களாகவும், கடவுள் பக்தி, பண்பு, பணிவு, அகப்புறத் தூய்மையுடையவர்களாகவும் சிவசின்னம் அணிந்து, அவர்களைப் பார்ப்பவர்களும் பக்தியில் ஈடுபடும்

வகையில் பரம நிஷ்டர்களாம் விளங்கி இறைவனுக்கும், கேட்பவர்களுக்கும் பயந்த நாகசுரத்தை முறை வழுவாது வாசித்து வந்துள்ளார்கள். இத்தகைய நாகசுரக் கலைஞர்களை "நாகசுர வித்வான்கள்" என்று கூறுவதைவிட "நாத உபாசகர்கள்" என்று கூறுவதே மிகப் பொருத்தமாகும். அவர்கள் வாசிப்பதை கொஞ்ச நேரம் கண்டும், கேட்டும் ஆனந்திக்கலாம். அதன்பின் நம் மனமே நம் வசத்தில் இருக்காது. அந்த அளவுக்கு நாகசுரத்தில் கலைஞர்கள் பயிற்சி பெற்று வாழ்ந்தனர். அந்த அரிய வித்வான்களிடம் பயிற்சி பெறும் காரணமாய் பயிற்சி பெறும் மாணவர்களும் சகலவற்றையும் மிகச் சிரத்தையுடன் தன் குருமார்களிடம் கற்றுக் கீர்த்தனைகள் மற்றும் பல பாடல்களையும் முறை வழுவாது பயின்று, அப்பாடல்களின் பண்பு கெடாமல் வாசிக்கும் திறமை பெற்ற பின்புதான் கச்சேரி செய்யத் துவங்குவார்கள். இவ்வாறு 12 ஆண்டுகள் குருகுலவாசம் செய்து பயிற்சி பெற்றால்தான் இந்த நாகசுரக் கலையில் பூரண தகுதிகள் யாவும் பெற்றுச் சிறந்து விளங்க முடியும்.

<u>வாசிப்பு முறை:</u>

இந்த இசை பயில்வோருக்கு சுருதியும், லயமுமே மிக முக்கியமான நிலைக்களன்கள் ஆகும். 16 எண்ணுக்கு ஒரு சுரம் 2 சுரம், 4 சுரம், 8 சுரம், 16 சுரம், 32 சுரம், 64 சுரம் வரை ஒரே மூச்சில் நாகசுரத்தில் வாசித்துப் பயிற்சி பெற வேண்டும். அந்தகாரம், தத்தகாரம், அகாரம், விரலடி, குழைவு, பிர்கா, கமகம், ஜாரு, அசைவு முதலியவை வாசித்துப் பயிற்சி பெற வேண்டும். சாகித்யமாக வாசிக்கவும், இசை இலக்கண முறையறிந்து வாசிக்கவும், கிரகபேதம் செய்யவும் பயிற்சி பெறுதல் வேண்டும்.

இந்த இசையில் பூரண ஞான பலம் பெறச் சிறந்த மூன்று தலைமுறை யாவது அவசியம் தேவை. பழங்காலத்தில் ஒரு ஒத்து, ஒரு நாகசுரம், ஒரு தவில், ஒரு தாளத்துடன் சிலர் தலையில் கொண்டை முடிந்தும் சிலர் தலையில் டர்பன் கட்டியும், மற்றும் சிலர் மீசை வைத்தும் நீண்ட நேரம் நின்றவாறே கச்சேரி செய்திருக்கின்றனர். சுமார் 65 ஆண்டுகளுக்கு முன்புதான் இரண்டு தவிலாம் இணைந்து செயல்படுவதாம் அறிகிறோம். இதை முதலில் திருப்பாம்பரம் சாமிநாதப் பிள்ளை சகோதரர்களே அறிமுகப்படுத்தினர். பின்னர் ஒத்து அறைந்து, சுருதிப் பெட்டியும் தம்புராவும் அந்த இடத்தைப் பிடிக்கத் தொடங்கின. நாகசுரம் நாதசுரம் என்று மருவி அழைக்கப்பட்டது. திருவாவடுதுறை நாகரத்தினப் பிள்ளை காலத்தில், தான் உட்கார்ந்துகொண்டு வாசிக்கும் முறையும், சட்டைபோட்டுக்கொண்டு வாசிக்கும் முறையும் பழக்கத்தில் வந்தன.

5:3:6

இதில் சிறந்த கலைஞர்கள்:

மன்னார்குடி சின்னபக்கிரி நாகசுரக்காரரும், திருமருகல் நடேச நாகசுரக்காரரும், மதுரை பொன்னுச்சாமி நாகசுரக்காரரும், திருவாவடுதுறை நாகரத்தினம் நாகசுரக்காரரும் இதில் குறிப்பிடத் தகுந்தவர்கள்.

நாகசுரப் புலமையுடன், வாக்கேயக் காரராகவும் விளங்கிப் புகழ் பெற்று வாழ்ந்தவர்கள் கூறைநாடு நடேசபிள்ளை, சிதம்பரம் வைத்திய நாதபிள்ளை, திருவீழிமிழலை சுவாமிநாதபிள்ளை, கோனேரி ராஜபுரம் வைத்தியலிங்கம், நாகூர் சுப்பையா, இலங்கை அன்னுசாமி நாகசுரக்காரர், திருநெல்வேலி மாவட்டத்தில் சங்கரையா நாகசுரக்காரர், கைலாச நாகசுரக் காரர் ஆந்திராவில் நாவிபருத்தி பிச்சயிரி நாகசுரக்காரர் ஆகியோராவர். மன்னார்குடி பக்கிரி நாகசுரக்காரர் 10 நாள் உற்சவத்திலும் கேதாரகௌளை ராகம் வாசித்தும், மதுரை பொன்னுசாமி நாகசுரக்காரர் 3 நாள் தொடர்ந்து சக்கரவாகம் ராகத்தை வாசித்தும் மக்களை வியப்பில் ஆழ்த்தியுள்ளனர். இவ்விசை மரபினர் தெய்வீகத் தன்மையோடும் தெய்வத்திற்குப் பயந்தும், தெய்வீகமாம் இக்கலைப் பணியைக் கடைசி காலம் வரை செய்து தெய்வ நிலையை எய்தினர்.

ஆலய இசை:

மங்கல இசை என்று போற்றப்படும் இந்த நாகசுர இசையோடுதான் இறைவன் தம்முடைய நித்தியக் கடன்களைக் கழிக்கின்றார். அதனுடன் திருக்-கோயிலை விட்டு, வீதி உலா வரும்பொழுதும் இந்த இசையொடுதான் வருகின்றார். நுகமக்கலையில் வல்லவரான ஸ்ரீராமசாமி தீட்சிதர், திருவாரூர் ஆலயத்தில் நாகசுரம் வாசிப்பதற்கென்றே பல விதிமுறைகளை வகுத்துச் சென்றுள்ளார். இன்றுவரை முறைவழுவாது அவற்றைப் போற்றி வருகின்றனர். காலையில் பூபாளம், வசந்தா, வலஜி, மலையமாருதம், பிலகரியும்; முற்பகல் சாவேரி, தன்யாசி, அசாவேரி, சுத்தபங்களாவும்; முற்பகல் மணிரெண்டு ஸ்ரீராகம், மத்தியமாவதியும்; மாலையில் பூர்வி கல்யாணி, பந்துவராளி நாட்டைக் குறிஞ்சி, கல்யாணி, வாசஸ்பதி, சண்முகப் பிரியாவும்; அர்த்தசாமத்தில் மோகனம், தோடி, கீரவாணி, காம்போதி, பைரவி, கரகரப்பிரியா, நீலாம்பரியும், வாசிக்கவேண்டும். இறைவன் வைகறையில் திருப்பள்ளியெழுச்சி பூபாள ராகத்தில் தொடங்கி இரவில் திருப்பள்ளிக்குச் செல்லும்பொழுது நீலாம்பரி, ஆனந்தபைரவி ராகத்துடன் நித்திய கால கால பூசைகள் முடிவுறும். ஆலய வழிபாட்டிற்குக் காலை 6 மணிக்குக்

5:3:7

கொட்டுமேளம் பீடத்தில் அமர்ந்து பூபாளம் என்ற வழக்கிலுள்ள பௌளி ராகத்தை ராகத்தைந்தான் வாசிக்கவேண்டும். பிறகு கோயில் திறக்கப்பட்டு, பூஜாகாலம் தொடங்கும். இதற்குக் காலை மேளம் என்று பெயர். உதயகாலம் 6½ முதல் 7½ மணிக்குள் மலயமாருதம், கேதாரம் வாசிக்கவேண்டும். காலசந்தி பூஜை 8 முதல் 9½ மணிக்கு பிலகரி, தன்யாசி வாசிக்கவேண்டும். உச்சிக்காலம் 11 முதல் 12½ மணிக்கு சாவேரி, சுத்தசாவேரி, அசாவேரி, தர்பார் இவற்றில் ஏதாவது ஒரு ராகம் வாசிக்கவேண்டும். மாலையில் கொட்டு மேளம் 4½ முதல் 5½ மணிக்குமந்தாரி, பூரி கல்யாணி, பைரவி-சங்கராபரணம் போன்ற ராகங்கள் வாசிக்கவேண்டும். இரண்டாம் காலம் 7½ முதல் 8½ மணிக்கு சண்முகப்பிரியா, கரகரப்பிரியா, பலப்பிரியா போன்ற ராகங்களும் அர்த்தசாம பூஜையில் 9 முதல் 10½ மணிக்கு நாதசுரம், ஒத்து பீட்டும் சேர்ந்து ஆனந்தபைரவி, நீலாம்பரி, கானடா, அடாணா, பேகடா போன்ற ராகங்கள் வாசிக்கப்பட்டன. பூஜைக்குத் திருமஞ்சனம் கொண்டு வரும்பொழுது மேகராகக் குறிஞ்சி ராகம் வாசிப்பர். தளிகை கொண்டு வரும்பொழுது தளிகை மல்லாரி வாசிப்பர். சோடசோபசாரம், தீபாராதனை நடக்கும்பொழுது திருப்புகழ், தேவாரம் வாசிப்பர். பள்ளியறைக்குச் செல்லும்பொழுது ஆனந்த பைரவியும், நீலாம்பரியும் வாசிப்பர்.

இறைவன் திருவீதி உலா வரும்பொழுது சுவாமி மண்டபத்தில் அலங்காரம் நடைபெறும். தளிகை கொண்டு வரும்பொழுது தளிகை மல்லாரியும், சுவாமி யாகசாலைக்கு வரும்பொழுது பெரிய மல்லாரியும் வாசிப்பர். யாகசாலையிலிருந்து கோபுர வாசல் வழியாக வரும்பொழுது அந்தந்த தெய்வத்திற்குரிய மல்லாரி வாசிக்கப்படும். கோபுர வாசலில் தீபாராதனையின்போது திருபுடைதாளம் மல்லாரி வாசிக்கப்படும். பிறகு வர்ணம் வாசிப்பர். பின்பு விஸ்தாரமான ராக ஆலாபனை (கீழவீதி, தெற்கு வீதி, மேற்கு வீதி, பாதிவரை) வாசித்து ரக்தி மேளம் வாசிப்பர். இது மிகவும் புகழ்பெற்றது. சாகித்யம் இல்லாத லயவின்யாசம் போன்றது. பல்லவிபோல் தீந்தக்க தந்தீந்த என்ற மிச்ரசாப்பு தாள சொற்கட்டை எல்லாக் காலங்களிலும் லயவின்யாசம் செய்து காட்டுவர். பிறகு 6 காலத்தில் பல்லவியும் வாசிப்பர். பிறகு கீர்த்தனை, பதம், ஜாவளி, தில்லானா, வாசித்துத் தேர்முட்டி வந்தடையும். பிறகு அரை மேளம் என்ற நட்டுமுட்டு இசையுடன் சுவாமி ஆலயத்தைச் சென்றடையும். திருக்கல்யாணத்தின் பொழுது நாட்டக்குறிஞ்சி, கல்யாண வசந்தம் வாசிப்பர். மாலை மாற்றல் பாட்டும், அம்மானையும், ஊஞ்சல் பாடலும் அந்தப் பாடல்முறை வழுவாது வாசிப்பது வழக்கம்.

5:3:8

வானம் வரண்ட காலத்தில் மேக நாயகனை இந்திரனைப் பிரதி செய்து 'இந்திரப்பிரியா' சுரநாள ராக அள்ஷப்படி வாசித்துப் பின்பு 'மேகரஞ்சனி' எனும் ராகத்தை சுரஸ்தான யோக சாதனை முறைப்படி வாசித்து மழை பொழியச் செய்தும், அதிவிருஷ்டி ஏற்படும் காலத்தில் 'சூர்ய காந்தம்' எனும் ராகத்தை வாசித்தும், சூரிய தேவனின் அருளால் அதைத் தடுத்தும் வந்துள்ளார்கள் என்பது முன்னோர்கள் கூறக்கேட்ட உண்மையாகும்.

முடிவுரை:-

நாம் செய்ய வேண்டுவன.

எல்லா ஆலயங்களிலும் மங்கள இசையுடன் வழிபாடு நடந்திட ஏற்பாடு புரிதல் வேண்டும். இதனால் இக்கலைஞர் அனைவருக்கும் வேலைவாய்ப்புக் கிடைத்து விடுவதுடன் அழிந்து கொண்டிருக்கும் நாகசுரக் கலையும் பாதுகாக்கப்படும். மாவட்டந்தோறும் ஒரு தவில் நாகசுர இசைக் கல்லூரி நிறுவி, இசை இலக்கணத்துடன், சாஸ்திரிய முறை வழுவாது இசைக்கப் பயிற்சி அளித்திடல் வேண்டும். அறங்காவலர்களாகப் பணி ஏற்பவர்கள் இசைப் பயிற்சி பெற்றவர்களாகவும், ஆகமமுறை வழுவாது மங்கள இசை முழங்குகின்றதா என்று கண்காணிப்பவராகவும் இருத்தல் வேண்டும். குறைந்த சம்பளத்தில் ஒருவரே நாகசுரமும், தவிலும், வாசிக்கும் அவலநிலைகளை ஆலயங்கள் மாற்றவேண்டும். இத்தகைய ஏற்பாடுகளினால் நாகசுரக்கலை பாதுகாக்கப்படும் என்று நம்புகின்றோம். இந்த நாகசுரம் என்னும் ஓங்கார இசைக்கருவி நம் கண் முன்னாலேயே உருக்குலைந்து போய்க்கொண்டிருக்கிறது. அந்நிலையே நாளை மங்கள இசைக்கலை என்று போற்றப்படும் நாகசுரக் கலைக்கும் ஏற்பட்டு விடாமல் பாதுகாக்க எல்லோரும் இந்நாளில் உறுதியெடுப்போம்.

வாழ்க நாகசுர இசைக்கலை! வளர்க அதன் மங்கள இசைத் தன்மை!

***

6:2:1

## ஊர்ச்சபை.

டாக்டர் அ.விசுவநாதன், எம்.ஏ., எம்.லிட்., பி.எச்.டி.;
தமிழ்த்துறை இணைப்பேராசிரியர்
அழகப்பா பல்கலைக் கழகம்
காரைக்குடி 3.

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது பழமொழி. கோயில்கள் நிறைந்த மாநிலம் தமிழ்நாடு. சங்க காலம் தொடங்கி இன்றை நாள்வரை மனித சமுதாயத்தோடு தொடர்புடையனவாகக் கோயில்கள் விளங்குகின்றன. மக்களிடையே காணப்பெறும் ஏற்றத்தாழ்வுகளை நீக்கி, ஒருமைப்பாட்டு உணர்வை, இன உணர்வைத் தோற்றுவிக்கக் கோயில்கள் அடிப்படையாக அமைந்தன எனின் மிகையாகாது. கோயிலால் சமுதாயமும் சமுதாயத்தால் கோயிலும் வளர்ந்த நிலையினைக் கற்பார் உணர்வர். திருக்கோயில் - சமுதாயத் தொடர்பு என்ற தலைப்பில் ஊர்ச்சபை பற்றிக் காண்போம்.

### அவை - சபை - செல்வாக்கும்:

பழந்தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் 'அவை' என்ற சொல்லாட்சி உண்டு. அஃறிணைப் பன்மைச் சொல்லாக வழங்குவதன்றிச் சான்றோர் குழுமிய இடத்தைக் குறிக்க 'அவை' என்ற சொல் வழங்கப்பட்டுள்ளது.

"அவையல் கிளவி மறைத்தனர் கிளத்தல்" (1)

சான்றோர் குழுமிய இடத்துப் பேச வேண்டிய முறை பற்றிக் குறிப்பிடும்போது 'அவை' என்று குறிக்கப்பெறுகின்றது.

தொல்காப்பியர் காலத்தில் சகரம் மொழி முதலாக வாராது. 'சபை' என்பது வடசொல்லாகும். "சகர மொழி முதலாக வரும் வட சொற்களில் 'ச' கரத்தை நீக்கி 'அ' கரத்தைச்சேர்த்துப் பயன்படுத்தினர்" என்பர் பேராசிரியர் பர்ரோ.

சமர் அமர்; சந்தி அந்தி, சமயம் அமயம் என்ற சொற்களைப்போன்று சபா என்ற சொல்தான் சபை என்றாகி, அவை என்று வழங்குகின்றது, என்று குறிப்பிட்டுள்ளார், (2) தொல்காப்பியர் காலத்திலேயே வடசொற்கலப்பு இருந்தமையை

"வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ" (3)

என்ற தொல்காப்பிய நூற்பாவால் அறிகின்றோம்.

6:2:2

## சங்ககாலம்:

சங்க இலக்கியங்களில் சபை என்ற சொல்லாட்சி யாண்டும் இல்லை. அவை என்ற சொல்லாட்சியே பெருவரவிற்று.

"மறங்கெழு சோழர் உறந்தை அவையத்து
அறங்கெட அறியா தாங்கு"[4]

"மறங்கெழு சோழர் உறந்தை அவையத்து
அறம்நின்ற நிலையிற் றாகலின்"[5]

"ஆரங்கண்ணி அடுபோர்ச் சோழர்
அறங்கெழு நல்லவை உறந்தை"[6]

"முதியோர் அவை புகு பொழுதில்"[7]

அறங்கூறும் சான்றோர் குழுமிய இடம் அவை என்றுஅழைக்கப் பெற்றமை மேலைச் சான்றுகளால் புலனாகும்.

பொதுவாக மக்கள் கூடும் இடம் 'மன்றம்' என்றும் 'பொதியில்' என்றும் சங்க காலத்தே அழைக்கப்பெற்றது.

"பேரிசை மூதூர் மன்றங் கண்டே"[8]

"கந்துடைப் பொதியில்"[9]

இச்சொல்லாட்சிகளை நோக்குங்கால் 'அவை' வேறு, மன்றம் வேறு என்பது அறியத்தரும்.

திருக்குறளிலும் சபை என்ற சொல்லாட்சி இல்லை. அவை என்ற சொல்லாட்சியே காணப்பெறுகின்றது.

"தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்"[10]

"கற்றாரு அவைக்குழாஅத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அவைவிந்தற்று."[11]

திருக்குறளில் அவை சான்றோர் குழுமிய இடத்தையும் மக்கள் குழுமிய இடத்தையும் குறிக்கின்றது.

சிலப்பதிகாரத்திலும் சபை என்ற சொல்லாட்சி இல்லை. அவை, அவையம் என்ற சொற்கள் காணப்பெறுகின்றன.

அரைசுகோல் கோடினும் அறங்கூறு அவையத்து
உரைநூல் கோடி ஒருதிறம் பற்றினும்"[12]

ஈண்டு அவை அறங்கூறும் மக்களை உடையதாகும்.

6:2:3

சங்க காலத்து அவைகள் இருந்தாலும் அவை கோயில்களோடு தொடர்பு உடையனவாக இருந்தன என்று கூற இயலாது; கோயில்களோடு தொடர்பு கொண்டிருந்தமைக்குச் சான்றுகள் இல்லை. அறங்கூறும் அவைகளாகச் செயற்பட்டமையே புலனாகின்றது. சிலப்பதிகாரக் காலத்திலும் கோயிலுடன் அவையோர் தொடர்பு கொண்டிருந்தனர் என்று கூறச் சான்றுகள் இல்லை.

பிற்காலத்தே சிறப்பிடம் பெற்ற ஊர்ச்சபை சங்க காலத்திலோ, திருக்குறட் காலத்திலோ, சிலப்பதிகாரக் காலத்திலோ இடம் பெற்றிருந்தன என்று கூறச் சான்றுகள் கிடைத்தில. அரசியல் பற்றித் திருக்குறள் விரிவாகப் பேசினும், உள்ளாட்சி பற்றி ஏதும் குறிப்பிடவில்லை.

"Even the Kural does not contain any clear reference to the village and its institutions" [13]

என்ற திரு டி.வி. மகாலிங்கம் அவர்களின் கருத்தும் நோக்கத்தக்கது.

<u>இடைக்காலம்:</u>

<u>ஊர் – சபை – ஊர்ச்சபை:</u>

உள்ளாட்சி அமைப்பானது பிற்காலச் சோழர்கள் ஆட்சிக்கு முன்னரே, பல்லவர்கள் காலத்திலேயே செம்மையாக இருந்தது என்று டாக்டர் சி. மீனாட்சி குறிப்பிடுகின்றார்.[14]

உள்ளாட்சியின் அடிப்படை அமைப்பு – கிராமங்களில் இருந்த அமைப்பு 'ஊர்' என்றே வழங்கப்பெற்றது; சபை என்ற அமைப்பும் உண்டு: இவ்விரு அமைப்புக்களும் பல்லவர்கள் காலத்திலும் சோழர்கள் காலத்திலும் இருந்தமை வரலாற்றின் மூலம் அறிய முடிகின்றது. 'சபை' என்ற அமைப்பானது பெரும்பாலும் அந்தணர்கள் வாழ்ந்த ஊர்களில் காணப்படுகின்றது; பார்ப்பனர்கள் வாழ்ந்த ஊர்கள் சதுர்வேதிமங்கலம் என்று அழைக்கப்பெற்றன.[15]

'ஊர்' அமைப்பும் 'சபை' அமைப்பும் தனித்தனியாகவும் இணைந்தும் செயற்பட்டதாகப் பேராசிரியர் கே.ஏ. நீலகண்ட சாத்திரியார் குறிப்பிட்டுள்ளார்.

"The Ur was the simplest type of these assemblies. The Ur functioned in several places along side of the Sabha — acting byitself or jointly with the sabha according as the business on hand" [16]

6:2:4

குமாரமங்கலம், உரத்தூர்க் கூற்றத்தைச் சார்ந்த அம்மங்குடி ஆகிய ஊர்களில் இரு அமைப்புக்களும் இருந்தன.[17] ஊரார், சபையோர் இருவருமே கிராமக் காரியங்களைக் கவனித்து வந்தமையால் இருவேறு அமைப்புக்கள் தேவையில்லை என்ற எண்ணத்தினால் பிற்காலத்தே இரண்டையும் இணைத்து ஊர்ச்சபை என்ற அமைப்பு ஏற்பட்டிருக்கலாம் என்று கருத வாய்ப்புண்டு. இன்றும் ஊர்ச்சபை கிராம சபை என்ற வழக்காறு உண்டு.

இடைக்காலத்தே கோயில்களோடு ஊர்ச்சபையினர் கொண்டிருந்த தொ தொடர்பு பற்றிக் கல்வெட்டுக்களாலும் இலக்கியங்களாலும் அறியக் கிடக்கின்றது. கோயில் சொத்துக்களைப் பாதுகாத்தல், வருமானங்கள் கொண்டு விளக்கெரித்தல், தவறிழைத்தோர்க்குத் தண்டனை வழங்குதல் போன்ற பல நற்காரியங்களை ஊர்ச்சபையினர் மேற்கொண்டிருந்தனர்.

நிருபதுங்கவர்மனின் 26 ஆம் ஆட்சியாண்டுச் சாசனம் திருத்தவத்துறை (லால்குடி) சிவபெருமானுக்காகத் தேங்காங்குடிச் சபையார் தானம் பெற்ற செய்தியைக் கூறுகின்றது.[18]

அபராஜிதவர்மனின் 18 ஆம் ஆண்டுச் சாசனத்தால் திருத்தணியில் சபையார் நம்பி அப்பி என்பார் தானமாக வழங்கிய நிலத்திற்கு வரி நீக்கம் செய்து கங்காணித்து வந்தனர் என்றும், அந்நிலத்திலிருந்து வந்த வருவாயைக் கொண்டு திருவீரட்டானத்தேவர் கோயிலில் விளக்கெரித்தனர் என்றும் அறிகின்றோம்.[19]

நாரணக்க சதுர்வேதிமங்கலச் சபையினர், பல்லவ மன்னனிடமிருந்து 15 கழஞ்சு பொன் பெற்றனர் என்றும்; கோயிலில் நந்தா விளக்கு எரிக்க ஒருநாழி நெய் அளித்தனர் என்றும் திருக்கோடிக்காவல் கோயிலிலுள்ள கல்வெட்டு மூலம் தெரியவருகின்றது. இக்கல்வெட்டு நிருபதுங்கவர்மனின் 24 ஆம் ஆட்சியாண்டில் ஏற்பட்டதாகும்.[20]

அரிகண்ட பெருமானார் என்பவர் திருமுக்கூடல் வேங்கடேசப் பெருமான் கோயிலுக்குப் பொன் தானமாக உதவினர் என்றும் அதனை ஊர் அவையோர் ஏற்று நடத்தினர் என்றும் அறிகின்றோம்.[21]

விஜயநிருபதுங்க வர்மனின் இரண்டாம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு கூறும் செய்தி புதிகந்தன் தன் நாமக்காக 10½ கழஞ்சு பொன் வழங்கினன். திருத்தவத்துறைமகாதேவர் கோயிலில் ஏழு நாள் நடைபெறும் சித்திரை விழாத் திருவிழாவின்போது நாராயண நாழியால் அளக்கப் பெற்ற அரிசி வழங்கப்பட்டது. முதலில் ஊர்ச்சபையார் இத்தானத்தைப் பெற்று நடத்தினர்.[22]

6:2:5

மேலும் அர்ச்சபையினர் மகேசுவர சமுகத்தாரிடமிருந்து தானமாகப் பெற்ற 60 கழஞ்சு பொன் மூலம் பெற்ற வருவாயிலிருந்து ஒரு நந்தா விளக்கு எரித்தனர். தானமாகப் பெற்ற சொத்தை வட்டிக்கு விட்டனர். வட்டி வசூலிக்கச் செல்பவருக்கு நாள்தோறும் அர்ச்சபையினர் ஒருவேளை உணவு கொடுத்தனர். வட்டி வசூலிக்கத் தவறினால், நாள்தோறும் நீதி மன்றத்தில் 8 காணம் தண்டம் செலுத்த அர்ச்சபையினர் உடன்பட்டிருந்தனர் என்று செம்பியன் அபராஜித வர்மன் காலத்திய கல்வெட்டால் அறிகிறோம்.".[23]

பல்லவர்கள் காலத்திலும் சோழர்கள் காலத்திலேயே அர்ச்சபையினர் கோயில்களோடு மேலும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர்.

கிராம சபையாரே கோயில் காரியங்களைக் கவனித்து வந்தனர். ஆண்டு தோறும் "குடவோலை" வாயிலாகத் தேர்ந்தெடுக்கப்பெற்ற வெவ்வேறு கிராம சபையாரே கோயில் காரியங்களை நிர்வகித்து வந்தமை குறிப்பிடத்தக்கும்"[24] என்று கல்வெட்டறிஞர் சதாசிவ பண்டாரத்தார் குறிப்பிடுவர்.

முதற்பராந்தகனின் 36 ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு ஒன்று ஆனைமலை நரசிங்கப்பெருமான் கோயிலில் காணப்படுகிறது. அர்ச்சபையினர் தானமாகப் பெற்ற சொத்தைக் கண்காணித்து வந்தனர் என்றும் அர்ச்சபையினர் தவறு நேர்ந்து கொண்டால் அவர்களும் தண்டம் செலுத்தினர் என்றும் அத்தொகை கோயிலுக்கு விளக்கு எரிக்கப் பயன்பட்டது என்றும் அறிகிறோம்.

"திருவானைமலை நரசிங்கப் பெருமானடிகளுக்குச் சிரிகாரிய மாராயம் வரீஇ சபையோமும் இதில் திறம்பினோமைச் சபையாரும் சிரிகாரிய மாராயம் திறமிறுப் நிகதி இருகாசு அன்றாடு கோவுக்குத் தண்டம் பட்டு, அக்காசு கொண்டு தேவர்க்குத் திருவிளக்கு எரிவதாகவும்; சபையோர் திறம்பில் ஒருகாசு தண்டப்படுவதாகவும் ஒட்டிக் குடுத்தோம்".[25]

தவறு செய்தால் சபையாரும் தண்டம் செலுத்தினர் என்பது கவனிக்கத்தக்கது. வீரராசேந்திரன் 5 ஆம் ஆட்சி ஆண்டு மணிமங்கலக் கல்வெட்டில் மணிமங்கலச் சபையார், தர்மகோடி விடங்கர் ஆழ்வார்க்கு அர்ச்சனா போகமாக மஞ்சியப்பம்பயநூர் மகனூர் சேவுடிகள் ஐயம் கொண்ட சோழ தேவ பிரம்மாதிராஜர் கொடுத்த நிலத்தைப் பெற்றுக்கொண்டு, இறையிலியாக் கொடுத்த செய்தி காணப்படுகிறது.[26]

"முன்னோர்கள் அமைத்துச் சென்ற அறச் செயல்களுக்குரிய ஆவணங்களைப் பாதுகாத்தல், அவ்வறங்கள் முன்னோர் கருத்திற்கு முரண்படாமல் ஒழுங்காக நடத்தப்பட்டு வருகின்றனவா என்பதைக் கண்காணித்தல் ஆகிய செயல்களில்

ஊர்தோறும் அமைந்த சபைகள் கண்ணுங்கருத்துமாய் இருந்தமை குறிப்பிடத்தக்கது. பொதுமக்கள் நலத்தின் பொருட்டுச் செய்யவேண்டிய பெருங்காரியங்களுக்காக அரசாங்கத் தொடர்பின்றித் தாமே தனிவரியென்று விதித்து வசூலித்துக் கொள்ளுதல் நாட்டிலுள்ள செல்வர்களிடத்தும் கோயில்களிடத்தும் பெரும் பொருளைக் கடன் வாங்குதல் ஆகிய உரிமைகள் இச்சபைகளுக்கு இருந்தன. ஊர்ப் பொதுமக்கள் இச்சபைகள்பால் எத்துணை நம்பிக்கையும் மதிப்பும் வைத்திருந்தனர் என்பது இதனால் நன்கறியக் கிடத்தல் காண்க"[27] என்று திரு பண்டாரத்தார் அவர்கள் ஊர்ச்சபையின் சமூகத் தொடர்பை எடுத்துக்காட்டுவர்.

"ஊர்ச்சபையினருக்கு ஊதியம் ஏதும் வழங்கப்பட்டதாகச் சான்றில்லை; மேலும் ஊர்ச்சபையினரின் செயற்பாடுகளில் பெரும்பாலும் அரசு தலையிடுவதில்லை; ஒவ்வொரு சபையினரும் பல உரிமை அளிக்கப்பெற்றிருந்தனர்"[28] என்று பேராசிரியர் சாஸ்திரியார் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

<u>இக்காலம்</u>:

<u>ஊர்ச்சபை - இன்றைய நிலை</u>:

இன்றை நாளில் ஊர்ச்சபைக்கும் கோயிலுக்கும் பெருந்தொடர்பு கிடையாது. இடைக்காலத்திலிருந்த உள்ளாட்சி நடைமுறைகள் மாறிவிட்டன. பொருள் வருவாய் மிக்க கோயில்கள் இந்து அறநிலையத்தாரின் ஆணைக்கு உட்பட்டு அமைந்துள. ஒவ்வொரு கோயிலுக்கும் தனி நிர்வாக அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். கோயில் வரவு செலவுகளைக் கண்காணிக்கவும் தணிக்கை செய்யவும் தனித்தனி அதிகாரிகள் உள்ளனர். ஊதியமில்லாமல் கோயில் காரியங்களைக் கவனித்த நிலை மாறிவிட்டது. ஊதியம் பெறக்கூடியவர்களே நிர்வாகத்தில் உள்ளனர். நிர்வாக அதிகாரிகளை அரசு நியமிக்கிறது. நிர்வாகஅதிகாரிகள் உள்ளூரினராக இருத்தல் வேண்டும் என்ற நியதி இல்லை. அடிக்கடி வேறு கோயில்களுக்கு மாற்றப்படும் நிலைமை உள்ளது. இறைவன் "வேண்டுதல் வேண்டாமை இலான்" இருக்கலாம். ஆனால் கோயில் நிர்வாகம் அவ்வாறு அமைவதில்லை. இதனால் மக்கள் தொடர்பு விட்டிசைத்துக் காணப்பெறுகின்றது.

அறநிலைய ஆணைக்கு உட்பட்ட கோயில்களில்தான் மேற்கூறிய நிலை ஏற்பட்டுள்ளது. ஆனால் கிராமங்களில் பழைய நிலையே நீடிக்கின்றது. அரசாட்சியினர் பொது நிர்வாகத்தைக் கவனித்தாலும் ஊர்ப்பெருமக்கள் - நாட்டார்கள் கோயில் நிர்வாகத்தைக் கவனித்து வருகின்றனர். கோயில் சொத்துக்களைப் பாதுகாத்தல், திருவிழா ஏற்பாடுகளைச் செய்தல் - அன்றாட நடைமுறை நிகழ்ச்சிகளைக் கண்காணித்தல் முதலியவற்றை ஊர்க்குழுவினரே செய்கின்றனர்.

6:2:7
கோயில் வருவாயைச் சொந்த நலனுக்குப் பயன்படுத்தும் வழக்கம் இற்றைநாளிலும் கிராமங்களில் கிடையாது. நடைமுறை விதிமுறைகளை மாற்றாமல் காப்பாற்றி வருகின்றனர். "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற நிலை ஏற்படின் நலஞ் சிறக்கும்.

### அடிக்குறிப்புகள்.

1. தொல்காப்பியம், நூற்பா, 925
2. Collected papers on Dravidan Linguistics. P.
3. தொல்காப்பியம், நூற்பா 384
4. நற்றிணை, பா. 400
5. புறநானூறு. பா. 39
6. அகநானூறு பா. 93
7. பொருநராற்றுப்படை. வரி 138
8. புறநானூறு 220
9. பட்டினப்பாலை. வரி 249
10. திருக்குறள்: 67
11. திருக்குறள் 332
12. சிலப்பதிகாரம் 5: 135-136
13. Soth Indian Policy. P. 337
14. Administration and Social Life under Pallavas - Page 141
15. Colas 492
16. Colas 492
17. Colas 493
18. Administration and Social Life under Pallavas P. 145

-•-

6:2:8

19. Ibid - PP 145 and 146

20. Ibid - P. 146

21. பல்லவர் வரலாறு. பக்கம் 232

22. Administrationand Social Life under Pallavas P. 146

23. Ibid - P. 147

24. பிற்காலச் சோழர்வரலாறு. பக்கம் 518

25. தென்னாட்டுத் திருக்கோயிற் கல்வெட்டுக்கள். ப. 8

26. மேலது. பக்கம் 106

27. பிற்காலச்சோழர் வரலாறு பக்கம் 514/515

28. Colas. P. 497

6:2:9 <u>உதவு நூற்பட்டியல்.</u>

1. தொல்காப்பியம்

2. புறநானூறு

3. நற்றிணை

4. அகநானூறு

5. திருக்குறள்

6. பொருநராற்றுப்படை

7. பட்டினப்பாலை

8. சிலப்பதிகாரம்

9. பிற்காலச் சோழர் வரலாறு - தி.வை.சதாசிவப் பண்டாரத்தார்

10. பல்லவர் வரலாறு, டாக்டர் மா. இராசமாணிக்கம்.

11. Administration and Social Life under Pallavas - Dr. C. Minakshi

12. Colas. Prof. K.A.Neelakanda Sastri

13. South Indian Polity T.V. Mahalingam

14. Collected papers on Dravidian Linguistics - Prof. T. Burrow

15. தென்னாட்டுத் திருக்கோயில் கல்வெட்டுகள் - வி.சா.குருசாமி தேசிகர்

***

6:4:1 <u>தேவாரத் திருமுறைகளும், திருமேனிகளும்.</u>

சி. ஸ்ரீதரன்.

திருக்கோயில்கள் நிறைந்தது தமிழ்நாடு. திருக்கோயில்கள் வழிபாட்டிற்குரிய இடமாக மட்டுமல்லாமல் தமிழ்ச் சமுதாயத்தின் நல்வாழ்வில் நாட்டங்கொண்ட நிலையங்களாகவும் விளங்கின: பல கவின் கலைகளுக்குப் பிறப்பிடமாகவும் விளங்கின. கோயில் வழிபாட்டின்போது பல இசைக்கருவிகள் வாசிக்கப்பட்டன. அத்துடன் அல்லாமல் திருமுறைகளும் பாடப்பட்டன. திருமுறைகள் இசைக்கருவிகளுடன் பாடப்பட்டது பற்றிக் கல்வெட்டுக்கள் எடுத்துரைக்கின்றன.

தேவார மூவரான ஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர் பல கோயில்களுக்குச் சென்று இறைவனை வழிபட்டுப் பல பாடல்களைப் பாடியுள்ளனர். அவைகள் 'பாடல்பெற்ற தலங்கள்' என சிறப்பாகக் குறிக்கப்படுகின்றன.

இவர்கள் காலத்தில் பெரும்பாலும் கோயில்கள் செங்கற்களாலேயே கட்டப்பட்டிருக்கவேண்டும். பின்னர் இவை மன்னர்களால் கற்றளிகளாக, அதாவது கற்கோயில்களாக மாற்றப்பட்டன. வழிபாட்டிற்கான தானங்கள் அளித்தனர். விழாக்கள் நடந்தன. விழாக்களின்போது வீதியுலா செல்வதற்குச் செப்புத் திருமேனிகள் செய்தளித்தனர். இச் செப்புத் திருமேனிகளின் பெயரைக் குறிப்பிடும் பொழுது தேவாரத் திருமுறைகளில் வந்த சொற்றொடரையே அத்திருமேனிக்கு இட்டு வழங்கப்பட்டு வந்ததாகப் பல கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. மேலும் அக்கோயிலில் வீற்றிருக்கும் இறைவனையும் இறைவியையும் தேவார மூவர் எவ்வாறு போற்றினார்களோ அதே சொற்றொடரால் பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன.

மயிலாடுதுறைக்கு அருகில் திருக்குறுக்கை என்ற தலம் உள்ளது. சிவபெருமானின் அட்ட வீரட்டானத் தலங்களில் இதுவும் ஒன்று. இக் கோயிலின் தேவாரத் திருப்பதிகத்தில் 'கூத்தராய் வீதி போந்தார் குறுக்கை வீரட்டனாரே' எனக் குறிப்பு வருகிறது. இக்கோயிலில் திருவிழாவிற்கு எழுந்தருளும் இறைவன் 'கூத்தராய் வீதி போந்தார்', 'வீதிவள நாதர்' என்றும் கல்வெட்டுக்களில் குறிக்கப்படுகிறார்.

திருச்சிக்கு அருகில் உள்ள திருமழபாடிக் கோயிலுக்குச் சுந்தரர் 'பொன்னார் மேனியன்' என்ற பதிகத்தைப் பாடியுள்ளார். சேனாபதி அரையன் கடக்கன் கொண்ட சோழன் அமுரி நாடாழ்வான் என்பவன் இக்கோயிலில் செம்புத்தரானால் 'பொன்னார் மேனியன்' என்னும் திருமேனியை எழுந்தருளுவித்து

அதன் வழிபாட்டிற்காக நிலம் அளித்தான் என இரண்டாம் இராசேந்திரனுடைய கல்வெட்டு கூறுகிறது.

தஞ்சைக்கு அருகில் உள்ள 'திருக்காட்டுப்பள்ளி' என்னும் தலம் அதே பெயரில் தேவாரத்திலும் கல்வெட்டுக்களிலும் கூறப்படுகிறது. திருஞானசம்பந்தர், இறைவியை 'அழகமர் மங்கை' என்பார். இக்கோயிலில் உள்ள மாறவர்மன் சுந்தர பாண்டியனின் கல்வெட்டு (கி.பி. 1223) 'அழகமர் மங்கையாரை எழுந்தருளுவித்த திருக்கற்றளியும் சாந்தி' என்று கூறிச் செல்கிறது. இந்த இறைவி சௌந்தரநாயகி என்று அழைக்கப்படுகிறாள். அடைந்தார்க்கு அருள் செய்வாயே என்று திருக்களர் தலத்தில் எழுந்தருளியிருக்கும் பெருமானைப் போற்றுகின்றார் ஞானசம்பந்தப் பெருமான். சோழர் கால கல்வெட்டுக்களில் 'உடையார் திருக்களர் உடையார்' கோயில் என்று பெயர் காணப்படுகிறது. இக்கோயிலில் உள்ள விஜயநகர மன்னர்களின் கல்வெட்டுக்களில் 'அடைந்தார்க்கு அருள் செய்த நாயனார்' என்னும் தேவாரப் பெயரே சொல்லப்பட்டுள்ளது. இன்று கோயிலின் பெயர் 'பாரிஜாதவனேசுவரர்' என அழைக்கப்படுகிறது. திருக்கடவூர் அருகே திருக்கடவூர் மயானம் என்னும் ஒரு திருத்தலம் உள்ளது. மூவராலும் பாடப்பெற்றது இத்தலம். சுந்தரர் இக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் அன்னையை 'வாடா முலையாள் தன்னோடும் மகிழ்ந்திருக்கும் பெருமான்' எனப் போற்றுகின்றார். இக்கோயிலில் காணப்படும் மூன்றாம் குலோத்துங்க சோழனின் கல்வெட்டு அன்னையை 'வாடா முலை நாச்சியார்' என்றே குறிப்பிடுகிறது. திருச்சிறுகுடி என்னும் தலம் பேரளம் ரயில் நிலையத்தருகே உள்ளது. 'செங்கயல் புலஞ்சேர் சிறுகுடி மேவிய மங்கையிடமுடையீரே' என்று திருஞான- சம்பந்தர் கூறுவார். இறைவனின் பெயர் 'உடையார்மங்கையிடமுடையார்' என்றும், அன்னையின் பெயர் திருக்காம கோட்டமுடைய நாச்சியார் அழகிய மங்கையார்' என்றும் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன.

மயிலாடுதுறைக்கு அருகில் உள்ள குத்தாலம் கோயில் முதலாம் இராசராசசோழன் கல்வெட்டில் 'தென்கரை உய்யக் கொண்டார் வளநாட்டுத் திருவழுந்தூர் நாட்டுத் தேவதானம் திருத்துருத்தி சொன்னவாறறிவார்' எனக் குறிக்கப்படுகிறது. சுந்தரர் பெருமானின் "மின்னுமா மேகங்கள்" எனத் தொடங்கும் இக்கோயில் திருப்பதிகத்தில் 'சொன்னவாறறிவார் துருத்தியார்' என்று குறிப்பிடுவது நோக்கத்தக்கது.

திருவிற்கோலம் தொண்டை நாட்டுத் தலங்களுள் ஒன்று. தற்பொழுது கூவம் என அழைக்கப்படுகிறது. ஞானசம்பந்தப் பெருமான் 'ஐயன் நல்லதிசயன் அயன் விண்ணோர்தொழும் மெய்யன் திகழ்ந்திலங்கு வெண்ணீற்றான் பெயரவல்லுவாள்

பாகம் ஆய்வும் செய்யவள் உறைவிடம் திருவிற்கோலமே" என்று போற்றுகின்றார். இறைவி 'பெயரவல்குலாள்' எனக் குறிக்கப்படுகிறாள். இக்கோயில் கல்வெட்டு ஒன்றில் பெயரவல் குலாளுக்கு வெள்ளிக்கிழமை வழிபாட்டிற்காக ஊரார் தானமளித்தார்கள் குறிக்கப்படுகிறது.

கல்லையே தெப்பமாகக் கொண்டு கரையேறிய திருநாவுக்கரசர் பெருமான் திருப்பாதிரிப் புலியூரைப் பாடுங்கால் இறைவன் தவக்கோலத் தோற்றத் துறையாய் இருந்தமையைப் பின்வரும் பாடலில் கூறியுள்ளார்.

'ஈன்றுளுமாயெனக் கெந்தையுமாயுடன் மூன்றயுலகம் படைத்து கந்தான்னென் மனத்துள்ளிருக்க ஏன்றான் இமையவர்க்கன்பன் திருப்பாதிரிப்புலியூர் தோன்றாத் துணையாயிருந்தனன் தன்னடியோங்களுக்கே' இறைவனை 'தோன்றாத் துணையாண்டார்' என்று போற்றினர். விக்கிரமசோழன் கல்வெட்டில் 'தோன்றாத் துணையாண்டார்க் கோயில்' என்று குறிப்பிடுவது போற்றத்தக்கது.

பூம்புகார் அருகில் உள்ள திருவெண்காடு கோயிலில் எழுந்தருளியிருக்கும் இறைவியை 'வேயன தோளி நாச்சியார்' எனக் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. தேவாரப் பாடல்களிலும் 'வேயன்தோள் உமை' என்றே போற்றப்படுவது சிறப்பாகும்.

'ஆடல் புரிந்த நிலையும் அரையில் அசைத்த அரவும் பாடல் பயின்ற பல்பூதம் பல்லாயிரங் கொள் கருவி நாடற்கரியதோர் கூத்தும் நன்குயர் வீரட்டத்திருந்த ஓடும் கெடிலப் புனலும் உடையார் ஒருவர் தமர் நாம் அஞ்சுவதியாதொன்றும் இல்லை அஞ்ச வருவதுமில்லை' என்பது திருநாவுக்கரசர் பெருமானால் திருவதிகைக் கோயிலின் மீது பாடப்பட்ட திருப்பதிகமாகும். இதில் கண்ட 'நாடற்கரிய தோர் கூத்தினை' ஆடியவன் இறைவனே ஆவான். இக் கோயில் கல்வெட்டில் இந்த பெயர் குறிப்பிடப்படுகிறது. திருவதிகைக் கோயிலில் நூற்றுக்கால் மண்டபத்தில் 'முதலியார் நாடற்கரிய கூத்தரும் நாயகரும்' எழுந்தருளும் பொழுது கோயிலில் பணிபுரியும் பெண்கள் ஆட தானமளித்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

தஞ்சை மாவட்டத்தில் பூம்புகார் அருகில் மேலப்பெரும்பள்ளம் என்ற ஊர் உள்ளது. இவ்வூர், திருவலம்புரம் என அழைக்கப்பட்டது. இது ஒரு பாடல் பெற்ற தலம்.

இக்கோயிலில் 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த திரண சிவபெருமான் பிட்சாடனர் கோலத்தில் இருக்கும் செப்புத் திருமேனி வழிபாட்டில் உள்ளது. இறைவன் நீண்ட சடை முடி தரித்தவராய்க் கைகளில் வீணை ஏந்திய பாவத்துடன், இளநகை இதழ்களில் தோன்ற, பெருமிதமான தோற்றத்துடன்

6:4:4
ஒரு காலைச் சற்று மடித்து நடக்க முயல்வது போல அமைக்கப்பட்டுள்ளது. இறைவன் நடக்கும் பாவமே ஒரு நாட்டியம் போன்று விளங்குகிறது. இக்-கோயிலில் உள்ள இரண்டாம் இராஜாதிராஜனின் (கி.பி. 1166-1182) பன்னிரண்டாம் ஆண்டுக் கல்வெட்டொன்று அவனது எட்டாம் ஆட்சியாண்டில் (கி.பி. 1174) மேன்மலைப் பழையனூரைச் சேர்ந்த ஒருவர் இக்கோயிலில் இத்திருமேனிகளை எழுந்தருளுவித்து நிவந்தங்கள் ஏற்படுத்தினர் என்று கூறுகிறது. அத்திருமேனிகளில் ஒன்று '<u>வட்டணை பட நடந்த நாயகர்</u>' எனக் கல்வெட்டுக் கூறுகிறது.

இங்குச்சென்று ஈசனை வணங்கிய நாவுக்கரசர் இதயத்தில் ஒரு வண்ணமுறும் கற்பனை எழுந்தது. இறைவனைப்பின்வருமாறு போற்றிப் பாடுகின்றார்.

குறந்தவொரு கண்டத்தர் காலன் வீழக்
காலினாற் காய்ந்துகந்த காபாலியார்
முறித்ததொரு தோலுடுத்து முண்டஞ்சாத்தி
முனிகளாகிய புடைசூழ முற்றம் தோறும்
தெறித்ததொரு வீணையராய்ச் செல்வார் தம் வாய்ச்
சிறுமுறுவல் வந்தனைத்தீத் திந்தை வௌவ
மறித்தொரு கால் நோக்காதே மாயம் பேசி
வலம்புரமே புக்கங்கே மன்னினாரே

பட்டுடுத்தப்பவளம் போல் மேனியெல்லாம்
பசுஞ்சாந்தம் கொண்டணிந்து பாதம் நோவ
இட்டெடுத்து நடமாடி இங்கே வந்தார்க்கு
எவ்வூரீர் எம்பெருமான் என்றேன் ஆவி
விட்டிடுமாறது செய்து விரைந்து நோக்கி
வேறோர் பதிபுகப் போவார் போல
<u>வட்டணைகள் பட நடந்து</u> மாயம் பேசி
வலம்புரமே புக்கங்கே மன்னினாரே.

நாவுக்கரசரின் பாடல் பகுதி சோழநாட்டுக் கலைஞர் உள்ளத்திலே-மகிழ்ச்சியை உருவாக்கியிருக்கவேண்டும்.

இப்பாடலில் குறிக்கப்பட்டிருக்கும் அமைப்பிலேயே இத்திருமேனி அமைக்கப்பட்டுள்ளது, ஒரு சிறப்பாகும். மேலும் திருமுறையில் வரும் சொல்லே அத்திருமேனிக்குப் பெயராக அமைந்துள்ளது.

6:4:5

<u>வட்டணை</u>:

வட்டணை என்பது தாளக்கருவி, தாளம்போடுதல், இடசாரி, வலசாரி-யாக சுற்றுதல், அபிநயம் என்ற பொருள் அகராதிகளில் கூறப்படுகிறது. வட்டணை என்பது நாட்டியத்தில் ஒரு வகையான அபிநயம் என்ற கருத்தை மணிமேகலை கூறுகிறது.

அகல் மலையரங்கத் தாசிரியர் தம்மொடு
வகை தெரி மாக்கட்கு <u>வட்டணை</u> காட்டி
யாடல் புரிந்த மரபியல் மகளாற்
கூடிய குயிலுவக் கருவி கண்டு

(வட்டணை காட்டி - கமலவர்த்தனையைக் காட்டி.
கமலவர்த்தனையாவது - கைத்தலம் காட்டல்)

சிலப்பதிகாரத்தில் கானல் வரிக் காதையில் எட்டு வகை ஆடல்கள் குறிப்பிடப்படுகின்றன. எட்டு வகை ஆடலாவது:-
(1) பண்ணலாவது (2) பரிவட்டணை (3) ஆராய்தல் (4) தைவரல் (5) செலவு (6) விளையாட்டு (7) கையூழ் (8) குறும்போக்கு என்று.
பரிவட்டணையை உரையாசிரியர் பின்வருமாறு விளக்குகிறார். "முகவனு நடையின் முடிவிற்றாகி வலக்கையிருவிரல் வளைபுறத் தழீஇ இடக்கை விரலையளவாகத் தொடையோடு தோன்றியுந் தோன்றாதாகியும் நடையொடு தோன்றும் நயத்ததாகும்".

நாட்டியத்தைப் பெண் குழந்தைகளுக்கு எப்பொழுது கற்றுத் தரத்தொடங்க வேண்டும்? எவ்வளவு ஆண்டுகள் பயின்ற பின் அரங்கேற வேண்டும்? நாட்டியப் பெண்ணிற்கு வேண்டிய இலக்கணம் யாது என்பனவற்றைப் பற்றி இளங்கோவடிகள் தெளிவாகக் கூறியுள்ளார்.

பெண்ணிற்கு <u>வட்டணை</u>, ஓசை, மண்டலம், பண் முதலியன கற்றுத் தந்து பின்னர் கீதம், அலங்காரம் முதலியனவும்புகட்டி, 12 ஆம் வயதில் இவற்றில் அடைந்துள்ள தகுதியைச்சோதனை செய்து பின்னர் அரங்கேற்றம் செய்யவேண்டும் என்கிறது பாடல்.

'வட்டணையும் ஓசையும் மண்டலமும் பண்ணமைய
எட்டுடன் ஈரிரண்டாண்டு எய்திய பின்
கீதக் குறிப்பும் அலங்காரமும் கிளரச்
சோதித்து அரங்கேறச் சூழ்'.

எனவே வட்டணை என்பது நாட்டியத்தில் ஓர் அங்கம் என்பது தெளிவாக விளங்குகிறது.

6:4:6

<u>திருமுறைகளில்</u>

வட்டணை என்பது நாட்டியத்தின் ஓர் அங்கம், என்பதைத் திருமுறைப்பாடல்களும் எடுத்துரைக்கின்றன. காரைக்காலம்மையார் திரு ஆலங்காட்டு ஆடவல்லாரின் நடனத்தைப் பற்றிக் குறிப்பிடும்

சுழலும் அழல் விழிக் கொள்ளி வாய்ப்பேய்
சூழ்ந்து துணங்கையிட்டோடி யாடித்
தழலுள் எரியும் பிணத்தை வாங்கித்
தான் தடி தின்றணங்காடு காட்டில்
சுழலொலி ஓசைச் சிலம் பொலிப்பக்
காலுயர் வட்டணையிட்டு நட்டம்
அழலுமிழ்ந்தோரி கதிக்க ஆடும்
அப்பனிடந்த திரு ஆலங்காடே

திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் 11 ஆம் திருமுறை – பாடல் 7

சீர்காழியில் கோயில் கொண்டிருக்கும் இறைவனைப் போற்றுகின்றார் ஞானசம்பந்தப் பெருமான்.

கொட்ட முழ விட்ட வடி வட்டணைகள் கட்ட
நடமாடி குலவும்
பட்டநுதல் கட்டுமலர் மட்டு மலி பார்வை
யொடு மேவு பதிதான்
வட்ட மதி தட்டு பொழிலுள் தமது வாய்மை
வழுவாத் மொழியார்
சட்ட கலை எட்டு மரு வெட்டும் வளர்த்தத்தை
பயில் சண்பை நகரே

இங்கும் வட்டணை என்ற பதம் இறைவனின் நடனத்துடன் சேர்ந்து வருகிறது. மேலும் சேக்கிழார் பெருமான் பெரியபுராணத்தில் திருநாவுக்கரசர் பெருமான் வரலாற்றைக் கூறும்பொழுது, திருப்புகலூரில் உழவாரப் பணி செய்து கொண்டிருக்கிறார். அவர் மனதை மாற்ற வானிலிருந்து அரம்பையர்கள் அவர் முன்பு நாட்டியம் ஆடுகின்றனர். அரம்பையர்களின் நாட்டியத்தைப் பற்றிப் பெரியபுராணப் பாடல் பின்வருமாறு கூறுகிறது.

கற்பகப்பூந்தளிரடி போங் காமரு சாரிகை செய்ய
உற் பலமென் <u>முகிழ் விரல் வட்டணை யோடுங்கை பெயரப்</u>
பொற்புறு மக்கையின் வழிப்பொருகயற் கண்புடைபெயர
அற்புதப் பொற்கொடி நுடங்கி யாடுவ போலாடுவார்
பாடல் எண்.1696

6:4:7

மேற்கூறிய அனைத்துப்பாடல்களும் வட்டணை என்பது நடனத்தில் ஒரு அங்கம் என்ற பொருளையே குறிப்பதைக் காண்கிறோம்.

<u>வட்டணை ஆடல் உடையார்</u>:

தஞ்சை மாவட்டம் திருவாய்மூர் என அழைக்கப்படும் திருத்தலம் உள்ளது. இது சப்தவிடங்கத்தலங்களுள் ஒன்றாகும். அப்பர் பெருமான் வேதாரண்யத்திற்கு வந்து இறைவனை வழிபட்ட பின்னர் அங்கே தங்குகிறார். அப்பொழுது கனவில் இறைவனைக் காண, பின் செல்கிறார். இருவரும் காண இறைவன் நடனமாடுகின்றார். இதனைத் திருஞானசம்பந்தர் தம் திருப்பதிகத்தில்

கட்டி பூமலர்க் கமழ் கொன்றை
கன்னியர் வீணையர் தாமும் அஃதே
எட்டுணை சாந்த மொடுமை யொடா.
இறைவ . . றைவ தோரிடம் வினவில்
பட்டிவெ யகலல்குல் விரிகுழலார்
பாவையர் பலியெதிர் கொணர்ந்து பெய்ய
<u>வட்டணையாடலொடு வருவீர்</u>

என அத்தாண்டவத்தைப் போற்றுகின்றார்.

மேலும் இவ்வூர்க்கோயிலில் 'வட்டணை ஆடல் உடையார்' என அழைக்கப்பட்ட திருமேனி இருந்தது. அரையன் கம்பித்காதன் என்ற வீரராசேந்திர பல்லவரையன் என்பவன் புரட்டாசி, சித்திரை மாதங்களில் திருவாய்மூருடையார் கோயிலில் இருக்கும் 'வட்டணை ஆடல் உடையார்' திருமேனியை எழுந்தருளிப்பதற்கும், மற்ற விழாவிற்கும் வழிபாட்டிற்கும் நிலம் தானமாக அளித்தான் என முதலாம் இராசராசசோழன் கல்வெட்டு கூறுகிறது. மேலும் இதே இறைவன் மார்கழித்திருவாதிரை விழாவின்போது வீதியுலா எழுந்தருளுவதற்கு 'ஆதித்தன் திருவையாறுடையான்' என்பவனும் நிலமளித்தான் என மற்றொரு கல்வெட்டு கூறுகிறது.

இக்கோயிலில், அழகிய விநாயகப் பிள்ளையார் திருமேனி ஒன்றை 'செம்பொன் சோதி வட்டணை ஆடல் உடையான்' என்பவன் நிறுவினான்; இவ்விறைவனுக்கு முன்னர், மூன்று சந்திகளிலும் விளக்கு எரிய 600 காசுகள் நிவந்தம் செய்தான் என மற்றொரு கல்வெட்டுக் கூறுகிறது.

6.4.3

எனவே இக்கல்வெட்டுச் செய்திகளினால், எழுந்தருளுவிக்கப் பெற்ற திருமேனி ஆடவல்லான் திருமேனியாக இருக்கலாம் எனக் கருதலாம். மேலும் திருப்பதிகங்களில் வரும் 'வட்டணை' என்ற சொல்லையே செப்புத் திருமேனிக்குப் பெயரிட்டு அழைத்திருக்கின்றனர், அப் பெயருடன் சேர்ந்து வழங்கியிருக்கின்றனர் என்பதை அறியும்போது நம் மனம் மகிழ்ச்சி கொள்கிறது.

இவ்வாறு இறைவர் இறைவியின் திருவுருவங்களைத் தேவாரச் சொற்றொடரையே பயன்படுத்தி அழைத்து வந்திருப்பதைக் கல்வெட்டுக்களால் அறிகிறோம். பிற்காலத்தில் இப்பெயர்கள் பல இடங்களில் மாறிவிட்டன. தேவார சொற்றொடர்கள் கல்வெட்டுக்களில் பெருமளவில் இடம் பெற்றிருப்பது அக்கால மன்னர்கள் திருமுறைகளின் மீது கொண்டிருந்த ஈடுபாட்டினை உணர்த்துகின்றது.

<u>பயன்படுத்திய நூல்கள்:</u>


1. Tamil Lexicon } University of Madras.
2. Pre Pallavan Tamil Index } University of Madras.
3. வட்டணைபட நடந்த நாயகர் — இரா. நாகசாமி — கல்வெட்டு இதழ் - 1 - 1974
4. வரலாற்றில் பரத நாட்டியம் — இரா. நாகசாமி
5. கல்வெட்டில் தேவாரமூவர் — கு.ம. வேங்கடராமையா
6. தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதிகள்

6:5:1 **திருக்கோயில் ஆட்சிமுறை அமைப்பு ....?**

-தவத்திரு குன்றக்குடி அடிகளார்

ஆட்சியியல் ஒரு கலை; ஆக்கம். அதுவும் திருக்கோயில் ஆட்சிமுறை — நுட்பம் சார்ந்தது. திருக்கோயில் உயிரியல் தொடர்புடையது. அதனால் திருக்கோயில் ஆட்சிமுறை சிறப்பாக அமைந்தால்தான் பயன்கிட்டும். பழங்காலத்தில் மக்கட் சமுதாயமே திருக்கோயிலைக் கண்டது; வளர்த்தது; பேணிக் காத்தது; ஆட்சியும் செய்து வந்தது. அரசிடம் பொதுவான மேலாண்மையும் கண்காணிப்பும் மட்டுமே இருந்து வந்தது.

திருக்கோயில் ஆட்சிக்கு மானுடவியல், அன்பு, அறம், அருள் ஆகியன அடிப்படையானவை. "அறம் செய்தானே செய்தான் அறம் காப்பானின் திருவடிகள் அறம் செய்தானின் சிரசின்மேல்" என்பது நமது நாட்டில் வழக்கத்திலிருக்கும் சண்டேசர் திருமுகம். திருக்கோயில் ஆட்சிமுறை மற்றெல்லாத் துறைகளின் ஆட்சிமுறையைவிடச் சிக்கலானது. மற்ற ஆட்சித்துறைகளுக்கு விதிகளே அளவுகோல். திருக்கோயில் ஆட்சிமுறைக்கு உள்ளம் நிறைந்த அன்பு, அன்பின் வழிப்பட்ட — தியாகம், அறம் ஆகியன தவிர்க்க இயலாதன. இவற்றோடு மனித நேயமும் இணைந்திருத்தல் வேண்டும். மற்ற ஆட்சித்துறைகளுக்குப் பொருளே அடிப்படை. திருக்கோயில் ஆட்சியில் உயிரியல், வாழ்வியல்; உளவியல், கலை முதலிய பல்வேறு துறைகளும் அடிப்படைகளாக அமைந்துள்ளன.

திருக்கோயில் ஆட்சிமுறை சமுதாயத்தினிடத்தில் இருப்பதே சாலவும் இயைபுடையது. அதுவும் சமயச் சார்பற்ற தன்மையை மேற்கொண்டுள்ள ஒரு நாட்டில் சமய நிறுவனங்கள் அந்தந்தச் சமயத்தினைச் சார்ந்த மக்களிடத்திலேயே அமைவது நல்லது; தவிர்க்க இயலாததுங்கூட. திருக்கோயில், சமுதாயத்தின் பொதுவுடைமை. மக்கள் திருக்கோயிலுக்கு உடைமையாக விளங்கவேண்டும். ஊர்தோறும் ஊர்ச்சபை இருக்கவேண்டும். அந்த ஊர்ச்சபையில் அந்த ஊரின் அனைத்துக் குடும்பங்களும் உறுப்பினர்கள். இங்குக் குடும்பம் என்பது வயது வந்த திருமணமானவர்கள். இந்த ஊர்ச்சபைக்குத் தலைமையிடம் திருக்கோயில். ஊர்ச்சபையின் தலைவர் இறைவனேயாம். இறைவனுடைய அதிகாரம் பெற்ற ஒருவர் — உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற ஒருவர் ஊர்ச்சபையின் செயல் தலைவராக இருந்து கிராமக் காரியங்களைச் செய்வார். ஊர்ச்சபையே, ஊர்ச்சபையின் செயலாண்மைக் குழுவையும், திருக்கோயில் சபையையும் வரிப்பெருக்கும் வாரியத்தை(அறங்கூறவையம்) யும் தேர்ந்தெடுத்து அமைக்கும்.

6:5:2

திருக்கோயில் சபையில் அடியிற்கண்டவர்கள் உறுப்பினர்களாக இருப்பர்.

1. ஊர்ச்சபை தேர்ந்தெடுத்து அனுப்பும் ஏழு பேர்.
2. திருமடத்தின் பேராளர் ஒருவர்
3. ஊராட்சிமன்றத் தலைவர்
4. பள்ளித் தலைமை ஆசிரியர் (கல்வி நிலையங்கள் பல இருப்பின் மிக உயர் கல்வி நிலையத்தின் தலைவர்)
5. அரசு நியமிக்கும் பிரதிநிதி அல்லது கிராம நிர்வாக அலுவலர்
6. ஊர்நல அலுவலர்
7. பதிவு செய்யப்பெற்ற மாதர் சங்கத்தின் தலைவி அல்லது மாதர் சங்கத்தின் பேராளர்
8. பதிவு செய்யப்பெற்ற இளைஞர் மன்றத்தின் தலைவர் அல்லது மன்றம் தேர்வு செய்யும் பேராளர்
9. திருக்கோயில் பேராளர் ஆகமம், திருமுறைகள், சாத்திரங்களில் ஆழ்ந்த பயிற்சியும் அனுபவமும் உள்ள ஒருவரை திருக்கோயில்சபை நியமனம் செய்து கொள்ளும்.

திருக்கோயில் ஆட்சிமுறை ஐந்து துறைகளாக வகுத்து இயக்கப் பெறுதல் வேண்டும். அவையாவன:

1. வருவாய் — நிதித்துறை
2. வழிபாட்டுத் துறை (நாட் பூசை, திருவிழா)
3. சமுதாயப் பணித்துறை
4. கலை, இலக்கியத்துறை
5. நீதித்துறை (மேல்முறையீடு)

1. <u>வருவாய் — நிதித்துறை</u>:

இன்று பல திருக்கோயில்கள் வருவாய் இழந்துள்ளன. திருக்கோயில்களையே பொதுமக்கள் "ஏழைக்கோயில்" என்று கூச்சமின்றிக் கூறுகின்றனர். இது தவறு. திருக்கோயிலுக்கு மக்கள்தான் சொத்து. மக்கள் ஏழைகளாகவும் திருக்கோயில் ஆர்வங்காட்டாதவர்களாகவும் இருந்தால்தான் திருக்கோயில்கள் "ஏழைக் கோயில்" களாக இருக்கும். இந்த முறை மாற்றப்பெறுதல் வேண்டும்.

திருக்கோயிலுக்கு உரிய வருவாய், திருக்கோயிலைச் சார்ந்து வாழும் மக்கள் கொடுக்கும் காணிக்கைகளாகவே இருக்கவேண்டும். இதுவே பெரும்பகுதியாக இருக்கவேண்டும். அதாவது திருக்கோயிலைச் சார்ந்த ஒவ்வொரு குடும்பமும் ஆண்டுக் காணிக்கை ரூ. 25/- முதல் ரூ. 50/- வரை அவ்வப்பொழுது திருக்கோயில் சபை நிர்ணயம்செய்யும் வகையில் தருதல்வேண்டும்

இதுபோக, மக்கள் பிறப்பு, குழந்தைகளைப் பள்ளிக்கு வைத்தல், தீட்சை பெறுதல், திருமணம், இறப்பு முதலிய சடங்குகளுக்குத் திருக்கோயில்சபை நிர்ணயிக்கும் கட்டணங்களைச் செலுத்தித் திருக்கோயில்களை மையமாகக்கொண்டே வாழ்க்கைச் சடங்குகளை நடத்துதல் வேண்டும். அடுத்து, ஒவ்வொருவருக்கும் தனி வேண்டுதல்கள் தனிப்பிரார்த்தனை இருப்பின் கட்டணம் செலுத்திச் செய்து கொள்ளலாம். திருக்கோயில் வருவாயில் மக்கள் மூலம் வரும் வருவாய் திருக்கோயில் ஆட்சிமுறைக்குப் போதுமானதாக அமையும்; அமையத்தக்கவாறு கவனித்துக்கொள்ளுதல் வேண்டும். திருக்கோயிலுக்குக் குறைந்த அளவு மூவாயிரம் குடும்பங்கள் என்ற விகிதத்தில் அமையின் ஆட்சிமுறை சீராக அமையும். சற்றுக் கூடுதலாக ஐயாயிரம் குடும்பங்களாக அமைத்துக்கொள்ளலாம். நகரங்களாக இருப்பின் இந்த விகிதத்திலேயே அமைத்தல் வேண்டும்.

அடுத்து, திருக்கோயில் உடைமைகளிலிருந்து அதாவது சொத்துக்களிலிருந்து வரக்கூடிய வருவாய். திருக்கோயில் சொத்துக்களை உரிய வாடகை அல்லது குத்தகை கொடுக்காமல் அநுபவித்துக் கொள்வது சமுதாயக் குற்றமாகக் கருதப்பெறுதல் வேண்டும். ஏனெனில் திருக்கோயிலே ஒரு சமுதாயம். திருக்கோயில் சொத்துக்கள் கடவுள் பெயரால் அமைந்த பொதுவுடைமைச் சொத்துக்களேயாம். அதாவது சமுதாய உடைமைகளேயாம். திருக்கோயில் சொத்துக்களை நல்லவண்ணம் குத்தகைக்கும் வாடகைக்கும் விட்டு வருவாய் சேர்க்கவேண்டும். இங்ஙனம் குத்தகைக்கு விடுவதில் திருக்கோயில், விவசாயியைச் சுரண்டுகிற நிறுவனமாக அமைந்துவிடக்கூடாது. மக்களும் திருக்கோயிலைச் சுரண்டுபவர்களாக இருக்கக்கூடாது. திருக்கோயில் சொத்துக்களைக் கூடுமான வரையில், திருக்கோயில் கூட்டுறவுப் பண்ணையாக நடத்துதல் நல்லது. அதில் விவசாயிகள் பங்குதாரர்களாக அமைவது நல்லது. இந்தப் பங்குகள் விற்பனைக்கும் மாற்றுதலுக்கும் உரியனவாக இருக்காது; இருக்கக்கூடாது. ஒரு பங்குதாரரின் முறையான வாரிசுதாரர் தகுதியுடையவராக இருப்பின் திருக்கோயில்சபை ஏற்கலாம். இங்ஙனம் திருக்கோயிலுக்குரிய நிதியை — தேவையான நிதியைத் திரட்டி, கிடைக்கும் நிதி ஆதாரத்தின் அடிப்படையில் வரவு — செலவுத் திட்டம் தயாரித்துத் திருக்கோயில்சபை, ஊர்ச்சபையின் ஒப்புதல் பெறவேண்டும். வரவு அடிப்படையில் செலவுத் திட்டம் தயாரித்தல் பொதுமுறை. ஆயினும் வளரும் சமுதாயத்தினைப் பேணவும், திருக்கோயிலைப் பேணவும் வேண்டிய அவசியத்தின் வழி, கூடுதல் நிதி தேவைப்படின் திட்டமிட்டுப் புதிய வருவாய் தேடவேண்டும்.

6:5:4

வழிபாட்டுத் துறை:

அடுத்து, திருக்கோயில் வழிபாட்டுத்துறை. இத்துறையின் நடைமுறைகளைக் கவனித்து நடத்த ஆகமம், திருமுறைகள் முதலியவற்றில் பயிற்சியுடைய ஒருவர் நியமனம் செய்யப்பெறுதல் வேண்டும். திருக்கோயிலில் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கும் வகையில் வழிபாடு நடைபெறத் திருமுறைத் தமிழில் அருச்சனை வேண்டும். திருக்கோயில் தூய்மைப் பொலிவும் கலைப்பொலிவும் திருவருட் பொலிவும் உடையதாக அமைதல் வேண்டும். திருக்கோயில் பூசனைகள், எளிதில் மக்கள் பங்கேற்கவும் மனநிறைவு பெறவும், ஆன்மநலனை வளர்த்துக்கொள்ளவும் தக்கவகையில் பொருள் நிறைந்த பூசனையாக நடைபெறவேண்டும். ஆரவாரங்கள் தவிர்க்கப்பெறுதல் வேண்டும். பிறப்பினாலோ, செல்வத்தினாலோ பதவிகள் காரணமாகவோ திருக்கோயிலில் வேற்றுமை காட்டக்கூடாது. எல்லாவற்றிலும் எப்போதும் ஒழுங்கியல் வரிசை ( ) பின்பற்றப்படுதல் வேண்டும்.

"போதொடு நீர்சுமந் தேத்திப்
புகுவார் அவர்பின் புகுவேன்"

என்ற அப்பரடிகள் அருள்வாக்கினைத் திருக்கோயில் நடைமுறைப்படுத்த வேண்டும்.

திருக்கோயிற் சிற்பங்கள், திருவுருவங்கள், சிறப்பான முறையில் பேணப்பெறுதல் வேண்டும். தமிழகத்தின் சிறப்பான நிகழ்வு, திருக்கோயில் திருவிழாக்களேயாம். திருவிழாப் பொலிவு காண்பதே வாழ்க்கையின் பேறு என்று திருமுறைகள் கூறும். திருவாரூர் பங்குனி உத்திரப் பெருவிழாவைக் காண அப்பரடிகள் திருவாரூருக்கு எழுந்தருளியதை நினைவு கூர்க. திருக்கோயில்களில் நிகழும் இவ்வகையான திருவிழாக்கள் ஆரவாரமின்றி, கொச்சைத் தன்மையும் கவர்ச்சியுமின்றி தூய்மைப் பொலிவுடன் அழகான முறையில் — சிறந்த முறையில் எடுக்கப்பெறுதல் வேண்டும். திருவிழாக்கள் பொறிகளுக்கும் புலன்களுக்கும், ஆன்மாவிற்கும் விருந்தாக அமைந்திருத்தல் வேண்டும்,

சமுதாயப் பணித்துறை:

அடுத்து, திருக்கோயில் சமுதாயப் பணித்துறை. இத்துறை, சமுதாயப் புள்ளிகளுக்கு ஒழுங்கான கணக்கு வைத்துக் கொள்ளவேண்டும். மக்களுடன் நெருக்கமான தொடர்புகளை இணக்கமாக வைத்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு குடும்பத்தினுடைய வளர்ச்சியிலும் நல்வாழ்க்கையிலும் சமநிலையில் ஈடுபாடு காட்டுதல் வேண்டும். இந்தக் குடும்பங்களில் உள்ளவர்கள் தகுமாறு அறிந்து, உணர்ந்து இனிதே வாழ வழிகாட்ட வேண்டும்; வழி நடத்துதல் வேண்டும். நல்வாழ்க்கைக்குரிய வாழ்க்கை வசதிகளைத் திட்டமிட்டுப் பெற்று,

பெறுமலோ (நிதி வசதிக்கேற்ப) வழங்குதல் வேண்டும். கல்வி, மருத்துவம் முதலிய அடிப்படைத் தேவைகளை வழங்குதல் வேண்டும். திருக்கோயிலைச் சார்ந்திருந்த மனநிறைவுடனும் மகிழ்வுடனும் வாழ்வாங்கு வாழ முடியும் என்ற நம்பிக்கை உண்டாக்கப் பெறுதல் வேண்டும். ஒவ்வோர் ஊருக்கும் ஒரு திருக்கோயில். அத்திருக்கோயிலைச் சுற்றி நலம் செறிந்த ஒரு கிராமக் குடியரசு விளங்குதல் வேண்டும். சமுதாயத் துறையின் பணிகள் விரிவடைந்து மக்களின் தேவைக்கேற்பப் பணி செய்யும் திருக்கோயில் கலைப்பயில் கூடமாகும். மானுடம் வெறும் சோற்றால் வளரும் ஒரு படைப்பன்று. மானுடம் ஓர் ஆன்மா; அது அநுபவத்திற்குரியது; அநுபவிப்பது. ஆன்மாவிற்கு அநுபவம் உரிமை; வாழ்வு; எல்லாம்! உயர்ந்த அநுபவங்கள் கிடைக்காதபோழ்து ஆன்மா மிருகத் தன்மையை அடைகிறது: உயர்தர அநுபவங்கள் கிடைக்கும்பொழுது ஆன்மாவின் வளர்ச்சி அளவிடற்கரியதாக இருக்கும், என்ற காதலையே எடுத்துக் கொள்ளுங்கள்! சுந்தரர், பரவையாரிடத்தில் தோய்ந்து பெற்ற அநுபவத்தினைச் சேக்கிழார் பெருமான்,

"தென்நாவ லூர்மன்னன் தேவர்பிரான் திருவருளால்
மின்னாரும் கொடிமருங்குல் பரவையெனும் மெல்லியல்தன்
பொன்னாரும் முலைதுங்கல் புணர்குவடே சார்வாகப்
பன்னாளும் பயில்யோக பரம்பரையின் விரும்பினார்" (தடுத்.பு.181)

என்று பேசுவார்.

<u>கலை இலக்கியத்துறை:</u>

அதுபோலவே, இசை முதலிய பல்வேறு கலைகளும் மானுடத்தின் அநுபவத்திற்குரியன. அதனாலேயே திருக்கோயில்கள் கவின்கலைகள் பலவற்றிலும் சிறந்து விளங்குவதைக் காணமுடிகிறது. திருக்கோயில்கள் தோறும் நல்ல நாகசுரக் கலைஞர்கள் நியமனம் செய்யப்பெறுதல் வேண்டும். காலங்கள் தோறும் அந்தந்தக் காலத்திற்குரிய ராகங்கள் வாசிக்கப் பெறுதல் வேண்டும். இசை - இசைவிப்பது. அதாவது, கடவுளுக்கும் ஆன்மாவுக்கும் இடையே உள்ள இடைவெளியை நீக்கி, இசைவிப்பது இசை. "ஏழிசையாய், இசைப் பயனும்" என்பார் நற்றமிழ் நாவலூரார்.

திருக்கோயில்கள் தோறும் முறையாகப் பண்ணும், பாட்டும் இசைக்கத் திருமுறைப் பதிகம் விண்ணப்பிப்பார் நியமனம் செய்யப்பெறுதல் வேண்டும். நாள்தோறும், நாழிகைகளுக்கிசைந்த பண்களும், பருவ காலங்களுக்கிசைந்த பண்களும் பக்க வாத்தியங்களுடன் ஓதப்பெறுதல் வேண்டும்.

6:5:6
மாதந்தோறும் நிறைநிலா நாளன்று நல்ல நீதிபோதனை தரக்கூடிய புராண - இதிகாச நாடகங்களை நடத்த வேண்டும். இது மக்களுக்குக் களிப்புக்கும் மகிழ்ச்சிக்கும் துணை செய்யக்கூடிய பொழுதுபோக்காகவும் அமையும்; அதேபோழ்து ஆன்மாவையும் வளர்க்கும். கலைத்துறையினர், மக்களைக் கலைஞர்களாகவும் கலையை அனுபவிப்பவர்களாகவும் படைத்து நாட்டுக்கு வழங்கவேண்டும்.

<u>நீதித்துறை</u>:

சமுதாயம் நீதி வழுவா நெறியில் வாழப் பயிற்றப் பெறுதல் வேண்டும். ஏமாற்று, பிணக்கு, பகை முதலிய தீமைகள் பயிலாத சமுதாயமாக விளங்கி பரஸ்பர நம்பிக்கையும் நல்லெண்ணமும் விளங்கக்கூடிய சமுதாயமாக அமைந்து விளங்குதல் வேண்டும். ஒரோவழி, பிணக்குகள் வந்துவிட்டால் அப்பிணக்கு பாழ்செய்யும் உட்பகையாக வளராமல் உடன் தடுத்துத் திருத்தம் கண்டு இணக்கம் உண்டாக்கப் பெறுதல் வேண்டும்.

நீதி, விற்பனைக்குரிய பொருளன்று; வாங்கக்கூடிய பொருளுமன்று. நீதி வளையக்கூடாது. தமிழ் மரபில் இறைவனை 'நீதி' என்று அழைத்தல் மரபு. மாணிக்கவாசகர், "பங்கயத்து அயனும் மாலறியா நீதியே" என்று அருளினார். திருக்கோயில் நீதித்துறையினர், சமுதாயத்தினிடையே முரண்பாடுகள் தோன்றாமல் தவிர்ப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். ஒரோவழி வழக்குகள் வந்துவிட்டால் நீதி, முறையாக வழங்கப்பெறுதல் வேண்டும்.

திருக்கோயில் ஆட்சிமுறையில் தவறுகள் நிகழ்ந்துவிட்டால் ஊர்ச்சபை கூடி விசாரிக்க வேண்டும். குற்றம் நிரூபணம் ஆகிவிட்டால் கடுமையான தண்டனையை ஊர்ச்சபை வழங்கவேண்டும். இதற்கு எந்த மேல்முறையீடும் இல்லையென்றாக வேண்டும். இந்த முறையில் திருக்கோயில் ஆட்சிமுறையும் சமுதாயமும் அமையும் காலமே பொற்காலமாகும்.

திருக்கோயில் நிர்வாகத்திற்குத் திருக்கோயில்சபைப் பணிகளின் தகுதி வாய்ந்த, சட்டம், தந்திரம், பொருளியல் துறையில் பட்டம் பெற்ற ஒருவரை, கடவுள் நம்பிக்கையும் திருக்கோயில் வழிபாட்டில் ஈடுபாடும் கொண்ட ஒருவரை நியமித்துக் கொள்ளவேண்டும்; அல்லது அரசிடம் கோரி அயல்வழிப் பணியில் நியமித்துக் கொள்ள மூவர் கொண்ட பட்டியல் வாங்கி அதில் ஒருவரைத் தேர்வு செய்து கொள்ளலாம்.

ஊர்ச்சபை, திருக்கோயில் வரவு - செலவுத் தணிக்கை செய்வதற்குரிய தணிக்கையாளரை நியமிக்கும். தணிக்கை அறிக்கையின் பேரில் குறைநிவர்த்தி

6:5:7

அறிக்கைக்கு அர்ச்சபை ஏற்புத் தரவேண்டும். கடுமையான ஒழுங்கீனங்கள் இருப்பின் உரிய நடவடிக்கைகளை எடுக்கும், திருக்கோயில்சபைக்கும் பரிந்துரை செய்யும். திருக்கோயில் சபை தகுதியற்றது என்ற கருத்தில் மூன்றில் இரண்டு பங்கு வாக்குகள் மூலம் திருக்கோயில் சபையைக் கலைத்துவிட்டுப் புதிய சபையை நியமிக்கலாம்.

மாவட்டங்கள் தோறும் ஒரு திருக்கோயில் சபை அமையும். இச்சபையில் திருக்கோயில் சபைகளின் தலைவர்கள் அனைவரும் இடம் பெறுவர். எண்ணிக்கை அதிகமாக இருப்பின் சபைத் தலைவர்களால் தேர்ந்தெடுக்கப்பெற்றவர்கள் இடம் பெறுவர். 50 பேருக்கு ஒருவர் வீதம் தேர்ந்தெடுக்கப்பெறலாம். மற்றும் மாவட்ட அளவில் உள்ள அரசு அலுவலர்கள் (மாவட்ட வருவாய் அலுவலர், கல்வி அலுவலர், மாவட்ட சுகாதார மருத்துவர், துணை ஆணையர் ஆகியோர்) இடம் பெறுவர். இந்த மாவட்டசபை, திருக்கோயில் சபைகளுக்கு வழிகாட்டும் பணியைச் செய்யும். திருக்கோயில் சபை — அர்ச்சபைகளுக்கிடையே பிணக்குகள் ஏற்படின் சமாதான வழியில் தீர்வு காணும்.

மாநில அளவில் ஒரு திருக்கோயில்சபை இயங்கும். இந்தச் சபையே முழு அதிகாரமுடைய சபை. இந்தச் சபை பல்கலைக் கழக வடிவமைப்பில் அமையும். ஒரு ஆட்சிக்குழு 21 பேர்களைக் கொண்டதாக அமையும். இந்த ஆட்சிக்குழுவில்

| | எண்ணிக்கை |
|---|---|
| 1. மடங்களின் தலைவர்கள். | 3 |
| 2. திருக்கோயில் சபையின் பேராளர்கள் (தேர்வு முறையில் வருபவர்கள்) | 4 |
| 3. வேத, ஆகமங்களில் சிறந்த அறிஞர் (நியமனம்) | 1 |
| 4. திருமுறை அறிஞர் (நியமனம்) | 1 |
| 5. தத்துவத்துறை அறிஞர் (நியமனம்) | 1 |
| 6. கலைத்துறை அறிஞர் (நியமனம்) | 1 |
| 7. வர்த்தகக் கழகப்பிரதிநிதி (தேர்வு) | 1 |
| 8. ஆசிரியர் பிரதிநிதி | 1 |
| 9. அரசு நியமன உறுப்பினர் | 3 |
| 10. பட்டதாரிகள் (தேர்வு) | 1 |
| 11. சொட்டிலிருந்து | 3 |
| | 20 |

6:5:8

இதற்கு ஒரு தலைவரை நியமிக்க மூன்றுபேர் கொண்ட பட்டியலைத் தயாரித்துத் தர அரசு ஒரு குழுவை நியமிக்கும். அக்குழுவிற்கு மாநில சபை 6 பேரைப் பரிந்துரை செய்து பட்டியல் தரும். அந்தப் பட்டியலில் மூவரை அரசுக்குப் பரிந்துரை செய்யும். அரசு இம்மூவரில் ஒருவரைத் தேர்வு செய்து சபையின் தலைவராக நியமனம் செய்யும். இதில் முரண்பாடுகள் ஏற்பட்டால் உயர்நீதி மன்றத்தின் முடிவுக்கு விட்டுவிடவேண்டும். இந்த நியமனங்களில் அரசியல், சாதி, வகுப்பு எண்ணங்கள் தலையிடக்கூடாது. இச்சபையின் தலைவருக்குத் துணையாக நிர்வாகத்தில் உதவி செய்ய ஒரு நிர்வாக அலுவலரை ஆட்சிக்குழு நியமனம் செய்து கொள்ளவேண்டும். இக்குழுவின் நிர்வாகச் செலவிற்கு ஒவ்வொரு திருக்கோயிலும் பங்களிப்புத் தொகை தரவேண்டும்.

மாநில திருக்கோயில் சபைக்கு எந்தத் திருக்கோயிலினுடைய அன்றாட நிர்வாகத்திலும் தலையீடு இல்லை. இது தீர்வு காணமுடியாத வரும் தாவாக்களுக்குத் தீர்வு காணும்.

இச்சபை, திருக்கோயில் வளர்ச்சி, சமுதாய வளர்ச்சி, கலை வளர்ச்சி ஆகியவற்றிற்குத் திட்டமிட்டுச் செயற்படுதல் வேண்டும். இந்தச் சபையில் பல்வேறு துணைக்குழுக்கள் அமையும்.

1. திருக்கோயிற் புலம்
2. வழிபாட்டுப் புலம்.
3. தத்துவப் புலம்
4. சமுதாயப் புலம்
5. மொழிப் புலம்
6. கலைப்புலம்
7. சிற்ப – ஓவியப் புலம்
8. பதிப்புப் புலம்
9. ஒருமைப்பாட்டுப் புலம்

முதலிய பல்வேறு துறைகள் அமைந்து திட்டமிட்ட பணிகளை மேற்கொள்ளும்.

6:5:9

இந்த மாநில சபைக்கு இ.ஆ.ப., போன்ற ஒரு சிறந்த அலுவலரை, அரசிடம் அயல்வழிப் பணியில் வாங்கிச் செயலாளராக நியமனம் செய்துகொள்வது நல்லது.

இங்ஙனம், திருக்கோயிலைத் தழுவிக் குடிமக்களின் வாழ்க்கையும், குடிமக்களைத் தழுவித் திருக்கோயிலும் விளங்கின்,

வான்முகில் வழாது பெய்யும்;
மலி வளம் சுரக்கும்;
மன்னன் கோன்முறை அரசு செய்யும்;
குறைவிலாது உயிர்கள் வாழும்;
நான்மறை அறங்கள் ஓங்கும்
நற்றவம் வேள்வி மல்கும்.
மேன்மைகொள் சமய நீதி
விளங்கிடும் உலகமெல்லாம்.

***

# சமய நிறுவனங்களின் வரலாறு.

டாக்டர் தெ. சொக்கலிங்கம் —
இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை
அழகப்பா பல்கலைக் கழகம்.

---

## குருகுலக் கல்வி — அடிப்படை:

சமயக் கொள்கைகளை விளக்கிச் சமயத்தை வளர்த்து வருவன சமய நிறுவனங்கள். பண்டைநாளில், மாணாக்கர்கள் ஆசிரியரொடு தங்கிப் பயின்ற முறைமையே பின்னாளில் சமய நிறுவனங்கள் தோன்ற அடிப்படையாகும். இல்லறத்திலிருந்த அறிஞன் தான் கற்று அறிந்தவற்றையும் உணர்ந்தவற்றையும் தன்பால் வந்த மாணாக்கருக்குக் கற்பித்தான். காலந்தோறும் அறிவாராய்ச்சி பெருகிற்று. ஆராய்ச்சியும் சமயச் சிந்தனையும் நிலையாமை உணர்வும் பெருகிய போது, இல்லறம் தொல்லையாக அறிவாளருக்குத் தோன்றியது.

அதே சிந்தனை சமய ஆர்வமும் மேலோங்கியபோது, துறவறமே தனிச் சிறப்பும் மேன்மையும் உடையதாயிற்று. துறவிக்குத் திருக்கோயில் வழிபாடும் சமய ஞானாராய்ச்சியும் தாம் வாழ்க்கையாயின. ஞானம் கைவரப் பெற்ற துறவிக்குச் சீடர்கள் பலர் அமைந்தனர். இவ்வாறு சங்க/கோஷ்டி/ இயக்கம் ஒன்று உருவாயிற்று.

## மடங்களின் தொன்மை:

இத்தகைய குழு அமைப்பு சமணம், பௌத்தம் போன்ற எல்லாச் சமயங்களிலும் இருந்தது. இந்தியாவுக்கு வந்த பாகியான் பௌத்த மடங்களைக் கண்டதாகக் குறித்துள்ளான். தென்னார்க்காடு மாவட்டம், பாடலிபுரத்தில் சமண மடம் இருந்தது. இங்கிருந்து கி.பி. 458 இல் லோகவிபாகம் என்ற திகம்பர சமண நூல் படி எடுக்கப்பட்டது. திருமூலர் திருமந்திரத்தில் 'மடம்' என்ற சொல்லை ஆளுகின்றார். இந்நூலிலுள்ள 'குரு மட வரலாறு' என்ற பகுதி திருமடங்களின் வரலாற்றுக்கு அடித்தளமாகும்.

குழு அமைத்துத் தனி இயக்கமாக — நிறுவனமாக — மடங்களாகச் செயற்படுவது எல்லா இந்திய சமயங்களிலும் காணப்படும் பண்பாகும். சமண பௌத்தங்களை எதிர்த்துத் தம் சமயத்தை வளர்க்க முற்பட்ட சைவ சமயத்தாரும் மடங்கள் நிறுவியிருந்தனர். திருவதிகையில் இத்தகைய மடங்கள் இருந்தன. கம்பவர்மன் காலத்து ஒற்றியூர் மடத்துச் சிறந்த அறிஞர் தலைவராகத் திகழ்ந்தார். சேக்கிழார், திருஞானசம்பந்தர் மதுரையில் மடத்தில் தங்கினார் என்று குறிக்கின்றார்

கி.பி. பத்தாம் நூற்றாண்டில், கொடும்பாளூரில் இருந்த கோமடத்திற்கு (லகுலீச பாசுபதர் = காளாமுகர்) மல்லிகார்ச்சுனர் தலைவராகத் திகழ்ந்தார். இரண்டாம் இராசாதிராசன் காலத்தில் திருவொற்றியூரில் கபாலிகர் மடம் இருந்தது. தக்கயாகப் பரணியில் ஒட்டக்கூத்தர் பெரிய மடத்தைக் குறிப்பர்.

"குடந்தையம் பதியில் கோதிலாப் பெரிய
மடந்தனில் வாழ்வீர மயேச்சுரர் வாழியவே"

என்பது அத்தாழிசை. இம்மடம் வீரசைவ மடமாம். இவ்வாறு காலந்தொறும் சமய நிறுவனங்கள் தமிழகத்தில் நிலவின. அவற்றில் சிலவற்றுக்குத் தொடர்ச்சியான வரலாறு உண்டு.

<u>மடமும் ஆதீனமும்:</u>

இந்த மடங்கள் தாம் சமயத்தையும் தாய் மொழியையும் வளர்த்தன. தருக்க நூல் அறிவையும் அறிவாராய்ச்சிப் புலமையையும் வளர்த்தன. இதற்கெல்லாம் நிலைக்களமும் மடங்களேயாம்.

"ஆதியில் மடம் என்ற சொல் துறவி
ஒருவரின் குடிலாக இருந்தது. பின்னர்ப்
பல துறவிகள் குடில்களின் கூட்டத்தைக்
குறிப்பதாயிற்று. சாகுந்தல நாடகத்தில்
கூறும் கண்ணுவ முனிவரின் ஆச்சிரமம்
அத்தகையது. நாளடைவில் பல துறவிகள்
ஒன்றாகச் சேர்ந்து வாழுமிடம் மடம்
என்பதாக ஆயிற்று" (1) (கலைக் களஞ்சியம் - 8)

அங்ஙனம் மடங்கள் இந்தியாவில் சமயம் வளர்க்கும் நிறுவனங்களாகத் திகழ்ந்தன. அந்த மடங்களில் மடாதிபதியும் சீடர்களும் இருப்பர். ஒவ்வொரு மடத்தையும் சேர்ந்ததாகக் கோயில்கள் இருக்கும். 'தலைமையாயிருந்து பல சீடரையும் கோயில்களையும் உடைமையால் ஆதீனம்' என்று மடங்கள் சொல்லப்படும். ஆதீனம் என்ற சொல்லுக்கு உரிமை நிலையம் என்று பொருள் கொள்ளவேண்டும்.

<u>நந்தி மரபின் வளர்ச்சி:</u>

தமிழகத்தில் சமயங்களை வளர்க்கும் பல்வேறு நிறுவனங்களில் குறிக்கத் தக்கவை திருவாவடுதுறை, தருமபுரம், திருப்பனந்தாள் மடங்களாம். இவை சமயக்கோட்பாடுகளை இலக்கிய வழியாகப் பரப்பின. தருமபுரம் குருமரபில் தோன்றிய பெரியார்களின் அநுபவங்கள் பண்டார சாத்திரங்கள் என்று வெளி வந்திருக்கின்றன. இம்மூன்று ஆதீனங்களும் தஞ்சாவூரை மையமாகக் கொண்டு அமைந்தவை. இவை நந்தி மரபில் வளர்ந்து வருவன. மற்றொரு மரபு கந்த மரபு. இம்மரபில் வளர்ந்து வருவது குன்றக்குடி கோயில் ஆதீனம்.

(அ) திருவாவடுதுறை ஆதீனம், பதினாறாம் நூற்றாண்டில் நமச்சிவாய தேசிகரால் உருவானது. இவர் தம் குரு சித்தர் சிவப்பிரகாசரின் ஆணைப்படி திருவாவடுதுறையில் சைவாதீனத்தை நிறுவினார். இவர்கள் கைலாய பரம்பரையினர் எனப்படுவர். இவ்வாதீனத்தில் உருத்திரகோடி தேசிகர் நாலாம் பட்டமாக இருந்தபோது மதுரை செவ்வந்தியப்ப நாயகர் என்பவர் பாபவிநாசம், திருப்புடை மருதூர், செவ்வல், திருநெல்வேலி, முரப்பநாடு, வள்ளியூர், கன்னியாகுமரி, சுசீந்திரம் முதலிய எட்டு ஊர்களிலும் மடாலயம் அமைத்து அவற்றிற்கு வேண்டிய கிராமங்களும் அளித்தார். இது நடந்தது கி.பி. 1537-1543 வரும்.

(ஆ) தமிழ் நாட்டில் ஞானமார்க்கத்தைப் பின்பற்றிச் சுத்தாத்துவித சைவசித்தாந்தக் கொள்கையைப் பின்பற்றும் ஆதீனங்களில் தருமபுரம் குறிக்கத் தக்கது. இது திருக்கயிலாய பரம்பரை மெய்கண்ட சந்தானத்தில் பதினாறாம் நூற்றாண்டில் தோன்றியது. தருமை ஆதீன முதற் பெருங்குரவர் குருஞானசம்பந்தர் ஆவர். இவர் தருமையில் அகத்திய முனிவரின் சீடர்கள் வாழ்ந்த திருமடத்தில் எழுந்தருளியிருந்து சிவபோகம் நுகர்ந்தார். பின் அவர் தன்னைச் சார்ந்த அடியார்களுக்கு ஞானோபதேசம் செய்தார். அத்திருக்கைலாய மரபே தருமையாதீனக் குரு மரபு.

(இ) திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்தைத் தோற்றுவித்தவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி குமரகுருபர சுவாமிகள். இவருக்கு உபதேசித்தவர் தருமபுர ஆதீனத்தில் நாலாவது பட்டத்திலிருந்த மாசிலாமணி தேசிகர் ஆவார். குமரகுருபரரும் இவருக்குப் பின் வந்த மூவரும் காசியிலே வாழ்ந்தார்கள். தருமபுரத்தில் தருமபுர ஆதீனம் தோன்றியபின் (கி.பி. 1720 - 1756 முடிய) தலைவராக இருந்த ஸ்ரீலஸ்ரீ காசிவாசி தில்லைநாயக சுவாமிகள் தாம் திருப்பனந்தாளில் மடம் அமைத்தார். அன்று தொட்டு, காசிமடம் கிளை மடமாகவும் திருப்பனந்தாள் மடம் தலைமையிடமாகவும் மாறிற்று.

<u>நெறிப்படுத்திய பரிசு:</u>

மடங்கள் என்றும் ஆதீனங்கள் என்றும் விளங்கிய சமய நிறுவனங்கள் கோயில்களைச் செவ்வனே நிருவகித்தன. அம்மடங்கள் சமய வளர்ச்சியில் பெரிதும் அக்கறைகாட்டின. சீடர் பலருக்குச் சமய நூல்களையும் சமய மரபுகளையும் இம்மடங்கள் கற்பித்தன. மடாதிபதிகளாகத் திகழ்ந்த பலர் சிறந்த தமிழ்ப் புலவர்களாகவும் விளங்கினர். ஆயினும் இந்த மடங்கள் நேரடியாக மக்களை நெருங்கவில்லை. இவை திருக்கோயில்கள் மூலமும் நூல் வெளியீட்டு மூலமும் மக்களைச் சமய நெறிப்படுத்தின. இந்த மடங்கள், மக்களைத் தங்கள் சமயத்திற்கு இழுக்கவோ சமய மாற்றம் செய்யவோ சமயத் தீட்சை வழங்கவோ முற்படவில்லை.

தருமபுரம், திருப்பனந்தாள், திருவாவடுதுறை போன்ற மடங்களுக்குத் திருக்கோயில்களோடு ஏற்பட்ட தொடர்பு சமய மலர்ச்சியில் குறிக்கத்தக்கது. தருமபுரம் திருக்கோயில், குருஞானசம்பந்தரால் தொடர்புபெற்றது. இவ்வாதீனத்துக்குரிய ஏனைய கோயில்கள் இவ்வாதீன நிருவாகச் சிறப்பால் இவர்களிடம் வந்தன.

சமயப் பணி மட்டுமே மேற்கொண்டிருந்த ஆதீனங்களுக்குத் திருக்கோயில் நிர்வாகம் அமைந்தது குறிக்கத்தக்க மலர்ச்சியாகும்.

"கிழக்கிந்திய வணிகக் குழுவினர் நாடாட்சி மேற்கொண்டபோது தமிழ் நாட்டுத் திருக்கோயில்கள் அவ்வச் சமயத்தவர்கள் — பொறுப்பில் இருப்பதே தக்கது எனக்கருதி, அதற்குச் சிறந்தார் இத்தகைய அருளாட்சியில் வீற்றிருப்பவர்களே என முடிவு செய்து ஒப்படைப்பாராயினர்; இவ்வகையுரால் தமிழ் நாட்டுத் திருக்கோயில்கள் பல ஆதீனங்களின் அருள்பாலிப்பில் அமைவனவாயின" (2)

(வாழ்வியற் களஞ்சியம் - 1)

இங்ஙனம் ஆங்கிலேயர்கள் திருக்கோயில் நிருவாகத்தை மடங்களிடத்திலே ஒப்படைத்தனர்.

திருவண்ணாமலை ஆதீனம் உருவான வரலாறும் இத்தகையதே. திருவண்ணாமலை ஆதீனத்தின் பதினேழாவது குருமூர்த்தி நாகலிங்க தேசிக பரமாசாரியர். இவர்பால் இராமநாதபுரம் சேதுபதி அங்கு இப்பகுதியிலிருந்து அருளாட்சி புரியமாறு வேண்டினார். அவரோ தம் சீடர் ஒருவரைக் குருபீடத்தில் அமர்த்தி விட்டுத் தாம் திருவண்ணாமலை சென்றார். இவ்வாதீனம் பிரான்மலையில் இருந்து அந்த திருக்கோயில்களை நிர்வகித்தது. பின் இவ்வாதீனம் குன்றக்குடிக்கு வந்தது. ஆதீனங்களின் சமயப் பணியும் சமய ஞானமும் தாம் அவற்றைத் திருக்கோயில் நிருவாகத்தில் இணையச் செய்தன.

<u>மக்களும் மடங்களும்</u>:

திருக்கோயில்களை ஒட்டிப் பல மடங்கள் இருந்தன. இந்த மடங்களுக்கும் கோயில்களுக்குமுள்ள நேரடியான தொடர்பு புலப்படவில்லை. ஆனால் பாண்டிய நாட்டிலுள்ள சில மடங்கள், திருக்கோயில் நிருவாகப் பொறுப்பைப் — பெற்றிருக்கவில்லை. அந்த மடங்கள் சில தனிப்பட்டவர்களுக்குச் சமய தீட்சை வழங்குகின்றன.

சைவர்களிடையேயும் இத்தகைய சமயக் கோஷ்டிகள் உள்ளன. இல்லறத்திலிருந்தே இவர்கள் சைவர்களுக்குச் சமய உரையும் முத்திரையும் வழங்குகின்றனர். இவர்கள் குடும்பமாகவே வாழ்கின்றனர். தனி ஆதீனமோ மடமோ இல்லை. இவ்வாறு மக்களைச் சமயவுணர்ச்சி குன்றாமல் இவர்கள் வைத்திருப்பது போற்றத்தக்கது.

இவ்வாறு நாட்டுக்கோட்டை நகரத்தார் பெண்களுக்கு உபதேசம் செய்யும் துழாவூர் ஆதீனம் அமைந்தது. இவ்வாதீனம் நிரம்பவழகிய தேசிகரால் நிறுவப்பட்டது என்பர். இவர்கள் இல்லறத்தார். நகரத்தார் ஆடவர்களுக்கும் உபதேசம் அளிக்கும் கிளாமடம், பாதரக்குடி மடம் இரண்டும் பிரம்மச்சரியத்தைப் பின்பற்றுவன..

<u>மக்கள் பணி</u>:

தமிழ் வல்ல புலவர்கள் பலர் புதிய மடங்களை/ஆதீனங்களை அமைத்தனர். இவ்வாறு தோன்றிய ஆதீனங்கள் திருக்கோயில் நிருவாகங்கள் செய்வதில்லை; சொத்துக்கள் தேடிக்கொள்வதில்லை. இவற்றின் தலையாய கடமை, தங்களைச் சார்ந்த மக்களுக்குமந்திர உபதேசம் செய்து சமய நெறி வழுவாமல் வாழச் செய்வதேயாகும். இத்தகைய ஆதீனங்களுள் ஒன்று துழாவூர் ஆதீனம்.

துழாவூர் ஆதீனம், ஒரு குறிப்பிட்ட இனத்தைச் சார்ந்த பெண்களுக்கு மட்டும் உபதேசம் செய்வது. இதுபோன்ற சமய நிறுவனங்கள் மக்களிடையே வழிபாட்டு மரபை ஒழுங்குபடுத்திச் சமய உணர்வை வளர்க்கின்றன.

நாட்டுக்கோட்டை நகரத்தார்களில் ஆடவர்களுக்கு மட்டும் உபதேசம் சொல்லும் 'கிளாமடமும் சமயவுணர்வையூட்டுவதாகும். கிளாமடம் பின்னாளில் பாதரக்குடி மடம் தோன்றக் காரணமாயிற்று. மொழியியலில் பிளவுபடுதல் ( SPLIT ) என்றும் இணைதல் ( Merger ) என்றும் விளக்குவது போலப் பழைய மடங்களிலிருந்து புதியன தோன்றுவதும் புதியவற்றில் பழையன கலப்பதும் இயல்பேயாகும். இம்முறையால் தான் பல்வேறு மடங்கள் காலந்தோறும் தோன்றியுள்ளன.

துழாவூராதீனம், கிளாமடம், பாதரக்குடி மடம் ஆகியவற்றில் திருக்கோயில் நிருவாகம் இல்லை. முழுமையும் தனி இன மக்களின் — சமயவுணர்வையும் பற்றையும் வளர்ப்பதேயாகும். இத்தகைய மடங்களை நிறுவியவர்கள் சிறந்த அறிஞர்கள்.

காலந்தொறும் தமிழகத்தில் மடங்கள் பெருகின. அதுபோலத் தோன்றிய மடங்களும் அழிந்தன. பிரமமங்கலம் என்ற இன்று வழங்கும் ஊர் சுந்தரபாண்டியபுரமாகும். இங்குள்ள தர்மசிலேஸ்வரர் கோயில் கல்வெட்டு பிக்ஷாமடத்து முதலியார்க்குரிய வீரபாண்டியன் மடத்தைப் பற்றிக் கூறுகிறது. ( PSI 397 ) அதே கல்வெட்டில் 'சுந்தரபாண்டியச் சக்கரவர்த்திகள் மடம்' என்ற மற்றொரு மடமும் குறிக்கப்பெறுகிறது. இந்த மடங்கள் எல்லாம் அழிந்துபோயின. இவற்றைப் பற்றி அறிய வேறு சான்றுகளில்லை. காலந்தொறும் பழையன கழிதலும் புதியன தோன்றலும் இயல்புபோலும்.

சமய நிறுவனங்கள்/மடங்கள் தங்கள் சமயக் கொள்கையை விளக்குவதே முதன்மையாகக் கொண்டிருந்தன. அதனால் ஒவ்வொரு சமயக் கோட்பாட்டுக்கும் நிறுவனங்கள் தோன்றின. சைவசமயச் சார்புடைய மடங்கள், வீரசைவ மடங்கள் வேதாந்த மடங்கள், வைணவ சமய மடங்கள் எனச் சமய நிறுவனங்கள் பல்கின.

சமய நிறுவனம் ஒன்றின் கீழ்ப் பல்வேறு இடங்களிலிருந்து புலவர் வந்து சமய நூல்களையும் நடப்புகளையும் கற்றனர், அவ்வாறு கற்றவர்கள் மீண்டும் தங்களின் பழைய இடத்திற்குச் சென்றபோது அங்கு ஒரு நிறுவனத்தை உருவாக்கினர். இப்படி நாடெங்கும் சமய நிறுவனங்கள் பெருகின. கோயிலூர் வேதாந்த மடத்துக்குப் பல்வேறு கிளை மடங்கள் உண்டு. தாம் மடத்தில் கற்று வெளியேறியவர்கள் தம் புலமைத் திறத்தாலும் அருள்பாலிக்கும் வன்மையாலும் புதிய மடங்களை ஆங்காங்கே நிறுவினர். ஆங்காங்கே தோன்றிய இந்த நிறுவனங்கள் தமிழ்ப் பணியிலும் திருக்கோயில் பணியிலும் ஈடுபடுகின்றன.

<u>குகையும் கலகமும்</u>:

தமிழக வரலாற்றில் மூன்றாம் குலோத்துங்கன் காலமுதல் பல திருக்கோயில்களில் குகைகள் என்ற ஒருவகை மடங்கள் இருந்தன. இந்தக் குகைகள் பெரும்பாலும் சிவன்கோயில்களுக்குள் கட்டப்பட்டவை. சீர்காழியில் இருந்த குகையில் முதலியார் திருவையாறுடையார் இருந்தார். கி.பி. 1200இல் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் குகையிடி கலகம் தோன்றியது. இக்குகையிடி கலகம் பிராமணரல்லாத சைவ மடங்கள் மீது பிராமணர்களால் தூண்டப்பட்டதாக இருத்தல் வேண்டும். ஆயினும் பிராமணரல்லாதார் மடங்கள் அழிந்துவிடவில்லை. இக் கலகம் திருத்துறைப்பூண்டியில் நடந்தது. இதற்குப் பின்னே இந்த மடங்களுக்கு மன்னர், குறுநில மன்னர் ஆதரவு மிகுதியாகக் கிட்டியது.

பண்டுதோன்றிய பல்வேறு சமய நிறுவனங்கள் தங்கள் காலச்சூழலுக்குப் பொருந்த பல சமயப் பணிகளைச் செய்தன. திருக்கோயில் நிருவாகத்தை நடத்தின. இந்த நிறுவனங்கள் தங்கள் கொள்கைகளை மக்கள் மீது திணித்தன. இவை சமுதாய சீர்திருத்தத்தில் ஈடுபடவில்லை.

பின்னாளில் தோன்றிய பிரமசமாஜம், ஆரியசமாஜம், பிரமஞானசபை, சத்தியஞானசபை போன்ற இயக்கங்கள், சமயக் கோட்பாடுகளையும் சமுதாய சீர்திருத்தங்களையும் பேசின. மக்களின் சமய அறிவைத் தெளிவுபடுத்தி மக்களைச் சிந்திக்கத் தெளியச் செய்தன. இன்றைய மக்களின் மனத்துக்கு ஆறுதல் காட்டிச் சமய வழியில் நடத்திச் செல்லும் சமய நிறுவனங்கள் தங்கள் செயற்பாட்டை மேலும் விரிவுபடுத்தி விரைவுபடுத்தவும் செய்யத்தக்க கடமையாகும்.

*

(இணைப்பு – தமிழக மடங்கள்.)

# தமிழக மடங்கள்.

நன்றி: டாக்டர் மா. இராசமாணிக்கனார் - தொகுப்பு.

## அ. இறைவன் பெயர் கொண்ட மடங்கள்:

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆவடுதுறை | திருநீலவிடங்கன் மடம் | 144 of 1925 |
| 2. | ஆவடுதுறை | சிவலோகநாயகன் மடம் | 148 of 1925 |
| 3 | ஆவடுதுறை | சர்வதேவன் மடம் | 103 of 1925 |
| 4 | ஆவடுதுறை | சங்கரதேவன் அறச்சாலை | 159 of 1925 |
| 5 | ஆவடுதுறை | பஞ்சநதிவாணன் மடம் | 67 of 1926 |
| 6 | திருவீழிமிழலை | அழகிய திருச்சிற்றம்பலமுடையான் மடம். | 392 of 1909 |
| 7 | சீகாழி | திருமுறைத் தேவாரச்செல்வன் மடம் | 158 of 1911 |
| 8 | உசாத்தானம் | கந்தாடு நாயகர் மடம் | 218 of 1908 |

## ஆ. அரசர் — சிற்றரசர் பெயர்கொண்ட மடங்கள்:

| | | | |
|---|---|---|---|
| 1. | திருநனிபள்ளி | அருமொழிதேவன் மடம் | 186 of 1925 |
| 2 | ஒற்றியூர் | இராசேந்திரசோழன் மடம் | 132 of 1912 |
| 3 | ஒற்றியூர் | குலோத்துங்கசோழன் மடம் | 200 of 1912 |
| 4 | உடையார்குடி | இராசேந்திரசோழன் மடம் | 622 of 1921 |
| 5 | உசாத்தானம் | வாணராயன் மடம் | 211 of 1908 |
| 6 | வாலீசுவரம் | வீரபாண்டியன் மடம் | 357 of 1916 |

## இ. நாயன்மார் பெயர்கொண்ட மடங்கள்:

| | | | |
|---|---|---|---|
| 1. | திருமங்கலம் | பரஞ்சோதி மடம் | 246 of 1930 |
| 2. | கற்குடி | திருவாகீசம்—இராஜேந்திர சோழன் மடம் | 467 of 1908 |
| 3. | மதுராந்தகம் | தில்லைவாழ் அந்தணர் மடம் | 404 of 1922 |
| 4 | திருப்புகலூர் | நம்பி திருமுருகன் திருமடம் | 88 of 1928 |
| 5 | கழுக்குன்றம் | நமிநந்தியடிகள் மடம் | 179 of 1894 |
| 6 | திருவதிகை | வாகீச மடம் | 49 of 1903 |
| 7 | திருவதிகை | திருநாவுக்கரச தேவர் மடம் | 382 of 1921 |

| | | | |
|---|---|---|---|
| 8. | திரிபுவனை | திருநாவுக்கரசதேவர் மடம் | 203 of 1909 |
| 9 | திருமணஞ்சேரி | பரசமயகோளரி மடம் | 534 of 1918 |
| 10 | பழையாறை | திருஞானசம்பந்தன் திருமடம் | 392 of 1908 |
| 11 | திருவீழிமிழலை | திருநாவுக்கரசர் மடம் | 402 of 1909 |
| 12 | திருப்பாலைத்துறை | திருநாவுக்கரசதேவன் மடம் | 583 of 1909 |
| 13 | விசயமங்கை | திருத்தொண்டத்தொகையான் திருமடம் | 192 of 1929 |
| 14 | திருப்புத்தூர் (பா.நாடு) | திருத்தொண்டத்தொகையான் திருமடம் | 104 & 116 of 1908 |
| 15 | திருப்புத்தூர் (பா.நாடு) | திருஞானசம்பந்தன் திருமடம் | 129 of 1908 |
| 16. | அறையணிநல்லூர் | திருஞானசம்பந்தன் திருமடம் | 174 of 1935 |
| 17 | செங்காட்டங்குடி | சிறுத்தொண்டன் திருமடம் | 76 of 1922 |
| 18 | வலிவலம் | திருமூலதேவர் திருமடம் | 116 of 1911 |
| 19 | காஞ்சி | சுந்தரப்பெருமான் மடம் | S.I.I.i 87 |
| 20 | நொடியூர் | திருஞானசம்பந்தன் திருமடம் | 199 of 1932-33 |

ஈ. பல பெயர்களைக் கொண்ட மடங்கள்:

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆவடுதுறை | திருவீதி மடம் | 147 of 1925 |
| 2 | ஆவடுதுறை | பிரமாணவாசகன் மடம் | 155 of 1925 |
| 3 | ஆவடுதுறை | நாற்பத்தெண்ணாயிரவன் மடம் | 150 of 1925 |
| 4. | ஆவடுதுறை | பெருந்திருவாட்டி அறச்சாலை | 71 of 1926 |
| 5 | ஆவடுதுறை | முந்நூற்று அறுபத்து நால்வன் | 158 of 1925 |
| 6 | திராக்ஷாராமம் | பன்மாகேசுவர மடம் | 344 of 1893 |
| 7 | அஞ்சமலை | தன்மவாகீசர் மடம் | 547 of 1902 |
| 8 | தேவராயன் பேட்டை | மத்தளங்கும்பிளை பெற்றான் மடம் | 278 of 1923 |
| 9 | சிதம்பரம் | அறப்பெருஞ்செல்விச்சாலை | 266 of 1913 |
| 10 | சீகாழி | திருமுறைத் தேவாரச்செல்வன் மடம் | 158 of 1911 |

| | | |
|---|---|---|
| 11. வெண்ணெய் நல்லூர் | [...]தம் அழகிய திருமடம் | 35 of 1922 |
| 12 திருவ[...]போக்கி | [...]நாறுவன் திருமடம். | 179 of 1914 |
| 13 திருக்கோடிகா | ஐந்நூற்றெண்மன் திருமடம் | 60 of 1930 |
| 14 திருவாரூர் | நாலாயிரவன் திருமடம் | 477 of 1912 |
| 15 சதுர்வேதிமங்கலம் | சோழ்வாசல் திறந்தான் மடம் | 312 of 1927-1928 |
| 16 திருப்புறம்பியம் | மடம் (தலைவர்-ஆண்டார் குடியாபரணர்) | 353 of 1917 |
| 17 திருவாலங்காடு | வண்டூர -மாதேவ ஆண்டான் மடம் | 93 of 1928 |
| 18 திருப்புகலூர் | மடம் (மருத்துவசாலையும்) | 97 of 1928 |
| 19 கோட்டூர் | மடம். (தலைவர் - திருமாளிகைப் பிச்சன்) | 446 of 1912 |
| 20 திருவையாறு | மடம். (தலைவர் - சதாசிவ பட்டாரர்) | 37 of 1925 |
| 21 திருப்பாலைவனம் | அன்பர்க்கடியார் மடம் | 350 of 1928-29 |

<u>குகை</u>:

| | | |
|---|---|---|
| 1. திருத்துறைப்பூண்டி | குகை | 471 of 1912 |
| 2 குறுக்கை | திருஞானசம்பந்தன் குகை | 233 of 1917 |
| 3 சீகாழி | திருமுறைத் தேவாரச்செல்வன் குகை | 10 of 1918 |
| 4 திருவிடைவாய் | திருத்தொண்டத்தொகையான் குகை | 10 of 1918 |
| 5 திருப்புகலூர் | குகை | 87 of 1927 |
| 6 திருமாகாளம் | பொலி காத்தழகியான் குகை | 24 of 1917 |
| 7 திருமணஞ்சேரி | ஆலாலசுந்தரன் குகை | 28 of 1917 |
| 8 முனியூர் | திருஞானசம்பந்தன் குகை | 156 of 1911 |
| 9 சிதம்பரம் | குகை | 48of1935-36 |
| 10 சதுர்வேதிமங்கலம் | திருஞானசம்பந்தன் குகை | 311 of 1928 |